ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

நிலை : **செல்குழு தலைவர்**

பாட புத்தகம் எண்: 4



நிலைகள்:

5. ஊழியர்

4. தலைவர் / மேய்ப்பர்

3. செல் குழு தலைவர்

2. சீஷர்கள்

1. ஆரம்ப நிலையில் உள்ளவர்

வேத பாட திட்டங்கள் கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளர்ந்த ஊழியராகவும் மற்றும் செயல்பாட்டு திறமையில் உயரவும், செயல்பாட்டு திறமையுள்ள ஊழியத்தை பெறவும் !!!

தன்னில் தானே படித்துக்கொள்ளவும், அதே வேளையில் மற்றவர்களுக்கு போதிப்பதற்கும் எளிதானது !!!

ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

நோக்கம்:

→ ஒன்றான மெய்தேவனாகிய அவரை அறிந்துக் கொள்ளுதல்

(வளருதல் / முதிர்ச்சியடைதல்)

- யோசுவா1:8, "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடத்துகொள்ளுவாய்."

- 2 பேதுரு 3:18, "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."

- 2 தீமோ. 2:15, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."

- கொலோ. 1: 27, 28, "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்."

→ பிறர் அவரை அறிந்துக் கொள்ள செய்தல்

(பெருகுதல் / இனப்பெருக்கமடைதல்)

- 2 தீமோ. 2:2, "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."

- 2 தீமோ. 3:16,17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."

- எபே.2:10,"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."

- 2 பேதுரு. 1:8, "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது."

கொள்கை: "சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது!" (ரோமர்.11:36)

(அறிவிலே அதிகரித்தல்; குணாதிசயத்தில் முதிர்ச்சியடைதல்; ஆவிக்குரிய வரங்களை உபயோகித்தல்)

அட்டவணை பாட புத்தக எண்: 4 **பக்க எண்**

- தலைமைத்துவப் பயிற்சி: தலைமைத்துவத்திற்கு முகவுரை (6 அதிகாரங்கள்) (தேவனுடைய அழைப்பு, தலைமைத்துவத்திற்குரிய தகுதிகள், ஆயத்தங்களும் பரிசோதனைகளும், சுய மதிப்பீடும் வளர்ச்சிக்கான ஏதுக்களும், ஒரு தலைவனின் பண்புகள், பெரிய மேய்ப்பரைப் பின்பற்றிச் செல்லுதல்) 4
- சேவை செய்வதற்கான அழைப்பு (வேலையாள் கோட்பாடும் அதன் உட்கருத்துக்களும்) 23
- இயேசுவைப் போல் சேவை செய்வது எப்படி? 32
- ஆவிக்குரிய அதிகாரத்தைப் புரிந்துக் கொள்ளுதல் 39
- கர்த்தருக்காக காத்திருத்தல் - செயலூக்கத்துடன் இருப்பதற்கான திறவுகோல் 45
- கர்த்தர் நம்மோடு பேசும் வழிகள் 67
- ஆவிக்குரிய தலைமைத்துவமும் சாதாரணமான தவறுகளை எவ்வாறு தவிர்ப்பது 74
- வீட்டு செல் குழுக்கள் / சிறு குழுக்களின் வல்லமை / செல் குழுவின் தலைமைத்துவம் 84
- ஐக்கியத்தை ஒருங்கிணைக்கும் 21 ஏதுக்கள் 100
- வீட்டு சபைகளுக்கான வேதாகம அடிப்படை 105
- வீட்டு சபைகளும் - அவற்றை எப்படி ஸ்தாபிப்பது என்பதும் 116
- திருச்சபை நிலைத்து இயங்குவதின் நோக்கம் 120
- வீடு சந்திப்பு எப்படி என்பது பற்றிய சுருக்கமானதோர் படிப்பு 130
- உற்சாகப்படுத்தும் ஊழியம் 136
- கிறிஸ்தவர்கள் பாடுகளைச் சந்திப்பதற்கான காரணங்கள் 146
- கிறிஸ்தவ வாழ்க்கை முறையை விருத்திச் செய்தல் 149
- பரிசுத்தம் - இதன் திறவுகோல் சரணாகதி 153
- புறங்கூறுதல் - அதனால் விளையும் அழிவும், அதை எவ்வாறு மேற்கொள்வது 166
- கர்த்தருடைய வார்த்தையிலிருந்து ஜெபத்திற்கான ஆலோசனையான கட்டளைகள் (செல்வாக்கு படைத்தவர்களுக்கு, குழந்தைகளுக்கு, ஒலிமுக வாசல் நகரங்களுக்கு) 176
- கர்த்தருடைய வார்த்தையிலிருந்து தனிப்பட்ட ஜெபங்கள் - ஜெபத்திற்காகவும், தியானத்திற்காகவும் 189
- உபவாசம் - ஒரு வேதாகமத்து வாழ்க்கை முறை 215
- வேதாகமமும் குடும்பமும் / பாலியல் பாவங்களால் ஏற்படும் படுகுழி வீழ்ச்சிகளைத் தவிர்த்தல் 232
- ஒற்றுமை: அன்பின் செயல்பாடு 245

தலைமைத்துவப் பயிற்சி : தலைமைத்துவத்தின் முகவுரை

பாடம் 1 தலைமைத்துவம் - தேவனுடைய அழைப்பு

முகவுரை:
அனைத்தும் கர்த்தருடைய அழைப்பின் பேரிலே துவங்குகிறது. கர்த்தர் தம்முடைய நோக்கத்தை திருச்சபையின் மூலமாகச் செயல்படுத்த விரும்புகிறார். இதன் அடிப்படையின் காரணமாகவே எல்லா விசுவாசிகளும் கர்த்தருடைய நோக்கத்தின்படியே அவருடைய அழைப்பின் பேரில் பிரதியுத்தரமாக அதற்குத் தந்திருக்கிறார்கள். (II தெச 2:13-14) ஒரு நோக்கத்திற்காகவே நாம் இருளில் இருந்து வெளிச்சத்திற்கு கர்த்தரால் அழைக்கப்பட்டிருக்கிறோம். (I பேதுரு 2:9) கர்த்தர் ஒவ்வொரு விசுவாசிக்கென்றும் ஒவ்வொரு வேலையை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார். அதை அந்த விசுவாசியால் மாத்திரமே நிறைவேற்ற முடியும். (எபேசி 2:10) நாம் அவருடைய அழைப்பைக் குறித்தும், தெரிந்து கொள்ளுதலைக் குறித்தும் நமது தேவ பக்தியுள்ள நடத்தையினால் அதை உறுதிபடுத்தி நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். (II பேதுரு 1:10) (அதாவது அஞ்சல் கூட்டின்மேல் தபால் தலை ஒட்டி அதை முத்திரையிட்டுக் கலைத்து விடுவது போல) நாம் அவருக்குள் தங்கி நிலைத்து இருக்கும்பொழுது நமது எஜமானனுக்குக் கனி கொடுக்கிறவர்களாய் இருப்போம். ஏனென்றால் அதன் காரணமாகவே அவர் நம்மைத் தெரிந்து கொண்டார். (யோவான் 15:16)

தலைமைத்துவத்திற்க்கு அழைப்பு/ஊழியம்
இதற்கு மேலானதாகவும் அப்பாற்பட்டதுமான இந்த பொதுவான அழைப்பு வெளியே இருப்பதான, உன்னதமானதோர் அழைப்பு ஆனது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் ஊழியத்துற்குள்ளான அழைப்பாகும். இது ஒரு தெய்வீக அழைப்பாக விசேஷித்த ஊழியத்திற்காகவும் அல்லது தலைமைத்துவத்திற்காகவும் (ஆன அந்த நபருடைய) பங்காகும். இது மிகப்பெரிய வலிமை மிகுந்ததோர் சலுகையாகவும் பெரிய பொறுப்பும் ஆனது.

ஒரு செயலூக்கமுடைய தலைவராகவோ / ஊழியராகவோ இருக்க வேண்டுமாயின் அவர் இந்தப் பணிக்கு விசுவாசத்தினாலே (மூலமாக) அழைக்கப்பட்டிருக்க வேண்டும். தேவனுடைய ஒரு உண்மையான அழைப்பே மிகச் சிறந்த நம்பிக்கையைக் கொடுத்து இந்த நம்பிக்கையின் மூலம் கர்த்தர் தாமே அதைத் தொடங்கினார் என்றும், அது கடினமானதாக ஆக நேரிட்டாலும் அதைத் தாங்கி நிலை நிறுத்துவார் என்றும் அறிந்து கொள்வதாகும். ஆகவே ஒரு உண்மையான அழைப்பு மட்டுமே பெலனளிக்கிற வல்லமையையும், ஜெயங் கொள்ளும் கிருபையையும் கொண்டு வருகிறது.

கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொள்வது?
கர்த்தர் நம்மை தலைமைத்துவத்திற்கும் / ஊழியத்திற்கும் உம்மை ஊழியத்திற்கு அழைத்தார் என்று நாம் எப்படி அறிந்து கொள்வது?

எல்லாத் தலைவர்களுமே கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள். கர்த்தர் எப்பொழுதுமே மிகவும் திறமையானவர்களையோ அல்லது அதற்கேற்ற ஒருவரை எப்பொழுதுமே அழைப்பதில்லை. அவருடைய வழிகள் நம்முடைய வழிகளைக் காட்டிலும் மேலானவைகளாக இருப்பதினால் (I கொரி 1:26-27; ஏசாயா 55:8-9) ஒரு குறிப்பிட்ட மனிதனைக் கொண்டு எவ்வளவு செயலாற்ற முடியும் என்று கர்த்தர் மட்டுமே அறிந்திருக்கிறார். இதன் காரணமாகவே தங்கள் சொந்த இயல்பான தாலந்துகள் அல்ல கர்த்தரையே முற்றிலும் சார்ந்திருக்க வேண்டும்.

கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஊழியத்திற்கான அழைப்பும் அல்லது தலைமைத்துவத்திற்காக கவனிக்கப்பட வேண்டிய காரணிகள்:

1. கர்த்தருடைய அழைப்பைக் குறித்த தெளிவான அறிவுணர்வு இருக்கிறதா?
   இதைக் குறித்த அதீதமான ஆசை நல்லது தான். ஆனால் அது போதுமானதல்ல. (I தீமோத் 1:9) கர்த்தர் தாமே நம்மை அழைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் நேரடியாக நாடக பாணியில் அழைத்தது போல் அழைக்காமல் ஆனாலும் நம்முடைய இருதயத்திலும் நம்முடைய ஜீவியத்திலும

தேவனுடைய அழைப்பை நாம் அறிந்து கொள்ள முடியும். (எபி 5:4; சங் 75:6-7) உண்மையான, தேவனுடைய அழைப்பு என்பது ஒரு நிலத்தில் விதைக்கப்பட்ட விதையைப் போல விதைக்கப்பட்டு ஏற்ற நேரத்தில் அதாவது பாதியளவு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டாலும் கூட வளரக் கூடியதாய் இருக்கிறது. உண்மையானதோர் அழைப்பு நமக்குள் உருவாக்கப்பட்டு அதற்கேற்றவாறு பலன் தரவும் நாம் செயல்படவும் நம்மை வழி நடத்துகிறது.

2. இதயப் பூர்வமான செயல்பாடு

கர்த்தருக்கென்று ஊழியம் செய்யும் விருப்ப நோக்கம் இருக்கிறதா? கர்த்தரால் அளிக்கப்பட்ட வாஞ்சைகள் அந்த அழைப்போடு இணைந்து துணையாக வருகிறதா? நாம் மக்களின் ஆத்துமாக்கள் பேரில் மிகுந்த பாரத்தோடு கரிசனையாய் இருக்க வேண்டும். மக்களை அவர்கள் இருக்கும் வண்ணமாகவே அவர்களுக்காக தியாகம் செய்யவும், நேசிக்கவும், அவர்களைக் குறித்து அக்கறை கொள்ளவும், அவர்களுக்காக கவனம் செலுத்தவும் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். நாம் அழைப்பை நிறைவேற்றுவதே நமது எலும்புகளுக்குள் எப்பொழுதும் பற்றி எரிகிற அக்கினியாகும். (எரேமி 20:9). முழு மனதோடு அந்த அழைப்பைத் தழுவி பின்பற்றுவதாகும். (மத் 16:24) தன்னைத் தான் வெறுத்து (சுய ஒழுக்கம்) தன் சிலுவையை எடுத்துக் கொண்டு (தேவனுடைய வார்த்தைக்காகவும், ஊழியத்திற்காகவும் ஏற்படும் எதிர்ப்புகளில் பாடுபடவும்) மேலும் அவரை (100%) ஒப்படைப்புடன் பின்பற்றுவதாகும்.

3. தாலந்துகளைப் பயன்படுத்துதல்

ஒரு மனிதனுக்கு அளிக்கப்பட்ட ஈவு / ஊழியம் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்துக் கொள்கிறது. ஆனால் அவனது ஒழுக்க நெறியே அவனை அந்த இடத்தில் ஸ்தாபித்து வைக்கும். (நீதி 18:16) ஆனால் அவனுடைய உள்ளான ஆவிக்குரிய வேகமானது (எதிர்ப்பு அல்ல) அவனை முன்னோக்கிச் செல்லுவதற்கும் ஒருவருடைய தாலந்துகளை பயன்படுத்திக் கொள்வதற்கும் ஒருவருடைய பலத்தைக் கர்த்தருடைய வல்லமையிலிருந்து பெற்றுக்கொள்ளும் படியான பலனைத் தருகிறதா? (I பேதுரு 3:10) நம்முடைய அழைப்பை நிறைவேற்றுவதற்குரிய தாலந்துகளையும், மூல சக்திகளைப் பெற்றுக் கொள்ளுமாறு உண்மையான முயற்சிகளை எடுக்கவும் அந்த அழைப்பு நம்மை பலமான பிடிப்புக்குள்ளும், பயனளிக்கும் நோக்கமுள்ள செயலாற்றுதலுக்கும் இசைந்ததாய் இருக்க வேண்டும். அதிக நேரம் ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் செலவழிக்க நாம் ஆயத்தமாய் இருக்க வேண்டும். அது நம்மை வளர்ச்சி அடையவும் பூரணமான முழுமை அடையவும் வழி நடத்தும். (II தீமோத் 2:5)

4. கனி கொடுத்தல்

நீ உன் அழைப்பிற்குள் முன்னேறிச் செல்லத் தொடங்கும் பொழுதும், வரங்களை பயன்படுத்தும் பொழுதும் கனி கொடுப்பதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றனவா? உன்னுடைய ஊழியத்திலுள்ள அபிஷேகத்தை மற்றவர்கள் அங்கீகரிக்கிறார்களா? (II தீமோத் 1:6; I பேதுரு 4:10) கர்த்தருடைய கிருபை எப்பொழுதும் வல்லமை நிறைந்ததும் நமக்குள் கனிகளை உருவாக்குகிறதும் மேலும் நாம் எங்கு ஊழியம் செய்கிறோமோ அவர்களுக்குள்ளும் கனிகளை உருவாக்குகிறதாய் இருக்கிறது. செயலூக்கமான கிரியையே ஒருவர் உண்மையிலே அழைக்கப்பட்டதற்கும் கர்த்தரிடமிருந்து தாலந்துகளைப் பெற்றுக் கொண்டதற்கும் மெய்யான சாட்சி ஆகும்.

கர்த்தருடைய அழைப்பை நாம் அறிந்து கொள்வதற்கான பிற காரணங்கள்:

- ♣ ஒருவருடைய அழைப்பானது அவருடைய இயற்கையான படிப்பினைகளோடு அடிக்கடி இணைந்து கட்டப்படுகிறது.
- ♣ நம்முடைய அழைப்பை மாம்சீக ஈவுகளோடு குழப்பிக் கொள்ளக் கூடாது.
- ♣ நம்முடைய வாழ்க்கையில் கர்த்தர் பயன்படுத்தும் சிவப்பு நூலை கண்டு கொள்ள முடியுமா?

ஆகவே தலைவர்கள், ஊழியர்கள் அனைவரும் கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள். அவர்களை ஊழியத்தில் நியமனம் செய்து பரிசுத்த ஆவியினாலே அபிஷேகித்து இருக்கிறார். (உதாரணத்தைப் பார்க்கவும் பவுல், கலா 1:1) தேவன் தாமே ஊழியத்தில் அவர்கள் பங்குக்கும் செயல்பாடுகளுக்கும் ஏற்ற ஆளுமைத் திறனான அருட்கொடையை அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்.

ஆகவே தனிப்பட்ட அழைப்பு போதுமானதல்ல. நமது சுயத்தாலே நாம் வஞ்சிக்கப்படக் கூடும். ஆகையால் நம்முடைய தனிப்பட்ட அழைப்பானது உறுதி செய்யப்பட்டதாகவும், திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டதாயும் இருக்க வேண்டும். (உம் பவுல் தன் ஊழியத்தை மற்ற ஊழியர்களிடம் பணிந்து ஒப்புக் கொடுத்தார். கலா 2:1-2) கர்த்தர் தாமே திருச்சபையானது கர்த்தரால் அழைக்கப்பட்டவர்களை தேவனால் அவர்களுக்கு அருளப்பட்டதும் சொந்தமானதுமான அருட்கொடைகளை அவர்கள் சொந்தமாக்கிக் கொண்டும், அவற்றைக் கொண்டு கிரியை செய்வதை பார்த்து அறிந்து கொண்டு கர்த்தர் தாமே முதலாவதாக அழைத்து அர்ப்பணித்து நியமனம் செய்தவர்களை அங்கீகரித்து உறுதி செய்கிறது.

கவனத்தில் கொள்ள வேண்டிய மற்ற விஷயங்கள்:-

♥ எல்லோரும் முழு நேர ஊழியத்திற்கென்று அழைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

♥ கர்த்தர் குறிப்பிட்ட வேளையை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவருடைய அழைப்புக்கு அப்பால் முன்னாக முன்னாக ஓட வேண்டாம்.

♥ ஆயத்தமாகுதலுக்கும் பயிற்சி பெறுவதற்கும் ஒரு தேவை அவசியமாகலாம்.

♥ ஒருவருடைய அழைப்பை உறுதி செய்வது:
- கர்த்தருடைய திறந்த வாசல்
- கர்த்தர் எங்கு போகும்படி வழி நடத்துகிறாரோ அங்கே போஷிக்கவும் செய்கிறார்.

<u>கர்த்தர் ஒருவருக்கு தரும் அழைப்பை சாதகமாக்குவதும் நிறைவேற்றுவதும்:</u>

◆ தெரிந்து கொள்ளுதலையும் ஒப்படைப்புச் செய்தலையும் தேவ ஞானத்தோடு செய்து கொள்ளவும்.

◆ திறந்த மனதோடு நம்முடைய திறமையை வளர்த்து கொள்வதற்காக (போதிக்க) கற்பிக்கப்படத் தக்கவனாக இரு.

◆ உன்னுடைய அழைப்பில் உண்மையுள்ளவனாக இரு. உன்னை முயற்சி அற்றவனாக (பெலவீனனாக) பறை சாற்றிக் கொள்ளாதே.

◆ அந்த அழைப்பிலே வாழ்ந்திரு. ஏனென்றால் கர்த்தருடைய அபிஷேகம் உனக்கு போதுமானதாக இருக்கும்.

குறிப்பு:- தேவனிடம் திரும்புவதற்கும் நமது ஜீவிய காலம் முழுவதையும் அவருடைய அழைப்புக்கு ஒப்புக் கொடுக்க இன்றே தருணமாகும். தாமதம் என்பது ஒரு போதும் இல்லை. (ரோமர் 11:29)

பாடம் 2 தலைமைத்துவத்துக்குரிய தகுதிகள்

<u>முகவுரை:</u>

கர்த்தர் தம்முடைய தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்ற ஏற்றதொரு குறிப்பிட்ட மனிதனைத் தனி ஆளாக ஒருவனைத் தேடுகிறார் என்று வேதத்தில் பார்க்கிறோம். (உம் I சாமு 13:14; எசேக் 22:30). ஆகவே திருச்சபையிலுங்கூட முதிர்ச்சியடைந்த விசுவாசிகளை அதிலும் கர்த்தருடைய மனப்பான்மையை நடத்தும் படியாகவும் ஊழியத்தில் மாதிரியாகவும் இருந்து கிரியை செய்யும்படி கிறிஸ்து வாஞ்சிக்கிறார். ஒருவர் இரட்சிக்கப்படும்பொழுதே ஊழியத்திற்கான அழைப்பைப் பெற்றிருக்கலாம். இந்த அழைப்பானது ஸ்தல திருச்சபையால் உறுதி செய்யப்படும்படியாக பார்க்க வேண்டுமானால் சில வேதாகமத்து நிபந்தனைகள் கருத்தில் கொண்டு சந்திக்கப்பட வேண்டும்.

<u>ஆவிக்குரிய தலைமைத்துவத்துக்கு அவசியமான அடிப்படையான சில முன் நிபந்தனைகள்:</u>

1. இரட்சிப்பு - கர்த்தருடைய ஆவியினாலும் வார்த்தையினாலும் மறுபடி பிறந்தவராகவும் அதைப் பற்றிய நிச்சயத்தை பரிசுத்த ஆவியினால் சாட்சியாகவும் பெற்றிருக்க வேண்டும்.

2. ஜலத்தினால்
ஞானஸ்நானம் - கிறிஸ்துவின் மரணத்தோடு வெளியரங்கனமானதோர் அடையாளப் படுத்துதல் என்பதை வெளிக்கு எடுத்துக் காட்டியும் அதோடு தேவனுடைய வார்த்தைக்கு ஓர் கீழ்படிதலுக்கும் அடையாளப் படுத்துவதாகும். (அப் 2:38)

3. ஞானஸ்நானம் - பரிசுத்த ஆவியின் நிறைவு ஊழியத்திற்கு மிகவும் அத்தியாவசியமான அனுபவமாகும். (அப் 1:8) ஆவியின் நிறைவு நம்மை (பரிசுத்த ஆவியின்) நம்மை தன் ஆளுகைக்குக் கட்டுப் படச் செய்வதாகவும் நம்மை முன் நடத்திச் செல்வதாகவும் இருக்கும்.

புதிய ஏற்பாட்டில் நாம் காண்பதாவது ஆதித் திருச்சபையின் முன்னாட்களில் கர்த்தரின் ஊழியப் பணி தொடர்ந்து வளர ஆரம்பித்த பொழுது புதிய தலைவர்கள் மிகவும் கவனமாகத் தெரிந்து எடுக்கப்பட்டு பணிக்கு அமர்த்தப்பட்டனர். இது அப்போஸ்தலரால் ஒப்புக் கொள்ளப்பட்ட சிறப்புத் தகுதியின் அடிப்படையில் செயல்பட்டது. (அப் 3:3) பின்னர் நாம் பார்த்துத் தெரிந்து கொள்வதாவது, திருச்சபையில் புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்வதைக் குறித்து அப். பவுல் இவைகளைக் குறித்து விரிவாக்கி தெளிவான வழிமுறை விதிகளை தீமோத்தேயுவுக்குக் கொடுத்திருக்கிறார். ஏனென்றால் தீமோத்தேயு திருச்சபைகளுக்கு புதியத் தலைவர்களைத் தெரிந்தெடுத்து பணி நியமனம் செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. I தீமோத் 3:1-2 வசனங்களின் அடிப்படையில் ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கான ஏழு தகுதிகளைத் தனிமைப்படுத்திக் காண முடியும்.

<u>தலைமைத்துவத்திற்கான தகுதிகள்:</u>

1. **நற்பெயர்** I தீமோத் 3:2 கூறுவதாவது ஒரு தலைவனுடைய ஜீவியமும் நன்னடத்தையும் மரியாதைக்குரியதாகவும் அணுகக் கூடியதற்கு அப்பாற் பட்டதாகவும் இருக்க வேண்டும். தீத்து 1:7ல் "குற்றஞ் சாட்டப்படாதவனாக" என்று கூறப்படுகிறது. ஒரு திருச்சபைத் தலைவன் முற்றிலுமாக மாசற்ற தகுதி பெற்றவனாக இருக்க வேண்டும் என்பதல்ல. அதாவது மக்கள சாதாரணமாக குற்றங் கண்டுபிடிக்கும் படியாக அவனுடைய ஜீவியத்தில் ஒன்றும் இருக்கக் கூடாது என்பதாகும். அவனுடைய ஜீவியம் வேதாகமத்துத் தராதரத்திற்குச் சமனான கோட்டில் மாதிரியாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும். (ஞாபகத்தில் வைக்க. ஒரு சங்கிலியானது அதன் பலவீனமான இணைப்பைப் போலவே பலமுள்ளதாக இருக்க முடியும்.)

   ஒரு தலைவனுடைய நடத்தையானது வெளியில் இருப்பவர்களின் நன்மதிப்பைப் பெறுவதுடன் தான் வழி நடத்தும் படி அழைக்கப்பட்டவர்களிடத்திலும் நம்பிக்கையைத் தூண்டி உற்சாகப்படுத்து-கிறவர்களாய் இருக்க வேண்டும்.

2. **சுயக் கட்டுப்பாடு** ஒரு தலைவன் ஒழுக்கமானதோர் ஒழுங்கான ஜீவியத்தை நடத்திக் காட்டுபவராக இருக்க வேண்டும். தினசரி ஜீவியத்தில் சுயக் கட்டுப்பாடு (இச்சையடக்கம்) என்ற நன்னெறி நடத்தையானது நமது உள்ளான சுயக் கட்டுபாடு என்ற ஒழுக்கத்தைக் கட்டி எழுப்புகிறது. இது பரிசுத்த ஆவியினால் பெறும் கனிகளில் ஒன்றாகும். அவன் தன்னுடைய ஆசாபாசங்கள், பசியுணர்வுகள் அனைத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பின் ஏனென்றால் அவைகள் பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் (கலா 5:23) அத்தகைய மனிதன் அதீதமான விளிம்பின் கோட்டுப் பகுதிக்குப் பறந்து செல்வதோ அல்லது தீடீரெனத் தோன்றும் தூண்டுதல்களால் அசைந்தாட மாட்டான். மற்றொரு விதமாகச் சொல்வதென்றால் தீடீரெனத் தோன்றும் கோபமான உணர்வுகளுக்கோ கட்டுபடக் கூடாத சோர்வுகளுக்கோ கட்டுப்படாத பலமான இச்சை வெறி அல்லது மாம்சீகமான இச்சைகளுக்கான உணர்வுகளுக்கோ அங்கே இடம் கிடையாது.

3a.**தெய்வீக மதிப்பு** வசனம் 3ன் படி பண ஆசை இல்லாமையையும், இழிவான ஆதாயத்தை இச்சியாமையையும் பற்றிச் சொல்கிறது. ஒரு தலைவன் என்பவன் அடிக்கடித் தன் ஊழியத்தின் நோக்கத்தைப் பரிசோதித்துப் பார்ப்பவனாய் இருக்க வேண்டும். அது மனிதருக்காக ஊழியம் செய்யும் படியான ஆசையாக இருக்க வேண்டுமேயன்றி பணத்திற்காக ஊழியம் செய்வதல்ல. ஏனென்றால் பணத்தின் மேலுள்ள ஆசை ஒரு மனிதனை விசுவாசப் பாதையை விட்டு விலகி போகும்படி செய்யக் கூடும். (I தீமோத் 6:10)

b.**சரியான மனப்பான்மை** ஊழியம் செய்ய - ஏனென்றால் சுய நலமான பேராசைகள் சண்டை சச்சரவுகளுக்குள் இட்டுச் செல்லும். (கலா 5:20) அது ஒரு மரணத்திற்கேதுவான பாவமாகும். அங்கே எந்த விதமான போட்டி மனப்பான்மையும் அதிகாரத்திற்காக ஓர் ஆசையும் இருக்கக் கூடாது. இவை அரசியல் விரோதங்களுக்கும் பிரிவினைகளுக்கும் நேராக நடத்திச் செல்லும்.

4. **அன்பான இருதயம்** ஊழியம் என்பது சிந்தனையிலிருந்து பிரவாகித்து பொங்கி ஓடுவதல்ல, ஆனால் இது ஒரு அன்பான இருதயத்திலிருந்து அதன் ஊடே பொங்கி ஓடுவதாகும். சாந்தத்தோடு இருப்பதும், தயவோடும், அன்புடனும், சகிப்புத் தன்மையுடனும், கரிசனையோடு இருப்பதும் இதில் அடங்கும். அதே நேரத்தில் ஒரு நபருடைய உத்தமம் நேர்மை, உண்மையான கரிசனை உடையவனாய் இருப்பது அது சரியான மனப்பான்மையின் காரணத்தால் - உண்டாவதாகும்.

5. **ஆரோக்கியமான குடும்பம்** ஒரு தலைவன் தான் போதிப்பதையே தானும் கைக் கொள்ள வேண்டும். தான் வழி நடத்தி ஊழியம் செய்பவர்களுக்கு அவன் நல்ல உதாரணமாகவும் இருக்க வேண்டும். அவனுடைய குடும்ப வாழ்க்கையானது அவனுடைய உண்மையான ஒழுக்க நடத்தையையும் தலைமைத்துவ திறன்பாடுகளையும் எடுத்துக் காட்டும். I தீமோத் 3:5 வசனம் இதைப் பற்றித் தெளிவாகக் கூறுவதாவது தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றிய கோட்பாடுகள் அவனுடைய அல்லது நம்முடைய குடும்பங்களில் முதலாவதாகத் தங்கி நிலைத்து இருக்க வேண்டும். வேதாகமத்தின் நல்லொழுக்கப் பழக்கங்கள் தனிப்பட்ட ஒருவொருவருக்கான உறவுத் தொடர்புகள், கரிசனையுடன் தன் குடும்பத்தை விசாரிக்கிறவராயும் இருத்தல் வேண்டும். (எபி 11:7)

6. **முதிர்ச்சி பெற்ற விசுவாசம்** ஒரு முதிர்ச்சி பெற்ற விசுவாசம் ஒரு புதிய விசுவாசியுடையதாய் இருக்கக் கூடாது. அவன் விசுவாசத்தில் உறுதி பெற்றவனாக ஸ்திரமான நம்பிக்கையுடன் இருத்தல் வேண்டும். அதாவது ஒரு அனுபவமும் முதிர்ச்சியும் பெற்றதோர் விசுவாசமாகும். சாத்தானுடைய பெருமை என்ற பொறியில் (I தீமோத் 3:6) விழாமல் தவிர்ப்பதற்கு அவன் தானே உடைத்து நொறுக்கப்பட்டவனாகவும் தன் சுயத்துக்காக தெளிவுடைய செத்தவனாகவும் அப்படி ஏதோ ஒருவனாக இருக்க வேண்டும். (கலா 2:20)

அவன் சோதனைகளின் வழியாக பாடுகளின் வழியாகச் சென்றிருக்கிறானா? அவனுடைய விசுவாசமானது அசைக்கப்படாததாகவும், ஒரே சீரானதாகவும், நிலையானதாகவும் இருக்கிறதா?

7. **சத்தியத்தில் உண்மை -யாய் இருத்தல்** மிகத் தேவையானது என்னவென்றால் ஆரோக்கியமான உபதேசத்தில் அஸ்திபாரம் போடப்பட்டு நிலைநிறுத்தப்படுதலாகும். அதாவது அதன்

உண்மையான தன்மை பற்றியும் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியமாகிய வசனத்திற்கு கீழ்ப்படிதலோடு ஊழியம் செய்வதற்கு நம்பிக்கை யூட்டப்பட்டிருப்பதாகும். வசனமானது தலைவனுடைய ஜீவியத்தில் வாழ வேண்டும். அதனால் அவன் போதிக்கத்தக்க திறமையுடையவன் ஆவான். (I தீமோத் 3:5) இதற்குச் சத்திய வசனத்தின் மேல் ஓர் உறுதியான கைப்பிடி தேவையாய் இருக்கிறது. அது நம்முடைய ஜீவியத்தின் மேல் இருக்கும் சத்திய வசனத்தின் உரிமை கோரிக்கைகளை விளக்கிக் கூறுவதற்கு ஏதுவாய் இருக்கும். (II தீமோத் 2:15)

குறிப்பு சக்தி வாய்ந்த தலைவர்களை எப்படிக் குறிப்பாகத் தெரிந்து கொள்வது (அதாவது தலைமைத்துவத்திற்கான அபிஷேகத்தை எப்படி குறிப்பாக உணர்ந்து கொள்வது) பார்த்து அறிக:

- மக்கள் பின்பற்றிச் செல்லும் யாரோ ஒருவராக (ஆடுகள் மேய்ப்பனைப் பின்பற்றிச் செல்கிறதா?)
- புகழுக்காகவும் அதிகாரத்திற்காகவும் (ஆசை) ஆர்வமில்லாத யாரோ ஒருவராக (அந்தஸ்த்திற்காக சச்சரவு இடும் ஒருவராக)
- தான் நடத்திச் செல்பவர்களுக்காக தன்னை விட அதிகமான கவனம் (கரிசனை) எடுத்துக் கொள்ளும் யாரோ ஒருவராக (உண்மையான பணியாள் இருதயம்)
- தன் வீட்டை ஒழுங்காக அலங்கரித்து வைக்கும் யாரோ ஒருவராக (மிகவும் பிரகாசமான துணைவியையும் கீழ்ப்படியும் பிள்ளைகளுமான குடும்பத்தை உடையவராக பார்த்தறியவும்)

பாடம் 3 ஆயத்தங்களும் பரீட்சைகளும் (அ) பரிசோதனைகளும்

முகவுரை: ஏசாயா 49:1-3

கர்த்தரால் ஏசாயா ஒரு தீட்டப்பட்டு கூராக்கப்பட்ட அம்பாக தம்மால் உபயோகப்படுத்தப்படும் படியாக அவ்வாறு உருவாக்கப்பட்டார். ஒரு அம்பின் முனையானது ஒரு தீட்டப்பட்ட நேரான கருவியாக ஆக்கப்பட்டு ஒரு இலக்கை நோக்கி குறிப்பாகவும் சரியாகவும் எய்து பயன்படுத்தப் படுவதற்கு முன்னர் அது சில மட்டங்களின் வழியாகப் போக வேண்டியதிருக்கிறது. இந்த மாதிரியைப் போன்ற வழியில் கர்த்தர் தாமே உன்னுடைய ஜீவியத்திலும் கர்த்தரால் முன் குறிக்கப்பட்ட இலக்கை நீ சென்றடைவதற்காக சில ஆயத்தப் பணிகளையும் உன் ஜீவியத்திலும் செய்வதற்காக முயற்சிப்பார்.

அதன் பிரகாரமாக தேவனால் உபயோகப் படுத்தப்படும் படியாக வேண்டிய ஒவ்வொரு தலைவனும் தேவனால் தாமே ஆயத்தம் செய்யப்பட வேண்டும். சரியான ஆயத்தம் என்பது மிகவும் விலையேறப் பெற்றதாகலாம். ஆனால் இந்த ஒரே வழியின் மூலமாக ஒரு தலைவன் ஆனவன் தேவனுக்காக செயலூக்கத்துடனும் கனி கொடுப்பவனாகவும் செயல்பட முடியும்.

ஏதோ ஒன்றை ஆயத்தம் செய்வதென்பது அது சரியாக உபயோகப் படுத்தப்படும் படியாகவும், சரியாக கிரியை செய்யும் படியாகவும் அதைத் தயார் படுத்தி வைப்பதாகும். ஏசாயா 64:8ல் குயவன் தன்னுடைய களி மண்ணால் வளைந்து உருவாக்குவதை ஒப்புவமைப் படுத்திக் காட்டுவதைப் பார்க்கிறோம். அழகானதொன்றும், பயனுள்ளதுமாகிய உழைப்பின் பலா பலனை அடைவதற்கு முன்னர் களி மண்ணானது ஆயத்தப் படுத்தப்பட்டு, வளைந்து வேலை செய்யப்பட்டு, காய்ந்து உணரும்படி வைக்கப்பட்டு பின்னர் நெருப்பின் ஊடாக வைக்கப்பட்டு சுடப்பட வேண்டும். இதே மாதிரியான பாணியிலும் தலைவர்களும் ஆயத்தப்படுத்துதல் என்ற நடைமுறை வழியே அவசியமாக நடத்தப்பட்டு அவர்கள் தலைவர்களாக பணியாற்ற வேண்டிய எந்த விதமான பங்கையும் ஏற்பதற்கு முன்னர் இவ்வாறு வழி நடத்தப்பட வேண்டும்.இந்த விதமானதோர் நடைமுறையில் தேவன் தாமே

அவர்களைத் தங்கள் சுய சார்பில் இருந்து விடுபடும் படியாக அனுமதித்து அவர்களை (தேவன்) தாம் என்னவாக இருக்க விரும்புகிறாரோ அவ்வண்ணமே அவர்களை உருவாக்குகிறார்.

பாடுகளும் சோதனைகளும் தலைமைத்துவத்திற்காக நம்மை கர்த்தர் ஆயத்தம் செய்யும் படியாக பயன்படுத்தும் வழியாகும். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார். (எபி 12:29) அசையாதவைகள் நிலைத்திருக்கத் தக்கதாக அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல் மாறிப் போகப் பண்ணுவார். (எபி 12:25) நம்முடைய ஜீவியத்திலும் கர்த்தருடைய சோதனைகளின் பலனாக நாம் விசுவாசத்திலும் பொறுமையான விடா முயற்சியிலும் முன்னேறுகிறவர்களாய் அல்லது அவ நம்பிக்கையிலும் நம்பிக்கையின்மையிலும் பின் வாங்குகிறவர்களாய் இருப்போம். (யாக் 1:2-4) தலைமைத்துவம் உடையவர்கள் கர்த்தருடைய வார்த்தையில் எவ்வாறு நிலைத்து நிற்பது என்பதைக் கற்றுக் கொண்டு அது நிறைவேறும் வரைக்கும் காத்தும், பார்த்திருந்தும் தொடர்ந்து நிற்க வேண்டும். இது தான் ஆவிக்குரிய முதிர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் வழியாக இருந்து கர்த்தருக்குள் உள்ள நம்முடைய விசுவாசத்தை கிரியையில் பயன்படுத்தவும் அதை வெளிக்கு எடுத்துக் காட்டவும் முடிகிறது.

நம்மைச் சோதித்து பயன்படுத்துகிறவர் யார்?

சங் 11:5ன் படி கர்த்தர் நீதிமானைச் சோதித்து அறிகிறார் என்பதைத் தெரிந்து கொள்கிறோம். நாம் இதை மனதில் (ஞாபகத்தில்) வைத்துக் கொள்வது நல்லது. ஏனென்றால் நமக்கு சரியான வழிகளில் எவ்வாறு நடந்து கொள்வது என்பதைத் தெரிந்து கொள்கிறோம். சிற்சில சமயங்களில் நாம் செய்யும் தவறுகளின் விளைவாக பிரச்சனைகளைச் சந்திக்கிறோம். மற்ற சமயங்களில் பிசாசானவன் நமக்குத் துன்பம் விளைவிப்பதை உண்மையாகவே சந்திக்கலாம். நமக்கு நேரிடும் சோதனைகளுக்கான காரணங்களை தெரிந்து அறிந்து கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில்:

a. இது கர்த்தருடைய அனுமதியாய் இருந்தால்: நாம் தேவனுக்குக் கீழ்படிந்து (யாக் 4:7a) அவருடைய கிருபையின் மீது சார்ந்து அந்த சோதனையின் வழியாகக் கடந்து செல்வோமானால் நாம் ஜெயங் கொள்ளுகிறவர்களாய் இருப்போம். (I கொரி 10:13)

b. நமது சொந்தத் தவறாக இருக்குமானால்: அதிலிருந்து கற்றுக் கொள்.

c. அது சாத்தானுடைய தாக்குதலாய் இருந்தால்: பிசாசுக்கு எதிர்த்து நில். அதை எதிர்த்துப் போராடி மேற்கொள் (யாக் 4:7b)

கர்த்தர் நம்மை பரீட்சை செய்து சோதிப்பதற்கான காரணங்கள்:

1. நமக்குக் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொடுக்க

நாம் இந்தப் பாடத்தை பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் ஜீவியத்தில் காணப் பெறுகிறோம். (உம்) ஆபிரகாம் தன் சொந்த குமாரனாகிய ஈசாக்கைப் பலியாகச் செலுத்தும் படி சோதிக்கப்பட்டான். அவன் தேவனுக்குக் கீழ்படிந்ததால் ஒரு வல்லமையான ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொண்டான். (ஆதி 22:15-18) கீழ்ப்படிதல் என்பது கர்த்தரைக் கனப்படுத்தி அவரைப் பிரியப்படுத்துகிறது. அது பலியைப் பார்க்கிலும் உத்தமமானது. (I சாமு 15:22) ஆனால் ஒவ்வொருவரும் பாடுகளின் மூலமாகவும் சிட்சையினாலும் கற்றுக் கொடுக்கிறார். (எபி 12:6-8) இயேசுவுங்கூட தாம் பூரணராகும் பொருட்டு வேதனையான பாடுகளின் வழியே கடந்து செல்ல வேண்டியதாய் இருந்தது. ஆகவே நம்முடைய ஜீவியத்திலும் நாம் முதிர்ச்சி அடைவதற்கு தேவன் தாமே எவ்வளவு அதிகமாய் பிரச்சனைகளை பயன்படுத்துவது அவசியமாய் இருக்கிறது. (எபி 5:8)

2. நமது நோக்கத்தையும் உள்ளான மனப்பான்மைகளையும் சோதித்து அறிவதற்காக

நமது இருதயங்கள் எதை நோக்கி உண்மையாகவே போகிறது என்பதை அறிய விரும்புகிறார். சோதனைகளின் வழியாக மாத்திரமே ஒருவருடைய உண்மையானதும் ஆழமானதுமான மனப்பான்மைகளை வெளிக்குக் காட்ட முடியும். அது தேவனுடைய இராஜ்ஜியத்திற்காகவோ அல்லது சுய நலமான இலாபத்திற்காகவோ என்று நிர்ணயிக்க முடியும். (உம்) பிலேயாமின் ஜீவியம் (எண். அதி 22-24) தீர்க்கதரிசியான பிலேயாம் சுய நலமான பேராசைக்கு ஆளானான்.

தேவனுடைய வார்த்தையை மட்டுமே அவன் பேசக் கூடும் என்று அறிந்திருந்தான். ஆரம்பத்தில் இஸ்ரவேலை சபிப்பதற்காக அவன் பரிதானம் வாங்க மறுத்தாலும் அவன் முடிவாக துர் ஆலோசனை கொடுத்தவனாகக் காணப்படுகிறான். அவனுடைய உள்ளான நோக்கங்கள் தூய்மையற்றவையாய் இருந்தன. (II பேதுரு 2:15; யூதா 11)

3. சோதனை நீடிய பொறுமையையும் முதிர்ச்சியையும் உண்டாக்குகிறது.

யாக் 1:2-4 இந்த வசனங்கள் கற்றுக் கொடுப்பது என்னவென்றால் சோதனைகளிலிருந்து தப்பிக்க குறுக்கு வழியாகவோ அல்லது தப்பித்துச் செல்வதோ கூடாது. மேலும் அக்கினி போன்றதும் அல்லது இடைபாடுகளுங்கூட உடனடியான பலா பலன்களைக் கொடுக்க முடியாது. ஆனால் அவைகள் நம்மை நோக்கி வரும்பொழுது அவற்றை எதிர் நோக்கி மகிழ்ச்சியுடன் தழுவிக் கொள்ள வேண்டும். அவைகளைச் சகித்து அவற்றின் மத்தியில் விடா முயற்சியுடன் முன்னேறிச் செல்ல வேண்டும். இதற்குரிய ஒரு முழுமையான எடுத்துக்காட்டை கூட்டுப் புழுவிலும் வண்ணத்துப் பூச்சியிலும் காண்கிறோம். ஒரு கூட்டிலிருந்து வண்ணத்துப் பூச்சியானது அதை உடைத்து வெளியே வரப் பிரயாசைப் பட்டது. நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு பின்னர் அதன் தலையும் ஒரு பக்கத்து சிறகின் ஒரு பகுதியுமே இலகுவாக வெளியில் வந்தது. இதைக் கவனித்துக் கொண்டிருந்த பார்வையாளர் ஒருவர் அந்த வண்ணத்துப் பூச்சி விரைவில் வெளி வரும் முயற்சியைத் தீவிரப்படுத்துமாறு ஒரு கூர்மையான பேனாக் கத்தியை எடுத்து அந்தக் கூட்டை வெட்டித் திறப்பாக்கி வெளி வரும் பூச்சியை விடுவிக்குமாறு முயன்றார். ஆனால் ஆச்சரியப்படும் படியாக அதிக முயற்சியுடனும் போராட்டத்துடனும் வெளியில் வந்த பகுதியே நன்றாக வளர்ச்சி அடைந்திருப்பதைக் கண்டறிந்தார். அவர் கத்தியால் வெட்டி வெளியே வர உதவிய பகுதியானது இன்னும் நன்றாக வளர்ச்சி அடையாமலும் கூட்டுக்கு வெளியே உள்ள சூழ்நிலையின் தாக்கத்திற்கு ஆயத்தப் படுத்தப்படாமல் இருப்பதையும் பார்த்தார். அந்தக் கூட்டுப் புழு வண்ணத்துப் பூச்சியாக வளர்வதற்கு உதவுவதற்கு பதிலாக அந்த நடைமுறையை கெடுத்துப் போட்டார். இந்த மாதிரி அறை குறையான வளர்ச்சி அடைந்த வண்ணத்துப் பூச்சி சீக்கிரமாகச் செத்துப் போனது. இதே மாதிரியான வழியில் சில சமயங்களில் மற்றவர்களுடைய கஷ்டங்களில் உதவி செய்ய முயற்சிக்கும் பொழுது சிறிது காலம் கழித்து அதே பிரச்சனையில் அவர்கள் திரும்பவும் விழுந்து விடுவதைப் பார்க்கிறோம். நாம் அவர்களை சிறிது காலமே அந்த பாடுகளை அனுபவிக்கும்படி அனுமதித்திருந்தால் தேவன் தாமே அவர்களுக்குப் போதிக்கும்படியாக முயற்சி செய்யும் ஓர் பாடத்தை அவர்கள் கற்றுக் கொண்டு விடுவதால் அது அவர்களுக்கும் அவர்கள் சார்ந்திருக்கும் திருச் சபைக்கும் அது உகந்ததாக இருக்கும்.

4. சோதனைகளின் மூலமாக கர்த்தரால் உண்மையாகவே அழைக்கப்பட்டவர்களை பிரித்தெடுத்து தெரிந்து கொள்ளுதல்

நம்மை பின்பற்றும்படியாக மக்களை நாம் ஏமாறச் செய்ய முடியும். ஆனால் கர்த்தரை ஒருக்காலும் ஏமாற்ற முடியாது. கர்த்தரால் அழைக்கப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் மட்டுமே தலைமைத்துவம் உடையவராக அதனால் ஏற்படும் அழுத்தமான பாரங்களை ஜீவியத்தில் ஏற்றுக் கொண்டு காலப் போக்கில் ஜீவிக்க முடியும். தேவன் தாமே தமது மக்களை நம்பிக்கை இழந்த சூழ்நிலைகளினூடே வைக்கும் பொழுது தங்களுடைய ஜீவியத்தில் கர்த்தருடைய உண்மையான அழைப்பை உணராதவர்கள் இந்த ஆயத்தப் படுத்தப்படும் நடைமுறையில் இருந்து விலகி விழுந்து போவார்கள். இது அப்படிப் பட்டவர்களுக்கும் திருச்சபைக்குமே நல்லதாக இருக்கும். ஏசாயா 48:10ல் சொல்லப்படுகிறதாவது, "இதோ உன்னைப் புடமிட்டேன். உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன்." (நெருக்கம் சோதனை, ஏமாற்றங்கள் ஆகியவற்றின் மத்தியில்) அவர் நம்முடைய பிரதியுத்தரமான கிரியையை கடினமானதும் எதிர் மறையானதுமான சூழ்நிலைமைகளில் எதிர்பார்ப்பார். ஆனாலும் அவருடைய கிருபையினால் நாம் கற்றுக் கொண்டு வளர்ச்சி அடைகிறவர்களாய் இருப்போம்.

ஆனாலும் எல்லோருமே அந்த பரீட்சையில் தேற மாட்டார்கள். (மத் 20:16). வெளி 17:14 இதற்கு மேலுமோர் தகுதியை அழைக்கப்பட்டவர்களுக்கும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கும் கூடுதலாக சேர்க்கிறது. அது (விசுவாசவுடைமையே) உண்மையாக இருப்பதாகும். அவர்களுடைய ஜீவியமானது விலை பேசப்பட்டாலும் அவர்கள் கர்த்தருக்கு உண்மையாய் நிலைத்து நிற்பவர்கள் ஆவார்.

5. கர்த்தருடைய வார்த்தையின் படி நமது விசுவாசத்தைச் சோதித்தல் (நீதி 30:5; சங் 12:6)

நமக்கு தேவன் தாமே தமது வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் அருளிச் செய்திருந்தாலும் அவைகளைக் கொண்டு நம்மை சோதித்துப் பார்ப்பார். தேவனுடைய எழுதப்பட்டதும் ஜீவனுள்ளதுமான வார்த்தைகளை அழித்து விடுவது போல் தோன்றும் சந்தர்ப்பங்களை நீ அனுபவிக்கும் படியாக நேரிடலாம். ஒருகால் தேவன் தமது வாக்குத்தத்தங்களை மறந்து விட்டாரோ என்றுங்கூட நீ உணரலாம். தேவன் தாமே உன்னுடைய ஜீவியத்தை ஒரு தலைவனாக உனக்குள்ள யாவற்றையும் வெறுத்து ஒதுக்கி விட்டு கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்காய் தேவனுடைய பலத்தின் மேல் மட்டும் சார்ந்திருக்கிறாயா என்று சோதித்துப் பார்ப்பார். ஆனால் ஒருவருக்கு அநேக தாலந்துகளும் திறமைகளும் சிறப்பாக அமைந்திருக்கும் பொழுது இது எளிதானதல்ல.

(உம்) யோசேப்புடைய ஜீவியம். (ஆதி 37:45) ஒரு இளவாலிப இளைஞனாக இருந்த பொழுது கர்த்தர் அவனுக்கு தனது சொந்தக் குடும்பத்திற்கே தலைவனாக இருப்பான் என்று தெரிவிக்கும் இரண்டு சொப்பனங்களை அருளிச் செய்தார். ஆனாலும் அவன் அடிமையாக விற்கப்பட்டான். இறுதியாக சிறைக்கு அனுப்ப பட்டான். சங் 105:17-19. கர்த்தருடைய வசனம் அவனை புடமிட்டுச் சோதித்தது. ஆனால் அவன் நிலைத்து நின்று கடைசியாக கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு நிறைவேற்றப்படுதலைக் கண்டான். இந்த சோதனையான காலத்தில் தேவன் அவனுடைய நடத்தையையும் ஞானத்தையும் தாழ்மையையும் அவனுடைய ஜீவியத்தில் வளர்த்து விருத்தி அடையும் படியாகச் செய்தார்.

6. சோதனைகளின் வாயிலாக தேவன் தலைவர்களைத் தகுதியள்ளவர்களாக ஆக்குகிறார்.

இந்த சோதனைகளின் மூலமாக தேவன் தலைவர்களை ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலையும், தாங்கள் ஊழியம் செய்யும் மக்களுக்கு தாங்கள் உதவ வேண்டிய அவசியத்தையும் புரிந்து கொள்ளவும் தேவையான அனுபவத்தை அவர்கள் ஜீவியத்தில் தந்து தகுதிப் படுத்துகிறார். எல்லா விசுவாசிகளும் பலவேறு பட்ட சோதனைகளையும் பாடுகளையும் அனுபவிக்கிறார்கள். தேவனுடைய சோதனைகளை தங்களுக்காக வெற்றி கரமாக மேற்கொண்ட தலைவர்கள் மாத்திரமே அதே விதமான சோதனைகளில் விசுவாசிகளுக்கு உதவக் கூடியவர்களாக இருப்பார்கள்.

சோதனைகளையும் பாடுகளையும் கடந்து வரும் காலங்களில் ஒரு சரியான நேர் முகமான மனப்பான்மையை அமைத்துக் கொள்வது முக்கியமானதாகும்.

<u>ஆகையால்:</u>

- **ஒவ்வொரு சோதனையிலும் கர்த்தருடைய கரத்தைக் கவனித்துப் பார்.**
- **தேவனுக்கு அடங்கு ஒப்புக் கொடுத்து முறுமுறுக்காமலும் கசப்படையாமலும் இருப்பாயாக.**
- **எல்லாக் காரியங்களும் நன்மைக்காகவே நடக்கிறது என்பதை அறிந்துணர்ந்து கொள்க. சோதனைகளும் கடினமான நேரங்களும் நன்மைக்காகவே நடக்கின்றன. (II கொரி 4:17)**

பாடம் 4 சுய மதிப்பீடும் வளர்ச்சிக்கான ஏதுக்களும்

A. <u>சுய மதிப்பீடு - I சாமு 16:7</u>

விசுவாசிகளாக நம்மில் நாமே உண்மையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஏனென்றால் தேவன் தாமே நம்மை முற்றிலுமாக அறிந்திருக்கிறார். அவர் ஏமாற்றப்படக் கூடியவரல்ல. அதிலுங்கூட தலைவர்களும் தங்களில் தாமே உண்மையுள்ளவர்களாக உங்களுடைய வளர்ச்சி விருத்தியில் உதவவும் வேண்டும். ஒரு தலைவர் முன்னேற்றத்தை அடைய வேண்டுமென்றால் தன்னைத் தானே மதிப்பீடு செய்து விழிப்புள்ள மனிதனாக தன்னில் தானே இருக்க வேண்டும். ஒரு தலைமைத்துவம் உடையவன் தன்னுடைய பலத்தையும் மேலும் பலவீனத்தையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

ஆவிக்குரிய பரிசோதித்தலுக்கான பகுதிகள்

நம் தேவனுக்காக செயலூக்கமுடையவர்களாக இருக்க வேண்டுமென்றால் பின்வரும் ஜீவியத்தின் ஐந்து பகுதிகளில் வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும்.

1) **சுய விழிப்புணர்வு** - I தெச 5:23-24

தேவன் நம்மை நாமாகவே இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அதாவது மற்றவர்களுடன் நாம் இடைபட்டு நம்மை மற்றவர்களுக்கு எவ்வாறு வெளிப்படுத்திக் கொள்கிறோம் என்பதில் விழிப்புணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் போதுமான கவனம் செலுத்தாவிட்டால் நமக்கு நாமே ஒரு மாயமான சிப்பிக் கூட்டை உண்டாக்கி கட்டி எழுப்பிக் கொண்டு அந்தக் கூட்டிற்குள் நாம் ஒடுங்கி ஜீவித்து நம்மைச் சுற்றியுள்ள இயல்பான சூழ்நிலையோடு தொடர்பை இழந்து விடுவோம். இதன் விளைவு என்னவென்றால் நாம் மாய்மாலம் என்ற முக மூடியுடன் ஜீவிக்கிறவர்களாக இருப்போம்.

தேவன் நம்மை நம்மோடும், அவருடனும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறார். அவர் நாம் அனைவரும் நம்மைப் பற்றி அவர் சிந்தனை செய்வது போல் நாமும் சிந்தனை செய்ய வேண்டும் என்றும் நம்மைப் பற்றி உயர்வாக அல்ல நாம் சாந்தமான தீர்மானத்தோடு சிந்தனை செய்ய வேண்டும். (ரோமர் 12:3)

நாம் அறை குறையான குறைபாடுகளுடன் வாழ்வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். அச்சமயம் தேவன் தாமே உனக்கு உதவி செய்து நீ உன்னை அபிவிருத்தி செய்து கொள்ளவும் அவரை தேவனுடைய பலத்திலும் (பிலிப் 3:12-14) கிருபையிலும் சார்ந்து நீ பூரணத்துவத்தை நோக்கி முன்னேறிச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். (II கொரி 12:9)

நாம் நமது சுயத்தை மையமாக ஆக்கிக் கொள்ளாமல் நாம் அடிக்கடி பல கால கட்டங்களில் நம்மை மதிப்பீடு செய்யும் பொழுது பின்வரும் கேள்விகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

- நான் எவ்வாறு வேலை செய்கிறேன்?
- என்னுடைய பலமும் பலவீனமும் யாது?
- மற்ற மனிதர்களைக் குறித்தும் செயல்பாடுகள் பற்றியும் என்னுடைய மனப்பான்மை யாது?

2) **சுய ஒழுக்கம்** - II தீமோத் 1:7

நாம் தேவனுக்குள் நமது வலிமையை அடைய வேண்டுமானால் நாம் ஒரு ஒழுங்கான முறைபடுத்தப்பட்ட ஜீவிய முறையை விருத்தி செய்து கொள்ள வேண்டும். அதாவது பரிசுத்த ஆவியின் வல்லமையால் எய்தி பெற்றுக் கொள்ள வேண்டியது ஒன்றாகும். தன்னடக்கம் என்பது ஆவியின் கனிகளில் ஒரு பகுதியாகும். (கலா 5:23) நாம் ஜீவியத்தின் ஒழுங்கு முறையால் மட்டுமே தேவன் தமக்காக எந்த இலக்கை அடைய வேண்டுமென்று வாஞ்சிக்கிறாரோ அந்த இலக்கை அவருக்காக அடைய முடியும். நமது ஜீவியத்தை ஒரு மோட்டார் வாகனத்தின் பேட்டரியோடு ஒப்பிடலாம். ஓர் மோட்டார் வாகனத்தின் பேட்டரியில் பல சிறிய செல்களால் ஒருங்கிணைக்கப்பட்டு எல்லா விதமான இராசாயன அமிலங்களையும் ஒன்று படுத்தி வைக்கிறது. இந்த செல்களில் ஒன்று சேதமடைந்தாலும் பேட்டரி பலவீனப்பட்டுப் போகும். ஆனால் சில சிறு செல்கள் சேதமடைந்தால் பேட்டரியானது பயனற்றுப் போகும். அந்த பேட்டரியின் ஒட்டு மொத்தமான சக்தி உற்பத்தியும் இந்த செல்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் கிரியை செய்வதால் உண்டாகிறது. நம்முடைய ஜீவியத்திலும் இது போலவே தான். நாமும் நமது ஜீவியத்தை சிறு சிறு பகுதி அறைகளான, நிதி, குடும்ப ஜீவியம், உறவுத் தொடர்புகள் காலம், உத்தியோகம், ஈவுகளைக் கொடுத்தல், உணர்ச்சிகள், கற்றுக் கொள்ளுதல், பழக்க வழக்கங்கள் முதலியனவற்றால் ஆனது என்று கருத்தில் கொள்ளலாம். நம்முடைய ஜீவியத்தில் தேவைகள் அனைத்தும் இந்த எல்லா பகுதிகளிலும் இருந்து ஒன்றாகச் சேர்க்கப்பட்டு இவை செயலூக்கத்துடன் கிரியை செய்யும்படியாக ஒழுங்காக்கப் படுகிறது. இவைகள் அனைத்தும் நம்முடைய ஜீவியத்தில் சிறு துண்டுகளாக அமைந்து அவைகள் வேலை செய்கிற பிரகாரமாய் செயல்படாமல் அவைகள்

ஒன்றுக்கொன்று தொடர்புள்ளனவாய் இருக்க வேண்டிய பிரகாரம் இல்லாமல் இருந்தால் அதன் பயன்படும் தன்மையானது அழித்து விடப்படும். சில துண்டுகள் நல்லவைகளாக இருக்கலாம். ஆனால் கெட்டுப் போன துண்டுகள் எல்லாவற்றையும் கெடுத்து விடும். உதாரணமாக, நாம் செயலூக்கத்துடன் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஏனென்றால் நமது உணர்வுகள் ஒன்றாகச் சேர்க்கப்படாமல் இருப்பதாலும் ஒழுங்கு முறையானது குறைவு படுவதாலும் அப்படி ஆகிறது.

3) **ஆவிக்குரிய பிரகாரமான முதிர்ச்சி** - எபேசி 4:11-16

கர்த்தர் தமது ஜனங்களை அவருக்குள் வளர்ந்து முதிர்ச்சி பெறவும் கிறிஸ்துவின் சாயலில் உண்டாகவும் வேண்டுமென்று வாஞ்சிக்கிறார். ஆனால் இது ஒரு நடைமுறை ஆகி வளர்வதற்கு காலம் எடுத்துக் கொள்கிறது. (II கொரி 3:18) உன்னுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை மதிப்பீடு செய்ய பின்வரும் கேள்விகளால் உன்னையே கேட்டுப் பார்.

நான் வளர்ந்திருக்கிறேனா?
- ☐ - வேதாகமத்தைப் பற்றிய என்னுடைய அறிவில்?
- ☐ - என்னுடைய ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலில்?
- ☐ - ஆவியின் வரங்களுக்குரிய விருத்தியில்?
- ☐ - பிறருடைய பார்வையில் (அ) கண்ணோட்டத்தில்?
- ☐ - துன்பங்களை மேற்கொள்வதில்?
- ☐ - சந்தர்ப்ப சூழ்நிலைமைகளை நன்றாகக் கையாளுவதில்?
- ☐ - அழுத்தத்தை சமாளிப்பதில்?
- ☐ - மற்றவர்களுடன் இருக்கும் உறவுத் தொடர்பில்?

4) **இலக்கை நோக்கித் தொடருதல்** - பிலிப் 3:13-14

சாதனை என்பது செயல் தூண்டுதலுக்கு ஒரு நல்ல நதி மூலம் போன்றது. ஆனாலும் கர்த்தர் அவருடைய அன்பினால் நாம் செயல் தூண்டுதல் பெற வேண்டும் என்று விரும்புகிறார். மேலும் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும் ஒரு வாஞ்சையையும் நம்மிடம் விரும்புகிறார். அதன் முக்கியத்துவத்தை வளரச் செய்து நம்முடைய சாதனை மட்டத்தை மதிப்பீடு செய்வது பின்வரும் காரியங்களில் செய்யப் பட வேண்டும். a) உறவுத் தொடர்புகளில் b) ஊழியத்தில்.

அப்படி நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டியவை:
- ♣ நான் சாதிக்கும்படி ஆரம்பிக்க விரும்புகிற எதையாகிலும் சாதித்திருக்கிறேனா?
- ♣ தேவன் உனக்கு ஏதோ ஒன்றைச் செய்யும் படியாகத் தந்தால் அதை நிறைவேற்றி முடிப்பாயா?

உன்னுடைய சாதனையை தடை செய்தது என்ன:
குறைவினால் a) செயல் தூண்டுதலில் b) தெளிவான இலக்குகள் c) சமய சந்தர்ப்பங்கள் d) பயிற்சி e) ஆதரவு

5) **உணர்ச்சிப் பதிவடையாளங்களும் அதை முன் வைத்தலும்** (எபி 13:20-21)

நாம் நம்மை பிறருக்கு முன்னிலைப் படுத்தும் வழி முறையில் நாம் எல்லோரும் மற்ற ஜனங்களின் மனதில் கண்களில் ஒரு விதமான கற்பனைப் பதிவை உண்டாக்குகிறோம். நாம் பிறருக்கு நம்மை முன்னிலைப் படுத்திக் காண்பிக்கும் பொழுது நாம் எப்படி மற்ற ஜனங்களுடன் நன்றாக தொடர்பு கொள்கிறோம் என்பதை நாம் கண்டு தெரிந்து கொள்ள வேண்டும். நாம் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் பொழுது நம் மீது என்ன வகையான பாதிப்பை இந்த வகையில் நம்மீது கொள்கிறதென்பதையும் நாம் அவற்றின் மீது ஏற்படுத்தும் பாதிப்பையும் மதிப்பீடு செய்தல் அவசியம்.

பின்வரும் கேள்விகள் அவ்வாறு மதிப்பீடு செய்ய பெரிதும் உதவக் கூடும்:

⇒ மற்றவர்களுக்கு உன்னைப் பற்றிய ஒப்புமை நேரடியானதா? அது தேவனுக்காக உன் வேலையில் உதவி செய்யுமா?

⇒ நீ எப்பொழுதாவது எப்படிப்பட்ட ஒரு அனுமான உருவகத்தை நீ பிறர் மீது பிரதிபலிக்கச் செய்கிறாய்? மேலும் எதை நீ அனுமான உருவகமாகப் பிரதி பலிக்கப் போகிறாய்?

⇒ உன்னுடைய நடவடிக்கைகள், சுத்தமாயிருத்தல், தனிப்பட்ட சுகாதாரம் இவற்றால் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறாயா?

⇒ உன்னுடைய அங்க அடையாள பாஷையினால் எதை மக்களுக்குத் தொடர்பு படுத்திக் கூறுகிறாய்? தன்னம்பிக்கையா அல்லது தைரியமின்மையா?

⇒ உன்னைப் பற்றி உனது உறவுத் தொடர்புகள் வெளியில் கூறுவது என்ன? உன்னைச் சுற்றி எந்த வகையான மனிதர்கள் இருக்கிறார்கள். நீ அவர்களுடன் உரசிக் கொள்கிறாயா அல்லது அவர்கள் உன் மீது சாடுகிறார்களா?

B. <u>வளர்ச்சிக்குக் காரணிகள்</u>:-

நம்மை நாம் மதிப்பீடு செய்து கொண்டு இதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நாம் மென் மேலும் வளர வேண்டியதன் அவசியத்தை உணருகிறோம். II பேதுரு 3:18. சிறப்பாக ஒரு கிறிஸ்தவ தலைவனுக்கு ஆவிக்குரிய வளர்ச்சியானது அதி முக்கியமானதாகும். ஏனென்றால் கர்த்தருக்குக் கனி கொடுப்பதற்காக பிரத்தியேகமாக பின்வரும் பகுதிகளில்:

a) நல்லொழுக்கத்தில் - நான் யாராக இருக்கிறேன்?
இதன் தன்மையில் ஆள் தன்மை விருத்தியும், அடையாளம் பெறுதலும் நன்னெறியும் அடங்கும்.

b) திறமை - நான் என்ன செய்யக் கூடும்?
இதில் வரங்கள் தாலந்துகள் விருத்தி அடைவது அடங்கும்.

c) புரிந்து கொள்ளுதல் - எனக்கு என்ன தெரியும்?
இது அறிவுப் பூர்வமான திறமை, உள் நோக்கு, உணர்ச்சி வசப்படுதல், தெரிந்து அறிதல் ஆகியவை அடங்கும்.

d) உறவுத் தொடர்புகள் - நான் எவ்வாறு தொடர்பு கொள்கிறேன்?
மற்ற மனிதர்களுடன் ஒருங்கிணைந்து வெளிப் படையான தனிப்பட்ட மட்டங்களில் திறமையாய் செயல்படுவதைப் பொறுத்தது.

ஆகவே இந்த நான்கு வினாக்களும் எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்பு உடையன என்பதைக் கவனிக்கவும். இதில் நீ யாரென்று தீர்மானஞ் செய்வது தான் உன்னால் என்ன செய்ய முடியும், நீ அறிந்து கொள்ளக் கூடியது என்ன? நீ யாரோடு தொடர்பு கொள்கிறாய்? என்பதும் அடங்கும்.

தேவனுக்குள் பூரண முதிர்ச்சி அடைவது என்பதை நமது ஜீவியத்தில் ஓர் மட்டத்தில் வைத்துக் கொண்டு இடர்பாடுகளும் இன்னல்களும் வந்த போதுங்கூட அதை நிலை நிறுத்திக் கொள்வதாகும். நாம் எந்த விதமான சந்தர்ப்ப சூழ்நிலையிலும் ஓர் மட்டத்தில் நிலை நின்று துன்பத்தைச் சமாளித்தும் நம்முடைய ஜீவியத்தை மிகவும் பொருத்தமான வழியில் மாற்றி அமைத்துக் கொண்டும் மேற்கொண்டு செயல் படுவதாகும்.

<u>நமது (விருத்தி) முன்னேற்றத்தின் நடைமுறையும், வளர்ச்சியும் பின்வரும் வளர்ச்சிக்கான ஏதுக்களால் உதவி பெற்று பயன் அடையக் கூடும்:</u>

1) **போதனை** - நீதி 22:6

கர்த்தரைப் பற்றி நன்கு அறிந்து கொள்வதற்கும், அவருடைய வழிகளில் போதித்து நடத்தப் படுவதற்கும் தேவனுடைய வசனத்தையை நாம் கைக் கொண்டு நடப்பதற்கு இது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. (II தீமோத் 2:15) எந்த ஒரு தலைவரும் கர்த்தருடைய சந்நிதியில் அடிக்கடி காத்திருந்தும், அவருடைய வசனத்திலும் கூட காத்திருந்தும் தனது உள்ளத்தைக் கூர்மையாகவும், சுறுசுறுப்பாகவும் தேவனுக்கு பயனுள்ளதாகவும் வைத்திருத்தல் அவசியமாகும்.

2) **அகத் தூண்டுதல்** - I கொரி 4:15-16

மற்றொருவரைப் போலவே நாம் அச்சு நகலாக இல்லாவிட்டாலும் கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கும் ஒருவருடைய ஜீவியமானது, உதாரணமாக அமைந்து, ஆவிக்குரிய வளர்ச்சிக்கு சிறந்த அகத் தூண்டுதலாக, அந்த நபருக்குள் காணப்படும்.

3) **பாதகமான சூழ்நிலை**- I தெச 5:18

தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள் அவரைப் பற்றி நன்கு அறிந்து கொண்டு அதனால் சமய சந்தர்ப்பங்களை நமக்கு பாடங்களைக் கற்றுக் கொடுக்கும் படியாக அனுமதிக்க வேண்டும். இதில் மிகவும் முக்கியமானது என்னவென்றால் நாம் அதை எவ்வாறு எதிர் கொண்டு செயல் படுகிறோம் என்பதும் அதற்கான சரியான மனப்பான்மையை நடைமுறையில் கொண்டிருக்கிறோம் என்பதும் தான்.

பாரமான அழுத்தங்கள் ஒரு மனிதனுடைய ஒழுக்கத்தையும் பலத்தையும், பலவீனத்தையும் எடுத்துக் காட்டும்.

இதற்கும் அதிகமாக எல்லா விதமான சூழ்நிலைமை சந்தர்ப்பங்களிலும் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளும் நமது திறமையையும் விருத்தி செய்கிறது.

4) **அனுபவங்கள்** - பிலிப் 4:12-13

நமது சந்தர்ப்பங்களும் சூழ்நிலைமைகளும் என்னவாக இருந்தாலும் மன திருப்தியுடன் நமது நம்பிக்கையை கர்த்தருக்குள் கொண்டு அவரை நம்பி அவருக்குள் விசுவாசமாய் இருக்க வேண்டும். அனுபவமே ஒரு சிறந்த ஆசிரியர் ஆகும். எப்பொழுதென்றால் அது கற்பிக்கும் பாடங்களுக்கு மனம் திறந்தவர்களாக இருக்கும் பொழுதுதான். அது நடைமுறையான ஞானத்தை விருத்தி செய்யும். அது நமது ஒழுக்கத்தையும் பளபளப்பாக்கி நம்மை மாற்றி அமைத்து விடும்.

5) **சவால்** - பிலிப் 3:13-14

சவால்களும் மாறுதல்களும் நமக்கு எப்பொழுதுமே மிரட்டுதலாக ஆகக் கூடாது. மேலும் நமது பாதுகாப்பையும் அது இடையூறு செய்யக் கூடாது. கர்த்தருடைய அசைவாடுதலை அவரது பரிசுத்த ஆவியின் மூலமாகத் தெரிந்து கொள்ளும் பொழுது அவர் கொண்டு வருகிற மாறுதல்களை திறந்த மனமுடையவர்களாய் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவரே நமக்கு உண்மையான பாதுகாப்பாக இருப்பதால், மாற்றங்களும் சவால்களும் நேரிடும் பொழுது அதன் மத்தியிலும் ஆவிக்குரிய வழி நடத்துதலால் ஏற்படும் மாற்றங்களை ஏற்றுக் கொண்டு அவரில் இளைப்பாறிக் கொள்ள வேண்டும். சவால்கள் நம்மை படைக்கும் புதிய ஆற்றல் உள்ளவர்களாக ஆக்கும். மேலும் தேவனுக்கு மிகுந்த கனிகளைக் கொடுக்கிறவர்களாகவும் ஆக்கும்.

6) **உறவு முறைகள்** - I யோவான் 4:19-20

விசுவாசிகளாக நாம் "தனிமை விரும்புகிறவர்கள்" என்று அழைக்கப்படக் கூடாது. நாம் மற்றவர்களுடன் எவ்வாறு உறவுத் தொடர்புகளை உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்று கற்றுக் கொள்ள வேண்டும். நாம் பல வகையான வேறுபட்ட மக்களைச் சந்திக்க நேரிடலாம். அது அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்றும் கற்பிக்கும். மேலும் அது உன்னுடைய செயல்பாடுகளை முழுவதும் வேறுபட்ட மனப்பான்மைகளான உள் நோக்கங்களோடு சோதித்து அறிகிறது. அது உன்னுடைய உள்ளான மனப்பான்மையை வெளி உலகத்திற்கு எடுத்துக் காட்டும்.

பாடம் 5 ஒரு தலைவனின் பண்புகள் (அ) குண நலன்கள்

முகவுரை:

கிறிஸ்தவ தலைமைத்துவத்தில் ஈவுகள், தாலந்துகள் திறமைகள் அனைத்தும் சேர்ந்து ஒரு தலைவரை உருவாக்குவது இல்லை. தலைவர்கள் தாங்கள் போகும் மார்க்கத்தில் குறுக்கிடும் பல வேறுபட்ட இச்சை கவர்ச்சிகள், சித்திரவதைகள், சோதனைகள் ஆகியவற்றை எதிர்த்து நிற்க வேண்டுமென்றால் அவர்களுக்கு ஒரு வலிமை மிக்க தெய்வீக நல்லொழுக்கமும் இன்றியமையாததாகும். கிறிஸ்துவை போன்ற குண நலன்களைப் பெற்றுக் கொள்வது தானாகவே வருவதில்லை. தேவன் தாமே இந்த குண நலன்களை நம்முடைய ஜீவியத்தில் கட்டி எழுப்ப வாஞ்சிக்கிறார். அதுவும் அவருடைய வார்த்தையின் மூலமாக, அவருடைய பரிசுத்த ஆவியின் மூலமாகவும் மக்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மூலமாகவும் இதைச் செய்கிறார். தேவன் தாமே நமக்குள் தலைமைத்துவ பண்புகளையும், நல்லொழுக்கத்தையும் விருத்தி செய்ய விரும்புகிறார். (ரோமர் 5:3-5)

நல்லொழுக்கமானது நாம் யார் என்பதை அதாவது நம்முடைய மன நிலை சம்பந்தப்பட்டதும் உணர்ச்சிகள், ஒழுக்க இயல்புகள் ஆகியவற்றால் ஆனதாகும். ஒழுக்கம் என்பது எதிர் மறையானதும் நேர்மையானதுமான பண்புகளால் அமையப்பட்ட ஒருவரது தனிப்பட்ட ஜீவியத்தில் அடங்கியதாகும். அதாவது நமது சிந்தனைகள், மதிப்பீடுகள், மனப்பான்மை, உணர்ச்சிகள், உள் நோக்கங்கள், நல்லொழுக்க பண்புகள் ஆகியவை நாம் பார அழுத்தங்களால் அழுத்தப்படும் பொழுது நம்மிலிருந்து வெளி வருபன ஆகும்.

நல்லொழுக்கமானது கட்டப்பட்டு விருத்தி செய்யப்படுவதால் நமது ஜீவியத்தில் நமக்கு உள்ளடக்கமாக வழங்கப்படும் காரியங்களைக் குறித்தும் எச்சரிக்கையும் விழிப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். கற்றும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளையே சரியான போதனைகளைக் கொண்டு போதிக்க வேண்டும். (பிலிப் 4:8-9) ஜீவியத்தில் தாங்கள் எதிர் முனையில் சந்திக்கும் சூழ்நிலைகளுக்கு பிரதிக் கிரியை செய்வது ஒரு தெய்வீகமான நடைமுறையில் கிரியை செய்வதாகும்.

ஆவியின் கனி

நம்முடைய ஜீவியத்தில் பரிசுத்த ஆவியானவர் விருத்தி செய்யப்பட விரும்புவது என்னவென்றால் ஆவியின் கனிகளின் மூலமாக கிறிஸ்துவின் குணநலன்களை நமக்குள் வளர்க்க விரும்புகிறார். (கலா 5:22-23) இயேசுவானவர் ஆவியின் கனிகள் அனைத்தையும் வெளிக்கு எடுத்துக்காட்ட விரும்பினார். ஏனென்றால் நாம் அவரைப் பின்பற்றி அவர் செய்த மாதிரி நடந்து நமது ஜீவியத்தை பரிசுத்த ஆவியின் கிரியைக்கு ஒப்புக் கொடுத்தல் அவசியமாகிறது. (II கொரி 3:18; ரோமர் 8:29).

ஒரு நல்ல கிறிஸ்தவத் தலைவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்றால்:

1. கர்த்தரையும் ஜனங்களையும் நேசித்து அன்பினால் (கிறிஸ்துவின்) ஊக்குவிக்கப்பட வேண்டும். (மத் 22:37-39; I கொரி 13)

2. தேவனுக்கும் உங்களுக்கும் இடையே உள்ள உறவுத் தொடர்பினால் ஏற்படும் சந்தோஷத்தினால் நிரப்பப் பட்டு இருங்கள். (யோவான் 15:10-11)
3. தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக் கடவது. நாம் எப்பொழுதும் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாயும் அவருக்குக் கீழ்படிகிறவர்களாயும் இருப்போம். (கொலோ 3:15; ஏசாயா 48:18)

4. கர்த்தர் அனுமதிக்கும் காலத்திற்காக உறுதியாகவும், நீடிய பொறுமையுடனும் மற்றவர்களால் துன்பப்பட்டாலும் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். (I தீமோத் 1:16)

5. மற்றவர்களைப் பற்றிப் புரிந்து கொள்வதிலும் அவர்களுக்கு தக்க மரியாதை செய்வதிலும் அன்பாயிருங்கள். (ரோமர் 2:4)

6. நீங்கள் பிறருக்கு காண்பிக்கும் உதாரத்துவத்தினாலும் தாராளமான குணத்தினாலும் உங்கள் நல்ல குணத்தை எடுத்துக் காட்டுங்கள். (கலா 6:9-10)

7. தேவனுக்குள் உங்கள் நம்பிக்கையை வைத்து விசுவாசமாகவும் தேவ விசுவாச பக்தியுடனும் நம்பிக்கைக் குரியவர்களாகவும், நம்பத் தகுந்தவர்களாகவும் இருங்கள். (லூக்கா 19:17)

8. மிகுந்த மனத் தாழ்மையுடனும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள். (எபேசி 4:2)

9. தன்னடக்கமும், சுயக் கட்டுப்பாடும், ஒழுங்கின் நடைமுறையிலும் உங்கள் மாம்ச இச்சைகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருங்கள். (நீதி 25:28)

<u>ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய முக்கியமான பிற குண நலன்கள்:</u>
(பின் குறிப்பு: மேய்ப்பனாகவும், வேலைக்காரனாகவும் பெற்றிருக்க வேண்டிய பண்புகளை பின்வரும் அத்தியாயங்களில் விவாதித்து விவரிப்போம்)

– தலைவர்கள் ஸ்திரமாகவும், உறுதியாகவும் சார்ந்திருக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் உறுதியான தூணாக, ஆவிக்குரிய பிரகாரமாகவும், மனோ ரீதியாகவும், உணர்ச்சிப் பூர்வமாகவும், சரீரப் பிரகாரமாகவும் வலிமை மிக்கவர்களாய் இருத்தல் வேண்டும். அதாவது திடமானதும், ஆழமானதும், ஆவிக்குரியதும் நன்றாகப் போடப்பட்டதுமானதுமான கர்த்தரின் வசனத்தையும் இயேசுவையும் அடித் தளமாகக் கொண்டு எவ்விதத்திலும் அசைக்கப்படக் கூடாததுமான தூண்களாக நிலைத்து நிற்க வேண்டும். தலைவர்கள் ஆகப்பட்டவர்கள் மற்றவர்கள் அவர்கள் முன் மாதிரியை பின் பற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

– தலைவர்கள் நன்கு செவி கொடுத்துக் கவனித்துக் கேட்பவர்களாகவும், தேவனுக்கும் பிறருக்கும் முன்பாக செயல்பட வேண்டும். கவனித்துக் கேட்பது மட்டுமல்ல. தொடர்பு கொண்டு சொல்லப்படுவதைப் புரிந்து கொள்ளவும் வேண்டும்.

– தலைவர்கள் எப்பொழுதும் மன்னிப்புத் தருகிறவர்களாயும் இருக்க வேண்டும். ஜனங்கள் என்ன சொன்னாலும் சரி, அவர்கள் உங்களை எவ்வளவு புண்படுத்தினாலும் மனதில் எவ்வளவு குரோதங்களையும் காயங்களையும் தங்க வைத்துக் கொள்ளாமல் அவர்களை மன்னித்து விட வேண்டும்.

– தலைவர்கள் எப்பொழுதும் உண்மை உள்ளவர்களாக, நேர்மை உள்ளவர்களாக நம்பத் தகுந்தவர்களாகவும் இருக்க வேண்டும். உங்களுக்கென்று ஜீவியத்தில் ஓர் வழியைத் தெரிந்து கொண்டும் பழக்கத்தை உண்டாக்கிக் கொண்டும், மாய்மாலத்தை வெறுத்தும், உங்களுக்கும் பிறருக்கும் திறந்த மனத்தையுடையவர்களாயும் பாசாங்கு செய்வதைத் தவிர்த்தும் இருக்க வேண்டும். ஏனென்றால் தேவனுடைய கிருபை மாத்திரமே ஒருவரை தலைவர்களாகும்படி தகுதியாக்க முடியும்.

– தலைவர்கள், தைரியமாகவும், பலமுள்ளவர்களாகவும் எதற்கும் அஞ்சாதவர்களாகவும் இருந்து, இத்தகைய பண்புகளை தாங்கள் வழி நடத்தி முன் செல்பவர்களிடம் உள்ளத் தூண்டுதல் செய்பவர்களாகவும் இருக்க வேண்டும். (யோசுவா 1:9; நீதி 28:1) ஒரு தலைவர் ஆனவர் முதன் முதலாக தன்னைப் பின்பற்றும் மக்களுக்கு சற்று முன்னதாக முன்னேறிச் சென்று தூரத்தை சற்று இடைவிட்டு அவர்கள் பின்பற்றி வரக் கூடும்படியாக செய்ய வேண்டும்.

– தலைவர்கள் பொறுப்புள்ளவர்களாக இருத்தல் அவசியம். அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது பணமும் அவர்களுடன் முடிந்து விடும் என்பதைத் தான்.

– தலைவர்கள் தாங்கள் வழி நடத்தி முன் செல்பவர்களை கரிசனையோடும் கருணையுடனும் பார்க்க வேண்டும். தாங்கள் ஊழியம் செய்பவர்களோடு உள்ளப் பூர்வமான உணர்ச்சிகளை அறியும் திறன் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

– தலைவர்கள் தங்களுக்குள் கற்றுக் கொள்ளும் ஆவியை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஒரு தலைவருங்கூட யாவற்றையும் அறிந்தவராக இருக்க முடியாது. ஆகவே அவர் புதியவற்றைக் கற்றுக் கொள்வதற்குத் திறந்த மனதினராகவும், வளைந்து கொடுக்கக் கூடியவராகவும் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

- தலைவர் ஆனவர் கடின உழைப்புடையவராகவும் வைராக்கியம் உடையவராகவும் இருக்க வேண்டும். கடினமாக உழைப்பவராக கர்த்தருக்காகவும் அவருடைய இராஜ்ஜியத்திற்காகவும் பற்றி எரிகிற வைராக்கியம் உடையவராக இருக்க வேண்டும். தீர்மானங்களை நன்கு நிறைவேற்றுபவராகவும் இருக்க வேண்டும்.

- தலைவர் ஆனவர் தம்மை தியாகமாக அர்ப்பணிக்க விருப்பமுடையவராக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கான தேவைகளை தங்களுடைய தேவைகளுக்கு முன்னதாக வைத்துக் கொள்ள விருப்பம் உடையவராய் இருக்க வேண்டும். எந்த விதமான இலாப நஷ்ட நிலைமையிலும் தன்னுடைய மக்களுக்காக ஒப்படைப்புச் செய்து கொண்டு அவர்களுக்கு ஊழியம் செய்வதை வாஞ்சிக்க வேண்டும்.

- தலைவர்களுக்கு ஐக்கியத்திற்கான ஒரு இருதயம் இருத்தல் அவசியம். இது கர்த்தருடைய ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். (சங் 133) ஜனங்கள் ஏக மனதும் சிந்தனையுங் கொண்டிருந்தால் ஐக்கியத்தின் மூலமாக மகத்தான சாதனைகளை அடைய முடியும்.

- தலைவர்கள் மாசற்றவர்களும் பரிசுத்தராயும் இருக்க வேண்டும்.

- தலைவர்கள் ஆனவர்கள் மரியாதை தருகிறவர்களாயும், அனலுள்ளவர்களாகவும் கிட்டிச் சேர தகுந்தவர்களாயும் இருக்க வேண்டும். மற்றவர்களின் நலனில் ஒரு நேர்மையான ஆர்வம் இருக்க வேண்டும்.

- தலைமைத்துவம் உடையவர்களுக்கு ஒரு தெளிவான கேந்திரமும் தரிசனமும் இருக்க வேண்டும். அதனுடன் ஜீவித்தும் கிரியை செய்தும் அதை மையமாகக் கொண்டு யுக்தி உபாயத்துடன் நிறைவேற்ற வேண்டும். ஆவிக்குரிய காரியங்களில் தீர்க்கமான உள் நோக்கும், தேவனுடைய அமர்ந்த மெல்லிய சத்தத்தை கவனித்துக் கேட்டும், அவருடைய சித்தத்தை அறிந்து கொண்டும் தங்கள் காரியங்களை காலத்திற்கு முன்னதாகவே அறிந்து கண்டு கொள்ளும் திறனும் தீர்க்கமான தீட்சண்யமான தொலை நோக்கும் உள்நோக்கு தரிசனமும் உடையவராயிருப்பது அவசியமாகும். அதனால் சரியான செயல்பாடுகளை எடுக்கவும் முடியும். அதுவும் நம்பிக்கையும் தீர்க்கமான தரிசனமும் நிரம்பப் பெறுவதாகும்.

- தலைவன் ஆனவர் ஞானமுள்ளவராக சரி / தவறு என்பதற்கும் நல்லவை / தீயன என்பவற்றைப் பிரித்து நிதானிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

- தலைவர்கள் ஒழுங்குபடுத்தப் பட்ட ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும். வேதாகமத்தின் முன்னுரிமைகளோடு ஜீவித்து அதாவது கர்த்தரை முதன்மையான ஸ்தானத்திலும் அதைத் தொடர்ந்து குடும்பம் பின்னர் ஊழியம் அடுத்து வேலைகள் இறுதியாக பெரிதும் சமூகத்திற்காக வாழ வேண்டும். சரியான உணவு முறை, தூக்கம், பழக்க வழக்கங்கள், திறமையான கால உபயோகம், நேரந் தவறாமை தொடர்ந்து இடம் பெறும். உன்னுடைய நிதி நிலைமையை திறமையாகக் கையாண்டு, வரவுக்கு மிஞ்சி செலவு செய்யாமலும் கடன் வாங்காமலும் உதாரணமாக தசம பாகம், அருட் கொடைகள் தருவதிலும் நிலை பெற்று இருக்க வேண்டும். மேலும் உதாரணமாக தெய்வ பக்தி வாழ்க்கையிலும், ஜெபம், ஆராதனை, கர்த்தருடைய வசனம் ஆகியவற்றை நடைமுறைப்படுவதிலுமே.

- தலைவர்கள் ஆகப்பட்டவர்கள் தாங்கள் வழி நடத்தி முன் செல்பவர்களுக்கு போதனை கொடுத்தும் கர்த்தருடைய வார்த்தையிலும் அவரது குறிக்கோள்களிலும் ஆலோசனை தந்தும் போதிக்க வேண்டும்.

- தலைவர்கள் கர்த்தருக்குப் பணிந்து கீழ்படிந்தும் தங்களுக்கு மேலானவர்களுக்கும் அவ்வாறே இருக்க வேண்டும்.

- தலைவர்கள் ஆனப்பட்டவர்கள் ஜீவியத்தில் பொதுவாகவும் மேலும் கிறிஸ்துவுக்குள்ளான ஜீவியத்திலுங்கூட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பாடம் 6 பெரிய மேய்ப்பரைப் பின்பற்றிச் செல்லுதல்

சிந்தனை: **மேய்ப்பனைப் போலவே ஆடுகளும்.**
இயேசு தாமே நம்முடைய பூரணமான எடுத்துக்காட்டு ஆவார்.

வேதாகமம் இயேசுவை அழைக்கிறது: – "நல்ல மேய்ப்பன்" என்றும் (யோவான் 10:11,14)
– "பெரிய மேய்ப்பன்" என்றும் (எபி 13:20)
– "பிரதான மேய்ப்பர்" என்றும் அழைக்கிறது. (I பேதுரு 5:4)

நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து பூரணமான எடுத்துக் காட்டாக, மெய்யான மேய்ப்பராக விளங்குகிறார். நாம் அனைவரும் கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படும் படியாக தியாக பலியான ஆட்டுக் குட்டியாக உலகத்திற்கு வர ஆயத்தமானார். (யோவான் 1:29) இது அவருடைய பரிசுத்தமான நோக்கத்தை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இதுவே நமக்கு முன்னுதாரணமாகும். இயேசு தாமே தமது ஆடுகளான மந்தைக்கு சொந்தமானவர். (மறுபடி பிறந்த எல்லா விசுவாசிகளும்) அவைகளை அவர் வழி நடத்தி அதற்காக கவனம் எடுத்துக் கொள்கிறார். (வெளி 7:17; I பேதுரு 2:25) கர்த்தர் தாமே தமது ஜனங்களை நேரடியாக போஷித்தும், தன்னால் தெரிந்தெடுக்கப்பட்டத் தலைவர்களைக் கொண்டும் பராமரிக்கிறார்.

ஆவிக்குரிய தலைவர்கள் அனைவரும் துணை மேய்ப்பர்களாக பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்துடன், பிரதான மேய்ப்பருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். (எபி 13:17) எப்படி என்றால் அந்த விதமான தலைவர்கள் தங்களுடைய ஜீவியத்தை கிறிஸ்து இயேசுவின் (அவர்) சாயலில் தானே அவருடைய ஒழுக்க நெறியான பாணியில் அமைத்துக் கொள்ள வேண்டும். இதன் காரணமாகத் தான் தேவன் தலைவர்கள்.்மேய்ப்பர்களை அவருடைய பிதாவின் இதய நோக்குப் பிரகாரமே நியமனம் செய்கிறார். (அப் 20:28) அதாவது அவர்கள் தொய்ந்து போன உதவியற்ற திரளானதும் துன்பத்துக்குள்ளானதுமான ஆடுகளை மேய்த்து வழி நடத்துவதற்காக அவ்வாறு செய்தார். (மத் 9:35-38) நாம் மக்களுக்காகக் கவனம் எடுத்துக் கொள்வதில் நல்ல மேய்ப்பர் செய்தது போலவே செயல்பட வேண்டும்.

மேய்ப்பன் என்பவர் யார்?

பழைய ஏற்பாட்டில் 'raah' என்ற பதம் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. அதன் அர்த்தமாவது போஷிக்க (ஆடுகளை) (போதகர்) மேய்ப்பன். (சங் 23:1) என்பதாகும்.
புதிய ஏற்பாட்டில் poimen (கிரேக்க பதம்) உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. இதன் அர்த்தமாவது "மேய்க்க, வழி நடத்த மேய்ப்பனைப் போல் பராமரிக்க" (ஆளுகை செய்ய, போஷிக்க) (யோவான் 10:11-16; யோவான் 21:16; I பேதுரு 5:2)
ஒரு மேய்ப்பனாகப் பட்டவர் ஆவிக்குரிய வழிகாட்டி ஆவார். அதாவது தேவனுடைய ஜனங்களுக்காக கவனம் எடுத்தும், வழி நடத்தியும், பாதுகாத்தும், போஷித்தும் வருபவர் ஆவார். மற்ற சொற்களில் கூறுவதென்றால் தேவனுடைய ஜனங்களை மேய்த்து கட்டி எழுப்பி கர்த்தருடைய வழியில் கொண்டு செல்வதாகும்.

கண்டிப்பாகக் கூறுவதென்றால்: மேய்ப்பனுடைய ஊழியத்தில் இரண்டு அம்சங்கள் உண்டு.
a) போஷித்தல், பராமரித்தல், கவனித்துக் கொள்ளும் அம்சம்
b) வழி நடத்தி முன் செல்வதும், ஆளுகை செய்வதுமான அம்சம்

உண்மையான மேய்ப்பன் தொழிலானது இந்த இரண்டு அம்சங்களுக்கும் ஒரு சம நிலையை ஏற்படுத்தி உடன் துணை மேய்ப்பர்கள் ஆடுகளுடன் இடைபடும் இணைந்த மனப்பான்மையையும் சமன்படுத்துவதாகும்.

மேய்ப்பனாகப் பணிபுரிதல் (I பேதுரு 5:2-4)

தனது மக்களுக்கு செயல் தூண்டுதல் அளித்து கட்டி எழுப்ப வேண்டுமானால் - ஒரு மேய்ப்பன் / தலைவன் செய்ய வேண்டியது:

1. **அறிந்தும் அறியப்பட்டும் ஆடுகளால்** (யோவான் 10:3,14,27)

"அவன் தன் ஆடுகளைப் பெயர் சொல்லி அறிகிறான்" என்பது தனது உறவுத் தொடர்புகளையும், விவரித்துக் கூறும் திறனையும், ஜனங்களின் நலனில் ஆர்வம் கொள்ளுதலும் அவர்களுடைய தேவைகளை அறிந்திருத்தலும் அவர்களது ஆவிக்குரிய நிலைமையைக் குறித்து விழிப்புடன் இருப்பதும், தேவன் அவர்களது ஜீவியத்தில் என்ன செய்கிறார் என்பதைப் பற்றிக் கூறுகிறது. ஆடுகளை "ஒரு ஜனக் கூட்டம்" என்ற பார்வையில் பார்க்கக் கூடாது. ஆம் ஓர் மக்கள் திரள் ஒவ்வொரு தனி நபருக்கும் பிரத்தியேகமான அவகாசம் எடுத்துக் கொள்ள வேண்டும். 'ஆடுகளால் அறியப்பட்டு இருத்தல்' என்பது உறுதியான அக நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அவரிடத்தில் கொண்டிருத்தல் என்பதைக் குறிக்கிறது. ஆகையால் அந்தத் தலைவரை பின்பற்றிச் செல்ல விரும்பி தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால் அந்தத் தலைவரிடத்தில் கிறிஸ்துவின் நல்லியல்புகளையும் அவருடைய தேவ ஞானத்தையும் பார்க்கிறார்கள்.

2. **ஆடுகளை நடத்திச் செல்லுதல் (முன் மாதிரியாக)** (யோவான் 10:3b-4b; I பேதுரு 5:3)

உண்மையானதொரு மேய்ப்பன் தன் ஆடுகளை ஓட்டுவதில்லை. அவன் அவைகளுக்க முன்னாக நடந்து போகிறான். ஆடுகள் அவன் பின்னாகச் செல்கின்றன. அவன் முன் மாதிரியாக அவைகளை நடத்திச் செல்கிறான். தேவனுடன் நடந்து செல்லும் நமது காரியத்தில் எல்லா அம்சங்களிலும் நல்ல மேய்ப்பன் தன்னுடைய சொந்த ஜீவியத்தில் அவற்றைக் கடைபிடித்தும் தானே அப்பியாசித்தும் பிறகு ஆடுகள் அவனைப் பின்பற்றி வரும்படி உற்சாகப்படுத்துகிறான். (I கொரி 11:1) அதன் பிரகாரம் அவைகளுக்கு அவன் எப்பொழுதும் ஆலோசனை தந்து கொண்டிருப்பான். (எபி 13:7) உதாரணமாக அவன் தன்னுடைய ஜனங்களை ஜெபிக்கவும், உபவாசிக்கவும், தசம பாகம் கொடுத்தல் ஆகியவற்றைச் செய்யும் படியாக விரும்பினால் தனக்குத் தானே முதன் முதலாக ஒரு ஜெப வீரனாக, உபவாசிக்கும் ஒருவனாக, தசம பாகத்தை தருபவனாக இருக்க வேண்டும். இந்த வழியில் ஒரு மேய்ப்பன் ஆனவன் தன் ஜனங்களுக்கு வழி காட்டியும் உதாரணத்தின் மூலமாக அவர்களைப் புறக்கணிக்காமல் வழி நடத்தி முன் செல்லலாம்.

3. **ஆடுகளைப் போஷிப்பாயாக** (யோவான் 21:15-17)

ஒரு மேய்ப்பன் தன் மந்தையை பராமரிப்பது அவசியமாக இருப்பதால் அதே போன்ற வழியிலும் ஒரு தலைவன் ஆனவன் தேவ ஜனங்களை தேவனுடைய வார்த்தையால் போஷிக்க வேண்டும். அவர்களுக்கு தேவனுடைய வழிகளில் போதித்தும் புத்தி சொல்லிக் கொண்டும் தேவனுடைய வசனத்தை போதித்து அதனால் மக்கள் ஆவியில் ஊட்டம் பெறவும் பலப்படவும் கட்டப்பட வேண்டியதும் அவசியமாகிறது. அந்த தலைவன் தான் முதலாவதாக தேவனுடைய வார்த்தையைப் படித்தும் அதற்குக் கீழ்ப்படிந்தும் நடந்து தான் செய்வது போல அவனும் தன்னுடைய ஜனங்களை வேதமாகிய வார்த்தையை வாசிக்கவும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியுமாறும் உற்சாகப் படுத்த வேண்டும். இந்த வழி முறையில் அடிக்கடி, ஒரு தலைவன் தானே தேவனுடைய வார்த்தையைப் படித்தும் அதனால் போஷிக்கப்பட்டும் தனது ஜனங்களுக்கு சற்று முன்னதாக முன்னோக்கி சென்று நிற்க வேண்டும். அந்த ஆடுகளும் கர்த்தருடைய வார்த்தையால் சரியாகப் போஷிக்கப்படும் பொழுது அவர்கள் முதிர்ச்சி அடைந்து இயேசுவைப் போல் ஆகி தேவனுக்கு கனி கொடுப்பவர்களாக ஆவார்கள்.

மென்மேலும் தலைவர் ஆனவர் தங்கள் ஜனங்களுக்குத் தேவையானது, எப்படிப்பட்ட உணவு தேவை என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களுடைய வளர்ச்சி நிலையையும் நிர்ணயித்து அதற்குத் தகுந்தவாறு போஷிக்க வேண்டும். யாருக்கு பாலுணவு தர வேண்டும் என்றும் யாருக்கு திட உணவு தர வேண்டியது என்பதை அறிந்திருக்க வேண்டும். (I பேதுரு 2:2; எபி 5:13-14) புதிய விசுவாசிகள் அதி முக்கியமான, அடிப்படை கோட்பாடுகளில் ஸ்திரமாக நிலை நிறுத்தப் பட வேண்டும். அதற்காக தேவனுடைய வார்த்தையைப் பகுத்துப் போதிப்பதால் அவர்கள் இலகுவாக அவற்றைப் புரிந்து கொள்ள முடியும். அவர்களுக்குத் திட உணவை அதிகமாகக் கொடுக்கக் கூடாது. யோவான் 16:12. அவை முதிர்ச்சியடைந்தவர்களுக்கு ஆகும். ஆகவே மக்களுக்கு சமநிலையான, நடைமுறையிலுள்ளதும் தேவ பக்தி தியானத்துக்குரிய

ஆவிக்குரியத் தூண்டுதலைத் தரும். போதனையான உணவை அவர்கள் சரியான முறையில் வளரும் படியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

4. **ஆடுகளுக்காக உத்தரவாதமாய் விழித்திருத்தல்** (எபி 13:17; யோவான் 10:10)

தலைவர்கள் காலத்தின் அடையாளங்களைப் புரிந்து கொண்டு சத்துருவானவன் தாக்காதபடிக்கு விழிப்புடன் இருக்க வேண்டும். "பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் சுற்றித் திரிகிறான்." (I பேதுரு 5:8) இதற்காக தலைவர்கள் தங்கள் மந்தைக்காக ஆவிக்குரிய பாதுகாவலாக இருக்க வேண்டும். தங்களைப் பாதுகாக்கத் தெரியாதவர்களுக்காக ஜெபித்தும் மன்றாடியும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். (அப் 20:28) இந்தக் காரணத்துக்காக தலைவர்கள் எப்பொழுதும் தங்கள் ஜனங்களுக்காக ஜெபித்து பிரபஞ்ச உலகத்தின் தாக்குதல்களிலிருந்து தங்கள் மந்தையை பாதுகாக்க வேண்டும். (உம்) சோதனைகள், துர் உபதேசங்கள், இச்சைகள், மேலும் மேய்ப்பர்கள் உட்புறமாக நேரிடக் கூடிய நோய்களைக் குறித்து எச்சரிக்கையாகவும், ஆவிக்குரிய அசதியின் அடையாளங்களைக் குறித்துக் கவனமாகவும், அதாவது சந்தோஷக் குறைவு, தவறான மனப்பான்மைகள், பாவத்தில் விழுதல், அவ நம்பிக்கை, எரிச்சல் பின்மாற்றம் ஆகியவை குறித்து கவனமாக இருக்க வேண்டும். அன்புடனும், கவனிப்புடனும், ஞானமாகவும், பொறுமையுடன் ஆனால் அதிகாரத்துடனும் தைரியத்தோடு செயல்பட வேண்டும். அவர்களுக்கு கர்த்தருடைய வசனம் கொண்டு வரப்பட்டு அவர்களுக்கு புத்திமதி சொல்லவும் திருத்தம் செய்யவும், கண்டிக்கவும் ஒழுங்கு நெறியில் நடத்தவும் தேவைப்படுகிறது. (II தீமோத் 3:16)

மந்தையைப் பராமரித்தலின் கவனிக்க வேண்டிய பிற அம்சங்கள்:

– <u>தன்னுடைய ஜீவனையே தியாகம் செய்ய விருப்ப ஆயத்தமாக இருக்க வேண்டும்.</u> (யோவான் 10:15)

ஒரு மேய்ப்பனுக்கு தனது ஆட்டு மந்தையின் மேல் ஓர் ஆழமான ஒப்படைப்பும் விசுவாச பக்தியும் இருக்க வேண்டும். அவைகளைக் கரிசனையாகக் கவனித்தும் தேவையான நேரங்களில் செயல்படவும் வேண்டும். (யோவான் 10:13) தன்னுடைய ஜீவனையும் பலத்தையும் ஊற்றி விட வேண்டும். (யோவான் 10:11; மாற்கு 10:45) அவர்களை வீடுகளில் சந்தித்து அவர்களுடைய நலனுக்காக கரிசனையுடன் ஈடுபட்டு கிரியை செய்ய வேண்டும். தங்களை பலியாக தியாகம் செய்ய விரும்பி தயாராக இருக்க வேண்டும். (I யோவான் 3:16)

– <u>பல திறப்பட்ட தேவைகளுக்காக பரிசுத்த ஆவியின் வல்லமைக்கு உட்பட்டு ஊழியம் செய்க</u> (எசேக் 34:11-16)

a) இழந்து போனதைத் தேடவும், திரும்ப இரட்சிக்கவும் - சாந்தமான சீர்திருத்தத்துடனும் ஜெபத்தின் மூலமாகவும்.

b) முடங்குண்டவர்களை / இருதயம் நொறுங்கிப் போனவர்களை / காயப்படுத்தப் பட்டவர்களை - அன்பான ஆலோசனை புத்திமதிகளாலும் பரிசுத்த ஆவியினாலும் (ஏசாயா 61:1)

c) வியாதியஸ்தரைக் குணமாக்க - ஜெபத்தினாலும், அன்பான கரிசனையாலும் (யாக் 5:14-15)

d) ஆவியில் பலவீனமானவர்களைப் பலப்படுத்த - உற்சாகப்படுத்துதல், ஐக்கியத்தின் மூலமாக (I தெச 5:14)

சேவை செய்வதற்கான அழைப்பு : வேலையாள் கோட்பாடும் அதன் உட்கருத்துக்களும்

சிந்தனை: தலைமைத்துவம் என்பது வேலையாள் கோட்பாட்டின் இலக்கு (முடிவு) அல்ல - இதற்கும் மேலான மகத்தானதோர் வேலையாள் கோட்பாட்டின் ஆரம்பமாகும்.

முகவுரை

ஒரு வேலைக்காரன் என்ற ஒரு நபர் தனக்கு தான் சொந்த எஜமானன் அல்ல. அவன் மற்றொரு எஜமானுக்காக வேலை செய்கிறான். மற்றொரு வழியில் குறிப்பிடுவதானால் ஒரு வேலைக்காரன் என்ற நபர் தனது சொந்த விருப்பத்தைக் கூட நிறைவேற்ற முடியாத உரிமையற்று ஜீவிக்கும் ஒருவன் ஆகிறான். அவன் தனது எஜமானனுடைய விருப்பத்தை நிறைவேற்றவே உயிர் வாழ்கிறான். மெய்யாகவே ஒரு உண்மையான வேலைக்காரனுக்கு தனக்கு என்று உரிமை கொண்டாடுவதற்கு எந்த விதமான உரிமையும் கிடையாது.

தேவனுடைய வேலைக்காரர் என்று சொல்லப்படுகிறவர்கள் தங்கள் சொந்த சிம்மாசனத்தையும், மற்றும் தங்களுக்குச் சொந்தமான மற்ற எல்லாவற்றையுமே அனுபவத்தையுங்கூட துறந்து விட்டு இயேசுவைத் தங்கள் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து அவரையே தங்கள் ஜீவியத்தின் கர்த்தாதி கர்த்தாவாக ஜீவிய காலம் வரைக்கும் ஏற்றுக் கொள்வதாகும். (கலா 2:20). இதன் கருத்தாவது அவர்கள் இயேசுவை தங்கள் காரியங்கள் எல்லாவற்றிலும் முதலாவதாக முன் வைத்துக் கொண்டு, ஐசுவரியம், ஆதிக்கம், உடைமைகள், அல்லது கர்த்தருடைய சித்தத்திற்கு எதிரான யதொன்றையும் சேவிப்பதில்லை. (மத் 6:24) கிறிஸ்துவை எல்லாக் காரியங்களிலும் முதலாவதாக வைத்துக் கொள்வதற்கு பதிலாக கிறிஸ்தவர்களில் அதிகமானவர்கள் தங்களுக்காக ஏதோ ஒன்றை நிறுத்தி வைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் உதடுகளினால் "இயேசுவே கர்த்தர்" என்று கூறலாம். ஆனால் அவர்களுடைய ஜீவியத்தின் அநேகமான பகுதிகளில் தாங்கள் விரும்பிய படியே செய்கிறார்கள். இயேசுவே நமது ஜீவியங்களில் உண்மையான கர்த்தராக இருக்கும்பொழுது அவருக்கு நாம் இல்லை / முடியாது என்று அவருக்காக ஏதோ ஒன்றைச் செய்யும்படி அது எவ்வளவு விலையுயர்ந்ததாக இருந்தாலும் இல்லை என்று ஒருபொழுதும் சொல்லவே மாட்டோம்.

"இப்படியாக எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக் கொள்ளக் கடவன். மேலும் உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்றுக் காணப்படுவது அவனுக்கு அவசியமாம்." (I கொரி 4:1-2)

கர்த்தருடைய இராஜ்ஜியத்தில், தங்களைப் பின்பற்றுகிறவர்களுக்கு தலைமைத்துவம் உடையவர்கள் எஜமானர் அல்ல. ஏனென்றால் அந்த இராஜ்ஜியத்தில் ஒரே ஒருவர் மாத்திரமே கர்த்தர், அவர் இயேசு கிறிஸ்து (I கொரி 8:6) தேவனுடைய இராஜ்ஜியத்தில் மற்ற ஜனங்களை முன் நடத்திச் செல்பவர்கள் அப்படி நடத்திச் செல்லப்படுகிறவர்களுக்கு வேலைக்காரர் ஆவார்கள். உண்மையாகவே கிறிஸ்தவத் தலைவர்கள் தேவனுடைய வேலைக்காரர் ஆக இருக்கும் முன் மாதிரியை உண்டாக்கி வைத்துக் கொண்டு அவருக்கு ஊழியம் செய்தும் தங்களுக்கு பொறுப்பில் உள்ளவர்களுக்காகவும் (யாருக்காக பொறுப்புள்ளவர்களோ அவர்களுக்காக) முழு மனதுடன் பணி செய்து அந்த முன் மாதிரியைக் காட்ட வேண்டும். "நான் நடந்தது போல நீங்களும் நடவுங்கள்" ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவைப் போல பின்பற்றி நடந்து அவர் நடந்தது போல நடக்கிறார்கள். (I கொரி 11:1; I யோவான் 2:6).

"உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக் கடவன்" (லூக்கா 22:26)

நாம் யாருக்கு ஊழியம் செய்ய வேண்டும்?

உண்மையில் ஒவ்வொருவரும் ஒரு எஜமானுக்கு ஊழியம் செய்கிறார்கள். அது பிசாசாகவும் இருக்கலாம் அல்லது தேவனாகவும் இருக்கலாம். (மத் 6:24; யோவான் 8:34-36; யோவான் 15:19; ரோமர் 6:6-22; யாக் 4:4; I யோவான் 2:15-17; I யோவான் 4:4-6) இதற்கான இடைப்பட்ட நிலைமை

கிடையாது. நாம் ஒன்று பாவத்தையும் சாத்தானையும் சார்ந்த ஆளுகைக்கு உட்பட்டு இருக்கிறோம் அல்லது இயேசுக் கிறிஸ்துவால் (அவருடைய இரத்தத்தால்) கிரயமாகக் கொடுத்து மீட்கப்பட்டோம். ஆகவே நாம் இப்போது தேவனுடைய வேலைக்காரராக இருக்கிறோம். (கலா 1:10) நாம் இயேசுக் கிறிஸ்துவுக்கு அவர் நமக்குச் செய்த அந்த மகத்தான தியாகத்திற்காக பதிலீடு எந்த வழியிலுங்கூட நாம் திரும்பவும் செலுத்த முடியாது. ஆகவே அதற்காக அவருக்கு நாம் செய்யக்கூடிய ஒரே கைம்மாறு அவருக்காக நாம் நம் முழுமனதுடன் பணி செய்து கிடப்பது தான்.

இன்றைய சமுதாயத்தில் நாம் நம்மைப் பற்றி யாருக்காவது ஊழியம் செய்வதாக நினைத்துப் பார்ப்பது வெகு அரிது. என்னவென்றாலும் ஜனங்களில் பெரும்பான்மையோர் அநேகக் காரியங்களில் தங்களை முதன்மையாக வைத்துக் கொண்டு அல்லாமல் மற்ற ஒவ்வொரு காரியங்களில் கூட அவ்வாறு நிலைப்படுத்திக் கொள்கிறார்கள். ஆம் அவ்வாறு செய்கிறார்கள். ஆகவே அவர்கள் மிகுந்த மோசமான விபத்தான தங்கள் சொந்த சுய நலமான இச்சைகளுக்கு ஊழியம் செய்கிறார்கள். (அல்லது அடிமையாகக் கூட ஆகி விடும் மோசமான விபத்தில் இருக்கிறார்கள்)

அவர்களுடைய நேரத்தின், பலத்தின் அதிகமான விகிதத்தை விழுங்கிக் கொள்ளும் காரியங்களில் அதற்காகவே தங்கள் முழு மனதையும் நாம் தத்துக் கொடுத்து விடுகிறோம். ஆம் இந்த விதமான காரியங்களுக்குத்தான் நாம் உண்மையில் ஊழியம் செய்கிறோம். இந்த காரியங்கள் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றபடி ஒரே வரிசையில் இருக்குமானால் அவை சரி தான் இல்லை என்றால் நாம் மற்ற காரியங்களை அல்லது மற்ற மனிதர்களை நமது ஜீவியத்தின் குறைந்ததோர் பகுதிகளில் அவர்களை எஜமானர்களாகக் கொள்ளுவோம். ஆகவே ஒவ்வொரு காரியங்களிலும் தேவனை முதலாவதாக வைத்துக் கொண்டு அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதே நம்முடைய ஜீவியத்தின் முதன்மையான முன்னுரிமையாகக் கொள்ளுவோம். (I பேதுரு 2:21; பிலிப் 2:5-8)

தலைமைத்துவம் உடையவர்களாக நாம் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும். நமது மகத்தான பெரிய எஜமானராகிய இயேசுக் கிறிஸ்துவின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். மேலும் மற்றவர்களுடைய தேவைகளுக்காக நம்மையே தாழ்மையுடன் கொடுக்க வேண்டும். நம்மை தேவனுடைய வேலைக்காரராக அல்லாமல் ஒன்றுமில்லாத சூன்யமாகப் பார்க்க வேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்யக் கூடிய நமது வழியில் நமக்குக் கிடைக்கக் கூடியது கொஞ்சமானாலும் நாம் பரிசுத்த ஆவி பெருகி ஓடும் வாய்க்கால்களாக ஆக முடியும். நமது கண்களின் பார்வையில் நாம் ஏதோ ஒன்றாக ஆவோமென்றால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும் ஊழியக்காரர்களாக இருப்பதை நிறுத்தி விட்டு நாம் சரி என்று நினைக்குங் காரியங்களையே நாம் செய்யத் தொடங்கி விடுவோம். நாம் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கிற காரியங்கள் நல்லவைகளாக இருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியின் வல்லமை அதனுள் பெருகி ஓடாது அந்தக் காரியங்களை செய்ய முடியாமல் ஆகும். ஏனென்றால் அவைகள் தேவனுடைய சித்தம் அல்ல. தேவனுடைய சித்தம் நிறைவேற்றப்படும் பொழுது மாத்திரமே பரிசுத்த ஆவியானவர் வல்லமையாகக் கிரியை செய்யக் கூடும். (கலா 2:20)

“ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து அவரை உத்தமமும் உண்மையுமாய்ச் சேவித்து உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றி விட்டு கர்த்தரைச் சேவியுங்கள். கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால் பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்.” (யோசுவா 24:14-15)

வேலைக்காரன் என்ற கோட்பாட்டுக்கு இயேசுவே நமக்கு உதாரணம்

இயேசுவின் காலத்தில் ஆளுகை செய்த உரோம சமுதாயத்தில் அடிமைத்தனம் என்பது அடிப்படையாக இருந்தது. பொதுவாக அடிமைகள் நன்றாகவே நடத்தப்பட்டார்கள். ஆனால் அவர்கள் அடையாள மில்லாத நபர்கள். கிரேக்கர்களும், யூத அதிகாரம் உடையவர்களும் அடிமைத்தனத்தை அற்பத்தனமாகவும் அவமானத்துக்குரியதாகவும் பார்த்தார்கள். கிரேக்கர்களுக்குத் தங்கள் வாழ்க்கையின் இலட்சியமே தங்களுடைய சாதனைக்கே முழுவதையும் அர்ப்பணிப்பதாகும்.

அவர்களுடைய (கிரேக்கருடைய) விருப்பத்தையும் கீழ்படுத்தி, தங்கள் நேரத்தையும் உழைப்பையும் மற்ற ஒருவருக்காக முழுவதுமாக ஒப்புக் கொடுத்தல் என்பது அவர்களால் நினைக்கக் கூடாத காரியமாகும். யூதர்களின் அதிகாரத்துவம் உள்ளவர்கள் தாங்கள் கர்த்தரால் ஆளும்படியாகப் (பிறப்பிக்கப்பட்டவர்கள்) பிறந்தவர்கள் என்று தங்களைப் பற்றி எண்ணிக் கொண்டார்கள். ஆகவே அவர்களும் மற்றவர்களுக்காக வேலை செய்வதற்கானவர்கள் அல்ல அவர்கள் தேவனை சேவித்தது போலவே தாங்களும் பணி செய்யப்படுவதற்கான மக்கள் என்று கருதினர். இந்த விதமான சந்தர்ப்பத்தின் பின்னணியில் இயேசு வேலைக்காரர்களைப் பற்றிய தம்முடைய வார்த்தைகளைப் பேசினார்.

இயேசு சொன்னதாவது,

"அப்படியே, மனுஷ குமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." (மாற்கு 10:45)

ஆகவே நாம் வேலைக்காரன் கோட்பாடாகிய, தாழ்மையே அவருடைய முன் மாதிரியைப் பின்பற்றுவதாலும் இயேசுவிடமிருந்தே வருகிறதென்றும் நாம் தெரிந்து கொள்ளலாம். (யோவான் 13:1-17; பிலிப் 2:5-11) இயேசுவுக்கு அவருக்குள் ஒன்றும் இல்லாமல் (தனக்குள்) இருப்பதே ஒரு வாழ்க்கை நெறியாக இருந்தது. (வேலைக்காரன் - கோட்பாடு) அவர் தாமே சிலுவையைச் (சந்திப்பதற்கு) பார்ப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே அவருக்கு வாழும் ஓர் வழி முறையாக இருந்தது. மெய்யாகவே அவர் யாரோ ஒருவராகவே இருந்தார். அவர் தன்னைத் தானே வெறுமை ஆக்கினார். இயேசு தம்மை எல்லாருக்கும் ஊழியக்காரன் என்றே கூறினார். ஆனாலும் அவர் இருந்தவராகவும், இருக்கிறவராகவும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் உடையவராக தேவனுடைய வல்லமையின் வழிகளை உடனடியானதும் தனது நெருக்கமான ஆளுணர்வு உடனும் அறிந்தவராக இருந்தார். அவருடைய இந்த உலகப் பிரகாரமான ஊழியத்தில் ஒரு தடவைக்கு மேல் பல சமயங்களில் பலரை மரணத்திலிருந்து உயிர் பிழைக்கக் கொண்டு வந்தார். அவர் மனிதர்களைத் தொட்டபொழுது அவர்கள் நோயிலிருந்து சொஸ்தமடைந்தனர். அவர் அதட்டியபொழுது பிசாசுகளும் நடுங்கி ஓடி ஒளிந்தன.

"கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார்." (பிலிப் 2:5-8)

உண்மையான ஊழியத்துவம் வல்லமையுள்ளது

இயேசுவே தாழ்மைக்கும் ஊழியத்துவத்திற்கும் முடிவான எடுத்துக்காட்டாக விளங்கினார். ஆனால் உலகத்தில் வாழ்ந்த எந்த மனிதனைப் பார்க்கிலும் வல்லமையுள்ளவராக இருந்தார். உண்மையாகவே, நமக்கு இருக்கிறபடியே அதே பரிசுத்த ஆவியை இயேசுவும் தமக்குள் பெற்றவராக இருந்தார். பிதாவாகிய தேவன் பரிசுத்த ஆவியானவரை விடுவித்து கிரியை செய்யும் பொழுது மாத்திரமே பரிசுத்த ஆவியானவர் வல்லமையுள்ளவராக அசைவாடுகிறார் என்பதை இயேசு புரிந்து கொண்டிருந்தார். ஆகவே இயேசு தம்முடைய ஜீவியத்தை பிதாவாகிய தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலுமாக ஒப்புக் கொடுத்திருந்தார். அவர் பிதாவின் சித்தத்தையன்றி வேறொன்றையும் நிறைவேற்றவில்லை. இது தான் உண்மையான ஊழியத்துவம் (யோவான் 5:19). இது தான் இயேசுவுக்கு அவருடைய அதிகாரத்துவத்தையும் வல்லமையையும் தந்தது ஏனென்றால் அவர் தம்முடைய பிதா விரும்பியபடி பணியாற்றிய பொழுதெல்லாம் பரிசுத்த ஆவியானவர் பிதாவினுடைய சார்பாக கிரியை செய்வார் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆகவே இயேசு தேவனுடைய சித்தத்தை வெளியே விடுவிக்கும் ஒரு வாய்க்காலாக ஆக்கப்பட்டார். இயேசு தம்முடைய பிதா ஏதாவது செய்கிறார் என்பதைப் பார்த்தாரானால் அதையே இந்த உலகத்திலும் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால் செய்ய முடியும் என்பதை அறிந்திருந்தார். இயேசு பேசும் பொழுதெல்லாம் அது பிதாவானவர் பேசியது போலவே இருந்தது. மேலும் அவர் கிரியை செயல்பாடு செய்யும் பொழுதெல்லாம் அது பிதாவானவர் கிரியை செய்வது போலவே இருந்தது.

நாம் அதே போல அதே வழியில் ஜீவிக்க முடியுமா?

நாம் இயேசுவின் முன் மாதிரியைப் பின்பற்றிச் செல்லவே அழைக்கப்பட்டிருக்கிறோம். (I கொரி 11:1; I பேதுரு 2:21; I யோவான் 2:6). நாமும் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாக, ஆவியால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவர்களாக தேவனுடைய சித்தத்தைக் கண்டு அறிந்து கொண்டு அவருடைய ஊழியக்காரர்களாக ஆவோம் என்றால் தேவனும் தம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையை இறங்கச் செய்து தம்முடைய சித்தம் நிறைவேற்றப்படும் படியாகச் செய்வார். எதுவும் கூடாத காரியமல்ல எனென்றால் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. (லூக்கா 1:37; லூக்கா 18:27) இதை நிறைவேற்ற வேண்டுமானால் நாம் முற்றிலுமாக தேவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஜீவியம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். அதன் பிறகே நாமும், தேவன் தாமே தமது சித்தத்தை நிறைவேற்றக் கூடிய வாய்க்கால்களாக இருப்போம். நாம் கர்த்தருக்காக நம்மை காத்திருக்க வைக்கும்படியாக வசதி செய்வதால் தேவன் தாமே நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் காண்பிப்பார்.

நாம் இயேசுவினுடைய அனுபவத்தில் தேவனுடைய வல்லமையின் இரகசியத்தைக் கண்டு கொள்ள முடியும். நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியை அளவளவாக மாத்திரமே பெற்றுக் கொள்கிறோம். பிதாவானவர் நமக்கு ஆவியைக் கொடுப்பதற்கு விருப்பமுள்ளவராகவே இருக்கிறார். ஆனால் நமது இருதயத்திலுள்ள குறைபாடுகள் நமக்குள் பரிசுத்த ஆவியின் அளவை நிர்ணயிக்கிறது. நாம் அசுத்தத்தினாலும், சுய கரிசனையாலும் நிறைந்து இருப்பதால் பெரிய அளவில் பரிசுத்த ஆவியானவருக்கு இடமில்லை. காயங்கள், பெருமை சுய நலம், கலகம் ஆகியவை நமது இருதயத்தை ஆக்கிரமித்து இருப்பதால் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் கிரியை செய்வதற்கு இடமில்லாமல் தடை செய்கிறது. உண்மை என்னவென்றால் இருளின் ஜனங்கள் யாருமே இயேசுவின் இருதயத்தில் இருக்கவில்லை. அங்கே தேவன் தாமே ஆவியை அளவின்றி ஊற்றுவதற்கு இடம் இருந்தது. (யோவான் 3:34)

அநேகக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியத்தில் தேவனுக்குப் போதுமான இடம் கொடுப்பதில்லை. மேலும் அவர்கள் தேவனுடைய சித்தத்திற்கான ஊழியக்காரர்கள் அல்லர். தற்காலத்தில் இவை இரண்டுமே திருச்சபையில் பரிசுத்த ஆவியின் வல்லமை தோல்வி அடைவதற்காக முக்கியமான காரணங்களாகும். நம்முடைய பெலத்தினால் கர்த்தர் சொல்வதுபடி நாம் அவருக்கு ஊழியம் செய்ய முடியாது. நாம் தேவனுடைய சித்தம் என்னவென்பதைக் கண்டுபிடித்துக் கொண்டு, பிறகு கர்த்தருடைய பலமானது அவரது சித்தத்தை நிறைவேற்ற நமக்கு உதவி செய்யும் என்று அறிந்து விசுவாசத்தில் அடி எடுத்து முன் வைக்க வேண்டும்.

ஒரு கால கட்டத்தில் சில காரியங்கள் நல்லதாகக் காணப்படுவதால் அதை ஒருக்காலும் நாம் செய்யக் கூடாது. நம்மை தேவனுடைய ஊழியக்காரர்களாக மாத்திரமே கருதிக் கொண்டு எந்த விதமான உரிமையும் இல்லாமல் எந்த விதமான வேண்டுகோளும் விடுக்கக் கூடாது. நாம் இவ்வாறு செய்வோமானால், தேவனுடைய சித்தத்தைச் சாதித்து இலக்கை அடைவதற்குக் காரணமாக தேவனுடைய வல்லமை விடுவிக்கப்படும் மார்க்கத்தில் எதுவும் வந்து குறுக்காக நிற்க முடியாது.

கடு முயற்சி இல்லை

நீ உண்மையான தேவனுடைய ஊழியக்காரனாக ஜீவிக்கும்பொழுது கடினமான முயற்சி தேவை இல்லை. நீ தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும் பொழுது அவரே உன் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்தையும் கவனித்துப் பொறுப்பு எடுத்துக் கொள்வார் என்று அறிந்திருப்பாயானால் நீ தேவனிடத்தில் இளைப்பாறலாம். (எபி 4:1-11; II பேதுரு 1:3; மத் 6:25-34) வாழ்க்கை எளிதாக ஆகி விடுகிறது; கர்த்தர் பேசுகிறார்; நாம் கீழ்ப்படிகிறோம்; அது நேரிடுகிறது. ஆகவே, இந்த விதமான ஜீவியத்திற்கு, இயேசுக் கிறிஸ்துவின் ஜீவியத்தில் காணப்பட்டது போல, ஒரு கிரயம் உண்டு; ஆனால் ஒரு கிறிஸ்தவனுக்கு ஜீவிப்பதற்கு வேறொரு வழியும் கிடையாது. ஏனென்றால் தேவனுக்காக செயலூக்கமுடையவர்களாக இருக்க வேண்டும் என்றால் நமது மாமிசம் (அதாவது சரீரமும் ஆத்துமாவும்) அந்த மாதிரியான வாழ்க்கை நெறி பற்றி போரிடும். ஏனென்றால் தானே பலமற்று, தன்னில்தானே, விசுவாசமான ஜீவியத்தை செய்ய முடியாமல் போகிறது. நாம் நமது ஜீவியத்தை ஒழுங்கு முறைப்படுத்தி நமது இருதயத்தை தேவனோடு நடக்கும் பண்பாட்டை அடையும்படியாக புதுப்பிக்குமாறு தேவனை அனுமதிக்க வேண்டும்.

இயேசு சொன்னதாவது,

“வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது.” (மத் 11:29-30)

நாம் தேவனுடைய ஊழியக்காரனாக செயல்படுகிறோம் என்பதற்கான அடையாளங்கள்

ஒரு எபிரேய அடிமையானவன் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு தன் எஜமானனுடைய குடும்பத்தோடு தங்கியிருக்கும் படியாகத் தான் தெரிந்து கொண்டாலன்றி அவன் விடுதலை செய்யப்பட வேண்டும். அவன் எஜமானனோடு தங்கி இருக்க விரும்பினால் நகரத்து நீதிபதிகளுக்கு முன்பாக அவனுடைய காது குத்தப்பட வேண்டும். அது அவனது ஜீவிய காலம் முழுவதும் ஒரு ஊழியக்காரனாக இருந்தான் என்பதற்கு அடையாளமாகும். (யாத் 21:2-6; உபா 15:12-18) கிறிஸ்தவர்களாகிய நமக்கும் இயேசுக் கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்று நமது ஜீவியமும் மற்றவர்களுக்கு அடையாளமாக இருக்க வேண்டும்.

நாம் ஊழியக்காரர்களாக இருக்கிறோம் என்பதற்கு அடையாளமாக: (சில உள்ளடக்கமாக)

- நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடுகிறவர்களாக இருப்போம். (மத் 6:33)
- நாம் எல்லோருக்கும் ஊழியக்காரர் ஆவோம். (மத் 20:26-28)
- நாம் எஜமானர் நமக்கு கைம்மாறு அளிக்கும்படியாக அவரிடம் எதிர்பார்ப்போம். (மத் 25:21)
- நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வோம். அவ்வாறு செய்யும்பொழுது நமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வோம். (மத் 25:31-40)
- நம்மை நாமே வெறுத்து அனுதினமும் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு எஜமானராகிய இயேசுவைப் பின்பற்றுவோம். (லூக்கா 9:23)
- நாம் இயேசுவின் முன் மாதிரியைப் பின்பற்றி அதனால் ஒரு தன்னலமற்ற வாழ்க்கையை வாழ்ந்து நமக்கு ஊழியஞ் செய்யப்படாமல், ஊழியஞ் செய்வதையே விரும்புவோம். (லூக்கா 22:7)
- நாம் உதாரத்துவமாகக் கொடுப்போம் ஏனென்றால் பெற்றுக் கொள்வதை விட கொடுப்பதே பாக்கியம் என்று அறிவோம். (அப் 20:35)
- நம்மிடம் ஒன்றை ஒப்படைக்கும் பொழுது நாம் நம்பத் தகுந்தவர்களாக இருப்போம். (I கொரி 4:2)
- மற்றவர்களது பாரத்தை நாமும் சுமப்போம். (கலா 6:2)
- நாம் தாழ்மையுடனும், சாந்தத்துடனும், பொறுமையுடனும் அன்பினாலே ஒருவரையொருவர் தாங்குவோம். (எபேசி 4:2; I யோவான் 3:11-24)
- நாம் எதைச் செய்தாலும், அதை மனுஷருக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய் செய்யுங்கள். (கொலோ 3:23-24; எபேசி 6:6-8)
- நாம் பிறருக்கானவைகளை நோக்குவோமாக. நம்முடைய தேவைகளையும் கவனித்துக் கொள்வோம். (பிலிப் 2:4)
- நாம் செய்கிற எல்லாக் காரியங்களிலும் நமது கர்த்தரைப் பிரியப்படுத்துவோம். (II தீமோத் 2:4)

ஆயத்தமாக இருக்கும் ஒரு ஊழியன்

தலைமைத்துவம் உடையவர்களாக நாம் வழி நடத்திச் செல்லுபவர்களுக்காக நாம் பொறுப்புள்ளவர்களாக ஆக்கப்பட்டோம். இதன் அர்த்தமாவது நாம் அந்த (பொறுப்புக் கொடுக்கப்பட்ட) மக்களுக்காக உதவுவதற்கு எப்பொழுதும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். எல்லா நேரமும், நமக்கு வசதிப்படாத சமயமாக இருந்தாலும் நாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் கர்த்தருக்காக செய்யும் ஊழியமாக இருக்க வேண்டும். (எபேசி 6:6-8) ஆகவே நாம் ஊழியம் செய்யும் படியாக நமக்கு நேரிடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அனுகூலமாக எடுத்துக் கொள்ளுவதற்காக எச்சமயத்திலும் ஆயத்தமாக இருக்க வேண்டும். (லூக்கா 12:35-48; மத் 24:45-51; மத் 25:31-46)

மற்ற ஜனங்கள் சொல்ல வேண்டியதை முன் கூட்டியே உண்டான கருத்துக்களோ அல்லது தப்பெண்ணங்களோ இன்றி புற நோக்குடன் கவனித்துக் கேட்பதற்கு தாங்கள் வசதியாக இருந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இது எப்பொழுதுமே எளிதானதல்ல. ஆனால் மற்றவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்பதை கவனித்துக் கேட்டு அவர்களுக்கு செவிகொடுத்துக் கேட்பதே மிகச் சிறந்ததாகும். ஒரு தடவை அந்த நபர் சொல்வதைக் கேட்ட பிறகு அவர்களுக்கு நாம் சொன்ன பழைய பதிலையேத் திரும்பத் திரும்பச் சொல்லி நமது முதுகுக்குப் பின்னாகப் பிறகு போட்டு விடக் கூடாது. இந்த சந்தர்ப்பத்தில் தேவனை உள்ளே கொண்டு வந்து நாம் (தேவன்) அவர் தரும் பிரதியுத்தரத்தையே தர வேண்டும்.

நமக்கு குறுக்கிடுகிற மக்களுடன் சரியான மனப்பான்மையை நாம் கொண்டிருக்க வேண்டும். நான் ஏதோ ஒரு வேலை செய்யும்பொழுது அதன் மத்தியிலிருக்கலாம். அவசியமிருக்குமானால் நீங்கள் அதை தேவனுடைய நேரமாக அதற்காக என்று எடுத்துக் கொண்டு, நிறுத்திக் கொண்டு, அந்த அவசியத்தைச் சந்திக்கவும். இதைத் தான் இயேசுவுங்கூட இதை இந்த நேரத்திலும் மட்டுமல்ல. எந்த நேரத்திலும் மறுபடியும் செய்தார். (மாற்கு 5:21-43; லூக்கா 13:10-6; மத் 15:21-28) இயேசு ஏதோ ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருப்பார். அவர் அப்படி செயல்பட்டுக் கொண்டிருப்பதன் நடுவில், மக்கள் வேறொன்றைச் செய்யும்படி கேட்பார்கள். அவர்கள் மீது வெறுப்பைக் காட்டாமல், அவர்கள் கேட்டுக் கொண்டபடியே செய்து விட்டு, பின்னர் தாம் முதலாவதாக ஏற்கனவே செய்து கொண்டிருந்த வேலையைத் தொடர்ந்து செய்தார். அடிக்கடி குறுக்கீடுகள் என்று கருதுபவை உண்மையில் நமது வழக்கமான நடைமுறையை தடை செய்து தேவன் அதில் ஊடுருவி, நாம் யாரோ ஒருவருடைய தேவைக்காக கிரியை செய்யும்படி பயன்படுத்தும் நேரங்களாகும். நாம் தேவனுக்காக 100மூ விகிதம் எப்பொழுதும் சந்திக்கும்படி இடம் தந்து அவருடைய வழியில் நாம் காரியங்களைச் செய்யும்படியான அவருடைய நேரத்தில் செய்து முடிக்க வேண்டும். நமது சொந்த நேரத்தில் அல்ல. எல்லாம் தேவனுக்கே நன்றாகத் தெரியும்!

நாம் தலைவர்களாக ஊழியம் செய்யும் நபர்களுக்கு மறு உறுதி அளிப்பதற்காக வசதிப்படுத்தி இருக்க வேண்டும். நமது ஆறுதலான வார்த்தைகளும், மறு உறுதிப்பாடும் நாம் வழி நடத்திச் செல்பவர்களுக்கு மிகவும் அதிகமான அர்த்தமுள்ளதாக இருக்கும். உண்மையில் இந்த விதமாகத் தைரியப்படுத்தும் வார்த்தைகளானவை மக்கள் ஏமாற்றத்திலும் மதி மயக்கத்தில் இருக்கும்பொழுதும் இது ஒரு சாதனமாக அடிக்கடி ஒரு நபர் தேவனுடைய பணியைத் தொடர்ந்து செய்யக் கூடியதாகிறது. தலைவர்கள் தூரத்தில் இருந்து கொண்டும் அல்லது ஆலோசனைகள் மூலமாக வழி நடத்துதல் கூடாது. அவர்கள் மக்கள் தங்களைச் சந்திக்கும்படியாக வசதிப்படும் இடத்தில் இருக்க வேண்டும். சமயா சமயங்களில் தலைவர்கள் தங்களுடைய மக்களுடன் சேர்ந்தே இருக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய மக்களையும் மக்களுடைய தேவைகளையும் புரிந்து கொண்டும் இதை ஒரு தந்த கோபுரமாகிய யாரும் போக முடியாதபடி தடை செய்யப்பட்டதோர் இடத்தில் இருந்து கொண்டு இதைச் செய்யக் கூடாது. இப்பகுதியில் உதவியாக இருக்கக்கூடிய சில குறிப்புகளும் இதில் உள்ளடங்கும்.

– ஆராதனை முடிந்த பிறகும் போதகர்கள் பின்னால் தங்கி இருந்து சம்பாஷித்தும், அவரோடு பேச விரும்பும் ஆனால் பேசுவதற்கு முன் வர வெட்கப்படும் மக்கள் மேல் ஒரு கண் வைத்தும் கவனித்து உரையாட வேண்டும்.

– நாம் முன் நின்று வழி நடத்தி செல்பவர்கள் நம்மைப் பற்றி உண்மையான தேவை உள்ளவர்கள் அனைவருக்குமே அவருடைய கதவுகள் திறந்தவையாய் இருக்கும் என்பதை அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். (நாம் கையாளுவதற்கு தகுதியுடையதாக இருக்குமானால்) வெளிப்படையாக மக்களுடைய பிரச்சனைகளை நம்மேல் தனிப்பட்ட முறையில் அளவுக்கு மீறி சுமத்திக் கொள்வது தவறாகும். அதுவும் நாம் ஏற்கனவே அந்தப் பகுதியின் பொறுப்பை மற்றொருவருக்கு நாம் பகிர்ந்தளித்திருக்கும் பொழுது தான் அப்படியாகும்.

– தலைவர்கள் தாங்கள் வழி நடத்துபவர்களிடம் ஒழுங்காகச் சந்திப்புகளை நடத்த வேண்டும். அதுவும் அவர்களுடைய பணி செய்யும் சூழ்நிலைகளில் சந்திப்பது நல்லது அல்லது அவர்களது இல்லங்கள் போன்ற இடங்களிலும் சகஜமாகக் கலந்து கொண்டு பழகி வந்தாலும் வழி நடத்தப்படும் ஜனங்கள் வழி நடத்துபவர்களை மேலும் சகஜமான மனந்திறந்த சூழ்நிலையில் சந்திக்கும்படி வசதி செய்யலாம்.

– நீங்கள் ஒரு தேவையை கண்டு கொண்டாலும், அதை அச்சமயத்தில் கையாளுவதற்கு முடியாமல் நீங்கள் வேறு காரியத்தில் சுறுசுறுப்பாக இருந்தாலும் அதை குறிப்பெடுத்துக் கொண்டு அதைப் பற்றி ஏதாவது செய்யாமல் மறந்து விடக் கூடாது என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

– தலைவர்கள், தாங்கள் வழி காட்டி நடத்துபவர்களுக்கு தைரியமான வார்த்தைகளை அல்லது சமயத்திற்கேற்ற காலத்தில் சொல்லக் கூடிய வார்த்தைகளைக் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பங்களை எப்பொழுதும் எதிர்பார்த்தே இருக்க வேண்டும். (நீதி 15:23)

தலைமைத்துவத்தில் நாம் யாருக்கு ஊழியஞ் செய்ய வேண்டும் என்பதை நாம் அடிக்கடி தெரிவு செய்து கொள்ள முடியாது. நான் எப்பொழுதும் வாஞ்சையும் ஆயத்தமுள்ள மக்களாகவே, இயேசு இருந்தது போலவே நம்மைப் பார்க்க வருகிறவர்களுடைய தேவைகளுக்கு அவை சந்திக்கப்படுவது அவசியம். தலைவர்கள் தங்களுக்குப் பிரியமாக தாட்சண்யம் காட்ட விரும்புகிறவர்களுக்கு மட்டும் தங்களை தயாராகவும் வசதியாக மட்டும் வைத்துக் கொள்ளக் கூடாது. நம்மைச் சுற்றிலும் நம்மோடு சுமுகமாக இருக்கிறதும் நம்முடைய ஊழியத்தை ஆமோதிக்கும் கூட்டத்தை மட்டும் வைத்துக் கொள்ளவது எளிதாகும். இயேசு இதைச் செய்யவே இல்லை, நாமுங்கூட அவ்வாறு செய்யக் கூடாது. இயேசுவைப் போலவே நாமும் தேவனுடைய சித்தத்தை மாத்திரம் நாட வேண்டும். இதற்கு அர்த்தமாவது அகழற்ற புண்படுத்தும் மக்களின் தேவைகளுக்காக இளைப்பாற முடியாத பணிக்கணக்காக ஊழியம் செய்வதாக இருக்கலாம். ஆனால் தேவனுடைய வேலைக்காரன் இதைச் செய்வதற்கும் தயங்குவதில்லை. நாமும் நமது ஜீவியத்தை இயேசுவைப் போல மாதிரியாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

மற்றவர்களுடைய தேவைகள் எங்கு சரியாக இருக்குமோ அங்கு சந்திக்கப்பட வேண்டும்

நல்ல ஊழியக்காரர்கள் தாங்கள் சேவை செய்யும் மக்களுடைய தேவைகளை அறிவார்கள். அவைகளை எவ்வாறு சந்திப்பதென்றும், மேலும் தாங்கள் சேவை புரியும் மக்களின் தேவைகளையுங்கூட அவர்கள் எதிர்பார்த்து, அந்த தேவைகளைச் சந்திக்க முன்னேற்பாடுகளுடன் தயாராக இருக்கக் கூடும். கிறிஸ்தவ தலைவர்கள், ஓர் சந்தர்ப்ப சூழ்நிலைமைக்கு எந்த வகையான தகுந்த பிரதி கிரியை எப்பொழுது நிறைவேற்றுவதென்றும் அறிந்திருக்க வேண்டும். இதன் விளக்கமாவது யாருக்கு எது தகுதியானதோ என்று அறிந்தும் அவர்களைச் சென்றடைந்தும் அவர்களைத் தொட்டும் ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டும், கண்ணீர் விட்டும் அல்லது ஒருவருக்கொருவர் சிரித்துக் கொண்டும் அல்லது மற்றொருவருக்கு கையை மேல் வைத்து (ஆசீர்வதித்து) ஊழியம் செய்வதாகும்.

மிகவும் இழிவான வேலைகளைச் செய்யவும் தயாராக இருத்தல்

தலைவர்கள் தங்கள் ஸ்தானங்களில் பெருமையாக எப்பொழுதும் ஒட்டிக் கொள்ளக் கூடாது. ஆனால் செய்ய வேண்டிய சிறிய காரியங்களைக் கூட செய்தே ஆக வேண்டும். ஆகவே தலைவர்கள் எல்லா நேரங்களிலும் இந்த வகையான வேலைகளைச் செய்ய வேண்டியதில்லை. அவர்கள் அதைச் செய்வதானால் அவர்கள் பகிர்ந்து அளிக்கும் கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனாலும் அவர்கள் அவசியமானால் அதைச் செய்வதற்கு விரும்பி தயாராக இருக்க வேண்டும். தலைவர்களானவர்கள் மேலும் அதிலும் குறிப்பாகத் தலைவர்களாக ஆவலுடன் முயற்சிப்பவர்கள் இந்த வகையான இழிவான வேலைகளைச் செய்யக் கூடும். அவர்கள் தங்கள் ஜீவியத்தில் பின்னொரு கால கட்டத்தில் மற்றவர்களுங்கூட இந்த வகையான ஊழியத்தைச் செய்ய விரும்பி சித்தமுடன் இருக்கலாம். எந்த வகையான பணியாக இருந்தாலுஞ் சரி தேவனுடைய தலைவர்களுக்கு இழிவானதாக கருதப்பட்டு தங்களை கீழ்படுத்திக் கொள்ளுவது அவர்கள் தேவனுடைய உண்மையான ஊழியக்காரர்களாக இருந்தாலுங்கூட முடியாது.

சில தலைவர்கள் தேவனுடைய வார்த்தையை அறிவித்து ஊழியஞ் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் பந்தி விசாரணையில் ஊழியஞ் செய்யுமாறு அழைக்கப்பட்டிருக்கின்றனர். (அப் 6:1-7) கிறிஸ்துவின் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் தன்னுடைய சிறிய பங்கை நிறைவேற்றுமானால் அதுவும் தேவன் அவர்களை கேட்டுக் கொள்ளும் வழியில், அவருக்கு ஊழியஞ் செய்து நாம் ஆதித் திருச்சபை பார்த்த பிரகாரமே நாமும் இன்று பார்க்க

முடியும். அதாவது "தேவ வசனம் விருத்தி அடைந்தது. சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று." (அப் 6:7)

நமக்கு மேலானவர்களுக்கு ஊழியம் செய்யும்படியாக

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுக் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யுமாறு அழைக்கப்படுகிறான். அவரே அவருடைய சரீரத்திற்கு தலையானவர் திருச்சபைக்கு தலையானவர். (எபே 5:23) கிறிஸ்தவ தலைவர்கள் இந்தப் பகுதிக்கு உதாரணத்தைச் செய்து காட்ட வேண்டும். தங்களுக்கு மேலாக தலைமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு அவர்கள் தங்களை ஒப்படைப்புச் செய்தவர்களாகவும் பணி செய்பவர்களாகவும் இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவே திருச் சபைக்கும் பொறுப்பில் உள்ளவர். ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறார். (சங் 75:6-7) தலைவர்களானவர்கள் கிறிஸ்துவுக்கும் அவரால் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்திற்கும் பணிந்து கீழ்ப்படிய வேண்டும். நமது தலைமைத்துவத்திற்கு ஜனங்களை கீழ்ப்படியுமாறு கேட்டுக் கொள்வது நல்லதல்ல. நாமும் நமது முறை வரும் பொழுது நமக்கு மேலாக தலைமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு கீழ்ப்படியாமல் இருந்தால் நாமும் அவ்வாறு செய்வது நல்லதல்ல. தலைவர்கள் தலைமைத்துவம் உள்ளவர்களைப் பின்பற்றி செல்வதற்கு முன் மாதிரியை முன் வைக்க வேண்டும்.

சரியான மனப்பான்மையுடன் ஊழியம் செய்யும்படியாக

சரியான மனப்பான்மையுடன் ஊழியம் செய்யும்படியாக மிகவும் சிறப்பான செயலூக்கமுடைய கிறிஸ்தவத் தலைவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் ஆவார்கள். ஏனென்றால் அவர்கள் தேவனைப் பற்றி அறிந்தும் அவர் பால் அன்புள்ளவர்கள். அத்தகைய தலைவர்கள் பணம், பதவி, புகழ், அதிகாரம், கீர்த்தி மற்றும் எந்த விதமான மனப்பான்மையும் கொண்டு ஊழியம் செய்பவர்கள் அல்ல. இந்தத் தலைவர்களால் மேலும் அதிகமான முயற்சியும் தங்கள் பால் மிஞ்சிய அழுத்தத்தையும், அதிகமான தற்காக தியாகமும் மற்ற காரணங்களுக்காக திருச்சபையில் ஊழியம் செய்பவர்களை விட அதிகமான ஈடுபாடு உடையவர்களாய் இருப்பார்கள். இந்தத் தலைவர்கள் தங்கள் தகுதியை தங்களைப் பற்றி நிரூபிக்க அவசியம் இல்லாதவர்களாய் இருப்பதால் தேவனுடன் இருக்கும் உறவுத் தொடர்பில் பாதுகாப்பாகவும் இளைப்பாறுதலாகவும் இருப்பார்கள்.

மகிழ்ச்சியுடன் ஊழியம் செய்யும்படியாக

நாம் மகிழ்ச்சியுடன் ஊழியம் செய்யும் படியாகவே அழைக்கப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் தேவன் முறுமுறுப்புடன் செய்யப்படும் ஊழியத்தை விரும்புவதில்லை. நாம் அவருக்கு முழு மனதுடன் ஊழியம் செய்யுமாறு விரும்புகிறார். நாம் கர்த்தருக்கு மகிழ்ச்சியுடன் ஊழியம் செய்தால் நம்மை அது ஞானமுள்ளவர்களாக இருக்க உதவுகிறது. நம்மை அறிவுள்ளவர்களாகவும் மனப்பான்மையைச் சரியாகவும், தேவ சமாதானம் நமது இருதயங்களை எவ்வாறு ஆளுகை செய்ய வேண்டுமோ அவ்வாறு செய்தும் நிலைத்து நிற்கவும் செய்கிறது. (பிலிப் 4:4-7; கொலோ 3:15-17) மேலும் நமக்குச் சரியானதொரு மனப்பான்மையை வைத்துக் கொள்ளுமாறு நாம் ஊழியம் செய்யும்பொழுது உதவுகிறது. உண்மையான தேவனுடைய ஊழியக்காரர்கள் அவர்களுடைய மகிழ்ச்சியின் ஊற்று மூலமே அவர்கள் தேவனைச் சேவிப்பதாலும் மேலும் மற்றவர்களுக்குங்கூட ஊழியம் செய்வதால் அதைப் பெறுவதே தவிர மற்றபடி தங்களுக்காகவோ அல்லது தங்கள் சுய நலமான ஆசா பாசங்களுக்கு ஊழியம் செய்வதால் வருவதல்ல என்று உணர்ந்து கொள்ளுகிறார்கள். உங்களது சொந்த மகிழ்ச்சியையோ அல்லது சந்தோஷத்தையோ எய்துவதில் கரிசனை அதிகப்படியாக இருந்தால் அது ஊழியக்காரனது இருதயத்தை பெற்றிருப்பதற்கு முரண்பாடானது. "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள். ஆவியிலே அனலாயிருங்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்." (ரோமர் 12:11)

ஊழியத்திற்கான வரங்கள் (அ) ஈவுகள்

ஆவியின் வரங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு கொடுக்கப்படும் ஊழியத்தின் வரங்களாகும். (I கொரி 12:4-11) இந்த வரங்கள் யாரையும் மகிமைப்படுத்துவதற்காக கொடுக்கப்படுவதல்ல அல்லது நமது சொந்தத்திற்காக நமக்கு பலம் அளிப்பதற்காகவும் அல்ல. அவைகள் தேவனுடைய

ஊழியக்காராராகிய நமக்கு தகுதி உண்டாகவும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபைக்கு ஊழியம் செய்வதற்காக அதிகாரமும் உண்டாவதற்காகத் தரப்பட்டுள்ளன. அதுவும் எந்த வழியில் அவசியமோ அந்த வழியில் தானே தரப்படுகிறது.

மெய்யாகவே தலைவர்கள் இந்த வரங்களை விசுவாசத்துடன் அதுவும் குறிப்பாக மிகுந்த பொறுப்புடன் செயல்படுத்துவதால் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை கட்டி எழுப்பப்படுவதுடன் தேவனுடைய இராஜ்ஜியமும் பரவுகிறது. "அவனவன் பெற்ற வரத்தின்படியே, நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளை பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணகாரர் போல ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன். ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக் கடவன். எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும் படியே செய்வீர்களாக. அவருக்கே மகிமையும், வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்." (I பேதுரு 4:10-11)

ஊழியர்கள் தேவனால் எழுப்பப்படுகிறார்கள்

நாம் கடைசியான ஸ்தானத்தை தெரிந்தெடுத்துக் கொண்டு தேவனையும் மற்றவர்களையும் சேவிப்போமானால் நமக்கென்று நாம் வேண்டுகோள் விடுக்க வேண்டிய உரிமைகள் நமக்கில்லா விட்டாலும் நமக்காக, மிக உயர்ந்ததோர் தகுந்த ஸ்தானத்தில் நம்மை தூக்கி உயர்த்தி வைப்பதாக தேவன் வாக்களித்திருக்கிறார். (மத் 20:25-28; மத் 23:11-12; மாற்கு 9:35; மாற்கு 10:43-44) நாம் தாழ்மை என்பது புழுதியில் கிடந்து கேவலமாகக் கெஞ்சுவது அல்ல. அது இயேசுவைப் போல ஜீவிப்பது. அதாவது ஒரு ஊழியக்காரனாக தேவனுடைய சித்தத்திற்குப் பணிந்து கீழ்படிந்து அதை மாத்திரம் நிறைவேற்றுவதாகும். (லூக்கா 14:11) கிறிஸ்து ஒரு பலவீனமான புழு அல்ல. அவர் உலகில் வாழ்ந்த மனிதர் எல்லாரிலும் மிகுந்த வல்லமையுடையவர்.

அநேக தலைவர்கள் தங்கள் ஊழியத்தில் தோல்வியையே சந்திப்பார்கள். ஏனென்றால் அவர்கள் காரியங்களை தங்கள் சொந்த வழியிலும் பலத்தைக் கொண்டும் செய்து நிறைவேற்றுமாறு முயற்சிக்கின்றனர். தேவன் தாமே அந்த மாதிரியான சுய சார்பையும், சுயாதீனத்தையும் உடைத்தெறிந்து அதற்கு பதிலாக தமக்கென்று தமது சித்தத்தை நிறைவேற்றி ஆகவே அவர் பரிசுத்த ஆவியின் வல்லமையில் செயல்படும் ஒரே ஒரு தலைவர் மாத்திரம் அவருக்கென்று எஞ்சி இருப்பார். இந்த விதமான தன்னைத் தான் தாழ்த்தும் முறையானது ஊழியத்தில் ஒரு தலைவன் அடையும் எந்த விதமான வெற்றியும் தேவனுக்கே சரியான மகிமையை அவர் பெற்றுக் கொள்ளும்படியாகச் செய்கிறது. சுய சார்பு என்பது உண்மையில் பெருமை, சுய நலம், சுய நம்பிக்கை ஆகும். இது தேவன் தமது ஜனங்களுக்கு என்ன தேவை அவசியம் என்பதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். உண்மையாகவே தேவன் பெருமையையும் அகந்தையையும் வெறுக்கிறார். (நீதி 8:13) அவர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். (I பேதுரு 5:5) அவர் நம்மை தமக்கு முன்னால் தாழ்மையுடன் நடக்கும்படி வாஞ்சிக்கிறார். (மீகா 6:8)

நாம் தேவன் நம்மை பார்ப்பது போல நம்மை பார்க்க வேண்டும். ஊழியக்காரர்களாகவும், புத்திரர்களாகவும் ஒரே சமயத்தில் நாம் நமக்குள்ளே வெறுமையாய் இருக்கிறோம். தேவனுடைய கிருபையில்லாவிட்டால் நாம் இன்னும் இல்லாதவர்களாக இருப்போம். நாம் இருப்பதெல்லாம் நாம் வைப்பதிருப்பதெல்லாம் அவருக்கே சொந்தமானது அவருக்குக்கே கடனாளிகளாய் இருக்கிறோம். நமது நம்பிக்கைக்குரிய தேவனிடம் நமது ஜீவியத்தை நாம் ஒப்புக் கொடுக்க வேண்டியது கட்டாயமாகிறது.

இயேசு சொன்னதாவது,

"மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகா விட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான். இந்த உலகத்தில் ஜீவனை வெறுக்கிறவனோ அவன் அதை நித்திய ஜீவகாலமாய் காத்துக் கொள்வான். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக் கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கு என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனை பிதாவானவர் கனம் பண்ணுவார்." (யோவான் 12:24-26).

இயேசுவைப் போல் சேவை செய்வது எப்படி?

“இதோ! என்னுடைய ஊழியக்காரன்!!”

பிதாவாகிய தேவன் இயேசுக் கிறிஸ்துவை தீர்க்க தரிசன வேதாகமப் பகுதிகளில் பல தடவைகளில் இவ்வாறு (குறித்து) முன் வைக்கிறார். ஏசாயா 42:1; 52:13; சகரியா 3:8 நமது சேவையான ஊழியத்திற்கு இயேசுவே தேவனுடைய பூரணமான உதாரணம் ஆவார். நம்மில் ஒவ்வொருவரையும் குறித்து பிதாவாகிய தேவனுடைய மகத்தான வாஞ்சையாவது அவரைப் போல (சாயலில்) இருப்பதுதான்.

தேவன் எல்லாக் காரியங்களையும் ஒருங்கிணைத்து அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பான சாயலாக்கும் நல்ல நோக்கத்தோடு கிரியை செய்கிறார். (ரோமர் 8:28-29) பரிசுத்த ஆவியானவருடைய ஊழியமாவது நம்மை அவருடைய சாயலுக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவது தான். (II கொரி 3:18) பவுல் அப்போஸ்தலனுடைய சவால் என்னவென்றால் “நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.” (II கொரி 11:1) திருச்சபையில் ஐந்து விதமான ஊழியத்தின் நோக்கமாவது கிறிஸ்தவர்களை வளர்ச்சி அடையச் செய்வது. அதாவது “கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியை பெறச் செய்வது தான்.” (எபேசி 4:11-13) கிறிஸ்து நமக்கு அளித்த மாதிரிக்கு குறைவான யாதொன்றுக்கும் நாம் தீர்வு என்று ஒப்புக் கொள்ள மாட்டோம். அவர் சொன்னதாவது, “என்னைப் பின்பற்றுங்கள்” நாம் அவரைப் பின்பற்றிச் சென்றால் நம்மை உண்டாக்கி வடிவமைத்து கர்த்தருடைய மனதின்படியே அவரது மனதின் வாஞ்சையின்படி உருவாக்குகிறார்.

நாம் நான்கு சுவிசேஷங்களையும் அடிக்கடி படித்துத் தியானிக்க வேண்டும். அங்கே தான் நாம் எஜமானனாகிய கிறிஸ்துவினுடைய அடிச் சுவடுகளைக் கண்டுபிடிக்க முடியும். அவர் அடிமையின் ரூபம் எடுத்து ஜனங்களுக்கு எவ்வாறு ஊழியம் செய்ய முடியும் என்பதைச் செய்து காட்டினார். அது ஒரு ஜீவிய காலத்துப் படிப்பாகும். நாம் இங்கே ஊழியக்காரனாக அவரது ஆதி அற்புதமான குணாதிசயங்களைப் பற்றிக் கவனித்துப் படிப்போம்.

1. தனிப்பட்ட ஆட்களுக்காக அவர் காட்டிய அன்பு.

இயேசுவுடைய காலத்தில் அவரை விட மிகவும் சுறுசுறுப்பானவர்கள் யாரும் இருந்ததில்லை. அவருடைய கால அட்டவணை மிகவும் இறுக்கமானதாகவும், காலம் குறுகியதாகவும் இருந்தது. அவருடைய புகழ் வேகமாகப் பரவியது. திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள். தனிப்பட்டவர்களுக்காக அவருடைய அன்பு என்றும் ஒன்று போல் இருந்தது. ஒவ்வொரு மனிதன் / ஸ்தீரியுடைய தனித் தன்மையை கண்டு உணர்ந்து கொள்ள அவர் தவறவில்லை. உதாரணமாக யோவான் எழுதிய நற்செய்தி நூலை எடுத்துக் கொள்வோம். முதலாம் அதிகாரத்தில் இயேசு, பேதுரு, பிலிப்பு, நாத்தான்வேல் ஆகியோருடன் தனிப்பட்ட தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதைப் பார்க்கிறோம். அவர் குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களை நாத்தான் வேலுக்குக் கொடுக்கிறார். 2ம் அதிகாரத்தில் வேலைக்காரர்களுடன் நமது நேரத்தை ஒரு கலியாணத்தில் எடுத்துக் கொள்கிறார். 3ம் அதிகாரத்தில் நிக்கோதேமுவுடன் பொறுமையாகவும் நீண்ட உரையாடல் செய்வதாகவும் காணப்படுகிறார். மேலும் அது இரவாகவும் இளைப்பாறும் நேரமாக இருந்த பொழுதும் அவ்வாறு செய்தார். பிரயாணங்களுக்கு இடையில் சரியான உணவு கிடையாது. களைப்பும் மேலிடும். இவ்வாறு சமாரிய ஸ்தீரியின் ஆத்துமாவை ஆதாயப்படுத்திய பிறகு இவ்வாறு 3ம் அதிகாரத்தில் காணப்படுகிறார். அடுத்த அதிகாரம் உதவியற்ற திமிர்வாதக்காரனுக்கு ஊழியம் செய்வதாகக் கூறித் தொடங்குகிறது. மற்ற அதிகாரங்களை நீங்களாகவே படித்துப் பாருங்கள். சிலுவை மரத்தில் தொங்கும் போதுங்கூட பரதீசுக்காக ஒரு மனிதனை ஆதாயப்படுத்திக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு தனிப்பட்ட நபருடைய முக்கியத்துவத்தையும் மதிப்பீட்டையும் வற்புறுத்துவதற்காக இயேசு மூன்று உவமைகளை ஒன்றுக்குப் பின் ஒன்றாக கொடுத்திருக்கிறார். (லூக்கா 15) ஒரு மேய்ப்பன் தன் நூறு ஆடுகளில் ஒன்றைக் காணாமல் போக விட்டான். மேலும் அவன் காணாமல் போனது ஒன்று தானே என்று பின் தங்கி இருக்க வில்லை. அந்தக் காணாமல் போன ஆட்டைக் கண்டு

பிடித்த பிறகு தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரையும் தன்னுடன் சந்தோஷப்படும் படியாக தொந்தரவு செய்தான். அந்த ஸ்தீரி தன்னுடைய பத்து வெள்ளிக் காசுகளில் ஒன்றை இழந்து போகிறாள். அவள் அதைக் கண்டுபிடிப்பதற்காக வீடு முழுவதையும் பெருக்கி சுத்தம் செய்கிறாள். அவள் அதைக் கண்டு பிடித்த பொழுது தனது சிநேகிதிகள் எல்லாரையும் அழைத்து வந்து தன்னுடைய மன எழுச்சியையும் சந்தோஷத்தையும் பகிர்ந்து கொள்ளும்படியாக அழைக்கிறாள். பிறகு தன் இளைய குமாரனைக் காணாமல் போக விட்ட தந்தை வருகிறார். அந்த குமாரன் திரும்பி வந்த பொழுது என்ன மகிழ்ச்சி! மூத்த மகன் உள்ளே வர மறுத்த பொழுதுங்கூட கொண்டாட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. இதுதான் ஒவ்வொரு ஆத்துமாவின் விலையேறப் பெற்ற மதிப்பாகும். அந்த மேய்ப்பனுக்கு நஷ்டத்தின் சதவிகிதம் ஒன்று தான். அந்த ஸ்தீரிக்கு அந்த நஷ்டத்தின் சதவிகிதம் பத்து. அந்த தகப்பனாருக்கோ அது ஐம்பது சதவிகிதம். இது ஒரு பொருட்டாகாது. ஒவ்வொரு நபரும் முக்கியமானவர்கள். அந்த 99 ஆடுகள் நாம் திருப்திப்படுத்தாமல் காணாமல் போன ஒன்றுக்கு பிறகாலே போவதைத் தடுத்து நிறுத்தாது. நாம் தனிப்பட்டவர்களின் மதிப்பின் அருமையைப் புரிந்து கொள்ளாமல் நாம் ஊழியத்தில் ஒன்றுமே கொஞ்சங்கூட சாதிக்க முடியாது. மனந்திரும்பும் ஒரே பாவியைப் பற்றிய செய்தியானது தேவ தூதர்களை மகிழ்ச்சியில் பாடி ஆடச் செய்கிறது. நாமும் அவ்வாறு மன எழுச்சி கொண்டிருக்கிறோமா?

இயேசு எரிகோவின் மார்க்கமாகச் செல்லும்பொழுது திரளான ஜனங்களின் கூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது. (லூக்கா 19) அந்த நகரத்தில் தேடுபவன் ஒருவன் இருந்தான். அவனுக்குத் தான் விரும்பிய பணம் எல்லாம் இருந்தது. ஆனால் அவனுக்கு சமாதானமும் சந்தோஷமும் இல்லை. ஆயக்காரருக்குத் தலைவனாகத் தன் அந்தஸ்த்தையும் மறந்து இயேசுவைப் பார்க்கும் படியாக ஒரு மரத்தின் மேல் ஏறினான். அவன் இயேசுவைப் பார்க்கும் முன்னரே இயேசு அவனைப் பார்த்தார். அவன் இயேசுவைப் பார்க்க மாத்திரம் விரும்பினான். ஆனால் இயேசு அவனுடன் தங்க விரும்பினார் என்ன மகத்தான ஆச்சரியம்! இந்த நெருக்கடியான நிகழ்ச்சிகளின் இடையில் இயேசு சகேயுடன் தங்கி இருப்பதற்கு அவகாசம் எடுத்துக் கொண்டார். தேடுகிறவர்களுக்காக என்ன அன்பு! இங்கே தான் ஊழியக்காரன் என்பதற்குப் சொல் பொருள் விளக்கம் தரப்படுகிறது. காணாமற்போன ஒன்றையே ஒருவன் தேடிக் கண்டுபிடிக்கப் போகிறான். (லூக்கா 19:10)

நம்மைச் சுற்றிலும், எல்லா வாழ்க்கை நடைமுறைகளிலும் தேடுகிறவர்கள் நமக்கு இருக்கிறார்கள். மனிதன் தொடர்ந்து கண்டுபிடிப்பதிலே இருக்கிறான். மேலும் தேவன் தாமே ஏற்கனவே தம்மை வெளிப்படுத்தி இருக்கிறார் என்பதை அறியாமலே இருக்கிறான். நாம் சந்திக்கிற ஒவ்வொருவருக்கும் நற்செய்தியை அறிவிப்போம். சமுதாயத்தில் அவர்களுடைய ஸ்தானம் மாறுவதில்லை. உண்மையான சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தேடிக் கண்டுபிடிப்பதில் மனிதர்களுடைய தேடுதல் குறைவடைவதில்லை. பிலிப்பி பட்டணத்திலுள்ள சிறைச்சாலை அதிகாரி குற்றவாளிகளைத் தண்டிக்கவும், மாறுதல் செய்வதற்காகவே இருந்தான். ஆனால் அவன் தன்னைத் தான் மாறுதல் செய்து கொள்ளவில்லை. அவன் பிரசங்கித்த சிறைச்சாலை கைதிகளின் காலில் விழுந்து அழுது புலம்பி, "ஐயன்மாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கதறினான். (அப் 16:30) இதே அதிகாரத்தில் வியாபாரம் செய்யும் ஒரு ஸ்தீரியைச் சந்திக்கிறோம். ஆற்றங்கரை மணலில் உட்கார்ந்து அவள் திறந்த வெளி பிரசங்கிமார்கள் பிரசங்கிப்பதைக் கவனித்துக் கேட்டாள். இரட்சிக்கப்பட்டாள். ஆகவே நினைத்துப் பாருங்கள். அவள் தான் முதல் ஐரோப்பிய விசுவாசி நாமும் ஒவ்வொரு மனிதனையும் நேசித்து, அவனுக்கு கனத்தைக் கொடுக்குமாறு கற்றுக் கொள்வோம். இதுதான் கிறிஸ்துவின் சாயலான ஊழியனாக உண்டாகும்படி ஆக்கப்படுவதின் முதல் படியாகும்.

2. கிட்டிச் சேரப்படாதவர்களுக்காக அவருடைய கரிசனை

"இந்தத் தொழுவத்திலுள்ளவைகளுமல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். அவைகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் ஆகும்." (யோவான் 10:16) "வேறே ஆடுகளும்" என்பவைகளுக்காக நமது கர்த்தர் நிலையாகக் கொண்டிருந்த கரிசனை (அவரை) கர்த்தரை கிரியை செய்து கொண்டிருக்கச் செய்தது. அவர் ஒரே இடத்தில் தரித்திருக்க மறுத்தார். குறிப்பாக ஒரு ஸ்தலத்தில் ஊழியத்தில் பெறப் பெற்ற வெற்றியானது அவருக்கு அந்த ஸ்தலத்திற்கு அப்பாலுள்ள இடங்களைக் குறித்து உண்டான தரிசனத்தை மங்கி விடுமாறு செய்யவில்லை. கப்பர் நகூமிலுள்ள ஜனங்கள்

மிகச் சிறந்த அற்புதங்களான சொஸ்தமாக்குதல், அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலை ஆகியவற்றைக் கண் கண்ட சாட்சியாக பார்த்ததால் அவர் தங்களை விட்டுப் போய் விடாதபடி நிறுத்தி வைக்க முயற்சித்தார்கள். ஆனால் அவர் அவர்களுக்குக் கூறியதாவது, "நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கிக்க வேண்டும். இதற்காகவே நான் அனுப்பப்பட்டேன்" என்றார். (லூக்கா 4:42-43)

அவருடைய சீஷர்கள் போஜனத்துக்கு உணவை வாங்கிக் கொண்டு வருமாறு போயிருக்கும் பொழுது இயேசு சமாரிய ஸ்தீரியோடே பேசிக் கொண்டிருந்தார். அவள் உற்சாகத்துடனும் வியப்புடனும் அவளுடைய பட்டணத்திலிருந்து அநேக மனிதர்களை இயேசு சொல்வதைக் கேட்கும்படி கூட்டிக் கொண்டு வந்தாள். அவர்கள் அச்சு இயந்திரத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் "ஒரு புதிய வெளிப்படுத்தப்பட்ட விசேஷம்" என்ற புத்தகம் வெளியில் பிரதி செய்யப்பட்டு தள்ளப்படுவது போல அவர்கள் அவ்வாறு காணப்பட்டார்கள். ஆனால் அதிகாரம் 7 வசனம் 9க்கு எந்த விதமான கொஞ்சங்கூட நடைமுறையான வியாக்கியானம் கொடுப்பதில்லை. நாம் இன்று என்ன செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். அதாவது எண்ணிக்கைக்கு அடங்காத திரளான ஜனங்கள் சகல தேசங்கள், கோத்திரங்கள், மக்கள் பாஷைக்காரர்கள் நித்தியத்தில் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாக தாழ விழுந்து ஆராதனை செய்யும்படியாக, நாம் இன்று என்ன செய்ய வேண்டும். வேதாகமத்தில் கடைசி புத்தகத்தில் காணப்படும் இந்த வசனம் நமது மிகுந்த கரிசனையான கவனத்தையும், செயல்பாட்டையும் பெறுவதற்கான தகுதி வாய்ந்ததாக இருக்கிறது. இந்த உலகத்தில் இரண்டாயிரத்துக்கு அதிகமான பாஷைகளில் வேத புத்தகங்கள் வெளியிடப்படவில்லை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இயேசு வெளியில் சென்று சுவிசேஷ பிரபல்யம் செய்வதை ஆரம்பித்தார். ஆதித் திருச்சபையானது அதை மிகவும் நம்பிக்கையுடன் அவருடைய அடிச் சுவடுகளைப் பின்பற்றியது. (அப் 1:1-2) நாமும் நமது ஊழியங்களை இதே மாதிரியான பாணியில் அமைத்துக் கொண்டு சுவிசேஷம் சேரப்படாத ஒவ்வொருவருக்கும் சுவிசேஷம் சென்றடையக் கூடிய மகிமையான பணியைத் தொடர்ந்து முடிப்போமா?

3. அவருடைய தியாகம் நிறைந்த ஆவி

ஊழியத்துவமும் தியாகமும் இயேசுவுடன் ஒரே தன்மையுடையவை. ஒன்றில்லாமல் மற்றதை நினைத்துக் கூட நாம் பார்க்க முடியாது. நம்மால் முடியுமா? "நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்." (யோவான் 10:11) இதைத் தவிர ஆடுகளுக்காக ஊழியம் செய்யவும் ஆடுகளைக் காப்பாற்றவும் இரட்சிக்கவும் வேறு வழி கிடையாது. கிறிஸ்தவ ஊழியம் என்பது கட்டாயமாக சுமத்தப்படும் ஒரு உழைப்பல்ல. ஆனால் அது சிநேக பான்மையுள்ள ஊழியமாக அது தன்னை ஆட்படுத்திக் கொண்டு அத்துடன் தியாகத்தையும் உடன் சேர்த்துக் கொள்கிறது. இயேசு கூறியதாவது, "தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு வேறொன்றும் இல்லை." (யோவான் 15:13) இலாப நஷ்டத்தைக் காணாத ஊழியம் எதையுமே சாதிக்க முடியாது.

<u>தேவனுக்குப் பிரியமாகவும் மக்களுக்கு ஆசீர்வாதமாகவும் இருக்கும் ஓர் ஊழியத்தை நாம் நிறைவேற்ற வேண்டும் என்றால் நாம் தியாகம் செய்ய வேண்டியது குறைந்தது மூன்று காரியங்கள். (உண்டு)</u>

1) <u>நமது கௌரவம்</u>. "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாய் இருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்." (பிலிப் 2:6-7) நம்முடைய கௌரவம் அந்தஸ்து என்ற ஸ்தானங்களிலிருந்து நாம் கீழ் இறங்கி வரும் வரைக்கும் நாம் மக்களை அடையாளங் கண்டு அவர்களுடன் ஒன்றுபட்டு கலந்து கொண்டாலன்றி நாம் மக்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. பாவமில்லாத இரட்சகர் பாவிகளின் நண்பன் ஆனார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்தக் காரணப் பெயரைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். பிரசங்க பீடத்திலிருந்து பிரசங்கம் செய்வது தெருவின் நான் முனைச் சந்திப்புகளில் துண்டுப் பிரதிகளை விநியோகம் செய்தலை விட மேன்மையானதாகாது. புத்தகங்கள் எழுதுவது வாசலுக்கு வாசல் நடையேறிச் சென்று வெளியில் சென்றடைவதை விட உயர்ந்ததல்ல. இயேசு தமது சீஷர்களைப் பார்த்துச் சொன்னதாவது, "இதோ வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்" என்று நான் உங்களுக்குச்

சொல்லுகிறேன். (யோவான் 4:35) இந்தக் குழு தான் இரண்டு நாட்கள் அங்கே தங்கி இருந்த காலத்தில் மிகுந்த அறுவடை செய்தார்கள்.(வ. 39-41) நாம் அடிவானத்திற்கு அப்பால் தூரமாகப் பார்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்துக் கொண்டு இருக்கக் கூடாது. அங்கே மில்லியன் மில்லியன் கணக்கான மக்கள் இருளிலும், அர்த்த ராத்திரி அரையிருட்டிலும் உட்கார்ந்து கொண்டு தவிக்கிறார்கள். அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் முதன்மையான முதல் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி இருக்கிறார்கள். பாலகன் இயேசுவை தன் கரங்களில் ஏந்திக் கொண்டு சிமியோன் தேவனை ஸ்தோத்தரித்துக் கூறியதாவது, "புற ஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் தேவரீர் சகல ஜனங்களுக்கு முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது" என்றான். (லூக்கா 2:31-32) மேலும் அப்போஸ்தலர்கள் ஒரு மேசியாவின் வாக்குத்தத்தத்தை தங்களுக்காக உரிமை படுத்திக் கொண்டார்கள் என்பதைக் கவனித்துப் பார்க்கவும். "நீர் பூமியின் கடைசி பரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன்." (அப் 13:47; ஏசாயா 49:6) என்பது தான். சொல்லுக் கடங்காத மில்லியன் மில்லியன் ஆன மக்கள் சுவிசேஷம் அறிவிக்கப்படாமலும், அறிவிக்கப்படாத மில்லியன் மில்லியன் ஆன மக்கள் மந்தைக்கு வெளிப்புறத்திலும் நிற்கின்றனர். நாம் அவர்களுக்காக கரிசனை கொள்கிறோமா? பவுல் இயேசுவுடைய விசிறியாக இருந்தான். அவரை அவன் மிகவும் நுட்பமாக அவர் அச்சாக இருக்குமாறு நகலெடுத்தான். இரட்சிக்கப்படாதவர்களுக்காக சுவிசேஷம் போய் சேராதவர்களுக்காக, சுவிசேஷம் அறிவிக்கப்படாதவர்களுக்காக, ஆலயம் என்பதை அறியாதவர்களுக்காக தனது ஆண்டவருடைய கரிசனையில் தானும் பகிர்ந்து கொண்டான். ரோமாபுரியில் உள்ள விசுவாசிகளுக்கு நிருபம் எழுதினான். "மேலும் அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்களென்றும் கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்றும் எழுதியிருக்கிறபடியே கிறிஸ்துவின் நாமம் சொல்லப் பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்" என்றான். (ரோமர் 15:20-21)

இயேசுவை உனக்குத் தெரியுமா? என்று அமைச்சர் வினாவுகிறார். அதற்கு ஆதிவாசி, "அவர் இங்கே இல்லை. அடுத்த கிராமத்தில் விசாரியுங்கள்" என்று பதில் கூறுகிறார். அன்புள்ள சகோதர சகோதரிகளே, ஆசியாவிலும், ஆப்ரிக்காவிலும் உள்ள இந்த கிராம மக்கள் இவ்வாறு முழு அறியாமையில் இருப்பதற்கு யார் பொறுப்பானவர்கள்? ஒரு பிரசங்கி பிரசங்கிக்காவிட்டால் அவர்கள் எப்படி கேட்பார்கள்? அவர்களிடம் அனுப்பப்படா விட்டால் எப்படி அவர்கள் பிரசங்கிப்பார்கள், (ரோமர் 10:14-15) ஆம் நாம் போகக் கடவோம். நாமும், ஆட்களை அனுப்பக் கடவோம்.

ஒரு மனுஷனுடைய தலையின் மேல் கை வைத்து ஜெபிப்பது அவருடைய பாதங்களைக் கழுவுவதை விட உயர்ந்ததல்ல. இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் நாம் திரித்துக் கூறப்படுகிற மதிப்புகளால் அவதிப்படுகிறோம். கிறிஸ்தவ ஊழியம் எந்த வடிவத்தில் செய்யப்பட்டாலும் அது உன்னதமான கனத்திற்குப் பாத்திரமானது. நாம் பாவஞ் செய்வதற்கு மாத்திரமே வெட்கப்பட வேண்டும்.

2) <u>நமது மகிழ்ச்சி.</u> அந்த நாளில் இயேசு மிகவும் களைப்புற்றவராகவும் பசியுள்ளவராகவும் இருந்தார். ஆனால் அவர் ஆத்துமாக்களை ஆதாயம் செய்து கொண்டிருந்தார். அவருடைய பசியானது ஆகாரத்தை விட மக்கள் மேலேயே நோக்கமாயிருந்தது. அவர் தமது சீஷர்களுக்குச் சொன்னதாவது, "நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத போஜனம் எனக்குண்டு. நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்றார்.

ஆமோஸ் தீர்க்கதரிசி சோம்பேறிகளான சீயோன் வாசிகளைப் பார்த்து "உங்களுக்கு ஐயோ" என்கிறார். அவர்கள் தந்தக் கட்டில்களில் படுத்துக் கொண்டு தங்கள் மஞ்சங்களின் மேல் சவுக்கியமாய் சயனித்து மந்தையிலுள்ள ஆட்டுக் குட்டிகளையும், மாட்டுத் தொழுவத்திலுள்ள கன்று குட்டிகளையும் தின்று, தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப் போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டு பண்ணி, பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக் குடித்து, சிறந்த பரிமள தைலங்களைப் பூசிக் கொள்கிறார்கள். ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமல் போகிறார்கள். (ஆமோஸ் 6:1;4-6) யோசேப்பு என்பது சிறைவாசத் தளைக்குள்ளும் அடிமைத் தனத்திலும் உள்ளவர்களைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. இந்த ஜனங்களுக்காக தேவனுடைய அன்பினால்

கட்டாயப்படுத்தப்பட்டு நாம் ஆடம்பரமான ஆசனங்களையும் களியாட்டக் கூடங்களையும் விட்டு வெளியே வந்து அவர்களை இரட்சிக்க வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் 90 நபர்கள் மரிக்கும்பொழுது அவர்களில் பெரும்பாலோர் கிறிஸ்து இல்லாத நித்தியம் அல்லது நரகத்திற்குள் தள்ளப் படுகிறார்கள். அதனிமித்தம் நாமும் நமக்கு நியாயப்பட்ட சில சந்தோஷங்களை நாம் தியாகம் செய்து விடுவதுங்கூட நமக்கு மிகை ஆகாது. "ஆகையால் சகோதரரே இனி வரும் காலம் குறுகினதான படியால் மனைவிகள் உள்ளவர்கள் மனைவிகள் இல்லாதவர்கள் போலவும் .... இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதை அனுபவியாதவர்கள் போலவும் இருக்க வேண்டும்." (I கொரி 7:29-31)

3) நமது உடைமைகள். இயேசு ஐசுவரியவனாயிருந்தும் நம்மை ஐசுவரியவான்களாக்க அவர் ஏழையானார். மேலும் நாமும் நமது பணப்பைகளைத் திறந்து தாராளமாகக் நமது பணத்தைக் கொடுத்து ஏழை மக்களும் சுவிசேஷம் பெற்றுக் கொள்ளும்படி செய்ய வேண்டும். இயேசு, ஏழை விதவையுடைய இரண்டு காசுகளையும், மகதலேனா மரியாளுடைய பரிமள தைலத்தையும் அபரிமிதமாகப் பாராட்டினார். ஏனென்றால் இரண்டும் தியாகத்தைக் குறித்தது. நாம் தாராளமாகவும் உதாரத்துவமாகவும் கொடுப்பதும் கூட நம்மைப் பாதிக்கும் அளவுக்குத் தர வேண்டும். சொல் வழக்கில் பேசப்படுகிற பிரகாரம் "ஒரு மனிதன் எவ்வளவு கொடுக்கிறான்" என்று கேட்கிறோம். கிறிஸ்து கேட்கிறார். "அவன் எவ்வளவு வைத்திருக்கிறான் என்று!" வரலாற்றில் சிலுவை என்பது உன்னதமானதோர் தியாகத்திற்கு அடையாளமாக இருக்கிறது. அதை நாம் கழுத்தில் தொங்க விட்டுக் கொள்கிறோம் அல்லது கழுத்துப் பட்டிக்கு பின்னாக பயன்படுத்துகிறோம். நாம் அதன் உண்மையான உட்கருத்தை மறவாதிருப்போமாக.

4. பரிசுத்த ஆவியானவர் (சார்பில்) பேரில் அவர் சார்ந்திருத்தல்

இந்நாட்களில் மனித பலத்தாலும் திறமையாலும் மிக அதிகமான கிறிஸ்தவ நடவடிக்கைகள் நிறைவேற்றப்படும் பொழுது நாமும் கிறிஸ்துவை நோக்கி ஒரு புதிய நோக்கில் அவர் எவ்வாறு ஊழியம் செய்தார் என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். லூக்கா என்பவர் ஒரு வைத்தியர் அவர் ஒரு சரித்திர ஆசிரியருங்கூட. கிறிஸ்துவின் ஊழியத்தைப் பற்றிய இரகசியத்தை விளக்கிக் கூறுகிறார். "நசரேயனாகிய இயேசுவை பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். நன்மை செய்கிறவராகவும் சுற்றித் திரிந்தார்." (அப் 10:38) இயேசு தம்முடைய சொந்த வல்லமையையும் பலத்தையும் வெறுமை ஆகும் வரை ஊற்றி விட்டு பரிசுத்த ஆவியின் வல்லமையைப் நிரப்புமாறு பெற்றுக் கொண்டு அதனால் நமக்கு மாதிரியான நடைமுறையைத் தந்தருளினார். "பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல. என்னுடைய ஆவியினாலே ஆகும்" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (சகரியா 4:6) இந்தக் கோட்பாட்டை எவ்வளவு விரைவில் கற்றுக் கொள்கிறோமோ அந்த அளவுக்கு நமக்கு அது நல்லதாகும்.

பரிசுத்த ஆவியின் மேல் கிறிஸ்து சார்ந்திருந்தது என்ற சொல்லானது ஜெபமே அவருக்கு முன்னுரிமை ஆக இருந்தது என்ற விஷயத்தினால் வெளிப்படுத்தப்பட்டது. அவரது 40 மாத பொது ஊழிய காலத்திற்கு முன்னதாக 40 நாட்கள் உபவாசத்திலும் ஜெபத்திலும் கழித்தார். அவர் வனாந்தரத்திலிருந்து ஆவியானவருடைய பலத்தினாலே வெளியே வந்தார். (லூக்கா 4:14) இன்றைய நாட்களில் இந்த வனாந்தர அனுபவமானது கல்லூரி பட்டயத்திற்கு (சான்றிதழ்) பதிலாக இருப்பதாக அநேகரால் கருதப்படுகிறது. ஆகவே நாம் ஒன்றையும் பிரமாதமாகச் சாதிப்பதில்லை. அவர் மென்மேலும் புகழ் பெற்றபொழுது திரளான மக்கள் அவர் உபதேசிப்பதைக் கேட்கவும் அவரால் சொஸ்தமடையும் படிக்கும் திரண்டு வந்தார்கள். "அவரோ வனாந்திரத்தில் தனித்துப் போய் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்." (லூக்கா 5:15-16) வாகனமாகிய காரில் பேட்டரியில் சக்தி குறையும்பொழுது அந்த கார் "தள்ளுவண்டி மாதிரி" ஆகிறது. தேவனோடு தினமும் ஒரு மணி நேரம் தனித்திருப்பதே மிகக் குறைந்த அளவாகும். (மத் 26:40)

இயேசு தமது ஊழியத்தை ஜெபத்துடன் ஆரம்பித்தார். அதைத் தொடர்ந்து ஜெபத்தினாலே நிறைவேற்றினார். அதை ஜெபத்தினாலே நிறைவு செய்தார். (கெத்சமனேயிலும் கொல்கதாவிலும்) இப்பொழுதும் அவர் ஜெபித்துக் கொண்டிருக்கிறார். "வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்." (எபி 7:25) நாம் எந்த விதமான வேறு வழியிலாவது நமது ஊழியத்தை நிறைவேற்றும்படி முயற்சிக்கிறோமா? ஜெபமானது நமது போதாமையைக் குறித்த ஒப்புக் கொள்ளுவதாகும். ஜெபமானது நாம் தேவனை அவசியமானவர் என்றும் அவரது பரிசுத்த ஆவியும்

நமக்குத் தேவை என்றும் தேவனிடம் கூறுவதாகும். யாரோ ஒருவர் எழுதியதாக, "சுய தேவை பூர்த்தி ஆனவர்கள் ஜெபம் செய்வதில்லை, சுய திருப்தி அடைந்தவர்களும் ஜெபிப்பதில்லை. சுய நீதியுள்ளவர்களால் ஜெபிக்க முடியாது" என்பதாகும்.

5. அவரது அவசரப்படும் உணர்வு.

"பகற்காலம் இருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும். ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது" (யோவான் 9:4) நாம் இயேசுவானருடைய இந்த விதமான ஆவியினால் பிடியாகப் பிடிக்கப்பட்டும் அதன் ஆளுகைக்குட்பட்டும் இருக்க வேண்டும். அவருக்கு வீணடிப்பதற்கு நேரம் இல்லை. அந்தக் கொஞ்சமான காலத்திலே எவ்வளவுக்கு அதிகமாய் சாதிக்க முடியுமோ அதைச் சாதித்தே ஆக வேண்டும். அவருக்கு என்று கொஞ்சம் குறைய மூன்று ஆண்டுகளுக்கு சற்று அதிகமான கால அளவே அவருடைய பொது ஊழியத்திற்காக இருந்தது. அவருடைய மரணத்தில் எந்த விதமான திகிலும் மீதியும் இருக்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக அவர் வெற்றி முழக்கமாக "எல்லாம் முடிந்தது" என்று அறை கூவினார். என்ன அற்புதமான மாதிரியானார் அவர்!

நாம் சற்று இளைப்பாறலாம் ஆனால் நாம் ஓய்வெடுத்துக் கொள்ளக் கூடாது. ஒவ்வொரு நாளும் 150000 குறைவான மக்கள் மரணம் அடைவதில்லை. வெள்ளங்கள், பூமி அதிர்ச்சிகள், மற்றும் விபத்துக்கள் ஆயிரம் ஆயிரக்கணக்கான மக்களைப் பழி வாங்குகிறது. சில நாடுகள் சுவிசேஷ பிரபல்யத்திற்கு வாசல்களை அடைத்து விடுகின்றன. ஆனால் அநேக நாடுகள் தங்கள் கதவுகளை சுவிசேஷ அறிவிப்புக்காகத் திறந்தே வைத்திருக்கின்றன. ஆகவே இதுவே சந்தர்ப்பத்திற்கான அனுக்கிரக காலம். அறுவடையின் கர்த்தரானவர் ஒரு வேளை திருச்சபைக்கு தானியத்தைக் களஞ்சியத்தில் சேர்க்குமாறு கடைசியான சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கலாம். நாம் தாமதித்தால் அறுவடை வீணாகிவிடும். ஆகவே தீவிரப்படுங்கள். இந்தத் தாமத்திற்கான மெய்யான காரணமாவது கிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் இருக்கிறது. அதாவது "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி அவர் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார்." (II பேதுரு 3:9) இயேசு கூறியதாவது, "இராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்" (மத் 24:14)

நாம் இன்றே செய்யக் கூடியதை நாளைக்கென்று காலம் கடத்த வேண்டாம். நாளை நம்முடையதல்ல. "நாளைக்கு என்ன நேரிடப் போகிறது என்பது நமக்குத் தெரியாது" (நீதி 24:1) இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம். இப்பொழுதே இரட்சண்ய நாள். (II கொரி 6:2) இப்பொழுதே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க எங்கும் திருச்சபைகளை நாட்டவும் கர்த்தருக்காக மக்களை தயாராக ஆக்க வேண்டிய காலமாகும்.

கப்பற்நகூமில் கர்த்தருக்கு ஒரு ஆச்சரியமான வரவேற்பு கிடைத்தது. ஆனால் நாசரேத்தூரில் மக்கள் அவரைப் புறக்கணித்தார்கள். ஆனால் அவரை ஒன்றும் அதைரியப்படுத்தவில்லை. அவர் போய் கொண்டே இருந்தார். அவர் பிரசங்கித்துக் கொண்டே கடந்து போனார். அவர் இராஜ்ஜியத்தின் செய்தியை பரப்பிக் கொண்டே இருந்தார். அது போலவே நாமும் கட்டாயமாக பங்கிட்டுக் கொடுப்போம். கடைபிடிப்போம். ஏழு பேருக்கும் எட்டு பேருக்கும் பங்கிட்டுக் கொடு. பூமியின் மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது. காலையில் உன் விதையை விதை. மாலையிலே உன் கையை நெகிழ விடாதே. அதுவோ, இதுவோ எது வாய்க்குமோ என்றும் இரண்டும் சரியாய் பயன்படுமோ என்றும் நீ அறியாயே. (பிரசங்கி 11:2,6)

நாம் 'நிறுத்தப்படுதல்' இல்லாத ஒரு சுவிசேஷ பிரபல்யத்திற்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படாத கடைசி மனிதனை நற்செய்தி சென்றடையும் வரைக்கும் நம்மை அந்த பிரபல்ய இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொள்வோம். பூமியின் கடையாந்தரம் வரைக்கும் நாம் சாட்சிகளாக ஊழியம் செய்யவோ அல்லது நமது ஜீவிய காலம் முடியும் வரைக்கும் எது முதலாவதாக வந்தாலும் நமது ஊழியத்தை முடித்து விடக் கூடாது. இயேசு தன் வேலைகளையெல்லாம் செய்து முடித்த பிறகே கீழே உட்கார்ந்தார். நாமும் அந்த ஊழியம் நிறைவேறும் வரைக்கும் கீழே உட்காரமாட்டோம்.

பின்வரும் வேதாகமப் பகுதிகளை கருத்தாக ஆராய்ந்து நீங்கள் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் சீஷராக பெரும் மாறுதல்கள் உள்ளவராக, நேர்மை உடையவராக விசுவாச பக்தி உள்ளவராக நம்பிக்கையுடையவராக இருக்க வேண்டும் என்ற தீர்மானம் எடுப்பதற்கு முன்னால் கவனிக்க வேண்டியவை என்னவென்றால்:

– தாவீது தன்னை சீர் தூக்கிப் பார்த்தபொழுது:
"கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காக அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்." (சங் 116:12)

– இயேசு தமது சீஷர்களிடம் கூறியதாவது:
"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான். என்னிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்" என்றார். (மாற்கு 8:34-35)

"யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும், பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்கா விட்டால் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்." (லூக்கா 14:26-27)

– இயேசு பேதுருவுக்கு சவால் விடுவித்தார்:
"என்னுடைய விலையேறப் பெற்ற தன்மையின் காரணத்தால் உன் இருதயத்தின் ஆழத்திலிருந்து அழைக்கப்படும் எனக்கானதோர் அன்பை எனக்காக உன்னிடம் இருக்கிறதா? ஆம் அந்த தெய்வ பக்தி ஆன அன்பு எனக்காக உன்னை தியாகம் செய்யும்படி நெருக்கி ஏவுகிறதா?" (யோவான் 25:15b - Moffat).

– அப். பவுல் இதன் முடிவாகக் கூறியதாவது:
"கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்' (கலா 2:20)

"கிறிஸ்து எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லாரும் மரித்தார்கள் என்றும் பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி அவர் எல்லாருக்காகவும் மரித்தார் என்று நிதானிக்கிறோம்." (II கொரி 5:15)

இப்படியாக இந்த மேற்கண்ட நிபந்தனைகளின் விளக்கத்தின் படியே:

= இதற்கு உன்னுடைய பிரதி செயல்பாடு யாது?

= கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதற்காக உன்னுடைய மிகுந்த ஆழமான மனப்பான்மையானது அதை அறிந்து கொள்வதற்கும், நேசிப்பதற்கும், பின்பற்றிச் செல்வதற்கும் ஊழியம் செய்வதற்கான நிலைமை என்ன?

ஆவிக்குரிய அதிகாரத்தைப் புரிந்து கொள்ளுதல்

இதைப் பற்றி என்னவெல்லாம் குறிப்பிடப்படுகிறது? மூடி மறைத்தல் என்பது தேவனுடைய தகுதி பெற்ற அதிகாரத்திற்கு தங்களைச் சரண் கதி அடையச் செய்தவர்களுக்குக் கொடுக்கப்படுகிற பாதுகாப்பாகும்.

தொடங்குபவர்கள்:

1) தேவன், சகல அதிகாரமுடையவர், தரக்கூடிய மிக அதிக அளவான பாதுகாப்பைத் தருகிறார். (சங் 23:1)
   உதாரணமாக: அவரது மேகம் - (யாத் 13:21; சங் 105:39; எண் 12:15)
   அவரது சிறகுகள் - (சங் 91:4; மத் 23:37)
   அவரது தூதர்கள் - (சங் 91:11; மத் 18:10; I கொரி 11:10)

2) கீழ்படிதலே அவருடைய அரசாங்கத்துக்கு அடிப்படையாகும். (I சாமு 15:22) மேலும் சட்ட ஒழுங்கின்மை அதன் எதிர்மறை (உம்) அவனவன் தன் தன் பார்வைக்கு சரிப் போனபடி செய்து வந்தான். (நியா 21:25; மத் 7:23; 24:12; I யோவான் 3:4)

3) தேவன் தமது அதிகாரத்தை மனிதர்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் பகிர்ந்தளிக்கிறார்; ஆனால் அவை முடிவாக அவரிடமிருந்து வருகிறது. (ரோமர் 13:1-4; யோவான் 19:11)

தேவனுடைய அரசாங்கத்தில் அவருடைய அதிகாரத்தின் எல்லை அளவு மூன்று வட்டங்களில் அமைந்துள்ளது:

(a) **தேவ தூதர்களைச் சார்ந்த**

கலகம்	-	ஏசாயா 14
மரியாதை	-	யூதா 9
(தேவ தூதருடைய பாதுகாப்பு)	-	சங் 91:11; I கொரி 11:10

(b) **உறவுத் தொடர்புகள்** - எபேசி 5:21

1. திருச்சபை

மேய்ப்பர்கள்	-	எபி 13:17
மூப்பர்கள்	-	I தீமோத் 5:17
ஆண்கள் / பெண்கள்	-	I கொரி 11:1

2. குடும்பம்

புருஷர்கள்	-	எபேசி 5:22
மனைவிகள்	-	I பேதுரு 3:1
குழந்தைகள்	-	எபேசி 6:1

(c) **ஸ்தாபனங்கள்**

1. மாநிலம் - ரோமர் 13:11; I பேதுரு 2:13; தீத்து 3:1
   (அளவு மத் 22:21 உடன் அப் 5:28-29)

2. பணி (அ) ஊழியம்

எஜமானர்கள்	-	எபேசி 6:5
ஊழியர்கள்	-	I பேதுரு 2:18

அவமரியாதைக்கும் கலகத்திற்கும் உதாரணங்கள்: ஆதி 9:20-27; II சாமு 6; எண் 12-16.
பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்திற்கு மரியாதை செய்தல்: I சாமு 24:1; 26:9-11
அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள்... (அப் 2:42)

இங்கே நாம் இயேசுவானவர் அவருடைய திருச்சபைக்கு கொடுக்கிற தலைவர்களைக் காண்கிறோம். குறிப்பு: தலைமைத்துவம் என்பது நமது ஆசீர்வாதங்களுக்காக கொடுக்கப்படுகிற வரங்கள் ஆகும்.

எபேசியர் 4:11 வசனத்தைச் சற்று கவனித்துப் பார்ப்போம்

இயேசுவானவர் திருச்சபைக்குத் தலைவர்களைக் கொடுக்கும் காரணமாவது, தமது ஜீவனை வெளிப்படுத்தவும், அவருடைய அதிகாரத்துக்கு பிரதிநிதித்துவமாக இருக்கவும், அவருடைய ஊழியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்காகத்தான் தருகிறார்.

" அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்." (எபேசி 4:11)



குறிப்பு: இந்தத் தலைவர்கள் அனைவரும் இயேசுவின் நிமித்தம் ஊழியக்காரர்களாக. (II கொரி 4:5)

அவர்கள் பக்தி விருத்தி அடையச் செய்யவும், கர்த்தருக்காக திருச்சபையிலும், வெளி உலகத்திலும் ஊழியம் செய்யுமாறு பயிற்றுவிக்கிறார்கள். (எபேசி 4:12)

திருச்சபையில் வரங்களில் பலவிதம் உண்டு. ஆனால் ஒரு மனிதனிடம் மட்டுமே எல்லா வரங்களும் இருப்பதில்லை.

ஆவிக்குரிய அதிகாரமும், பணிந்து கீழ்படிதலும்

a) இயேசுவே கர்த்தராகிய ஆண்டவராக தம்முடைய அதிகாரத்துவத்தை தமது திருச்சபையிலே தகுதி பெற்ற தலைவர்களிடம் பகிர்ந்தளிக்கிறார்.
b) உங்கள் மேல் ஆளுகை செய்கிறவர்களுக்கு நீங்கள் கீழ்படிந்திருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு பணிந்து கீழ்படிய வேண்டும் என்று விரும்புகிறார்.
c) பணிந்து கீழ்படிதல் என்பது இருதயத்தைச் சார்ந்த மனப்பான்மை ஆகும். பணிந்து கீழ்படிதல் என்பது உங்களை நீங்களே விருப்பத் தயாராக உங்கள் தலைவர்களின் அக்கறையான பாதுகாப்பிற்கும் வழி நடத்துதலுக்கும் உங்களை உட்படுத்தி வைத்துக் கொள்வதாகும்.

குறிப்பு:ஆவிக்குரிய அதிகாரத்திற்கு விருப்பத்துடன் பணிந்து கீழ்படிவது உன்னதமான ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவதுடன் மேலும் அவர்கள் அதிகாரத்துவத்திற்கு கீழ் அடங்கி இருப்பதால் அவர்களும் அதிகாரம் உள்ளவர்களாகத் தங்களைக் கண்டு கொள்கிறார்கள். (மத் 8:9)

<u>உன்னுடைய தலைமைத்துவம் உடையவர்களிடம் நீ என்ன எதிர்பார்க்க வேண்டும். மேலும் இயேசுவும் அவர்களுடன் (தலைவர்களுடன்) உறவுத் தொடர்பை நீ வைத்திருப்பதால் அந்த தொடர்பின் காரணமாக அவர் உன்னிடம் எதை எதிர்பார்க்கிறார்?</u>

நாம் எபிரேயர் 13:7, 17-18, 24 ஆன வேத பகுதிகளைச் சற்று கவனிப்போம்.

"தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள் (வ.7) உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியியால் அவர்கள் துக்கத்தோடே அல்ல சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்குக் கீழ்படிந்து அடங்குங்கள். எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். (வ. 17-18) உங்களை நடத்துகிறவர்களை வாழ்த்துங்கள்." (வ.24)

இதிலிருந்து நாம் பார்ப்பது என்னவென்றால்:

(A) உங்கள் தலைவர்கள் எப்படிப் பட்டவர்களாக இருக்கும்படியாக நீங்கள் எதிர்பார்க்கக் கூடும்

1. "தேவனுடைய வார்த்தையின் படி" ஜீவித்தும் அதை உங்களுக்குப் பிரசங்கிக்கும் மனிதர்களாக இருக்க வேண்டும்.
   தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்துவத்தை மாத்திரம் தன்னுடைய ஜீவியத்திலும் ஊழியத்திலும் கைக் கொண்டு வருவதே ஒரு தலைவரின் அதிகாரத்தின் முடிவாகவும் இருக்க வேண்டுமு.

2. நீதியும் நேர்மையும் வெற்றியுள்ள நன்னடத்தையை எடுத்துக் காட்டுகிற மனிதர்களாக இருக்க வேண்டும்.

3. விசுவாசமுள்ள மனிதர்களாக, மற்றவர்கள் பார்த்து அதைப் போல் செய்யக் கூடியதும் அவர்களை நம்பும்படியாகவும் பின்பற்றி வருகிறதற்கு தகுதி வாய்ந்தவர்களாக இருக்கும் அத்தகைய விசுவாசத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

4. உங்கள் ஆத்துமாக்களைப் பற்றி விழிப்புள்ளவர்களாய் இருக்கும் மனிதர்களாகவும் உங்களுடைய நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் கர்த்தருக்கு உத்தரவாதம் செய்பவர்களாகத் தங்களைக் கருதிக் கொள்ளும் மனிதர்களாக இருக்க வேண்டும்.

(B) உன்னுடைய தலைவர்களைப் பொறுத்த அளவில் உங்களிடம் இயேசு என்னத்தை எதிர்பார்க்கிறார்.

1. தேவனுடைய வார்த்தையை அவர்கள் மூலமாகக் கேட்டு அறிந்து கொண்டு அதை தங்களுக்கென்று தன்னுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

2. அவர்களது உதாரணத்தைப் பின்பற்றியும் விசுவாசத்தில் ஜீவிப்பதன் மூலமாக அவர்கள் வழி நடத்துதலையும் பின்பற்றிச் செல்ல வேண்டும்.

3. அவர்களுக்கு கீழ்படிந்தும், பணிவாகவும் இருங்கள்.

   உங்களுக்காக அவர்கள் எடுத்துக் கொள்ளும் பொறுப்பை மகிழ்ச்சி ஆக்குங்கள். அவர்களுடைய அதிகாரத்திற்கு தாழ்மையுடன் ஏற்றுக் கொண்டு பாரமாக அல்ல. அவ்வாறு இருக்க வேண்டாம். இது உங்கள் சௌகரியத்திற்காக கிரியை செய்யும்.

4. அவர்களுடைய ஊழியம், குடும்பம் இவற்றிற்காகவும் அவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

5. உங்கள் தலைவர்களை புன்சிரிப்புடன் வாழ்த்துங்கள். அவ்வாறு செய்வதால் அவர்கள் அன்பு காட்டப் படுவதாகவும், வரவேற்கப்படுவதாகவும் உணருவார்கள்.

அவர்களைப் பாராட்டுதல் செய்தும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையையும் அங்கீகாரத்தையும் கொடுங்கள். (I தெச 5:12-13)

நீ எதை விரும்புகிறாயோ அதற்காக ஆயத்தப்படுத்துவாயாக

நீ விரும்புகிறது எதுவோ அதற்குத் தயாராக ஆயத்தப்படுத்துவாயாக. அது உனக்கு நேரிடுவதில்லை.

ஆயத்தம் என்பது நீ உன்னில் தானே நம்பிக்கை கொள்வதற்கும் நீ என்ன செய்கிறாய் என்பதற்கும் அஸ்திபாரமாக இருக்கிறது. வாழ்க்கையில் நேரிடும் ஒவ்வொரு காரியமும் நீ அதை எப்படி ஆயத்தம் செய்கிறாய் என்பதைச் சார்ந்திருக்கிறது. ஒரு தனி நபருக்கு இருக்கும் ஜெயத்தையும் அல்லது அவர்களது ஜீவிக்கும் தன்மையையும் எப்படி அவர்கள் ஆயத்தம் செய்து தயாராகுகிறார்கள் என்பதன் அடிப்படையில் அதைப் பற்றி முன் கூறி விடலாம். நீ இன்றைக்கு ஆயத்தம் செய்யாவிட்டால் நாளைக்கு நீ ஒரு பெரிய ஆபத்தான துன்பங்களுக்கு ஆளாகலாம்.

நாம் செய்யக்கூடிய மகத்தான செயல்பாடுகளில் ஒன்று நாம் நித்தியத்திற்கென்று ஆயத்தம் செய்யக் கூடியது மட்டுமே. நாம் இந்த மாதிரியான தீர்மானத்தை எடுத்து பரலோகத்தை நமக்கு வீடாக ஆக்கிக் கொள்வதென்றால் அது வியப்புக்குரியது. ஆனால் பின்னர் அனுதின ஜீவியத்தின் வெற்றிக்காக ஆயத்தம் செய்வதில்லை. மேலும் வரப்போகிற வருஷங்களுக்காகவும் ஆயத்தம் செய்யப் போவதில்லை.

இந்த வார்த்தையான "ஆயத்தம் செய்ய" என்பது எழுத்தளவில் "ஸ்தாபிக்க" உறுதியுடன் பொருந்த, நம்பகத்தன்மை, ஒன்றில் நிலைத்து நிற்க, உணவு பொருள் பராமரிக்க, ஆயத்தப்படுத்த, ஸ்திரப்படுத்த, நிலைத்து ஊன்றி நிற்க என்று பொருள்படும்.

நான் உங்களை உங்கள் வெற்றிக்காக ஆயத்தம் செய்து கொண்டு இருக்கிறீர்களா என்று தீர்மானிப்பதற்காக சில கேள்விகள் கேட்கலாமா?

கேள்வி #1. நீங்கள் எங்கு போக வேண்டும் என்பது அவசியமாகிறது?

உங்களுக்கென்று ஒரு இலக்கு இருக்க வேண்டும். நீங்கள் நோக்கத்துடன் அடையும்படியான ஏதாவது ஒன்று உங்களுக்கு இருக்க வேண்டும். ஜெயம் என்பது உங்கள் வாழ்க்கையின் நோக்கப் பயனை அறிந்து கொள்வதாகும். நீங்கள், ஒரு வேளை, ஒரு அடிப்படை நிலையான, திட்டமிடுதல், விருத்தி செய்தல் அல்லது என்னவென்று கண்டு கொள்ளுதல் ஆகிய ஸ்தான நிலையில் இருக்கலாம். ஆனால் நீங்கள் உங்கள் நோக்க பயனை நோக்கிச் செல்லும் பயணத்தில் கட்டாயமாகச் செல்ல வேண்டும்.

கேள்வி #2. நீங்கள் தேவனுடைய சித்தத்தைத் தேடுவீர்களா?

இப்பொழுது இது ஒரு சாமானியமான வினாவாகத் தோன்றலாம். "ஓ! ஆம். சகோதரனே, நான் தேவனுடைய சித்தத்தைத் தேடி போய் கொண்டிருக்கிறேன்". நீ தேவனுடன் இரகசியமானதோர் இடத்தில் அனுதினமும் போயிருந்து, நீ சொல்ல விரும்பியதை எங்கு (எந்த இடத்தில்) சொல்லாமல் விட்டு விட்டாய் என்பதை உன் உள்ளத்தில் தெளிவு படுத்திக் கொள்வாய். நீ ஒரு உத்தரவைப் பெறும் வரைக்கும் தேவனுடன் அந்த அறையிலே தரித்திருப்பாயாக.

கேள்வி #3. உன்னுடைய இருதயத்தில் என்ன செய்ய விரும்புகிறாய்? உன்னை சந்தோஷப் படுத்துவது எது? உனக்கு எது மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது? எது உனக்கு மன நிறைவைக் கொண்டு வருகிறது?

உன் இருதயத்தில் என்ன இருக்கிறதென்பதை ஆராய்ந்து பார். நீ நிறைவேற்றப்படுவதாக உணருகிற ஒன்றைக் குறித்து தியானம் செய்வாயாக. உன்னுடைய வரமான ஈவுகளையும் திறமைகளையும் கண்டு தெரிந்து கொள்ளும்படியாகப் பார்ப்பாயாக. அவற்றைப் பயன்படுத்துவதில் உன்னை ஒரு முகப்படுத்திக் கொள்வாயாக.

கேள்வி #4. நீ எங்கு போக வேண்டுமென்று தேவைப்படுகிறதோ அங்கு எப்படிப் போவாய்? நீ எங்கு போக வேண்டும் என்பதை எப்படி அறிவாய்? உன்னுடைய வரங்களைக் கவனித்துப் பார்த்து உனது நெருங்கிய நண்பர்களை விசாரித்துப் பார்ப்பாயாக. "நீங்கள் என்னிடத்தில் என்ன

பார்க்கிறீர்கள்?" என்று கேள். அதன் பிறகு சந்தர்ப்பங்களுக்காக கவனித்துப் பார். நான் ஒரு போதகராக இருக்கும்படி எனக்கு தோன்றவில்லை. நான் ஊழியம் செய்வதற்கான ஒரு இடத்திற்காகப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் என் இருதயத்தைப் பின்பற்றிச் சென்றேன். நீ உன் இருதயத்தைப் பின் தொடர்ந்து செல்வாயானால் தேவன் உன்னை எங்கு இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அங்கு உன்னை நடத்திச் செல்லும்.

அடுத்தபடியாக நீ எங்கு இருக்கிறாய் என்பதை பற்றி மதிப்பீடு செய்து அதன் முக்கியத்துவத்தை பரிசீலித்து சீர் தூக்கிப் பார்க்கவும். "இன்னும் எனது இலக்கு எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்று?" உன்னைத் தானே கேட்டுக் கொள்வாய். நீ இருக்கும் இடத்திலிருந்து புறப்படுவாயாக. உனக்கு என்ன செய்யத் தெரியுமோ அதையே செய்வாய். நீ எதைச் செய்ய வேண்டுமோ அதையே செய்க.

அந்த சந்தர்ப்பமே நீ கையாள வேண்டிய யுக்தி தந்திரத்தை எப்பொழுதுமே தீர்மானிக்கும். நீ எதற்குள் போகிறாய் என்பது உனக்கு கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டும். நான் போதக மேய்ப்பனாக செயல்படத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் எனக்கு, எதற்குள் நான் போகிறேன் என்பதைப் பற்றி எந்த விதமான சிந்தனையும் இல்லை. ஆனால் என்னுடைய சிறந்த திறன்பாடுகளுக்காக நான் எதையும் இலாப நஷ்டமாகக் கணக்கில் கொள்ளவில்லை.

நீ செயல்பட்டு முன்னே போக ஆயத்தமாக இருக்கிறாயா? நீ மாறுதல்கள் பெற்றுக் கொள்ள ஆயத்தமா? நீ முன்னேறிப் போக ஆயத்தமா? உன்னுடைய நோக்கம் தான் என்ன? உன்னுடைய திட்டம் யாது? அதை எப்படி அடையப் போகிறாய்? நீ போய் கொண்டிருக்கிற இடம் என்று நம்புகிறதோர் இடத்திற்கு உன்னைக் கொண்டு போய் விடுவது எதுவாக இருக்கும்?

மூன்று காரியங்கள்

1) ஆயத்தம். இந்த மகத்தான ஆயத்தமாகுதல் உனக்குள் தானே ஆரம்பமாகிறது.

2) நடைமுறை. உன்னுடைய யுக்திவாதம் யாது? அதை எவ்வாறு அடையப் போகிறாய்? உன்னுடைய செயல்பாட்டின் திட்டம் யாது?

3) மக்கள். நீ எங்கே போக வேண்டுமென்று அவசியப்படுகிறதோ அங்கு போவதற்கு மக்களுடைய உதவி தேவைப்படுகிறது. உன்னோடு கூட உயரமாகப் பறந்து செல்வதற்கு நீ சில கழுகுகளைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும்.

நீ வெற்றி அடைவதற்கோ அல்லது தோல்வியை நோக்கியோ இரண்டில் ஒன்றுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறாய். இரண்டில் ஒன்றை நோக்கித் தான். நீ ஆயத்தமாகி தயாராக இல்லாவிட்டால் நீ அடித்தளமாக உன்னுடைய பிராப்தத்தை காற்றில் பறக்க விடுகிறாய். வெற்றி என்பது அனுதினத்துக் காரியமாகும். ஒரு இலக்கை நோக்கிச் செல்லும் பொருளல்ல. நான் அந்த இடத்திற்குள் சென்று விட்டால், சென்று விடக் கூடுமானால் நான் ஜெயம் பெறுவேன் என்று நான் யோசித்துக் கொண்டதுண்டு. வெற்றி என்பது மறுநாளை என்ற நாளில் ஆரம்பித்து விடுவதில்லை. அது இன்றே தான் ஆரம்பமாகிறது.

தேவன் என்ன செய்கிறாரோ அதன் மத்தியில் நீ புகுந்து விட வேண்டும். நீ என்னதாக இருக்கிறாய் என்பது பரலோகத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. நீ செய்ய வேண்டியதெல்லாம் அதற்குள் முன்னேறிப் போவது தான். தேவன் உனக்காக எதை வைத்திருக்கிறாரோ அதற்குள் நகர்ந்து செல். இன்றைக்கு என்று அமர்ந்து விடாதே. நாளைய வெற்றிகளுக்காக இன்றே ஆயத்தமாகி தயாராவாயாக.

இன்றைய ஆயத்தம் எப்பொழுதுமே மறுநாளைக்குரிய ஜெயத்தைக் கொடுக்கும். வெற்றிகரமான ஆயத்தம் எந்த விதமான முயற்சியிலும் நீ எதை விரும்புகிறாய் என்பதை அறிந்து கொள்வதிலிருந்து ஆரம்பிக்கிறது. நீ எதை வாஞ்சிக்கிறாய்? சற்றே அமர்ந்து அதைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பாயாக. உன்னுடைய வருங்காலத்தைப் பற்றி அசட்டையாக எடுத்துக் கொள்ளாதே. நீ நாளைக்காக தேவைப்படுவதைப் பற்றி இன்றே அதற்குத் தயாராகுக. தேவனால் கொடுக்கப்பட்ட உன்னுடைய பிராப்தமான இலக்கை அடையச் சாதித்து வெற்றி பெறுவாயாக.

கர்த்தருக்காக காத்திருத்தல் - செயலூக்கத்துடன் இருப்பதற்கான திறவுகோல்

தேவனுடைய இராஜ்ஜியத்தின் எந்த ஒரு தலைவரும் தேவனுடன் அவருக்குள்ள உறவுத் தொடர்புகளின் தகுதியான தன்மையினால் மாத்திரமே கிரியைகளில் செயலூக்கமுடையவர்களாக இருக்க முடியும்.

அறிமுகம்

ஆவிக்குரிய தலைமைத்துவம் தேவன் பேரில் கொண்டுள்ள முழுவதுமான சார்பு நிலைமையில் தொடங்கி அதனுடன் முடிவடைகிறது. உண்மையாகவே ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவனுடைய ஊழியமாகிய வேலையை நன்கு செய்வதற்காக பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள்ளும் அவன் மூலமாகவும் எப்பொழுதுமே கிரியை செய்து கொண்டிருப்பது இன்றியமையாததாகிறது. நாம் எப்பொழுதும் நமது ஜீவியத்தில் தேவனுக்கு ஒரு இடத்தை அளித்து அவருக்காக ஒழுங்காகக் காத்திருப்பது அவசியமாகிறது.

அநேகமான கிறிஸ்தவர்கள் தேவனுக்காக காத்திருப்பதை நெருக்கடியானதும் துன்பமானதுமான நேரங்களுக்காக ஒதுக்கித் தள்ளி வைத்து விடுகிறார்கள். மற்றவர்கள், தேவனுக்குக்காகக் காத்திருப்பதை தவிர மற்றும் முயற்சித்து ஆனால் தேவனுக்காக காத்திருப்பதைத் தவிர மற்ற வாழ்க்கையில் நிறைவைக் காண்பதற்காக தள்ளி வைத்து விடுகின்றனர். இந்த மாதிரியான மக்கள் கிறிஸ்தவர்களாக இருக்கும்படி நோக்க மனப்பான்மையுடையவர்களாய் தங்கள் ஜீவியத்தில் காணப்படும் வெறுமையை, சரியான செயல்பாடுகளைச் செய்வதன் மூலமாகப் பூர்த்தி செய்யுமாறு முயற்சிக்கிறார்கள். ஆனால் அது அவ்வாறு செயல்படாததால் அதன் காரணமாக கர்த்தருக்குத் தாங்கள் ஒப்புக் கொடுத்தல் செய்ததை விட்டு விடும்படியாகச் சோதிக்கப்படுகிறார்கள். நாம் அவருடன் தங்கி கூட இருப்பதையே தேவன் கரிசனையோடு கருதுகிறார். பிறகு அவர் நம்முடைய திறமை அவருக்காக நாம் செய்யும் ஊழியம் இவற்றில் நம்மோடு கூட இருக்கிறார். நாம் நித்தியத்திற்கடுத்த காரியங்களில் கர்த்தரை அல்லாமல் நம்மால் ஒன்றும் செய்யக் கூடாது.

தேவனுடைய எல்லா தலைவர்களும் தேவனுக்காக ஒழுங்காகக் காத்திருந்து அவரைச் சந்திக்கிற மக்களாக இருக்க வேண்டும். இது இயேசுவைத் தங்கள் ஜீவியமெல்லாம் ஆண்டவராக ஏற்றுக் கொண்டு வைத்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கும். மேலும், சர்வ வல்லவருக்கு முன்பாக தாழ்மையாக ஜீவிக்கவும், அவரை மென்மேலும் முன்னேற்றத்துடன் அறிந்து கொள்ளும் அறிவிலும், யாருக்காக அவர்கள் தங்களுக்குள்ள எல்லாவற்றையும், அவர்கள் தங்களுக்கு இருக்கிறதும் வைத்திருக்கிறதுமானவற்றையுங்கூட யாரிடம் கடன்பட்டிருக்கிறார்களோ அவரிடம் ஒப்புவித்து அவரையே ஆராதிக்குமாறும் தாங்கள் வழிபடும் தேவனுக்கு கனவீனத்தை உண்டாக்காது பரிசுத்தமான ஜீவியம் செய்யவும், இவ்வாறு செயல்படுவதால் தமக்குத் தேவையான சமயங்களில் அவர்களை உபயோகித்துக் கொள்ளவும் தகுதியான பரிசுத்தமான பாத்திரங்களாக அவர்கள் நீடித்து நிற்கவும் துணை செய்கிறது.

தேவனுக்காகக் காத்திருப்பதன் அவசியம்

பரிசுத்த வேதாகமம் ஆனது, கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிப்பது என்பது ஒரு சுலபமானக் காரியமாக இருப்பதில்லை என்று கூறுகிறது. உண்மையில் அது அந்த ஜீவியத்தை நாம் ஆரம்பிக்கு முன்னாதாக, அதற்காக நமக்கு உண்டாகும் கிரயத்தை நிறுத்துப் பார்க்க வேண்டும். (லூக்கா 14:25-35) ஏனென்றால் சோதனைகள், சித்திரவதைகள், துன்பங்கள், கஷ்டங்கள் இவற்றின் உள்ளாக நாம் கடந்து போக வேண்டியதிருக்கும். இந்த மாதிரி ஜீவியம் செய்வதற்கான ஒரே வழி தேவனுக்குள் இருந்து நமக்கு ஜீவ சக்திகளைப் பெற்றுக் கொள்வதாகும். அவைகள் யாருக்கு தேவையோ அவர்களுக்கு எளிதில் கிடைக்கும். ஆனால் அடிக்கடி நாம் கர்த்தருக்காக காத்திருக்கும் பொழுதுதான் அதைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கர்த்தருக்காக காத்திருத்தல் என்பது ஏதோ ஒரு சமயத்தில் நடத்தப்படுதல்ல. அது நமக்கு அனுதின ஒழுங்கு முறையாக அமைந்து நமது வாழ் நாட்கால முழுவதுமே காலங்கடந்து நிற்கிறது. நமது வாழ்க்கையில் தினந்தோறும் இசைவாக இணைத்துக் கொள்ள வேண்டிய வாழ்க்கை முறையாகும். ஏனென்றால் கிறிஸ்தவர்களாக நாம் சாதாரணமான ஜீவியத்தை கட்டிக் காத்துக் கொள்ள முடியாது, நமக்கு துன்பம் நேரிடும் காலத்தில் மட்டுமல்ல. அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியம் சுறுசுறுப்பாக இயங்க வேண்டியதிருப்பதால் இதற்கு அவசியமான நேரத்தை ஒதுக்க முடியாது என்று உணருகின்றனர். ஆகவே இதை எப்பொழுதோ ஒரு தடவை செய்கிறார்கள். தலைவர்களுக்கு இந்த வாழ்க்கைப் பகுதியில் துன்பத்தைச் சந்திக்க வேண்டும். ஏனென்றால் அவர்களது ஜீவியம் வெளியரங்கமாக இருப்பதால் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியமானது விழுந்து சிதறுவதாக இருந்தாலும் தங்கள் முகத்தில் ஒரு புன் சிரிப்பை வைத்துக் கொண்டு கடந்து போகவே சில தலைவர்கள் விரும்புகிறார்கள். எந்த கிறிஸ்தவனாவது இதைச் செய்யவே கூடாது. இது நாசத்திற்கு நிச்சயமான உணவு செய்கிற முறையாகும். தேவ குமாரனாகிய இயேசுவும் தம்முடைய உலகத்து ஊழியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்காக தேவனுடன் காத்திருப்பதற்காக கால அவகாசம் எடுத்துக் கொள்ளும்படியாக அவருக்கும் வேண்டியதாய் இருந்தது. அவருக்குங்கூட இவ்வாறென்றால் அவரைப் பின்பற்றிச் செல்பவர்களாகிய நாமும் எவ்வளவுக்கு அதிகமாக அவ்வாறு செய்ய வேண்டும். இயேசுக் கிறிஸ்துவின் மூலமாய் நாமும் அவருடைய சமூகத்திற்கு வருவதற்கான வழியை ஆண்டவர் செய்திருக்கிறார். இந்த மகத்தான சலுகையான உரிமையை நாமும் எடுத்து உபயோகிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். (எபேசி 2:18; எபேசி 3:12; எபி 4:16; எபி 10:9-12; I யோவான் 3:21-22) தேவன் நம்மை அவரிடம் வந்து நமது உறவுத் தொடர்பை அவருடன் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென்று வாஞ்சிக்கிறார்.

“தேவனிடத்தில் சேருங்கள்; அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்.” (யாக்கோபு 4:8)

அநேகக் கிறிஸ்தவர்களுக்குத் தாங்கள் எப்படி ஜீவிக்க வேண்டும் என்பதை அறிவார்கள். ஆனால் அவர்கள் தங்களை தாங்களே பார்த்துக் கொள்ளும்பொழுது எல்லாம் தங்களுடன் சரியாக இல்லை என்பதைக் கண்டு பிடிக்கிறார்கள். இந்த இலட்சிய கோட்பாடுகளை நன்கு அறிவார்கள். ஆனால் அதற்கு ஏற்றாற்போல் வாழ்வதாக தோன்றுவதில்லை. நாம், நம்மை, தேவன் பார்ப்பது போல பார்க்கும்பொழுது தான் நாம் மறுபடியும் அவரிடம் நம்மைத் தத்தம் செய்து கொண்டு பிறகே நமக்கு காரியங்கள் சரியாகப் போவதாகத் தோன்றும். அவரையே நமது பிரச்சனைகளைச் சுட்டிக் காட்டும்படி அனுமதிக்க வேண்டும். நமது வாழ்க்கைக்கு ஒரு யுக்தி முறையைத் தரும்படியும், அவரது இருதயத்தையும் நமக்கு அருளிச் செய்து அவரது ஊழியத்தை நாம் தொடர்ந்து நடத்துவதற்கான வல்லமையை நமக்குள் நிரப்பி உதவும்படி அனுமதிக்க வேண்டும். இது தானாகவே நேரிடுவதில்லை. தமக்காக அமர்ந்து காத்திருப்பவர்களுக்கு மாத்திரமே அந்த வகையான போஷாக்கை கர்த்தர் தாமே சேமித்து கையிருப்பில் வைத்திருக்கிறார். (மத் 6:25-34)

நமது ஜீவியத்தின் முன்னுரிமைகள் எவை?

தங்களுடைய ஜீவியம் தேவனுடன் ஒப்புரவாகி சரியாக அமையாவிட்டால் கிறிஸ்தவர்கள் செயலூக்கத்துடன் தேவனுக்காகக் கிரியை செய்ய முடியாது. மெய்யாகவே நமது உள்ளான ஆவிக்குரிய ஜீவியமானது ஒழுங்காக இராவிட்டால் கிறிஸ்தவம் சரியானபடி கிரியை செய்வதாகக் காணப்படாது. ஆகையால் தேவனுக்காக அமர்ந்து காத்திருப்பது கிறிஸ்தவர்களானவர்களுக்கு முதலாவதான எண் ஒன்று என்ற முன்னுரிமையாகும். அநேக ஜனங்கள் தங்கள் காலத்தின் பெரும் பகுதியையும், பலத்தையும், சொத்துடைமைகள், பதவிகள், அந்தஸ்து, சாதனைகள், நண்பர்கள் அல்லது நல்லதொரு குடும்பம் ஆகியவற்றை அடைவதற்காகச் செலவழிக்கின்றனர். ஆம், அவைகள் அனைத்துக்கும் நமது காலத்தைப் பயன்படுத்துவது நியாயமாக இருந்தாலும், கிறிஸ்தவர்கள் ஆகிய நமக்கு அது நமது முன்னுரிமையாக இருக்கக் கூடாது. இயேசு அந்த மகா உன்னதமான கட்டளையாக “உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக” என்று ஆணையிட்டிருக்கிறார். இதுவும் நீ ஆண்டவரை முதன்முதலாக அறிந்திருந்தால் மட்டுமே உன்னால் இதைச் செய்யக் கூடும். நமது சுறுசுறுப்பான வாழ்க்கையில் அவரைச் சந்திப்பதற்காக இடம் தந்தால் அவர் நம்மிடம் வந்து தம்மை நமக்கு வெளிப்படுத்தி சந்திப்பதற்கு சித்தம் உள்ளவராய் இருக்கிறார். இப்படிப்பட்ட நேரங்கள்

சுலபமானதாகவோ அல்லது மலிவானதான ஒன்றோ அல்ல. இவைகள் நாம் மதித்து உயர்வாக கனத்தை அளிக்கும் நேரங்களாக இருக்க வேண்டும். உண்மையாகவே நமது ஜீவியத்தில் முன்னுரிமை பெறும் இடங்களில் அவைகளை நாம் வைத்திருக்க வேண்டும்.
கிறிஸ்தவர்கள் மாத்திரம் அவர்களுடைய கால நேர உபயோகத்தின் முன்னுரிமைகளை கர்த்தருடைய கண்ணோட்டத்தினால் அவைகளைப் பார்க்கக் கூடுமானால் ஒரு வேளை அவர்கள் மிகுந்த அதிர்ச்சியை அடையலாம். மார்த்தாள் என்பவள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக அவருக்கு ஊழியம் செய்து கொண்டு இருக்கும்பொழுது அவளுடைய சகோதரியான மரியாள் அவளுக்கு உதவி ஒன்றும் செய்வதில்லை என்று இயேசுவிடம் அவள் புகார் சொன்னபொழுது இயேசு மார்த்தாளுக்கு சொன்ன வார்த்தைகளை நினைவு கூறுங்கள். மரியாள் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்து அவர் சொல்வதை செவிகொடுத்து கேட்டுக் கொண்டிருந்ததால் அவள் நல்லதொரு பங்கைத் தெரிந்து கொண்டாள் என்று சொன்னார். (லூக்கா 10:38-42) அதிகமான கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாய் பலவீனமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் தேவனுக்காக காத்திருக்க வேண்டிய நேரத்தைக் கொடுப்பதில்லை. நாமும் நமது காலத்தை கர்த்தர் பார்ப்பது போலப் பார்க்க வேண்டும். அதை விவேகத்துடன் உபயோகித்து அவற்றை அவருடைய முன்னுரிமைகளை உபயோகப்படுத்துவதற்கு ஆக வைத்துக் கொள்ள வேண்டும். என்னவென்றாலும் நாம் கர்த்தருடைய உக்கிராணக்காரர்கள். நாம் அனைவரும் இந்த திரும்பவும் உபயோகப்படுத்த முடியாத பொருளான காலத்திற்காக அவருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இந்த நவீனகால உலகத்தில் போட்டிகளை அதிகமாக உற்சாகப்படுத்தப் படுகிறதோ, எங்கு சாதனைகளும் பணத்தை உண்டாக்க முடியுமோ அதுவே வெற்றிக்குத் தரத்தின் குறியீடாகக் கருதப்படுகிறதோ அங்கு தேவன் நமக்கு செய்யும்படியாக சொல்லும் காரியங்களை ஓரமாக தள்ளிவிடக் கூடிய வலிமையுள்ளதோர் தாக்க அழுத்தத்தை அங்கே காண்கிறோம். இவைகள் முக்கியமானதல்லாதவைகளாகக் கருதப்பட்டு நமது குடும்பம், நண்பர்கள் மேலும் உற்சாகத்துடன் வேலை செய்பவர்களுக்கு கொடுக்கப்படும். கவனத்தின் அளவிற்கு அவை நமது கவனத்தை வேண்டி பெறுவதில்லை. இவைகள் அனைத்திற்க்கும் சப்தம் என்று ஒன்றிருந்தால் அது நம்மை நோக்கி அலறக் கூடும். ஆனால் இதற்கு மாறாக தேவன் அவரிடம் நெருங்கி சேர்வதையே நாமும் தெரிந்து கொள்ளும்படியாக விரும்புகிறார்.

கிறிஸ்தவ தலைவர்கள் இந்த நாட்களில் இத்தகைய அழுத்தத் தாக்கத்திற்கு விதி விலக்கல்ல. இக்காலத்தில் அவர்கள் முன்னாட்களில் இருந்ததைவிட அதிகமான தேவைக்குள்ளாகிறார்கள். மேலும் அதிகமானவைகள் அவர்களிடமிருந்து கோரப்படுவது ஒரு போக்காக இருக்கிறது. இந்த அழுத்தத் தாக்கம் அவர்கள் மேல் வந்தும் அநேக தலைவர்களிடம் அவற்றைச் சமாளிக்க ஆவிக்குரிய பிரகாரமாய் எதை எடுத்துக் கொள்கிறது என்பது அவர்களிடம் கிடையாது. பலர், அதன் விளைவாக, பாவத்தில் விழுந்து அல்லது உள்ளம் உடைந்து போகுதல் அல்லது மற்ற சுகவீனத்தால் துன்பத்தை அடைந்தும் தங்கள் பதவிகளை இராஜிநாமா செய்தும் விடுகிறார்கள். இதன் காரணம் என்னவென்றால் அவர்கள் தேவனிடம் நெருங்கிக் கிட்டிச் சேராமல் அவர்கள் செய்ய வேண்டிய பிரகாரம் அவருடன் இணைந்து போவதில்லை. அவர்கள் தங்கள் சுயபலத்தால் கர்த்தருக்காக ஊழியம் செய்ய முயற்சிக்கிறார்கள். மேலும் அவர்கள் தங்களுடைய சொந்தமான சேமிப்பு சக்திகளைச் சார்ந்திருப்பதால் அது கிரியை செய்வதில்லை. கடினமாக வேலை செய்வதோ அல்லது வேகமாகவோ அல்லது நேரத்தைச் செலவழித்து சற்று சிறந்த நுட்பங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்பது துன்பத்திற்கு மாத்திரமே துரிதப்படுத்தும். கிறிஸ்தவத் தலைவர்கள் கர்த்தரிடம் எவ்வாறு வர வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும். அவரிடமிருந்து கற்றுக் கொண்டு அவர்களால் போதிக்கப்படும். மக்களும் அவ்வாறு செய்ய வேண்டும் என்று அவர்கள் கற்றுக் கொடுப்பது அவசியமாகிறது. ஏனென்றால் மிகுந்த செயலூக்கத்துடன் இயங்கும் ஒரு திருச்சபையை அவர்கள் விரும்பும் பொழுதுதான். அவர்கள் அப்படி விருப்பப்படாவிட்டால் என்றுமே முடிவுறாத ஒரு வரிசை அட்டவணையான விபத்துக்களில் அவர்களுடைய வாசல்களை நோக்கி ஒரு வழியை அடித்துக் கொண்டும் அல்லது அவர்களுடைய திருச்சபையை விட்டு விலகுவதையும் கண்கூடாகப் பார்க்கலாம். கிறிஸ்தவர்களாக நாம், இந்த விதமான பாதாள வீழ்ச்சிகளைத் தவிர்ப்பதற்காக கிட்டிப் போகக் கூடிய ஒருவர் உண்டானால் அதற்கென்று ஒரே ஒரு உண்மையான மூல ஊற்று ஆக இருப்பவர் அவரேதான். அந்த ஒருவர் தான் கர்த்தராகிய ஆண்டவராகிய ஒருவரே.

தேவனுடைய கட்டளை

தேவன் நம்மை நம்முடைய ஆவியினாலும் முழு மனதாலும் (வெளியே) புறம்பே கிரியை செய்யுமாறு படைத்தார். (யோவான் 7:37-39; லூக்கா 6:43-45; மத் 15:18-19) நம்முடைய இருதயமானது (அதாவது நமது ஆவிக்குள் போகும் வழிவாசல் என்று கருதப்படக் கூடுமானால்) ஒழுங்கற்ற ஒரு நிலைமையில் இருந்தால் நாம் மேல் மட்டத்தில் குழப்பத்தைத் தவிர வேறொன்றையும் எதிர்பார்க்க முடியாது. பெரும்பான்மையான கிறிஸ்தவர் இந்த மாதிரி நிலைமையை நன்றாக மூடி மறைக்க கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அதிகமாக தேவனுக்காக செயலற்றவர்களாகச் செய்து விடுகிறது. நாம் தேவனோடு சரியாக சீர் பொருந்தியவர்களாய் இருப்போமானால் மாத்திரமே கர்த்தர் தமது பரிசுத்த ஆவியானாவரால் மற்ற ஜனங்களின் ஜீவியத்தைத் தொடும்படியாக நம்மை உபயோகப்படுத்துமாறு ஆரம்பிக்கக் கூடும். கர்த்தருக்காக காத்திருப்பதால் நமது இருதயமானது தேவனோடு சீர்பொருந்தி பரிசுத்த ஆவியானவர் நமது குற்றத்தை உணர்த்தும் எந்தக் காரியத்திற்கும் பதில் கிரியை செய்கிறவர்களாய் இருப்போம். ஒரு தடவை நாம் மனந்திரும்பி விட்டால் நாம் இயேசுவை நமது ஜீவியமெல்லாவற்றிற்கும் ஆண்டவராக ஏற்றுக் கொண்டு விடலாம். தேவ சமாதானம் நம் இருதயங்களை ஆளுகை செய்யும்படி அனுமதித்து நமது இருதயங்களை சீர் பொருந்தினதாய் வைத்துக் கொள்ளலாம். (பிலிப்பியர் 4:7; கொலோ 3:15) அதாவது நமது மனசாட்சிக்குக் கீழ்படிந்தும் நமது ஜீவியத்தை ஒழுங்கு முறைப்படுத்தியும் நாம் கர்த்தருக்காகத் காத்திருப்பதற்கு ஒவ்வொரு நாளும் நேரத்தைச் செலவழித்தோமானால் நாம் பங்கெடுத்துக் கொள்ளும்படியாக நம்மை அனுமதிக்கும் காரியங்களை நாம் வடிகட்டுவதாக நிச்சயப்படுத்திக் கொண்டும் அதைச் செய்வதால் தேவன் நாம் செய்யும் படி விரும்புவதை நிறைவேற்றுவோம். (சங் 51:10-12; சங் 139:23-24)

“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள். அதினிடத்தின்று ஜீவ ஊற்றுப் புறப்படும்.” (நீதி 4:23)

கிறிஸ்தவத் தலைவர்களாகிய நாம் தேவனை நன்கு அறிந்திருக்க வேண்டும். ஏனென்றால் அவருக்குள் உறுதியாக நாம் நிலைத்து நிற்பதற்கு வேறொன்றும் தேவையில்லை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நம்மைச் சுற்றி என்ன நேரிட்டாலும் சரி, நாம் கர்த்தருக்குள் ஒன்றித்துப் போகக் கூடியவர்களாய் இருக்க வேண்டும். நம்மை எது ஒன்றும் அசைக்காமலும் நாம் தோல்லியடையவோ, அடையும்படி விட்டு விடவோ காரணமாகக் கூடாது. நாம் இதைச் செய்ய வேண்டுமானால் நம்மையே தேவனுக்கு காணிக்கையாக ஒப்புக் கொடுத்து நாம் கிறிஸ்துவின் சாயலாக ஆகும்படி நம்மை மாற்றி அமைக்குமாறு அவரை அனுமதிக்க வேண்டும். (ரோமர் 12:1-2; எபேசி 4:22-24; II கொரி 3:18; பிலிப் 2:12-13) நமக்கு ஆண்டவராக காட்டக் கூடியவராகவும் நம்மை அவருடைய வழிகளில் நடத்தக் கூடியவராகவும் பரிசுத்த ஆவியானவர் இருப்பதால் இந்த பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். (I கொரி 2:10-16) அநேகக் கிறிஸ்தவர்களிடையே இந்த நடைமுறையானது எல்லாவற்றிற்கும் பதிலாக கை கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாவது அவர்கள் தங்கள் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியையும் தேவனிடம் ஒப்புக் கொடுப்பதில்லை. அதனால் இந்த பகுதிகளின் மூலமாக அவர் கிரியை செய்ய முடியாது. இந்தக் காரியங்கள் இத்தகைய மனிதர்களின் ஜீவியத்தை குழப்பம் அடையச் செய்வதால் பரிசுத்த ஆவியானவரால் தமது வல்லமையில் தடை செய்யப்பட்டு அவர்கள் மூலமாகப் பொங்கிப் பெருகி ஓட முடியாமல் ஆகி விடுகிறது. இந்த காரியமானது அப்படிப்பட்டதோர் பெரிய அளவுக்கு நேரிடுவதால் ஆண்டவர் தாமே அவர்களை உபயோகிக்கக் கூடாதது போல் தோன்றுகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் ஜீவ தண்ணீர் நமக்குள் இருந்து பெருகி பிரவாகித்து ஓடும் படியாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். இது நமக்கு ஒரு சாதாரணமான அனுபவமாக இருக்காவிட்டால் ஏதோ ஒன்று நமக்குள் தவறாக இருக்கிறது என்று அர்த்தமாகும்.



கர்த்தருக்காகக் காத்திருத்தல் என்பது விருப்பத் தேர்வு அல்ல. அது ஆவிக்குரிய பிரகாரமான மனதுள்ளவர்களுக்கு மட்டும் ஆளுகைப் பகுதி அல்ல. மெய்யாக அது ஒவ்வொரு விசுவாசியின் ஜீவியத்திலும் அத்தியாவசியமான பகுதி ஆகும். தேவனுக்காகத் தனிமையிலும் மௌனத்திலும் காத்திருப்பது சோம்பேறித்தனமான ஏதோ ஒன்றை கர்த்தருக்கு கனி கொடுப்பதற்காக செய்யும் மற்றொன்று அல்ல. மேலும் அது பலனற்று போனதாகாது. ஆனால் அதுவேதான் நமது ஜீவியத்தைக் கட்டி எழுப்பி தேவனுக்காக நமது சேவையைக் கொடுக்கும் அஸ்திபாரம் ஆகும்.

தேவனுடைய தலைவர்களுங்கூட தங்களை பலவீனமுள்ளவர்களாக அடையாளங் கண்டு கொண்டு அவர்களுடைய ஜீவிய ஓட்டத்திற்கே தேவனைச் சார்ந்திருப்பவர்களாகவும் அவர்களுடைய ஜீவன் நிலவரமும் அவருக்கு ஊழியம் செய்யும் திறமையையும் தவிர நாம் தேவனைச் சந்தித்து நமது ஜீவியத்தில் அவருக்கு வேண்டிய இடத்தைத் தந்து விட்டால் அவர் நம்மீது நமக்குத் தேவையான தமது பலமெல்லாவற்றையும் வல்லமையையும்கூட ஊற்றி விடுவார். மேலும் நமது எல்லா உள்நோக்கு பார்வையும் அவசியமான மலைகளையும் பெயர்க்கும் விசுவாசத்தையும் சிருஷ்டித்து நம்மை தேவன் பார்க்கிற பிரகாரம் நம்மை நாம் கண்டு கொண்டால் நமது முன்னுரிமைகள் நமக்கு வழங்கப்படும் பொழுது தேவனுக்காகவும், பிறருக்காகவும் ஓர் அன்பு நமக்குள் வளர ஆரம்பிக்கும்.

நாம் தேவனை நம்மீது கட்டுப்பாட்டை வைத்திருக்கும்படியாக அனுமதிப்பது தேவையாகிறது.

துரதிர்ஷ்டவசமாக அநேக கிறிஸ்தவர்களுடைய ஜீவியத்தில் பரிசுத்த ஆவியானவர் தனது நேரம் எல்லாவற்றையும் அவர்களை தேவனுடைய ஊழியத்தில் பலப்படுத்துவதற்குப் பதிலாக பிரித்தெடுப்பதற்கு செலவழிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்த ஜனங்கள் தங்களைப் பற்றி கர்த்தருக்காக போதுமானபடி ஆவியுள்ளவர்களாக இல்லாமல் இருப்பதாக அடிக்கடி நினைத்துக் கொள்கிறார்கள். அதனால் அவர்கள் தேவனுடன் சீர்பொருந்துவதற்காக எந்த விதமான முயற்சியும் எடுத்துக் கொள்வதில்லை. அவர்கள் சாதாரணமாகவே பிரச்சனைகளைச் சந்தித்து மற்றவர்கள் எல்லா வேலையையும் செய்யும்படி அனுமதிக்கிறார்கள். இது தேவனுடைய வழி அல்ல. தேவனை சிம்மாசனத்தில் அமர்த்தி கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஒரு ஜீவியத்திற்குப் பதிலாக அவர்கள் வாழும் ஜீவியமானது ஒரு பகுதி தேவனாலும் ஒரு பகுதி தங்களாலும் மற்றொரு பகுதி சத்துருவினாலும் கட்டுப்படுத்தப் படுகிறது. இது கார்க்கை போலவோ அல்லது மரக்கட்டை அடைப்பான் போலவோ அந்த மக்களுடைய ஜீவியத்தை தேவனுக்காக செயலூக்க மற்றதாகச் செய்கிறது.

இந்த வகையான மனிதர்கள் தேவனுக்கு ஊழியம் செய்யும்படி பிரதிக்கினை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் வழக்கமாக வெகு விரைவிலே தேவனுடைய தராதரத்திற்கும் எதிர்பார்ப்புகளுக்கும் சமமாகப் பொருந்தத்தக்கதாய் தாங்கள் எதை எடுத்துக் கொள்ளவோ அல்லது தோல்வி அடையவோ தங்களிடம் வைத்திராமல் அவை எதிர்பார்ப்புகளுக்கும் தராதரத்திற்கும் சமமான பொருத்தமில்லாமல் தேவன் அவர்களுக்காக வைத்திருப்பதையும் அல்லது அவர்கள் தங்களுக்காக வைத்திருப்பதையும் கூட கண்டுபிடித்துக் கொள்கிறார்கள். அதனால் அவர்கள் சக்தியான ஆவியை இழந்து அதை விட்டு விடுகிறார்கள். எந்த அளவான ஊழியமும், பிரசங்கித்தலும், வேதாகமப் படிப்பும், புத்தகம் வாசித்தலும் இந்த ஜனங்களைப் பிரித்தெடுத்து அவர்களை தனிப்பட்ட முறையில் தேவனைச் சந்திக்கும்படியாகச் செய்து அவர்களுடைய ஜீவியத்தை தேவனுடன் சீர் பொருந்தும்படியாகச் செய்ய வேண்டும். மேலும் அவர்களுடைய ஆழமான தேவைகளைச் சந்திக்கும்படி தேவனை அனுமதிக்க வேண்டும். அவர்கள் ஒரு சமயம் சீர் பொருந்திவிட்டால் அவருக்காக செயலூக்கத்துடன் ஊழியம் செய்ய முடியும்.

தேவனுடைய தலைவர்கள் ஒவ்வொருவரும் கர்த்தர் அவர்களுடன் பேசும்பொழுது அவருக்குக் கீழ்படிய வேண்டும். சில காலங்களிலுங்கூட அவர்கள் உணர்ந்து புரிந்து கொள்வதற்கு விரோதமானதாக இருந்தாலும் கீழ்படிந்தே ஆக வேண்டும். தலைவர்கள் இந்த மாதிரியான பகுதிகளில் முட்டாள்களாக இருக்கக் கூடாது. அந்தத் தலைவர்கள் தங்களுடன் பேசுவது தேவன் தாம் பேசுகிறார் என்று அறிந்து கொள்ளும்பொழுது தேவனுக்கு சொல் தவறாமல் கீழ்படிய வேண்டும். சில வேளைகளில் தேவனுடன் ஒரே ஒரு வார்த்தை மட்டில் காத்திருப்பது சரியாக இருக்கும். அதைப் பற்றி வெளியில் போய் தங்களுக்கு முன் குறுக்கிடும் காது கொடுத்து கேட்கும் ஒவ்வொருவருக்கும் முன்பாக உரத்த சத்தமாய் கூவுவது முறையாகாது. மற்ற சமயங்களில் தைரியமாக நேருக்கு நேராய் ஒரே வார்த்தையில் பேசுவது சரியாக இருக்கும். (உம்) ஊழிய சந்தர்ப்பத்தில் தேவன் தாமே விசுவாசத்துடன் கேட்பவர் எல்லாருக்கும் ஞானத்தைக் கொடுப்பேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். (யாக்கோபு 1:5-8)

தேவனுடன் கொண்டுள்ள உறவுத் தொடர்புக்கு உள்ளிருந்து அவர்கள் தங்கள் ஊழியத்தில் வளர்ச்சி அடைகிறார்கள். எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் நாம் எங்கே எதற்காக இருக்கிறோம், நாம் என்ன அறிந்திருக்க வேண்டும் என்பதை தேவன் அறிகிறார். தலைவர்கள் ஆகப்பட்டவர்கள், தேவன் தாமே அவருடைய சத்தியங்களையும் சித்தத்தையும் வெளிப்படுத்திக் கொள்ளும்படியாக தேவைப்படுகிற சமயங்களில் அவ்வாறு செய்யுமாறு தங்கள் ஜீவியத்தில் தேவனுக்கு இடம் கொடுக்க வேண்டும். தம்மிடம் நம்மை வருமாறு தேவன் மெல்லிய சத்தத்தில் நம்முடன் பேசுவார். ஆனால் நம்மை அவர் வற்புறுத்துவதில்லை. நாமும் ஒரு விருப்ப தயாரான இருதயத்தோடு அவருக்கு பதில் தந்து நம்மை அவர் சந்திக்குமாறு தயாராக இடங்கொடுத்து வைக்க வேண்டும். தேவன் நம்முடன் பேசும்போதெல்லாம் அவருக்கு எவ்வாறு பதில் சொல்வது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். எந்த நேரத்திலும் அவரைக் கவனித்துக் கேட்பதற்காக சற்று அப்பால் போய் தரித்திருக்க வேண்டும். கர்த்தர் தமது தலைவர்களை தம்மீதும் தமது வல்லமைக்காகவும் எப்பொழுதும் சார்ந்திருப்பதையே விரும்புகிறார். நமது பலத்தின் மீதோ அல்லது திறமையின் மீதோ சுத்தமாக சார்ந்திருப்பதை விரும்புவதில்லை. ஒரு தலைவன் இவ்விதமாக தேவனுடன் நடப்பதை நடைமுறையில் பின்பற்றுவானானால் அவனுக்கு அதிகமாக வீணாகும் நேரத்தைச் சிக்கனப்படுத்த உதவும்.

ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது

“மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறவது போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன் மேல் ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது. நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்? உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறபடியால் இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று. முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே கூட நடந்து, கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய் வருவேனே. இவைகளை நான் நினைக்கும் போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது. என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு. அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரை துதிப்பேன். என் தேவனே என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது. ஆகையால் யோர்தான்

தேசத்திலும், எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன். உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது. உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என் மேல் புரண்டு போகிறது. ஆகிலும் கர்த்தர் பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார். இராக் காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார். இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயிலிருக்கிறது. என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண்ணப்பஞ் செய்கிறேன். நான் என் கன்மலையாகிய தேவனை நோக்கி, ஏன் என்னை மறந்தீர். சத்துருவினால் ஒடுக்கப்பட்டு, நான் ஏன் துக்கத்தோடே திரிய வேண்டும் என்று சொல்லுகிறேன். உன் தேவன் எங்கே என்று என் சத்துருக்கள் நாள்தோறும் என்னோடே சொல்லி என்னை நிந்திப்பது என் எலும்புகளை உருவக் குத்துகிறது போல் இருக்கிறது. என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய், ஏன் எனக்குள் தியங்குகிறாய், தேவனை நோக்கிக் காத்திரு. என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன். (சங் 42:1-11)

இந்த சங்கீதம் ஒரு மனிதன் தேவனைச் சந்திக்கும்படி அவனுடைய இக்கட்டான நிலைமையை வெளிப்படுத்துகிறது. அவன் தேவனுடன் கொண்டுள்ள ஆவிக்குரிய ஆழத்தின் வெளிப்படையாக உண்மையை கண்டுபிடித்துக் கொண்டான். அதனால் மீண்டும் புதிதாக ஒரு முறை தேவனைச் சந்திக்கும் படியாக விழைகிறான். கிறிஸ்தவர்களாகிய நாமும் நமது இருதயத்தின் ஆளுமையான ஆழங்களுக்குள்ளும், தேவனுடைய இருதயத்தின் ஆழங்களுக்குள்ளும் எப்படி போய் சேர்வது என்பதைக் கற்றுக் கொள்வது தேவையாய் இருக்கிறது. இதைத் தான் வசனம் 7ல் சங்கீதக்காரன் "ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது" என்று எழுதுகிறபோது அதை விவரிக்க முயற்சிக்கிறான். இது ஒரு வேதாகமப் படிப்பின் போதோ அல்லது ஜெபிக்கும்போதோ தேவனுக்காகக் காத்திருத்தல் என்பதை ஒரு பாரம்பரிய வழக்கில் பேசுவதல்ல. அது இதை விட ஆழமானதோர் கருத்தைக் கொண்டது. அதுவே உன்னுடைய இருதயம் ஆண்டவருடைய இருதயத்தைத் தொடுவதாகும். அது தேவனைப் பற்றி நேரடியானதொரு அறிவைப் பெறுவதாகும். அந்த செயல்பாடானது நாம் தேவனுடைய சிம்மாசனத்திற்கு முன்பாக நிற்பது போலவும் எல்லாவற்றிற்கும் மேலான சர்வ வல்லவரான கர்த்தரை நேருக்கு நேராகச் சந்திப்பது போலாகும்.

கிறிஸ்தவத் தலைவர்கள் தாங்கள் தங்களுடைய ஊழியத்திலிருந்தே தூண்டுதலைப் பெற்றுக் கொள்கிறோம் என்கிற மகா பெரிய அபாயம் இன்றைக்கு அந்தத் தலைவர்களிடம் உண்டு. நாம் தத்துவ போதனைகளையும், கோட்பாடுகளையும், சத்தியத்தையும் குண சித்திரமான அனுபவங்களையும் ஆகர்ஷித்துக் கொள்கிறோம். ஆனால் தேவனுடைய சத்தியமான ஆளுமையின் ஆழத்திற்குள் செல்லாமலே அவ்வாறு செய்து விடுகிறோம். விசுவாசத்தில் ஏதோ ஒன்றிற்காக நிலை நிற்பதோ அல்லது துன்பமான நேரங்களில் ஊழியம் செய்வதோ அநேகமான தலைவர்களுக்கு கிரியா ஊக்கியாக இருக்கும். ஆனால் நாம் இந்த புறத் தூண்டுதல்களை தேவனைச் சந்திப்பதற்குப் பதிலாக நமது ஊழியத்திற்கு அஸ்திபாரமாக எடுத்துக் கொள்வது மிகவும் பயரங்கமான ஆபத்தாகும். நாம் இந்தக் காரியங்களுக்கு இடையே உள்ள வித்தியாசங்களை அறிந்து கொள்வதவசியமாகும். அநேகக் கிறிஸ்தவர்களுக்கு தேவனைப் பற்றிய நேரடியான அறிவு மிகக் குறைவாகும். அவரே நமது பலத்திற்கு மூல ஊற்றாவார். ஆனால் அவர் நமது வெளியே புற உலகத்து காரியங்களான தேவைகளோ ஊழியத்திலிருந்தும் மனிதரிடத்தில் இருந்து வரும் சவால்களாகவோ இருப்பதில்லை. அந்த புற உலகத்து தூண்டுதல்கள் நியாயமானதாக இருக்கலாம். ஆனால் நாம் இவற்றையும் கடந்து அப்பால் மேற்கொண்டு செல்வது அவசியமாகிறது. நாம் இதைச் செய்யாவிட்டால் காரியங்கள் தவறாகப் போகும்பொழுதோ அல்லது நமது ஊழியத்தின் செயல்பாடுகள் வறட்சியாய் போனாலோ நாம் போராடுகிறவர்களாக நம்மைக் கண்டு கொள்வோம். வேதாகமத்தின் வசனங்கள் "ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது" என்பதைப் பற்றி பேசும் பொழுது. அது அனுபவ ரீதியாக எதை விளக்க அர்த்தமாகச் சொல்கிறதென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் புரிந்து கொள்ள வேண்டிய தேவனை அறிந்து கொள்வதிலும் அவருக்காகக் காத்திருப்பதிலும் ஓர் ஆழம் இருக்கிறதென்பதை நாம் விளங்கிக் கொள்வது தேவையாகிறது. ஆகவே நாம் இதைச் செய்யக் கூடிய ஒரே வழி பரிசுத்த ஆவியினால் மாத்திரம் தான். (I கொரி 2:10-16) ஆண்டவர் மாத்திரமே நம்மை நமது ஆவியின் ஆழங்களில் போய் சேர்வதற்கும், ஆண்டவரின் ஆழத்தைத் தொட்டுப் பார்க்கவும் நம்மை திறமையுள்ளவர்களாகச் செய்யக் கூடும்.

கர்த்தருக்காகக் காத்திருத்தல் என்பது ஆழமான பூமிக்கடியிலுள்ள கெபிகளில் கீழே போகிற ஜனங்களைப் போன்றதாகும். இந்த ஜனங்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை உண்மையாகவே அறிந்தவர்களாய் மிகவும் எந்த மனிதனும் இதற்கு முன் சென்றிராத ஆழங்களில் பாதுகாப்புடன் நேராக எப்படிப் போவது என்பதைத் தெரிந்தவர்கள்.

நம்மில் அநேகர் விசுவாசத்திற்காக ஒரு இயந்திரமான அணுகு முறையைப் பின்பற்றுவார்கள். நாம் யாரோ ஒருவருடைய புத்தகத்தைப் படிக்கிறோம். யாரோ ஒருவருடைய கோட்பாடுகளைப் பெறுகிறோம். இந்தக் காரியங்களை நமது ஜீவியத்தில் நிகழ்ச்சி நிரலாக்குகிறோம். இதுவே தான் நமது நம்பிக்கை. கிறிஸ்தவம் என்பது இதை விட ஆழமானதாக இருக்க வேண்டும். வேதாகமத்து இறையியல், தத்துவங்கள் நடைமுறையும் யுக்தி தந்திரமான காரியங்கள் முக்கியமானதாகவும் கவர்ச்சியாக இருந்தாலும் அவைகளே முடிவாக ஆண்டவருக்குள் நமது விசுவாசத்தின் முடிவானதோர் அடிப்படையாக இருக்கக் கூடாது. அதில் ஆழமானதோர் தெய்வீக உண்மையான மெய்ப்பாடு இருக்க வேண்டும். அதாவது சொற்களால் பொருள் விளக்கம் கூற முடியாத ஏதோ ஒரு மெய்பொருள் வஸ்துவாக இருக்க வேண்டும். சங்கீதக்காரன் இங்கே அதை மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறவது போல தேடிக் கொண்டே இருந்தான். இங்கே தேவனைப் பற்றும் ஆத்துமா- தேடுதல் ஒன்று இருந்தது.

அங்கே திறந்ததுமான தேவனை நோக்கும் இருதயமும் நமது ஆவியில் தேவனைப் பற்றியதோர் விழிப்புணர்வும், உண்மையாகவே அந்த ஒன்றை முடிவாக மற்றவர்களுக்கு உன்னால் போதிக்கக் கூடாத ஒன்றாகிவிடும். எல்லாம் சொல்லி செய்து முடித்த பிறகு நித்தியத்திற்குள்ளாக என்றும் நிலைத்திருப்பது தேவனுடைய மெய்ம்மை மாத்திரமே. நமது அனுபவம், ஊழியம், தரிசனம் தத்துவங்கள் எல்லாம் அழிந்து போகும். தேவனே என்றென்றும் நீடித்து நிலைத்து நிற்பவர். இங்கே தான் கண்ணால் காணமுடியாத உண்மைகள் தான் காணப்படுகிறவைகளை விட மிக முக்கியமானதும் வல்லமையும் உள்ளவை ஆகும். தேவனைப் பற்றி அறிவுணர்வு மிகவும் உண்மையானதோர் காரியமாகும். அவைகள் உடனடியாகத் தொடக்கூடியவைகளாகவோ அல்லது நடைமுறையாக எப்போதுமே இல்லாவிட்டாலும் அவை உண்மையானவையே. நமது ஜெபங்களைச் சொல்வதோ, மௌனமாக உட்கார்ந்திருப்பதோ காரியங்களை எழுதுவதோ தியானம் செய்வதோ இவையெல்லாம் மிகவும் ஆழத்திலிருந்து ஏதோ ஒன்று வெளிப்படுத்தப்படுவதன் அவசியமாகிறது. ஆகவே தேவனுக்காகக் காத்திருப்பதன் ஒரு பகுதியானது நாம் சரீரப் பிரகாரமாக தனித்து ஒதுங்கி காத்திருப்பதாகும். ஆனால் நாம் வெளிப்படையாக செய்யும் காரியங்களில் காத்திருத்தல் என்பது எல்லாவற்றையும் விட ஆழமானது. இந்த விதமான தேவனைப் பற்றிய மெய்யுணர்வு மனிதனுடைய ஆவியோடு பேசுந் தொடர்புடையது. அதுவும் தேவன் தாமே அதை நமக்கு வெளிப்படுத்தி நம் இருதயத்தை இறுகப் பிடிக்கும் பொழுதுதான்.

தேவனுக்காகக் காத்திருக்கும் இடம்

வேதாகமம் தேவனைப் பற்றி அறிகிற அறிவைப் பற்றி பேசுகிறது. இது தேவனைப் பற்றி அறிவதற்காக அல்ல அல்லது விசுவாசத்தின் புற அழைப்பு பற்றியதுமல்ல. அது தேவனைப் பற்றி மட்டும் அறிகிற அறிவாகும். என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. (யோபு 42:5)

வேதாகமம் சொல்கிறது, "ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது" (யாத் 33:20) ஆனால் ஆங்கு வேதாகமத்து சாட்சிகளால் ஆன வல்லமையான நூல் ஒன்று ஓடுகிறது. அதாவது கர்த்தரை முகமுகமாய் தரிசித்து அதனால் அதன் விளைவாக நாடக பாணியில் தங்கள் ஜீவியத்தை மாற்றிய சாட்சிகள் உண்டு. இந்த இரண்டு சொற்கூற்றுகளும் ஒன்றையொன்று முரண்பாடாக இருப்பதில்லை. ஏனென்றால் முன்னது தேவனை நமது மாம்சீகமான கண்களால் பார்த்தாகப் பேசுகிறது. எந்த மனிதனும் இந்த மாதிரியான வழியில் தேவனை நோக்கிப் பார்த்து விட்டு ஜீவிக்க முடியாது. மோசேயுங்கூட தேவனுடைய பின்புறத்தை மாத்திரமே பார்க்க முடிந்தது. ஏனென்றால் இந்த மாம்சக் கண்களால் அவர் முகத்தை நோக்கிப் பார்ப்பது அவனுடைய முடிவாக இருந்திருக்கக் கூடும். ஆனால் நாம் நமது ஆவிக்குரிய கண்களால் தேவனைப் பார்க்கக் கூடும். ஏசாயா, எசேக்கியேல், யோவான் என்று பெயர் சொல்லக் கூடிய மிகச் சிலரே இந்த விதமான அனுபவத்தைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் "ஆவிக்குள்ளாக" இருந்தனர். அவர்கள் தேவனைப்

பார்த்தனர். அதற்குப் பிறகு அவர்கள் அவர்களாகவே இருக்கவில்லை. அவர்களுக்கு ஒரு விதமான உணர்வு இருந்தது அல்லது ஜீவனுள்ள தேவனைப் பற்றிய புரிந்து கொள்ளுதலானது அது அவர்களை பிற்காலத்தில் எப்படி இருந்தார்களோ அவ்வாறே மாற்றியது. மனித சமுதாயத்தின் மீது ஓர் தாக்கத்தை உண்டாக்கி அதனால் அதை என்றும் மாற்ற முடியாதோர் வழியில் ஏற்படுத்தி தேவன் தாமே அவர்கள் முழு ஜீவியத்தின் நபராக ஆனார். இதைப் பற்றி சிறிதாவது நாமே நாம் இருக்கிறபடியாக அவருக்கு ஒப்புக் கொடுத்து அவரைச் சந்திக்கும்படியாக நமக்குள்ளே அவருக்குத் தங்க இடம் கொடுக்கும் பொழுது அவ்வாறு செய்ய வேண்டும். கிறிஸ்தவத்தில் அநேக பகுதிகளில் வழக்கமாக இதைக் காண முடியாது ஆகிவிடுகிறது. இதற்கு பதிலாக இரண்டாம் தரமானவற்றிலிருந்து ஒரு சுவிசேஷத்தை உண்டாக்கி இருக்கிறார்கள். வயது வந்தோர் ஞானஸ்நானம், சுதந்திரமாகப் பிரசங்கித்தல் குணச் சித்திரமான ஆராதனை ஆகிய எல்லாம் முக்கியமானவையே. ஆனால் அவைகள் மத்திய ஸ்தானத்தை வகிக்கும் காரியங்களாக ஒரு போதும் இருக்கக் கூடாது. தேவனைப் பற்றிய இந்த விதமான அறிவு தான் கணக்கில் வரக்கூடியது. அது நம்மை பலமுள்ளவர்களாக்கியும் அசைக்க முடியாத படியும் செய்கிறது. சித்திரவதையினாலோ, ஏமாற்றத்தினாலோ கடினமானதோர் நிலைமையினாலோ அதை அழித்து விட முடியாது. இதற்கு மாறாக கிறிஸ்தவத்தின் வெளிப் பகட்டான அலங்காரமான கண்ணிகளைப் பெற்றுக் கொண்டு விழுந்து போகிற கிறிஸ்தவர்களும் அநேகர் இருக்கின்றனர். ஒரு வகையான கருத்தில் தங்கள் விசுவாசத்தை வெளி உலக ஆடம்பரங்களோடு தேவனுக்குப் பதிலாகத் தங்கள் விசுவாசத்தை திருமணம் செய்து விடுகிறார்கள்.

“தேவனே, நீரே என்னுடைய தேவன். அதிகாலமே உம்மைத் தேடுகிறேன். வறண்டதும், விடாய்த்தது தண்ணீரற்றுதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது. என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்க்க ஆசையாயிருந்து உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன். ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது. என் உதடுகள் உம்மைத் துதிக்கும். என் ஜீவனுள்ள மட்டும் நான் உம்மைத் துதித்து உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன். நிணத்தையும் கொழுப்பையும் உண்டது போல என் ஆத்துமா திருப்தியாகும். என் வாய் ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும். என் படுக்கையின் மேல் நான் உம்மை நினைக்கும் போது இராச் சாமங்களில் உம்மை தியானிக்கிறேன். நீர் எனக்குத் துணையாயிருந்ததினால் உமது செட்டைகளின் நிழலிலே களி கூறுகிறேன். என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கிறது. உமது வலது கரம் என்னைத் தாங்குகிறது.” (சங் 63:1-8) நாமும், தாவீது இராஜாவைப் போலவே நமது உலகத்து உடைமைகள், பதவி ஆகியவற்றை இழந்து போகும்படி ஒப்புக் கொடுக்கலாம் என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஆனால் நாம் தேவனுடன் ஓர் அந்நியோந்நியமான உறவுத் தொடர்பைக் கொண்டிருக்காமல் நம்மால் ஜீவிக்க முடியாது. அது எவ்வளவு மோசமானதாகப் போனாலும் தாவீது தேவனோடு சரியான உறவுத் தொடர்பை வைத்துக் கொள்ளுவதுதான் தன்னுடைய முன்னுரிமை என்று அறிந்திருந்தான். தாவீதும் நம்மைப் போலவே தேவனுடன் அவனுடைய தொடர்பானது தடம்புரண்ட பொழுது அவன் உண்மையான இக்கட்டுக்குள் ஆளானான்.

காத்திருத்தல் என்ற நடைமுறை

தேவனுக்காகக் காத்திருத்தல் என்பதை ஒரு அமானுஷ்யமானதும் கனவு போன்றதுமான காரியமாக இருக்கக் கூடாது. வேதாகமத்தில் தேவன் ஆகிய கர்த்தர் ஒரு ஜீவனான சுறுசுறுப்புடனும், வல்லமையும், சத்தியமும், செயல்பாடும் உள்ள சக்தி மிகுந்த ஆளுடையவராகப் படம் பிடித்துக் காட்டப்படுகிறார். அவரைச் சந்தித்தல் ஆவது நமது ஜீவியத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அது நமக்கு ஒரு வெளிப்பாடாகவும் அது நம்மை, ஆண்டவரையும் அவரது வழிகளைப் பற்றியும் விழிப்புள்ளவர்களாகவும் செய்து, மேலும் நாம் அவரைப் பற்றி விளங்கிக் கொள்வதிலும், நடைமுறை ஞானத்திலும் நம்மை வளரும்படிச் செய்வதாகவும் இருக்க வேண்டும். நமது இருதயங்களையும் மாறுதல் அடையச் செய்ய வேண்டும். நாம் ஒன்றிரண்டு புத்தகங்களைப் படிப்பதால் அது வேதாகமம் ஆக இருந்தாலுங்கூட இதை நாம் பெற்றுக் கொள்ள முடியாது. அநேக மக்கள் நன்றாகப் படித்தும், ஜீவித்தும் வேதாகமத்தை ஆராதிக்கவும் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் தேவனைப் பற்றி ஒன்றுமே அறிந்திருப்பதில்லை.

தேவனுக்காகக் காத்திருத்தல் என்பது இரு துருவமானதோர் அனுபவத்தில் இருந்து வளர்கிறது. ஆனாலும் தேவனுடைய உள்ளத்தில் இவை ஒரு இணைப்பைக் கண்டு பிடிக்கின்றன. ஒரு துருவமானது தேவன் தம்மை நமக்கு அதீதமான உண்மை உள்ளவராக ஆக்கிக் கொண்டு அவரைச் சந்திக்கும்படியான ஓர் வாஞ்சையானது நம்மை விட்டு, விட்டு, நீங்கிப் போகாது. (சங் 42:1) மற்றொரு துருவமானது நாம் தேவனை ஆழமானதோர் ஜீவியத்தை மாற்றி அமைக்கும் வழியில் நாம் அதிகக் குழப்பமான நிலையில் தேவனைச் சந்திக்கும்படியாக வாஞ்சிப்பது ஆகும்.

நீ உண்மையாகவே தேவன் என்ன கிரியையை உன் ஜீவியத்தில் செய்கிறார் என்பதை நீ புரிந்து கொண்டதுண்டா? அங்கே அவ்வாறு புரிந்து கொள்ளும் சில கிறிஸ்தவர்கள் இருக்கவே இருக்கிறார்கள். உதாரணமாக நம்மில் அநேகர் எப்பொழுதும் துன்பமும் குழப்பமும் நேரிடும்பொழுது அதைத் தவிர்க்கவே விரும்புகிறோம். மேலும் தேவன் அதைக் கடினமாக நம்மேல் வருவிக்க முயற்சிக்கும் பொழுது அவ்வாறு செய்கிறோம். சில சமயங்கள் தேவன் செய்யும்படியாக முயற்சிக்கும் பொழுது, சாத்தானை குறை கூறுகிறோம். தேவன் அதன் மேல் கட்டுப்பாடு உடையவராய் இருக்கிறார் என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. நாம் தேவனை நோக்கி என்ன நேரிடுகிறது என்பதை விசாரிக்க வேண்டும். காரியங்களை அப்படித் தான் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. நாம் கர்த்தரை நெருங்குவதற்கு ஓகோவென்ற அதீதமான உணர்வில் நிற்க வேண்டியதாகும். மேலும் நமக்குத் தேவைகளின் குறிப்புகளை இதை அடையுமாறு அடிக்கடி பயன்படுத்துகிறார். விசுவாசத்தைப் பற்றி மிகுதியாக அறிந்தவர்கள் இருப்பார்களானால் அவர்கள் மகா துன்பத்தில் உருவ நடந்தும் கடந்தும் தேவனுடன் நெருக்கமாக நின்றவர்கள் தான்.

தேவனுக்காகக் காத்திருக்கும்படியாக நம்மை ஊக்குவிப்பதற்கு சில நடைமுறைக் குறிப்புகளில் அடங்கி இருப்பதாவது:

(i) சற்று தூரத்தில் விட்டு ஒதுக்கி வைக்க வேண்டியவை:

- கவனத்தை சிதறச் செய்தல்
- சோதனைகள்
- கரிசனைகள் (I பேதுரு 5:7)

நாம் தேவனுக்காகவே அவரைத் தேட வேண்டும். இதற்கு ஒத்து உதவியாக கவனத்தைச் சிதறச் செய்யும் தொந்தரவுகளையும் தலையீடுகளையும் தவிர்த்து ஓர் இடத்தைக் கண்டுபிடித்து கர்த்தருக்குக் காத்திருப்பது சிறந்ததாகும். ஆகவே எப்பொழுதெல்லாம் வசதியோ அச்சமயங்களில் தனித்துக் காத்திருப்பது நல்லது.

மேலும் நமது ஜீவியம் தேவனோடு (சரியாக) ஒப்புரவாகி இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக நமக்குள்ளே ஆழமாக அகழ்ந்து பார்க்க வேண்டியதில்லை. ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரால் நமக்குள்ளே சரி செய்ய வேண்டிய காரியம் எதுவுமிருந்தாலும் நாம் முதலாவதாக தேவனுக்காக காத்திருக்கும்படி வந்தால் அதை அவர் நமக்கு சுட்டிக் காட்டுவார். பாவமானது நமக்குள்ளே இருக்கும் இருளைப் போன்றது. நாம் தேவனுடைய பரிசுத்தத்திற்கு வந்து விட்டால் தேவனுடைய ஒளியால் இந்த இருள் ஆனது வெளியே காட்டப்படுகிறது. கர்த்தரைப் பார்க்க வேண்டுமானால் நாம் பரிசுத்தமாக இருக்க வேண்டும். (எபி 12:14) நமது பாவங்களை அறிக்கையிட்டால் மட்டுமே இதை அடைய முடியும். மனந்திரும்பியும் இயேசுக் கிறிஸ்துவின் இரட்சிப்பின் கிரியையை நமக்காக சொந்தமாக்கியும் கொள்ள வேண்டும். (I யோவான் 1:7,9) கர்த்தருக்குப் பயப்படும் பயமே இந்தப் பகுதியில் நமக்குப் பயன்படுவதாகும். (சங் 25:14) அதன் பிறகே நாம் இயேசுவை நமது ஜீவிய காலம் முழுவதும் சிம்மாசனத்தில் அமர்த்தி (அதாவது குறிப்பாக நமது உள்ளத்தில்) அதாவது நாம் தேவனுக்கு பணிந்து கீழ்ப்படிவதாலும் சத்துருவை எதிர்ப்பதாலும் அவனை புறம்பே தள்ளி விட முடியும். (யாக் 4:7) நாம் தனிமையாக இருக்கும்பொழுது, சத்துருவின் குரலை அவனை எதிர்ப்பதால் மௌனமாக்கி விடுவோம். நமது சொந்தமான மனதிலும் (ஒழுங்கினாலும் தேவனுக்குப் பணிந்து கீழ்ப்படிவதாலும்) தேவன் தாமே அவர் மட்டுமே நம்முடன் பேசக் கூடும்.

(ii) கால அவகாசம் எடுத்துக் கொண்டு - இடத்தை உண்டு பண்ணுவதற்குகாக

உன்னுடைய நிகழ்ச்சி நிரலில் நேரம் ஒதுக்கி வைத்து, ஒரு ஒழுங்கான முறையில் தேவனுக்காக காத்திருப்பதற்கான ஒழுங்கை செய்து கொள்ளவும். அதற்காக எவ்விதமான இரங்கலும் இன்றியும் சாக்கு போக்குகள் இடைபடைவதை அனுமதியாமலும் மேலும் எந்த விதமான சுறுசுறுப்பான செயல்பாடுகள் இதன் பாலுள்ள தீர்மானத்தின் மீது ஆளுகை செய்யும்படியாக அனுமதிக்கக்கூடாது. தேவனுக்காகக் காத்திருத்தல் என்பதை எந்த இடத்திலாவது நேரத்திலாவது செய்து கொள்ளலாம். ஏனென்றால் அது மிகவும் எளிதாக நமது நேரத்தையும் இருதயத்தையம் ஒதுக்கி வைத்து கர்த்தரைத் தேடும்படியாகவும் அவரை அந்த சூழ்நிலைமைக்குள்ளாக கொண்டு வருவதாகும். இது தேவைப்படும் பொழுது சில நிமிடங்களாகவோ அல்லது வேண்டுமென்றால் ஓர் நாள் முழுவதும் அல்லது ஒரு நாளுக்கு அதிகமாகவும் நீடித்துக் கொள்ளலாம். மேலும் கர்த்தருக்குக் காத்திருப்பதை அந்த நாளின் முதற் காரியமாகச் செய்து கொள்வது நல்லதாகும். இதனால் நாள் முழுவதுமே தேவன் பால் விழிப்புணர்வுள்ளவர்களாக இருக்கும்படியாக உதவி செய்து இந்த முக்கியமான செயல்பாட்டை பின்னுக்கு தள்ளி வைத்து விடாதபடியும், அந்த நாளைச் சரியாகத் தேவனுடன் ஆரம்பிக்கவும், அவருடைய கட்டளைகளை அந்த நாளுக்காகப் பெற்றுக் கொள்வதற்காகவும், நமது ஜீவியத்தின்மேல் கட்டுபாட்டை வைத்திருக்கும்படி தேவனுக்கு அழைப்புக் கொடுக்கவும் அவர் நம்மை கவனித்துக் கொள்வதுடன் பொறுப்பேற்கும் படியாகவும் செய்கிறது.

உன்னுடைய தனிமையான நேரத்தை தேவனுடன் கழித்த பிறகு உன்னுடைய குடும்பத்தோடு ஜெபிக்கவும் உதவியாக இருக்கிறது. இது தேவனை உன்னுடைய குடும்ப ஜீவியத்தில் மத்தியில் மையமாக வைத்துக் கொள்ளச் செய்கிறது. அது குடும்பத்தில் ஐக்கியத்தையும், தேவனுடைய சமாதானமானதோர் உணர்வையும் தந்து உன்னுடைய குடும்ப ஜீவியத்தில் எங்கே எப்பொழுது தேவையோ அச்சமயம் ஊழியம் செய்யும்படியாக உதவுகிறது. தலைவருடைய தனிப்பட்ட ஜீவியமோ அல்லது குடும்ப ஜீவியமோ ஒழுங்காக இராவிடில் அவர் மற்ற ஜனங்களுக்கு செயலூக்கத்துடன் ஊழியம் செய்ய முடியாதவராகி விடுகிறார்.

(iii) மனதை பயிற்சி கொடுத்து அப்பியசிக்க

- மனதை ஒருமுகப்படுத்தி
- தியானம் செய்ய

நாம் முதன் முதலாக கர்த்தருக்குக் காத்திருப்பதை ஆரம்பிப்பதற்கு முன்னர் நம் மனது ஒரு வேளை முயற்சித்து அல்லது கிளர்ச்சி செய்ய முயற்சிக்கலாம். இந்தக் காரியத்தில் நம்மை ஒழுங்கில் பயிற்றுவித்துக் கொண்டு இதை பழக்கப்படுத்திக் கொள்ளும்பொழுது நமது மனமும் அத்துடன் இசைந்து இதிலிருந்து நாம் பலா பலன்களை பார்க்கத் தொடங்கலாம்.

நம்மைச் சுற்றி இருக்கும் உலகத்தில் இருந்து வருகிற சப்த ஒலிகளின் தலையீட்டுக்கு எதிராக நாம் ஒலி உட்புகாத இருதயங்களாக வைத்துக் கொள்ள கற்றுக் கொள்வதோடு தினசரி ஒழுங்காக நம்மைப் பார்த்து சீறி அலறும் நம் நேரத்தின் தேவைகளையுங்கூட நாம் தவிர்க்க கற்றுக் கொள்ள வேண்டும். அநேகருக்கு சப்தத்தோடு அவர்கள் போதை கொண்டிருப்பதால் அவர்கள் உரத்த சப்தங்களை சப்தமில்லாத அமைதி சப்தத்தை விட சப்தமாக உரத்து ஒலிப்பதாக பார்க்கிறார்கள். ஆதலால் அமைதியாக இருப்பதை அசௌகரியமாகக் காண்கின்றனர். கர்த்தருக்காக காத்திருக்கும் நமது நேரத்தில் நாம் எங்கோ அவருக்கு அருகாமையில் சேருவதாயிருந்தால் இதை மேற்கொள்வது அவசியமாகிறது.

கர்த்தர் நம்முடன் பேசும் வார்த்தைகளை நாம் மறந்து விடாதபடி தேவனுடைய வார்த்தைகளை எழுதி வைத்துக் கொள்வது உதவியாக இருக்கும். பிறகு தேவனுக்கு எழுத்தின்படி தவறாது கீழ்படியக் கூடும். ஆகவே பின்னொரு நேரம் தேவனிடம் உற்சாகப்படுத்துதலையும், பலம் பெற்று வலுவடைவதற்கும் தேவனிடம் செல்வதற்கு உதவியாக அறிக்கையொன்று நமக்கென்று இருக்கும். தேவனுடைய கரத்தை நம்முடைய ஜீவியத்தில் ஏற்கனவே பார்த்து தெரிந்து கொள்வதற்கும் அதாவது நாம் தேவனுக்குள் எப்படி வளர்ந்திருக்கிறோம் என்பதைப் பார்த்தறியவும், தேவன் எவ்வாறு இந்த ஆண்டு காலம் வரை நமது நம்பிக்கைக்கு உகந்தவராய் இருந்திருக்கிறார் என்பதை உறுதிபடுத்தவும், மேலும் நமக்குள் நேரிடுவது என்னவென்பதை புற உலகில் கொண்டு வரவும் பொருள் விளக்கம் செய்யவும் அதைப் பற்றிய அறிவுணர்த்தப்படவும் ஏதுவாகிறது.

(iv) இதற்கு ஏதுவான சூழ்நிலையை கண்டு கொள்ளுதல்

தேவனுக்காக காத்திருத்தல் என்பது வாயு மண்டலத்தைச் சார்ந்ததல்ல. கர்த்தரைச் சந்திப்பதற்காக சரியான சீர்பொருந்திய மனதினராக உதவும்படியாக நமக்குப் பொருத்தமான நேரத்தைக் கண்டு கொள்வதாகும். உன்னுடைய ஆவியானது இலகுவாக இருக்கக்கூடிய இடத்தை சூழ்நிலைமையைப் பார்த்து அறியவும். நாம் அடிக்கடி ஒரே இடத்தைத் தேர்ந்தெடுத்துப் போவது கர்த்தருக்காக காத்திருப்பதற்கும் போவதற்கும் உதவியாக இருக்கும். மேலும் அந்த இடத்தை அவருக்காக அர்ப்பணம் செய்யவும் தகுதியாக இருக்கும். இந்த மாதிரியான இடங்களை தேவனற்ற காரியங்களுக்காக பயன்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது. நீ வெகு சீக்கிரமாக ஓரிடத்தில் அமர்ந்து சரியான சீர் பொருந்திய இருதயத்துடன் தேவனைத் தேடுவதற்கு உதவியாக இருக்கும்.

(v) உனது ஆவியைப் பக்குவப்படுத்துவது (உன்னுடைய ஆவியை செயல்பாட்டில் இயங்குமாறு செய்வதற்கு கற்றுக் கொள்ளுதல்)

உபயோகப்படுத்து:

- அமைதியாக இருக்கவும் (உன்னை அமைதிபடுத்திக் கொண்டு ஓய்வு எடுத்துக் கொள்)
- துதி செலுத்து
- நன்றி கூறி நன்றி செலுத்து
- தேவனுடைய கடந்த கால நம்பத் தகுந்தவற்றை நினைவு கூறு.
- ஆராதனை செய்
- பல பாஷைகளில் பேசு
- ஆவியின் மற்ற வரங்களாகிய ஈவுகள்
- தேவனுடைய வார்த்தை
- ஜெபம்
- வேதத்தைப் படித்து தியானித்தல்
- தியானத்துக்குரிய நல்ல உபகரணங்களைப் படித்தல்
- உன் கால அட்டவணையில் மாறுதல் செய் (உன்னை சோம்பேறித் தனத்திலிருந்து அசைக்கும்படியாக)

தேவனை நோக்கி உன் இருதயத்தை தூண்டி ஊக்குவிப்பது என்னவென்பதை கண்டறியக் கற்றுக் கொள். அதற்காக அவருடன் உன் நேரத்தைச் செலவழிக்க ஒரு தூண்டுதலுக்காக காத்திராதே. அதை ஒரு ஒழுங்கு முறையாகக் கைக் கொள்க. தேவன் தாமே உன்னை தூண்டி விட்டு உன் மனப்பான்மையை மாற்றுமாறு அனுமதி. அதைப் பற்றி உனக்கு தொடர்ந்து கஷ்டம் இருக்குமானால் மற்ற கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து அதைப் பற்றி ஜெபம் செய். தேவனோடு சந்தித்த ஒரு மனிதன் எப்பொழுதுமே திருப்தி அடைவதில்லை என்பதில் பொருள் உண்டு. அவர்களுக்கு எப்பொழுதுமே அதிகம் வேண்டும். மேலும் அவர்கள் எப்பொழுதும் தேவனை வாஞ்சித்துக் கதறவது போலத் தோன்றும்.

(vi) கர்த்தருக்காகக் காத்திருப்பதில் தோல்வியுற்ற நேரங்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய காரணங்கள்:

- ஆவிக்குரிய பிரகாரமாக நாம் வறட்சி அடைந்தவர்களாக இருக்கிறோம். தேவன் வெகு தூரத்திற்கு அப்பால் இருப்பது போலத் தோன்றுவதால் நாம் தேவனுடன் சீர் பொருந்தியவர்களாகவும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய உதவும் படியாகவும் நாம் தேவனிடமிருந்து தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதன் அவசியத்தை கண்டறிந்து கொள்வதில்லை.
- சோர்வு அல்லது களைப்பு நாம் கருத்தூன்றி செயல்படுவதைத் தடை செய்கிறது.
- எப்பொழுதும் நம் சிந்தனையில் ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகளை உண்டாக்கும் நமது தனிப்பட்ட பாரங்கள் நம்மை தேவனிடம் போக முடியாதபடி செய்யும் காரணங்களாக ஆகி விடுகிறது.
- நமது தியான அமைதி நேரங்களை படிப்பு வகுப்புகளாக பயன்படுத்துவதால் ஆகவே

நாம் தேவனைச் சந்திப்பதில்லை. அவரைக் கவனித்துக் கேட்பதுமில்லை. மேலும் நம்முடைய ஜீவியத்தில் இடம் உண்டாக்கி தேவன் நமக்குத் தரும் குறிப்பிட்ட வார்த்தை நம்மில் ஒரு விளைவையும் ஏற்படுத்துவதில்லை. அதாவது அதில் ஜீவன் என்பதே இல்லை.

- நமக்கு நேரம் இல்லை என்று நாம் எண்ணிக் கொண்டு நாம் (தேவனுக்காக) காத்திருக்கும் நேரத்தைத் துரிதமாகக் கடத்திக் கொண்டு போவதும் காரணமாகும்.
- நாம் நமது அமைதியான நேரத்தோடு சலிப்படைந்து விடுகிறோம். அதனால் நமது இருதயம் அதில் ஈடுபட்டிருப்பதில்லை.
- ஒழுங்கற்ற முறைகேடு.
- தைரியத்தை இழத்தல் - அதாவது நாம் தோல்வி அடைந்து கொண்டிருப்பதால் நம்மை தேவனை நோக்கி பார்க்காமல் அதற்கு பதிலாக நம்மைத் திருப்பி விடுகிறது.
- தப்பிதமான முன்னுரிமைகள்
- அதிகமான உரத்த சத்தமும் அதிகமான தொந்தரவுகளும்
- தேவன் நம்முடன் பேசும்பொழுது அவருக்குக் கீழ்படிவதில்லை. நாம் கர்த்தருக்காகக் காத்திருக்கும் நேரத்தில் தேவன் எதைச் செய்யுமாறு கூறுகிறாரோ அதைக் கீழ்படிந்து செய்யும்படியாக நமக்குள் ஒரு ஆழமான வாஞ்சை இருக்க வேண்டும். அநேக கிறிஸ்தவர்கள் தேவனிடமிருந்து கேட்பதில் தவறி விடுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் பிடிவாதமாக அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிய மறுப்பதினால்தான்.

(vii) சுறுசுறுப்பாக செயல்படு மந்தமாக இருக்காதே

நாம் தேவனிடமிருந்து பிரதியுத்தரங்களை பெற்றுக் கொள்ள விரும்பினால் அவரிடம் நாம் கேள்விகள் கேட்க வேண்டும். குறிப்பாக அந்தந்த நாளுக்குத் வேண்டியதைப் பற்றியும் அல்லது அந்த நேரத்தில் நம்முடைய ஜீவியத்தைப் பற்றியதாகவும் இருக்க வேண்டும். பிறகு நாம் தேவனுக்கு சற்று இடம் கொடுத்தால் தேவன் நமக்கு பதிலைக் கொடுக்கக் கூடும். நேரம் சரியானதாக இருந்தால் மாத்திரமே தேவன் விடை கொடுப்பார் என்பதை நினைவு கூறுங்கள். தேவன் திரும்பவும் நம்மிடம் மறுபடியும் பேச வேண்டும் என்று எதிர்பார்த்தால் நாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிய வேண்டும். கீழ்படியாதவர்களிடம் தேவன் தம்முடைய வார்த்தைகளைப் பேசி வீணாக்குவதில்லை. தேவன் திரும்பத் திரும்ப நம்மிடம் பேசும் காரியங்கள் ஒன்று அவைகள் உண்மையாகவே முக்கியமானதாக அல்லது தொடர்ந்து நாம் கீழ்படியாமல் இருப்பவைகளைத் தான் பேசுவார். கர்த்தருக்காகக் காத்திருக்கும் உன்னுடைய நேரத்தை கேள்விகளை மாத்திரம் கேட்டு விட்டு அளவில் மட்டுப் படுத்தாதே. அவருக்காக அமைதியாகக் காத்திருப்பதற்காக சிறிது நேரத்தை அளித்து பரிசுத்த ஆவியானவரை அவர் விருப்பப்படியே செயல்படும்படி விட்டுவிடு. தேவனுக்காகக் கொடுக்கப்பட்ட நேரம் ஒரு போதும் வீணாக்கப்பட்ட நேரம் ஆகாது. அழுத்தமான பாரங்கள் இருந்த போதுங்கூட "கர்த்தரைத் தேடுங்கள்; அப்பொழுது பிழைப்பீர்கள்" (ஆமோஸ் 5:6)

தேவனை தேடுதல் என்பது நம்மை நாமே முழுவதுமாக தேவனுக்கும் அவருடைய நோக்கத்திற்கும் ஒப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது. (உபா 4:29; ஏசாயா 55:6) "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடுவீர்களானால் என்னைத் தேடுகையில் கண்டு பிடிப்பீர்கள்" (ஏரேமியா 29:13)

காத்திருப்பதன் கனிகள்

(i) பொறுமை

நாம் ஒவ்வொரு காரியத்தையும் பொறுத்துக் கொண்டு ஒன்றுமே செய்யாமல் இருக்கும் வகையான பொறுமை அல்ல. அது வலிமை மிக்க தெய்வீகமான பொறுமையாகும். புதிய ஏற்பாட்டில் "பொறுமை" என்பதற்கு இரண்டு வார்த்தைகள் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. மொழி பெயர்ப்பில் ஒரு வார்த்தைக்கு 'நிலையான உறுதி' அல்லது 'விடா முயற்சி' என்றும் மற்றொரு பதத்திற்கு "அழுத்தத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும்

ஒரு மன உருவகம்" என்று அர்த்தம் கொடுக்கப்படுகிறது. தேவன் தாமே நம்முடன் இந்த இரண்டாவது வழியில் பொறுமையாக இருக்கிறார். அவர் நம்மேல் சாய்ந்து கொண்டு நாம் வளைந்து கொடுக்கும் வரை அவ்வாறு ஆன பிறகு தேவனை தேவனாக இருக்கும்படி அனுமதிக்கிறோம். "கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு. காரியசித்தி உள்ளவன் மேலும், தீவினைகளைச் செய்கிற மனுஷன் மேலும் எரிச்சலாகாதே. கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு; பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம். பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்." (சங் 37:7-9)

தேவனுடைய வார்த்தையை நாம் கேட்கும் பொழுது அதற்குக் கீழ்படிந்து அவருக்காக பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். அது கனி கொடுப்பதாகவும் நம் ஜீவியத்தில் பலன் கொடுப்பதாகவும் இருக்கும். (லூக்கா 8:15) "கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது. அவருடைய வார்த்தையை நம்பி இருக்கிறேன்." (சங் 130:5)

(ii) இளைப்பாறுதல்

ஆகையால் தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாய் இருக்கிறது. ஏனெனில் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஒய்ந்தது போல தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். (எபி 4:9-10)

தேவனுக்குள் இளைப்பாறுதல் என்பது அவரைச் சந்திப்பதற்காக சிறிது கால நேரம் சற்று அப்பால் ஒதுங்கித் தனித்திருப்பதாகும். தேவனுக்குள் இளைப்பாறுதலாவது அவர் மீது முற்றிலுமாகச் சார்ந்திருப்பதை அறிந்து கொள்வதாகும். (சங் 62:1-5) நம்முடைய கவலைகளையெல்லாம் அவர் மீது வைத்து விடுவதாகும். (I பேதுரு 5:7) நமது ஜீவியங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கர்த்தர் பார்ப்பது போல கவனித்துப் பார்ப்பதாகும். அது என்னவென்றால் நமது துன்பங்களையெல்லாம் கொண்டு வந்து அவரது பாதபடியில் சமர்ப்பிப்பதாகும்.

தலைவர்கள் மிகவும் களைப்படைந்தவர்களாகவும் அவர்களுடைய ஆவிக்குரிய ஆதாரத்திறன்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தாலும், அவர்களது மாம்சீகமானது தன்னை திருப்திப் படுத்தும்படியாக அடிக்கடி வேண்டி நிற்கும். (உம்) தொலைக் காட்சி பார்த்தல், சாப்பாட்டைச் சாப்பிடுதல், தூங்காமல் கண் கொட்டாமல் விழித்திருப்பது, அதிகமாக தூக்கம் முதலியன. இளைப்பாறிக் கொண்டும் ஓய்வு எடுத்துக் கொள்ளுவதும் சரிதான். உண்மையில் அது மிகவும் முக்கியமானதுதான். ஆனால் சத்துரு வெற்றி பெற இடம் தராதே. தேவனை மகிமைப்படுத்தும் காரியங்களை மட்டும் செயல்படுத்துக.

(iii) போதனை

"கர்த்தாவே உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும். உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும். நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள் முழுதும் காத்திருக்கிறேன்." (சங் 25:4-5)

தேவனுடைய வார்த்தையானது கர்த்தரை அறிந்து கொள்வதாலும், அவருக்காகக் காத்திருப்பதன் பலாபலனாக நமக்கு வருகிறது. தேவனுடைய வழி நடத்தும் தலைவர்களாக நமக்குத் தேவையான வழி நடத்துதல், உள் நோக்குப் பார்வை, தெளிவு படுத்துதல் ஆகியவற்றை அது தருகிறது. (ஏசாயா 55:8-11) தலைவர்களாக, நாம் தேவனுடைய வியூக யூகங்களையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெரிந்து கொள்வது, தேவனுக்காக ஜெயமும் கனி கொடுக்குமாறு ஜீவிப்பதற்கு அவசியம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். (2 சாமுவேல் 5:17-25)

கர்த்தருக்காகக் காத்திருப்பது தேவனுக்கு கவனித்துக் கேட்பதை அனுமதிக்கிறது. தனது எஜமானனது சத்தத்திற்கு செவி கொடாதவன் ஓர் ஏழை ஊழியக்காரன் ஆவான்! தேவன் பல திறப்பட்ட வழிகளில் நம்முடன் பேசும்படியாக ஒரு தெளிவான சத்தத்திலும் அமர்ந்த மெல்லிய சத்தம், சந்தர்ப்பங்கள் மற்ற ஜனங்கள் மூலமாகவும் பேசும் படித் தெரிந்து கொள்வார். அநேகமான கிறிஸ்தவர்கள் தேவனுடன் நன்றாகப் பேசுவார்கள். ஆனால் அவருக்கு செவி கொடுத்து கேட்பதில் பயங்கரமானவர்கள். தேவன் நம்மோடு பல சமயங்களில் சித்திர வடிவங்களில் பேசுவார். அப்படிச் செய்வதால் பேசுவதை விட ஞாபகத்தில் வைத்துக் கொள்வது எளிதானது. மேலும் நாம் கவனித்துக் கேட்பது தேவனிடமிருந்து வந்தால் மற்ற மக்களும் வழக்கமாக அதே காரியங்களையும் கவனித்துக் கேட்பார்கள்.

தேவனுக்காகக் காத்திருத்தல் என்பது மேலும்:

- நமது ஜீவியத்திற்கான தேவனுடைய சித்தம் என்னவென்பதைக் கண்டு கொள்ள உதவுகிறது.
- தேவன் ஏன் அதைச் செய்கிறார் என்பதையும் என்ன செய்கிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள உதவுகிறது.
- தேவனுக்குள் நமது ஆவிக்குரிய முன்னுரிமைகளையும் நமது நேர முன்னுரிமைகளையும் பகுத்தறிய நமக்குத் திறமை அளிக்கிறது.
- தேவனுடைய இருதயத்தின் என்ன மேலாக இருக்கிறது என்பதை அறியும் திறனையும், அதனைச் சுற்றி நமது பிரசங்கங்களை ஆயத்தம் செய்யவும் முன்னதாக தேவை என்று கருதப்பட்டவற்றைக் குறித்தோ அல்லது நாம் ஏமாற்றம் அடைந்தோம் என்பதைக் குறித்தோ இவைகளைப் பற்றியே எப்பொழுதும் பிரசங்கிக்காமல் மேலே கூறப்பட்டதன் அடிப்படையிலே பிரசங்கிக்க வேண்டும். நீ தலைவனாக தேவனிடம் காத்திருக்கா விட்டால் அதுவும் ஒரு பிரசங்கக் கூட்டத்திற்காக அந்தக் கூட்டத்திற்கு முன்னதாகவே ஆயத்தம் செய்யாவிட்டால் அந்தக் கூட்டத்திற்காக தேவனை விட சிறந்த தீர்மானங்களை எடுத்துக் கொள்வதுடன் நீ ஒரு சிறந்த வேலையைச் செய்யக் கூடும் என்று செயலூக்கத்துடன் சொல்லிக் கொள்ள முடியும்.
- இந்த தேவனுக்காகக் காத்திருத்தல் என்பது தேவனுடைய ஞானத்திலிருந்தும் வெளிப்பாடுகளிலிருந்தும் மனிதனுடைய காரண சிந்தனையை விட மேற்படி தேவ ஞானத்தால் நாம் நமது தீர்மானங்களை முடிவு செய்து கொள்ளுமாறு நமக்கு உதவுகிறது.
- தேவனுக்கு என்ன தேவைப்படுகிறது என்பது மட்டுமல்ல அவர் எதை வாஞ்சிக்கிறார் என்பதையும் தெரிந்து கொள்ளுமாறு உதவி செய்கிறது. தாவீது இராஜாவைப் போல தியாக பலிகளின் பிரமாணங்கள் மாத்திரம் தேவனுடைய சித்தத்தை முழுவதுமாக வெளிப்படுத்துவது அல்ல என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். தேவன் எதை உண்மையாகவே விரும்புகிறார், இன்னும் எதை விரும்புகிறார் என்பதே கீழ்படிதலாகும்.

(iv) பலமும் பலம் புதுப்பிக்கப்படுதலும்

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள். (ஏசாயா 40:31) கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திட மனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு. (சங் 27:14) தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. (II நாளா 16:9)

தேவனுக்காகக் காத்திருத்தல் அவருக்கு ஊழியம் செய்யும்படியாக நமது மனதின் நோக்க ஆவலை அதிகரிக்கச் செய்கிறது. கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படியாக மனத்தின் வாஞ்சையான நோக்கத்தை, நாம் மெய்யாகவே அவரைச் சந்தித்து, அவர் நம்மோடு பேசும் வார்த்தைகளுக்குச் செவிக் கொடுக்கும் பொழுது அது மகத்தானதாக

ஆகிறது. நாம் அவருக்காக செய்ய முடியாதது ஒன்றுமில்லாமலும், எல்லாக் காரியங்களையும் சாதிக்கக் கூடியவைகளாகவும் தோன்றும்.

மேலும் தேவனுக்காக காத்திருப்பது:

- அவருக்காக ஊழியம் செய்யும் நமது மன வாஞ்சையான நோக்கத்தைத் திரும்பப் பெறும்படி செய்கிறது. ஏனென்றால் நாம் போதுமானபடியாக தேவனால் பகுத்தறியப்பட்டு இருக்கிறோம்.
- தேவனுக்குள் நமக்கு மிகவும் தேவையான இளைப்பாறுதலையும் மறு நிச்சயத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக உதவுகிறது.
- நமது நம்பிக்கையையும், பலத்தையும் நமக்குள்ளாக அல்ல, தேவனுக்குள் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படியாக நம்மை திறம்படுத்தி, அவருடைய பலத்துக்குள்ளாக அவருடைய சித்தத்தைத் தொடர்ந்து செய்யும்படியாகவும் ஜெயமானதோர் வாழ்க்கையை நடத்தும்படியும் நமக்கு பயன்படுகிறது.
- நமது ஆவிக்குரிய கையிருப்புத் திறன்களை திரும்பவும் ஆவிக்குரிய எரிபொருட்களால் பலத்தை உள்நோக்கி தூண்டியும், அந்த ஆவிக்குரிய உபகரணங்களால் இயந்திரம் போல் இயங்கவும் உதவுகிறது.
- கர்த்தருக்கான நமது ஊழியப் பாதையில் நமக்கு முன் நிற்கும் சவால்களைத் தொடர்ந்து முகமுகமாக சந்திக்கும்படியாக உதவுகிறது.
- நாம் செய்யும் காரியங்கள் தவறாகப் போகும் பொழுதும் நமது ஊழியம் கூட நம்மை விட்டு எடுபட்டு போனாலும் நமது ஏமாற்றத்தையே மேற்கொள்ளும்படியாக உதவுகிறது. ஏனென்றால் நமது நம்பிக்கை கர்த்தர் பேரில் இருப்பதால் தான். ஆனால் நாம் அவருக்காக என்ன செய்கிறோம் என்பதில் அல்ல.
- கர்த்தருக்குள் நமது தைரியம், நமது நம்பிக்கை, நமது வாஞ்சை ஆகியவற்றை திரும்பப் பெற்றுக் கொள்ளவும் அதனால் அவருக்காக நடத்தப்படும் போரில் திரும்பப் பங்கேற்கவும் வசதி செய்கிறது.

(v) இருதயம் உடைந்து நொறுங்கிப் போகுதல்

"தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், தேவனே நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்." (சங் 51:17) நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார். (சங் 34:18)

உள்ளவைகளை அவமாக்கும்படி இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார். (I கொரி 1:25-31) நாம் இங்கே சொல்லிக் கொண்டிருக்கும் பொறுக்கப்படுதலானது ஒன்றால் அடித்து நொறுக்கப்படுவதால் வருவதல்ல. சாய்வு மட்டத்தில் அல்லது மனிதனுடைய (மாம்சீக) மட்டத்தில் ஏற்படும் நொறுக்கப்படுதலை விட அதிக ஆழமானதோர் நொறுக்கப்படுதல் உண்டு. தேவனுடைய மெய்யான பிரசன்னத்தை சந்தித்த ஒரு நபருடைய நொறுக்கப்படுதலும் உண்டு. நம்மில் சிலர் சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும், உறவுத் தொடர்புகளாலும் நொறுக்கப் படுகிறோம். தேவன் இந்த மாதிரியான கிரியைகளை பிரயோகிக்கக் கூடும். ஆனால் சம்பவத்திற்கேற்றபடி அவர்கள் சொஸ்தமாக்கப்படவும் வேண்டும். தேவனுடைய உண்மையான பிரசன்னத்தினால் சந்திக்கப்பட்டு நொறுக்கப்பட்டவர்களுக்கு சொஸ்தமாக்கப்படுதல் அவசியமல்ல. (ஆதி 32:244-32) இந்த மாதிரியான நொறுக்கப்படுதல் சொஸ்தமாக்கப்பட்டால் அவர்கள் திரும்பவும் மாம்சீகத்திற்கு ஆளாவார்கள்.

(vi) தேவன்

'ஆவியானது உண்மையானதோர் ஜீவனுள்ள பிரசன்னமாகவும் பிதாவினுடைய வல்லமையானது நமக்குள் கிரியை செய்கிறதாயும் இருக்கிறது.'

“தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத் தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை. அவைகளைக் கண்டதுமில்லை. செவியால் உணர்ந்ததுமில்லை.“ (ஏசாயா 64:4)

தேவன் நமக்கு மிகவும் பெரியவர் ஆகிறார். நாம் அவருக்காக காத்திருக்கும் பொழுது நமது ஜீவியத்தில் அவருடைய ஆளுகையானது (இராஜ்ய பாரம்) அதிகமாக உறுதியுடன் ஸ்தாபிக்கப்படுகிறது. நாம் அவருக்காக நம்முடைய அன்பை அதிகமாக வெளிப்படுத்தும் பொழுது நாமும் அவரை அதிகமாக நேசிப்பதாகக் காண்போம். மேலும் நம்முடைய ஜீவியத்திலும் அன்பு கொண்டவர்களாக இருப்போம். நாம் எவ்வளவு அதிகமாக அவரை ஆராதிக்கிறோமோ அதற்கு அதிகமாக அவரை ஆராதிக்கும்படியாக வாஞ்சிப்போம். அவருடைய எல்லா நம்பகத்தன்மைக்காகவும் ஆகாரத்திற்காகவும் நாம் நன்றி செலுத்தும் பொழுது அவ்வளவுக்கு அதிகமாக நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு நுட்பமான பகுதியிலும் அவர் கிரியை செய்யும் வழிகளுக்கு மிகவும் அதிகமாக நன்றியுடையவர்களாய் இருப்போம்.

உன்னுடைய ஜீவியத்தில் முக்கியமானது என்ன? நாம் வேகமாக யாவற்றிற்கும் முன்னதாக ஓடி, மகத்தான காரியங்களைச் செய்ய விரும்பலாம். ஆனால் அதன் எல்லாவற்றிற்கும் முடிவாக நாம் என்னத்தைச் சாதித்திருப்போம்? அதிலும் உண்மையாகவே முக்கியமான காரியம் என்னவென்றால் தேவனை தேவனாக இருக்கும்படியாக அனுமதிக்க வேண்டும். மிகவும் மகத்தானதோர் விளைவாக (முயற்சியுடன்) நம்முடைய ஜீவியத்தில் தேவன் ஒரே ஒரு தரம் தம்முடைய வல்லமையான பலத்தில் தோன்றக் கூடுமானால் நாம் அடுத்த நாற்பது ஆண்டுகளுக்கு வித்தியசமான நபராக இருந்திருப்போம். அதுவே நமக்குப் போதுமானதாகும். நமது ஜீவியங்களில் தேவனை தேவனாக இருக்கும்படியாக அனுமதிப்போம். நாம் வேறு எதற்காக முயற்சிக்கவோ திட்டங்களை வகுக்கிறவர்களாகவோ அல்லது அற்புதமானவைகளை எதிர் நகல் எடுக்கிறவர்களாகவோ இருக்க மாட்டோம். தேவன் மாத்திரமே தேவனாக (நமக்கு) இருப்பார்.

கர்த்தருக்காக காத்திருப்பது மேலுமாக:

- தேவனுக்குச் சரணாகதி அடையும்படியான ஒரு மனப்பான்மையை நமக்குள் விருத்தி செய்யும் படியாக உதவுகிறது.
- நம்மை தேவனுடன் ஒப்புரவாகும்படியாக வழி செய்கிறது. (I யோவான் 1:7-9)
- நம்முடைய இருதயத்தை தேவனுடைய இருதயத்தோடு திருப்பி ஒருமுகப்படுத்தி நாமும் அவர் உணர்ந்தது போல நாமும் அதே சிந்தனையுடன் இருக்கும்படியாக உதவுகிறது.
- நாம் திரும்பவும், தேவன் நமக்காகக் காட்டும் அவருடைய அன்பைக் கண்டறிந்து கொள்ள உதவுகிறது. (புலம்பல் 3:22-23) நமக்கு உதவி செய்யும்படியாக தயாராக இருக்கும் அவருடைய தன்மையை (யோசுவா 1:15; ஏசாயா 41:10) நம்மைப் போஷித்துப் பலப்படுத்தவும், அவரது பிள்ளைகளாகிய நமக்காக அவர் காட்டும் கரிசனையையும் கண்டு அறிந்து கொள்ள உதவுகிறது. (உபாகமம் 32:10-13; சங் 57:1; சங் 91:4; மத் 23:37)
- நமது ஆக்கபூர்வமான நேரத்தை தேவனுடன் செலவழிக்கும் படியாக வழிவகை செய்கிறது.
- தேவனைப் பற்றிய நமது அறிவை அபிவிருத்தி செய்து அவரால் கூடாதது எதுவுமில்லை என்றும் அவருக்கு சித்தமாயிருக்குமானால் நமக்கு அவ்வாறு இருக்கும் என்பதைக் கண்டறிந்து கொள்ளும்படியாக உதவுகிறது.
- இந்த உலகத்தில் யாதொன்றையும் விட மிகவும் மகத்தானது என்று தேவனுடைய வல்லமையைப் பற்றி நாம் குறைந்தது ஓரளவாவது புரிந்து கொள்ளும் படியாக உதவி செய்து அதன் காரணமாக நமது ஜீவியத்தையும் சமய சந்தர்ப்பங்களையும் குறித்து தெய்வீகமானதோர் தோற்ற அமைப்பைப் பெற்றுக் கொள்ளவும் ஒத்தாசை செய்கிறது.

- தேவனுடைய மாட்சிமையையும், மகத்துவத்தையும் நாம் அனுபவத்தில் உணரும்படி வழி செய்கிறது.
- தேவனுடன் நம்முடைய உறவுத் தொடர்பைக் கட்டி எழுப்புகிறது.
- தேவன் தேவனாக (மகத்துவமுள்ளவராக) இருப்பதற்காகவும், அவர் நமக்காகச் செய்த யாவற்றிற்காகவும் துதிகளைத் தந்து துதித்து நன்றி செலுத்தும்படியாக நம்மை வைக்கிறது.

(vii) மாறுதல் அடைந்த ஜீவியங்கள்

கர்த்தருக்காகக் காத்திருப்பதால் நமது சுயமான மையத் தன்மையை தேவனை மையமாக ஆக மாற்றம் அடைய செய்யலாம். ஏனென்றால் நாம் தேவன் பார்க்கிறபடியாக காரியங்களை மிகவும் சீக்கிரமாகக் கண்டு கொள்ளலாம். நாம் தேவனைக் காத்திருந்து சந்தித்தும் நமக்கு அவர் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டும் நமக்குள் ஒரு (மாறுதலான) விளைவை ஏற்படுத்தும்படியாக அவைகளை அனுமதிக்க வேண்டும். அதைச் செய்யும்படியாக அவைகளுக்கு இடம் கொடுத்து அவைகளைக் குறித்துத் தியானிக்கவும் வேண்டும். தியானம் செய்வதாவது நமது ஆத்துமாக்களை தேவனுக்குள்ளும் அவரது சித்தத்திற்குள்ளும் திரும்பும்படி செய்து, நாம் காத்திருக்கும் பொழுது தேவன் நமக்கு வெளிப்படுத்திய பகுதிகளில் கிரியை செய்யுமாறு அவருக்குச் சந்தர்ப்பத்தையும் தர வேண்டும். தியானம் ஆவது தேவனுடைய வார்த்தைகளை நமது தனிப்பட்ட பந்தமாகவும் அதை உள்ளுக்குள் ஆகர்ஷித்துக் கொண்டு அதன் பயனாக நமது ஜீவியத்தில் அவை ஜீவிக்கும் செயல்பாட்டில் சுறுசுறுப்பும், பயன் தரக்கூடியதாகவும் ஆக்கிக் கொள்ளும்படி உதவுகிறது. நாம் தியானம் செய்யும் எந்த நேரமாக இருந்தாலும் பரிசுத்த ஆவியானவரால் அது பொறுப்பு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும். அநேக கிறிஸ்தவர்கள் அவர்களுக்கு என்று தேவன் பேசுவதை கேட்டாலும் அதற்கு அவர்கள் ஒரு போதும் கீழ்படிவதில்லை. தேவனால் நிறைவேற்றப்படவேண்டும் என்ற நோக்கத்தையுடைய ஜீவிய மாற்றுதலான விளைவை அனுமதிப்பதில்லை.

(viii) மற்ற கனிகள்

<u>தேவனுக்காகக் காத்திருப்பது நம்மில் அனுமதிக்கப்படுபவை:</u>

- பரிசுத்த ஆவியானவருக்காக இடம் தந்து நம்மை ஆராய்ந்து அறியவும் தேவன் அறிகிறபடி அவருக்கு தேவையான கிரியைகளை நமது ஜீவியத்திற்குள் செய்யப்படுமாறு.
- நம்முடைய தேவைகளைப் பற்றிய குறிப்பை ஒட்டு மொத்தமாக தேவனிடம் கொண்டு வரும்படியாக
- பரிசுத்த ஆவியினால் புதிதாக நிரப்பப்பட்டு (எபேசி 5:18) அதனால் தேவனுடைய வல்லமையாலும் பலத்தாலும் நிரப்பப்படும்படியாக
- நாம் தேவனோடு அவரது உதவியின் பயனாக எங்கே நாம் அவரோடு நிற்கிறோம் என்பதை நிர்ணயித்து மதிப்பீடு செய்ய
- நமது பிரச்சனைகளின் மெய்ம்மையையும், குறிப்பிடத்தக்க தன்மையையும் தேவனுக்குள் நமது ஸ்தானத்தையும் அதன் உண்மையான பரிமாண அளவுகளையும் புரிந்து கொண்டு தேவனுடைய பார்வை நோக்கின்படியே அவற்றைப் பார்த்தறிந்து கொள்வதாகும்.
- தேவனுக்காகவும் மற்ற மக்களுக்காகவும் வளர்ந்து கொண்டிருக்கும் அன்பை ஆதாயத்திப் படுத்திக் கொள்ளவும்.
- தேவனிடமிருந்து ஞானத்தையும் உள்நோக்குப் பார்வையையும் பெற்றுக் கொள்.
- தேவன் காட்டிய கடந்த கால நலமானவைகளுக்காகவும் அவரது நம்பகத் தன்மைக்காகவும் அவற்றை நினைவு கூர்ந்து அவருக்கு துதி செலுத்து (ஸ்தோத்திரம் செய்)
- மலைகளையும் பெயர்க்கக் கூடிய விசுவாசத்தைப் பிறப்பித்துக் கொள்ளவும்.

- நம்முடைய இருதயங்களில் தேவ சமாதானம் ஆளுகை செய்யட்டும். ஏனென்றால் அது நாம் தேவன் பேரில் சார்ந்திருப்பதையே உற்சாகப்படுத்துகிறது. நாம் தேவனுக்காக காத்திருக்கும்பொழுதும், (அமைதி) சமாதானம் நிறைந்ததோர் இடத்தின் மூலமாக ஜெபிக்கும்பொழுதும் அப்பொழுது நாம் படைப்பாற்றலுடன் பதில் கிரியை கொடுத்து எந்த விதமான பிரச்சனைக்கோ அல்லது துன்பத்திற்கோ எதிராக செயல்படுவதை விட சிறந்ததாகும். அந்த சந்தர்ப்பத்திற்கு ஆன தேவனுடைய பிரதியுத்தரத்தை பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஏதுவாகி நம்பிக்கையிலும் உறுதியான நிச்சயத்திலும் ஆரம்பித்து முன் செல்ல முடிகிறது.
- தேவனுக்குள் ஒரு பாலகனைப் போன்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள். அதாவது மிகுந்த இருண்ட சந்தர்ப்பங்களிலும் அது சபைக்கு உள்ளே இருந்தாலும் அல்லது வெளியே இருந்தாலும் சரி. இந்த விதமான உறவுத் தொடர்பான நம்பிக்கையின் வழியாக தலைவர்கள் மிகுந்த இருட்டான இடங்களிலுங்கூட விண்மீன்களைப் போல பிரகாசிக்கவும் கூடும். இதைத் தான் மற்றவர்கள் என்னவென்று கண்டுணர்ந்து கொண்டு பின்பற்றுவார்கள்.
- ஊழியத்திற்காக தேவைப்படும் வல்லமையை ஆதாயப்படுத்திக் கொள். ஏனென்றால் நாம் தாழ்மையுடன் நமக்குள் பலக் குறைவை ஒப்புக் கொண்டு, பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையின் மூலமாக அவரை நமக்குள் கிரியை செய்யுமாறு வேண்டிக் கொள்ள வேண்டும். இதுதான் நாம் தேவனுடைய ஊழியத்தைச் செய்யக் கூடிய நம்பிக்கையை நமக்குத் தந்து மேலும் நம்முடைய நம்பிக்கைக் குறைவால் அது தடைபடாத படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவனுக்குள் அவனுக்கு மிகுதியான திறமை வாய்ந்த ஊக்க சக்திகள் இருக்கின்றன. இந்த சக்தி சேர்மானங்கள் செயல்பட வேண்டுமானால் நாம் தேவன் தாமே தமது சித்தத்தின் படி நிறைவேற கிரியை செய்யுமாறு நமது ஜீவியத்தில் இடம் தந்தால் மட்டுமே அப்படி சாதிக்க முடியும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய வல்லமையை தங்களுக்குள் இருத்தி வைத்துக் கொள்ளும்படியாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். இந்த பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையால் கூடாதது ஒன்றுமே இல்லை. கிறிஸ்தவர்கள் இந்த வல்லமையை தேவன் அவர்களுக்குக் கட்டளை இடுகிற பிரகாரம் செயல்படுத்த வேண்டும். இதற்கு பதிலாக அநேகக் கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் வறண்டு போயும் உள்ளே வெறுமையாயும் காணப்படுகிறார்கள் அல்லது அவர்கள் மார்க்க சம்பந்தமான அறிவோடும், விமர்சனம், ஏமாற்றம் அல்லது மாயையால் வஞ்சிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு என்ன நேரிட வேண்டும் என்பது தெரியும். ஆனால் அவர்களுக்காக தேவனிடத்தில் என்ன பெறுகிறது என்பது அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அபரிமிதமான கனி கொடுக்கும், வல்லமையான ஜெயமான ஜீவியத்தை செய்வதற்குப் பதிலாக அவர்கள் எளிதாக "அலைந்து திரிகிறார்கள்." கர்த்தருக்காக காத்திருப்பதே இந்த மக்களுக்குரிய விடை ஆகும். இது நம்மை தேவனுடன் தங்களை சரியாக சீர்பொருந்தச் செய்து நமக்குள் இருக்கும் ஆவிக்குரிய வெடி மருந்தை வெளிப்படுத்தும்படி செய்கிறது. தேவன் தாமே நமக்கு எங்கே எப்படி அந்த பரிசுத்த ஆவியின் வல்லமையை அதன் விளைவாக வெளிப்படுத்த வேண்டும் என்று காட்டுவார்.

தேவனுடன் கொண்டுள்ள உறவு தொடர்பால் ஆராதனை எழும்புகிறது.

ஜனங்கள் தங்களது ஆராதனை நேரத்தில் தேவனுக்காகக் காத்திருத்தலை அவர்களைப் பயிற்றுவிக்கவும், அவருடைய பிரசன்னத்தின் ஆழமானதோர் உணர்வை பழக்கப்படுத்திக் கொள்ளவும். அவருடன் அதிகமாக நேரடியான தொடர்பை வைத்துக் கொள்ளவும், அவரையே முற்றிலுமாக சார்ந்திருப்பது ஆகியவற்றை அவர்களுக்கு பயிற்றுவிப்பதே நமது ஊழியத்தின் முக்கியமான குறிப்பிட்ட நோக்கமாகும்.

ஆராதனை அல்லது ஆராதித்தல் என்பது ஒரு செயல்பாடாக அல்லது அனுபவமாக கிறிஸ்தவக் கூட்டங்களின் போது ஒவ்வொரு விசுவாசிக்கும் வாழ்க்கை முறையாக இருக்கக் கூடாது. கிறிஸ்தவர்களாக நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் தேவனை ஆராதிக்கும் செயல்பாடாக இருக்க வேண்டும். ஆகவே இதுதான் நாம் இருபத்தி நான்கு மணி நேரமும் ஒரு நாளில் பாடல்களை

மட்டும் பாடிக் கொண்டிருக்க வேண்டும் என்பது அர்த்தமல்ல. ஆராதித்தல் என்பது நம்மையே தேவனுக்கென்று காணிக்கையாக அல்லது முற்றிலும் தத்தம் செய்வதாகும். அதாவது அவருக்கென்று எப்பொழுதும் அனுபவத் தயாராகவும், முற்றிலுமாக கீழ்படிதல் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இது தேவனுடன் நாம் கொண்டிருக்கும் உறவுத் தொடர்பால் உண்டாகிறது. தேவனுடன் நமது உறவுத் தொடர்பு முதிர்ச்சி அடைய, அடைய அதன் தொடர்பின் ஆழம் அதிகரிக்க வேண்டும். தேவன் நம்மிடமிருந்து இந்த பிரதிகிரியையையே எதிர்பார்க்கிறார். ஆகையால் நாம் எப்பொழுதும் ஆழமானதோர் உறவுத் தொடர்பை உண்டாக்கி விருத்தி செய்யுமாறு தேடிக் கொண்டே இருக்க வேண்டும். தேவன் இதை நம்மிடமிருந்து வற்புறுத்துவதில்லை. நாம் இதைத் தெரிந்து கொள்வதையே வாஞ்சிக்கிறார். நம்முடைய பரலோகப் பிதாவானவர் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்பவர்களையே தேடிக் கொண்டு இருக்கிறார். (யோவான் 4:23-24) நாம் அவரை ஏமாற்றாதிருப்போம். உண்மையான துதி ஆராதனை நம்மை தேவனைப் பற்றி விழிப்புணர்வுள்ளவர்களாக்கி நம்முடைய சுய விழிப்புணர்வை எடுத்துப் போடுகிறது. ஆகவே அது கர்த்தருக்காகக் காத்திருப்பதால் ஒரு முக்கியமான பகுதி ஆகும்.

பிறருக்காக ஜெபித்தல் (வேண்டிக் கொள்ளுதல்)

தேவனுக்காகக் காத்திருக்கும்பொழுது தலைவர்களாகிய நாமும், நாம் வழி நடத்திச் செல்பவர்களுக்காகவும் கூட வேண்டிக் கொள்ள வேண்டும். அதாவது அவர்களுக்காக திறப்பில் நிற்க வேண்டும். ஆவியானவர் இல்லாமல் நடத்தப்படும் மன்றாட்டு வேண்டுதல்கள் ஜெபங்கள் இன்றி தேவனுடைய தலைவர்கள் அவர்களால் நடத்திச் செல்லப்படும் மக்களுக்காக ஒரு செயலூக்கமான ஊழியத்தைச் செய்ய முடியாது. மோசே இதையே இஸ்ரவேலரின் சார்பாக தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டியிருந்தது. அவனுடைய வேண்டுதல்களான மன்றாட்டு ஜெபங்கள் இல்லாவிட்டால் அந்த தேசம் இன்று இங்கு (உலகில்) இருந்திருக்க முடியாது. (யாத் 32:7-14; எண் 14:10-35) நம்முடைய வீட்டுக் குழுவைப் பற்றி திறப்பில் நிற்கும்படியாக தேவன் ஒருவரையும் கண்டுபிடிக்கவில்லை என்று சொல்லப்படும் படியாக நாம் அனுமதிக்கக் கூடாது. அதாவது பிரச்சனைகளுக்கும் தேவனுக்கும் இடையில் (எசேக்கியேல் 22:30-31)

ஒரு தலைவராக ஒரு மனமார்ந்த ஜெபத்தை, அதுவும் கண்ணீரோடு ஜெபிக்க பயப்படக்கூடாது. நாம் தேவன் பார்ப்பது போல நாமும் காரியங்களைப் பார்ப்போமானால் நாமும் இதையே அடிக்கடி செய்து கொண்டிருப்போம். தேவன் தாமே தன்னுடைய ஜனங்களின் துயரங்களையும் இன்னல்களையும் பார்த்து மனம் இரங்காதவராக அல்ல. ஆகவே அவருடைய திருச்சபையின் தலைவர்களாகிய மனிதர்களுக்கு அவர் வரங்களைக் கொடுக்கும் காரணங்களில் ஒன்று அவர்கள் அவருடைய ஜனங்களை கஷ்டங்களிலிருந்து அவர்களை வழி நடத்தி, துன்பமான நேரங்களில் அவர்களுக்கு உதவி செய்யும் படியாகவே அவ்வாறு செய்கிறார். தலைவர்கள் தேவன் என்னத்தை உணர்ந்து அந்த தேவனுடைய ஜனங்களுக்கு இதைப் பற்றி ஏதோ கொஞ்சம் அறிவிக்கிறார் என்பதன் அவசியத்தை உணர்ந்து கொள்வது தேவையாய் இருக்கிறது.

நாம் தாழ்மையோடும் சரியான மனப்பான்மையான நோக்கத்தோடும் கேட்போமானால் நாம் தேவனிடம் மகத்தான காரியங்களைக் கேட்கலாம். (யாக்கோபு 4:2,3) கர்த்தர் என்ன செய்வார் என்று யாருக்குத் தெரியும். (யோவேல் 2:12-14) தேவனுக்கான செயலூக்கமான ஊழியம் அவரோடு நெருங்கி இருப்பதால் உண்டாகிறது. உண்மையாகவே தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவுத் தொடர்பானது அவருக்கு மிகவும் அதிகம் என்றும் அவருக்காக நாம் செய்யும் ஊழியத்தை விட மிகவும் அருமையானதாகும்.

தலைவர்களாகிய ஜனங்கள் மற்றவர்கள் அவர்களை அவர்களுடைய ஜீவியத்தில் தேவனிடமிருந்து ஏதோ கொஞ்சத்தை கொண்டு வருபவர்கள் என்று கருதப்படுவர்கள் ஆவர். நாம் தேவனுடன் மிகவும் நெருக்கமாக இருந்தால் மாத்திரமே இதை நாம் செய்யக் கூடும். (1 பேதுரு 4:11) சில தலைவர்கள் கர்த்தருடன் தாங்கள் செலவிடும் தங்களுடைய வறுமையான நேரங்களின் காரணத்தால் இந்த நன்மைகளை கொண்டு வருவதற்குத் தவறி விடுகிறார்கள். தங்களுடைய மக்களுடன் பேச ஆரம்பிக்கு முன்னர் தேவனுக்கு செவி கொடுத்து கவனிப்பவர்கள் தங்கள் ஜனங்கள் அவர்கள் சொல்வதை கவனித்து கேட்பதாக மிகவும் அதிகமாக கண்டு கொள்வார்கள்.

கிறிஸ்தவத் தலைவர்கள் தங்களால் கொடுக்கக் கூடியதை மட்டுமேயன்றி அதற்கு அதிகமாக வாக்குறுதி செய்யாதிருப்பதை கவனித்துப் பார்க்க வேண்டும். ஒரு நபர் தேவனோடு தனித்துக் காத்திருக்க வேண்டுமானால் அவர்கள் வேறொன்றையும் செய்யும்படியாக ஆலோசனைகள் கூறக்கூடாது. கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் கிரியை செய்யாத நிவாரணங்களைக் குறித்துக் கேட்கும்பொழுது சலிப்படைவார்கள். மேலும் தங்கள் எதிர்பார்ப்புகளை கட்டி எழுப்பும் அனுபவங்களையும், ஒன்றுமே பலாபலன்களைத் தராத நம்பிக்கைகளைக் கேள்விப்படுவதிலும் சலிப்படைவார்கள். இந்த மாதிரி போக்குகளிலிருந்து அவதிப்படுகிறவர்கள் தங்கள் வைராக்கியத்தையும், ஆர்வத்தையும் இழக்கும் போக்கையுடையவர்களாகி எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்டும் அல்லது கிறிஸ்தவக் கோட்பாடுகளை ஊடுருவிச் சென்றும் அவர்களது கிறிஸ்தவத்தைவிட முக்கியமானதாக ஆகும் பிற காரியங்களை வைத்துக் கொள்வார்கள் அல்லது அவர்கள் கர்த்தருக்காகக் காத்திருக்கும்படியாகத் தொடங்குவார்கள். தங்களது தனிப்பட்ட முறையில் தேவனை அறிந்து கொள்வதும் அவருடன் நேரத்தைக் காத்திருப்பதில் செலவழிப்பதே அநேகக் கிறிஸ்தவர்களுக்கு ஆம் அவர்களுடைய தேவனானவர் மில்லியன் கணக்கான மைல் தூரத்திற்கு அப்பால் இருப்பவர் போல காட்சி அளிப்பதாகத் தோன்றும் அந்தக் கிறிஸ்தவர்களுக்குக்கூட இதுதான் விடை ஆகும் அல்லது வெற்றிகரமானதோர் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அவசியமான எல்லா விதி முறைகளையும் முயற்சி செய்தும் அவர்களது நடவடிக்கை ஒன்றாகச் சேரக்கூடாததாக கூட இருப்பார்கள்.

ஒரே ஸ்தாபனக் கூட்டமாகக் கர்த்தருக்காகக் காத்திருப்பது

ஒரே ஸ்தாபனக் கூட்டமாகக் காத்திருப்பது நம்மை ஒரே கூட்டமாக தேவனண்டை இட்டுச் செல்கிறது. நாம் தேவன் நம்மோடு பேசும்படியாக தேவனுக்கென்று இடம் தந்தாலும், ஒவ்வொருவரும் தேவனுடன் ஒப்புரவாகியும், மேலும் ஒருவருக்கொருவர் சரியாக இருக்கிறார்களா என்பதை நிச்சயப்படுத்துவதற்கும் இடம் தந்தாலும் தேவன் இந்த விதமான எல்லா சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துகிறார். இது மிகவும் மகத்தானதோர் அதிகமான ஒருமைப்பாட்டுக்குள் குழுவை நடத்திச் செல்கிறது. ஏனென்றால் நாம் கர்த்தருக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறோமோ அந்த அளவுக்கு நாமும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருப்போம். ஏக சிந்தையும் மனமும் கொண்ட ஒரு கூட்டத்தை தேவன் ஆசீர்வதிக்கிறார். (II நாளா 30:12; சங் 133:1-3; அப் 4:31-33; ரோமர் 15:5-7; II கொரி 13:11; பிலிப் 1:27; பிலிப் 2:1-4) ஒரே கூட்டமாக ஏகோபித்து ஜெபிக்கும் பொழுது அந்தக் கூட்டத்தினருக்கு தேவனிடமிருந்து வரும் அதே காரியத்தை கவனித்துக் கேட்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆகவே அவர் பேசுவதை எப்படிச் செவிகொடுத்து கேட்பது என்பதைக் கற்றுக் கொள்ளவும் அது குழுவாக வழி நடத்துவதற்கு வழிவகை செய்கிறது. (அப் 13:1-3).

சகலக் கிறிஸ்தவர்களும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பம் உண்டு என்பதை ஞாபகப்படுத்துங்கள். ஏனென்றால் நாம் எல்லோரும் அவருடைய பிரதான ஆசாரியத்துவத்தில் பங்கு உள்ளவர்களாவோம். (I பேதுரு 2:9) நாம் எல்லோரும் தேவனுடைய புத்திரர்கள் எனப்படுவதில் சமமாயிருக்கிறோம். (ரோமர் 8:15-17) ஆகவே ஒரு நிறுவனக் கூட்டமாகக் கர்த்தருக்காகக் காத்திருப்பது என்னவென்றாலும் ஆவிக்குரிய ஒரு சிலரிடம் மட்டுமே விட்டுவிடப்படக்கூடாது. அது ஒரு கூட்டத்திற்கான கூட்டு பொறுப்பாகும்.

பயிற்சி

1. தேவனுடைய பிரசன்னம் என்பது பற்றி ஓர் ஆழமான உணர்வை பழக்கப்படுத்திக் கொள்வதற்கு என்ன அர்த்தம் என்பது உனக்குத் தெரியுமா?

   (அல்லது)

   - உன் விசுவாசம் செத்துவிட்டதா?
   - உன்னுடைய ஆராதனை பழமையாகிப் போனதா?
   - உன்னுடைய ஜெபம் இயந்திரத் தன்மையானதா?
   - உன்னுடைய ஆவி செயல்பாடின்றி சுறுசுறுப்பற்று இருக்கிறதா?

2. தேவனுடைய பிரசன்னத்தை பழக்கப்படுத்திக் கொள்வதை ஆரம்பித்து கற்றுக் கொள். உன்னுடைய நாட் குறிப்பில் இப்பொழுதே காலத்தை கட்டி எழுப்பிக் கொண்டு அதற்கு முன்னுரிமை கொடு.

3. தேவனை நீ மிகவும் ஆழமாகவும் நேரடியாகவும் அறிந்திருப்பாயானால் உன்னுடைய ஜீவியத்தில் எது என்னவிதமான மாறுதலை உண்டாக்கும் என்று நினைக்கிறாய்?

4. ஒரு தலைவராக எங்கிருந்து பின்வருபனவற்றைப் பெற்றுக் கொள்கிறாய்:
   - போகும் மார்க்கம்? (சந்தர்ப்பங்களிலிருந்தா, உனது மக்களின் தேவைகளில் இருந்தா, அழுத்தத்தில் இருந்தா, கர்த்தரிடமிருந்தா)?
   - பலமும் சந்தோஷமும்? (உன்னுடைய வேலை (அ) ஊழியத்தில் இருந்தா, வெற்றியிலிருந்தா மற்றவர்கள் அதை உறுதிப்படுத்துவதாலோ, குடும்பம், நண்பர்கள் கர்த்தர் இவர்களிடமிருந்தா)?
   - வல்லமை? (உன்னுடைய திறமையிலிருந்தா, பலத்திலிருந்தா, செய்தித் தொடர்பு திறமைகளாலோ, தலைமைத்துவ திறமைகளாலோ, கர்த்தரிடமிருந்தா)?

5. அநேகக் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் கோட்பாட்டளவில் தேவன் அவர்களுக்காக சிறந்ததையே மாத்திரம் வாஞ்சிக்கிறார் என்று அறிந்திருக்கிறார்கள். (ரோமர் 8:28) அவர்களுடைய எல்லாத் தேவைகளையும் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படி கொடுக்கிறார் என்றும் தெரிந்திருக்கிறார்கள். (பிலிப் 4:19; II பேதுரு 1:3) ஆனால் அவர்கள் இந்தப் பகுதிகளில் தேவனை அவர்கள் நம்புவதாகக் காட்டும் ஜீவியத்தை அவர்கள் ஜீவிப்பதில்லை. அநேகர் தங்களை தேவனுக்கென்று முற்றிலுமாக ஒப்புக் கொடுத்து விட்டால் அவர் அவர்களுக்கு அற்பமாக மிகுந்த சுறுசுறுப்பற்ற (திருப்தியில்) நிறைவு பெறாத ஜீவியத்தைத் தருவார் என்று வருந்துகின்றனர். அவர்கள் தாங்களாகவே தங்கள் ஜீவியத்தில் ஒரு சிறிது நல்லதான வேலையை தேவனால் செய்யப்பட விடுவதை விட நன்றாகவே செய்ய முடியும் என்று நினைக்கிறார்கள். பலர் அதை தாங்களாகவே ஒப்புக் கொண்டாலும் வெளிப்படையாக ஒருக்காலும் சொல்ல மாட்டார்கள். ஆனால் அவர்கள் தேவன் அவர்களைச் சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்யுமாறு கேட்கும்பொழுது தேவன் அதைத் தவறாகப் போகும்படி செய்கிறார் என்று வருத்தத்துடன் உணர்கின்றனர். அவர்கள் செய்வதாவது தாங்கள் சரி என்று கருதுபவற்றை செய்வதால் தேவனுக்கு உதவி செய்வதாக நினைக்கின்றனர். நாம் உண்மையாகவே நமது ஜீவியத்தோடு தேவனை நம்புகிறோமா? நாமும் தலைவர்களாக நம்மால் வழி நடத்திச் செல்லப்படுபவர்களை தேவனை நம்பும்படியான இடத்திற்கு எப்படிக் கொண்டு போவது என்று அறிந்திருக்கிறோமா?

6. நீங்கள் கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார். நீங்கள் அவரைத் தேடினால் உங்களுக்கு வெளிப்படுவார். அவரை விட்டீர்களேயாகில் அவர் உங்களை விட்டு விடுவார். (II நாளா 15:2) நீங்கள் தேவனைச் சந்திக்கும்பொழுது தொந்தரவு இருக்குமானால் தவறு ஆவது என்ன? நீங்கள் தேவனைச் சந்திக்க விரும்புகிறீர்களா, அல்லவென்றால் ஏன் கூடாது?

7. கர்த்தருக்காக காத்திருப்பதற்கு ஒரு நாள் முழுவதையும் செலவிடுவதில் சந்தோஷப் படுகிறீர்களா? இந்த சிந்தனைக்கு எவ்வாறு எதிர்கிரியை செய்வீர்கள்?

8. கர்த்தருக்குக் காத்திருப்பதில் எதற்கு முன்னுரிமை அளிக்கிறீர்கள்? (I தெச 5:17) நீங்கள் ஜெபிக்கும் பொழுது அது தேவனுடைய மகத்துவத்தையும், எங்கும் வியாபித்திருக்கிறார் என்பதை ஒப்புக் கொள்வதாகும். அவர் நம்மை விட மகாப் பெரியவர். ஆதலால் நமக்கிருக்கும் தேவைகளை அவரால் சந்திக்க முடியும்.

கர்த்தர் நம்மோடு பேசும் வழிகள்

வாய் பேசாத ஊமையான விக்கிரகங்களைப் போல் அல்லாமல் நம்முடைய தேவனானவர் நம்மோடு பேசக் கூடிய தேவனாய் இருக்கிறார். அவர் பேசுகிறார். அவருடைய நாமம் "வார்த்தை" என்பதே. (யோவான் 1:1; வெளி 19:13) தேவன் அந்த நாளிலும் பேசினார். இன்றும் பேசுகிறார். நாளைக்கும் பேசுவார். ஆனால் நாம் அவருடைய சப்தத்தைக் கண்டு அறிந்து கொள்ள வேண்டும். இங்கே தான் அதற்கான பிரச்சனை இருக்கிறது. இந்த அத்தியாயத்தில் ஓர் முழுமையானதும் சமநிலையிலுள்ளதுமான போதனையாகிய கற்பித்தலை தேவன் பேசுவதைக் கேட்கும் இந்த தலைப்பை பற்றி முன் வைப்பதற்காக முயற்சிக்கிறது.

எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் முழுவதுமாக ஊடுருவிச் செல்லும் சிந்தனைகளில் ஒன்றுதான் தேவன் மனிதனுடன் பேசுவதாகும். "தேவன் பேசினார். பேசினதை" அதாவது "திருவுளம் பற்றிய தேவன்;" என்று கூறுகிறது. இது தான் ஆரம்பிக்கும் வசனம் அந்தப் புத்தகத்தின் இறுதியில் 12:25ல் பேசுகிறவருக்கு செவி கொடுக்க மாட்டோம். விலகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். "ஏழு" என்பதற்கு அர்த்தமாவது "தேவன் எதன் மூலமாகப் பேசுகிறார்" என்பதை இந்த நிருபத்திலிருந்து தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

1. அவருடைய குமாரன் மூலமாக

"இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்" (எபி 1:1-2).

இயேசு, "வார்த்தையாக" தேவனுடைய சத்தியத்தை பிரகடனஞ் செய்யவும் எடுத்துக் காட்டவுமே வந்தார். (யோவான் 1:14) அவருடைய ஜீவியத்தின் மூலமாகவும் போதனை - ஊழியம் என்பவற்றின் மூலமாகவும் முற்றிலும் முழுவதுமாக தேவனுடைய செய்தியானது வந்தது. இந்த உலகத்தில் அவர் மனித ரூபத்தில் இல்லாவிட்டாலும் இயேசுக் கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார் (எபி 13:8).

நாம் அவரைப் பின்பற்றிச் செல்லும்படியாக இயேசுவே வழியாக இருக்கிறார். அவரிடத்தில் கற்றுக் கொள்ளும்படியாக அவரே சத்தியமாக இருக்கிறார். நாம் அவருக்குள் நடந்து கொள்ளும்படியாக அவரே ஒளியாய் இருக்கிறார். நாம் அவருக்குள் கீழ்படியும் படியாக அவரே மேய்ப்பனாக இருக்கிறார். ஆம்! இயேசுவே தேவனுடைய சத்தமாக (குரலாக) இருக்கிறார். தன்னைப் பற்றி மோசேயிடம் தேவன் கூறியதாவது "உன்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை அவர்களுக்காக எழும்பப் பண்ணி நான் அவருக்குக கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்." (உபா 18:18)

இயேசுவின் ஜீவியமே நமக்குத் தேவனுடைய தராதரமாகும். அவர் இளவாலிப வயதினராய் எவ்வாறு நடந்து கொண்டார் என்றும் அல்லது வளர்ச்சி அடைந்த மனிதனாக வீட்டிலும், வெளியிலும், மதரீதியான சமூகத்திலும், மதச் சார்ப்பற்ற வெளி உலகத்திலும், நண்பர்கள் மத்தியிலும் அல்லது சத்துருக்கள் இடையிலும், உற்சவ நாட்களிலும் அல்லது மரணத்து அடக்க முறைகளிலும், சந்தோஷமான காலங்களிலும், துன்ப மயமான நேரங்களிலும், எவ்வாறு நடந்து கொண்டார் என்று சுவிசேஷங்களில் குறித்து வைக்கப்பட்டு அவரைப் போல நாமும் பின்பற்றும் படியாக வைக்கப்பட்டுள்ளது.

"கிறிஸ்துவும், தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்" (I பேதுரு 2:21).

அவருடைய ஜீவியம் மட்டுமல்ல அவருடைய போதனைகளுங்கூட நமக்கு முன் வைக்கப்பட வேண்டும். அவர் பேசுவதைக் கேட்ட சில அதிகாரிகளும், "அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்று சாட்சி கொடுத்தார்கள். யோவான் 7:46. இதைவிட மெய்யான சாட்சி வேறொன்றுமில்லை. மனுஷ குமாரனுடைய ஜீவியம் மற்றும் போதனைகளைப் பற்றிய ஒரு அருமையான ஒழுங்கானதோர் படிப்புக்கு நாம் நம்மையே ஒப்புக் கொடுக்க வேண்டும். இதைத் தவிர வேறு எந்த இடத்திலும் தேவன் சப்தமாகவும் தெளிவாகவும் எங்கும் பேசினதில்லை. அவர் நம்மைப் பார்த்து அழைக்கிறார். "இவர் என்னுடைய நேச குமாரன். இவருக்குச் செவி கொடுங்கள;" (மாற்கு 9:7)

2. பரிசுத்த ஆவியின் மூலமாக

ஆகையால் பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே, இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்... உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.....(எபி 3:7)

இயேசு தமது அன்பான சீஷர்களுக்கு வாக்குத்தத்தம் செய்தார். "பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே .. உங்களுக்கு எல்லாவற்றையும் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 14:26) இது பெந்தேகொஸ்தேயின் காலம். பிதாவும் குமாரனும் பரலோகத்தில் வாசம் பண்ணுகிறதால் பரிசுத்த ஆவியானவர் இந்த பூமிக்கு இறங்கி வந்தார். வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள ஏழு சபைகள் ஒவ்வொன்றிற்கும் சொல்லப்படும் செய்தியாவது, "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக் கடவன்" என்பதாகும். (வெளி 2:7,11,29; 3:6,13,22)

ஏசாயா 11:12ல் குறிப்பிடப்படுகிற ஆறு கிரியைகளில் நான்கு செய்தித் தொடர்பைக் குறிப்பிடுகிறது. "ஞானம், உணர்வு, ஆலோசனை, அறிவு" ஆகியவை ஆகும். I கொரி 12:7-10 அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள 9 வரங்களில் ஐந்து செய்தித் தொடர்பைப் பற்றிக் குறிப்பிடுகிறது. "ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், தீர்க்கதரிசனம் உரைத்தல், பற்பல பாஷைகள், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும்" ஆகியவை செய்தித் தொடர்புடன் சார்புடையது.

நவீன காலத்து தொழில் நுட்ப அனுகூலங்கள் எதுவுமின்றி ஆதித் திருச்சபையானது முற்றிலுமாக "பலத்தினாலுமல்ல, வல்லமையினாலுமல்ல. ஆனால் என்னுடைய ஆவியினாலே ஆகும்" என்ற கோட்பாட்டின் படியே செயல்பட்டது. நம்முடைய இறையியல் அறிவானது அதை அறிக்கை செய்வதற்குத் தயங்குகிறது. "பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்" ஆனால் அப்போஸ்தலர்களும், அப்போஸ்தலர் நடபடிகளின் ஆக்கியோனும் சிறிதும் வெட்கமின்றி பரிசுத்த ஆவியானவருடைய குரலை ஒப்புக் கொண்டார்கள். "நீ எழுந்து, சந்தேகப்படாமல் போ" என்று சொன்னார். (அப் 10:19-20) "பர்னபாவையும் சவுலையும் பிரித்து விடுங்கள்" என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். (அப் 13:2) "கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறார்" (அப் 20:23) "ஆகிலும் ஆவியானவர் வெளிப்படையாய் சொல்லுகிறபடி" I தீமோத் 4:1 இவைகள் தான் சில உதாரணங்களாகும்.

தேவன் ஆவியின் வரங்களின் மூலமாகப் பேசுகிறார். மேலும் அவர் தரிசனங்கள், சொப்பனங்கள், அடையாளங்கள் ஆகியவற்றையும் கையாளுகிறார். இவைகள் அனைத்தும் கடைசி நாட்களுக்காக வாக்குத்தத்தமாக செய்யப்பட்டவை. (அப் 2:16-21) அப்போஸ்தலர் காலத்து இறுதிப் பகுதியில் இந்த வழி முறைகளை வாபஸ் பெற்றதாக உறுதி செய்வதற்கு எந்த விதமான வேதாகமத்து ஆதாரமும் இல்லை. தேவனை மட்டுப்படுத்தாதே. உண்மைதான் இது தவறாக பயன்படுத்தியதாக எண்ணற்ற சம்பவங்கள் உண்டு. ஆனாலும் பின்னர் உபயோகப்படுத்தப்படாமல் தவறாகப் பயன்படுத்துவதற்கு நிவாரணமா?

வரத்தைக் கொடுப்பவரும் வரமும் ஆகிய இரண்டும் பூரணமானவையே. (யாக் 1:17) பிரச்சனையாவது வரத்தைப் பெற்றவர்களிடமே உள்ளது! "நாம்" பகுதிகளாக தீர்க்கதரிசனம் சொல்லுகிறோம் அல்லது பூரணமற்றதாகக் கூறுகிறோம். (I கொரி 13:9) இதன் அர்த்தமாவது தீர்க்கதரிசனமானது சோதிக்கப்பட்டும் தெளிவாக உணர்த்தப்படவும் வேண்டும். (I கொரி 14:29; I தெச 5:19-21) தீர்க்கதரிசனம் சொல்லுதலை அற்பமாய் எண்ணாமலும் அதை முற்றிலும் சார்ந்தும் இருத்தல் கூடாது. ஒரு எதிர்மறையான மனப்போக்கு ஆவியை அவித்துப் போடும். சில ஜனங்கள் மிகவும் எச்சரிக்கையாகவும் ஜாக்கிரதையாகவும் இருப்பதால் ஆசீர்வதிக்கப்படுவதில்லை. குருட்டுத்தனமான தப்பெண்ணங்களை நீக்கி விடுங்கள். தயவு செய்து! இரட்சிக்கப்பட்டவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் உள் மனதின் ஆழத்தில் ஒலிக்கும் குரல் ஒரு வெகுமானம் ஆகும். (ரோமர் 8:14,16) இந்தக் குரலுக்கு உணர்வுள்ளவர்களாய் இருப்பதற்காக நாம் ஆவியின் ஜெபம் - துதியின் ஆடையை அணிந்திருக்க வேண்டும். (அப் 13:2) மோசே சந்திப்பு ஆசரிப்புக் கூடாரத்திற்குள் போன பொழுது தேவன் அவனுடன் பேசினார். (எண் 7:89) நாம் பொறுமையுடன் தேவனுக்காகக் காத்திருக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவர் தவிர்த்து விடக் கூடாத அச்சடையாளங்களை நம்முடைய மனதில் நாட்டி வைக்கிறார்.

தேவனை நாடக பாணியில் நம்முடன் பேசும்படியாக எதிர்பார்ப்பது வஞ்சிக்கப்படுவதற்கு செல்லும் நிச்சயமான சாலை மார்க்கம் ஆகும். கேட்கக் கூடிய குரல்கள், மின் வெட்டும் தரிசனங்கள் உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டும் அனுபவங்கள் ஆகியவை மிகவும் அதிகமாகக் கருதப்படும். விதி விலக்கே அன்றி நியதி என்று இருக்க முடியாது. சாத்தான் என்பவன் மாய்மாலத்துக்கு எஜமானன். அவன் தன்னையே ஓர் ஒளியின் தூதனாக மாற்றிக் கொண்டு பலரை வஞ்சித்திருக்கிறான். (II கொரி 11:14) அமானுஷ்யமாகத் தோன்றுகிற அனைத்தும் தேவனிடமிருந்து வர வேண்டுமென்ற அவசியமில்லை. ஆயிரக்கணக்கானவர்கள் "வஞ்சிக்கும் ஆவிகளை" கவனிததுக் கேட்கின்றனர். (I தீமோத் 4:1) அந்த அமர்ந்த மெல்லிய சத்தம் நமது உணர்வுகளுக்கு மிகக் குறைவாக வசீகரமாகிறது. ஆனாலும் அது பாதுகாப்பானதுதான். (I இராஜா 19:11-13)

3. அவருடைய வேதாகமத்துப் பகுதிகள் மூலமாக

தேவனுடைய வார்த்தையானது ஜீவனுள்ளதும் வல்லமையானதும் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை விட கூரானதாகும். (எபி 4:12) அதைப் போலவே வசனத்தின் மூலமாக வழி நடத்தப்படுதலும் கூர்மையானது கண்கூடாகத் தெளிவானது! வேதாகமத்து பகுதிகள் மூலமாக தேவன் நம்மை போதித்து கண்டித்து உணர்த்தி, சீர்திருத்தி நமக்கு கற்பனைகளைக் கொடுத்து வழி நடத்துகிறார். (II தீமோத் 3:16-17) நாம் இருட்டில் தட்டு தடுமாறி தடவிக் கொண்டிருக்கும்பொழுது நமது வழியை அவருடைய வார்த்தையால் வெளிச்சமாக்கிக் கொடுக்கிறார். (II பேதுரு 1:19) வேதாகமம் என்பது தேவனுடைய மெய்யான ஜீவ சப்தமாகும். வேதாகமத்தை அரை மணி நேரம் வாசிப்பது என்பது தேவனுடைய சப்தத்தை அரை மணி நேரமாகச் செவிகொடுத்து கேட்டது போலாகும். வேதாகமம் தேவன் பேசும் அந்த ஒரே மெய்யான குரலிலே பேசுவதாகும்.

முற்றிலுமாக முடிவு பெற்ற வேதாகமம் நமது கைகளில் அதுவும் பல மொழி பெயர்ப்புகளில் நமது சலுகையானது வேறு எந்த சந்ததியாரையும் விட மிகவும் உயர்ந்ததாக இருக்கிறது. ஆனாலும் தனிப்பட்ட சொந்த தியானமானது வீணாகவே புறக்கணிக்கப்படுகிறது. நாம் ஒழுங்காக பிரமாணங்களையும் சாட்சிகளையும் தியானிக்காவிட்டால் அதாவது போதனைகளையும் வேதாகமத்து உதாரணங்களையும் - ஜீவியத்தின் கால சந்தர்ப்பங்களில் தேவனுடைய உள்ளத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. (ஏசாயா 8:20) வேதாகமத்தோடு ஒரு மணி நேரம் ஒரு நாளில் செலவிடுதல் மிகக் குறைந்த அளவாகும். வேதாகமத்தை அதிகத் துரிதமாகக் கடந்து செல்லுதல் ஒரு உச்ச கட்டத்தில் ஒரு வைக்கோல் துரும்பைப் பிடித்துக் கொள்வது தவறான (வழியில்) மார்க்கத்தில் செல்வதாகும். வேதாகமம் என்பது அதிர்ஷ்டம் பார்க்கும் விளையாட்டல்ல. நமது அன்றாட உணவைச் சாப்பிடுவது போல தேவனுடைய வார்த்தையால் ஒழுங்காகப் போஷிக்கப்பட வேண்டும். (மத் 4:4) எல்லா வேதாகமத்து சத்தியங்களும் நன்மை பயக்கக் கூடியவை. ஆகையால் எந்த ஒரு பகுதி வசனங்களையும் புறக்கணித்தல் கூடாது.

ஒரு குழப்பமான சூழ்நிலையில் அல்லது முடிவு பெறாத ஒரு நிலையில் அமைதியான தியான கால நேரத்தை போக்கிடமாகக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய ஆவியானவர் வேதாகமத்திலிருந்து ஒரு வசனத்தையாவது அல்லது பகுதியையாவது ஜீவனுள்ளதாக முன் கொண்டு வருவார். மேக மூட்டம் கலைந்து விடும். வேதாகமத்து வார்த்தைகளை மனப்பாடம் செய்பவர்கள், எந்த விதமான இடுக்கமான நிலைமைகளிலிருந்தும் தங்களை மகிமையான விடுதலைக்கு வழி நடத்தும் ஒரு வாக்குத்தத்தத்தையோ அல்லது கோட்பாட்டையோ ஆவியானவர் சாந்தமான நினைவு கூறுதலான அனுபவத்திற்குள் நடத்துவார். கர்த்தருடைய வார்த்தையை ஒரு பொழுதும் கேட்டறியாமலும் அல்லது தரிசனத்தையோ காணமலும் இருந்தாலும் தேவனுடைய சித்தத்தை தங்கள் வம்சாவளி காலத்திலேயே தாங்கள் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளின் அடிச்சுவட்டில் ஒரே சீராகவும், நம்பிக்கையுடனும் நடந்து வந்தால் நிறைவேற்றிய தேவ மனுஷர் / ஸ்தீரிகளின் ஜீவிய எடுத்துக் காட்டுகளினால் சரித்திரம் பிரவாகித்து கரைபுரண்டு ஓடுகிறது. எவ்வித சந்தேகமுமின்றி வேதாகமத்து வழி நடத்துதல் ஆனது எல்லாவற்றையும் விட நிச்சயமானதும் பாதுகாப்பானதுமாகும்.

4. பரிசுத்தவான்களின் மூலமாக

"இன்று என்னப்படுமளவும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" (எபி 3:13) "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்.

நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும்." (எபி 10:25)

ஆவியினால் நிரப்பப்பட்டவர்களும், வேதாகமத்து வசனத்தால் நிரப்பப்பட்டவர்களுமாகிய உடன் விசுவாசிகளைப் பெற்றிருப்பது ஓ, எவ்வளவு பாக்கியமானது! (எபேசி 5:19; கொலோ 3:16) "ஓ, வாருங்கள் நல்ல நாள்" அல்லது "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று நாம் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் பொழுது மட்டும் சொல்லிக் கொள்வது போதாது. நாம் ஒருவரையொருவர் கட்டி எழுப்ப வேண்டுமென்று ஒப்புக் கொடுத்திருக்கிறோம். பாஷைகளையும், தீர்க்கதரிசனத்தையும் I கொரி 14ம் அதிகாரத்தில் ஒப்பிட்டுக் கூறும்பொழுது அப்போஸ்தலனுடைய வற்புறுத்திக் கூறுவதாவது நாம் ஒருவருக்கொருவர் பக்தி விருத்தி செய்து கொள்வதாகும். நம்முடைய சகோதர சகோதரிகளின் ஆலோசனையைத் தேடிப் பெற்றுக் கொள்ளாத பொழுது நாம் எவ்வளவு (நன்மைகளை) இழந்து விடுகிறோம்! வயதும், அனுபவமும் அனுகூலமாக இருக்கலாம். ஆனால் அவை ஆலோசனை கூறுவதற்கு நிர்ணய விதி ஆகாது. ஒருவரும் இகழப்படக் கூடாது. ஒரு சிறு குழந்தை கூட தேவனுடைய இராஜ்ஜியத்தில் நடத்திச் செல்லலாம்! தேவன் எஸ்தருக்கு மொர்தெகாய் வழியாகப் பேசினார். ஒரு ஜனம் பாதுகாப்புப் பெற்றது. (எஸ்தர் 4:13-14) யோவாப் தாவீது இராஜாவை மக்களைத் தொகையிட வேண்டாம் என்று ஆலோசனை கூறினான். ஆனால் தாவீது மறுத்தான். ஒரு தேசத்து ஜனம் நெருக்கப்பட்டது. (II சாமு 24:2-4,10) திறந்த ஒளி மறைவில்லாத ஆலோசகர்கள் மிகவும் அரிதாகி விடுகிறார்கள். ஆனாலும் வேதாகமம் கூறுவதாவது, மறைவான சிநேகத்தைப் பார்க்கிலும் வெளிப்படையான கடிந்து கொள்ளுதல் நல்லது. (நீதி 27:5-6,17) மற்றவர்களைப் புண்படுத்தி விடுவோமோ என்ற அச்சம் அவர்களுக்கு ஆலோசனைக் கூறுவதில் தடுத்து விடுகிறது. அப்பொழுது நாம் நமது பொறுப்பிலிருந்து தவறி விடுவதில்லையா? "என் சகோதரனுக்கு நான் காவலாளியா?" என்று கேட்டவன் ஒரு கொலை பாதகன் அல்லவா? கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது, தனது அங்கத்தினர்கள் தங்கள் ஒருவருக்கொருவருக்கான பொறுப்பிலிருந்து தவறுவதால் கஷ்டப்படுகிறது. "உன் சொந்த அலுவலைக் கவனித்துக் கொள்" என்பது உலகத்தின் அறைகூவும் மொழி ஆகும். ஆனால் தேவனுடைய குடும்பத்தில் அது வித்தியாசமானது. என்னுடைய சகோதரன் அசதியாக இருக்கும் பொழுது அவனை தட்டி எழுப்ப வேண்டும். (எபி 10:24) அவன் வழி விட்டு விலகும் பொழுது அவனைத் திரும்பவும் சரியான பாதைக்குக் கொண்டு வர வேண்டும். (யாக் 5:19-20)

5. அவருடைய ஊழியக்காரர் மூலமாக

"தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து நடத்தினவர்களை நீங்கள் நினைத்து அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்."(எபி 13:7,22) பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனையாகக் கூறியதாவது,"நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக் கொள். கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்." (II தீமோத் 2:7) பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய ஜீவியத்தாலும் (உதவு) வாய் பேச்சுகளினாலும் தேவனுடைய வாய் மொழியாக இருந்தான். எபேசுவிலுள்ள மூப்பர்களுக்கும், விசுவாசிகளுக்கும் தன்னுடைய உதாரணத்தைப் பின்பற்றி அதன் பிரகாரம் செய்யும்படியாக சவால் விடுத்தான். (அப் 20:35) பிலிப்பு சபையிலுள்ள பரிசுத்தவான்களுக்கு அவன் எழுதியதாவது, "நீங்கள் என்னிடத்தில் கற்றும், அடைந்தும், கேட்டும் கண்டுமிருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள். அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்." (பிலிப் 4:9)

வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் திருச்சபைத் தலைவர்களை நட்சத்திரங்களாகப் படம் பிடித்துக் காட்டப்படுவதாகப் பார்த்தான். (வெளி 1:20) வழி காட்டும் நட்சத்திரங்களாக! யோவான் அவனுடைய நிருபத்தில் எழுதியதாவது, "நாங்கள் தேவனால் உண்டானவர்கள். தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவி கொடுக்கிறான்." (I யோவான் 4:6)

திருச்சபையிலுள்ள ஐந்து வகையான ஊழயங்கள் பரிசுத்தவான்களை தகுதிப் படுத்தி, பக்தி விருத்தி செய்து போதிப்பதற்கு மாத்திரமே. (எபேசி 4:11-13) ஒரு அப்போஸ்தலன் தனது அதிகாரத்தினாலும், ஞானத்தினாலும், முன் காட்டிச் செல்லும் ஆவியினாலும் உங்களை ஆசீர்வதிக்கலாம். ஒரு தீர்க்கதரிசி ஊடுருவிப் பாயும் உள் நோக்குப் பார்வையாலும், தைரியத்தினாலும் சிலிர்க்கும்படி செய்யலாம். ஒரு சுவிசேஷகர் உன்னை பேரார்வத்தினாலும் ஆத்துமாக்கள் பேரில்

வாஞ்சையாலும் நிரப்பி விடலாம். ஒரு மேய்ப்பன் உன்னை தனது நேர்மையாலும் அன்பினாலும் வழிகாட்டியும் பாதுகாத்தும் செல்வான். ஒரு போதகர் உன்னை தன்னுடைய ஐயந்திரிபற்ற அறிவினாலும், சமநிலையாலும் பிரகாசிக்கச் செய்தும் ஸ்திரப்படுத்துவான். இந்நாட்களில் விசுவாசிகள் பெரும்பாலும் சுவிசேஷகர்களோடோ அல்லது போதகர்களோடோ ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்போஸ்தலர்களிடமாவது தீர்க்கதரிசிகளிடமாவது தங்களைக் காட்டிக் கொள்வதில்லை. ஆகவே திருச்சபையில் பெரும்பான்மையானவர்கள் திசையறியாமலும், தரிசனம் இல்லாமலும் ஆத்ம ஆதாய நோக்கமற்றவர்களாகவே இருக்கின்றனர்! மிஷினரிகளின் வாழ்க்கை வரலாற்றைப் படியுங்கள். இவ்வாறு வரலாறுகளைப் படிக்கும்பொழுது அநேகருக்கு தங்களுடைய ஜீவியத்திற்கான தேவனுடைய சித்தத்தைக் கண்டு அறிந்திருக்கிறார்கள்.

தேவன் தாமே ஊழியம் செய்யும் மூப்பர்களை மாத்திரம் அல்ல. ஆனாலும் திருச்சபையிலுள்ள மூத்த அங்கத்தினர்கள் மூலமாகவும் பேசுகிறார். ஊழியர்களுங்கூட இந்த மூத்த ஊழியர்களுக்கும் செவி கொடுத்துக் கேட்டும் அவர்களுடைய ஐசுவரியமான அனுபவங்களிலிருந்தும் நன்மையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவர்களை இழிவு படுத்தியவர்கள் தங்களுடைய அழிவுக்காகவே நாசத்தை வருவித்து அவ்வாறு செய்கிறார்கள்.

தேவன் தாமே மோசேயுடன் முகத்து முகமாக அநேகக் காரியங்களைக் குறித்து பேசினார். ஆனால் அந்த சாதாரணமான எளிய கொள்கையான வேலையைப் பகிர்ந்தளித்தலையும் அதிகாரத்தை ஒப்படைப்பு செய்வதையும் (மோசே) அவனுடைய மாமனாரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. (யாத் 18:13 - 24) மோசே அந்த மாதிரியான ஆலோசகர்களைப் பெரிதும் மதித்திருந்தான். அவனுடைய மைத்துனன் தன்னுடைய தேசத்துக்கும் இனத்தாரிடத்திற்கும் திரும்பிப் போகும்படியாக விரும்பிய பொழுது, மோசே அவனைப் பார்த்து, "நீ எங்களை விட்டுப் போக வேண்டாம் ..... எங்களுக்கும் கண்களைப் போல இருப்பாய்" என்று கேட்டுக் கொண்டான் (எண் 10:29-31) ஆனால் அது நூல் வழியாக நீ எங்களுக்கு வழிகாட்டியாய் இருப்பாய் என்பது அர்த்தமாகும். ஆனால் ரெகோபெயாமுடைய கதையானது ஒரு சோக மிகுந்த நினைப்பூட்டுதலாகும். ஆனால் முதியோரின் ஆலோசனையை தள்ளி விட்டு இராஜ்ஜியத்தில் என்றுமே சீராக்க முடியாத உடைப்பை உண்டாக்கக் காரணமானான். (I இராஜா 12:8-16)

சமயா சமயங்களில் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்கு மட்டுமே ஊழியர்கள் நல்ல வழி காட்டுதலைக் கொடுக்கக் கூடியவர்கள் என்றும், ஆனால் மதசார்பற்றதும், தொழில் வணிக சம்பந்தமானவற்றிற்கு ஆலோசனை கொடுக்கத் தகுதியற்றவர்கள் என்றும் கருதுகிறோம். உண்மைதான் ஒரு போதகர் அல்லது அப்போஸ்தலன் தொழில் நுட்பமான ஆலோசனைகளைக் கொடுக்க முடியாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களுடைய உள் நோக்கு பார்வையாலும் உள்ளத் தூண்டுதலாலும் பொதுவான வழி காட்டி முறைகளை வழங்கக் கூடும். ரோமாபுரிக்கு பவுல் சென்ற கடல் பிரயாணத்தின் பொழுது, நூற்றுக்கதிபதி பவுல் சொன்னதைக் செவி கொடுத்துக் கேட்பதற்குப் பதிலாக அந்த கப்பல் மாலுமியையும் கப்பல் எஜமானனுடைய யோசனையையும் பின்பற்றினான். இதன் விளைவு பொருள் நாசமும் நஷ்டமும் ஆகும். (அப் 27:11,21)

6. சந்தர்ப்ப சூழ்நிலைமைகளின் மூலமாக

சந்தர்ப்ப சூழ்நிலைமைகள் மோசேயை பார்வோனிடமிருந்து மீதியானியரின் நாட்டுக்குக் கட்டாயமாக தப்பி ஓடும்படி செய்தது. (யாத் 2:11-15) ஆனால் நிருபங்கள் எழுதிய ஆசிரியர் இந்த சம்பவத்தைப் பற்றிக் கருத்துத் தெரிவித்தபொழுது அது மோசேயுடைய விசுவாசத்தின் நடவடிக்கையென்று அழைக்கிறார். (எபி 11:24-27) ஆம் தேவன் சந்தர்ப்ப சூழ்நிலைமைகளின் மூலமாகவே பேசுகிறார். சவுலை இராஜாவாக அபிஷேகம் செய்த பிறகு சாமுவேல் சவுலுக்குச் சொன்னதாவது, "இந்த அடையாளங்கள் உனக்கு நேரிடும் போது, சமயத்துக்கு ஏற்றபடி செய். தேவன் உன்னோடே இருக்கிறார்." (I சாமு 10:7) நமது தேவன் இயற்கைக்கு கர்த்தராகிய ஆண்டவராக இருக்கிறார் என்றும் எல்லா சம்பவங்களுக்கும் அவரே முடிவான கட்டுக்குள் வைத்திருப்பவர் என்பதை நாம் நமபுவோமானால் நம்மைச் சுற்றிச் சம்பவித்து நடப்பவைகளிலிருந்து நாம் பாதுகாப்பாக அவர் தரும் செய்தியைப் படித்தறிந்து கொள்ளலாம். "பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது. இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது." (சங் 19:2) காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே,

உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய் காணப்படும். (ரோமர் 1:20) "காலங்களின் அடையாளங்களை" நாம் நிதானிக்கும் படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். (மத் 16:3) அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய இருதயத்தை சந்தர்ப்பங்களின் மூலமாகப் புரிந்து கொள்ள முடியும் என்று நம்பினான். அவன் ஊழியப் பிரயாணத்திலிருக்கும் பொழுது பரிசுத்த ஆவியானவர் அவனுடைய குழுவுக்காக ஆசியாவிலும், பித்னியாவிலும் வழிகளை அடைத்து விட்டார். ஆகையால் அவர்கள் துரோவாவுக்கு வந்தனர். அங்கு பவுலுக்கு மக்கதோனியா (நாட்டான்) தேசத்தான் தனது நாட்டிற்கு அழைப்பதாக தரிசனம் கிடைத்தது. இந்த சம்பவங்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து இணைத்துக் கொண்டு அந்தக் குழுவினர் கர்த்தர் தாமே அவர்களை மக்கதோனியா நாட்டில் பிரசங்கிக்குமாறு அழைத்திருக்கிறார் என்று "முடிவு எடுத்தார்கள்" (அப் 16:6-10) அங்கே அவர்களுக்கு முதல் ஐரோப்பிய விசுவாசியைக் கிடைக்கப் பெற்றுக் கொண்டார்கள்!

இரண்டு மிகச் சிறந்த மேன்மையான வசனப் பகுதிகள், நம்மை இந்த சந்தர்ப்பங்களை எளிதாக எனோ தானோ என்று எடுத்துக் கொள்ளக் கூடாது என்று உற்சாகப்படுத்துகின்றன. (நீதி 3:6) உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள். அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். (ரோமர் 8:28) அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

அதே சமயத்தில் சந்தர்ப்பங்கள் மாத்திரம் நமக்கு வழிகாட்டியாய் இருக்க முடியாது. தேவன் ஆபிரகாமுக்கு சொன்னதாவது அவனுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்ற கூறப்பட்டது. ஆனால் அவனும் சாராளும் வயது முதிர்ந்தவர்கள் ஆனார்கள். அவனுடைய மனைவியாகிய சாராள் தனது விருப்பத் தயாராக இருப்பதன்படி, தன் வேலைக்கார ஸ்தீரியை மனைவியாக்கி கொள்ளும்படி யோசனை கூறினாள். இந்த தர்க்க ரீதியான சந்தர்ப்பங்கள் ஆபிரகாமை திசை தவறி நடத்தியது.

7. கஷ்டங்களின் வழியாக

"என் மகனே கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே" என்று உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். (எபி 12:5) சர்வ ஞானமுள்ள தேவன் நமக்கு அப்பத்தையும் உபத்திரவத்தின் தண்ணீரையும் கொடுத்து போஷிக்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்வதாய் இருக்கலாம். இந்த மாதிரியான அவலமான நிலையிலும் நமக்குக் கொடுக்கப்படும் வாக்குத்தத்தமாவது, "உன் போதகர்கள் இனி ஒரு போதும் மறைந்திருக்க மாட்டார்கள், உன் கண்கள் உன் போதகர்களைக் காணும். வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்." (ஏசாயா 30:20-21) தேவன் தமது ஜனங்களுக்கு ஏன் பசியை அனுமதித்து பின்பு மன்னாவை அவர்களுக்குக் கொடுத்தார். அதாவது மனிதன் ஆனவன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை அறிந்து கொள்வதற்காகவே அப்படிச் செய்கிறார். மோசே இதை சிட்சையின் மூலமாகப் போதிக்கிறார் என்று அழைக்கிறார். (உபா 8:3,5) தேவன் நமது துன்பத்தின் நடுவிலும் அவரிடம் கவனித்துக் கேட்கும்படி ஓடி வராவிட்டால் தேவன் வேதனைப்படுகிறார். ஏரேமியா தேவனுடைய துக்கத்தைக் குறித்து புலம்புகிறான். நான் உங்கள் பிள்ளைகளை அடித்தது விருதா. சிட்சையை ஏற்றுக் கொள்ளாமல் போனார்கள். (ஏரேமியா 2:30) தேவன் தமது பிரம்பை முக்கியமாக நமது கவனத்தை பெறுவதற்காகவே விளாசுகிறார். நாம் இன்னும் கவலையீனமாக இருப்போமானால் அந்த சிட்சையின் நோக்கத்தை நிறைவேற்ற தவறினால் அது மேலும் பல சிக்கலான முரண்பாடுகளுக்குள் நடத்திச் செல்லும். தாவீதுடைய ஜீவியம் மிகவும் துன்பம் நிறைந்தது. அது தனக்குக் கற்றுக் கொடுக்கும் போதனையின் மதிப்புக்காக அதைக் கெட்டியாகப் பற்றி பிடித்துக் கொண்டான். மேலும் அவன் சாட்சியாக "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொண்டேன்" கூறுகிறான். (சங் 119:71) உலோகம் உருக்கப்படுவதற்கு முன்னர் வடிவமைக்கப்படுவதில்லை. எல்லாக் காலத்து பரிசுத்தவான்களும் கண்ணீரின் பள்ளத்தாக்கிலே வாழ்க்கையின் மிகச் சிறந்த பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளனர். சவுலைப் போல அங்கும் இங்கும் ஓடிப் பரந்து உடனடியான நிவாரணத்தை அஞ்சனக்காரர் மூலமாகத் தேடாமல் நமது வழிகளை நன்கு பரிசோதித்து அறிந்து தேவனுடைய கரங்களில் விழ வேண்டும். தேவனுடைய மௌனம் செவி கொடுத்துக் கவனிப்பதற்கு மிகவும் அற்புதமானது!

சாராம்சம் (சுருக்கம்)

இந்த ஏழு வழிகளான செய்தித் தொடர்புகள் ஒன்றுக்கொன்று உறவு தொடர்புடையது. வெகு ஆபூர்வமாகவே தேவன் அவைகளில் ஏதாவது ஒன்றை தனிமைப்படுத்தி பயன்படுத்துகிறார். "தேவன் ஒரு வேளை கேட்கும்படி தெளிவாக, அடிக்கடியும் அடையாளங்களினாலும் சில நேரங்கள் மற்ற மனிதர்கள் மூலமாகவும் பேசுகிறார். மேலும் அதை சந்தர்ப்பங்களின் மூலமாகவும் ஆனால் எப்பொழுதும் வேதாகமத்தின் வாயிலாகவும் பேசுகிறார்" இந்த வார்த்தைகளின் சொற்றொடர்கள் இந்த பாடத்தைப் பற்றிய போதனைகளை மிகச் சிறப்பான சாராம்சமாக தொகுத்துக் கூறுகின்றன.

ஆவிக்குரிய தலைமைத்துவம்

வெற்றிக்கான திறவுகோல்:

A) யாதொரு உண்மையான முயற்சியும் மற்றவர்களை வெற்றியுடன் நடத்திச் செல்வதற்கான திறமையாகும்.
B) ஒவ்வொரு காரியமும் எழும்புவதும் வீழ்ச்சியுறுவதும் தலைமைத்துவத்தின் மேல் விழுகிறது.
C) உனது ஊழியத்தின் செயலூக்கமானது நீ நடத்திச் செல்லும் திறமையை அல்லது மற்றவர்கள் மீது கொள்ளும் தாக்கத்திற்கு மேலாக ஒருக்காலும் எழும்புவதில்லை.

தலைமைத்துவம் என்பது கற்பிக்கப்படக் கூடியது: 90% விகிதம் ஒருவர் கற்றுக் கொள்கிறார் 10% விகிதம் வரமாகும்.

A) யாரும் ஒரு தலைவராகப் பிறப்பதில்லை. ஏன்? நாம் குழந்தைகளாகப் பிறந்திருக்கிறோம்.
B) தலைமைத்துவமானது விருத்தி செய்யப்படுகிறது. அது கண்டுபிடிக்க முடியாதது.
C) தலைமைத்துவமானது ஜீவிய காலம் முழுவதிலும் மாதிரியாக உருவாக்கப்பட்டது. (இயேசுவைப் போல பவுல் செய்தது போல)
D) ஒரு தலைவராக வேண்டுமென்றால் சுய ஒழுங்குக் கட்டுப்பாடு அவசியமாகும்.

ஜனங்கள் தங்களை வழி நடத்தப்பட வேண்டுமென்று விரும்புவர் மேற்பார்வை செய்யப்படுவதற்கல்ல!

A) உலகத் தலைவர்கள் அவர்கள் அரசியல் சார்பானவர்களோ கல்வி சம்பந்தமானவர்களோ அல்லது வணிகம் சம்பந்தப்பட்டவர்களாக யாராக இருந்தாலும் அவர்கள் நடத்திச் செல்வார்கள் மேற்பார்வை செய்ய மாட்டார்கள்.
B) மற்றவர்களை மிகவும் சிறப்பாக ஊழியம் செய்யுமாறு தூண்டி உற்சாகப்படுத்துவதே ஒரு தலைவரின் சாதனையாகும்.
C) ஒவ்வொரு காலத்திலும் தலைவர்கள் கட்டாயமாக முன் வந்து சமயத்தின் அவசரத்தைச் சந்திக்கும் படியான காலம் வரும்.

தலைமைத்துவம் என்பது செல்வாக்கின் தாக்கம்: ஒன்று நல்லதுக்கோ அல்லது கெட்டதுக்காகவோ பின்பற்றி வருபவர்களைப் பெற்றுக் கொள்ளும் படியாக.

தலைமைத்துவத்தின் ஐந்து மட்டங்கள் (நிலைகள்):

A) பதவி: மக்கள் பின்பற்றிச் செல்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் பின்பற்றிச் சென்றே ஆக வேண்டும். செல்வாக்கு என்பது அளவிட்டு குறிக்கப்பட்ட கோட்டிற்கு ஆன பதவி விவரத்திற்கு அப்பால் போகாது. நீண்ட காலமாக பதவியில் நீடித்தால் குறைவான ஒழுங்குணர்வு உண்டாகும்.

B) அனுமதி உத்தரவு: மக்கள் உங்களைப் பின்பற்றுகிறார்கள் என்றால் அவர்கள் விரும்புவதால் உறவு முறைகள் முன்னேற்றப்படுகிறது. தலைமைத்துவமானது அதிகமான நீண்டகாலம் பதவியில் நீடித்தால் அதீதமான நோக்க மனப்பான்மை பெற்ற மக்கள் சலிப்படைந்து விடுகிறார்கள்.

C) உற்பத்தித் திறன்: நீங்கள் நிறுவனத்திற்காக என்ன செய்திருக்கிறீர்கள் என்ற காரணத்தால் மக்கள் பின்பற்றுகிறார்கள். வெற்றி என்பதை அதிகமான மக்கள் உணர்ந்து கொள்கிறார்கள்.

D) தனிப்பட்ட தனது முன்னேற்றம்: மக்கள் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதற்காக பின்பற்றுகிறார்கள். இங்கே தான் நீண்ட கால அளவு தலைமைத்துவம் உண்டாகப் பெறுகிறது.

E) ஆள் தன்மை: ஜனங்கள் உங்களை நீங்கள் யார் என்பதற்காகவும், யாருக்கு பிரதி நிதியாக செயல்படுகிறீர்கள் என்பதற்காகவும் பின்பற்றுகிறார்கள்.

எஜமானனுக்கும் தலைவனுக்கும் உள்ள வேறுபாடுகள்

எஜமானன்	தலைவன்
ஜனங்களை விரட்டுகிறான்.	ஜனங்களைப் பயிற்றுவிக்கிறான்.
அதிகாரத்தின் மீது சார்ந்து இருக்கிறான்.	நல்லெண்ணத்தின் பேரில் சார்ந்துள்ளான்.
அச்சத்தை உண்டாக்குகிறான்.	பேரார்வத்தைத் தூண்டுகிறான்.
நான்/என்னை - என்று சொல்லுகிறான்.	நாம் / எங்களை என்று சொல்லுகிறான்.
வேலை தடைக்கு மற்றவர்கள் மேல் பழி போடுவார்கள்.	வேலை தடை சரி செய்கிறான்.
அது எப்படி செய்யப்படுகிறது என்று அறிவான்.	அது எப்படி செய்யப்படுகிறது என்று காட்டுகிறான்.
'போ' என்கிறான்.	'நாம் போவோம்' என்கிறான்.

தலைமைத்துவத்துக்கான திறவுகோல்:

முன்னுரிமைகள்: உன்னுடைய தரிசனத்தோடு ஒத்துப் போகக் கூடிய முன்னுரிமைகளை உண்டாக்கிக் கொண்டு அவற்றோடு ஜீவித்துக் கொள்ளும்படியாகக் கற்றுக் கொள்ளவும். இவ்வாறு மையமாக்கி நின்று கொள்வதால் ஜெயமுள்ளவனாகச் செய்கிறது.

இந்த முன்னுரிமைகளின் வரிசைப்படி காரியங்களைச் செய்வதே அதற்குரிய சவால் ஆகும். ஆகவே 80% - 20% சதவிகிதம் என்ற விதியை நினைவு கூறுங்கள். 20% விகித முன்னுரிமை 80% சதவிகித வெற்றியைத் தரும்.

80% விகித நேரத்தை உங்கள் ஜனத்தின் 20% சதவிகிதம் மக்களுக்காக உங்கள் நேரத்தைச் செலவழியுங்கள். (அதாவது முக்கியமான மக்களுக்காக) 20% சதவிகித வேலையை 80% சதவிகித பலா பலனைத் தரும்படியாக வரையறுத்துக் கொள்ளுங்கள். நாம் எவ்வளவு கடினமாக உழைப்பது என்பதல்ல. எவ்வளவு சுறுசுறுப்பாய் (செயல்பாட்டுடன்) உழைக்கிறோம் என்பது தான்.

தலைவர்களுக்கும் பின்பற்றிச் செல்பவர்களுக்கும் உள்ள வித்தியாசங்கள்:

தலைவர்கள்	பின் செல்பவர்கள்
– அதை ஆரம்பித்து வைக்கிறார்கள்	– எதிர் செயல் புரிகிறார்கள்.
– வழி நடத்திருக்கிறார்கள் / தொலை பேசியை எடுத்து	– கவனிக்கிறார்கள் - தொலைபேசி ஒலிக்கும் வரைக் காத்திருக்கிறார்கள்
– தொலைபேசி மூலம் தொடர்பு	– எந்த விதமான தொடர்பும் ஆரம்பித்து வைக்கப்படுவதில்லை.
– திட்டம் இடுவதில் நேரத்தை செலவழிக்கிறார்கள்	– தினந்தோறும் நேரத்தைப் போக்குகிறார்கள்.
– பிரச்சனைகளை எதிர்பார்க்கின்றனர்	– பிரச்சனைக்கு எதிர் செயல்படுகிறார்கள்.
– மக்களோடு நேரத்தை முதலீடாகச் செய்கி-றார்கள்.	– மக்களோடு நேரத்தைப் போக்குகிறார்கள்.
– நாட்காட்டியை முன்னுரிமைகளோடு நிரப்பு கின்றனர்	– வேண்டுகோளோடு நாட்குறிப்பை நிரப்புகின்றனர்

நல்லவைகள் மிகச் சிறந்தவைகளுக்குச் சத்துருவாகும்:

(உம்) கலங்கரையைக் காப்போன் கலங்கரை விளக்குக்கான எண்ணையை பெற்றுக் கொண்டவன் ஆவான். சில ஸ்தீரிகள் தங்கள் குடும்பங்களுக்கு அனலுண்டாக்கிக் கொள்வதற்காக அவனிடம் எண்ணெக்காக கெஞ்சினார்கள். ஒரு தகப்பன் தன் விளக்கை எரிந்து கொண்டிருக்கச் செய்வதற்காக எண்ணெக்காக வருந்திக் கேட்டான். மாதக் கடைசியில் எண்ணெய் மிகக் குறைவானது. இரவின் பொழுது பல கப்பல்கள் வந்து சேர்ந்தன. அவைகள் பாறைகளில் தடைபட்டு போய் நின்று விட்டன. ஆகவே அந்த கப்பல்கள் உடைந்து இழக்கப்பட்டுப் போயின. பல மனிதர்கள் மரித்து விட்டனர்? ஏன், எந்த விதமான சரியான முன்னுரிமை இல்லாமையால்!

சிறிதான முன்னுரிமைகள் அதிகமான நேரத்தை தேவையாக்குகின்றன:

அதாவது ஒரு கடற்கரை பகுதியில் விழுந்து விட்ட ஆகாய விமானத்தைப் போல. அந்த ஆகாய ஒட்டத்திற்கு பொறுப்பான பொறியாளர் ஒரு விளக்கு எரி கூண்டை, விமானம் தரையில் இறங்கும்படி கீழே இறங்கிக் கொண்டிருக்கும் பொழுது அந்த விமானத் தலைவனுடன் சேர்ந்து அந்த விளக்கு எரி கூண்டை பொருத்தும்படியாக முயற்சித்துக் கொண்டிருந்தனர். முடிவாக அந்த ஆகாய விமானம் நொறுங்கி விழுந்தது.

தலைமைத்துவத்திற்கு ஆன முக்கியமான இத்தியாதிகள் - உத்தமம்

நமக்குத் தேவையானது: செயல்பாட்டு சாதனைகளுக்கும் / ஊழியத்திற்கும் மேலாக நல்லொழுக்கம். உத்தமத்தையுடைய தலைவர்கள் ஆகப்பட்டவர்கள். தங்களது சொல் வாக்குறுதிகளைப் போலவே செயலிலும் நேர்மையைக் கடைப் பிடிக்கும் மக்கள் ஆவார்கள். நீ பேசுவதற்கு சமமாக உன் இருதயத்தில் (என்ன இருக்கிறதோ) அதுவும் நீ என்ன செய்வது என்பதைப் போல சமமாக இருக்கிறது.

உத்தமம் என்பது நாம் என்ன செய்கிறோம் என்பதல்ல. நாம் யாராக இருக்கிறோம் என்பதைப் போலவே அவ்வாறாக இருப்பது தான்.

தோற்றக் காட்சி என்பது மக்கள் நம்மைப் பற்றி நாம் யாராக இருக்கிறோம் என்று நினைப்பது தான். உத்தமம் என்பது மெய்யாகவே நாம் யாராக இருக்கிறோம் என்பதுதான்.

ஜனங்கள் தங்களுடைய எல்லா முயற்சிகளையும் அவர்களது புறத் தோற்றக் காட்சியை கட்டி எழுப்புவதற்காக அந்த உத்தமத்தை நிலை நாட்டுவதற்கு அதிகம் முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள்.

நீ எவ்வளவு நம்பத் தகுந்தவனாக இருக்கிறாயோ அதற்கு அதிகமாக மக்கள் உன்னிடத்தில் தங்கள் விசுவாசத்தை வைத்திருப்பார்கள்.

தலைமைத்துவத்தில் கடமைகள் அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையில் இயங்குகின்றது.

உத்தமம் என்பது உயர்ந்ததோர் செல்வாக்கு மதிப்பை உடையது.

தலைமைத்துவம் என்பது: பின்பற்றிச் செல்பவர்களை விட உயர்ந்ததோர் தராதர மட்டத்தில் ஜீவிப்பதாகும். இதுவே இதன் அர்த்த விளக்கம் ஆகும்.

உத்தமம் என்பது மற்றவர்களை நடத்தி முன் செல்வதற்கு முன்னதாக என்னை நானே சரியாக வாழும்படி செய்வது என்பது அர்த்தமாகும்.

குணச் சித்திரம் என்பது மக்களை தன்பால் ஈர்க்கும் ஆனால் உத்தமம் மாத்திரமே அவர்களை நம்முடன் சேர்த்து வைத்துக் கொள்ளும்.

ஒழுங்கு பயிற்சி, உள்ளான நம்பகத் தன்மை, இடைவிடாது அயராது எல்லாக் காரியங்களிலும் உண்மையாக இருப்பதன் விளைவாகும்.

மக்கள் தங்கள் தலைவர்களில் எதைப் பார்க்கிறார்களோ அதையே ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்.

ஞாபகத்தில் வைக்கும்படியாக: முதிர்ச்சி என்பது வயதுடன் சேர்ந்து வருவதில்லை. ஆனால் அது பொறுப்பை ஏற்றுக் கொள்வதுடன் வருகிறது.

பழக்கங்கள் என்பவை சிந்தனைக் கோலங்களால் உண்டாக்கப்படுகின்றன. செயல்பாடுகளின் தந்தையாவது சிந்தனையாகும்.

தலைமைத்துவத்தின் பொதுவான சில தவறுகளும் அவற்றை எவ்வாறு தடுப்பதும் தவிர்ப்பதும்

அதிகமாகத் தலைவர்கள் சிந்தனையை ஒருமுகப்படுத்திய ஜெபத்தினால் மட்டுமே முடிவுறாத செயல்பாடுகளின் மூலமாக செயல்படுவதைவிட முன்னதால் "அந்த தூரத்தை அமைத்துக் கொள்ள முடியும்."

ஒரு வேளை இந்த சொல் வழக்கை நீங்கள் கேட்டிருக்கலாம். "உன்னுடைய ஜனங்களுக்கு சற்று முன்னால் ஒரு அடி விலகியிரு." அப்படியானால் "நீ ஒரு தலைவன்" என்று அழைக்கப்படலாம். உன் ஜனங்களை விட்டுவிட்டு முன்னால் பத்தடி செல்வாயானால் 'நீ இரத்த சாட்சி' என்று அழைக்கப்படுவாய். தலைமைத்துவ பதவிகளில் ஊழியம் செய்யும் நம்மவர்கள் சந்தேகமின்றி அந்த பதவி ஸ்தானங்களில் இருப்பதையே விரும்புவார்கள். நாம் இரத்த சாட்சியாக விரும்புவதில்லை. நாம் சலிப்பையோ அல்லது பதவி நீக்கத்தை விரும்புவதை விட எந்த சமயத்திலும் அப்படியிருக்கும் படியாக வாஞ்சிப்பதில்லை.

தலைமைத்துவ தவறுகளை போதகர்களும் ஊழியர்களும் செய்வதாக நாம் வாசிக்கம் பொழுது, இந்த மாதிரியானவற்றை தடுக்க அல்லது இந்தத் தவறுகளை மேற்கொள்ளுமாறு வழங்கப்படும். ஆலோசனையான வழிகளையும் கவனித்திருக்கலாம். மேலும் அந்த அட்டவணை முடிவுறாததாகக் காணக்கூடும். என்னவென்றாலும் அது போதனைகளை தரக் கூடியதாக நிரூபிக்கப்படும். இந்த முறையில் அட்டவணைப் படுத்தப்பட்ட தவறுகள் அவைகள் நேரிடும் வரிசைபடியும் அல்ல முக்கியத்துவத்தின் வரிசையில இடம் பெற்றவைகளுமல்ல.

பொதுவான தரிசனம் எதுவும் இல்லை

என் கவனத்தில் வருகிற தவறுகளில் ஒன்று தரிசனத்தைப் பற்றிய கோட்பாட்டைப் பற்றியதாகும். தங்கள் திருச்சபை குடும்பம் சாதித்து நிறைவேற்ற வேண்டியதாக அவர்கள் பார்க்க விரும்பும் படியான உண்மையான தரிசனம் எதுவும் அந்த சில தலைவர்களுக்கு இல்லை. மேலும் தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர் கெட்டுப் போவார்கள். (நீதி 29:18) மற்ற தலைவர்களுக்கு என்று தரிசனம் இருக்கலாம். ஆனால் அது திருச்சபைக்கு வேண்டிய தரிசனமாக இருக்காது. இந்தத் தலைவர்கள் தாங்கள் ஒரு வழியாகவும் கூடி வரும் சபை மற்றொரு வழியாகவும் போய் கொண்டிருக்கலாம் அல்லது ஒரு வழியிலும் போகாமலும் இருக்கலாம்.

இந்த தரிசனப் பிரச்சனைக்கான பதில் திட்டமிடுதலையும் உள்ளாக்கிக் கொண்டு செய்தித் தொடர்பையும்கூட சேர்த்துக் கொள்கிறது. எந்த நபராவது ஒரு அலுவலக அங்கத்தினர் கூட ஒரு தரிசனத்தை கட்டளையிடுவதற்குக்கூட உரிமை கிடையாது. தலைவர்கள் தலைவர்களாகவும் இருக்க வேண்டும். கூடிவரும் சபையில் தேவன் அவர்களுக்கு தந்த தலைமைத்துவத்தை பின்பற்றியே ஆக வேண்டும். என்னவென்றாலும் சபையினர் ஒரு பொதுவான தரிசனத்தை நோக்கி தலைவர்களைப் பின்பற்றிச் செல்லும்பொழுது அது சிறப்பாகக் கிரியை செய்கிறது. போதகரும் அலுவலகத்து பணிபுரிவோரும் தங்களுடைய சொந்தக் கருத்துக்களையும் இலக்குகளையும் மக்களோடு ஒழுங்குமுறை சார்ந்த அல்லது ஒழுங்குமுறை சாராத அமைப்புகளோடு பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். சபையானது ஜெபம் செய்யுமாறும் திருச்சபைக்கான தேவனுடைய தரிசனத்தைத் தேடிப் பெற்றுக் கொள்ளுமாறு வழி நடத்தப் பட வேண்டும். திருச்சபையின் தரிசனத்தைச் சுற்றி அமைந்த கொள்கைகளை திருச்சபை முழுவதாலும் தத்து எடுத்துக் கொள்ளப் படவேண்டும் அல்லது ஏறக்குறை எத்தனை பேர் அதை ஏற்கக் கூடுமோ அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மக்கள் அந்த இலக்கை அடைவதற்கு அந்த தரிசனத்தை காணுவதில் ஒரு பங்கு எடுத்திருப்பார்களானால் அதை நிறைவேற்றுவதற்காக கடினமாக வேலை செய்யும் போக்கில் இயங்குவார்கள்.

திட்டமிடுதலில் தவறி விடுதல்

கிறிஸ்துவுக்காக மக்களைச் சென்றடைவதில் திருச்சபைகள் தவறி விடுவதற்கான காரணங்களில் ஒன்று திட்டமிடுவதைப் பற்றியதாகும். மிகவும் பெரும்பான்மையான தலைவர்கள் தங்களது

சபைகளுக்கு சபையின் இலக்குகளை நோக்கி செல்வதற்கு சரியாக கட்டளைகள் கொடுப்பதில்லை. இந்த முறையாக அதற்காக எந்த செயல்பாட்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதில்லை. அதன் விளைவாக ஒன்றுமே நேரிட்டு நடப்பதாக இல்லை. போதகர்கள் தங்கள் தூதாகிய செய்திகளை ஆயத்தம் செய்வதிலும் வியாதியஸ்தரை சந்திப்பதுமாக இருக்கிறார்கள். இளைய தலைமுறை ஊழியர்கள் இளைஞர்களோடு தங்கள் காரியங்களை நடத்திக் கொண்டும் போதனை செய்து கற்பிக்கவும் செய்கிறார்கள். கல்வி சம்பந்தப்பட்ட போதக ஊழியர்கள் அறிவிப்புகளை கொடுத்து ஊழியர்களை பணிக்கு ஆள் சேர்க்கிறார்கள். ஊழியமானது எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் தொடர்ந்து இருக்கும்படியாக பராமரிப்பு ஆக இருக்கிறது. ஆகவே யாரோ ஒருவர் சொன்னதாக, "நீ திட்டமிடத் தவறிவிட்டால் நீ தோல்வி அடைய திட்டமிடுகிறாய்" என்று கூறியுள்ளார். மற்றொருவர் சொன்னதாக "நீ திட்டமிடாவிட்டால் உன்னுடைய நேரத்தை செயல்படுத்துவதை விட அதற்கு எதிராக செயல்படுத்தவே செலவிடுகிறாய்" என்று கூறி இருக்கிறார்.

செய்தி தொடர்பு மிகவும் குறைவாக இருப்பதால்

போதக ஊழியர்கள் செய்யும் முதலாவது தவறாவது நன்றாகச் செய்தித் தொடர்பு கொள்வதில் தவறுவது ஆகும். நமது செய்தித் தொடர்பில் தவறுவோமானால் நமது சபையோடு ஒழுங்காகத் தொடர்பு கொள்வதில் தவறுகிறவர்களாயிருப்போம். சிந்தித்துப் பார். கரிசனையுடன் ஒரு சிறிது நேரம் அலுவலக ஊழியர்களுடன் செய்தித் தொடர்பு கொள்வதை மற்றொரு அலுவலக ஊழியருடன் பணிபுரிய நேர்ந்தால் உங்களுடைய உரையாடல்களில் பின்வரும் வாசகங்களையும் சேர்த்து பயன்படுத்தும் சந்தர்ப்பமாக இருக்கும். அதாவது "அவன் ஆஸ்பத்திரியில் அவனுடைய தாயார் மரித்துப் போனாள் என்பதை எனக்கு யாருமே சொல்லவில்லை."

"நீ அதை கவனமாகப் பார்த்துக் கொள்வாய்" என்று யூகித்துக் கொண்டேன்.

"அது நாட்காட்டியில் இல்லையா என்பதைப் பற்றி என்ன அர்த்தம் எடுக்கிறாய்?" அதை நான் மாதக்கணக்காக திட்டமிட்டிருக்கிறேன்.

அலுவலக ஊழியர்களுக்குள்ளே செய்தித் தொடர்புக் குறைவைத் தவிர்க்க நீ ஒழுங்காக வழக்கமாக தேதிக் கணக்குப்படி அலுவலக ஊழியர் கூட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள நிச்சயப்படுத்திக் கொள். இந்த அலுவலக ஊழியர் கூட்டங்கள் திட்டமிட, கால அட்டவணைப்படுத்த தனிப்பட்ட மற்றும் திருச்சபை பற்றியவைகளைக் கலந்தாலோசிக்க, சிறந்த அமைப்பாகத் தந்து உதவுகிறது. மதிய உணவு, ஓய்வு நேர பொழுதுபோக்கு ஆகியவற்றில் ஒழுங்கு சாரா நேரத்தை செலவழிப்பது பயனுள்ளதாகும்.

சபையாரோடு நன்றாக செய்தித் தொடர்பு கொள்ளுதல் தலைவருடைய நோக்க மனப்பான்மையில் ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு தலைவரும் தன்னுடைய செயல்பாடுகளும் திட்டங்களும் வெளிப்படையானவைகளாகவும் குறைகூறுவதற்கு அப்பாற்பட்டும் இருக்கிறதாக நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். அநேக சபைகள் தீடீர் நிகழ்ச்சிகளை விரும்புவதில்லை.

ஒரு மனிதனின் செயல் காட்சியாக இருப்பது

அநேகத் தலைவர்கள் ஒவ்வொரு காரியத்தையும் தாங்களாகவே செய்ய முயற்சிக்கும் குற்றமுடையவர்களாவார். "அது சரியாகச் செய்யப்பட வேண்டுமானால் நீயே அதைச் செய்" என்பது ஒரு சட்ட வாக்கியமாகும். இதைத் தான் அநேக செயலூக்கமில்லாத தலைவர்கள் பின்பற்றுவதாகும். அந்த விதமான நோக்க மனப்பான்மை ஊழியர்களை எரிந்து போகும்படியான சந்தர்ப்பத்தை அதிகரிக்கிறது. மேலும் ஒரு தலைவர் மற்றொரு பணியிடத்திற்குப் போவாரானால் திருச்சபை ஊழியங்களும் அதன் சாதனைகளும் இடர்படக்கூடும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மனிதன் - காட்சி என்ற கொள்கை வேதாகமத்து தெளிவான போதனைக்கு முரண்பட்டுள்ளது. எபேசியர் 4:12 சொல்லுகிறதாவது "பரிசுத்தவான்களை சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும் செய்வது ஒரு தலைவரின் கடமையாகும்." ஒரு பூர்வ காலத்து பழமொழி என் ஞாபகத்திற்கு வருகிறது. "ஒரு மனிதனுக்கு ஒரு மீனைக் கொடுத்தால் ஒரு நாள் மட்டும் சாப்பிடுவான். மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்தால் வாழ் நாள் முழுவதும் சாப்பிடுவான்" எந்த விதமான ஊழியப் பதவியை நீ வகித்தாலும் மக்களை பக்தி விருத்தி செய்வது

உன்னுடைய கடமையாகும். அநேக மக்கள் ஊழியம் செய்ய விரும்புகிறார்கள் (தேவை) அவர்கள் கற்றுக் கொள்ளவும் விரும்புகிறார்கள் (தேவை) ஒரு புகழ் பெற்ற தேசீய சரணாலயத்தில் யாத்திரையாக வந்த பார்வையாளர்கள் கோடை காலத்தில் அதை விட்டு புறப்பட்டுச் சென்ற பிறகு இருபது இருபதாக கரடிகள் செத்துப் போகின்றன. ஏன்? அந்தக் கரடிகள் பிறர் மீது அதிகமாக சார்ந்திருந்ததினால்தான். (உணவிற்காக பார்வையாளர்களை) நாம் ஊழியம் செய்யும் சபையார் தாங்களாகவே அதாவது மற்ற அலுவலக ஊழியர்களின் மீது சார்ந்திருப்பதை விட அவ்வாறு செய்ய வேண்டியது இந்த குறிப்பிட்ட தலைமைத்துவ பிழையைத் தவிர்ப்பதற்காக நீ உன்னைத் தான் ஒப்படைப்புச் செய்து மற்றவர்களுக்கு ஊழியத்தைப் பற்றி கற்றுக் கொடுப்பது அவசியமாகிறது. (II தீமோத் 2:2ஐப் பார்க்கவும்)

ஒருவரை பணிக்குத் தகுதியாக்குவது தனிப்பட்ட அமைப்பில் ஏற்பட வேண்டும். அதாவது நீங்கள் குடும்பங்களைச் சந்திக்கப் போகும்பொழுது யாராவது ஒருவரை உடன் இட்டுச் செல்வது (புதிய கிறிஸ்தவர்களை ஒருவரையொருவர் சீஷர்களாக ஆக்குவதற்கும்) மேலும் கூடிவரும் சபைகளின் அமைப்பிலே (சாட்சியாக மருந்து நிலையங்கள், ஆசிரியர் பயிற்சி நிலையங்களிலும்) ஏற்பட வேண்டும். திருச்சபையானது கிறிஸ்துவின் சரீரமாகும். அதன் ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பட்ட கடமைகள் உண்டு. நமது பணியில் ஒரு பகுதியானது ஜனங்கள் தங்கள் கிரியைகளை நடத்திச் செல்லும்படி உதவுவதாகும். (வரங்களையும் தாலந்துகளையும் அபிவிருத்தி செய்து பயன்படுத்துவதாகும்)

முற்றிலும் பின்பற்றிச் செல்லுதல் இல்லாத ஒப்படைப்பு

(முன்னர் கூறியபடி) அபிவிருத்தி செய்து ஒப்படைப்பு செய்ய தவறியதுக்கு அதி நெருக்கமாக உள்ள வரிசையில் பின்பற்றுதல் இல்லாத ஒப்படைப்புச் செய்தல் தான் பிரச்சனையாகும். அநேக பேர் பயிற்றுவிக்கப்பட்டும் (விருப்ப தயாராக பணியாற்றினாலும்) அவர்களை உற்சாகப்படுத்துதலோடு கணக்கு ஒப்புவிக்கச் செய்தலும் அவசியமாகிறது. அலுவலர்கள் கூட்டங்களில் அதுவும் எண்ணிக்கையற்ற சமயங்களில் ஒரு முக்கியமான பணி முடிக்கப்படாமல் இருக்கும்பொழுது, அந்தப் பொறுப்பில் உள்ள அலுவலர் "நான் அந்த பொறுப்பை இன்னாரிடம் ஒப்படைத்தேன்" என்று சொல்வது மட்டும் கேட்டிருக்கிறேன். அந்த அலுவலர் மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டு அதில் ஈடுபடச் செய்யும் மனத்தால் அறியும் திறனைப் பெற்றிருப்பதற்காக "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" ஆனால் கடைசியாக அந்த தலைவர் தான் அவனோ.அவளோ பொறுப்புள்ளவர் ஆகிறார். நாம் மக்களை ஒரு காரியத்தை செய்யும்படி கேட்டுக் கொண்டால், அந்த பணி நிறைவேற்றப்பட்டதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக ஒன்று அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் அல்லது அவர்களோடு அதை சரி பார்க்க வேண்டும். நமது கடமையாவது அதில் தலையிடுவதோ அல்லது சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதோ அல்ல, என்னவென்றாலும் அந்த வார்த்தைக்கு தகுந்த சிறந்த கருத்துப்படி நாமே தலைவர்களாக இருக்க வேண்டும்.

மாம்சத்தில் கிரியை செய்தல்

போதகர்களும் அலுவலக அங்கத்தினர்களும் "நல்ல விளைவுகளை உண்டாக்க வேண்டும்" என்ற பாரத்தை உணருகிறார்கள். நாம் நம்மை பற்றியே நாம் எதிர்பார்ப்பதை திருச்சபை அங்கத்தினர்கள் அதிகம் நம்மிடம் எதிர்பார்க்கிறார்கள். நம்மில் சிலர், தேவன் நம்மிடம் எதிர்பார்க்கலாம் என்பதை விட மிக அதிகமாகவே நம்மிடமே இருந்தே எதிர்பார்க்கிறோம். நாம் எச்சரிக்கையுள்ளவர்களாக இராவிட்டால், நாம் தேவனுடைய பலத்தில் கிரியை செய்வதை விட நமது சுயபலத்திலே வேலை செய்கிறவர்களாக நம்மைப் பார்த்துக் கொள்ளலாம். இது பாவம் மட்டும் அல்ல. தலைமைத்துவத்திற்கடுத்த தவறும் ஆகும். அதிகமான தலைவர்கள் ஒரு முனைப்படுத்தப்பட்ட ஜெபத்தில் தூரத்தை அமைத்துக் கொண்டு, முடிவில்லாத செயல்பாடுகளுக்கு ஊடாக செல்வதை விட, அதை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் கண் பார்த்தபடி நடப்பதற்கு பதிலாக (நாம் வெளிப்படையாக நிறைவேற்றுவதற்கு) விசுவாசத்தில் நடக்க வேண்டும்.

மத் 17:20ல் இயேசு தமது சீஷர்களை அவர்களது விசுவாசக் குறைவைக் குறித்துக் கண்டித்தார். இந்த பிழையைத் தவிர்ப்பதென்றால் ஜெபத்தில் அதிகமான நேரத்தை கழிக்க வேண்டும். நிச்சயமாகவே நமக்கும் அது அவசியமாகும். ஊழியம் என்பது கரடு முரடான கடமையாகும். ஒரு விவேகமுள்ள

மனிதன் பின்வருமாறு கூறுவதைக் கேட்டிருக்கிறேன். நமது உள்ளான நிலைமை வெளியிலுள்ள சந்தர்ப்பங்களுக்கு சமமாக இருக்குமானால் நமக்கு அழுத்தமான சுமையே இல்லை. உங்களை நான் ஜெபத்தில் தரித்திருப்பதற்கு உற்சாகப்படுத்தட்டும். உன்னுடைய இருதயத்தின் மீது தலைமைத்துவத்தைப் பற்றிய விசாரங்களைக் குறித்தான தேவனுடைய ஆணைகளைப் பெற்றுக் கொள்.

விசுவாசமுள்ளவர்களை புறக்கணித்து விட்டு

வளர்ச்சியையே குறியாகக் கொண்டிருப்பவர்கள் மக்களை தங்கள் திருச்சபைக்கும் கிறிஸ்துவண்டைக்கும் கவர்ந்து ஈர்ப்பதற்காகவே எப்பொழுதும் ஊழியம் செய்து கொண்டிருப்பார்கள். சபையை மேய்த்து நடத்தும் தலைமைத்துவம் உடையவர்கள் மேலும் நீங்கள் மேய்த்து போவதையும் வளர்ச்சியைக் கூட குறியாகக் கொண்டிருக்கலாம். இப்படிப்பட்டவர்கள் பிரச்சனைகள் (அதாவது வியாதியாலும் விழுந்தும் புறம்பே நிற்பவர்களாய்) உள்ளவர்களுடைய பிரச்சனைகளுக்காக முயற்சித்தும் அவர்களைச் சந்திக்கும் போக்குடையவர்களாய் இருப்பார்கள். நாம் எந்தக் குறியை நோக்கமாகக் கொண்டவர்களாக இருந்தாலும் விசுவாசமுள்ளவர் இன்னார் என்றும் அவர்களுக்கு ஒரு சில பிரச்சனைகள் இருப்பதாகத் தோன்றினாலும் அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடித்து அறிந்து கொள்ளத் தவறினாலும் நாம் குழப்பம் செய்கிறவர்களாகவே இருப்போம். அவர்களுக்குத் தேவை ஒரு தலைவருடைய அன்பும் ஊக்கம் கொடுக்கப்படுவதுதான். இத்தகைய விசுவாசமுள்ள பார்வைக்கு கூடியிருக்கும் மக்களைப் புறக்கணித்தல் ஆகிய தவறுகளைத் தவிர்க்க அவர்களைக் குறித்து தேவனிடம் அடிக்கடி மன்றாடி ஜெபத்தில் ஏறெடுப்பதற்காக உங்களை உற்சாகப்படுத்தட்டும். இந்த மாதிரி ஜனங்களுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். இப்படிப்பட்டவர்கள் தான் அடிக்கடி காரியங்களை கிரியை செய்து கொண்டிருக்கும் படியாகச் செய்பவர்கள். மேலும் வாழ்க்கையில் தைரியம் அற்று குறைந்து போயிருக்கிறவர்களுக்கு போலவே தங்களுக்கும் தைரியப்படுத்துதல் தேவை என்று அது போல் நடிப்பவர்களுக்கும் ஆக தைரியத்தை ஊட்டும் குறிப்புரைகளை எழுத வேண்டும். ஒவ்வொருவரும் உற்சாகமாக தைரியப்படுத்தும் வார்த்தைகளை அவசியமாக கேட்கும்படியாக எதிர்பார்ப்பார்கள். ஆகவே ஒவ்வொரு வாரமும் ஏதோ ஒன்றை நன்றாகச் செய்யும் ஒருவரை கண்டு பிடித்துக் கொள்ளும்படியாக திட்டம் இடுங்கள். அந்த ஸ்தலத்திலே அந்த நபரைப் பாராட்டுங்கள். ஒரு தலைவராக நீங்கள் எப்பொழுதுமே இழந்து போனதையும் காயப்பட்டதையும் தேடுவீர்கள் என்று நான் நம்புகிறேன். அது தான் முன்னுரிமை என்றாலும் மற்றவற்றை மறவாது இருங்கள்.

இளக்காரமாக விமரிசனத்தைக் கையாளுதல்

அரிஸ்டாட்டில் சொன்னதாவது, விமரிசனம் என்ற ஏதோ ஒரு காரியத்தை எளிதாகத் (தவிர்ப்பதற்கு) புறக்கணிப்பதற்காக "ஒன்றும் செய்ய முடியாது" என்று சொல்லி விடலாம். எல்லாத் தலைவர்களும் குறைந்தது ஏதோ கொஞ்சக் காலத்திற்கு குறை கூறப்படலாம். நம்மில் எவரும் குறிப்பாக விமரிசிக்கப்படுதலை விரும்புவதில்லை. நாம் விமரிசனத்திற்கு மிகக் குறைவாக எதிர் செயல்படுவதால் நம்மையும், நமது ஊழியத்தையுமே காயப்படுத்திக் கொள்கிறோம். சில தலைவர்கள் குறை கூறுதலுக்கு பதிலாக சொல்லக் கூடியதை ஒவ்வொரு நேரத்திலும் முன் சொன்ன பிரகாரமே சொன்னதையே திரும்ப திரும்பச் சொல்லுவார்கள். கோபப்படுவது வழக்கமாக பயன்படுவதில்லை. உன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் போல் உணர்ந்து கொள்வது (அதாவது வீணான சாக்குப் போக்குகள்) சொல்வதால் எந்த பயனையும் கொண்டு வராது. விமரிசனத்தை அசட்டை செய்தல் தலைவரானவரை சில நேரங்களில் உண்மையிலே காயப்படுத்தும்.

இங்கே சில உதவி செய்யக் கூடிய மறைவான குறிப்புகள்:

– நல்ல மனிதர்கள்கூட விமரிசிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து கொள்.

– கட்டி எழுப்பும் விமரிசனம் என்பதற்கும் அழிவைத் தரும் விமரிசனத்துக்கும் இடையில் உள்ள வித்தியாசங்களைப் புரிந்து கொள். கட்டி எழுப்பும் விமரிசனமானது உனக்குள் கொஞ்சம் சீர்திருத்தத்தை உண்டாக்குவதுடன், நீ வளர்ச்சி அடைந்து வருவதற்கும் உதவி செய்யும். (விமரிசனம் என்பதில் சிறிது உண்மை இருக்குமானால் அது என்னை அதிகமாகக் குத்தி வருத்தும்)

– உன்னைக் குறை கூறி வரும் ஆரம்பத்தை சிந்தித்துப்பார். உன்னைக் குறை கூறும் நபர் மற்றம் ஒவ்வொருவரையும் சரியாக விமரிசனம் செய்வாரானால் அது உனக்கு ஏதோ கொஞ்சம் அறிவிக்கும். உனது விமரிசகர் கிறிஸ்தவ முதிர்ச்சிக் குறைவைக் காட்டுவாரானாலும் மேலும் வெளிப்பிரகாரமாக நன்றாக விளையாட்டை விளையாடுபவராக அல்லாவிட்டாலும் அதுவுங்கூட ஏதோ ஒன்றை கொஞ்சமாக அறிவிக்கக் கூடும். விமரிசனம் என்பது நேரடியாக வருமானால் அதுவும் உனது உயர்ந்த மதிப்பைப் பெற்றவரின் அன்பின் வழியில் வருமானால் அது நன்மை பயக்கக் கூடியதாகும்.

– உன்னை அதிகக் கடுமையாக எடுத்துக் கொள்ளாதே.

– அதீதமான உணர்ச்சியுள்ள அனிச்சை செயல்களான கோபம், சாக்குப் போக்கு ஆகியவற்றை உனது விமரிசகரை அன்பினால் அவரை விட மிஞ்சி உபயோகிக்க மறுத்து விடு.

எதிர்ப்பு மோதல்களை வெறுத்து ஒதுக்குதல்

ஒரு பிரச்சனையை ஒதுக்கி விடுதல் (அது போய் விடும் ஒருவரோடுள்ள என்று நம்பிக் கொண்டிருப்பதால்) ஆபூர்வமாக கிரியை செய்யாது. நீங்கள் ஒரு மோதலை நேருக்க நேர் முகமாக சந்தித்து அதோடு ஈடுபட வேண்டும். அப்படி அல்லவென்றால் அந்த பிரச்சனை கையை விட்டு கடந்து விடும் குறிப்பாக உனக்குள் கிரியைகளை கட்டி வளர்த்துக் கொண்டு இருந்தாலும் அல்லது எதிர்ப்பு மோதல் எந்த நபரோடு உனக்கு இருந்தாலும் அவ்வாறு நேரிடக்கூடும். இயேசு அந்த பிரிவினையோடு வெகு சீக்கிரமே இடைபட்டு நல்மனம் பொருந்துமாறு கூறினார். (மத் 5:25ஐப் பார்க்கவும்) அந்த பொறுப்பானது நமது தோள்கள் மீது இருப்பதாகத் தெளிவுபடுத்தினார். அந்த அவருக்கு செவி கொடுத்து கவனிக்கும் யாராக இருந்தாலும் அந்த நபரே அந்த ஒப்புரவாகுதலுக்கான ஆரம்ப முயற்சியைச் செய்ய வேண்டும். (மத் 5:23-25)ஐப் பார்க்கவும். தலைவர்களாகியவர்கள் நம்மோடு உடன்பாடில்லாத மனுஷரை மன்னிப்பதற்கு நாம் மறுத்தால் நம்முடைய பரம பிதாவும் நமக்கு அதை மன்னிக்க மாட்டார். (மத் 6:14-15)ஐப் பார்க்கவும்.

ஊழியம் செய்யப்பட வேண்டும் என்ற வாஞ்சை

சில தலைவர்களுக்கு தாங்கள் கவனித்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக அதீதமான தேவை உண்டு. அசாதாரணமான வரத்தைப் பெற்ற ஒரு தலைவர் தங்களை ஜனங்கள் கவனித்துப் பார்க்க வேண்டுமென்றும் அன்பான வழிகளில் பதில் கிரியை செய்யுமாறு எதிர்பார்ப்பார்கள். இந்த விதமான பிரச்சனை எதேச்சை அதிகாரமுள்ள தலைவர்கள் தங்களுக்குக் கீழ் பணிபுரியும் (அவருக்கோ / அவளுக்கோ) நபர்களுக்கு கட்டளைகளாகத் தருவதால் (விருப்ப தாயாராக பணி செய்பவர்களையும் சேர்த்து) அவர்களுக்குங்கூட நேரிடுகிறது. இந்த குறிப்பிட்ட பிரச்சனையானது அந்தத் தலைவர் கூடிவரும் சபையினரிடமிருந்தோ அல்லது சமூகத்தினரிடமிருந்தோ விசேஷித்த சலுகைகளை (இலவசமான அல்லது குறைந்த செலவில் மருத்துவ கவனிப்பு, ஆடைகளில் விலை கழிவு, சமூகக் கூடுகைகளில் விசேஷித்த அதிகப் படியான கவனம், பணமாகவோ அல்லது பொருளாக வெகுமானங்கள் பெறுதல்) ஆகியவற்றை எதிர்பார்க்கும் பொழுது மேற்கண்ட பிரச்சனை தலைதூக்கிக் காட்டுகிறது. ஒவ்வொரு தலைவருக்கான அழைப்பாவது ஊழியம் செய்வதற்காகவே. ஊழியம் என்பது நாம் கர்த்தருடன் கொண்டுள்ள உறவுத் தொடர்பின் தொடர்ச்சியான பலா பலனாக இருக்க வேண்டும்.

தலைவர்களால் செய்யப்படும் மிக பெரிய பத்து தவறுகள்

தலைவர்கள் ஆனவர்கள் ஜனங்களுடைய ஜீவியத்திலே நல்லதோ அல்லது கெட்டதோ செய்யக்கூடிய நம்புவதற்கு முடியாதபடி வல்லமையைப் பெற்றிருக்கிறார்கள். அநேகருடைய முடிவை ஒரு சிலர் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். ஆனால் நம்மில் எத்தனை பேர் மிகவும் விரிந்து உயர்ந்த குறிக்கோள்கள் அல்லது தரிசனங்களோடு ஆரம்பித்து தலைவர்களோடு நமக்குள்ள அனுபவத்தால் புளித்துப் போகும்படி ஆகிவிடுகிறார்கள். நாம் அதை அறிந்து கொள்ளும் முன்னரே அகழிப் போர் ஆரம்பமாகிறது அல்லது ஒன்றும் சொல்லப்படாவிட்டாலும் நமது தலைமைத்துவத்திலுள்ள நம்பிக்கை வெகு விரைவில் படிப்படியாக அழிகிறது. ஜனங்கள் ராஜினாமாச் செய்து வெளி நடப்புச் செய்கிறார்கள். தலைவர்கள் குறிபார்த்து சுடப்படுகிறார்கள், பிளவுகள், சச்சரவுகள், புறங்கூறுதல் ஆகியவை ஆட்சி செய்கிறது. அந்த பணியின் வேகம் குறைக்கப்பட்டு. நாசமாக்கப்பட்டு தீடீரென கீரிச் என்ற சப்தத்தோடு நின்று விடுகிறது.

இழிவான தலைமைத்துவ பழக்கங்கள் இழிவான தலைவர்களாகிய புதிய சந்ததியை முன்னேற்றுவிக்க முயல்கிறது.

இந்த உச்சகட்டமான பத்து பிழைகள் தலைவர்களால் செய்யப்படும் பொழுது அது தலைமைத்துவத்தின் பொதுவான பத்து குறைபாடுகளையும் தோல்வியான அறைகுறை பிழைகளையும் வெளியில் காட்டிக் கொடுக்கிறது.

- உச்சத்திற்கும் கீழானதற்குமான மனப்பான்மை
- கணக்கு ஒப்பித்தலின்றி ஒப்படைப்புச் செய்தல்
- ஜனங்களுக்கு பணிபுரிவதற்கு முன்னர் காகித ஆயத்த பணியை முன் வைத்தல்
- செய்தித் தொடர்பில் பெருங் குழப்பம்
- நிச்சயப்படுத்தும் ஆமோதித்தல் இல்லாதிருத்தல்
- கலாச்சார துப்புக்கான குறிகள் காணப்படாமல் இருத்தல்
- கற்றுக் கொள்பவர்களுக்கு இடமில்லாமை
- பின்னால் அடுத்து வருபவர் இல்லாததால் வெற்றி
- தீர்மானங்கள் செய்வதில் ஏதேச் சாதிகாரம்
- வருங்காலத்தின் மேல் நோக்கி கவனம் செலுத்தத் தவறுதல்

இன்று தலைவர்கள் மற்றவர்களில் தாங்கள் கண்டறிந்த அற்பமான தலைமைத்துவ பழக்கங்களையே திரும்ப அதன் மீதே மடித்து விழும்படி செய்கிறார்கள். பொதுவான தலைமைத்துவ உரிமை வேண்டுதல்களுக்கான அடிப்படையான திறன்களில் அவர்கள் அடிக்கடி குறைவு படுகிறார்கள். அநேகருக்கு சரியான வழக்கமான பயிற்சி கிடையாது. அதற்கும் அதிகமாக நல்ல மாதிரிகளின் குறைவினாலும் அறிவுரை கூறுதல் இல்லாமையும் இதற்கான தப்பித்துக் கொள்ளும் வழியாகும். நம்மில் பலர் நம்முடைய தலைவர்களிடையே கவனித்துப் பார்த்த கெட்ட பழக்கங்கள் ஒரு வேளை நம்மையும் ஆக்கிரமித்திருக்கலாம்.

மிகச் சிலரே தங்களை தயார்படுத்தி, விருப்ப ஆயத்தத்துடன் தலைமைத்துவத்திற்காக காத்திருக்கின்றன. அது அபிஷேகம் பெற்றவர்களுக்கான அழைப்பாகும். இது எல்லாவற்றிற்கும் குறுக்காக உண்மை என்றாகிறது - தொழில் துறையில், வணிகத்தில், அரசாங்கத்தில் நிறுவனங்களில் தலைமைத்துவப் பதவிகளுக்குள் வரும் அநேக மக்களுக்கு தலைமைத்துவத்திலும் மேற்பார்வையாளராக இருப்பதற்கும் சிறிதளவோ அல்லது பயிற்சி எதுவுமோ பெற்றிருப்பதில்லை. சிறு தொழில் நிறுவனத் தலைவர்கள் தகுதியான யோக்யதாம்சங்களைப் பெற்றிருந்த போதிலும் அடிக்கடி ஸ்தாபன நிர்வாகத்தில் படிப்பறிவு இல்லாதவர்கள். இதற்கான பிரச்சனையாவது தலைமைத்துவம் முமு மனதான ஈடுபாட்டையும், முளை அறிவையும் தேவை ஆக்குகிறது.

தலைமைத்துவத்தில் ஆபாயங்கள்

1)	பெருமை (அகந்தை)	ரோமர் 12:3
2)	முறுமுறுப்பு	எண் 12:1-16
3)	கலகம்	எண் 16:1-50
4)	பொய்யான வெளிப்பாடு	I தீமோத் 4:1-3
5)	அதைரியப்படுதல்	யோசுவா 1:9
6)	புறக்கணித்தல்	நீதி 13:3
7)	இச்சித்தல்	யோசுவா 7:21
8)	எதிர்பால் (உறவு)	II கொரி 6:14
9)	அச்சம்	II தீமோத் 1:7
10)	மனிதர்களிடமிருந்து வெகுமானங்களை எதிர்பார்த்தல்	கொலோ 3:23

வீட்டு செல் குழுக்களும், சிறு குழுக்களும்

"அவர்கள் ஒரு மனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி" (அப் 2:46) தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (அப் 5:42)

வீட்டு செல் குழுக்கள் முக்கியமானவை ஏன்?

 # நடைமுறை ஐக்கியம்

1. வீட்டு செல் குழுக்கள் நெருக்கமான ஐக்கியத்திற்காக வசதி செய்து மக்கள் எங்கே ஒருவருக்கொருவர் கவனம் பெற்றுக் கொள்ளவும், பகிர்ந்து கொண்டும் ஒருவருக்கொருவர் உறவை முகத்துடன் முகம் நேராக உறவுத் தொடர்பில் நிற்கும்படியாக.
2. வீட்டு செல் குழுக்கள் புதிய விசுவாசிகளுக்கு அன்பு மிக்க ஆத்மீக போஷிப்பையும், யாவரும் ஓரிடத்திற்கே சொந்தமானவர்கள் என்ற உணர்வையும் கொடுக்கிறது.
3. வீட்டு செல் குழுக்கள் சிலந்தி வலைபின்னல் போன்ற ஒரு நண்பர் கூட்டத்தையும் பெறும்படி வசதி செய்து அங்கு அவசிய தேவையுள்ளவர்கள் நடைமுறையிலுள்ள உதவியை திருப்பிப் பெற்றுக் கொள்ளுமாறு உதவுகிறது.

 # சீஷத்துவதும் ஆவிக்குரிய வளர்ச்சியும்

4. இல்லத்து குழுக்கள் விசுவாசிகளை முதிர்ச்சிக்குள் கொண்டு வருவதற்காக ஒரு மார்க்கத்தைச் செய்திருக்கிறார்கள்.
5. வீட்டுக் குழுக்கள் ஒருவருக்கொருவர் கலந்து செயல்படுவதற்கும் உரையாடலுக்கும் மிகவும் சம்பந்தப்பட்ட தேவையான வேதாகமத்து சத்தியங்களை திருச்சபை நடைமுறைப் படுத்திக் கொண்டிருப்பதற்காகவும் கால்வாயான மார்க்கத்திற்கு வசதி செய்கிறது.
6. வீட்டு செல் குழுக்கள் மக்கள் ஆன விசுவாசிகள் ஒன்று கூடி ஏகமாக ஆராதித்தும் ஒன்று சேர்ந்து ஜெபத்தில் தரித்திருக்கவும், சாட்சிகளைப் பகிர்ந்து கொள்ளவும் அற்புதங்களுக்காக விசுவாசத்தை அப்பியாசிக்கவும் உதவும் ஓர் சூழ்நிலைமையை உண்டாக்கி பயன் பெறச் செய்கிறது.

 # அபிவிருத்தி - முன்னேற்றத்திற்கான - ஊழிய முன்னேற்றம்

7. வீட்டு செல் குழுக்கள் விசுவாசிகள் ஆன மந்தையை மேய்த்து பாதுகாப்பு தரவும், கிறிஸ்தவ ஆலோசனைகளை கொடுத்துதவுவதற்கான ஒரு இடத்திற்கும் வழி வகை செய்கிறது.
8. வீட்டு செல் குழுக்கள் நமது வரங்களுக்கும் தாலந்துகளுக்கும் அதுவும் ஆவிக்குரியதும் இயற்கையானதுமான இரண்டிற்குமாக ஒரு பேச்சு மேடையை உண்டாக்கிக் கொடுத்து மற்றவர்களுடைய தேவைகளை சந்திக்கும்படியாக தேவனால் பயன்படுத்தப்பட வேண்டும் என்று உதவி செய்கிறது.

 # வேதாகமத்துக் கணக்குக் கொடுத்தல்

9. வீட்டு செல் குழுக்கள் ஆவிக்குரிய தலைமைத்துவத்துக்கான வேதாகமக் கோட்பாடுகளான பணிந்து கீழ்படிதல், ஒப்படைப்பு செய்தல், கணக்குக் கொடுத்தல் ஆகியவற்றை நடைமுறைப் படி பிரயோகித்து கொள்ளும்படியான ஒரு மார்க்கத்துக்கு வழி செய்கிறது.

 # சுவிசேஷ பிரபல்யம்

10. வீட்டு செல் குழுக்கள் சுவிசேஷம் வெளியில் சென்றடைந்து எங்கே சுவிசேஷம் கிட்டிச் சேராத மக்கள் சிறிய குழு அமைப்பில் சௌகரியமாக இருக்க உணரும்படியாக சூழ்நிலையைத் தந்து உதவுகிறது.

வீட்டு செல் குழுக்கள்

வளர்ச்சி என்பது ஜீவியத்தின் இயற்கையான விளக்கத்தின் வெளிப்பாடாகும். அந்த மட்டத்தில்தான் ஜீவனுள்ள ஒரு திருச்சபை கட்டாயமாக வளர்ந்தாக வேண்டும்.

அநேக மேய்ப்பர்கள், போதகர்கள், வளர்ச்சியை நோக்கி வேலை செய்கிறார்கள். ஆனால் அதைத் தங்களோடு தக்க வைத்துக் கொள்வதற்காகப் போதுமான ஆயத்தங்கள் செய்து கொள்வதில்லை. இதன் விளைவாவது அந்தத் திருச்சபை மேய்ப்பருடைய தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் நேரடியாக ஊழியம் செய்வதற்கான அவருடைய சரீரத் திறனுக்கு அப்பால் அதிகமாக வளர்ந்து விடுகிறது. ஆதலால் அவர் நெருக்கடியை சந்திக்கும்படியாக இருக்கிறது. ஒன்று தமது ஊழியத்தின் தகுதியை எல்லாருக்கும் ஊழியம் செய்யும் படியாக சற்றுத் தாழ்வான நிலைக்கு கொண்டு வர வேண்டும் அல்லது மற்றவர்களைப் போஷிக்கும் படியாக சில மனிதர்களைப் புறக்கணிக்க வேண்டும். இது ஜனங்கள் சபையை விட்டு விட்டு செல்வதால் வளர்ச்சியானது இறங்குமுகமாக செல்லும்.

இந்த நிலைமையை எதிர்பார்க்கும் மேய்ப்பர் இந்த பிரச்சனைக்காக ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். ஆனால் அதற்காக செயலூக்கத்துடன் அவர் என்ன செய்யக் கூடும்?

தேர்ந்தெடுக்கும் உரிமைகள்

ஒரு பக்கத்தில் தனது ஊழியத்தின் அங்கத்தினர்களை அதிகரிக்கலாம். இது ஒரு தற்காலிகமான தீர்வு மாத்திரமேயாகும். தொடர்ந்து வளர்ச்சி அடைந்து கொண்டு போகும் பொழுது இதே மாதிரியான அடையாளமுள்ள நெருக்கடி திரும்பவும் உண்டாகும். மற்றொரு பக்கத்தில் ஏற்கனவே சபையில் கிடைக்கக் கூடிய சபை சாரா பிற ஏதுக்களை உபயோகப்படுத்தலாம். அந்த வரிசையில் அமரும் மக்களைப் பயிற்றுவித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் திருச்சபையின் வளர்ச்சியைப் போலவே வளைந்து கொடுக்கக் கூடிய பிற ஏதுக்களாய் இருப்பார்கள். இவர்கள் நன்கு பயன்படுத்தப்பட்டால் செயலூக்கமான ஆராதனை போதனை, சுவிசேஷ பிரபல்யம், சீஷத்துவமாக்குதல் இவற்றிற்குக் காரணமாக இருப்பார்கள்.

அமைப்பு

அநேக போதகர்கள் தங்கள் திருச்சபைக்குள்ளே பல பிரிவுகளையும், நிர்வாகத் துறைகளையும் சிருஷ்டிக்கிறார்கள். ஆனால் மிகப்பெரிய குறிப்பிடக் கூடிய திருச்சபை ஊழியமானது அதன் நான்கு சுவர்களுக்கு வெளியில் இருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ளத் தவறி விடுகிறார்கள். இது திருச்சபையைச் சாராத அயலகத்தாரை அடைந்தே ஆக வேண்டும். இந்த ஊழியம் ஒருக்காலும் சபைக்கு அடி எடுத்து வைத்திராத ஜனங்களுக்கு அருகில் சேர்ந்தே ஆக வேண்டும். இதை நிறைவேற்றுவதற்கான மூல ஏதுக்கள் சரியாகத் திரும்பவும் கை மேல் தான் இருக்கின்றன. அதாவது திருச்சபையைச் சேர்ந்த குடும்பங்களே ஆகும். அவர்களது இல்லங்கள் வெளியில் சென்று சந்திக்கும் வலைப் பின்னல் கேந்திரங்களாக உருவாகி அவர்கள் அயலகத்தாருக்கு நன்கு அறிமுகமானவர்களாகவும், ஏற்றுக் கொள்ளப் படக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

எப்படி ஆரம்பிப்பது?

a) போதகருடைய செல் குழு

ஒரு செல் குழுவை போதகர் தாமே திருச்சபை அங்கத்தினர்கள் மத்தியிலிருந்து நபர்களைத் தேர்ந்தெடுத்து ஸ்தாபிக்கும் படியாக ஆரம்பிக்கிறார். இதன் வாயிலாக அவர் அங்கத்தினர்களுக்கு எவ்வாறு ஒரு செல் குழு இயங்க வேண்டும் என்று காட்டுவதுடன் இந்த நிகழ்ச்சி நிரலுக்காக அவர் கொடுக்கும் முக்கியத்துவத்தையும் உறுதிபடுத்துகிறார்.

இந்த செல் குழுவை அடித்தளமாகக் கொண்டு வீட்டுச் செல் குழுவின் ஊழியத்தைச் செய்ய வருங்கால வாய்ப்பினை எதிர்பார்க்கும் தலைமைத்துவத்தை ஆயத்தம் செய்கிறார். அவர்களுடைய தேவைகளுக்காக ஊழியம் செய்யும்பொழுதே அவருடைய தரிசனத்தை பகிர்ந்து கொடுத்தும் அவர்களுக்கு போதனையும் செய்கிறார். பின்னர் அவர்களை திருச்சபை அங்கத்தினர்களின்

இல்லங்களில் வீட்டு செல் குழுவை உண்டாக்குவதற்காக அவர்களை வழி நடத்துகிறார். ஓர் உயர்ந்த குறிக்கோளாக இந்த செயல்பாடு அவர்களுடைய இல்லங்களிலே உண்டாக்கப்படவேண்டும்.

அந்த தலைவர்கள் திருச்சபையின் அங்கத்தினர்களாக இருக்க வேண்டும் என்பது இன்றியமையாததாகும். அந்த வீட்டு செல் குழுக்கள் செயல்படும் வீடுகளும் திருச்சபை அங்கத்தினர்களுடையதாக இருத்தல் வேண்டும். இது அந்தப் போதகரை வீட்டு செல் குழுக்கள் மீது நமது அதிகாரத்தை வைத்துக் கொள்ளும்படியாக உறுதி செய்கிறது. அதனால் அவர்கள் போதகருக்கும், திருச்சபைக்கும் விசுவாசம் உள்ளவர்களாய் இருப்பார்கள்.

மேலும் இந்த வீட்டு செல் குழு தலைவர்கள் செல் குழுவின் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து எழும்பி வருவதும் அவசியமாகிறது. தலைமைத்துவத்திற்காக பயன்படுத்தப்படம் எந்த நபரும் அந்த நிகழ்ச்சித் திட்டம் எவ்வாறு செயல்படுகிறதென்பதில் நன்கு அறிமுகமானவராக இருந்தால் அதிலும் ஏற்கனவே செல் குழுவில் அங்கத்தினராக இருந்தாலும் சிறப்பாக செயல்படக் கூடும்.

b) வீட்டு செல் குழு

இந்த வீட்டு செல் குழுத் திட்டமானது அந்த திருச்சபையின் எல்லா அங்கத்தினர்களும் முழுவதுமாக பங்கெடுத்துக் கொள்ளும்பொழுது செயலூக்கத்துடன் இயங்கும். இதைத் தான் திருச்சபையின் அடித்தளமாக ஊழியமாக ஆக்குகிறது. ஆகவே போதகர் திருச்சபையின் ஒவ்வொரு அங்கத்தினரையும் வீட்டு செல் குழுக் கூட்டத்திற்கு வாரந்தோறும் வருகை தரும்படி உற்சாகப்படுத்த வேண்டும். அந்தத் தலைவர்கள் மூலமாக அவருடைய ஊழியம் அவர்களைச் சென்றடையும். அவர்கள் தேவைகள் சந்திக்கப்படும். அவர்கள் தனித்தனியாகக் கவனித்துக் கொள்ளப்படுவார்கள்.

வளர்ச்சி

திருச்சபை வளர்ச்சி அடையும்பொழுது என்ன நேரிடுகிறது. இசைவிணக்கமும் (வளைந்து கொடுக்கும் தன்மை) வளர்ச்சியானது மாறுபட்ட தன்மைகளுக்கு தக்கவாறு அமைந்திருத்தலும் உடைய செல் குழு அமைப்பானது இங்கே வெளிப்படையாக செய்து காட்டப்படுகிறது.

வளர்ச்சியானது இரு வழிகளில் உண்டாகிறது. வீட்டு செல் குழுக்கள் தாங்களே அண்டை அயலகத்தாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கிறார்கள். மேலும் வளர்ந்து கொண்டு புதிய விசுவாசிகளை திருச்சபைக்குள் கொண்டுவர வாய்க்காலாக செயலாற்றுகிறார்கள். திருச்சபையுங்கூட வளர்ச்சி அடைகிறது. அவர்களது சுவிசேஷ அறிவிப்பு திட்டங்கள் புதிய நபர்களை கொண்டு வந்து அவர்களை செல் குழுவில் சீஷத்துவத்திற்காக வாய்க்கால் ஆக இருந்து கொண்டு வர பயன்படுகிறது.
ஒரு செல் குழு பதினைந்துக்கு அதிகமாக அங்கத்தினர்களைப் பெற்று வளர்ந்தால் அது கையாளப்படக் கூடாதபடி பெரிதாகிறது. ஆகவே தலைவரது தனிப்பட்ட தாமாகச் செய்யும் ஊழியம் குறைந்து போக ஆரம்பிக்கிறது. ஆனாலும் அந்த அமைப்புத் திட்டமானது இயக்கம் பெற்று செல் குழுக்களில் ஒரு அதிகரிப்பை சேர்த்துக் கொள்ளும்படியாக ஆக்கப்படுகிறது. அவருடைய குழுவைப் பிரித்து இரண்டாவது செல் குழுவை உண்டாக்க வேண்டும். இதை அவர் ஒரு உதவித் தலைவரை முன்னதாகவே பயிற்றுவித்து அவரே தலைமைத்துவத்தின் கடிவாளத்தை அந்த புதிய செல் குழு ஆரம்பிக்கும்பொழுதே போடும்படியாக செய்வாரானால் அதை நன்றாகவே துவங்கிக் கொள்வார். இம்மாதிரி சம்பவிக்கும்பொழுது போதகர் தமது செல் குழுவின் தொகையான இரண்டு மடங்காகிவிட்டது என உணர்ந்து கொள்வார். அந்தக் குழுக்கள் இதை திரும்பவும் செய்யுமானால் அது நான்கு மடங்காக பெருக்கம் அடைந்து விடும்.

வளர்ச்சியானது போதகருடைய செல் குழுவின் மீதும் அதன் தாக்கத்தைக் காட்டும். தலைவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்பொழுது அவரது செல் குழுவில் கூட்டம் அதிகமாகி அவருங்கூட அவரது தனிப்பட்ட சொந்த தொடர்பை இழந்து விடக் கூடும். ஆகவே அவர் இதற்கு இடையில் இடைப்பட்ட மட்டத்தில் தலைமைத்துவத்தை ஒருங்கிணைத்து அதன் காரணமாக பெரிய பிரிவுகளையும் சிறிய பகுதிகளாகக் குழுக்கள் உண்டாக்குவதால் நடைமுறைப் படுத்துகிறார். பத்து வீட்டு செல் ஒரு பிரிவு தலைவரின் கீழும் பத்து பிரிவுகளின் தலைவர்கள் போதகருக்கு கீழும் வருவார்கள். அந்த ஒவ்வொரு மட்டத்திலும் மிகச் சிறிதானதோர் செல் குழு இருக்கும்.

வளர்ச்சி உண்டாகும்பொழுது போதகர் பெரும் பிரிவுத் தலைவர்களுக்க ஊழியம் செய்வார். அவர்கள் தங்கள் முறையில் சிறு பகுதித் தலைவர்களுக்கும் சிறு பகுதித் தலைவர்கள் வீட்டு செல் குழுத் தலைவர்களுக்கும் அவர்கள் தங்கள் முறைப்படி செல் குழுவின் மற்ற அங்கத்தினர்களுக்கும் ஊழியம் செய்வார்கள்.

இந்த விதமான அமைப்புத் திட்டமானது அளவுக்கு மீறின வளர்ச்சிக்கான ஏதுக்களை உடையதாயிருந்து திருச்சபை வளர்ச்சிக்கு இடையூறு செய்யாது. அது திருச்சபையின் முழுவதுமான சாத்திய கூறுகளை அலுவல்களில் ஈடுபடுத்திக் கொண்டு, ஊழியர்களை அடையாளங் கண்டு கொள்ள உதவியும் அவர்களை விருத்தியும் செய்கிறது. அது மிகவும் செயலூக்கத்துடன் புதிதாகக் கர்த்தருக்குள் கொண்டு வரப்பட்ட புதிய சீஷர்களுக்கு முன்னேற உதவுகிறது. ஆகவே இதன் பலா பலனாவது ஒரு வலிமை மிகுந்த பயன்படக் கூடிய திருச்சபை அங்கத்தினர்த்துவம் ஆகும். இந்த விதமான காரணிகள் கைக்கெட்டும் அளவில் எப்பொழுதுமே இருந்து கொண்டு இருக்கும். ஆனால் அது ஆபூர்வமாக அபிவிருத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. அதனால் திருச்சபை வரவு செலவுத் திட்டத்திற்கு கூடுதலான செலவு கிடையாது. ஏனென்றால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் ஊழியர் மட்டத்தில் மாத்திரமே போதகர் இந்த பிரிவு, சிறு பிரிவுக்கான தலைவர்களை முழு நேர ஊழிய அலுவலர்களாக அவர் அப்படி விரும்பினால் அவர்களை அவ்வாறு பதவியில் வைக்கலாம்.

இதர ஊழியங்கள்

இந்த வீட்டு செல் குழு அமைப்பு திருச்சபையின் மற்ற ஊழியங்களுக்கு எவ்வாறு பயனளிக்கக் கூடும்?

a) அது தலைமைத்துவ திறமையை வளரச் செய்கிறது

அங்கத்தினர்கள் சீஷர்களாக ஆக்கப்படுவதாலும், வீட்டு செல் குழுக்களில் அவர்கள் சாத்தியமாக்கக் கூடியவைகளை முன்னேற்றம் செய்து மற்ற ஊழியப் பகுதிகளில் உபயோகிக்கும்படியாகச் செய்கிறார்கள்.

b) அதற்கான ஏதுக்களை ஒன்று சேர்த்துக் கூட்டுவதற்கு ஏதுவாக்குகிறது

திருச்சபையானது நகர் முழுவதும் விரிந்த வெளி உலக சுவிசேஷம் போய்ச் சேர்வதற்கு வீட்டு செல் குழுக்கள் மிகவும் செயலூக்கமான கைப் பிரதி துண்டுகளை விநியோகம் செய்யும்படியான செய் முறைக்குச் சிறந்த வழியாக பயன்படும். மேலும் வீட்டுக்கு வீடு என்ற அடிப்படையான முறையில் மக்களுக்கு அழைப்புக் கொடுக்கப்படுகிறது. இதற்கான வாய் வழிப் பிறப்பு ஆணைகள் தீவிரமாக செய்தித் தொடர்பாகிறது. அதாவது வெகு விரைவாக போதகரிலிருந்து ஒவ்வொரு தனி நபர் அங்கத்தினர்களுக்கும், மேலும் திருச்சபை முழுவதுமாக ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் கூட்டிச் சேர்க்கப்படக் கூடுமாகிறது.

ஒவ்வொரு மட்டத்திலும் பொறுப்பை அளித்தல்

a) போதகர் (மேய்ப்பர்)

அவ்வாறு தெரிந்தபடி அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியானது எவ்வளவு முயற்சியை போதகர் அந்த திட்டத்திற்காக எடுத்து கொள்ள முடியுமோ அதைச் சார்ந்துள்ளது. அவர் கட்டாயமாக அதை முன்னேற்றுவித்து, தலைமைத்துவத்தை உற்சாகப்படுத்தியும் அதன் வளர்ச்சிக்கு ஆணைகள் பிறப்பித்தும் அங்கத்தினர்களை அகத் தூண்டுதல் பெறவும் செய்ய வேண்டும். அவர் அந்தத் திட்டமானது ஒழுங்கான நிர்வாக முறையில் இயங்குவதற்காக உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் போதகர் ஆனவர் பூகோள பிரதேசவாரியான அமைப்பு இருக்கிறவாறு நிலைப்பட்டிருக்க வேண்டுமென்பதை வற்புறுத்தி அதனால் அந்த அங்கத்தினர்கள் தங்கள் இல்லங்களுக்கு அருகில் செயல்படும் வீட்டு செல் குழுக்களுக்கு செல்லுமாறு கூற வேண்டும்.

போதகர் தலைவர்களுடைய உயர்ந்த தகுதித் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக என்றும் தொடர்ந்து நடத்தப்படும் பயிற்சித் திட்டத்திற்கு வழி வகை செய்ய வேண்டும். ஆகவே தியான முகாம்கள், மகா நாடுகள் ஆகியவற்றை ஏற்படுத்த ஒழுங்கு செய்ய வேண்டும். அப்படி செய்வதால் தங்களுக்கு

முன்னாக வைக்கப்பட்டிருக்கும் தரிசனத்தை நிறைவேற்ற முடியும். இதற்காக அவர்களுக்கு முன் வைக்கும் பயிற்சி புத்தக ஏடுகள் சீஷத்துவத்தை உண்டாக்கும் நடைமுறைக்கு உதவி செய்யும்படியாக முடுக்கி விடப் பட வேண்டும்.

b) பெரும் பகுதி - சிறு பகுதித் தலைவர்கள்

இந்த இடைப்பட்ட நிலையில் உள்ள தலைவர்கள் முக்கியமான கிரியையை நிறைவேற்றுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் போதகருடைய ஊழியத்தின் விரிவாக்கத்தினர் ஆவார்கள். இந்த மட்டத்தில் தலைமைத்துவம் முக்கியமான ஊழியப் பொறுப்புகளை அந்த பெரிய சிறிய பிரிவுகளில் பணியாற்றும் குழுக்களுக்கு அளிக்கிறது. அவர்கள் இந்த குழுக்களிடையே ஒற்றுமை உணர்வை உருவாக்கி அவர்களுக்கென்று ஒரு அடையாளத்தையும் மேற்பார்வை நோக்கையும் திருச்சபையாகிய சரீரத்தின் பகுதிகளில் உண்டாக்க வேண்டும். அவர்கள் முன்னேற்றுவித்தும் பயிற்றுவித்தும் செல் குழுவின் தலைமைத்துவத்தை சீஷர்களாக ஆக்க வேண்டும்.

c) வீட்டு செல் குழு தலைவர்கள்

இந்தத் தலைவர்கள் தரைப் புல்வேர் மட்டத்தில் அதாவது அடி மட்டத்தில் ஊழியம் செய்கிறார்கள். இங்கே தான் திருச்சபை வளர்ச்சி நிகழ்கிறது. அவர்கள் தங்களுடைய குழுக் கூட்டங்கள் செயலூக்கத்துடனும் ஆர்வத் தூண்டுதலாகவும் இருக்க உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே திருச்சபையான சரீரத்தின் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும். அந்த புதிய விசுவாசிகளும் சரியான பிழையற்ற முறையில் சீஷராக்கப்பட வேண்டும். இந்த வாரக் கூடுகைகளின் நடைமுறையின் போது தலைவரானவர் அங்கத்தினர்களை சாட்சியைப் பகிர்ந்து கொள்ளவும், ஒன்று கூடி ஜெபிக்கவும் வசனத்தை ஒன்றாகச் சேர்ந்து படிக்கும்படியாக அவர்களை உட்படுத்தி பழக்க வேண்டும். அவர்களை அந்தக் குழுவினரை சாட்சி சொல்லவும், திருச்சபையின் செயல்பாடுகளுக்குள் இழுத்து விட்டு ஐக்கியப் படுத்த வேண்டும்.

தலைமைத்துவத்திற்கான தகுதிகள்

ஆகவே தலைமைத்துவத்தின் தகுதியான தன்மைகள் முக்கியமான ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். மேலும் அந்தத் தலைமைத்துவம் பின் கூறப்பட்டபடி இருக்க வேண்டியது அவசியம். 1) திருச்சபைக்கு முன் மாதிரியாகவும் 2) போதகருக்கும் திருச்சபைக்கும் விசுவாசமுள்ளவர்களாகவும் 3) பணிந்து கீழ்படியவும், போதிக்கப்படவும் 4) முழுவதுமாக ஒப்படைப்புச் செய்தவர்களாகவும் இருப்பது அவசியம்.

இதுதான் ஒப்படைப்புச் செய்வதைச் சார்ந்திருக்கும் நிகழ்ச்சித் திட்டமாகும். தலைமைத்துவமும் ஒவ்வொரு மட்டத்திலும் ஒப்படைப்புச் செய்ய வேண்டும். அவர்கள் வாரந்தோறும் ஒழுங்கானதோர் முறையில் குறைந்தது மூன்று மாலை நேரங்களில் ஒதுக்க வேண்டும். ஒன்று செல் குழுவிற்கு அதில அவர்களுக்கு ஊழியம் செய்யப்பட வேண்டும். மற்றொன்று செல் குழுவுக்கு அதாவது அவர்கள் ஊழியம் செய்யும்படியாக மூன்றாவது செல் குழு அங்கத்தினர்களைச் சந்தித்து அவர்கள் ஊழியம் செய்யுமிடத்திற்கு சென்று பார்க்கவும். மேலும் அவர்கள் ஆலோசனை கூறுவதற்கும் அந்த செல் குழு மக்களுடன் ஒன்று சேர்ந்து ஜெபிக்கவும். தங்களை வசதிப்படுத்தினவர்களாய் இருக்க வேண்டும்.

வளைந்து கொடுக்கும் தன்மையும், சூழ்நிலைக்குத் தக்கதாக தங்களை ஒன்றுபடுத்திக் கொள்வதும்

இந்த அடிப்படையான கோட்பாட்டை சுலபமாக அது பழக்கப் படுத்திக் கொண்ட குறிப்பிட்ட கலாச்சாரத் தேவைகளுக்காக தன்னை ஒன்று படுத்திக் கொள்வதாகும். உலகம் முழுவதும் செல் குழுவின் நிகழ்ச்சித் திட்டங்கள் அடிப்படையில் ஒன்று போலவே இருக்கும். மேலும் அது குறிப்பிட்ட பிரதேசங்களின் தேவையானவைகளுக்காக ஒத்துப் போகும்படி ஒன்றுபடுத்தி அமைத்துக் கொள்ளக் கூடும்.

நன்மையான பயன்கள்

தன்னுடைய நேரத்தையும் முயற்சியையும் செல் குழுத் திட்டங்களை திருச்சபையில் கட்டி எழுப்பும் படியாக விதைப்பவர் வெகு சீக்கிரத்தில் சில பிரதேசங்களில் நன்மையான பயன்களை அறுவடையாக்கிக் கொள்வார்கள்.

1) நேரம்

அவர் அற்பமான பிரச்சனைகளுக்காக குறைவான நேரத்தையும் அவர் அழைக்கப்பட்ட ஊழியத்திற்காக அதிகமான நேரத்தை பயன்படுத்துவதாக கண்டு கொள்வார்கள். இந்த பிரச்சனைகள் வீட்டு செல் குழு மட்டத்தில் தீர்க்கப்படும். அந்த மட்டத்தில் கையாளப்படக் கூடாத பிரச்சனைகள் மட்டுமே சிறு மற்றும் பெரிய பகுதித் தலைவர்கள் மட்டத்திற்கு கொண்டு வரப்படும். இறுதியாக போதகர் இடத்திற்கு அவை அந்த மட்டங்களில் தீர்க்கப்படாவிட்டால் கொண்டு வரப் படும்.

2) வளர்ச்சி

செல் குழுவின் ஆரோக்கியமான வளர்ச்சியானது திருச்சபையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும்.

3) முதிர்ச்சி

ஊழியத்தில் தலைமைத்துவமும் செல் குழு அங்கத்தினர்களும் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் பொழுது முன்னேற்றமடையவும் ஆவிக்குரிய பிரகாரம் வளரவும் உதவி செய்கிறது.

4) செய்தித் தொடர்பு

செய்தித் தொடர்பு நடைமுறையானது நிகழ்ச்சித் திட்டத்தின் அமைப்பினால் பெரிதும் உதவியைப் பெறுகிறது. அது தனிப்பட்ட சொந்தமான ஊழியமாகும். தலைமைத்துவம் ஆனது அங்கத்தினர்களுடைய பிரதிக்கிரியைகளை எச்சரிக்கையாகக் கவனித்துக் கொள்ளும்படியாகவும் இந்த நடைமுறையினால் சரீரமாகிய திருச்சபை பிரதிச் செய்கையாக விரைவாகச் செயல்படச் செய்கிறது.

5) நீடித்து நிலைத்திருத்தல்

செல் அமைப்பு வாழ்க்கை போராட்டத்தில் தொடர்ந்து வாழும் போக்குடையது. மேலும் அழுத்த பாரமான சந்தர்ப்பங்களிலும் சிறப்பாக செயலூக்கத்துடன் செயல்படவும் மத சம்பந்தமான சித்ரவதை அல்லது அரசியல் நெருக்கடிகளைச் சந்திப்பதில் பெரிய குழுக்கள் அதைக் கடினமாகக் கண்டு கொள்கின்றனர்.

சிறு குழுக்களின் வல்லமை

சிறு குழுக்கள் மீது காட்டப்படும் வளருகின்ற பேரார்வமானது நமது காலத்தில் வரப்போகும் எழுப்புதலைக் குறித்து மிகுதியான நம்பிக்கையைக் கொடுக்கும் அடையாளங்களுக்கு முன்னறிவிப்பதாக இருக்கிறது. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், ஒவ்வொரு பாகுபட்ட திருச்சபைக்குள்ளும் இந்த விதமான ஆவிக்குரிய போது நோக்குள்ள அமைப்புகள் மேலே நோக்கி எழும்புகின்றன. இந்த இயக்கமானது மனிதர்கள் ஸ்தீரிகளின் இருதயங்களில் தோன்றுகிற ஓர் ஆழ்ந்த கிறிஸ்தவ அனுபவத்தின் மெய்ம்மையைக் குறித்ததோர் வாஞ்சையை வெளிப்படுத்துகிறது.

சில வருடங்களுக்கு முன்பு பில்லி கிரகாம் அவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கப்பட்டது. "நீங்கள் ஒரு பெரிய நகரத்திலுள்ள ஒரு பெரிய திருச்சபைக்குப் போதகராக இருப்பீர்ளென்றால் உங்களுடைய நடவடிக்கைக்களுக்கான திட்டம் எதுவாக இருக்கும்?" என்பதாகும்.

அதற்கு அந்த போதகர் (பில்லி கிரகாம்) சொன்னதாவது, "நான் செய்யக் கூடிய முதல் காரியங்களில் ஒன்று என்னவென்றால் என்னைச் சுற்றி 8 அல்லது 10 அல்லது 12 பேர் அடங்கிய சிறு குழுவைக் கூடிவரச் செய்து, அவர்களை வாரத்துக்கொருமுறை ஒன்றாகக் கூடி அதற்கான தியாகத்தைச் செய்யும்படியாகப் பண்ணுவேன். அது அவர்களின் நேரத்திலும் முயற்சியிலும் சிறிதளவு விலையாகப் பெறும். சுமார் இரண்டு வருட கால அளவில் எனக்குத் தெரிந்த யாவற்றையும் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவேன். இதற்கு பிறகு என்னிடம் சபை அல்லாதவர்களிடமிருந்து 12 ஊழியர்களை உண்டாக்கி அவர்களைத் தங்கள் முறைவரும் பொழுதும் பொழுது 8 அல்லது 9 அல்லது 12 பேரை அதிகமாகச் சேர்த்துக் கொண்டு போதிக்க வேண்டும். ஆம் கிறிஸ்துவே இதற்கு மாதிரியை வைத்துப் போனார் என்று கருதுகிறேன் என்றார்."

கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இணைந்து

டாக்டர் பில்லி கிரகாம் அவர்களால் குறித்துச் சொல்லப்பட்ட கோட்பாடானது உலகமெங்கும் சுவிசேஷ பிரபல்யத்தின் கூர் முனையாலும், சீஷத்துவத்துவத்தாலும் பிரயோகிக்கப்பட்டு வருவதைக் காண முடியும். இந்த விதமான கிறிஸ்துவின் ஆவியினால் ஐக்கியப் படுத்தப்பட்ட ஓர் கூட்டத்தினரிடையே வியக்கப்படத் தக்கதொன்று உள்ளது. இரண்டு அல்லது மூன்று பேர்கூட அவருடைய நாமத்தினால் ஒன்று கூடி வரும் பொழுது "ஒருமனப்பட்டிருந்தால்" அதற்கு மிகுந்த வல்லமையுண்டு. இங்கே இயேசுவால் உபயோகப்படுத்தப்பட்டுள்ள வார்த்தையானது, சப்த ஒலியில் ஒத்திருந்தால் (அல்லது) சிந்தனையில் ஒற்றுமையிருந்தால் என்ற பொருள் விளக்கத்தைக் கொடுக்கும். இசை இணக்கமுள்ள ஒரு ஒலியை உண்டாக்குவதென்றால் அது எளிதில் கிடைப்பதல்ல. அதை அடைந்து கொள்ளுவதில் உள்ள சிரமமானது இசைக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அது பெரிதும் சிரமமாகிறது. இந்த வகையில் சிறிய குழுக்களால் அனுகூலங்கள் உண்டாகிறது. நாம் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளுகிறபொழுது தேவனால் அருளப்பட்ட ஆள் தன்மைகளையும் வரங்களையும் கூர்மையாக்கிக் கொண்டு இசைக் குழுவிற்காக நுட்பமாகக் கையாளப்படும் சங்கீத ஒலியைப் போல ஒருங்கிணைப்பை உண்டாக்கிக் கொள்ளும்படி உருவாக்கப்படுகிறோம். ஆதலால் ஒற்றுமைப்படுத்தப்பட்ட குழு அதன் பாகங்களை விட சிறப்பானதாகிறது. ஆனாலும் ஒவ்வொரு நபருடைய தனிப்பட்ட பிரதி உபகாரத்திற்கு குறைவும் ஏற்படாது. இதன் பிரதிபலிப்பை திருமணத்தில் வெகு அழகாகக் காணலாம். இந்த திருமண உறவில் அன்பானது மனிதனுடைய வெளிப்பாட்டின் மிக உயர்ந்த நிலையைப் பார்க்க முடிகிறது. இதன் ஆவிக்குரிய முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வோமென்றால் திருச்சபைக்கான கிறிஸ்துவின் அன்பையும் நாம் ஆழமாக உணர்ந்தறிந்து கொள்ள முடியும். இந்த ஐக்கியத்தின் வெளிப்படையாகவே மனித குலம் பிறப்பிக்கப்படும் வழியாகும். மனித குலத்து ஜீவியமானது தனது தோற்றத்திலிருந்தே தம்முடைய சுயமான தோர் மேன்மையான தன்மையால் சூழப்பட்டிருக்கக் கூடும் என்பதற்காகவே தேவன் அண்ட சராசரத்தை அதற்குத் தகுந்ததோர் முறையில் அமைத்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒன்றுபட்ட ஆவியால் ஆன குடும்பத்து வட்டங்களால் நாம் அடிப்படையான வாழ்க்கையின் பண்புகளைக் கற்றுக் கொண்டு வருவதால் நமது நல்லொழுக்கமும் அவற்றைச் சுற்றி உருவாக்கப்படுகிறது. சரியாகச் செயல்படுமானால் சமூகத்தில் புதிய மாறுதல் உருவாகுவதற்குக் கிறிஸ்தவக் குடும்பமும் ஒரு வல்லமை மிகுந்த கருவியாக ஏன் ஆகக் கூடாது என்பதை நாம் பார்க்கக் கூடும்.

புதிய ஏற்பாட்டுத் திருச்சபையில் உண்டான மாதிரி

திருமணம் என்ற சமுதாய உறவமைப்பு சிதைந்து போனதால் நாகரிகத்தின் ஒவ்வொரு அம்சமும் இடர்படுகிறது. ஏன் திருச்சபையுங்கூட என்ற போதிலும் உலகத்தில் நிலைமை என்னவாக இருந்தாலும் குடும்பத்திற்கான தேவனுடைய திட்டத்தின் கோட்பாடுகளும் அதன் நன்மை பயக்கும் ஏதுக்களும் கிறிஸ்தவ சீஷர்கள் அடங்கிய சிறு குழுக்களால் ஒருங்கிணைக்கப்படக்கூடும். இதைத் தான் இயேசுவும் செய்து காட்டினார். திரளான மக்கள் கூட்டத்திற்கு அவர் ஊழியத்தை நிறைவேற்றிய பொழுது தம்மைச் சுற்றி ஒரு சிலர் பின்பற்றி வருபவர்களை ஒன்று சேர்த்துக் கொண்டு ஆற்றல் வாய்ந்த படிப்பை கற்றுக் கொள்வதற்கான சூழ்நிலையைப் படைத்திருந்தார். இந்த ஐக்கியத்திலிருந்து அவருடைய இராஜ்ஜியத்தைப் பற்றிய தரிசனத்தால் நிரப்பப்பட்டும் அவருடைய ஊழியத்தை திரும்பவும் பிறப்பிக்கும்படி தகுதிப்படுத்தப்பட்டதுமான விசுவாசிகளான ஒரு வளரும் கேந்திரக் குழு முளைத்தெழும்பியது. இயேசுவிடம் இருந்து தாங்கள் கற்றுக் கொண்டதைச் சீஷர்கள் அப்போஸ்தலத் திருச்சபைக்குள் கொண்டு சென்றனர். நிச்சயமாகவே சரீரமாகிய திருச்சபை ஜெப ஆலய வளாகத்திலோ அல்லது ஒரு பொது இடத்திலோ ஆராதனைக்காக ஒன்று கூடி வந்தது. ஆனால் வழக்கமாக மக்கள் தங்கள் வீடுகளிலே ஒன்று கூடி சந்தித்துக் கொண்டனர். இன்றியமையாததாக அது ஒரு சிறு குழு இயக்கமாகவே இருந்தது.

எழுப்புதலின் வரலாற்றின் வழியில் பார்த்த பிரகாரமாக

ஆனால் விசுவாசிகள் உலகப் புகழ் பிரசித்தமடைந்தபொழுதும், கிறிஸ்தவமானது காலப் போக்கில் ரோமாபுரியின் அரசாங்க மதமாக அங்கீகரிக்கப்பட்டது. மேலும் ஆவிக்குரிய ஆர்வமானது வரவரக் குறைந்து காணப்பட்டது. இன்னும் அங்கே ஒரு விசுவாசத்தில் மீதமிருப்போர் கூட்டம் ஒன்று விசுவாச அக்கினியை ஜீவனுள்ளதாக என்றும் அணையாமல் பற்றியெரிந்து கொண்டிருக்குமாறு வைத்துக் கொண்டே இருந்தது. சிற்சில சமயங்களில் புதிய தீவிரத்துடன் அது உடைத்துக் கொண்டு வெளி வந்தது.

இந்த பிராட்டஸ்டண்டு மத சீர்திருத்தம் திருச்சபைக்கு புதிய நம்பிக்கையைத் தந்தது. அதன் வலிமையானது எழுப்புதலைக் காட்டிலும் ஆரோக்கியமான தத்துவ உபதேசத்தையே குறியாகக் கொண்டிருந்தது. திருச்சபையானது தத்துவ சம்பந்தமான விவாதங்களின் பிடியில் இருந்த பொழுது தேவ ஜனங்களாகப் பட்டவர்கள் வீட்டு வேதாகமப் படிப்பு குழுக்களைப் போஷித்து உலர்ந்த எலும்புகளில் புதிய ஜீவனை ஊதினார்கள். ஆகவே வரலாறானது தனது பல வடிவங்களில் தன்னைத் தானே திரும்பும் படியாகச் செய்து கொள்கிறது.

அனுகூலங்கள்

நம் எல்லோருக்கும் சிறு கூட்டங்களினால் உண்டாகும் ஐக்கியமானது மிகவும் தேவையாகும். ஆரம்பத்தில் இரண்டு அல்லது மூன்று அனலுள்ள விசுவாசிகள் மட்டுமே போதுமானவர்கள். ஆனால் 8 அல்லது 10 பேர் இருப்பது விரும்பத் தக்கதாகும். நிச்சயமாகவே தேவன் உங்களுடன் இடைபட்டது போலவே தேவனிடம் தங்களுக்கு சிறந்ததைத் தேடிக் கொள்ளவும். தேவனுடைய வார்த்தையில் இன்னும் ஆழ்ந்து ஆராயக்கூடிய ஐசுவரியங்கள் இருப்பதாக அறிந்தும், மேலும் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலுக்குத் தங்களை திறந்தவர்களாகவும் வைத்திருக்கக் கூடிய மற்றவர்களிடமும் தேவன் பேசியிருக்கிறார். ஆகவே அந்த மாதிரியான ஒரு கூட்டம் தேவனுடைய கட்டளையைப் பெற்றுக் கொள்ளும்படியாகக் காத்திருக்கிறார்கள். அவர்கள் ஒருங்கே இணைத்துக் கொள்ளாதவர்களாகவும், ஒரு வேளை தங்களுக்குள்ள ஒன்றுபட்ட வாஞ்சைகளைப் பற்றி விழிப்பில்லாதவர்களாகவும் இருந்தாலும் எழுப்புதலுக்குரிய சக்தியாவதற்கு அவர்கள் உற்சாகப்படுத்துதலும் தலைமைத்துவமே தேவைப்பட்டவர்களாக அங்கே அவர்கள் இருக்கவே இருக்கிறார்கள். அவர்களைக் கண்டு பிடியுங்கள், அவர்களுடன் சேர்ந்து உங்களுடைய நம்பிக்கையைத் தூண்டவும், உங்களுடைய ஊழியத்தை விரிவாக்கம் செய்வதற்கும் நீங்கள் ஒன்றாகக் கூடி என்ன செய்ய முடியுமென்பதையும் கண்டு அறியுங்கள். இந்த இணைப்புத் தோழமைக்காக மற்றத் தொடர்புகளை அறுத்து விட வேண்டுமென்பது அவசியமல்ல. உண்மையில், உங்களுடைய சாட்சிக்கு செயலூக்கமான வெளிப்படுத்துதல் இருக்க வேண்டுமானால் நீங்கள் திருச்சபையிலும் சமுதாயத்திலும் ஒரு அகன்ற நட்புறவை வளர்த்து பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் உங்களுடைய சாட்சியை நடைமுறையில் உள்ள

திருச்சபை நிகழ்ச்சியைத் தொடர வேண்டுமானாலும் தனிப்பட்ட சொந்தத் தொடர்பையும், வெளியே போய் சேரும் சுவிசேஷ அறிவிப்பையுமே மையமாகக் கொண்ட சிறு செல் குழுக்களை விருத்தி செய்வதையும் புறக்கணிக்காமல் இருங்கள்.

கூட்டு ஒழுங்கு முறையை பயிற்றுவித்து விருத்தி செய்யுங்கள்

இந்த மையக் குழு வளர்வதற்கு உதவும் எளிய வழியானது ஜெபத்திற்காகவும், வேதாகமப் படிப்புக்காகவும் ஒழுங்காகக் கூடிவரச் செய்வது தான். ஆராதனை முறை எதுவாக இருந்தாலும், அதனுடைய இருதயத்தில் தேவனுடைய உன்னதமான நோக்கங்களை அறிந்து கொள்வதற்கானதோர் தீர்மானமும் இருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவருக்காக உங்களுக்குள் இருக்கும் திறந்த தன்மையில் நீங்கள் தேவனுடனும் உங்களுக்குள் ஒருவருக்கொருவரும் உண்மையுள்ளவர்களாக இருங்கள். சுயநலம் எந்த வகையான வளர்ச்சியையும் தடை செய்யும். இதற்காக நீங்கள் ஒருவருக்கொருவர் நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்கவும், அந்த தன்மையான நம்பிக்கையில் பகிர்ந்து கொள்ளப்பட்டவற்றை குழுவின் காரியங்களுக்கு கொண்டு போகாதிருக்கும்படியாகவும் வேண்டியதாய் இருக்கிறது. நீங்கள் போகும் போக்கை விட்டு வழி விலகிப் போகாமலும் அல்லது நிர்விசாரமாக இருக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். உங்களது முயற்சி செய்வதன் உணர்வை இழக்கும் எந்த நேரத்திலும் முன்னேற்றத்தின் கதவு அடைபட்டு விடும்.

வேதத்தைப் பற்றியதோர் ஒழுங்கான படிப்பு முறை உங்கள் தரிசனத்தையும் அர்ப்பணிப்பையும் விரிவடையச் செய்யும். உங்களது கைக் கொள்ளும் முறைகளில் படைப்புத் திறன் உடையவர்களாயிருங்கள். அதாவது தியான ஆராய்ச்சி புத்தகத்தையோ அல்லது புகழ் பெற்ற ஆவிக்குரிய புத்தகத்தையோ விவாதிக்கும் பொழுது மேற்கூறியவாறு இருங்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தையில் முதிர்ச்சி அடைய அடைய நீங்கள் ஜெபம் ஏறெடுக்கும் பழக்கத்திலும் வளர வேண்டும். இந்த ஐக்கியமானது கிறிஸ்துவின் ஆவியினால் நிரப்பப்படும் பொழுது இந்த பழக்கமும் (இயற்கையாகவே) தானாகவே உண்டாகும். தேவனுடன் நெருங்கி வருவதற்கும் மற்றவர்களுடனும் நெருங்கி இருப்பதற்கும் வாஞ்சையோடிருந்தால் சிற்சில நேரங்களில் நீங்களும் உங்கள் குழுவும் ஒரு நேர இரவு ஜெபமாவது அல்லது வார இறுதி தியானமாவது ஒழுங்கு செய்து கொள்ளும்படியாக விரும்புவார்கள்.

மற்றவர்களை நோக்கி பொங்கி பெருகுதல்

இந்தக் குழுவானது தனது சொந்தமான காரியங்களைக் குறித்து மட்டும் கரிசனையாக இருக்கக் கூடாது. அது தன் சொந்தக் காரியங்களால் மட்டும் திளைத்து இருக்குமானால் அங்கு ஜலமானது தேங்கி விடக்கூடும். ஆனால் இந்த ஐக்கியமானது ஜீவ தண்ணீரின் தாகந் தீரப் பருகுமானால் தேவனுடைய அன்பிலும் பலமடைந்து அவருடைய ஆசீர்வாதத்தில் பகிர்ந்து கொள்ளும் வாஞ்சையும் அதிகரிப்பதால் அது வெளிப்படவும் கூடும்.

தனது சொந்தமான சாட்சியோடுங்கூட நீங்கள் ஒரு கூட்டுறவு முறையான நடவடிக்கையை மேற்கொள்ளலாம். அதாவது சமூகத்தில் போய் சந்திப்பு, அயலகத்தாரிடையே வெளியாரைச் சென்றடைவதற்கான வேதாகமப் படிப்புக் குழு அல்லது மிஷன் ஊழியத்தில் பங்கெடுத்துக் கொள்ளுதல் போன்றவை.

அந்த குழுவின் தாக்கம் வளரும் பொழுதும் புதிய மக்களும் உங்கள் அணியில் வந்து சேர்ந்து கொள்ள விரும்புவார்கள். காலப் போக்கில் நீங்கள் பிரிவாகப் பிரிந்து பலவிதமான வேறுபட்ட மக்கள் சேர்ந்ததான புதிய குழுக்களை ஆரம்பிக்க நேரிடலாம். இந்த அனுபவமும், நம்பிக்கையையும் உங்கள் குழுவின் ஐக்கியத்தின் மூலமாகப் பெற்றிருப்பதால் தலைமைத்துவத்திற்கான நீரோட்டமாக அமைந்து என்றென்றும் விரிவாக்கம் பெறும் வெளியில் சென்றடைவதாக ஆகி விடும்.

கொஞ்சங் கொஞ்சமாக எழுப்புதலின் ஜீவாலையானது சுவிசேஷம் சமூகத்தில் சென்றடையும்பொழுதும், கொழுந்து விட்டு எரிந்து பரவி விடும். அப்பொழுது உலகம் உங்களை கவனித்தறிந்து கொள்ளும்.

நடைமுறையாக உங்கள் செல் குழு கூட்டத்தை எப்படி ஒழுங்குபடுத்துவீர்கள்

நற்காலி வரிசை ஒழங்கு:

இதன் நோக்கமாவது எல்லா ஆசனங்களும் மத்தியிடத்தை நோக்கியும், ஒருவருக்கொருவர் எதிராகவும் பேச்சாளர்களை நோக்காது அமையும் படியாகப் போடப்பட வேண்டும். இது ஒரு போதனை வகுப்பல்ல அல்லது பள்ளி வகுப்பறை சூழ்நிலையுமன்று என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். அது பரிசுத்த ஆவியினால் சூழப்பட்ட ஒரு கோத்திரத்துக் கூட்டமாகும். அதன் தலைவர் அதன் தலைமை ஆசனத்தில் வீற்றிருப்பரல்ல, அல்லது எல்லோருக்கும் முன்பாகவோ ஆனால் அதே வட்டத்தில் அல்லது சுற்றில் மற்றவர்களுடன் சேர்ந்தே அமர்ந்திருப்பார். இந்த ஆசன அமைப்பு முறையில் மிகக் குறைந்த நோக்கமாவது இதன் அமைப்பு வரிசையில் ஒருவருக்கொருவர் சௌகரியமாக பேசுவதற்கு என்று உணருவதற்காகவே ஆகும். இதன் குறிக்கோளாவது தலைவரானவர் பயிற்றுவிப்பவராக இருக்காமல் அதிகமான ஆதரவு தருபவராக இருக்க வேண்டும் என்பதாகும். அவர்கள் அனைவரும் செல் குழு நடைமுறைத் திட்டத்தில் ஒன்றுபட்டவர்கள். ஒவ்வொரு குடும்பமும் முழுக் குடும்பக் குழுவின் வெற்றியில் பங்கெடுத்துக் கொள்கிறது. ஜெயம் என்பது ஒவ்வொரு அங்கத்தினரும் கிறிஸ்துவின் சாயலில் உருவாக்கப்பட வேண்டும் என்பது அர்த்தமாகும். ஒவ்வொரு அங்கத்தினரும் குழுவிலுள்ள மற்றொரு நபருக்கு உதவியாக இருக்க வேண்டும்.

கூடும் அறையின் சூழ்நிலை:

போதுமான வெளிச்சம் கொடுக்கும் ஒழுங்கு முக்கியமானதாகும். அவசியமானால் ஒவ்வொரு நபரும் வாசிப்பதற்கு போதுமான வெளிச்சம் பெற வேண்டும். மக்கள் வட்டத்தில் வரிசை பிரகாரமாக வாசிப்பதோ அல்லது உரத்த குரலில் வாசிப்பதோ நல்ல யோசனை ஆகாது. அநேக மக்கள் பள்ளிக் கூடங்களில் வாசிப்பதற்கோ அல்லது சப்தமாகப் படிப்பதற்காகவோ அதிகமான கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள்; ஆனால் வயது வந்தவர்களுக்கு இது சில சமயங்களில் பாரமாக இருக்கலாம். வாசிக்க விருப்பமானவர்களை வாசிக்கச் செய்யும்படியாக கற்றறிந்து கொண்டு அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும். அவசியமானால் முறை வைத்து படிக்கலாம்.

சீதோஷ்ண நிலையைப் பொறுத்த அளவில் சந்தர்ப்பம் அனுமதித்தால் சௌகரியமான சீதோஷ்ண நிலையைப் பயன்படுத்துவது அருமையானது. சற்று குறைவான குளிர்ந்த பக்கம் வேலை பார்க்கும் ஆட்களை கூட்டம் நடக்கும்பொழுது விழிப்பாக இருக்கச் செய்யும்.

இலட்சியமான சந்தர்ப்பங்கள் விரும்பத் தக்கதாயினும் அவைகளை எப்பொழுதும் பெற்றுக் கொள்வதரிது. அந்த அறையில் நாற்காலிகளை சரியான வட்டமாகப் போடுவதற்கு இடம் மிகக் குறைவாக இருந்தாலும், அந்த வீடு / பணி ஸ்தலமானது சீதோஷ்ண நிலை கட்டுக்குள் வைக்கப்படக் கூடாமல் இருந்தாலும் அல்லது வெளிச்ச அமைப்பு குறைவானாலும் அதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. நம் மூலமாக ஒளி கொடுத்து பிரகாசிக்கும். தேவனுடைய அன்பே ஜனங்களை ஒன்று கூட்டிச் சேர்க்கிறது. அன்பு என்பதே ஜெயத்தை பிரஸ்தாபிப்பதாகும். நாற்காலிகளோ அல்லது வெளிச்ச அமைப்பு முறையோ அல்ல. நாம் இயேசுவை உயர்த்த உயர்த்த ஜனங்கள் அவரண்டை இழுத்துக் கொள்ளப்படுவார்கள். துணையான உடன் மேய்ப்பர்களாக நமது கடமையாவது ஆடுகள் கிறிஸ்துவண்டை வரும் வழியில் இருக்கும் தடைகளை நீக்கி விடுவதாகும்.

கூட்டத்தின் ஒழங்கு முறை:

அடுத்து நாம் கூட்டத்து ஒழுங்கு முறையைக் கவனிப்போம். இதில் கூட்டத்தை ஆரம்பிப்பவர் ஆராதனை நேரம், ஜெபம், வேதாகம வார்த்தை ஆகியவை அடங்கும். ஒவ்வொருவரும் கூட்டத்திற்கு சரியான நேரத்தில் வரும்படியாக முயற்சிப்பது முக்கியமானதாகும். ஒரு மணி நேரத்திற்கு முன்பே ஆஜராகும் ஒரு வருகையாளர் ஒரு இல்லத் தலைவியை எதிர்பாராத விதமாகவோ அல்லது ஆயத்தமற்றவராகக் கண்டு கொள்ளலாம். அந்த வருகையாளர் ஒரு தனிப்பட்ட மனிதராக அந்த வீட்டுத் தலைவர் வருவதற்கு முன்போ அல்லது மற்ற விருந்தினர்கள் வருவதற்கு முன்போ

நேரிடுமானால் அது ஒரு அசௌகரியமான சூழ்நிலைமை ஏற்படுவதற்கு காரணமாக ஆகிவிடும். இதற்கு ஏறுக்குமாறாகவோ ஏற்படக் கூடுமானால் அது விரும்பத் தகாததொன்றாகி விடும். அப்படி அவசியமானால் வெளியில் சில நாற்காலிகளைப் போட்டு வைப்பது பிரச்சனைக்கு ஒரு தீர்வாகும். ஒவ்வொருவரும் சரியான நேரத்திற்கு வரும்படியாக பயிற்றுவித்து உதவ வேண்டுமானால் அதற்காக சரியான நேரத்தில் கூட்டத்தை ஆரம்பிப்பது முறையாகும். எத்தனை பேர் அந்த முன்னால் குறிப்பிட்பட்ட நேரத்திற்கு வந்திருந்தாலுங்கூட பொருட்படுத்தாது ஆரம்பிக்கலாம். எல்லாரும் வந்து சேரும்படி காத்திருந்தால் கூட்டம் பின்னாகப் பின்னாக தள்ளி வைப்பதாகக் காணலாம்.

கூட்டத்தை ஆரம்பிப்பவர்: (பனிக்கட்டியை உடைப்பவர்)

அமைதியைக் குலைத்து ஆரம்பிப்பதற்காக அருகுவதற்கு ஏதாவது ஒரு பானத்தையோ அல்லது சிற்றுண்டியோ கொடுக்கலாம். இது ஒன்றுமே தேவை இல்லை. ஆனால் குடிப்பதற்கோ அல்லது சாப்பிடுவதற்கோ ஏதாவது ஒன்று இருந்தால் ஐக்கியத்தைக் கூடுதலாக்க உதவும். அது சமூகத் தொடர்புகளை விசேஷமாக வருகையாளர்கள் ஓய்வாகச் செய்து மன அழுத்தங்களையும் மனோ ரீதியான அச்சங்களையும் இலகுவாக்கிக் கொள்ளும்படி உதவி செய்யும். உணவும் பானமும் ஒரு வெளியில் இருந்து வந்தவரை கலந்து கொள்ள உதவுகிறது. அவர்கள் தங்களைத் தாங்கள் சுய விழிப்புள்ளவர்களாக விடாமல் ஏதோ ஒன்றை கொடுத்து செய்யும்படியாக ஈடுபடுத்திக் கொள்ளச் செய்கிறது.

இந்த விதமான பனி உடைக்கும் காலத்தில் வரவேற்கும் வீட்டுத் தலைவர் சில வினாக்களையோ அல்லது ஆர்வத்தை உண்டாக்கும் சிறு தலைப்புகளையோ ஆயத்தப்படுத்திக் கொண்டு அவர்களுடன் பகிர்ந்து கொள்ள தயாராக இருத்தல் வேண்டும். இவ்விதம் செய்வதால் மக்களை சௌகரியமானதும் ஓய்வானதுவதற்குத் தகுதியாக்குகிறது. ஆரம்பத்தில் கேட்கப்படும் வினாக்களும் விவாதங்களும் இலகுவனதாகவும், தாக்கி இழுப்பதாக இல்லாமல் இருக்கும்படியாகத் தூண்டி எழுப்பி மக்களை சௌகரியமாக இருக்கும் படியாக உதவ வேண்டும். அங்கு வருகை தந்திருக்கும் அனைவரும் தாங்கள் வரவேற்கப்படுவதாக உணரும்படி செய்வது முக்கியமான காரியமாகும். இது வருகை தருபவர்களை கனமான கேள்விகளால் அழுத்தப்படுவதற்கான நேரமல்ல. முதன் முதலாக வருகை தரும் பார்வையாளர்களின் தங்கள் அந்தரங்க காரியங்களில் தலையிடுவதோ மற்றவர்கள் தலையிட்டு அறிந்து ஆராய்ந்து கொள்ளவோ அனுமதிக்கக்கூடாது.

ஆராதனை செய்யும் நேரம்:

கூட்டம் கூடிவரும் இடமும், நேரமும் ஆராதனை செய்யும் போக்கினை தகுந்த முறையையும் தான் தாக்கத்திற்குள் கொண்டு வரும். மேலும் கூட்டம் நடத்தும் நேரமும் அதைத் தீர்மானஞ் செய்யும் காரணியாகும். ஒரு குறிப்பிட்ட வகையான ஆராதனை நேரம் 15 முதல் 20 நிமிடங்கள் ஆகலாம். அதுவும் ஒரு சாதாரணமான ஒன்றரை மணி நேர கூடுகையில் எடுத்துக் கொள்ளலாம். உங்களுக்கு ஒரு மணி நேர அவகாசம் மட்டுமிருந்தால், ஆராதனைக்கு 45 நிமிடங்கள் எடுத்துக் கொண்டாலும் மற்ற காரியங்களை கருத்தில் கொண்டு ஒரு வெற்றியான கூட்டத்தை நடத்துவதற்கு மற்ற காரியங்களைச் செய்வதற்கம் அதிகமான நேரத்தைத் தராது.

ஒரு தாலந்துள்ள கிட்டார் வாசிப்பவர் ஒரு சிறிய கூட்டத்தை தேவனுடைய சிம்மாசன கூடத்திற்குள் இட்டுச் செல்ல முடிவதால் மிகுதியான ஆசீர்வாதமாக இருக்க முடியும். ஆரம்பத்தில் கற்றுக் கொள்பவர் கூட ஒரு கூட்டத்தை ஒருங்கிணைக்கக் கூடும். ஆராதனையில் அவர்களை நடத்திச் செல்லவும் முடியும். உங்களுக்கு நன்றாகப் பாட வராவிட்டால் ஒரு கேசட்டுடனோ அல்லது குறுந்தகடுத்துடனோ (CD) எப்பொழுதும் பாடலாம். ஆகையால் எந்த விதமான இசைக் கருவியின் நடத்துதல் இல்லாமல் போகும்படி அச்சம் உண்டாக்கப்படாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் இருதயங்கள் நேர்மையானதாக இருக்குமானால் அது எப்பொழுதும் தேவனுக்கு அழகானது ஆக இருக்கும். மற்றொரு முக்கியமானதான தேவனுடைய சமுகத்தில் கூட்டமாகப் பிரவேசிப்பதற்கான வழியாவது, ஒரு செல் குழுவாக தனிப்பட்ட ஒவ்வொரு நபரின் ஜெப ஜீவியமே அதற்கான திறவுகோலாகும். கூட்டத்திலுள்ள நபர்கள் ஜெபிக்க அல்லது ஆராதிப்பது செல் குழுக் கூட்டங்களிலோ அல்லது திருச்சபை ஆராதனை நேரத்தில் மட்டும் என்றால் தேவனுடைய சமுகத்தில் பிரவேசிக்குமாறு அவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சி வறட்சியானதாகும். ஆகவே இந்தக் குழுவினர் அதன்

அங்கத்தினர்கள் ஜெபிப்பதோ அல்லது ஆராதனை செய்வதோ வீடுகளிலும் மேலும் செல் குழு கூடுகைகளிலும் நடத்திக் கொள்ளும்படி தங்களால் இயன்றதைச் செய்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

நீங்கள் ஒரு பொதுவான இடத்தில் கூடி வருவதென்றால் அதாவது ஒரு உணவு விடுதியில் அல்லது பணித்தளத்தில் என்றால் உங்களுக்கு பாடுவதற்கான தைரியமோ அல்லது சுதந்திரமோ இருக்க மாட்டாது. ஆராதனை செய்தல் என்பது தேவனுடைய சமுகத்தில் உங்களைக் கொண்டு சொல்லும் எந்த விதமான நடவடிக்கையும் என்று பொருள் விளக்கம் கூறலாம். உங்கள் கூடுகையில் தேவனுடைய பிரசன்னம் இல்லாவிட்டால் உங்களுக்கு ஒரு சமூகக் கூட்டம் என்பதைத் தவிர ஒன்றுமே இருக்க முடியாது. ஆராதனை என்பதை நீக்கி விட்டால் அந்தக் கூடுகையின் மீதியான நேரத்தில் ஒற்றுமையாக ஒன்றுபடுதல் என்பது மிகக் கடினமான காரியமாகும். ஒரு ஆராதனை செய்யும் நேரத்தில் நீங்கள் மிகக் குறைவாகக் கிடைக்கும்படியாக எதிர்பார்ப்பது ஒற்றுமையாகும். பாடல்களைப் பாடுவதும் ஆராதனை செய்வதும் இரண்டும் சேர்ந்து கூட்டத்தை ஒன்றுபடக் கூட்டிச் சேர்க்கிறது. ஆகவே ஆராதனையில் உங்களுடைய இலக்காவது தேவனுடனும் உங்கள் உடன் செல் குழு அங்கத்தினர்களோடும் எப்பொழுதும் ஒற்றுமையாக இருப்பதுதான்.

ஜெபம்:

ஆராதனைக்குப் பிறகு அந்தக் குழுவினர் இன்னும் அந்த ஆச்சரியமான துதி என்ற சூழ்நிலைமையில் தரித்திருக்கும் பொழுதே ஜெபத்தை ஏறெடுப்பதற்கும் அது சிறந்த நேரமாகும். அதுவும் தங்கள் கோரிக்கைகளை நேரடியாக தேவனுக்கு அறியப்படும்படிக்கு அடியெடுத்து முன் வைக்க விரும்பும் யாரையும் அனுமதிப்பதும் ஆகும். சில வட்டங்களில் ஒவ்வொருவரும் ஒரே சமயத்திலும் அச்சமயத்தில் மற்றவர்கள் தங்கள் தங்கள் தவணை முறைகளில் ஜெபிப்பதை நேரம் எடுத்துச் செய்து கொள்ள விருப்பப் படுவதால் தான். உண்மையாகவே நீ எவ்வாறு எப்படி செய்கிறாய் என்பது ஒரு பொருட்டல்ல. அவர்கள் தங்கள் பரமபிதாவுக்கு ஜெபத்தை ஏறெடுக்கும்பொழுது அங்கே ஒரு தளர்ந்த ஓய்வுள்ள அபிஷேகம் பெற்ற சூழ்நிலைமை இருக்கவேண்டுமென்பதே வேண்டிய காரியமாகும். ஆராதனைக்கு பிறகு ஏறெடுக்கப்படும் நேரமானது வாரத்தில் குறிப்பிடத்தக்க விசேஷித்த நேரமாகும்.

வார்த்தை:

தேவனுடைய வார்த்தையைப் படித்தறிவதே மிகவும் அளவுக்கு மிஞ்சிய முக்கியமானதும் மேலும் ஒருக்கால் மக்களுடைய மனங்களை, மனதின் நோக்கங்களை, ஜீவியத்தையுங்கூட, முக்கியமான ஏகப்பிரதிநிதியான பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாலும் அபிஷேகத்தாலும் மாற்ற வல்ல தாகும். வேதாகமத்தின் அதிகாரத்துவத்தையே தேவனுடைய வாக்குத் தவறாத வார்த்தை என்பதையும் நம்முடைய ஜீவியத்தில் அதன் அவருடைய வார்த்தைப்படி நமது சிந்தனை புதுப்பித்து தருவதன் முக்கியத்துவத்தையும் எப்பொழுதும் வற்புறுத்திக் கொண்டே இருக்கவும்.

வேதாகமப் படிப்பை ஆயத்தம் செய்வதே உங்கள் கடமையாகும். மேலும் அந்த வேதாகம வார்த்தையாகிய படிப்பை ஒருவருக்கொருவர் ஈடுபாட்டுடனும் தூண்டி விழிப்படையச் செய்து எழுப்புவதாகவும் இருக்க வேண்டும். உங்கள் உடன் அங்கத்தினர்கள் சத்தியத்தைக் கண்டு படித்தறிந்து கொண்டு வினாக்களுக்கான விடை கூறுதலில் அவர்கள் ஈடுபடும்படி உதவி செய்ய வேண்டும். இதற்காக சில நபர்களைப் பெயர் சொல்லி அழைத்து அவர்கள் வெட்கப்படாமலும் தாழ்வுணர்ச்சியால் பாதிக்கப்படாமலும் விடை கூறும்படி உதவ வேண்டும். மேலும் அவர்கள் கூறும் விடையை மதித்து (அதற்கு சாந்தமாகவும் அன்புடனும் செயல்பட்டு) அதன் நடுநிலைமையை வகிக்கத் தெரிந்து கொண்டு தேவனுடைய வேதத்தில் கூறப்படும் சத்தியத்தைக் குறித்து எப்பொழுதும் மக்களை திரும்பவும் நோக்கும்படியாகச் செய்ய வேண்டும். வேதாகமத்து சத்தியங்களைக் கடைபிடிப்பதிலும் சிறப்பான வற்புறுத்துதலான அழுத்தம் தரப்பட வேண்டும். இங்கே உங்களது அனுபவத்தை பகிர்ந்து கொண்டு அந்த உங்களுடைய ஜீவனையுங்கூட செல் குழுவினரோடு கொடுத்துதவ வேண்டும்.

செல் குழுவின் தலைமைத்துவம்

ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் சிறப்பான கூறுகள்:

A. தேவனுக்கேற்ற இருதயம்

a. தேவனுக்குக் கீழ்படிதல்
   i. உன்னுடைய ஜீவியத்தை தேவனுடைய வார்த்தையின் படி நடத்தி ஜீவிப்பது.
   ii. உன் வாழ்க்கையை திட நம்பிக்கையுடன் ஜீவிப்பது சந்தர்ப்பங்களின்படியோ அல்லது வசதிப்படியோ அல்ல.

b. தேவனைச் சார்ந்திருத்தல்
   i. விசுவாசத்தில் நடத்தல் கண்பார்வையின்படி அல்ல. (II கொரி 5:7)
   ii. விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. (எபி 11:6)
   iii. சந்தர்ப்பங்களாலும் விளைவினாலும் அல்லாமல் தேவனிடத்தில் நம்பிக்கையாய் இருத்தல்

B. மக்களுக்கென்று இருதயம்

a. தேவன் ஜனங்களுக்காக உயர் தரமான முன்னுரிமை வைத்து இருக்கிறார். (I நாளா 14:2; பிலிப் 2:20-21)

b. ஜனங்களுடன் உன்னுடைய நோக்க மனப்பான்மையைச் சோதித்துப் பார்:
   - மற்ற மனிதர்களுடைய தோல்விகள் நமக்கு எரிச்சல் உண்டாக்கவோ அல்லது நமக்கு சவாலாக உள்ளதா?
   - நாம் மக்களைப் பயன்படுத்திக் கொள்கிறோமா அல்லது அவர்களுக்கு ஊழியம் செய்கிறோமா?
   - நாம் மக்களுக்கு ஆணைகள் பிறப்பித்தோ அல்லது அவர்களை பக்தி விருத்தி செய்கிறோமா?
   - நாம் மக்களை விமரிசனம் செய்கிறோமா அல்லது அவர்களை உற்சாகப்படுத்துகிறோமா?
   - பிரச்சனையான மக்களை வெறுத்து ஒதுக்குகிறோமா? அல்லது அவர்களைத் தேடிப் போகிறோமா?

c. ஜனங்களுக்காக அன்பு - பொறுமையுடன் இருப்பது எளிதான காரியமல்ல என்று தேவன் அறிவார். (எபேசி 4:2)

C. தேவனுடைய வார்த்தைக்கு ஒப்படைப்பு செய்தல்

a. தேவனுடைய வார்த்தையை அறிந்திருப்பதல் ஒப்படைப்பு
   - பகுத்து படித்து போதிப்பது (II தீமோத் 2:15)

b. தேவனுடைய வார்த்தையைக் கைக் கொள்வதில் ஒப்படைப்பு

D. ஒழுங்கு முறையையும் வளர்ச்சியையும் செய்து காட்டுதல்

a. ஒழுங்கு முறை:
   - பொது நிதிகளை உபயோகிப்பதில்
   - கிறிஸ்தவ அடிப்படையான கொள்கைகளில்

b. அடிப்படைகளில் வளர்ச்சி
   - தேவனுடன் தனிப்பட்ட நேரத்தில் தரித்திருத்தல்
   - வசனத்தின்படி ஜீவியம்
   - ஜெப ஜீவியம்
   - நல்லொழுக்க நடத்தையில்

E. இடைவெளி அமைப்பவர்

a. நீ முதலாவதாகச் செய்வதை மற்றவர்களும் செய்யும்படி ஏவுதல்
b. போதிக்கப்படுவதைவிட (அதிகம்) மிதமிஞ்சி பற்றிக் கொள்ளுதல்

F. ஊழியம் செய்து வழி நடத்து

a. கிறிஸ்துவின் மாதிரியாக (மாற்கு 10:45; யோவான் 13:15)
நமது தலைமைத்துவத்தை விட வேலையாள் தன்மைத்துவத்தில் மக்கள் முதலாவதாக ஈர்த்து இழுக்கப்படுதல்
உ. நமது ஊழியமானது மக்களுக்காக நாம் காட்டும் வெளிப்புற அடையாளமாகும்.

G. F.A.S.T

a. நம்பத் தகுந்த தன்மை: சின்னச் சின்ன காரியங்களில் (மத் 25:21) (F=Faithfulness)
நீ செய்ய விரும்பாத ஒரு காரியமாவது அது அற்பமானது என்று கருதும் காரணத்தினால்தானே?
b. கிடைக்கக் கூடியதானது: (A=Availability) தேவனுக்கு நான் கிடைக்கும் படியான வசதியின் மேல் என் திறமையை விட அதிகக் கரிசனையாய் இருக்கிறார்.
எவ்வளவு வசதி தரக் கூடியவனாக நான் இருக்கிறேனா?
- கடினமான வேலைகளுக்கு
- தாழ்மையான பணிகளுக்கு

c. பணிந்து கீழ்படிதல் (எபி 13:17) (S=Submissiveness)
தேவனால் நியமிக்கப்பட்ட தலைவர்களுக்குப் பணிந்து கீழ்படிய
ஆமோதிக்கும்பொழுது மட்டும் பணிந்து கீழ்படிவதல்ல
d. கற்பிக்கப்படுதல் (நீதி 9:8-9) (T=Teachability)
நீ ஒரு (புத்தி) விவேகமுள்ள மனிதனா அல்லது புறக்கணிப்பவனா?
பிறரிடம் இருந்து வரும் விமரிசனம் அல்லது ஆணைகளை நீ எங்ஙனம் கையாளுகிறாய்?

H. சொந்தமாக ஒரு தரிசனம்

a. தேவனுக்கென்று பெரிய காரியங்களை எப்படி நன்றாகச் செய்வதற்காக கனவு காண்கிறாய்?
b. நீ தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளும்பொழுது உனது செல் குழுவைத் குறித்த உன் தரிசனம் யாது?
c. உனக்கு ஒரு தரிசனத்தை அருளும்படியாக தேவனை நீ வேண்டிக் கொண்டதுண்டா?

ஒரு ஆவிக்குரிய தலைவருக்கு இருக்கவேண்டிய நான்கு குணாதிசயங்கள்:

A. மெய்யான ஜீவியத்திற்காக அவர் மாதிரி ஆகிறார்.

"உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாக இரு." (I தீமோத் 4:12)

B. மனிதர்களுடைய தேவைகளுக்காக அவர் ஊழியம் செய்கிறார்.

"உங்களில் எவனாகிலும் பெரியவனாகயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாக இருக்கக் கடவன், அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." (மத் 20:26-28)

C. ஜனங்களை செயல்படும்படி தூண்டி ஊக்குவிக்கிறார்.

D. அவர் காரியங்கள் நிறைவேறும்படி செய்கிறார்.

காரியங்கள் ஆனவை தாமாகவே நேரிட வேண்டும் என்று அமர்ந்து காத்திருப்பதில்லை.

மூன்று வகையான தலைமைத்துவங்கள்

தலைவர்கள் அனைவரும் தொழில் துறை உரிமையாளர் (முனைவர்) மேற்பார்வையாளர், தொழில் நுட்ப வல்லுநர் என்ற மூன்று அம்சங்களைத் தமக்குள்ளே பெற்றிருப்பார்கள். அவர்கள் சமநிலையில் சமமாக இருப்பார்களானால் நாம் நம்பக் கூடியதற்கு அப்பாற்பட்ட திறமை வாய்ந்த நபரை வர்ணிப்பவர்களாக இருப்போம். இந்த மூன்று அம்சங்கள் ஒரே நபரில் சமநிலையில் வெகு அரிதாகக் காணக்கூடும். ஆகவே நாம் ஒருவரையொருவர் சார்ந்திருந்தே இந்த மூன்று முக்கியமான தலைமைத்துவ பணிகளை நிறைவேற்ற ஆதரவு தர வேண்டும்.

தொழில் துறை உரிமையாளர்	மேற்பார்வையாளர்	தொழில் நுட்ப வல்லுநர்
தரிசனமுடையவர்	காரண காரியங்களை ஆராய்பவர்	செயல்படுவார்
கனவு காண்பவர்	திட்டமிடுகிறவர்	அதை நாட்டி நிறுத்துபவர்
வருங்காலம்	கடந்த காலம்	தற்காலம்
மேற்கோள் வாசகம்	**மேற்கோள் வாசகம்**	**மேற்கோள் வாசகம்**
நீ அதைச் சரியாக செய்யும்படி விரும்பினால் புதிதாக ஒன்றை படைத்து விடு.	நீ அதைச் சரியாகச் செய்ய வேண்டுமானால் நல்ல வேலையாளை பயிற்றுவிக்கவும்.	அதைச் சரியாகச் செய்ய வேண்டுமானால் நீயாகவே செய்.
எல்லைகள்	**எல்லைகள்**	**எல்லைகள்**
அவருடைய தரிசனத்திற்குள் எத்தனை மேற்பார்வையாளர்கள் இருக்கக் கூடும்?	எத்தனை வல்லுநர்களை அவர் மேற்பார்வை செய்ய முடியும்?	அவன் தானாகவே எவ்வளவு செய்ய முடியும்?
வீட்டைக் கட்டி முடித்து விட்டு அடுத்த வீட்டைக் கட்டுவதற்குத் திட்டமிடுகிறார்.	வீட்டைக் கட்டி முடித்து விட்டு அதில் என்றும் வாசம் செய்கிறார்.	வீட்டைக் கட்டும் பணியை ஒருபோதும் நிறுத்துவதில்லை.
சமய சந்தர்ப்பங்களைப் பார்ப்பவர்	**சமய சந்தர்ப்பங்களைப் பார்ப்பவர்**	**செய்யும் படியாக வேலை பார்ப்பவர்**
எந்த சுவரின் மேல் ஏணியை சாத்தி வைக்கலாம்?	அந்த ஏணியை எந்த சுவற்றில் நன்றாகச் சாத்தி வைக்க முடியும்?	எத்தனை தரம் நான் மேலும் கீழும் போக வேண்டும்.
மாறுதல்கள் அவசியம்	ஆணைகளுக்காக காத்திருப்பார்	செயல்பாட்டை விரும்புபவர்
உலகப் பார்வை	**உலகப் பார்வை**	**உலகப் பார்வை**
சந்தர்ப்பங்கள் மிகுதி எல்லா இடத்திலும்	குழப்பங்களை சுத்தம் செய்ய வேண்டும்.	இரவு உணவுக்காக அப்பத்தை உண்டாக்குகிறார்.
எல்லா இடத்திலும் பொருள்களை உண்டாக்கி வரிசையாக வைக்கிறார்.	பொருள்களை நேர்த்தியான வரிசையில் வைக்கிறார்.	பொருள்களை நேர்த்தியான வரிசையில் உள்ளவற்றை நாட்டி வைக்கிறார்.

ஒரு செல் குழு திருச்சபையில் தலைமைத்துவத்திற்கான 4 வகையான செயல்பாடுகள்

A. திருச்சபையில் போதகரின் கவனத் தவறுதலால் பொதுவான தவறுகள் - மாவட்ட போதகர் பல கூடிவரும் சபைகள் அடங்கிய பெரிய திருச்சபை மேற்பார்வை செய்கிறார்.

B. குறிப்பிடத்தக்க போதகரது மேற்பார்வை தவறுகள் அதனால் கூடிவரும் சபையின் ஒருங்கிணைப்பு - மண்டல போதகர்
6லிருந்து 25 செல் குழுக்கள் அடங்கிய ஒரு கூடிவரும் சபைக்கு மேய்ப்பராக போதகம் செய்கிறார்.

C. வலைப்பின்னலான செல் குழுக்களை ஒரு வகைப்படுத்தலும் பயிற்றுவித்தலும் - மண்டல மேற்பார்வையாளர்
மண்டல மேற்பார்வையாளர் 3 முதல் 5 செல் குழுக்களை கண்காணிக்கிறார்.

D. செல் குழு மட்டத்தில் அடிப்படையான பணிகளைக் கவனத்துடன் ஜாக்கிரதையுடன் பார்த்தல் - செல் தலைவர்கள்
அவர் 5 முதல் 15 செல் குழுக்களைப் போஷித்து கிறிஸ்தவர்களை வளர்க்கிறார்.

<u>ஆவிக்குரிய வைராக்கியத்தை மிரட்டும் ஏழு நிபந்தனைகள்:</u>

A. **வறண்டு போன** நிலைமை
- I இராஜா 18:24, 29, 36-37; 19:3-4, 7; லூக்கா 8:46

B. **வறண்டு காய்ந்து போன** நிலைமை
- நிரப்பப்படாத ஆவிக்குரிய தொட்டி - காலியான தொட்டி
- சங்கீதம் 51க்கு முன்னர் தாவீது இருந்த நிலைமை

C. **திரித்துக் கூறப்படும்** நிலைமை
- ஆதி 13:10 "அப்பொழுது லோத்துத் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து"

D. **நாசமாக்கப்பட்ட** நிலைமை
- II கொரி 1: 8-9, "பிழைப்போம் என்ற நம்பிக்கை அற்றுப் போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. மரணம் தீர்ப்பாக வருமென்று நாங்கள் எங்களுக்குள் நிச்சயித்திருந்தோம்."

E. **மதி மயக்கத்திலிருக்கும்** நிலைமை
- யாத் 2:14; மோசே காரியம் நிச்சயமாக வெளிப்பட்டது என்று பயந்தான்.
- ஏசாயா 7:2. சீரியா எப்ராயீமைச் சார்ந்திருக்கிறார்கள் என்று தாவீதின் குடும்பத்தாருக்கு அறிவிக்கப்பட்டபொழுது இராஜாவின் இருதயமும் அவன் ஜனத்தின் இருதயமும் காட்டிலுள்ள மரங்கள் காற்றினால் அசைகிறது போல அசைந்தது.

F. **தோற்கடிக்கப்பட்ட** நிலைமை
- லூக்கா 22:63, "பேதுரு வெளியே போய் மனங்கசந்து அழுதான்."

G. **இருதயம் தளர்ந்த** நிலைமை
- I இராஜா 19:3-5. "எலியா பயந்து தன் பிராணன் தப்ப ஓடிப் போனான். தன் பிராணனைக் காக்கப் புறப்பட்டு போய், போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும். நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல."

ஐக்கியத்தை ஒருங்கிணைக்கும் 21 ஏதுக்கள்

சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மை எத்தனை இன்பமுமானது. அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார். (சங் 133:1,3) இந்த ஓர் உண்மைக்காகவே சாத்தான் எப்பொழுதும் ஐக்கியத்தை அழிக்கும்படியாக தேடி திரிகிறான். ஐக்கியமானது கிரியைகள் மூலமாக உண்டாக்கப்பட வேண்டும். அது என்றோ நேரிடுவதில்லை. வேதாகமம் இந்தக் கோட்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் போதிக்கிறது.

1. ஒப்படைப்பு

"சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்" (ரோமர் 12:10) அநேக சமயங்களில் நாம் ஒருவருக்கொருவருக்கான தராதரத்தை திருப்தி செய்யும் பொழுதுதான் அன்பு பிரவாகித்து ஓடுகிறது. அது மற்றொருவருடைய செயல்பாட்டை பொறுத்தது என்பதைத் தவிர அது அடிப்படையான அவசியத் தேவையாக இருக்கிறது என்ற காரணத்தினால் தான். அவ்வாறு உண்டாகிறது. கிறிஸ்துவுடன் நீங்கள் கொண்டிருக்கும் ஒருமைப்பாட்டின் அடைப்படையில் உங்களுடைய ஐக்கியத்திலுள்ள மக்களுடன் நீங்கள் ஆழமாகவும் நிபந்தனையற்ற ஒப்படைப்பைச் செய்கிறீர்களா?

2. அன்பு

ஆவிக்குரிய அனுபவத்தில் முடிவான உச்ச நிலை என்பது அன்பாகும். நாம் அன்பு கூறுவதைக் கட்டளையாகப் பெற்றிருக்கிறோம் என்பதைச் சற்று கவனியுங்கள். (யோவான் 13:34) கூறுவதாவது "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்பதாகும். இதன் உட்கருத்தாவது மெய்யான உணர்ச்சியல்ல. ஆனால் அது வேண்டுமென்று செய்யப்படுகிற செயல்பாட்டின் விளைவாகும். மேலும் ரோமர் 5:5ல் "கிறிஸ்துவின் அன்பினால் நாம் அன்பு கூறமுடியும் என்று நிரூபிக்கிறது." பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு (கிறிஸ்துவின் அன்பு) நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. அன்பு என்பது சீஷத்துவத்திற்கு அடிப்படையான உறு பொருளாகும். இயேசுவும் அதைக் குறிப்பாக ஒரு அடையும் மார்க்கம் என்று சொன்னார். "அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள்" என்றார். (யோவான் 13:35)

3. தெள்ளத் தெளிந்த திறந்திருக்கும் மனம்

"அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடக்கக் கடவோம்" (I யோவான் 1:7) நாமும் திறந்த மனதுள்ளவர்களாய் ஒருவருக்கொருவர் ஜீவிக்க வேண்டும் என்றும் மேலும் தேவனுடனும் நடப்பதால் எந்த விதமான தவறான ஆவியும் குரோதமும் கடினத் தன்மையும் அல்லது எதிர்மாறான மன நோக்கும் தொடர்ந்து இருக்க அனுமதிப்பதால் உறவு தொடர்புகள் பழுது பட்டுப் போகும். I யோவான் 2:9-10 நம்முடைய இருதயங்களில் மற்றொருவரைப் பற்றி தவறான மனப்பான்மை இருந்தால் நாம் ஒளியில் நடக்க முடியாது என்று கூறுகிறது.

4. தாழ்மை

நமக்குள் நொறுங்கிப் போகுதல் அல்லது மனத்தாழ்மையுடன் இருப்பது நமக்கு உரிமை எதுவுமே கிடையாது என்பதை அங்கீகரிப்பதாகும். ஒருவன் தன் சிலுவையை எடுத்து சுமந்து கொண்டு அவருக்கு (இயேசுவுக்கு) பின் செல்லாதவன் தனக்கு சீஷனாயிருக்க மாட்டான் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். அது சீஷத்துவத்திற்கு அடிப்படையான உறு துணைப் பொருளாகும் என்றும் கூறினார். (லூக்கா 14:27) சிலுவை என்பது I என்ற ஆங்கில எழுத்தில் குறுக்குக் கோடு போட்டதாகும். பவுல் அப்போஸ்தலன், தான் "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன்" என்று தன்னைப் பற்றிக் கூறுகிறார். (கலா 2:20) நாம் இந்த சிலுவையை எப்பொழுதாவது ஒரு குறிக்கோளாக ஏற்றுக் கொண்டிருக்கிறோமா? அது மட்டுமே நல்ல தனக்குச் சொந்தமான உறவுத் தொடர்புகளுக்கு அடித்தளமாகும்.

5. திறந்த மனப்பான்மை

ஐக்கியம் என்பதோடு ஒரு மனிதனுக்குள் தவறான ஆவி நம்மை நோக்கி இருக்கிறதென்று உணர்ந்து கொள்வோமேயானால் மற்றவரை ஒரு சுதந்திரத்துடன் அணுகலாம் என்பதையும் சேர்த்தே பொருளாகிறது. ஆம், நாம் ஒரு துக்கமுள்ள அல்லது தப்பெண்ணமுள்ள மனப்பான்மையுடன் போவோம் என்றால் நாம் காரியங்களை மேலும் மோசமாக்கி விடுவோம். நாம் கர்த்தரைத் தொழுது கொள்ள வேண்டுமென்றாலும் மற்றொரு நபர் நமக்கு விரோதமாக ஏதோ ஒன்றை மனதில் கொண்டிருப்பதாக அறிந்தாலும் நாம் அந்த நபருடன் ஒப்புரவாகி நல்மனம் பொருந்த வேண்டுவது அவசியம் என்று இயேசு சொல்கிறார். இந்த குறிப்பிட்ட காரியத்தில் நல்மனம் பொருந்துதல் என்பதற்கு ஆராதனையை விட உயர்ந்ததோர் முன்னுரிமை உண்டு.

6. மன்னிப்பு

ஒருவருடைய ஜீவியத்தில் ஆவியானவருடைய பிரவாகமாக ஊற்றப்படுதலுக்கு உள்ள பெரிய சாலை தடையாவது மன்னிக்கக்கூடாத மனப்பான்மை ஆகும். சுவிசேஷ நூல்களில் மன்னிக்கும் ஆவியைப் பற்றித் திரும்பத் திரும்பவும் சொல்லப்படுகின்றது. மேலும் அது செயலூக்கமான ஜெபத்துடன் இணைக்கப்பட்டு அந்த ஜெபமானது மன்னிப்புக்கென்று ஒரு முன் நிபந்தனையாகக் கருதப்படுகிறது. அப். பவுல் கிறிஸ்தவ ஐக்கியத்தைத் தொடர்ந்து கடைபிடிப்பதற்கு ஒரு முக்கியமான உறுதுணை ஏதுவாகக் கருதப்படுகிறது என்கிறார். கொலோ 3:13 "ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" என்று அறை கூவுகிறது.

7. சகித்துக் கொள்ளுதல்

மற்றொருவருடைய தவறு செய்யும் போக்கு வெளிப்படையாக இருக்கும்பொழுது ஐக்கியத்தில் உண்மையாக ஓசையுடன் மெல்லப்படுவது அன்பை நிலை நாட்டுவது என்று இயேசு அறிந்திருந்தார். உண்மையாகவே அன்பு நிறைந்த மக்களிடம் அன்பு கூறுவதில் சிறப்பான திறமை என்று ஒன்று கிடையாது. அப். பவுல் பொறுத்துக் கொள்ளுதலை ஒரு உயர்ந்த உணர்ச்சி அல்லது இருதயத்தின் பறந்த விசாலமான தன்மை என்று போதிக்கிறார். வேறு விதமாகச் சொல்வதாக இருந்தால் உயர்ந்ததோர் பொறுத்துக் கொள்ளும் தன்மையுள்ள நுழைவாயில் ஒன்று நாம் வைத்துக் கொள்ள வேண்டும். இது பரிசுத்த ஆவியினால் மட்டுமே (செயல்படுத்த) நடைபெறக் கூடியதாக இருக்கும். கொலோ 3:13 மறுபடியும் நமக்கு நினைப்பூட்டுவதாவது, "ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" என்பதே.

8. உணர்ச்சி பூர்வமாக

கர்த்தர் நம்மை பொது இசைவான (அபிப்பிராய) பார்வைக்கு உணர்ச்சி பூர்வமுள்ளவர்களாக இருக்க விரும்புகிறார். ஐக்கியத்திற்கான மனப்பான்மை நோக்கங்களின் ஒளியில் வலிமை மிக்க தனிப்பட்ட சொந்த உணர்ச்சிகளை அமைதிப் படுத்திக் கொள்ளும்படியாக விரும்புகிறார். அடக்கி ஆளுகிற ஒரு சீஷன் "ஒருவருக்கொருவர் கீழ்படிந்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்" என்பதற்கு முரண்பாடானவர் என்பது தெளிவு. (I பேதுரு 5:5)

9. (சபை) கூடிவருதல்

கிறிஸ்தவர்கள் வேதாகமத்து புத்தியான ஆலோசனையான "ஆராதனைக்காகவும் ஐக்கியத்திற்கு ஆகவும் சபை ஒன்று கூடி வந்து ஒருவரையொருவர் சந்திக்க வேண்டும்." என்பதை பின்பற்றி அதற்குக் கீழ்படிய வேண்டும். "சபை கூடிவருதலை நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்." (எபி 10:25)

10. உற்சாகப்படுத்துதல்

இது போர் தந்திர யுக்திகள் நிறைந்த சிறந்த ஊழியங்களில் ஒன்றாகும். சொற்றொடர்களான 'புத்தி சொல்லு' என்பதும் ஆறுதல் கொடு என்று சொல்வதும் 'உற்சாகப்படுத்துதல்' என்று அர்த்தம் கொடுக்கும். ஒருவரையொருவர் தைரியப்படுத்துங்கள் என்ற ஒத்து வாசகங்கள் இந்த கிரியையின் உபயோகத்தை உயர்த்தி வெளிச்சம் காட்டுகிறது. (எபி 10:25; I தெச 5:11;

ரோமர் 12:18) சாத்தானுடைய கிரியையான ஊழியம் எதிர்மறையானது. அதைரியப்படுத்துவதும், மனச் சோர்வடைவதுமே ஆகும்.

11.ஆலோசனை

"ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு" (கொலோ 3:16) இந்த ஆலோசனை என்பதற்கான மூலபதம் "இருதயங்களில் உண்மையைக் கொடுத்து வைக்கும் படியாக" என்ற கருத்தைக் கொடுக்கிறது. ஒரு கிறிஸ்தவன் எதிர்ப்பைக் குறித்த பயம் இல்லாமல் மற்றொருவருக்கு புத்திமதி அல்லது ஆலோசனை கொடுக்கலாம். (உண்மையைச் சொல்ல வந்த காரியமாக) என்று அறிந்து தெரிந்திருப்பதே உண்மையான ஐக்கியத்திற்கு அடையாளமாகும். மற்ற வார்த்தைகளில் கூறுவதென்றால், அருசியான உண்மையைக்கூட அன்புடன் பகிர்ந்து கொள்ளக் கூடுமானாலும் மனதில் ஏற்றுக் கொள்ளக் கூடிய தானாலும் அது நம்பிக்கைக்குரிய இணைப்பாக உண்டாக்கப்படுவதால் அது வலிமையுள்ளதாயும் அறுந்து போகாததாயும் நிலைத்து நிற்கிறது.

12.பகிர்ந்து கொள்ளுதல்

உள்ளபடியாக நமது ஆங்கில வார்த்தை Fellowship (ஐக்கியம்) எல்லாருக்கும் பொதுவான சொந்தமானதை பரஸ்பரமாக பகிர்ந்து கொள்ளுதல் என்று அர்த்தமுள்ள வார்த்தையிலிருந்து வரும் மொழி பெயர்ப்பாகும். அதற்கு 'போய் பங்கிடு' என்றும் பொருள்படும். இந்த வாசகம் ரோமர் 12:13 லும் 15:27 லும் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவைப் பற்றி நாம் படித்து அறிந்து கொண்டது "ஐக்கியம்" ஒருவருடைய உடைமைப் பொருள்களை மற்றவருக்குக் கொடுப்பது ஐக்கியம் என்றும், மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காக நேரத்தைப் பயன்படுத்துவது ஐக்கியம், மற்றொருவடைய பாரத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் ஐக்கியம் என்று எல்லாமே ஐக்கியமாகும் என்று விவரிக்கப்படும். கலா 6:2 கூறுவதாவது "ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்கி" என்று விவரிக்கும்.

13.திரும்பவும் முன்னிலைக்கு கொண்டு வருதல்

உத்தேசமாக ஒரு மோசமான உடைந்து போகும் நிலை ஐக்கியத்தில் ஏற்படுமானால் அதை எவ்வாறு பழைய நிலைக்கு நிவாரணம் செய்யலாம். வேதாகமத்தில் மத் 18:15-22ல் இது தெளிவாகக் கூறப்படுகிறது. தீங்கிழைத்த மனிதன் அந்த எதிர்கட்சி மனிதனிடம் போய் அந்தக் காரியத்தைக் குறித்து சீர் பொருந்துமாறு கேட்க வேண்டும். இதைச் சாதித்துக் கொள்ள முடியாவிட்டால் திரும்பவும் அவனிடம் போக வேண்டும். அதாவது முடிந்தால் ஒன்று அல்லது இரண்டு திருச்சபை தலைவர்களுடன் அல்லது சகோதரர்களைக் கூட அழைத்துச் செல்ல வேண்டும். இதுவும் தோல்வியடைந்தால் அவர்கள் அங்கத்தினர்களாக இருக்கும் ஸ்தல திருச்சபை ஐக்கியத்திற்கு முன் கொண்டு வர வேண்டும். நாம் அறுந்து போன உறவுத் தொடர்புகளுடன் திருப்தி அடைந்து நின்று விடக் கூடாது.

14.வேலையாள் - பணித்தத்துவம்

கலா 5:13 என்ற பகுதி கிறிஸ்தவ ஜீவியத்தின் உண்மையான வெளியில் எடுத்துரைக்கும் கூற்றாவது வேலைக்காரனுக்குரிய ஆவியைப் பெற்றிருத்தல் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதில் கரிசனையும் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதில் விருப்பம் கொள்வதும் ஆகும். கிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவினார். அவர்களுக்காக காலை போஜனத்தை தயாரித்தார். மேலும் நன்மை செய்து கொண்டே போய் கொண்டிருந்தார். அப். பவுல் தனது வாஞ்சையைக் குறித்து விவரிக்கும்பொழுது "எல்லாருக்கும் அடிமையாக்கினேன்" (I கொரி 9:19) என்று கூறுகிறார்.

15.விருந்தினரை உபசரித்தல்

1பேதுரு 4:9 நமது இல்லங்களை ஒருவருக்கொருவர் "முறுமுறுப்பில்லாமல்" திறந்து வைத்திருக்கும்படி சொல்லுகிறது. இந்த வசனமானது நமது இல்லங்களை ஐக்கியத்தை வளர்த்து பழக்கப் படுத்திக் கொள்வதற்கு முக்கியமான காரணியாகக் காட்டுகிறது. கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கு தேவையான தகுதியாக இந்த மனப்பான்மை அவசியமென்று இரண்டு

தரம் கூறுகிறது. (I தீமோத் 3:2; தீத்து 1:8) மேலும் ரோமர் 12ம் அதிகாரத்தில் மற்ற கிறிஸ்தவ பண்பாடுகளான, ஜெப நிறைவு, தாழ்மை, பேரார்வம் ஆகியவற்றுடன் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

16.பங்கெடுத்துக் கொள்ளுதல்

I பேதுரு 4:10 கற்பிப்பதாவது நமது ஐக்கியத்தின் பொறுப்புகளில் ஒன்ற நமது ஆவிக்குரிய வரங்களை குழுவினரின் நன்மைக்காக உபயோகப்படுத்த வேண்டும் என்பதாகும். அப்படி நாம் செயல்படாவிட்டால் நமது உக்கிராண பொறுப்பான வேலையில் தவறி விடுவதாகும். இந்த வரங்கள் கொண்டு வர வேண்டும் என்று எண்ணுகிற ஆசீர்வாதங்களை அந்த ஐக்கியம் பெற விடாமல் மறுப்பதாகும்.

17.ஒற்றுமை

ரோமர் 15:5 "தேவன் ... ஏக சிந்தையுள்ளவர்களாக இருக்கும்படி உங்களுக்கு அனுக்கிரகம் செய்வாராக." என்றும் I கொரி 1:10ல், "நீங்கள் எல்லாரும் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்" என்றும் கூறப்படுகிறது. அதாவது ஒவ்வொரு பிரச்சனையிலும் தேவனுடைய சித்தத்தைக் கண்டு அறிந்து கொள்ளும்படியான பொறுப்பைக் கற்பிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவருக்கு இரண்டு விதமான அபிப்பிராயம் என்பதே கிடையாது. ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சனை என்றால் அதற்காக வாக்குப் போடுவது (அதாவது தேர்தல் அல்ல) உண்மையானதோர் கிறிஸ்தவ ஐக்கியத்தில் இறுதியாக கையாளும் அளவாக இருக்க வேண்டும். அதன் குறிக்கோளாவது ஜெபத்தின் மூலமாகவும் நமது கருத்துக்களை பரிமாறிக் கொள்வதாலும் பொது இசைவை உண்டாக்கிக் கொள்வதால் அந்தக் குழுவினரிடையே முழுவதும் தெளிவையும் திட நம்பிக்கையையும் விருத்தி செய்து கொள்வதாகும்.

18. வேற்றுமை

ஒற்றுமை என்பது இணக்கமான ஒத்திசைவு என்ற உள் அர்த்தம் என்றாகாது. பரிசுத்த ஆவியானவரின் அனந்தமான ஞானத்தினாலே அவர் நம்மை பலவேறு வழிகளில் நம்மை தகுதிப் படுத்துகிறார். I கொரி 12ம் அதிகாரத்தில் கூறப்படும் தெளிவான போதனையாவது நாம் சரீரத்துடன் தப்பிக்க முடியாத ஒரு தொடர்பினால் இணைக்கப்பட்டிருப்பதால் நாம் நம்முடைய சொந்தமான தனித்தன்மை வாய்ந்த கிரியைகளால் நாம் ஒவ்வொருவரும் நமது சரீரத்திற்கு நமது பங்கை கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

19.ஏற்றுக் கொள்ளுதல்

ரோமர் 12:10, "ஒருவரை ஒருவர் கனம் பண்ணுங்கள்" என்ற கற்பிக்கிறது. ஜனங்கள் நம்முடன் ஒத்து ஆமோதிக்கும் பொழுது மட்டுமே நாம் அவர்களைப் பாராட்டுகிறோமா? அப்படியானால் நாம் பாரபட்சம் காட்டும் குற்றஞ் செய்கிறவர்களாக இருப்போம். அது யாக் 2:9ல் கண்டனம் செய்யப்படுகிறது. உள்ளத்தின் உண்மையான தாழ்மையுடைமைக்கும் தாழ்மைக்கும் உள்ள அடையாளமாவது "ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணக்கடவீர்கள்" என்றாகும். (பிலிப் 2:2,4)

20.பணிதல் (பணிந்து கீழ்படிதல்)

எபேசியர் 5:21. நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்படிந்திருங்கள் என்று நமக்குத் தெளிவு படுத்துகிறது. இந்த வார்த்தைக்கு அர்த்தமாவது "கீழே வைத்து" என்றும் அதன் போதனையின் சொல் பொருள் விளக்கமாவது நமது மனப்பான்மையின் நோக்கமாவது எப்பொழுதுமே மற்றவர்களின் நன்மைக்கான நலனுக்காகவே நமக்காக அல்ல மேலும் நாம் ஒரே நிலையான ஏற்றுக் கொள்வதற்காகவும், நமது முன்னுரிமைகளில் முதலாவதாக இயேசுவுக்காகவும், அடுத்தாக பிறருக்காகவும், முடிவாக கடைசியில் நமக்காகவும் இருத்தல் வேண்டும். பெருக்குதல்? ஆம், ஆனால் முற்றிலும் வேதாகமத்துப் பிரகாரம், பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். (I பேதுரு 5:5)

21.ஜெபம்

குழு அங்கத்தினர்களுடைய ஒருவருக்காக ஒருவர் ஏறெடுக்கும் ஜெப ஊழியத்தை போலவே, ஜெப ஊழியம் எவ்வளவு பலம் வாய்ந்ததோ அந்த அளவுக்கு ஐக்கியமும் பலமுள்ளதாக இருக்கும். அநேக ஸ்தல ஸ்தாபனத் திருச்சபைகளில் விசேஷமாக அங்கே பலவீனமான பெரிய பகுதிகள் உண்டு. அடிக்கடி ஜெபக் கூட்டங்களும் ஆதரவு தருகிற நபர்கள் இல்லாத காரணத்தால் முற்றிலுமாகக் காணாமல் போய் விட்டதோ அல்லது வியூக யுக்தி குறைந்த தன்மையுள்ள கூட்டமாகவோ அல்லது விவாதக் குழுவாகவோ சீர் குலைந்து போயிருக்கும். ஒன்றாக சேர்ந்து ஜெபியுங்கள். ஒன்றாகத் தரித்திருங்கள்! ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள் (கொலோ 4:2) இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் (I தெச 5:17) ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள். (ரோமர் 12:12)

வீட்டு சபைகளுக்கான வேதாகம அடிப்படை

நகரம்

இந்த உலகமானது நகர்புற விரிவாக்கத்தில் ஓர் வளர்ச்சியின் வேகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. சமீப காலத்து ஆராய்ச்சியானது மூன்றாவது ஆயிரம் ஆண்டு சகாப்தத்தில் நகர விரிவாக்கம் 52% விகிதத்தை அடைந்து விடும் என்று காட்டுகிறது.

பாரம்பரியத்தின்படி அகில உலகத் திருச்சபையானது, "நகரத்தை அச்சத்துடனும் சந்தேகத்துடனும் புறக்கணிக்கப்பட வேண்டிய ஓர் இடமாகப் பார்த்து" அறிந்திருந்தது. ஆகவே, திருச்சபையில் நகர்புற மையங்களைக் காலி செய்து விட்டு கிராமப்புறங்களுக்கு போகும்படியான ஓர் வல்லமையான போக்குக் காணப்பட்டது. நகர்புற விரிவாக்கம் ஆனது நகரத்து மக்களுக்கு பெரிய பிரச்சனைகளை உண்டாக்கக் காரணமாக இருந்தது. மக்களது ஜனத்தொகை விரைவாக அதிகரித்தபொழுது அவசியத் தேவைகளின் அடி மூலமான குடி தண்ணீர், (வீடுகள்) குடியிருப்புகள், சுகாதார வசதிகள் போன்றவற்றின் மீது தாங்கக் கூடாத அழுத்தம் உண்டாகக் கூடும். இந்த ஜனத் தொகை குண்டு வெடிப்பு ஆனது பல வகையான சுகாதாரத்திற்கு அடுத்த பெருவாரி நோய்கள், குடியிருப்பு வசதிக் குறைவு, வறுமை ஆகியவற்றில் கொண்டு போய் விடக்கூடும்.

இந்த விஷயங்கள் எல்லாவற்றிலும் சமூக-பொருளாதார தேவைகள் இருப்பது கண் கூடாகும். இவைகளுக்குப் பின்னால் குடும்பத்தின் மீது பாரமான அழுத்தங்கள் உண்டாகி இதனால் திருமணத்தில் ஸ்திரமில்லாமை அதிகரிக்கிறது. மேலும் புதிய நகர்புற (பொருளாதாரப்) நிதிப் போராட்டங்கள் மனித உறவுத் தொடர்புகளைப் பாதிப்பதால் நிலைமை மோசமாகிறது. இல்லத்தரசிகளின் பங்கானது கிராமப்புற வீட்டை பராமரிப்பவர்கள் என்ற ஸ்தானத்திலிருந்து இரண்டாந்தர வருமான சம்பாத்தியகாரர்களாக மாற்றி விடுகிறது. குடும்பங்கள் தங்களுடைய கால நேரத்தை நகர் புறத்தும் மற்றும் கிராமத்து மூல ஸ்தானத்திற்கும் இடையில் பிளவு படுத்திக் கொள்ளப்படுகிறது. தங்களது இடைவெளி குறுகிய வருமானத்தினால் இன ஜனத்துக்கு செய்ய வேண்டிய கடமைகள் பாதிப்படைகிறது. பெற்றோர், பிள்ளைகள் இடையே ஏற்படும் பிளவுகளால் பாதிப்படைந்து கிராமப்புறத்து கலாச்சாரங்கள் குழந்தைகளால் பழக்கப்படுத்திக் கொள்ளப்படுவதால் புதிய மாதிரியான சமூக நடைமுறைகள் தோன்றுவதாகிறது. குடும்பத்தைப் பொறுத்தது மட்டுமல்லாது ஒருவர் செய்யும் வேலையையும் அடித்தளமாகக் கொண்டு சவாலாக ஆக்கப்படுகிறது. பலவித மக்கள் நகரத்தைக் குறித்து வித்தியாசமான கண்ணோட்டத்தை உடையவர்களாய் இருக்கிறார்கள் என்று அறிக்கைகள் கூறுகின்றன. ஆனால் அனைத்து அறிக்கைகளும் "விரிவாக்கம் அடைகிற நகரத்தில் ஒரு ஆவிக்குரியதும் நல்லொழுக்கத்தைப் பற்றிய ஒரு (சூன்யம்) வெறுமை இருக்கிறது" என்பதை ஒருமித்து ஆமோதிக்கின்றன. ஆகவே முழுவதுமாக திருச்சபை நகரங்களைப் புறக்கணித்துள்ளது.

ஆனாலும் நாம் விசுவாசிகளாகவும் தலைவர்களாகவும் நகரத்தை கையில் எடுத்துக் கொண்டு அவருடைய மகிமைக்குரிய இடமாக உண்டாக்குவோம்.

புதிய ஏற்பாட்டு இல்லத் திருச்சபைகள்

புதிய ஏற்பாட்டுத் திருச்சபை அதன் காலத்தில் திகழ்ந்த தலைநகர்களைச் சென்று அடைவதில் செயலூக்கமுடையதாய் இருந்தது. புதிய ஏற்பாட்டுத் திருச்சபைகளின் ஆரம்பமே குடும்பத்து அலகும், குடும்பத்து இல்லமும் ஆகும். புதிய ஏற்பாட்டு சரித்திரமும், வேதாகமமும் இரண்டுமே சேர்ந்து தெளிவாக புதிய ஏற்பாட்டு காலத்தில் இல்லத்து குடும்பமே ஒரு அடிப்படையான அரசியல் அலகாகக் கருதப்பட்டது. ஒரு இல்லத்து குடும்பம் எனப்படுவது குடும்பத்தை மட்டுமல்ல, "அடிமைகள், விடுதலை பெற்றவர்கள், வேலைக்காரர்கள், தொழிலாளிகள் சில சமயங்களில் வணிக இணை ஊழியர்களும் பயிரிடும் குடியானவர்களும்" சேர்ந்தே வீட்டுக் குடும்பம் எனப்பட்டனர். இல்லங்களை உபயோகப்படுத்துவதே சுவிசேஷத்தை பிரபலப்படுத்தும் முக்கியமான முறைகளில் ஒன்றாய் இருந்தது. எருசலேம் திருச்சபையின் முதல் கூட்டம் ஒரு வீட்டில் - அதாவது வீட்டின் மேல் அறையில் கூடினது. (அப் 1:15) அந்த வீடு ஒரு ஐக்கியத்திற்கும் கூடி வரும் இடமும் ஆக இரண்டாகவே இருந்தது. இந்த இயக்கம் வளர ஆரம்பித்த பொழுது மேலும் அநேக வீடுகள் கூடி வரும் இடங்களாக

இணைக்கப்பட்டன. யோவான், மாற்கு என்பவர்களுடைய தாயாரின் வீடானது ஒரு துணைக்குழு முழுவதுமாக ஜெபத்திற்கு கூடி வரும் இடத்திற்கு ஓர் உதாரணமாக இருந்தது. அப் 12:12உம் அப் 2:47 பகுதிகள் ஆகிய இரண்டிலும் மக்கள் அவர்களுடைய இல்லங்களில் அப்பம் பிட்டதாக கூறுகிறது.

ஒரு புதிய நகரத்தில் புதியதோர் கூடிவரும் சபையை நிறுவ வேண்டுமானால், பவுல் அப்போஸ்தலனுடைய முதல் புற நோக்காவது கேந்திரமாகவும், மேற்கொண்டு செய்யப்படும் ஊழிய பணிக்குப் பயன்படக் கூடிய ஓர் இல்லத்து குடும்பத்தை தன் பக்கமாக வசப்படுத்திக் கொள்வது தான். ஒரு திருச்சபையை ஸ்தாபிக்க வேண்டுமானால் பவுலுக்கு ஒரு குழு ஒன்றாகக் கூடிச் சந்திக்கும் இடம் தேவையாக இருந்தது. பவுல் உறவுத் தொடர்பு கொண்டிருந்த பலவிதமான வீட்டுக் குடும்பங்களைக் கவனித்துப் பார்க்கவும். லீதியாள், பிலிப்பு பட்டணத்து சிறைச் சாலைத் தலைவன், கிரிஸ்பு (அப் 16:14-15, 31-34; 18:8) பிரிஸ்கில்லா ஆக்கில்லா, நர்கீசு, (ரோமர் 16:3,10,11) குலோவேயாள், காயு, ஸ்தேவான் (I கொரி 1:11, 14-15) இராயன் (பிலிப் 4:22) மேலும் ஒநேசிப்போர் (II தீமோத் 1:16; 4:19) உதாணமாவார்கள்.

இந்த வீட்டுத் திருச்சபை புதிய ஏற்பாட்டில் திருச்சபைக்கு அடித்தளமாக விளங்கியது. அது மிகத் தொளிவாக "அவர்களுடைய / உங்களுடைய / அவளுடைய வீடுகளில் கட்டும் சபை" என்ற சொற்றொடரால் அடையாளங்களாக பவுலுடைய நிருபங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த சொற்றொடர் அக்கில்லா பிரிசில்லா வுடைய எபேசு உரோமபுரி பட்டணங்களில் இருந்த வீடுகளில் கூடி வந்த சபையைப் பற்றி சொல்லப் பயன்பட்டது. (I கொரி 16:19; ரோமர் 16:3-5)லவதோக்கியாவிலுள்ள நிம்பாவின் வீட்டையும், கொலோசே பட்டணத்தில் இருந்த அப்பியா, அர்க்கியு என்பவர்களின் வீட்டையும் குறிக்கிறது.

<u>வீட்டுத் திருச்சபை - சபை கூடும் இடம்</u>

வீட்டுத் திருச்சபையின் அளவு அந்த வீட்டிலுள்ள மிகப் பெரிய அறையில் நிர்ணயிக்கப்பட்டது. மிகப் பெரிய கூடிவரக் கூடிய கூடுகையில் 45 நபர்கள் உள் அடங்குவர். வீட்டு தோற்ற அமைப்பு அந்த இராஜ்ஜியத்தின் குறுக்கு நெடுக்காக அதிகமாக வேறுபட்டதாக இருந்தது. ஈஜீயன் கடற்கரைப் பட்டணங்களில் கூடி வந்த சபை அந்த வீடுகளில் இருந்த உணவு கூடங்களில் கூடி வந்தன. இந்த சாப்பாட்டு அறைகள் சில சமயங்களில் வீட்டு முன் முகப்பு மண்டபத்தையோ அல்லது திறந்த வெளி முற்றத்தையோ பார்த்து அமைக்கப்பட்டிருக்கும். கிரேக்க உரோம வீடுகளில் வீட்டு எஜமானர்கள் தாங்களே வரவேற்று அவர்களுடைய புகழ்பெற்ற விருந்து நிகழ்ச்சிகளை நடத்துவதற்கென்று நன்கு அலங்கரிக்கப்பட்ட அறைகள் கூடுகைகளுக்காகவே அமைக்கப்பட்டிருந்தன. இந்த அறைகள் சில வேளைகளில் வீட்டிலே பெரிய விசாலமான அறையாக இருக்கும்.

வீட்டு சபையானது தன் அளவுக்கு நிரம்பிய பொழுது அந்தத் திருச்சபையின் தொடர்ச்சியான வளர்ச்சி தத்துவ ரீதியாக நேரிடுகிறது. அதுவும் அதிகமான வீட்டுசபைகள் அதனுடன் சேர்க்கப்படுவதால், ஒன்றுக்கு மேற்பட்ட சபைகள் தோன்ற நேரிடுவதைப் பற்றி அப்போஸ்தலர் நடபடிகளில் யோசனையாகக் கூறப்பட்டுள்ளது. ஆதித் திருச்சபை "வீடுகள் தோறும்" போதிக்கப்பட்டது. "வீடுகள் தோறும்" மக்கள் சித்ரவதையும் தொடர்ந்து அப் 5:42; 20:20; அப் 8:3) ஆகவே பெரிய நகரங்களில் ஒரு வேளை இந்த மாதிரியான திருச்சபைகள் ஒன்றுக்கொன்று தளாத்தியாகக் கட்டப்பட்டிருக்கலாம்.

அதிகமான வீட்டுத் திருச்சபைகளைச் சேர்த்து இணைத்து கூடிவரும் சபையை அதிகரித்தது. புதிய ஏற்பாட்டு சபையை ஒரு செயலூக்கமான அடிமட்டத்து இயக்கமாக உருவாக்கியது. அது விரிவாக்கத்திற்காக ஒரு திருச்சபை கட்டடத்தை சேர்த்துக் கொள்ளும்படியாக சார்ந்திருக்கவில்லை. தேவையானது என்னவென்றால் மற்றொரு குடும்பம் தன் வீட்டை சபை கூடி வருதலுக்கு திறப்பதாகும். ஆனால் முதலாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் அங்கு பெரும் அளவில் பெருக்கம் உண்டாக்குகிற ஸ்திரப்படுத்தப்பட்ட வீட்டு சபைகள் உரோம உலகமெங்கிலும் பரந்து விரிந்து இருந்தன. ஆரம்ப காலத்தில் சித்திரவதை அதை கடினமாக ஆக்கிய காலத்திற்கு முன்னர் எருசலேம் திருச்சபை சாலோமோன் மண்டபம் என்ற தேவாலயப் பகுதியில் (வளாகத்தில்) சபை கூடி வந்தனர். (அப் 2:46; 3:11; 5:12) இங்கே அவர்கள் அப்போஸ்தலர்களிடமிருந்து போதனையைப் பெற்றும் ஐக்கியத்திலும் ஜெபத்திலும் பங்கெடுத்துக் கொண்டனர். அப்போஸ்தலர்களால் அடையாளங்களும் அற்புதங்களும்

செய்யப்பட்டன. (அப் 2:42-45) ஐக்கியமானது ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். (அப் 2:42-45) துர்அதிர்ஷ்டவசமாக திருச்சபையானது யூதத் தலைமைத்துவத்தால் நடத்தப்பட்ட முறையிலிருந்து அப்போஸ்தலருடைய உபதேச செய்திகளைக் கேட்க விரும்பியவர்கள் சாலோமோன் மண்டபத்தில் அவர்களோடு கூடிவரப் பயப்பட்டனர். (அப் 5:13)

வீட்டு சபைகள் சத்தியத்தை தேடிப் பெற்றுக் கொள்வதற்கு பாதுகாப்பான சந்தர்ப்பங்களைத் தந்து உதவியது. வீட்டுத் திருச்சபை மட்டத்தில் சபையானது அப்பம் பிட்குதலுக்கும் போதித்தலுக்கும் ஜெபத்துக்கும் ஒழுங்காகக் கூடி வந்தது. (அப் 2:46; 20:7-12; 20:20) பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் ஆராதனை முறையில் வேறுபட்ட தன்மைகளைக் குறிப்பிட்டுள்ளார். அவைகளில் தேவனுடைய வார்த்தையில் உபதேசமும் (I கொரி 14:26) அது போல இராபோஜனமான அப்பம் பிட்குதலும் இடம் பெறும். (I கொரி 11:17) மேலும் அவர் ஜெபம் ஏறெடுத்தலின் முக்கியத்துவத்தையும் வற்புறுத்துகிறார். (பிலிப் 4:6)

வீட்டு சபைகளின் நோக்கம்

உறவுத் தொடர்புகளுக்கான புதிய ஏற்பாட்டுக் கட்டளைகள் பெரிய கூடிவரும் சபைகளில் அமல்படுத்த முடியாது. வீட்டு சபைகள் சிறிய கூடுகைகளாக மக்கள் ஒழுங்காகக் கூடிவந்து கிருபையிலும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவைப் பற்றி அறிகிற அறிவிலும் வளரும் படியாகக் கூடி வருவதாகும். அகன்ற கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் வீட்டுச் சபைகள் தலைமைத்துவத்தின் தரிசனத்திற்காக கணக்கு ஒப்புவிக்க வேண்டும். மத் 28:19ல் குறிப்பிடப்படும் அந்த மகா திட்டத்தை வீட்டு சபைகள் என்ற ஒரு வாகனத்தின் மூலமாகவே நிறைவேற்ற முடியும்.

வீட்டு சபைகளுக்கான வேதாகமத்து பிரகாரமான சில நோக்கங்கள் கீழே அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளன:

1. துதிக்க, ஆராதிக்க, கீழ்படிய (கிறிஸ்துவை) (அப் 2:42)
2. தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்ளவும் அதை எப்படி கடைபிடிக்க வேண்டும் என்றும் (அப் 2:42)
3. ஒன்று கூடி ஏகோபித்து ஜெபிக்கவும் கர்த்தருடைய இராபோஜனத்தை ஆசரிக்கவும். (அப் 2:42,46)
4. ஐக்கியத்தை ஒன்றுபடுத்தவும் சமூகத்து மக்களிடையே நம்பிக்கை, சொஸ்தமாக்குதல், ஜீவன் இவற்றை விருத்தி செய்யும்படியாகவும் (அப் 2:44-45; எபி 13:16)
5. ஜனங்களை கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கும் விசுவாசத்திற்குள் கொண்டு வரவும். (அப் 2:47)
6. ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுமாறு (I கொரி 14:26)
7. உலக சுவிசேஷ ஊழியத்திற்காக ஒருவரை ஒருவர் ஆயத்தப்படுத்திக் கொள்ள. (மத் 28:19)

வீட்டு சபைகள் ஒழுங்காகக் கூடி வரும் படியாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அதாவது ஒரு ஒருமைப்பட்ட நோக்கத்திற்காக அந்த ஸ்தல திருச்சபையின் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு தரிசனத்திற்காகவே. அப்படிப்பட்ட நிறுவனங்களை ஞாயிறு தோறும் கூட்டப்படும் கொண்டாட்ட கேந்திரங்கள் என்று நாம் அழைக்கலாம். இந்த கூடுகைகள் ஒன்றாகக் கூடி நகரத்திற்காக ஜெபிக்கவும். (I தீமோத் 2:1-2) ஐக்கியம் தேவனைத் துதித்து ஆராதிக்கவும் தேவனுடைய வார்த்தையை படிக்கவும் அபிஷேகம் பெற்று தகுதி பெற்ற சுவிசேஷ போதகர்களிடமிருந்து வார்த்தையைப் பற்றிய ஊழியத்தை கேட்கவும் இவை உதவ வேண்டும்.

இந்த கொண்டாட்ட கேந்திரங்கள் வேதாகம ஆதாரமுடையவை. (அப் 5:42) அவைகளுக்கு பின்வரும் நோக்கங்களுண்டு:

1. கிறிஸ்தவர்களுக்கிடையே ஒற்றுமை பிணைப்பை உண்டாக்கவும். (I கொரி 1:10)
2. ஒரு ஸ்தலத்தின் ஆவிக்குரிய சூழ்நிலை மனமாற்றத்தை மாற்றவும். (எபேசி 3:10; மத் 18:18-20)
3. அபிஷேகம் பெற்ற பிரசங்கிமார்களையும் ஆசிரியர்களையும் (எபேசி 4:11-12) மிகுதியான

விசுவாசிகளைச் சென்றடைந்து உடனடியாக தாங்கள் கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொண்ட தூது (செய்தியுடன்) இடைபடும் படியாக வசதி செய்ய வேண்டும்.

4. வீட்டுக் குழு மட்டத்தில் நடைமுறையில் நிறைவேற்ற வசதி படாத பல விதமான வெளிப்பாடாகும். கிரியைகளான துதி ஆராதனை, செய்தித் தொடர்பு ஆகியவற்றை நடத்தி கொண்டாடுவதற்கு தகுந்ததோர் இடத்தைத் தயார்படுத்தித் தரும்படியா. (சங் 149:1)
5. சமூகத்தினரான மக்களுக்கு விரிந்து பெரிதானதும் அதிகமான நம்பத் தகுந்ததுமான சாட்சியைக் கொடுக்கும் படியாக. (அப் 6:7)
6. நிறுவனங்களின் செயல் திட்டங்களும் ஊழியர்களும் இடைபடத் தேவையான தாலந்துள்ள கிறிஸ்தவர்களுக்கும் அழைக்கப்பட்டவர்களும் இடையில் அமைந்த விசாலமானதோர் அடித்தளத்தில் அமைந்த கூட்டுறவில் ஒன்றாக ஒன்றுபட்டு குறிப்பிட்ட ஆளும் பகுதியில் ஊழியம் செய்யும்படி வசதியாக (II கொரி 8:10-15)

<u>தலைமைத்துவம்</u>

புதிய ஏற்பாட்டுத் திருச்சபை அப்போஸ்தலர்களின் தலைமைத்துவத்தில் ஆரம்பமானது. ஆரம்பத்தில் திருச்சபையின் எல்லா பணிகளிலும் பிரசங்கித்தலில் இருந்து உணவு விநியோகத்தை மேற்பார்வை செய்தல் வரையிலான எல்லாவற்றிற்கும் பொறுப்புள்ளவர்களாய் இருந்தார்கள். திருச்சபை வளர்ச்சி அடைந்த பொழுது புதிய மட்டங்களில் தலைமைத்துவம் எழும்பியது. இந்த புதிய தலைவர்கள் கூடிவரும் சபையால் தெரிந்தெடுக்கப்பட்டு, அனுதின உணவு விநியோகத்திற்குப் பொறுப்புள்ளவர்கள் ஆனார்கள். இது பன்னிரு சீஷர்களையும் ஜெபத்திற்காகவும் வார்த்தையைப் போதிக்கும் ஊழியத்திற்காகவும் அவர்களை விடுவித்தது. (அப் 6:4)

மற்றொரு தலைமைத்துவ பதவி அதாவது "மூப்பர்கள்" என்பது நடைமுறையில் வந்தது. (கிரேக்க பதம் prebuteros) எருசலேம் திருச்சபை மூப்பர்கள் பவுலையும் பர்னபாவையும் அந்தியோகியாவுக்கு அனுப்பினார்கள். (அப் 11:30) அவருடைய பவுலின் முதல் மிஷினரி பயணத்தின் போது அவர்கள் நாட்டிய வீட்டு சபைகளுக்கு மூப்பர்களை நியமித்தார்கள். (அப் 14:23) மூப்பர்கள் எருசலேம் சபையின் ஆலோசனை குழுவில் எடுக்கப்படும் தீர்மானங்கள் செய்வதில் ஈடுபாடு கொண்டிருந்தனர். (அப் 15) எபேசுவிலுள்ள சபையிலும் மூப்பர்கள் இருந்தார்கள். (அப் 20:17) லூக்காவுங் கூட இந்த மூப்பர்களை கண்காணிகள் அல்லது பேராயர் என்று அழைத்தார்கள். (கிரேக்க மொழியில் episkopos) என்பதாகும். (அப் 20:26)

இந்த மூப்பர்களுக்கு / கண்காணிகளுக்கு இருக்க வேண்டிய யோக்கியதாம் சங்களைக் குறித்து வரிசை படுத்துகிறார். (I தீமோத் 3:1-7 உம் தீத்து 1:5-9) பேதுரு தலைமைத்துவத்திற்குப் பொறுப்பை வழங்குகிறார். (I பேதுரு 5:1-6) இந்த பகுதி வசனங்கள் மூப்பர்களுக்கான பங்கின் மீது மையப்படுத்துகிறது. அதாவது தேவனுடைய வார்த்தையைக் கையாளுவதிலும் ஆரோக்கியமான உபதேசத்தை அறிந்து கொண்டு திருச்சபைக்கு ஊழிய சேவை புரிந்தும் திருச்சபையை மேற்பார்வை செய்வதிலும் அவர்களுடைய பங்கை திட்டமிடுகிறது. பிலிப்பி நகரத்தில் மேற்பார்வையாளர் என்ற பதவியோடு உதவிக்காரர் (கிரேக்க மொழி diakonos) என்பதும் குறிப்பிடப்படுகிறது. (பிலிப் 1:1) பவுல் அப்போஸ்தலன் இந்த பதவிக்கான தகுதிகளை (I தீமோத் 3:8-13) வசனங்களில் குறிப்பிடுகிறார்.

இந்த வாசகத்தில் Gunaikas (கிரேக்கம்) என்பது பற்றி குறிப்பு ஒன்று இருக்கிறது. இந்த பதமானது "உதவியாளர்களின் மனைவியர்" என்றோ அல்லது "உதவியாளர் பணியை நிறைவேற்றும் ஸ்தீரிகள்" என்றோ குறிக்கும். பெபெயாள் (கிரேக்கம்) "diakonos" என்று குறிப்பிடப்படுகிறார். அது ஒரு உதவியாளரை அல்லது வேலைக்காரனைக் குறிப்பதாகும். இந்த முறையானது தலைமைத்துவத்திற்கு ஒரு உதாரணமாக இருக்கக் கூடும். (ரோமர் 16:1) இந்த வசனப் பகுதிகள் பெண்பால் தலைமைத்துவம் என்பது எளிதாக புதிய ஏற்பாட்டு சபைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டதென்பதை பலமாகக் காட்டுகிறது.

உதவியாளர்களின் பங்கு அப் 6ம் அதிகாரத்தில் திருச்சபைக்கு வேலை செய்வது என்பதாகும். கிரேக்கர்கள் இந்த வார்த்தையை "நகரத்தில் ஒரு வேலைக்காரனாக அல்லது ஒரு குறிப்பிட்ட நலப் பணிகளுக்கு நகரத்திற்குள்ளே பொறுப்புள்ளவர்" என்று கூறுவதாகும். இந்த கிரேக்க பத உபயோகம் அப்போஸ்தலர் நடபடிகளில் உபயோகித்த முறைக்கு சமமாக இருக்கிறது.

உடன் ஊழியர்கள் மூப்பர்களுக்கு உதவியாளர்களாக நடந்து கொண்டனர். முதலாம் நூற்றாண்டின் பிற்பட்ட காலத்தில் பேராயர் / மூப்பர்கள் என்றும் உதவியாளர்கள் என்ற இரண்டு பதவிகளே வழக்கில் இருந்தன. முதலாம் நூற்றாண்டு காலத்தில் திருச்சபை அலுவலர்கள் பதவிகளில் திட்டவட்டமாகக் குறிப்பிடபட்டனர். பேராயர் என்பது மூப்பர் நகரத்திற்கு ஒரு பேராயர் இருந்தார், ஓர் மூப்பர்களின் குழுவும் மேலும் பல திறப்பட்ட உதவியாளர்களும் இருந்தனர். குறிப்பிடப்பட்ட நகரத்தின் மீது பேராயர் என்பவர் திருச்சபையின் மேல் அதிகாரம் பெற்றவர். மூப்பர்கள் அவர்களுக்கு அறிக்கைகள் சமர்ப்பித்தனர். உதவியாளர்கள் பேராயர்களுக்கும் மூப்பர்களுக்கும் அறிக்கைகள் பணிந்து தந்தனர். அந்தத் திருச்சபை வளர்ந்தது போலவே இந்த தலைமைத்துவ அமைப்பும் வளர்ந்தது.

செல்வாக்கு

புதிய ஏற்பாட்டு திருச்சபையின் தாக்கத்தை சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் உணர முடிந்தது. அது சனதரீம் சங்கத்தின் தலைவரிடையே ஊடுருவிச் சென்றது. (யோசேப்பு அரிமத்தியா; லூக்கா 23:50) மேலும் நிக்கோதேமு யோவான் 3:1 ஜெப ஆலயத்திலுங்கூட தாக்கம் இருந்தது. (கிரிஸ்பு அப் 18:8) அது கிறிஸ்தவர்களை "உலகத்தை தலைகீழாக மாற்றியவர்கள்" என்று அறியப்படும் மையக் குறிப்பு வரைக்கும் இட்டுச் சென்றது. (அப் 17:6)

21ம் நூற்றாண்டின் வீட்டு சபைகள்

புதிய ஏற்பாட்டு வீட்டு சபைகள் ஒரே ஒரு பூகோளப் பகுதியில் சம்பவித்த இயல்பான இயற்பியல் அல்ல. அது உரோமாபுரி உலகம் முழுவதும் விரிந்து பரவியது. அது சிறிய வலைப்பின்னல் குழு என்ற இருக்கும் அனுகூலத்தைப் பெற்றிருந்தது. இந்த ஒரு காரியம் தான் அது விரிவாக்கம் பெறச் செய்து சித்திரவதையை எதிர்த்து நிற்க முடிந்தது. பல மூன்று வீட்டு சபைகள் ஒரு நகரத்தில் அமைந்திருந்தது. திருச்சபை பல வகைப்பட்ட கலாச்சார சமூகக் கூட்டங்கள் நிறைந்த நகரத்தில் சூழ்நிலைக்கேற்றவாறு அமைத்துக் கொள்ளப்படுவதற்கு வகை செய்தது. உரோம சாம் ராஜ்ஜியத்து முக்கியமான நகரங்கள் இந்த ஐக்கியங்களால் தாக்கம் பெற்றன. (அந்தியோகியா, சிரியா, கொரிந்து, எபேசு, உரோமாபுரி) இன்றைய நகரங்களின் சமூக அப்பு புதிய ஏற்பாட்டு காலத்தைப் போலவே ஒத்திருந்தது. வீட்டு சபைகள் எங்கு சித்திரவதை பலம் மிகுந்து இருக்கின்றதோ அங்கு (சித்திரவதையின் மிரட்டல்) அவைகள் உயிர் தப்பி பிழைத்தனர். இதற்கு சீனா ஒரு பெரிய உதாரணமாகும். இதற்கான முக்கியமான திறவுகோல் காரணமாவது ஒப்படைப்பும் ஐக்கியமும் மத்திய மட்டத்தில் நேரிடுவதுதான். அது தான் குடும்ப வீட்டு அலகுத் திட்டமாகும்.

நகரத் திருச்சபை - ஒரு சொல் பொருள் விளக்கம்

கொண்டாட்ட கேந்திரம்:

ஒரு கொண்டாட்ட கேந்திரமாவது வீட்டு சபைகள் (HC), வீட்டுக் குழுக்கள் (HG), பிரசங்கிக்கும் மையங்கள் (PP) ஜெப செல் குழுக்கள் ஆகியவை புதிய வருகையாளர்களோடும் தங்களை ஒப்படைப்புச் செய்யாத அங்கத்தினர்களும் வாராந்திர கூடுகைகளுக்கு மெய்யாகவே வருகை தர முடியாதவர்களும் அந்த கேந்திரங்களில் ஒன்று கூடி வருவதாகும். இந்தக் கூட்டம் வழக்கமாக ஒரு வாடகைக்கு எடுக்கப்பட்ட மண்டபத்திலோ அல்லது திரைப்பட விழாக் கூடங்களிலோ ஞாயிற்றுக் கிழமைகளில் வசதியான நேரத்தில் கூடி வருவதாகும்.

ஒரு கொண்டாட்ட கேந்திரத்தில் குறைந்தது 5 வீட்டு சபைக் குழுக்களோ அல்லது 35 அங்கத்தினர்களோ ஒன்று கூடி பின்வருபனவற்றிற்காக ஒன்றுபடுவார்கள்:

1. துதியும் வரங்களோடு கிரியை செய்யும் ஆராதனையும்
2. சாட்சிகள்
3. பிரசங்கம், வார்த்தையைப் போதித்தல்
4. அப்பம் பிட்குதல்
5. தசம பாகங்களும் காணிக்கைகளும் சேகரித்தல்
6. ஜெபமும் மக்களுக்கு ஊழியமும்

இங்கே தான் ஆராதனைக் குழு, மூப்பர்கள், தலைவர்கள் ஆகியோர் தங்கள் ஜீவியத்தினால் தேவனால் கொடுக்கப்பட்ட அழைப்புக்கு முழுவதுமாக நிறைவுடன் ஊழியம் செய்கிறார்கள். இங்கே தான் புதிதாக வருகிறவர்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டு பெரியதோர் கூடுகையில் அவர்களுக்காக ஊழியம் நிறைவேற்றப்படுகிறது. இந்த கூடிவரும் சபையும் புதிய ஊழியர்களை அடையாளங்கண்டு கொள்ளவும் ஊழியம் செய்யக்கூடிய ஓர் இடமாகவும் பயன்படுகிறது.

வீட்டு சபையும் கிராமத்து சபையும்:

(உறவுத் தொடர்புகள், அன்பு கூறுதல், கரிசனை காட்டுதல், பகிர்ந்து கொள்ளுதல், ஒருவருக்கொருவருக்காக ஜெபித்தல்)

குறைந்தது இரண்டு குடும்பங்கள் வீட்டு சபைத் தலைவருடன் ஒன்றாகக் கூடி வரும் இடம் ஆகும். 15 அல்லது 15க்கு மேற்பட்ட வயதினரான குறைந்த அளவாக 7 பேரைக் கொண்ட கூட்டமாக இருக்க வேண்டும். இந்த வீட்டு சபையானது பரிமாணத்தில் 20க்கு அதிகமாக அங்கத்தினர்கள் இருப்பார்களானால் பிரிக்கப்பட வேண்டும். இந்த வீட்டு சபை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஓர் இடத்தில் வாரம் ஒரு முறை கூடி வந்து சந்தித்தும், புதிய அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும்படியாக திறந்ததாகவும் இருக்க வேண்டும்.

இந்த வீட்டு சபையின் நடவடிக்கையில் பின்வருபவையும் அடங்கும்:

1. துதியும், வரங்களோடு கிரியை செய்யும் ஆராதனையும்
2. ஜெபம்
3. சாட்சிகள்
4. பிரசங்கம் / வார்த்தையை போதித்தல் - ஒழுங்கான நடைமுறை
5. அப்பம் பிட்குதல்
6. தசமபாகம் காணிக்கை சேகரித்தல்

ஒவ்வொரு வீட்டு சபையும் தனக்கென்று உரியதோர் வெளியே சென்றடையும் சுவிசேஷ அறிவிப்பும்/ அதைப் பின் தொடரும் கிரியைகளும் மற்றும் தொடர்புள்ள செயல்பாடுகளும் அதுவும் ஸ்தல திருச்சபையினுடைய தரிசனத்திற்கு உட்பட்டு நடைபெறுவதாகும்.

இந்த வீட்டு சபை சாதாரணமாக சுமார் 1 1/2 மணி நேரம் நடத்தப் பட வேண்டும்.

வீட்டுக் குழு:

இந்தக் குழுவில் உள்ள மக்கள் ஸ்தல திருச்சபைக்கு ஒப்படைப்பு செய்யாதவர்களாக இருக்கலாம். ஆனால் தேவனைத் தேடுவதிலும் அவரைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்வதிலும் ஆர்வம் உள்ளவர்கள். இங்கே தான் கிறிஸ்தவன் நடக்கும் முறை / ஜீவியம் / அனுபவம் ஆகியவற்றிற்கு ஆன அஸ்திபாரத்தின் மீது அடிப்படையான போதனைத் தரப்படுகிறது. இந்தக் குழு ஸ்தல திருச்சபைக்கு ஒப்படைப்பு செய்தவர்களாக ஆகக் கூடிய மூல சக்திகளைப் பெற்றிருந்து காலப் போக்கில் வீட்டு சபையாக உருவாகக் கூடும். இந்த வீட்டு குழு வாரம் ஒரு முறை கூடி வந்து கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கும்படி வருகிறவர்களோடு அவர்களையும் சேர்த்துக் கூடி வர வேண்டும். இது ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் இடத்திலும் நடைபெற வேண்டும்.

வீட்டுக் குழுவின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருக்கலாம்:

1. துதியும் ஆராதனை கிரியை செய்யும் வரங்களோடு
2. ஜெபம்
3. சாட்சிகள்
4. பிரசங்கமும் / வார்த்தையைப் போதித்தலும்
5. இந்த வீட்டு குழு கூடுகை சுமார் 1 1/2 மணி நேரம் நடத்தலாம்.

இந்த வீட்டுக் குழுக்களின் நோக்கமாவது முதிர்ச்சி பெற்று வீட்டு சபைகளாக வளர வேண்டும்.

பிரசங்கக் கேந்திரம்: ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்பதற்காக மாத்திரமே கூடி வரும் இடமாகும். இந்த இடத்தில் தான் சுவிசேஷகர்களும், ஊழியர்களும் ஊழியம் செய்வதற்கு முழுமையான சந்தர்ப்பத்தைப் பெறுகிறார்கள். இந்த மாதிரி இடத்தில்தான் வசனத்தை பிரசங்கித்த பிறகு அடையாளங்கள் தொடர்வதும் மேலும் அநேகர் கர்த்தரிடம் திரும்புவார்கள்.

இந்த கூட்டத்தில் நடைபெறுபவை:

1. துதியும் ஆராதனை விசேஷித்த பாடல்களும் / இசையும்
2. சாட்சிகள்
3. சுவிசேஷகத்தைப் பிரசங்கித்து இரட்சிப்புக்கு நடத்துதல்
4. வியாதியஸ்தர்களுக்காகவும் மக்களுடைய தேவைகளுக்காகவும் ஜெபித்தல்
5. பின் தொடர்ந்து ஊழியத்திற்கான தொடர்புகளின் பெயர்களையும் விலாசங்களையும் கவனமாகக் குறித்து வைத்துக் கொள்ளுதல்

இந்தக் கூடுகைகள் வாரந்தர அடிப்படையில் செயல்பட்டு வீட்டுக் குழுக்கள் ஆரம்பிக்க வழியைத் திறக்கவும் பயன்படும்.

ஜெபக் குழுக்கள்:

இது தங்களை அர்ப்பணித்துக் கொண்ட விசுவாசிகள் அடங்கிய குழுவாகும். இவர்கள் வசதியானதோர் நேரத்திலும் இடத்திலும் ஜெபிக்குமாறு கூடி வருவார்கள். இந்தக் குழுவில் திருச்சபைக்கும், தனி நபர்களுக்காகவும் குறிப்பிட்ட தேவைகளுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும். இதன் அங்கத்தினர்கள், சாதாரணமாக ஓர் சிறந்த மன்றாட்டு பாரத்தை உடையவர்களாகவும் ஆவிக்குரிய போரில் கைதேர்ந்தவர்களாக இருப்பார்கள். இது குறைந்தது இரண்டு பேரைக் கொண்டதாயும், மிக அதிகமாக பத்து அங்கத்தினர்களை உடையதாயும் இருக்கலாம்.

தசம பாகங்களையும் காணிக்கைகளையும் கணக்கு வைக்கும் நடைமுறைகள்:

a) வீட்டு சபை தலைவர் ஒவ்வொரு வாரமும் வீட்டு சபைக் கூட்டத்தில் காணிக்கை சேகரிப்பார்கள். இந்த படைப்புகளில் தசமபாகமும் காணிக்கையுமாகிய இரண்டும் அடங்கும்.

b) அந்தக் கூட்டம் முடிவில் இரண்டு அங்கத்தினர்கள் (வீட்டுச் சபைத் தலைவரைத் தவிர மற்றொருவர்) பணத்தை கணக்கிட்டு பதிவு செய்வார். (1+2) நகல்கள் அதாவது அதற்கான பிரத்தியேகமான பாரத்தில் பதிந்து அதில் தமது கையொப்பத்தை இடுவார். அந்தத் தொகையை பாரத்தின் ஒரு நகலோடு ஒரு கூட்டில் வைத்து முத்திரையிடப்படும். மற்ற இரு நகல்களும் அந்த பாரத்தின் வெளிப்புறத்தில் பின்னால் குத்தி இணைக்கப்படும். இந்த முத்திரையிடப்பட்ட கூடு வீட்டு சபைத் தலைவர் வசம் ஒப்புவிக்கப்படும்.

c) அந்த வீட்டு சபைத் தலைவர் அந்த பாரத்தின் ஒரு நகலை எடுத்துக் கொண்டு தனது பின் பார்வைக்காக கோப்பில் இணைத்துக் கொள்வார். இந்த கோப்பு அவரால் நடைமுறையில் வைத்துக் கொள்ளப்படும்.

d) வீட்டு சபைத் தலைவர் அந்தக் கூட்டை ஒரு நகலுடன் பாதுகாப்பாக ஓர் இடத்தில் அடுத்து வரும் ஞாயிறு வரை வைத்திருப்பார்.

e) வீட்டு சபைத் தலைவர் அந்தக் கூட்டை வெளிப்புறத்தில் இணைக்கப்பட்ட பாரத்தின் ஒரு நகலோடு அந்த ஞாயிற்றுக் கிழமையன்று கொண்டாட்ட ஆராதனை முடிந்த பிறகு மண்டலத் தலைவரிடம் ஒப்புவிப்பார்.

பிறகு:

a) அந்த ஞாயிறு கொண்டாட்ட ஆராதனையில் மண்டலத் தலைவர் படைப்பு அடங்கிய கூடுகளைத் தமக்கு அறிக்கை தரும் வீட்டு சபைத் தலைவர்களிடமிருந்து சேகரித்து வைத்திருப்பார். (இது ஒரு நல்ல சமய சந்தர்ப்பமாக வீட்டு சபைகளில் என்ன நடந்தது என்பது பற்றிய சுருக்கத்தை துரிதமாகப் பெற்றுக் கொள்ள உதவும்)

b) மண்டலத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட கூடு தன் வீட்டுக்கு எடுத்துப் போய் அதன் மேல் வெளியில் இணைக்கப்பட்ட பாரத்து நகலைப் பிரித்தெடுத்து தமது கோப்பில் சேர்த்துக் கொள்வார்.

c) பிறகு அவர் ஒவ்வொரு கூட்டையும் தனித்தனியாகத் திறந்து கூட்டினுள்ளே வைக்கப்பட்ட பணமும் அந்தக் கூட்டுக்குள் வைத்த பாரத்தில் குறித்து வைத்த பணமும் ஒன்று போல் இருக்கிறதா என்று சரிபார்ப்பார்.

d) பிறகு "சரிபார்க்கப்பட்டது" என்று எழுதி பாரத்தில் கையெழுத்திட்டு அந்தத் தொகை சரியாக பாரத்தில் பதிவு செய்யப்பட்டது என்று அதைச் சான்றிடுவார்.

e) பிறகு ஒரு புதிய பாரத்தில் தன்னிடம் வீட்டு சபைகளால் சேகரித்து அறிக்கை செய்யப்பட்ட தொகையை மொத்தமாக எழுத்தில் பதிவு செய்வார். அதன் மேல் கையெழுத்திட்டு அந்த பணத்தையும் தன்னால் பதிவு செய்து நிரப்பிய பாரத்தையும் வீட்டு சபைகளில் நிரப்பி எழுதப்பட்ட பாரங்களின் ஒவ்வொரு நகலோடும் ஒரு பெரிய கூட்டினுள் வைத்து முத்திரை இடுவார்.

f) இந்த மண்டலத் தலைவர் சேமித்து வைத்த பணத்தையுடைய பெரிய கூட்டை அது தன் வசம் இருக்கும் பொழுது பாதுகாப்பாக இருக்கும்படி உறுதி செய்ய வேண்டும்.

g) இந்த பெரிய கூட்டை திருச்சபை கணக்கரிடம் வரும் திங்கள் கிழமை மாலையில் தலைவர்களின் கூட்டத்தின்போது ஒப்புவித்து அதற்கென்று தான் அந்த பெரிய கூட்டைப் பெற்றுக் கொண்டதாக கணக்கர் ஒப்புக்கொள்ளும் ரசீது ஒன்றைத் தருவார். இதை மண்டலத் தலைவர் கணக்கரிடமிருந்து பெற்றுக் கொள்வார்.

தசமபாகங்கள், காணிக்கை படைப்புகள் சேகரிப்புப் புத்தகச் சீட்டு

வீட்டு சபையின் பெயர்: _____

_____

வீட்டு சபைத் தலைவர் பெயர்: _____

மண்டலத் தலைவர் (அ) போதகர் பெயர்: _____

தேதி: _____

<u>தசமபாகம்</u>

காசோலைகள்: _____

கரன்ஸி நோட்டுகள்:

1000 _____

500

100 _____

50 _____

20

10 _____

நாணயங்கள் _____

மொத்தம்: _____

<u>காணிக்கைகள்</u>

காசோலைகள்: _____

கரன்ஸி நோட்டுகள்:

1000 _____

500

100 _____

50 _____

20

10 _____

நாணயங்கள் _____

மொத்தம்: _____

_____

தசமபாகங்கள் காணிக்கைகள் மொத்தம்: _____

அசல் மொத்தம் வார்த்தைகளில்: _____

காணிக்கைகளை எண்ணி வைத்த வீட்டு சபைத் தலைவர்கள்:

I) _____ II) _____

மண்டலத் தலைவர் / போதகர் கையொப்பம்: _____
(ஒரே ஒரு சிறப்பு நகல்)

<u>வீட்டு சபை ஆராதனை ஒழுங்கு:</u>

1.	துதியும் ஆராதனையும்	- 20 நிமிடங்கள்
2.	ஆவியின் வரங்களும் அதன் பிரதி கிரியைகளும்	- 5 நிமிடங்கள்
3.	சாட்சிகள்	- 10 நிமிடங்கள்
4.	அப்பம் பிட்குதல்	- 10 நிமிடங்கள்
5.	தேவனுடைய வார்த்தை	- 20 நிமிடங்கள்
6.	தசமபாகங்களும் காணிக்கைகளும்	- 5 நிமிடங்கள்
7.	ஜெபமும் விண்ணப்பமும்	- 10 நிமிடங்கள்
8.	அறிக்கைகளும் ஐக்கியமும்	- 10 நிமிடங்கள்
	மொத்த நேரம்	- 90 நிமிடங்கள்

வீட்டு சபை பதிவு அறிக்கை

பகுதி : தெற்கு	விஸ்தீர்ணம் :	மண்டலம் :	தேதி:
வீட்டு சபை தலைவர் விவரங்கள்	வீட்டு சபை விவரங்கள்	தரிசனம் விவரங்கள்	
பெயர்: விலாசம்: தொ/பே:	ஆரம்பித்த நாள்: கூட்டப்பட்ட தேதி: கூட்டத்து நேரம்: பாஷை: இடம்: தொ/பே:	உதவி வீட்டு சபை தலைவர் பெயர்: பெருக்கம் அடையும் நாள்:	

ஒழுங்காக வரும் அங்கத்தினர் முழுப் பெயர்	தொழில்	பாலினம் ஆ/பெ	திருமண அந்தஸ்து * 1	பிறந்த தேதி	மறுபடி பிறந்த தேதி * 2	சேர்ந்த மாதம்	வருகை R / I * 3	ஞானஸ்-நானம் பெற்ற நாள்
1								
2								
3								
4								
5								
6								
7								
8								
9								
10								
11								
12								
13								
14								
15								
16								
17								
18								

குறிப்பு:- *1: S தனியாள் M திருமணமானவர்

*2: மறுபடி பிறந்த நாள்

*3: R ஒழுங்கான வருகை (75% (அ) அதற்கு அதிகமாக) I ஒழுங்கற்ற வருகை

வீட்டு சபை மாதாந்திர அறிக்கை

நிர்வாக பகுதி:	பரப்பு:	மண்டலம்:	மாத அறிக்கை:
வீட்டு சபை தலைவர் பெயர் :			
பதிவு அறிக்கையில் அங்கத்தினர் எண்ணிக்கை :			

வீட்டு சபை ஊழியங்கள் விவரங்கள் - மாதம்	வாரம் I	வாரம் II	வாரம் III	வாரம் IV	வாரம் V
	தேதி	தேதி	தேதி	தேதி	தேதி
துதியும் ஆராதனையும்					
சாட்சிகள்					
அப்பமும் - ரசமும் (வ/எ)					
தசமபாகம் - காணிக்கை (வ/எ)					
குழு கூட்டு ஜெபம் (வ/எ)					
வீட்டு ஊழிய ஆராதனை (வ/எ)					
தேவனுடைய வார்த்தை ஊழியம் (வ/எ)					
கற்றுக் கொடுத்த பாடம்					
கிருபையில் வளரும் பாடங்கள் எண்					
பிற குறிப்புகள்					
ஒழுங்காக வருகை தரும் அங்கத்தினர் எண்ணிக்கை					
முதல் தடவையாக வருகை தரும் பார்வையாளர்கள் எண்ணிக்கை					
பின்னர் தொடர்ந்த சந்திப்புகள் - எண்ணிக்கை					

பின் குறிப்பு: தயவு செய்து உங்களது வீட்டு சபை அங்கத்தினர்கள் பெயர் பெயராகச் சொல்லி தினந்தோறும் ஜெபிக்கவும்

வீட்டு சபைகளும் - அவற்றை எப்படி ஸ்தாபிப்பது என்பதும்

வீட்டு சபைகளானவை அவைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே கிறிஸ்தவ சமுதாயத்திற்கு மையக் கருவாகவே செயல்பட்டு வந்தது. திருச் சபைக்கு ஆண்டவரான கர்த்தர் அந்த மாதிரியான வழியாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இருந்தார். அது மாறாக மற்றொரு மாதிரியாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்பியிருந்தால் அதன் ஜீவிய முறையை வேறு விதமாக வடிவமைத்திருப்பார். அவருடைய கலாச்சாரத்தில் மக்களை விசாலமான அறைகளில் அல்லாது விசேஷமாகக் கட்டப்பட்ட கலையரங்கங்களில் கூட்டிச் சேர்க்கும் அநேக நிறுவனங்கள் இருந்தன. கூட்டுறவு அமைப்புகள் தங்களுக்குச் சொந்தமானதும் கம்பீரமானதுமான கட்டடங்களைப் பெற்றிருந்தன. கிராம புறங்களில் ஜெப ஆலயங்கள் பல பரம்பரையான காலங்களாக நிரம்பவும் காணப்பட்டன். அங்கே அங்கத்தினர்கள் அடையாளங் காட்டப்படக் கூடாத பெரிய கூட்டங்களாக சேர்க்கப்பட்டனர். புற ஜாதியாருடைய கோவில்களும் சாதாரணமாகவே நிரம்பவும் இருந்தன. என்னவென்றாலும் இயேசு திருச்சபையானது வீடுகளில் கூட்டப்படும் படியாக வடிவமைத்தார். அவருடைய சொந்த சீஷர்கள் கூட அவருடன் ஒரு இல்ல அமைப்புத் திட்டத்தில் ஒன்றாகக் கூடி வந்து அவர் தன்னுடைய கடைசி போஜனத்தைப் பகிர்ந்து கொண்டபொழுது அவருடன் சேர்ந்து அதை ஆசரித்தனர்.

இயேசுவானவரது வீட்டு ஊழியத் திட்டம்

இயேசுவின் ஊழியத்தின் பொழுது அவர் சமானியமான கட்டடங்களில் அல்ல வீடுகளில் இருந்தே செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் அடிக்கடி தமது சீஷர்களுக்கு வீடுகளிலே போதித்து வந்தார். (மாற்கு 2:1; 7:14-27; 9:33; 10:2-12; மத் 13:36) அவரை நாம் அடிக்கடி பிறரது இல்லங்களில் பார்க்கிறோம். அதாவது பேதுரு, மத்தேயு ஒரு அதிபதி, குஷ்டரோகியான சீமோன், சீமோனும் அந்திரேயாவும், லேவி என்ற பரிசேயன், யாவீரு, சகேயு, மார்த்தாள் ஆகியோரும் அதில் இடம் பெறுவர். அவர் வீட்டு மேலறையை தமது "விருந்தினர் அறை" என்றே குறிப்பிட்டார். (மாற்கு 14:14)

மனுஷி குமாரனுக்குத் தலை சாய்க்க இடமில்லாமல் இருந்த போதுங்கூட மாற்கு 10:29-30 வசனங்களில் "என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் வீட்டையாவது. சகோதரரையாவது சகோதரிகளையாவது, தாயையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும் இம்மையிலே துன்பங்களோடுங்கூட நூறத்தனையாக மறுமையிலே அடைவான்" (வீடுகள் சகோதரர்கள், சகோதரிகள், தாய்மார், பிள்ளைகள், நிலங்கள்) அனைத்தையும் அடைவான் என்று போதித்தார். அவருடன் பிரயாணம் செய்த ஊழியக் காரர்கள் அதை வாக்கு முறையாக எடுத்துக் கொண்டனர். அவர்கள் எங்கு சென்றாலும் வீடுகளிலே குடும்பத்தினருடன் சேர்ந்தே வசித்தார்கள். மெய்யாகவே வீடுகளில் வசிப்பது என்றாலே மக்களைத் தங்களுடைய சொந்த விசுவாசத்திற்குள் கொண்டு வரும் யூகமான உத்தியாகும். லூக்கா 10ம் அதிகாரத்தில் இயேசு தமது எழுபது சீஷர்களுக்கும் பெரேயாவில் போய் அங்கு வீட்டுக்குள் பிரவேசித்து அங்கு வசித்த எல்லோருக்கும் சமாதானத்தைக் கூறும்படியாகக் கட்டளை கொடுத்து அனுப்பினார். அங்கு ஒரு சாமாதானத்தின் மனிதன் இருந்தால் (சாமானத்தை வாஞ்சிக்கும் ஒரு நபர் இருந்தால்) அங்கே அவர்கள் தங்கி தங்களுக்கு முன்பாக உணவாக வைக்கப்பட்டதைப் புசித்து பானம் பண்ணி வந்தார்கள். இந்த மாதிரியான வழியில் ஒரு குடும்பத்தினரை இயேசுவுக்காக இரட்சிப்புக்குள் நடத்தப்படும். ஆகவே அங்கு மற்றொரு வீட்டு சபை ஒன்று உருவாகும்.

யோப்பா பட்டணத்தில் சீமோன் வீட்டில் தங்கி இருந்தபொழுது பேதுருவுக்கு தரிசனம் வந்தது. அவனுடன் அனனியாவும் சேர்ந்து ஜெபித்தபொழுது யூதாவுடைய வீட்டில் இரட்சிப்பு வந்தது. யோவானுடைய தாயாகிய மரியாளுடைய வீட்டிலே கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி ஜெபித்தனர். நாம் அவரை (பேதுருவை) எங்கெல்லாம் ஊழியம் செய்தாரோ யாசோனுடைய வீட்டையும் சேர்த்தே அவ்வாறு செய்தார். அவன் அந்த வீட்டுத் தலைவனாக விருந்தளிப்பவனாக இருந்தாலும் அவன் (பேதுரு) சிறையில் அடைக்கப்பட்ட பொழுது அவனுக்காக ஜாமீன் பணத்தையும் செலுத்து வேண்டியதாய் இருந்தது. லீதியாளின் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட்ட பிறகு அவளுடைய வீட்டில் வசித்தான். அந்த சிறைச் சாலை அதிபதியின் வீட்டார் அனைவரும் தேவனை விசுவாசிக்கும்படியாக வந்து விட்ட பின்னர் அவர்களுடைய வீட்டிலும் போஜனம் பண்ணினான். அந்த அப்போஸ்தலனை உபசரித்து வரவேற்ற மற்றும் அநேகர் உண்டு. அவர்களில் திதியூ,, யுஸ்து, கிரிஸ்பு, பிலிப்பு,

காயு, ஆக்கில்லா. பிரிஸ்கில்லா ஆகியோரும் உண்டு. ஆதித் திருச்சபை வீடுகளில் உருவாக்கப்படுவதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. இந்த மாதிரியான இடத்தில் தான் பண்பாடுகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. ஒரு பக்கமும் சாராத நடுநிலைமையிலுள்ள கட்டடங்களில் தான் செய்திகளை அனுப்புவதற்கு சாத்தியமாகக் கூடும். ஆனால் ஒரு சில பண்புகளே ஆங்கு வேர் கொண்டு நாட்டப்பட முடியும். பண்பாட்டுத் திட்டங்கள் ஒரு வீட்டில் ஒன்று சேர்ந்து வசிப்பதால் அங்கு ஆழமாக பதித்து விட முடியும். ஜீவியமானது முதியவர் இளைஞர்களோடும், பலம் உள்ளவர்கள் பலவீனமானவர்களோடும் ஞானிகள் முட்டாள்களோடும் பகிர்ந்து கொள்ளும்பொழுது நமக்குள் ஏதோ ஒன்று ஆழத்திலிருந்து வீறு கொண்டு எழுச்சி அடையச் செய்கிறது. வீட்டுக் குழுக்களுக்குள் எல்லோரும் பங்கெடுத்துக் கொண்டனர். மேலும் எல்லோரும் பிறரது பண்பாட்டு தாக்கத்தால் கிறிஸ்து அவர்களுக்குள் ஜீவித்தது போல பாதிக்கப்பட்டனர்.

வீட்டுக் குழுக்களின் தாக்கம் (பாதிப்பு)

வீட்டுக் குழுக்களாக கூடி வந்த முதல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையானது மிகுந்த வல்லமை வாய்ந்ததாய் இருந்தபடியால் நாடோறும் இரட்சிக்கப்படுதல் நடந்தேறி வந்தது. வீட்டுக் குழுக்களில் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த முழுமையான ஈடுபாடு வெளியில் உள்ளவர்களை அபரிமிதமாக ஆட்கொண்டது. "எல்லோரும் தீர்க்கதரிசனம் சொல்லுகையில் அவிசுவாசியொருவன் அல்லது கல்லாத ஒருவன் உள்ளே பிரவேசித்தால் அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டுமிருப்பான். அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும். அவன் முகங்குப்புற விழுந்து, தேவனைப் பணிந்து கொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்" (I கொரி 14:24-25) இதைத் தான் "சுவிசேஷ பிரபல்யத்து சரீரத்து ஜீவன்" என்று சொல்லலாம். இயேசுவின் ஜீவியத்தைப் பற்றிய எளிய சாட்சியானது அவருடைய சரீரத்தில் (திருச்சபையில்) வல்லமையோடும் மெய்யாகவும் பிரவாகித்து ஓடுவதைக் கண்கூடாகப் பார்க்கும்பொழுது சத்தியத்தில் நம்பிக்கையில்லாமல் அதிகமாய் கடினபட்டவனைக் கூட அவரைக் கர்த்தர் என்று அறிக்கை செய்யும்படியான காரணமாகி விடுகிறது.

ஆதித் திருச்சபை நிபுணர்கள் ஒருவருமில்லை. அப்போஸ்தலருடைய உபதேசத்தைவிட தலைமைத்துவத்தை எந்த பெரிய அளவிலும் வற்புறுத்தவில்லை. அருகாமையில் உள்ளவர்களால் மட்டுமே தேவை எழும்பும் பொழுது தேவை - விவரங்கள் அவர்களால் கையாளப்பட்டு வந்தது.

நமது கர்த்தருக்கு ஆவிக்குரிய வளர்ச்சியில் இரு காரணிகள் இருக்கிறதென்று நன்கு அறிவார். ஒன்று அவரது வல்லமையைப் பெற்றுக் கொள்வது மற்றொன்று அதற்கு வாய்க் காலாக அமைந்து விடுவதாகும். பூரணத்துவம் அல்லது முதிர்ச்சி என்பது இந்த இரண்டும் அனுபவிக்கப்பட்டு, தூண்டி எழுப்பப்படும்பொழுது மட்டுமே நேரிடுவதாகும். வீட்டுச் சபைகளில் மிகச் சிறந்த மனிதர்களாக ஸ்தீரிகளாக விளங்கியவர்கள் ஊழியஞ் செய்தவர்களேயன்றி வழி நடத்திச் சென்றவர்கள் அல்ல. ஒவ்வொரு வீட்டு குடும்பத்திற்கும் எல்லோராலும் மதித்து கனம் பெற்ற வரும் கீழ்படியப்பட்டவருமான ஒரு தகப்பன் இருக்கிறார். அதே சமயத்தில் ஒரு நல்ல தகப்பன் குடும்பத்தில் உள்ள எல்லோரையும் முன்னேற்றம் அடையும்படியாக உற்சாகப்படுத்துவார். அவர் அந்த வீட்டுக் குடும்பத்திற்கு ஏதேச்சாதிகாரியாக இருக்க மட்டார். புதிய ஏற்பாட்டு சகாப்தத்தின் கடைசியில் தான் ஒரு சமானியமான சர்வாதிகாரியை உடைய வீட்டு சபையைப் பார்க்கிறோம். அவனை யோவான் நன்றாகக் கண்டித்தார். (II யோவான் 9-11) மற்றவர்கள் மேல் ஒரு நபருடைய ஆளுகையான அதிகாரம் வளர்ச்சியின் அளவைக் குறைத்து மட்டுப்படுத்துகிறது. இந்த விதமான போக்கு ஆதித் திருச்சபையில் அனுமதிக்கப் படவில்லை. பக்தி வழிபாடுகள் பொதுவாக அதன் அங்கத்தினர்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது என்பதை உணர்ந்து அறிந்து கொள்வது முக்கியமாகும். ஆனால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அதன் ஒவ்வொரு அங்கத்தினர்களும் ஜீவியத்தில் முழுமையான பரிபூரணத்தில் வளர்ச்சி அடைவதைக் காணும்படியாக வாஞ்சிக்கிறது.

இந்த வீட்டுக் குழுக்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று சுதந்திரமாக இருக்க வில்லை. அவைகள் வலைப் பின்னலால் உண்டாக்கப்பட்ட முதலாம் மணி நேரத்திலிருந்து ஒன்றாக ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. இந்த அகன்ற நகரத்துக் கூட்டமைப்பு ஆனது இந்த வீட்டு சபைகள் ஒன்றாக இணைத்து சேர்க்கப்பட்டு ஸ்தலத் திருச்சபையாக உருவாக்கப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இரண்டு சமயங்களில் "கொரிந்து பட்டணத்திலே இருக்கிற தேவனுடைய சபை" (I கொரி 1:2;

II கொரி 1:1) என்று குறிப்பிடுகிறார். இதனால் அங்கே விசுவாசிகள் எல்லோருக்கும் இடையே ஒரு பொதுவான உறவுத் தொடர்பு இருந்தது என்று சுட்டிக் காட்டுகிறார். மறுபடியும் "தெசலோனிக்கேயர் சபை" என்று சொல்லுகிறார் (I தெச 1:1; II தெச 1:1) மேலும் ரோமர் 16:23ல் "சபையனைத்தையும்" என்று குறிப்பிடுகிறார். I கொரி 1:1ல் நகரத்து அகன்ற வீட்டுக் குழுக்களின் அன்பின் விருந்துக்காக கூடி வரும்பொழுது அன்புக் குறைபாடு என்ற அவதூறு உண்டாக்கப்பட்டது. அப் 20:6-12ல் பவுலுடைய வருகையானது துரோவா பட்டணத்தில் எல்லா வீட்டுக் குழுக்களும் ஏகோபித்து ஒன்றாகக் கூடி அப்பம் பிட்கவும் அப்போஸ்தலனுடைய போதகத்தைக் கேட்கவும் வசதிப்படுமாறு நேரிட்டது.

திருச்சபை வேலைக்காரர்கள்

அந்த இயக்கம் முன்னேற்றம் அடைந்த பொழுது இந்த வீட்டுக் குழுக்களிலிருந்தே அந்த ஊழியத்தின் பணிக்காக பரிசுத்தவான்களைக் கட்டி எழுப்புகிறவர்கள் அந்தக் குழுக்களிலிருந்தே தோன்றினார்கள். எபேசியர் 4:11-12ல் குறிப்பாகச் சொல்லுகிறது என்னவென்றால் கிறிஸ்து தாமே சிலரை அப்போஸ்தலராகவும் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் சிலரை சுவிசேஷகர்களாகவும் சிலரை மேய்ப்பர்களாகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். பரிசுத்தவான்கள் சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைவதற்காகவும் என்று குறிப்பிடுகிறது. பவுலோ மற்றும் யாராவது ஒருவரோ இந்த குறிப்பிட்டவர்களில் ஒருவரையாவது நியமனம் செய்ததாக ஒரு போதும் சொல்லப்படவில்லை. இந்த மௌனம் குறிப்பிடப்படத் தக்கதாகும். தங்களைக் கட்டி எழ்பபி தகுதிப் படுத்திய பரிசுத்தவான்கள் பெற்ற தேவனுடைய அபிஷேகத்தைக் காட்டிலும் இந்த மனிதர்கள் தங்களுக்கான பதவிகளையும் பெற்றுக் கொண்டார்கள்.

ஒரு உதவிக்காரன் செய்ய வேண்டிய முதல் வேலையாவது சரீரமாகிய சபையின் நபர்களுக்கு மாற்றித் தர வேண்டிய ஜீவிய முறையை மாதிரியாக அமைக்க வேண்டும். இப்படியாக அப். பவுல் பின் வருகிறவர்களைப் பற்றி அதாவது கண்காணிகள்/மூப்பர்கள் உதவிக்காரர்கள் முதாலானவர்களுடைய கடமைகளை அல்ல நல்லொழுக்கத்தைப் பற்றியே அறிவுறுத்தினார். ஒரு வேளை எவ்வித சந்தேகமும் இன்றி உதவிக்காரர்களுடைய பங்கானது வீட்டுக் குழுவினால் அவர்களிடையே வேலைக்காரனுடைய ஜீவியத்தை மாதிரியாக தனக்காக அமைத்துக் கொண்ட ஒருவருக்கே கொடுக்கப்பட்டதாகும். இந்த மனிதன் (அல்லது ஸ்தீரி கெங்கிரேயா சபையைச் சேர்ந்த பெபேயாளைப் போலவே) எந்த விதமான பணி விவரத்தையும் வேதாகமம் எங்கிலும் தரப்படவில்லை. பாரம்பரியமான ஆளுகை அடுக்கு முறையொன்று பல நூற்றாண்டு காலமாக உருவாக்கப்பட்டதை ஒருவர் புறக்கணித்தால் அந்த பணி குறித்த செயல்பாட்டு விவரங்கள் குறைவாகக் காணப்படுவதற்கான காரணங்கள் தெளிவாக இருக்கின்றன. வீட்டுக் குழுக்கள் சந்தித்து ஒன்று கூடியபொழுது அன்பின் விருந்தில் அவர்கள் பங்கேற்றனர். உதவிக்காரன் என்பவன் சொல் வழக்கில் பந்தி விசாரிப்புக்காரன் என்று பொருள் விளக்கம் பெறுவான். "உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும் தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்" என்று இயேசு சொல்லவில்லையா? இயேசு தாமே கடைசி இரா விருந்தின் போது சீஷர்கள் கால்களைக் கழுவ வில்லையா? ஆகவே வீட்டுக் குழுவில் தேவ மனுஷன் அல்லது ஸ்தீரிக்கு இந்தப் பட்டம் வழங்கப்பட்டது. அவர்கள் மிகுந்த மரியாதையுடன் கர்த்தருடைய இராப் போஜனத்தைக் கொடுக்கும்படியாகவும் ஒரு வேளை மீதியானவர்களுக்கு விருந்து முழுவதையுமே பந்தி விசாரிப்புச் செய்யும்படியாக அனுமதிக்கப்பட்டனர். இந்த உலகத்தில் தற்காலத்திய செல் குழு சபை அமைப்புகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட இந்தப் பணிகளைக் குறித்ததான நடைமுறை விளக்கத்தை நாம் பிரதிபலிக்கக் கூடும். இந்த செல் குழு சபைகள் பொதுவான ஆலயக் கட்டடங்களையே தங்களுடைய கொண்டாட்டங்களுக்காக பகிர்ந்து கொள்கின்றன. ஒவ்வொரு செல் குழுவுக்கும் ஒரு வேலைக்காரன் / ஆன தலைவர் இருக்கிறார். (அவர் அடிக்கடி மண்டலத்து வேலைக்காரன்) என்று அழைக்கப்படுகிறார். அவர் அந்த குழுக்களுக்கு ஆலோசனை கூறி ஊழியத்தில் வழிகாட்டி நடத்துகிறார். ஒவ்வொரு 25 செல்களுக்கும் 5 மண்டல வேலைக்காரருக்கும் ஒரு மேய்ப்பன் இருக்க வேண்டும். 200 அல்லது 300 மக்களைக் கொண்ட இந்த மந்தையை மேய்க்க வேண்டும். (இவர் மண்டல போதகர்) எனப்படுகிறார். இந்த நகரத்து அகன்ற ஸ்தலத் திருச்சபையுடன் இணைந்து ஊழியம் செய்யும்பொழுது வேலைக்காரர் என்று அங்கீகரிக்கப்பட்டவர்கள் எல்லா செல்களுக்கும் வழி காட்டி நடத்துதல், போதித்தல் ஆகியவற்றைச் செய்து கட்டி எழுப்பி செயல்பட வேண்டும். "இதை ஊழியக் குழு" என்று அழைப்பார்கள்.

இது ஒரு விதமான யூகமானதாக இருந்தாலும் பவுல் அப்போஸ்தலனுடைய காலத்தில் அவரால் குறிப்பிடப்பட்ட பதவிகளை அவருடைய நாளைய திருச்சபைகளின் பொதுவான மாதிரி அமைப்பைக் கருத்தில் கொண்டு கரிசனையுடன் அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு பகுதியிலும் வீட்டுக் குழுக்கள் கூட்டமாக ஸ்தல சபைகளாக உருவாகும் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவையாகும். இந்த கருத்து விளக்கத்தில் அதன் பதவிகள் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும்? மேலும் அவைகள் தற்காலத்திய செல் குழு தலைமைத்துவம் அமைக்கப்பட்டிருப்பதற்கு போன்ற வழியைப் போலவே மிக நெருக்கமாக இருந்தாலும் இந்த மாதிரியான உதாரணம் அடுக்காக அமைந்த ஆளுகை அமைப்பில்லாத திருச்சபை ஜீவியத்தின் ஊழியத்தை விளக்கிக் கூறுவதாக இருக்கும்.

இந்த உதவிக்காரன் வீட்டுக்குழுவுக்கு சேவகம் புரிகிறான். மேலும் மூப்பர் என்பவருக்கு வீட்டுக் குழுக்களை முன்னேற்றுவித்தும் பெருக்கம் அடையச் செய்வதிலும் போதுமான அனுபவம் பெற்றிருக்க வேண்டுமானால் அவர் பல வீட்டுக் குழுக்களுக்கான பொறுப்பை ஏற்கும்படி ஆயத்தமாவதற்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் எடுத்துக் கொள்ளப்படும். இப்படித் தான் பவுல் அப்போஸ்தலன் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு திருச்சபைகளுக்கு திரும்பி வந்தபொழுது தீமோத்தேயுவை மூப்பர்கள் என்பவர்களை நியமனஞ் செய்யும்படியாக சரியான முறையில் கட்டளை கொடுத்தார். அப்படி மூப்பர்களாக நியமனஞ் செய்யப்படுகிறவர்கள் அவ்வளவு நீண்ட காலத்திற்குப் பின்னர் எளிதாக அடையாளங் கண்டு கொள்ளப்படுவார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் (நவீன கால சொல் வழக்குப் படி) 'மூத்த போதகர்' என்று ஒருவரும் இருந்ததாக இல்லை. வீட்டுக் குழுக்கள் எண்ணிக்கையில் அதிகரித்துப் பெருக்கம் அடையும் வரைக்கும் இந்த வேலைக்காரருக்கான அவசியமும் இருக்கவில்லை. இந்த மாதிரியான பதவி அமலில் இருக்குமானால் தீமோத்தேயுவுக்கு ஸ்தல திருச்சபையின் உள் விவகாரங்களைக் குறித்து எச்சரிக்கூடிய சுதந்திரம் இருந்திருக்காது. திருச்சபையை நாட்டியவர்கள் பற்றி அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் சொன்னபடி அவர்களால் திருச்சபைகள் தோற்றுவிக்கப்பட்ட பிறகு அதன் விவகாரங்களில் தலையிடுவதற்கு மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்திருக்கிறார்கள்.

மேலும் சில அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மற்றும் உபாத்தியாயர்கள் ஸ்தல திருச்சபைகளுக்கிடையே பயணமாய் கடந்து சென்று வந்ததாக வேதாகமத்திலும், வேதாகமத்திற்கு அப்பாற்பட்ட இரண்டு வகையான சாட்சியங்களும் உண்டு. இந்த பதவிப் பட்டங்கள் திருச்சபை ஜீவியத்திற்குட்பட்ட பதவிகளைக் குறிப்பிடுவதாகும். அவர்கள் திருச்சபைகளைத் தோற்றுவித்தனர். போதித்து கட்டி எழுப்பி அங்கத்தினர்களைத் தகுதிப்படுத்தினர், தெய்வீக வெளிப்பாடுகளை ஒப்படைப்பு செய்தனர். (வேதத்திற்கு) சத்தியத்திற்கு விளக்கங் கூறினர். வீட்டு சபைகளுக்கும் கூடிவரும் ஸ்தல திருச்சபை அமைப்புக்கும் இடையில் தொடர்புகள் இருந்தன. மேலும் திருச்சபைகள் இயங்கி வந்த நகரங்களுக்கு இடையிலும் தொடர்பு இருந்தது.

திருச்சபை நிலைத்து இயங்குவதின் நோக்கம்

திருச்சபையானது இன்றைய நாள் வரையும் இன்னும் வருங்காலத்திலும் இருக்கிறதாய் இருப்பதன் நோக்கம் யாது?

இந்த திருச்சபை இருக்கிறதாய் இருப்பதன் நோக்கமானது அடிப்படையில் நான்கு வகைப்பட்டது. தேவன் சிருஷ்டிப்பையும் இரட்சிப்பையும் திட்டமிட்ட பொழுது ஒரு நித்தியமான நோக்கத்தைத் தம் உள்ளத்தில் கொண்டிருந்தார். அந்த நோக்கமானது கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டது. அது நித்தியமானதோர் நோக்கமாகும். இந்த மகா நோக்கமாவது திருச்சபையாகும். கிறிஸ்துவுக்குள் இருந்த நித்தியமான நோக்கத்தையும் திருச்சபையையும் ஒன்றும் அழித்து விட முடியாது. (எபேசியர் 3ம் அதிகாரம்) "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது." (ரோமர் 8:26-28)

புதிய ஏற்பாட்டுத் திருச்சபை இருக்கிறதாய் இருப்பதன் நான்கு வகையான நோக்கத்தை சற்றுக் கவனிப்போம்.

A. <u>கர்த்தருக்கென்று ஏற்ற ஊழியம்</u>

திருச்சபையானது என்றும் உள்ளதாய் இருப்பதன் சிறப்பான நோக்கமாவது தேவனை மகிமைப்படுத்தவும் அவரை ஆராதிக்கவும் ஆகும். "உம்முடைய சித்தத்தினாலே அவைகள் (சகலமும்) உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது." (வெளி 4:11)

திருச்சபையானது அவரை ஆராதிக்கும் ஜனமாக மீட்கப்பட்டிருக்கிறது. (சங் 29:1-2) அவரை ஆராதிப்பதற்காக மீட்கப்பட்டது. பிறகு அவருக்கு ஊழியஞ் செய்யும்படியாக (மத் 4:10) அது முதலாவதாக மேல் நோக்கியும் பிறகு வெளிப்புறத்தை நோக்கியும் முதலாவதாக தேவனையும் பிறகு மனிதனையும் நோக்கி அழைத்தது. <u>ஆராதனை என்பது ஊழியம் என்பதற்கு எப்பொழுதும் முன்னதாக செய்யப்படுகிறது</u>! இந்த வேதாகமப் பகுதிகளைப் படித்துப் பாருங்கள். (உபாகமம் 4:19; 5:9; 6:13; 8:19; 11:16; 12:32; 17:3; 26:20; 30:17; யோசுவா 24:14-24)

மனிதன் ஆராதனை செய்பவனாக இருக்கும்படியாகச் சிருஷ்டிக்கப்பட்டான். பாவிகள் தேவனை ஆராதிக்க முடியாது. இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே ஆராதிக்க முடியும். ஆராதனை (தொழுதல்) என்பது ஆவியோடும், உண்மையோடும் செய்யப்படவேண்டும். யோவான் 4:20-24 என்ற புதிய ஏற்பாட்டு சிறந்த பகுதி ஆராதனையைக் குறிப்பதாகும். அந்த வார்த்தை 'ஆராதனை' என்பது இங்கே 10 தடவையாகச் சொல்லப்படுகிறது.

யோவானைப் பார்த்து "தொழுது கொள்ளுகிறவர்களை அளந்து பார்" என்று சொல்லப்பட்டது. (வெளி 11:1-2) மீட்கப்பட்டவர்கள் பரிசுத்த ஆவியின் பலத்தாலே ஆராதிக்க வேண்டும். அவருடைய சத்திய வார்த்தையின்படியும் செய்ய வேண்டும். (யோவான் 17:7).

கிறிஸ்தவ தத்துவ வினாவிடைச் சுருக்கம் இந்த கேள்விக்கு விடை அளிக்கிறது. மனிதனுடைய முக்கியமான முடிவு அல்லது அவனுடைய நோக்கம் தான் என்ன? என்பதற்கு "மனிதனுடைய முக்கியமான முடிவான நோக்கமாவது தேவனை மகிமைப்படுத்தவும் அவருக்குள் எப்பொழுதும் களி கூறவுமே" என்று சொல்லிக் கொள்கிறது.

<u>வேதாகமத்தில் "மீட்கப்பட்ட ஜனத்தில் (அ) சமூகத்தில் ஆராதனை" என்ற பொருள் தலைப்பைப் பற்றிய முக்கியமான குறிப்புகளை புறக்கோட்டு வடிவத்தில் கவனிப்போம்.</u>

1. யாரை ஆராதிக்கும்படியாக?

மனிதனுக்கு தனக்கு தானாகவே தேவனை ஆராதிப்பது எங்ஙனம் என்று தெரியாது. அதற்காகவே வெவ்வேறு உருவங்களைப் படைக்கிறான். வழிபாட்டு முறைகளையும் சடங்காச்சாரங்களையும் உண்டாக்குகிறான். பிறகு தேவனைத் தன் வழிபாட்டை ஆசீர்வதிக்கும்படி வேண்டிக் கொள்கிறான். இதனால் வரும் மகா பெரிய ஆபாயமாவது

புறநோக்கு மரபு, இறந்து போன நிலைமை, சோம்பலான சலிப்பு, ஆவியிலுண்டாகும் குறைவான ஜீவன் ஆகியவையாகும். (ஏரேமியா 3:16-17;7:8-16; சங் 63:1-4).

பழைய புதிய ஏற்பாடுகளில் ஆராதிக்கும் முறை அல்லது ஆராதனை ஒழுங்கு என்பது குறிப்பிட்டதோர் முறையில் தரப்படவில்லை. என்னவென்றாலும் பின்வரும் உறுதுணைக் கூறுகள் பழைய புதிய ஏற்பாடுகளில் ஆங்காங்கே சிதறிக் காணக் கிடக்கின்றன. மீட்கப்பட்ட ஜனமானது ஆராதனைக்காகக் கூடி வரும்பொழுது ஒன்றோ அல்லது அதிகமானதோர் ஏதோ ஒன்று அல்லது எல்லா முறைகளுமே குறிப்பிடப்பட்ட எந்த நேரத்திலும் அச்சமயத்தில் கையாளப்படக் கூடும் என்பதைக் காட்டுகிறது.

இதன் சிறப்பு (திறவுகோல்) என்னவென்றால் இது தன்னை எச்சமயத்திலும் பயன்படுவதற்காக வசதியாக வைத்துக் கொள்ளுதல், வளைந்து கொடுக்கும் தன்மை, விரும்பிய வழியில் தன்னை மாற்றி அமைத்துக் கொள்வதும் ஆகும். "ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு" (பிரசங்கி 3:1-11)

"உங்கள் பாரம்பரியத்தைக் கைக் கொள்ளும்படிக்கு தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்குகிறீர்கள்" (மாற்கு 7:1-10) "தேவன் ஆவியாய் இருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" (யோவான் 4:20-24) தேவனை தொழுது உருவ வழிபாடுகள், வரலாற்று சின்னங்கள், அர்ச்சகர்கள், போதகர்கள் அல்லது நமது கொள்கையின்படியான தெய்வத்தை அல்ல ஆனால் "பரிசுத்த" ஆவியானவராகத் தம்மை வேதாகமத்தில் வெளிப்படுத்தும் தேவனைத் தான் மற்ற எந்த விதமான வழிபாடும் விக்கிரக ஆராதனையே!

2. எப்படி ஆராதிப்பது?

யோவான் 4:20-24ல் நாம் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. இதைத் தான் பிதாவாகிய தேவனும் எதிர்பார்க்கிறார்! உலக மெங்கும் முழுவதிலும் (அப்படிப்பட்டதை) எவ்வளவாக, மெய்யாகவே அவர் கண்டு கொள்கிறார். ஆராதனை என்பது கௌரவம், மரியாதை, சிந்தனை, உணர்ச்சி, செயல் ஆகியவற்றில் வழிபாடு செய்வதாகும். இதன் எபிரெய பதமானது "முகங்குப்புற விழுந்து, வழிபாடு செய்து, பயபக்தியால் நிறைந்து, சமய சிந்தனையுடன் சேவித்தல்" என்று பொருள் தரும்.

a. ஆவியில் தொழுது கொள்ளுதல் என்பது பரிசுத்த ஆவியானவர் நம்மீது அசைவாடிக் கொண்டும், பலப்படுத்தியும் நம்முடைய இரட்சிக்கப்பட்ட ஆவியை உயிர்ப்பித்தும் நமது ஆவியான தேவனை ஆராதிக்கும் படி இயக்குவதாகும். உண்மையான ஆராதனை என்பது பரிசுத்த ஆவியினால் தூண்டி எழுப்பப்பட்ட மனிதனுடைய ஆவியின் மூலமாக ஆரம்பிக்கிறது. (யோவான் 3:1-5) சேர்த்து (யோவான் 4:20-24) ஐப் படிக்கவும். ஆவியினால் பிறவாத ஒருவன் ஆவியான தேவனை எப்படி ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள முடியும்? இதைச் செய்வதற்கான வேறு வசதியான வழியே கிடையாது!

b. உண்மையோடு தொழுது கொள்ளுதல் என்பது அவருடைய வார்த்தையில் அவர் சொன்ன வழியில் ஆராதிப்பது. அவருடைய வார்த்தை சத்தியம். எனவே உண்மையோடு ஆராதிப்பது என்பது தேவனுடைய வசனத்தின்படி ஆராதிப்பது.

தேவனுடைய வார்த்தையானது ஆராதனையில் பல்வேறு உணர்வு நிலைகளை குறித்து கொடுக்கிறது. (சங்.149,150). தேவனுடைய துதியை சொல்லுதல், பாடுதல், கைகளை உயாத்துதல் முழங்கால் படியிடுதல், சாஷ்டாங்கமாய் விழுதல், கரங்களைத் தட்டுதல், கரங்களை உயர்த்துதல், அமைதி மற்றும் பல. உண்மையோடு ஆராதிப்பதில் அடங்கியுள்ள பல்வேறு உணர்வுநிலைகளாகும் (எபி.4:15; 12:1; 13:15; 1தீமோ.2:8; சங்.3:3; 19:14; 22:22,25; 28:2; 34:1; 42:5,9; 49:1-3; 63:4,5; 95:6; 121:1; 134:2; 141:1; 143:6; புலம்பல் 3:40,41; ஏசாயா 45:23; லூக்.11:21; 22:41; 24:50; யோவான் 11:41; 17:1).

3. பழைய ஏற்பாட்டு ஆராதனை முறை

பழைய ஏற்பாட்டிலே யார் (அந்த நபர்) எப்படி மற்றும் எப்போது (அந்த நேரம்) மற்றும் எங்கே (அந்த இடம்) என்பதைக் குறித்து நாம் பார்க்கிறோம். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற காரியங்கள் புதிய ஏற்பாட்டு சபையிலே பின்பற்றப்பட வேண்டிய காரியங்களாகும்.

இஸ்ரவேல் "வனாந்திரத்தில் உள்ள சபையாகும்" (அப்.7:38). அவர்கள் மீட்கப்பட்ட சமுதாயமாகும். அவர்கள் புதிய உடன்படிக்கையின் சபைக்கு மாதிரியானவர்கள் (1கொரி.10: 6,11).

a. வாராந்திர ஒய்வு நாள் இளைப்பாறுதலுக்காகவும், ஆராதனைக்காகவும் வேறுபிரிக்கப்பட வேண்டும் (சங்.41:4; 81:1-3; சங்.92யின் தலைப்பு; யாத்.31:12-17; 20:8-11).

b. சுயாதீனமான சூழ்நிலையும், சேகரிப்பும் தேவனுடைய கூடாரத்தில் இடம் பெற வேண்டும் (1சாமு.1,2 அதி. சங்.119:164).

c. வருடத்தின் பண்டிகை காலங்கள் (உபா.16; லேவி.23). அவைகள் மூன்றாகும்.
   i. பஸ்கா பண்டிகை – எகிப்திலிருந்து விடுதலைப் பெற்றதை நினைவுகூர்ந்து பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து கொண்டாடப்பட்ட விடுதலைக் கொண்டாட்டம் (யாத்.12).
   ii. பெந்தெகொஸ்தே பண்டிகை – மக்காச் சோள அறுவடை மற்றும் நியாப்பிரமாணம் கொடுக்கப்பட்ட கொண்டாட்டம் (லேவி.2).
   iii. கூடாரப் பண்டிகை – கனிகளின் அறுவடை, மழை, பாவ நிவாரணம் இவற்றிற்கான கொண்டாட்டம் (லேவி.16:23; சங்.81:3).

d. அவருடைய நாமம் குறிக்கப்பட்டதான இடத்திலே யாவரும் கூடி வந்தார்கள். அதாவது மோசேயின் ஆசாரிப்புக் கூடாரம், தாவீதின் கூடாரம், சாலமோனின் ஆலயம், பலிபீடத்தின் ஜனங்கள் மற்றும் உடன்படிக்கைப் பெட்டியின் ஜனங்கள், கோத்திரப் பிதாக்களின் பலிபீடமும் அடையாளமாக உள்ளது.

4. புதிய ஏற்பாட்டு ஆராதனை முறை

புதிய உடன்படிக்கையின் சமுதாயம், பழைய உடன்படிக்கை சபையின் தத்துவங்களை மாதிரியாகக் கொண்டு பின்பற்ற வேண்டும்.

a. வாரத்தின் முதல் நாள் யாவரும் ஒன்றாக கூடிவர வேண்டும் (அப்.20:8; 1கொரி.16:1). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வாரத்தின் முதல் நாள் நடந்தது (மத்.28:1). பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தாவியானவர் இறங்கியது (அப்.2:1-4). வாரத்தின் முதல் நாள் சீஷர்கள் அப்பம் பிட்டார்கள். (யோ.20 அதிகாரத்துடன் அப.20:28 யை ஒப்பிடுக). காணிக்கை சேகரிப்பு வாரத்தின் முதல் நாளுக்காக தனியாக பிரித்து வைக்கப்பட்டது (1கொரி.16:1).

b. புதிய உடன்படிக்கையின் ஆசாரியர்களாக விசுவாசிகள் தேவனை தனிப்பட்ட முறையில் தேட வேண்டும்.

c. வருடத்தின் பண்டிகை நாட்கள். அதாவது முகாம் கூடுகைகளை விசேஷித்த நேரங்கள் மற்றும் வருடத்தில் ஏற்படும் விசேஷித்த காலங்கள்.

d. நபரும், இடமும் - இயேசு கிறிஸ்து (யோ.1:14-18; 2:19-21), மற்றும் ஸ்தல சபை (மத்.18:20; எபி.10:25; யோ.4:20-24; எசே.11:16; 1பேது.2:5-9; வெளி.1:6:5:9,10).

5. துதி ஆராதனைக்குத் தேவையான பழைய-புதிய ஏற்பாட்டு உறுதுணை ஏதுக்கள்

ஆசாரியக் கூட்டமாகிய சபையின் துதி ஆராதனைக்கான ஒழுங்கு முறைக்குரிய அடிப்படையான உறுதுணை ஏதுக்கள் இந்தக் காரியங்களில் காணக் கிடக்கின்றன. இவைகள் தான் உண்மையோடு ஆராதனை செய்வதற்குரிய என்னவென்பதும் எப்படி என்பதுமான காரியங்களாகும்.

a. இசையுடன் ஆராதனை

கொலோ 3:16; எபேசியர் 5:17-18. இவை தாவீது இராஜாவுடைய ஆசாரிப்பு கூடாரத்தின் ஆராதனை முறையாகும். சங்கீதங்கள், ஞானப்பாட்டுகள், ஆவிக்குரிய பாடல்கள் ஆகியவை. நல்ல இசையோடு கூடிய இராகங்கள், வசனங்கள் ஆகியவை கூடிவரும் சபையில் பாடுவதற்காகும். சங் 100; 150 ஆகியவை சங்கீத வாத்தியங்கள் என்னவென்றாலும் விசுவாசிகளுடைய இசை கருவிகளுக்கு பதிலாக வைப்பதாக இருக்கக் கூடாது. தனிப்பட்டதாகவோ அல்லது குழுவாகக் கூட அல்ல. இசை சங்கீதமானது கர்த்தருக்கு பரிசுத்தவான்களுக்கு, பாவிகளுக்குங்கூட பயன்படுத்தப்படுவதாகும். பாட்டு (அ) இராகத் தலைவருக்கு இந்தப் பகுதியில் கட்டாயமாக ஊழியம் இருக்க வேண்டும்.

b. ஜெபம், நன்றி கூறித் துதித்தல், மன்றாட்டு ஜெபங்கள் (அ) ஏறெடுத்தல்

I தீமோத் 2:1 இராஜாக்களுக்காக, ஆளுநர்களுக்காக, அதிகாரத்திலுள்ள-வர்களுக்காக (தேவனுடைய) அவருடைய வீடு எல்லா ஜனத்துக்கும் ஜெப வீடாக இருக்க வேண்டும். போற்றித் துதித்தல், நன்றி கூறுதல், விண்ணப்பம் துதித்தல் ஆகியவையும் இதில் அடங்கும். (ஏசாயா 56:7; மத் 21:13)

c. தசமபாகங்களும் காணிக்கைகளும்

மல்கியா 2:1 ஆராதனையில் ஒரு செயல்பாடு. அற்பமாய் எண்ணப்படுவதற்காகவோ அல்லது குற்றத்திற்காக மன்னிப்புக் கோருவதற்காகவோ அல்ல.

d. வார்த்தை - போதனை ஊழியம்

சங் 40:9; 138:1-2; உபா 6:3-15; மல்கியா 2:1-7. ஆசாரியர்களும் லேவியரும் வார்த்தையைப் போதிப்பார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக வார்த்தையே பிரதானமானது. அது தான் ஆராதனையின் (சுறுசுறுப்பான) அச்சுப் பொருத்தும் பகுதி போன்றது. அதற்கு முன்னர் செயல்படுகிறவைகளும் பின்னர் தொடர்ந்து நிறைவு பெறுகிறவைகள் அனைத்தும் அச்சுத்துவாரத்திற்கு சக்கரத்தின் கால் பகுதிகளைப் போன்றது. இந்த அச்சுப் பகுதி இல்லாவிட்டால் அந்தக் கூட்டம் பிரிந்து அப்பால் விழுந்து விடும். பிரசங்கித்தல், போதித்தல் வசனத்தைக் கொண்டு உபதேசித்தல் ஆவியின் பட்டயம் முதலானவைகள் தனித்துப் பிரிக்க முடியும். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இந்த ஊழியத்திற்கான பெயரைக் குறித்து கவனிக்கவும்.

e. சபை அங்கத்தினர்களுக்கான ஊழியம்

I கொரி 12-13-14. சாட்சிகள், பகிர்ந்து கொள்ளுதல், நிகழ்ச்சிகள், உபதேசம், வேதபாடம் வாசித்தல் முதலியன. (I கொரி 14:26)

f. குணச்சித்திரத்திற்கான வரங்கள்

ஆவியின் வரங்கள் சாட்சியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். (I கொரி 12-13-14) ஐக்கியம்.

g. கட்டளைகள்

ஜலத்தினால் ஞானஸ்நானம், தலைமேல் கை வைத்தல், இராப் போஜனம்

h. அறிக்கைகள் பத்திரிகைகள் அல்லது சுருக்கமான கால அறிவிப்புகள்

i. ஆசீர்வாதம்

ஆராதனை என்பதை அதன் முடிவான பாகுபடுத்தலால் அதைப் பின்வருமாறு நிதானித்து அறியலாம். (1) தேவனை மகிமைப்படுத்துகிறதா? (2) அதில் ஆராதனை செய்பவரைப் பக்தி விருத்தி செய்து மகாச் சிறந்த பரிசுத்தமான விசுவாசத்தோடு உலகத்திற்கு ஊழியம் செய்கிறதா, திருச்சபையானது முதலாவதாகக் கர்த்தருக்கு ஊழியம் செய்யுமாறு

அழைக்கப்படுகிறது. எல்லா விதமான ஊழியமும் அந்த ஊழியத்தைப் போலவே செயலூக்கமாய் இருக்க வேண்டுமானால் (சங் 50:23; யோவான் 15:8; தீத்து 2:10; I பேதுரு 2:9; 4:11; ரோமர் 15:6,9; எபேசி 1:5-6,12,14,18; 3:21; II தெச 1:12) கூடுதலாக பின்வருபனவற்றைப் படிக்கவும். I நாளா 16:5; 23:30; II நாளா 5:12-14; I நாளா 16:4-6; 25:1; இசைக் கருவிகளையும் பாடகர்களைக் குறித்தும்.

வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகம் மீட்கப்பட்டவர்கள் கர்த்தரையும், ஆட்டுக் குட்டியானவரையும் ஆராதிப்பதைக் காட்டுகிறது. (வெளி 4:4-11; 5:1-14) நமது சரீரங்களை ஜீவ பலியாகத் தத்தம் செய்யும்பொழுது நாம் ஆசாரியத்துவ ஊழியம் செய்வதற்கும், ஊழியம் செய்வதற்கும் கடந்து செல்லக் கூடும். (ரோமர் 12:1-2)

6. தலைத்துவத்திற்கான நடைமுறை வழிகாட்டும் முறைகள்

a. ஆராதனை ஒழுங்கு என்பது ஒன்றுபடுத்தப்பட்ட முழுமையான பூரணத்துவம் உடையதாய் இருக்க வேண்டும். ஒவ்வொரு கூட்ட ஒழுங்கிற்கும் தேவன் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார். ஒரு பகுதியிலிருந்து முழுமைக்கு கடந்து செல்லுங்கள். முழுமையிலிருந்து பகுதிக்கு கடந்து வாருங்கள். பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்காகக் காத்திருங்கள். மக்களை தேவனைச் சந்திக்கும்படி நடத்த வேண்டும். (யாத் 19:17; I கொரி 11:17)

b. அந்த ஆராதனை ஒழுங்கு நதி போல பிரவாகித்து ஓட வேண்டும். வெள்ளமாக (கரைபுரண்டு போவதல்ல) அல்ல, அசைந்தாடும் நதியாக அல்ல. நதி தன் போக்கை உண்டாக்கிக் கொள்ளும் பரிசுத்த ஆவியும் ஒரு நதியாகும். (யோவான் 7:37-39)

c. வசனத்தைப் போதிக்கும் ஊழியம் ஆராதனை ஒழுங்கின் அச்சாணிப் பகுதியாகும். வார்த்தையைப் போதிக்கும் ஊழியத்திலிருந்தே எல்லாமே அந்த ஊழியத்தை நோக்கியும் ஊழியத்திலிருந்தும் பிரவாகித்து ஓடுகிறது.

d. பரிசுத்தவான்களைப் பக்தி விருத்தி செய்தல் எல்லாவற்றிற்கும் திறவுகோல் போன்றது. (I கொரி 14) அது பக்தி விருத்தி செய்கிறதா? அது கட்டி எழுப்புகிறதா அல்லது கிழித்து குதறிப் போடுகிறதா?

e. தேவனையும் கிறிஸ்துவையும் ஆவியினாலே மகிமைப்படுத்துதல் பரிசுத்த ஆவியானவர் பிதாவாகிய தேவனையும் குமாரனாகிய கிறிஸ்துவையும் சுட்டிக்காட்டும் படியாக வருகிறது. (யோவான் 14-15-16)

f. ஆவியின் பல்வேறுபட்ட தன்மை. ஒரே மாதிரியான வடிவமைக்கப்பட்ட தல்ல. வடிவங்களோ, சடங்காச்சாரங்களோ, வளையாததோ அல்லது பிசுபிசுத்ததோ அல்ல. கிறிஸ்துவுடைய ஜீவனுள்ள பிரசன்னம் அங்கு இருக்க வேண்டும். ஆவிக்குரியதும் வேதாகமத்துக்குரியதுமானவை இன்றி உணர்ச்சி பூர்வமான உச்சநிலை என்பதல்ல. புதிய திராட்ச ரசம் நிரப்பிய பழைய துருத்திகள் அல்ல, புதிய வஸ்திரத்தோடு இணைக்கப்பட்ட பழைய வஸ்திரமும் அல்ல.

வெளிப்படுத்தின விசேஷம் என்பது ஆராதனை ஒழுங்கு நூலாக பரலோகத்தையும் பூலோகத்தையும் இணைக்கிறது. (எபி 12:22-24) பரிசுத்த ஆவியானவருடைய படைப்புத் திறனுக்கும் அவருடைய பல திறப்பட்ட திருவருளுக்கும் அனுமதியுங்கள்.

g. சகல விசுவாசிகளுக்கும் ஆசாரியத்துவ ஊழியத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக ஆசாரியத்துவ ஊழியங்களை மக்களுக்காக செய்யும்படியாக தலைமைத்துவத்தை அனுமதிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

h. "எனக்காக" என்று கேந்திரமாகக் கொண்ட ஊழியத்தைப் பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். அளவுக்கு மிஞ்சிய தன் உள்ளுணர்வு சார்பினையும் பற்றி எச்சரிக்கை அவசியம். புற உண்மையைப் பற்றி அல்ல. இவை இரண்டையும் சமநிலையைக்

கடைபிடிப்பது அவசியம். ஊழியத்தின் ஒவ்வொரு பகுதியையும் பரிசுத்த ஆவியானவர் தட்டி எழுப்பி தூண்டி விடுவது இன்றியமையாததாகும்.

i. ஊழியங்களின் வகைகள் பின்வருமாறு இருக்கக் கூடும்.
   1) துதி ஆராதனைக் கூட்டங்கள்.
   2) ஜெபமும் மன்றாட்டுகளை ஏறெடுத்தலும்
   3) நற்கருணை ஆராதனை
   4) கால்களைக் கழுவும் ஊழியம்
   5) வார்த்தையை போதிக்கும் ஊழியக் கூட்டங்கள்
   6) போதகர்கள் கூட்டம்
   7) சபை அங்கத்தினர் ஊழியர் கூட்டம்
   8) ஆராதனைக் குழு இசை நிபுணர் கூட்டங்கள்

B. <u>பரிசுத்தவான்களுக்கு ஊழியம்</u>

திருச்சபை நீடித்து நிற்கிறதென்பதற்குரிய இரண்டாவது நோக்கமாவது தன்னை பக்தி விருத்தி செய்து கொள்வது தான். இது பரிசுத்தவான்கள் தங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் நிறைவேற்றும் ஊழியமாகும். இது சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைந்து அன்பு கூறுவதில் தன்னை அதிகரித்துக் கொள்வதாகும். (எபேசி 4:9-16; I கொரி 12)

இந்த விஷயத்தைப் பற்றி போதுமானது சொல்லப்பட்டுள்ளது. இந்த ஊழியப்பகுதி சம்பந்தமாக சில சி றப்பான குறிப்புகளை நாம் கவனிப்போம்.

1. பரிசுத்தவான்கள் மிகப் பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டி எழுப்பப்பட வேண்டும். (யூதா 1-4) தேவன் தாமே இந்த நோக்கத்திற்காக வெவ்வேறு ஊழியர்களை தந்திருக்கிறார். (எபேசி 4:9-16; கொலோ 2:7; I கொரி 3:10-15; 14:26; யூதா 20) இந்த ஐந்து வகையான ஊழியர்களும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களை வார்த்தையிலுள்ள தெய்வீகச் சத்தியங்களைக் கொண்டு போதித்து கற்றுக் கொடுக்க வேண்டும். (மத் 28:18-20)

2. பரிசுத்தவான்கள் நல்லொழுக்கத்தின் பரிசுத்தத்திலும் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாகவும் கட்டி எழுப்பப்பட வேண்டும். திருச்சபையானது பரிசுத்தமானதாகவும் கறை திறையற்றதாகவும், பிழையற்றதாக அல்லது சுருக்கங்களோ மற்ற அந்த மாதிரியானதாகவோ அல்லாமல் தூய்மையாக இருக்க வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமாய் இருக்கிறது. அவர் தமக்கென்று மகிமையானதோர் திருச்சபையை மணமகளாக பெற்றுக் கொள்வதற்கு வாஞ்சையாக இருக்கிறார். (எபேசி 5:23-33; யோவான் 15:2; எபி 12:10; I யோவான் 3:2; வெளி 19:7; I கொரி 11:28-32; II கொரி 7:1).

3. மேலும் பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் கிரியைகள் நடப்பிக்கும் அங்கத்தினர்களாக தாங்கள் நிறைவேற்றும் ஊழியப் பணிக்குள் கொண்டு வரப்படவேண்டும். (எபேசி 4:9-16)

4. திருச்சபையானது தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு ஒரு மறைவிடமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும். அது தேவனுடைய வீடாகும். ஒரு சாதாரண வீட்டில் யாவும் சந்திக்கப்படுவது போல தேவனுடைய வீட்டிலும் அவ்வாறே செய்யப்பட வேண்டும். (ஏசாயா 2:1-4)

5. பரிசுத்தவான்கள் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய வேண்டும். யோவான் 13:34-35; கலா 6:2; எபேசி 1:22-23; 5:21) சாதாரண சரீரத்தின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று ஒருமித்து செயல்படுவது போல் செயல்பட வேண்டும்.

a. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் (யோவான் 13:34-35; 15:12,17; I பேதுரு 1:22; I தெச 3:12; 4:9; I யோவான் 4:7,11-12). கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக் கடவோம். (I யோவான் 3:18)

b. ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள். உதவியையும் அத்துடனே அழைத்துப் பெற்றுக் கொள்ளுங்கள். (II தெச 4:18)

c. ஒருவரையொருவர் கவனித்து (எபி 10:24)

d. ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். நாளானது சமீபித்து வருகிறது. (எபி 3:13; 10:25)

e. பக்தி விருத்தி உண்டாக்கத்தக்க ஒருவரையொருவர் தேற்றி பக்தி விருத்தி உண்டாகும்படி செய்யுங்கள். (ரோமர் 14:9; I தெச 5:11)

f. ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு (ரோமர் 15:14; கொலோ 3:16)

g. நல்ல உக்கிராணகாரர் போல ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். (I பேதுரு 4:10)

h. ஒருவரையொருவர் தாங்கி ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (கொலோ 3:13; எபேசி 2:4)

i. ஒருவருக்கொருவர் தயவாயும் உருக்கமாயும் இருந்து ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (கொலோ 3:13; எபேசி 4:32)

j. தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்படிந்திருங்கள். (எபேசி 5:21)

k. ஒருவருக்கொருவர் கீழ்படிந்து மனத் தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள். (I பேதுரு 5:5)

l. ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு போதனைகளைக் காட்டுங்கள். (கொலோ 3:16)

m. கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள். (ரோமர் 12:10)

n. ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். தாழ விழுந்து பணிந்து வேண்டுதல் செய்யுங்கள். (யாக்கோபு 5:16)

o. ஒருவரையொருவர் உபசரியுங்கள். அந்நியரை நேசிப்பவராய் இருங்கள். (I பேதுரு 5:14)

p. ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துங்கள். (I பேதுரு 5:14; ரோமர் 16:16)

q. ஒருவரோடு ஒருவர் ஐக்கியமாயிருங்கள் பங்குள்ளவர்களாயிருங்கள். (I யோவான் 1:7)

r. ஒருவருக்கொருவர் கரிசனை உடையவராய் இருங்கள். (I கொரி 12:25; எபேசி 4:25)

மனித சரீரமானது தனது கணக்கிலடங்கா செல்களுடன் ஒருங்கிணைந்து கிரியை செய்கிறது. மேலும் ஒற்றுமையையும் ஜீவனையும் உடையதாய் இருக்கிறது. ஆகவே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கத்தினர்களிடையே என்ன இருக்கக் கூடும் என்பதை எடுத்துக் காட்டுக!

C. பாவிகளுக்கான ஊழியம்

திருச்சபை என்றென்றும் இருக்கிறதாய் இருப்பதன் நோக்கமாவது சுவிசேஷத்தை பாவிகளுக்கு அறிவிக்கும் படியாக நமது ஊழியம் கர்த்தருக்காக எவ்வளவு செயலூக்கமுள்ளதோ பரிசுத்தவான்களுக்காக ஊழியம் எவ்வளவு செயலூக்கமுள்ளதோ பின்னர் உலகத்திற்கு இரட்சிக்கப்படாதவர்களுக்கு செய்யும் ஊழியம் எவ்வளவு அதிகமாக செயலூக்கம் உடையதாய் இருக்க வேண்டும். பரிசுத்தவான்கள் கட்டி எழுப்பப்பட்ட பின்னர் அவர்கள் தாங்களாகவே பெருக்கம் அடைய வேண்டும். திருச்சபையானது இந்தக் காலத்தின் முடிவு வருவதற்கு முன்னால் இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்தே ஆக வேண்டும். (மத் 24:14; 28:18-20)

1. ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் உலகத்திலுள்ள எல்லா ஜாதிகளுக்கும் கொடுக்கப்படும் ஆசீர்வாதத்தையும் தன்னுள் கொண்டது. (ஆதி 12:1-3) இது ஆபிரகாமுடன் உடன்படிக்கை.

2. தேவன் உலகத்தின் ஜாதிகளை ஆசாரியர்களைக் கொண்ட ராஜ்ஜியமாக ஆசீர்வதிக்குமாறு அழைத்தார். (யாத் 19:1-6)

3. கிறிஸ்துவினுடைய சுதந்திர பாகமானது இழந்து போனவர்களை இரட்சிப்பது ஆகும். (சங் 2:8; 11:6) இந்த உலகத்தில் நியமனம் பெற்ற ஊழியமானது 10% சதவிகிதம் ஆங்கிலம் பேசும் ஜனங்களுக்காக செய்யப்படுகிறது. 6% சதவிகித மக்கள் ஆங்கிலம் பேசாத உலகத்தின் 90% சதவிகிதமான மக்களுடன் பேசுகின்றனர். நாம் விதையைத் தூவி விதைத்து ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டும். (நீதி 11:23-24,30; 13:17; 21:13; 22:9; 24:27; 28:27; 31:8-9)

   நாம் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்க வேண்டும். (மத் 5:14-16).

   அடையாளங்களும் அற்புதங்களும் சுவிசேஷத்தை பிரசங்கித்த பிறகு நேரிட வேண்டும். (மத் 16:15-20)

4. திருச்சபையானது மகா திட்டத்தை நிறைவேற்றி இந்த தற்காலத்தில் எல்லா ஜாதியாரையும் சீஷராக்க வேண்டும். (மத் 28:18-20; அப் 1:5-8; லூக்கா 4:18-24; யோவான் 20:20-22)

5. புற ஜாதியார் திருச்சபைக்குள் வரக் கூடிய காலம் இதுவாகும். விசுவாசமுள்ள யூதர்களாகிய நல்ல ஒலிவ மரத்துக் கிளையோடு ஒட்டுக் கட்டப்படவேண்டிய தருணமாகும். (ரோமர் 9:10-11) இங்கே யூதர் அல்லாதவர்களும் யூதர்களோடு ஒன்று கூடி தாவீதின் ஆசாரிப்புக் கூடாரத்திற்குள் வருவார்கள். (அப் 13:1-4; 15:15-18; ரோமர் 11:25)

திருச்சபையானது இழந்து போனதும் செத்துக் கொண்டிருக்கும் உலகத்திற்கு தேவனுடைய இரட்சணயகரமாக இருக்க வேண்டும். (யோவான் 3:16) சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலிருமிருந்து தேவனுக்கென்று மீட்டுக் கொண்ட மக்களும் இருக்கும்படியாக அதுவரைக்கும் அவருடைய சீஷர்கள் தமது ஊழியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றும்படியாக தம் சீஷரை வெளியே அனுப்பினார். (வெளி 5:9-10) ஆட்டுக் குட்டியானவர் தாமே தம் வருத்தத்தின் பலனைக் காண்பார். ஆம் திருச்சபை சுவிசேஷத்தை அறிவித்து ஊழியம் செய்ய வேண்டும்.

D. <u>சாத்தானையும் அவனுடைய இராஜ்ஜியத்தையும் ஜெயித்து மேற்கொள்ளும் ஊழியம்</u>

முடிவில் திருச்சபையானது சாத்தானுடையதும் அவனுடைய தீய சேனைகளின் பாதாள வீழ்ச்சியையும் அவனைத் தூக்கி எறிவதையும் கடைசியாக கொண்டு வர வேண்டும். இதை பின்வரும் குறிப்புகளில் காணலாம்.

1. **திருச்சபையானது போர் கோலம் பூண்டு வெற்றி பெறுவதாயிருக்கும்.** (மத் 16:15-20)

   கிறிஸ்துவினால் கட்டப்படும் திருச்சபையின் இயல்பான தன்மையானது வெற்றி பெறும் திருச்சபையைக் கட்டி எழுப்புவதாகும். பாதாளத்தின் கதவுகள் அதை மேற்கொள்ளவதில்லை. (ஆதி 22:17) திருச்சபையானது போர் கோலம் பூண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியத்தில் பாதாளத்தின் கதவுகளோடு எதிர்த்து மோதலிலும் போரிலும் ஈடுபடும் (ஆதி 24:10) அது வெற்றி மேல் வெற்றி அடைந்து போய் கொண்டிருக்கும்.

   திருச்சபையானது தேவனுடைய போராயுதங்களை அணிந்து கொண்டு போருக்காக ஆவிக்குரிய சர்வாயுத வர்க்கங்களையும் தரித்துக் கொள்ளும். (எபேசி 6:10-20; II கொரி 10:1-5) தேவனாலே அந்த ஆயுதங்கள் பலம் மிக்கவையாக இருக்கும். நமது இராஜ்ஜியமானது இந்த உலகத்தின் அமைப்புக்குரியதல்ல. ஆகவே அது சாதாரண சரீரப் போர் அல்ல. இந்த யுத்தமானது துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு. (யோவான் 18:36-37; வெளி 12:10-11; அப் 12:10; சங் 9:13; ஏசாயா 38:10; மத் 7:13; ஆதி 28:17; ஏசாயா 26:2)

   பாதாளத்தின் கதவுகள் என்பவை பூர்வ காலத்தில் தங்கள் வணிக பண்டமாற்றங்களை, ஆலோசனை சபை, நீதிமன்றங்கள் நகரத்து ஒலி முக வாசல்களைக் குறிக்கும்

சின்னங்களாகும். பாதாளத்தின் கதவுகள் முறிய அடிக்கப்பட வேண்டும். (ஆதி 3:15) சத்துருவானவன் ஸ்தீரியின் வித்தினால் நசுக்கப்படுவான். திருச்சபை போர் கோலத்துடன் ஜெயம் பெற்றதாகும்.

2. திருச்சபையும் இராஜ்ஜியத்தின் திறவுகோல்களும்

திருச்சபையான இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை உடையதாய் இருக்கும். (மத் 16:19); அறிவின் திறவுகோல் (லூக்கா 11:51); தாவீதின் திறவுகோல் (வெளி 3:7; ஏசாயா 22:21-22); கர்த்தராகிய ஆண்டவர் மரணத்திற்கும் பாதாளத்திற்குரிய திறவுகோல்கள், பாதாளக் குழியின் திறவுகோல் ஆகியவற்றை உடையவராக அவைகளோடு கிரியைகளை நிறைவேற்றுவார். (வெளி 1:18; 9:1; 20:1)

திறவுகோல் என்பது அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் காட்டும் சின்னமாகும். திறவுகோல் என்பது திறக்கும் கருவியாகும். அது கதவுகளைத் திறந்தும் அடைக்கவும் செய்து மக்களை உள்ளே அனுமதித்தும், அவர்களை வெளியில் இருந்து பூட்டியும் போடுகிறது. பெந்தெகோஸ்தே நாளில் பேதுரு யூதருக்கு வாசல்களைத் திறந்தும் பிறகு அப் 10-11 அதிகாரங்களில் விசுவாசத்தின் கதவை புற ஜாதியாருக்குத் திறந்தும் வைத்தான். (அப் 2)

அப்போஸ்தலர் நடபடிகளில் காணும் நான்கு திறவுகோல்களாவது வார்த்தை, ஆவி, நாமம், திருச்சபையும் இணைந்து அதில் கிரியை செய்யும் பரிசுத்தவான்களின் ஜெபமும் ஆகும்.

இராஜ்ஜியம் என்பது கிறிஸ்துவின் அதிகாரமும் இராஜ்யபாரமுமாகும். இந்த உலகத்தின் இராஜ்ஜியங்கள் அவருடைய இராஜ்ஜியத்திற்குக் கீழ்பட்டவைகளே. (வெளி 12:13,17) திருச்சபையானது இராஜ்ஜியத்தின் வல்லமையைப் பிரசங்கித்து அதை வெளியே எடுத்துக் காட்டுவதாகும். (மத் 24:14)

இராஜ்ஜியத்தின் செய்தியாவது (தூது) மனந்திரும்புதல், விசுவாசம், ஞானஸ்நானம் ஆகியவை (மத் 4:16; 3:2) ஆதித் திருச்சபை இராஜ்ஜியத்தைப் பற்றிப் போதித்தும் எடுத்தும் காட்டியது. (அப் 8:12; 19:8; 20:25; 28:28-31) புதிதாக பிறப்பதினால் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியும். (யோவான் 3:1-5; கொலோ 1:13-14) யோவான் ஸ்நானகன் வரைக்கும் நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசிகளும் இருந்தனர். அதற்குப் பிறகு இராஜ்ஜியமானது பிரசங்கிக்கப்பட்டு எல்லா மனிதரும் அதற்குள் அழைக்கப்படுகிறார்கள். (லூக்கா 16:16; மத் 5:17-18; 11:13)

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் தேவனுடைய சபையாகவும் இராஜ்ஜியமாகவும் இருந்தது. (யாத் 19:1-6 உடன் அப் 7:38ஐப் பார்க்கவும்) இராஜ்ஜியமானது அதன் தற்காலிக வடிவத்தில் நல்லதும் தீயனவும் சேர்ந்த கலவையாகும். ஆனால் தீமையானது கிறிஸ்துவின் வருகையின் போது எடுத்து எறிந்து விடப்படும். (மத் 13)

3. திருச்சபையானது ஊழியத்தைக் காட்டுவதிலும் இழப்பதிலும்

a. ஊழியத்தைக் காட்டுவது - கிரேக்கம் “Deo” = “கட்ட, பின்ன, சுற்றி வைக்க” இது பாதாளத்தின் வாசல்களை திருச்சபைக்கு விரோதமாக போரில் சம்பந்தப்படுத்துகிறது. திருச்சபைக்கென்று தன்னை விரோதித்து எதிர்க்கும் சக்திகளைக் கட்டும் வல்லமையை உடையதாய் இருக்க வேண்டும். அந்த சக்திகள் ஆவன: துரைத்தனங்கள், அதிகாரங்கள், பொல்லாத ஆவிகள் ஆகியவை (மத் 12:29) முதலாவது பலவானைக் கட்ட வேண்டும். களைகள் கட்டுகளாகக் கட்டப்பட வேண்டும். (மத் 13:30) திருச்சபையை விட்டு வெளியே எறியப்பட்டவர்கள் கட்டப்பட்டவர்கள் ஆவார்கள். (மத் 18:15-20) தேவனுடைய வார்த்தையானது கட்டப்பட்டதல்ல. சாத்தான் தான் நித்திய காலமாகக் கட்டப்பட வேண்டும். (வெளி 20:2 உடன் படித்தறிக. சங் 105:22-26; 149:8; மாற்கு 5:3; II தீமோத் 2:9)

b. ஊழியத்தை இழந்து விடுதல் - கிரேக்க “Luo” = “இறுக்கிய கட்டைத் தளர்த்த, பிரித்துவிட, அழித்து விட, கரைந்து போக, உருகி விட” என்று பொருள்படும். இது இராஜ்ஜியத்தின் திறவுகோல்களைக் குறிக்கிறது. திருச்சபையுங்கூட ஒரு கட்டு இறுக்கம் தளர்ந்து போகக் கூடிய ஊழியத்தை பெற்றிருக்கக் கூடும். சாத்தானால் கட்டப்பட்டிருந்த ஆபிரகாமின் குமாரத்தியை இயேசு கட்டவிழ்த்து விட்டார். (லூக்கா 13:16) சாத்தான் அவனுடைய சிறைப்பட்டவர்களைக் கட்டி வைத்திருக்கிறான். திருச்சபையானது இந்தக் கட்டி வைத்திருக்கும் வல்லமையான ஆவிகளைக் கட்டவிழ்க்க வேண்டும். (யோவான் 11:44; சங் 102:20; மாற்கு 7:35) நீ கட்டுகிறவைகள் எவைகளோ அவை கட்டப்பட்டிருக்கும் பூமியில் நீ கட்டவிழ்ப்பவைகள் எவைகளோ அவைகள் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும். (பரலோகத்தில் ஏற்கனவே கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்)

c. வானத்திலும் பூமியிலும்
“கட்டப்பட்டது பூமியில் கட்டவிழ்க்கப்படும் கட்டப்பட்டது பரலோகத்தில் கட்டவிழ்க்கப்படும்” திருச்சபையானது உலகத்திலே கிறிஸ்துவுடைய சரீரமாயிருக்கிறது. ஆனாலும் பரலோகத்தில் தனது உயிர்தெழுந்த (மணவாளன்) தலைவனோடு இணைக்கப்பட்டுள்ளது. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. (மத் 28:19-20) கிறிஸ்து பரலோகத்திற்கு எழுந்தளிச் சென்ற பொழுது அதற்கு பின்னர் சீஷர்கள் உலகெங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். பரலோகத்தில் இருந்து கர்த்தர் அவர்களுடன் கிரியை செய்து அடையாளங்களால் தொடர்ந்து வசனத்தை நிச்சயப்படுத்தினார். (மாற்கு 16:15-20)

வானமும் பூமியும் அவரே உடையவர். (ஆதி 14:19) உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக (மத் 6:9) பூமியானது எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும் பரலோகத்தையே முற்றிலுமாக நம்பியிருக்கிறது. அல்லாவிட்டால் பூமியானது வறட்சி அடைந்தும், வெறுமையாயும், நாசமாக்கப்பட்டும், அழிவையும் பெற்று பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் அற்றதாகி விடும். (உபாகமம் 11:1-21)

புதிய ஏற்பாட்டுத் திருச்சபை கர்த்தருக்காக பரிசுத்தவான்களுக்காக, பாவிகளுக்காக ஊழியம் செய்யும்படியாக மீட்கப்பட்டிருக்கிறது. முடிவில் சாத்தானையும் அவனுடைய பொல்லாத இராஜ்ஜியத்தையும் நியாயந் தீர்க்குமாறு உபயோகப்படுத்தப்படும். இது தான் திருச்சபை என்றும் இருக்கிறதாக இருப்பதின் நான்கு வகையான நோக்கமாகும். ஆகவே சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென் என்று சொன்னதில் வியப்பொன்றுமில்லை. (எபேசி 3:21).

வீடு சந்திப்பு எப்படி என்பது பற்றிய சுருக்கமானதோர் படிப்பு

வீடு சந்தித்தல் என்ற தலைப்புக்கு ஒரு முகவுரையாக ஒரு பொதுவான காட்சியை சிறிது நேரம் உங்கள் கற்பனையில் எடுத்துக் கொள்ளுமாறு விரும்புகிறேன். "ஒரு திருச்சபை அங்கத்தினர் போதகரிடம் பேசுகிறார். அந்த பேச்சு இவ்வாறு போகிறது என்று வைத்துக் கொள்வோம்." போதகரே நாம் செய்யக் கூடுமா? என்று கேட்கிறார். போதகர், "ஆம் அது ஒரு சிறந்த காரியம். தேவையானதுங்கூட ஆனால் அதற்கென்று எனக்கு நேரம் கிடையாது." என்கிறார்.

போதகரை நரம்புத் தளர்ச்சி அடைய விடாமல் நாம் எவ்வாறு திருச்சபை ஊழியத்தில் புதிய ஊழியர்களை அறிமுகம் செய்ய முடியும்? இந்த பிரச்சனை ஆதித் திருச்சபையிலும் இருந்தது. அப் 6ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்களால் ஒரு தேவை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது அவர்களுக்கு என்று முன்னுரிமை பெறக் கூடியதல்ல. அதன் விளைவாக அவர்கள் ஏழு மனிதர்களைத் தெரிந்தெடுத்து நியமனம் செய்து அவர்கள் அப்போஸ்தலர்களை அவர்களது ஊழியப் பகுதியான ஜெபத்திலும் வசனத்திலும் தரித்திருப்பதற்கு இடையூறு விளைவிக்காமல் அந்த மனிதர்களை ஊழியம் செய்யுமாறு ஏற்பாடு செய்தார்கள். அப்போஸ்தலர்கள் பெருமையுள்ளவர்களாகவோ அல்லது சோம்பேறிகளாகவோ இருக்கவில்லை. அவர்கள் மக்களைச் சந்திப்பதையும் தவிர்க்கவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் ஊழியத்தில் முன்னுரிமையை ஏற்படுத்திக் கொண்டார்கள். அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவில் சரீரமாகிய சபைக்கு தங்களது சிறப்பான அர்ப்பணிப்பாக, அற்பமான காரியத்தை அல்ல. ஜெபத்திலும் வார்த்தையைப் போதித்து பரிசுத்தவான்களை ஊழியத்திற்காக கட்டி எழுப்புவதே சிறந்த அர்ப்பணிப்பாகப் பார்த்தார்கள். பயிற்சி கொடுப்பவர்கள் அந்தக் கடமையை மட்டுமே செய்கிறவர்களைவிட முக்கியமானவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு. ஆகவே அந்த பழைய கால வழக்கில் சொல்லப்படுவதான "ஜனங்களுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பது" அவர்கள் கையில் மீனைக் கொடுப்பதை விட நல்லது என்பது இதற்கும் பொருந்தும்.

ஆம் மேலும் அநேக சமயங்களில் தங்கள் போதகர்களால் எல்லாம் செய்யப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும் திருச்சபை அங்கத்தினர்களால் இந்த வேதாகமத்தின் மாதிரித் திட்டம் தடம் புரளுமாறு செய்கிறது.

1. வேதாகமத்தின் அடிப்படையும் நோக்கமும்

இந்த சந்திப்பு என்பதற்கான கிரேக்க பதம் 'episkeptomai' "சாதாரணமாகப் போய் பார்" என்று பொருள் தரும். இது பல சந்தர்ப்ப சூழ்நிலைகளில் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

a. போய் பார்த்தல்

"சில நாளுக்கு பின்பு பவுல் பர்னபாவை நோக்கி நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப் பார்ப்போம். வாரும்" என்றான். (அப் 15:36)

பவுல் இங்கே சாதாரணமாகவே அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினான். ரோமர் 1ம் அதிகாரத்தில் அவருக்கு ஜனங்களைப் போய் பார்க்க வேண்டுமென்ற ஆழமானதோர் ஏக்கம் இருந்தது. (ரோமர் 1:10-13).

– அவர்களை ஆவிக்குரிய பிரகாரமாக பலப்படுத்த
– பரஸ்பரமாக அவர்களை உற்சாகப்படுத்த
– சுவிசேஷத்தோடு அவர்கள் கிட்ட போய் சென்று அடைந்து சேரும்படியாக

ஆதித் திருச்சபை அவர்கள் வீடுகளில் ஒன்றாகக் கூடி ஐக்கியமாகிக் கொள்வதற்கு சிறப்பாக வற்புறுத்தி வந்தது. (அப் 2:42) அவர்கள் போய் பார்த்து சந்திப்பதாவது:

- உற்சாகப்படுத்தும் படியாக
- ஐக்கியத்தில் இருக்கும்படியாக
- போதிக்கப்படும் படியாக

- ஜெபம் செய்யும்படியாக
- அப்பம் பிட்கும் படியாக

அப்பம் பிட்குதல் என்பது ஐக்கியத்திற்கான கொண்டாட்டம் என்பதைக் கவனிக்கவும். இயேசு அவர்களைப் பார்த்து தம்மை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்று சொன்னார். அவர்கள் இந்த நினைவு கூறுதலை ஒன்றாகக் கூடி அப்பம் பிட்டு நினைவு கூர்ந்தார்கள். இயேசுவின் கடைசி இராப்போஜனத்தைப் போலவே அவர்கள் அடிக்கடி ஓர் எளிய உணவை ஒன்றாகப் புசித்து பின்னர் ஒன்றாக ஐக்கியப்பட்டார்கள்.

b. ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும்படியாக

(போய் பார்த்தல்) visit என்பதற்கு மற்றொரு கிரேக்க வார்த்தை இருக்கிறது. "historeo" என்ற வார்த்தையானது "ஒரு மனிதனுடைய சரித்திரத்தை அறிந்து கொள்ளும்படியாக" என்ற கருத்தைக் கொண்டது! கலா 1:18ல் பவுல் அப்போஸ்தலன் கேபாவைச் சந்தித்துப் பார்க்க போயிருந்தபொழுது இந்த பதத்தை உபயோகிக்கிறார். அது ஒருவரைப் பார்த்து அறிமுகமாகிக் கொள்ளும்படியாகப் போய் பார்த்தலாகும்.

c. தேவைகளுக்காக ஊழியம்

திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறது. தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. (யாக்கோபு 1:27)

நாம் விதவைகளையும் அனாதைகளையும் போய் பார்த்து சந்திக்க வேண்டும. "அவர்களுடைய உபத்திரவத்திலே" என்று கூறுகிறதைக் கவனிக்கவும். கஷ்டப்படுகிற மக்கள் அநேகர் இருக்கிறார்கள். விதைவைகளும் அனாதைகளும் எளிதாக என்று இரு வகையாகக் காட்டப்படுகின்றனர்.

- அனாதைகள் என்பவர்கள் தங்களைப் பற்றி யாருமே கவலை எடுத்துக் கொள்ளப்படாதவர்கள்.
- விதவைகள் என்பவர்கள் தனித்து தனிமையில் கைவிடப்பட்டவர்கள்.

நாம் சென்று அடைந்து பார்க்கக் கூடிய 'விதவைகளும்' அனாதைகளும் அநேகர் இருக்கிறார்கள்.

இயேசுவும் அவர்களைப் போய் பார்த்துச் சந்திக்கும் அவசியத்தைக் கற்றுக் கொடுத்தார்.
"நான் வியாதியாய் இருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலில் இருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள்" (மத் 25:36)

2. எப்படிப் போய் பார்த்து சந்திப்பது?

a. நாம் யாரைப் போய் பார்க்க வேண்டும்?

நாம் யாருடன் உறவுத் தொடர்பு கொள்ள முடிகிறதோ அவர்களைப் போய் பார்ப்பது முக்கியமான விஷயமாகும். இளவாலிப வயதினரான இளைஞர்கள் புதிதாக சபைக்கு வருகிறவர்களில் இருப்பார்களானால் அவர்களை சில இளைஞர்கள் போய் பார்ப்பது மிகவும் உதவியாக இருக்கலாம். நாம் போய்ப் பார்க்க வேண்டியவர்கள் நோய்வாய்ப் பட்டிருப்பார்களானால் தலைவர்களோ அல்லது முதிர்ச்சி பெற்ற விசுவாசிகளோ அவர்களைப் போய்ப் பார்ப்பது நல்லது.

இப்பகுதியில் மற்றொரு ஆலோசனைக்குரிய காரியம் என்னவென்றால் போய்ப் பார்த்துச் சந்திக்கும் நபர்களின் எண்ணிக்கையாகும். அது ஒரு சாதாரணமான திருச்சபை அங்கத்தினரை ஐக்கியத்திற்காகப் பார்ப்பதானால் 3 அல்லது 4 பேர் போவது மிகவும் நல்லது. ஆனால் பொதுவாக அதிகப்படியாக போகிறவர்களானால் இரண்டு பேராக இருக்கலாம். அதிலும் ஒருவர் முதிர்ச்சி பெற்ற விசுவாசியாக இருக்க வேண்டும். மேலும் இயேசு தம் சீஷர்களை இரண்டு இரண்டு பேராகவே வெளியில் அனுப்பினார்! என்பதைக் கவனிக்கவும். (மாற்கு 6:7; லூக்கா 10:1)

b. காலம் அல்லது நேரம்

■ **போய் பார்க்கும் சந்திப்பை முன்னதாகவே ஒழுங்குபடுத்திக் குறித்து வைத்துக் கொள்ளவும்**

போய் பார்க்கும் சந்திப்பை ஒழங்கு செய்யும்பொழுது அந்தக் குறிப்பிட்ட மக்களை தாங்கள் பார்க்க வருவதில் பிரியப்படுகிறார்களா என்று விசாரித்துக் கொள்ள வேண்டும். "நான் உங்களை வந்து பார்க்க விரும்புகிறேன்" என்று சொல்லுவோமானால் அந்த போய்ப் பார்க்கும் சந்திப்பு நமக்காகவே செய்யப்படுகிறது என்ற உணர்வு இருக்கும். மேலும் நாம் அந்த மக்களைப் பார்த்து "நான் உங்களை வந்து பார்ப்பதை விரும்புகிறீர்களா?" என்று சொன்னால் அந்த சந்திப்பு அவர்களுக்காக என்றாகும். அந்த பார்க்கும் சந்திப்பை விரும்புகிறார்களா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் நாம் வேதத்தை வீணாக்குகிறவர்களாக இருப்போம்.

குறிப்பு: சென்று பார்க்கும் ஓர் சந்திப்பு அவர்களுக்கு வீட்டில் வசதியாக இருக்காவிட்டால் அது கூடாததாக இருக்கும். ஆகவே நாம் ஒரு பூங்காவிலோ அல்லது காபி அல்லது தேநீர் விடுதியிலோ சந்தித்துக் கொள்ளலாம்.

■ **ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒழுங்கு செய்யவும்.**

ஒருவர் தீடீரென்று முன்னறிவிப்பில்லாமல் பார்த்துச் சந்திக்கும்படி வருவார்களானால் அது குழப்பத்தை உண்டு பண்ணும். சந்திக்க வேண்டிய நபர்கள் வீட்டில் இல்லை என்றாலும் அது நேரம் வீணாக்கப்படுவதாகும். ஆகவே நாம் ஒரு வசதியான நேரத்தையும் இடத்தையும் முன்னதாகவே ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும்.

■ **நேரத்தை (பயன்படுத்துவதில்) கரிசனை உள்ளவர்களாக இருங்கள்**

நாம் குறிப்பிட்ட நேரத்திற்குத் தாமதமாக அல்லாமல் சற்று முன்னதாகவே போக வேண்டும். அவர்கள் நம்மை சற்று தாமதித்து அவர்களுடன் இருந்து போக வேண்டும் என்று மெய்யாகவே எதிர்பார்ப்பார்களானால் மற்றொரு சந்திப்பை நாம் எளிதாக அவர்களுடன் திட்டமிட்டுக் கொள்ள முடியும். நாம் நீண்ட நேரம் இருப்போமானால் நமது வரவேற்பு என்னவென்றாலும் அவர்களை நாம் திரும்ப வருவதை விரும்பாமல் இருக்கலாம். ஆகவே உங்கள் சந்திப்பை அதிகபட்சம் ஒரு மணி நேரத்திற்கு மட்டும் குறைத்துக் கொள்ளுங்கள்.

c. இலக்குகள்

நாம் போய் பார்க்கும் சந்திப்பைப் பொறுத்து நமக்கு தெளிவான இலக்கு இருக்க வேண்டும். எதை சாதித்து பெற்றுக் கொள்வதென்பதை முன்னதாகவே ஜெபத்துடன் தீர்மானஞ் செய்ய வேண்டும். போய் பார்த்து சந்திக்க வேண்டிய குடும்பத்துடன் பகிர்ந்து கொள்ள, உற்சாகப்படுத்த, குடும்பத்திற்கு ஆலோசனை கொடுக்க, அல்லது சந்திக்க வேண்டிய குடும்பத்திற்கு பிரயோஜனமான வேத பாடப் பகுதியை ஆயத்தஞ் செய்து கொள்ளுதல் நன்றாகும். இந்த முறையில் சந்திப்பை கவனத்துடன் திட்டமிட்டுக் கொள்ளவும்.

d. நடைமுறையான ஆயத்தம்

போய் பார்த்து சந்தித்தல் சில சமயங்களில் ஏதோ ஒன்றை வெகுமானமாக எடுத்துச் செல்ல வேண்டியதிருக்கும். அவர்களுடைய நடைமுறை தேவைகளை கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் அல்லது சில பழங்களையோ கையோடு எடுத்துச் செல்லலாம்.

e. ஜெபம்

நமது போய் பார்க்கும் சந்திப்பில் ஜெபமும் இடம் பெற வேண்டும். சந்திப்பு முடிக்கும் வரைக்கும் ஜெபிக்கும்படி காத்திராதே. அவர்கள் தங்கள் தேவைகளையோ அல்லது கவலைகளையோ கலந்து கொண்ட பிறகு ஒரு சரியான நேரம் பார்த்து ஜெபிக்கத் தவற வேண்டாம். இப்படியாக ஜெபமானது இயல்பாகவே தனிப்பட்டதாக இருக்கும்.

3. போய் பார்த்துச் சந்தித்தல் - தேர்ந்தெடுக்கும் உரிமைகளும் உள்நோக்குப் பார்வையும்

a. வயதில் முதியோரைப் போய் பார்ப்பது

- மூத்தோர்களைச் சந்திக்கும்படி போய்ப் பார்ப்பதில் அவர்களுடன் ஒரு வேளை உணவை பங்கெடுத்துக் கொள்ள முயற்சிக்கவும். நாம் அவர்களை அருகில் இருக்கும் ஒரு உணவு விடுதிக்கு வரும்படி வரவேற்பு கொடுக்கலாம் அல்லது அவர்களுக்காக உணவுப் பொருள்களை வாங்கி அவர்கள் அதை தயாரிக்கும் பொழுது உதவி செய்யலாமா என்று கேட்டுக் கொள்ளுங்கள்.
- அவர்களுக்காக பரிதாபப்படாதீர்கள். அவர்களுக்கு அன்பும் உற்சாகமும், நட்பும் தேவை.
- அவர்களுக்காக ஒவ்வொன்றையும் செய்ய வேண்டாம். அது அவர்களுடைய வீடு. அவர்கள் ஒரு நல்ல வரவேற்பாளர்களாக இருக்க விரும்புவார்கள். அவர்களுக்குத் தேவைப்படும் பொழுது உதவி செய்ய வசதியாக நம்மை வைத்திருத்தல் நலமாகும்.
- நாம் சரியாகக் கவனித்துக் கேட்க முடியாவிட்டால் அதற்காகப் பாசாங்கு செய்யக் கூடாது. நாம் கேட்க முடியாவிடில் அதைத் திரும்பச் சொல்லுமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் அவர்களுடன் அங்கு கலந்து பேசவே இருக்கிறோம்.
- அவர்களுடன் சேர்ந்து வேதாகமத்தைப் படிப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். (ஒரு வேத பகுதி அல்லது சங்கீதங்களில் ஒன்று) மேலும் அவர்களுடைய தேவைகளுக்காக விசேஷமாக ஜெபிக்கும்படி ஒரு நேரத்தை வைத்துக் கொள்ள வேண்டும்.
- இந்த சந்திப்பை மேற்கொள்வதன் நோக்கமாவது அந்த சந்திப்பு மேற்பார்வையானது அவர்களுக்கு விசேஷமானதாகவும் அவர்களை சந்தோஷப்படுத்தி உற்சாகம் பெற்றுக் கொண்டு தங்களுக்காக யாரோ ஒருவர் கரிசனையாக இருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும்.

b. வியாதியஸ்தரைப் போய் பார்த்தல்

நாம் வியாதிப்பட்டு இருக்கும்பொழுது நம்மை யாராவது வந்து பார்த்து சந்தித்தார்களானால் அதில் ஆறுதலும் பலமும் இருக்கும். அதுவும் நமக்கு அடிக்கடி சாதாரணமாக ஐக்கியப்படுவதைவிட மற்றவர்களுடன் குறைந்த ஐக்கியம் கொள்ளுவதற்கு தடை செய்யப்படுகிற நேரமும் ஆகி விடும். ஏனென்றால் அந்த மாதிரியான சந்திப்புகளால் நாம் பலமும் உற்சாகத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

- உற்சாகப்படுத்தி தைரியப்படுத்த ஐக்கியம் பெற, ஜெபிக்கவும் வியாதியஸ்தருக்காக செய்வதை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.
- பார்க்கப் போகும் பொழுது பழங்களையோ அல்லது ஏதாவது உணவையோ எடுத்துச் செல்லவும். முடிந்தால் அவர்களுக்கு எது பிரியம் என்று முன்னதாகவே கேட்டுக் கொள்ளவும்.

c. சிறைச் சாலை போய் பார்த்து சந்தித்தல்

- சிறைச் சாலை ஊழியங்கள் ஒன்றின் மூலமாக இந்த சிறைச் சாலை போய் சந்தித்தலானது சிறப்பாகச் செய்ய முடியும். அவர்கள் சில மக்களை இதற்காகப் பயிற்றுவிக்கவும் செய்யலாம்.
- அந்த சிறையில் உள்ளவர்களுக்கு துண்டு பிரதிகளை எடுத்துச் செல்லலாம். இது நன்மை பயக்கும். மேலும் சிறையில் உள்ள அவர்களுக்குப் பெற்றுக் கொள்ளும்படி அனுமதி கிடைத்தால் காஸட் டேப்களையும் எடுத்துச் செல்லலாம்.
- இந்த ஊழியமானது (அஞ்சல்) கடிதம் எழுதுவதால் ஆதரவு பெற்று அவர்களுடன் தொடர்பு கொண்டும், பின் தொடர் ஊழியமும் கவனிக்கப்படும்படி ஏதுவாக இருக்கும்.

d. புதிய மனிதர்கள் போய் பார்த்துச் சந்தித்தல்

- சில காலங்களாக மக்கள் ஆலயத்திற்கு வந்து கொண்டிருந்தால் அவர்களைப் போய் சந்திப்பது அவர்களுக்க பிரியமா என்று கேட்கப்பட வேண்டும். இந்த போய் பார்த்துச் சந்திப்பில் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளவும் பயன்படுத்தலாம். இந்த சம்பவத்தில்

சில புத்தகங்களை அதாவது சுவிசேஷ புத்தகம் அல்லது புதிய ஏற்பாட்டை எடுத்துச் செல்வது மிகவும் முக்கியமாகும். இந்தச் சந்திப்பை சுவிசேஷத்தை அறிவிக்கும்படி உபயோகிக்கப்படாவிட்டாலும் மக்களை வரவேற்கவும் அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதுடன் அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமையையும் நிதானித்துக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தை வார்த்தையைப் போதிக்கவும் உபயோகிக்கலாம்.

e. பின் மாற்றம் அடைந்தவர்களைப் போய் பார்த்துச் சந்தித்தல்

- ஒரு பின்மாற்றம் அடைந்தவர் எனப்படுகிறவர் தேவனுடன் தம்முடைய உறவுத் தொடர்பில் குளிர்ச்சி அடைந்து ஆலயத்துக்கு வருவதற்கும் மக்களோடு ஐக்கியப்படுவதிலும் வாஞ்சை குறைந்து காணப்படும் யாரோ ஒரு நபர் ஆவார். அவர் ஏதோ ஒரு சமயம் வந்து போவார். ஆனால் எப்பொழுதும் "சுறுசுறுப்பாகவே" இருப்பார். நாம் பின்மாற்றம் உள்ள ஒருவரைச் சந்திப்போமானால் நமது இலக்கானது அவரை உற்சாகப்படுத்தி அன்புகூர்ந்து கர்த்தரிடம் மறுபடியும் திரும்புமாறு அந்த மனிதரை நோக்க மனப்பான்மையுள்ளவராக ஆக்க வேண்டும்.
- நமது திருச்சபையில் ஒரு சமயம் வராமல் இருக்கிறவர்களையும் எப்பொழுதாவது வராமல் இருக்கிறவர்களையும் நமக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்திருப்போமானால் நாம் அவர்களை அழைத்தனுப்பி நாம் போய் அவர்களைப் பார்த்துச் சந்திக்க வருவது பிரியமா என்று கேட்கலாம்.

f. குடும்பங்களைப் போய் பார்த்துச் சந்தித்தல்

திருச்சபையிலுள்ள சில குடும்பத்தினர் ஓய்வு நாளைத் தவிர மற்ற நாட்களில் ஆலயத்திற்கு வருவதைக் கஷ்டமாகக் காண்பார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் குழந்தைகளையும் சிசுக்களையும் கவனிக்க வேண்டியதிருப்பதால் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறவர்களாய் வாரத்தின் மத்திப் பகுதியில் அவர்களை போய் பார்த்து சந்திப்பது அடிக்கடி பராட்டப்படுவதாகும். இவ்வாறு அவர்களை மற்ற விசுவாசிகளுடன் மிகவும் அதிகமான ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதை வசதியான நேரத்தில் செய்ய வேண்டும் என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

g. திருச்சபை அங்கத்தினர் போய் பார்த்து சந்தித்தல்

நேரத்திற்கு நேரம் சமயம் கிடைக்கும் போதெல்லாம் சபை அங்கத்தினர்களையோ, தலைவர்களையோ அல்லது போதகரையும்கூட சென்று பார்ப்பது சிறந்த யோசனையாகும்.

- இந்த "உங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ள" என்ற சூழ்நிலைமையானது அடிக்கடி சம்பவிப்பதாகும். ஆனாலும் உங்களுக்குத் தெரிந்த ஒருவரோடு நேரத்தை சும்மா போக்குவதாக இருக்கக் கூடும். அதுவும் அவர்களைப் பாராட்டுவதுடன் உறவுத் தொடர்புகளை ஆழப்படுத்தவும் ஐக்கியத்தைப் பகிர்ந்து கொள்ளவும் உதவும்.

h. மருத்துவமனையில் போய் பார்த்துச் சந்தித்தல்

சில மனிதர்கள் அபாயமானதும், வாழ்க்கையின் விளிம்பில் வியாதியாய் உள்ளவர்களைப் பார்க்கும்படியாக தாங்கள் (தேவனால்) அழைக்கப்பட்டவர்களாகத் தங்களை உணர்ந்து கொள்ளக் கூடும். இதற்காக குறிப்பிட்ட பயிற்சியைப் பெற்றிருப்பது நன்மையாகும். இங்கே அந்த மாதிரி வியாதியின் விளிம்பில் உள்ளவர்களுக்கான பிரச்சனைகளும் அதற்காக ஈடுபட உதவும் சில வழி காட்டும் முறைகள் இங்கு உள்ளன:

- வியாதியின் விளிம்பில் உள்ளதை ஒப்புக்கொள்ளுதல்
  வியாதியின் விளிம்பில் உள்ள நோயாளி, முதல் அதிர்ச்சிக்குப் பிறகு கடந்து செல்லக் கூடிய நிலைமை
- கோபம். சில சமயங்களில் தேவனுக்கு விரோதமாகவும் அல்லது ஒரு உறவினருக்கு எதிராகவும், அல்லது மருத்துவருக்கு எதிராகவும், சில சமயங்களில் பார்க்க வந்திருப்பவர் மேலும் சீறி பாயக் கூடும்.

- மறுதலிப்பு. அந்த நோயாளிக்கு தாங்கள் வியாதியின் விளிம்பில் இருப்பதாக தெரிந்திருந்தாலும் அவர்கள் அதை தீடீரென்று முழுவதுமான இல்லை என்று மறுக்கலாம். இது ஒரு விதமான மனோதத்துவ ரீதியான விடுதலையாகும்.
- முடிவான வியாதியின் மட்ட நிலை வியாதியை ஒப்புக் கொள்வதாக இருந்தாலும் திரும்பவும் சினமடைந்து அந்த சினம் சீறிபாயும் வட்டம் திரும்பவும் சுழல்கிறது.

வியாதியஸ்தனரின் (மன) உணர்ச்சிகள்

- எதிர்மறையாக அவர்கள் அச்சம், நம்பிக்கை இழந்த நிலை, துயரம், கவலை, தனிமையுணர்ச்சி, குற்ற உணர்ச்சி, மனச் சோர்வு ஆகியவற்றை உணருவார்கள். சிலர் தங்களுக்கு வந்த வியாதி பாவத்திற்கு தண்டனையாக உணருவார்கள்.
- நேரடியாக (எதிர்மறைக்கு மாறாக) தங்கள் பண்பாடுகளை அடிக்கடி மாற்றிக் கொள்வார்கள். பணமும் உடமைகளும் அவர்கள் கருத்தில் மதிப்புக் குறைந்ததாகும். அவர்கள் அதிகமான உண்மையுள்ளவர்களாயும் மனந் திறந்தவர்களாயும் இருப்பார்கள். அவர்கள் உண்மையான நட்பை வாஞ்சிப்பார்கள்.

போய் பார்த்துச் சந்திக்கும் பார்வையாளருக்கான வழிகாட்டு முறைகள்

- இந்த ஊழியத்தை நிறைவேற்று முன்னர் "நாம் இந்த ஊழியத்தைச் செய்யும்படியாக ஏன் விரும்ப வேண்டும்?" என்பதாக நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். இதன் நோக்கமாவது முக்கியமானது ஏனென்றால் வியாதியின் விளிம்பில் உள்ள நோயாளி மனதின் நோக்க மனப்பான்மைகளுக்கு உணர்ச்சி பூர்வமாக இருப்பார். நமது நோக்கமும் உண்மையான இரக்கமும் நோயாளிக்கு உதவ வேண்டும் என்ற விருப்பம் இருக்குமானால் பிரச்சனைக்கு இடம் என்பதே இல்லை.
- அவர்களுக்காக ஜெபிக்குமாறு உறுதி பூண்டு பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தும் படியாக அனுமதிக்க வேண்டும்.

  ✓ இரு உண்மையாகவே நேர்மையாக இரு; கவனி; அவர்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முயற்சி செய்; அவர்களுக்கு மதிப்புக் கொடு; நேரத்தை அவர்களுடன் செலவழிக்கப் பார்; உற்சாகப்படுத்து; அன்பு கூறு.

  ✗ இருக்காதே பாசாங்கு செய்யாதே; நீண்ட பேச்சுகளைத் தராதே; (ஈவிரக்கம்) கழிவிரக்கம் காட்டாதே அல்லது எடை போடாதே; விவேகமற்றிராதே; நம்முடைய தேவைகளைத் திருப்தி செய்யும் படிக்கு வராதே; கைவிட்டு விடாதே;

இந்த ஊழியம் விலையேறப் பெற்றது. இந்த கடமைக்கு உன்னை ஒப்படைப்புச் செய்து கொள். வெளியில் கொடுப்பதற்கு தயாராக இரு.

உற்சாகப்படுத்தும் ஊழியம்

நம்பிக்கையை இழக்கச் செய்து ஊக்கத்தைத் தளரச் செய்கிறவர் ஒரு கொலைகாரன். எண் 21ம் அதிகாரத்தில் 4ம் வசனத்தில் மக்கள் தங்கள் நம்பிக்கையை இழந்ததால் அதன் விளைவாக அவர்கள் பாவஞ் செய்யக் காரணமாக இருந்தது. இதன் முறையில் அவர்கள் வைத்திருந்ததெல்லாம் இழந்து விட காரணமாயிற்று. பின்னர் எண் 32:7-9 வசனங்களில் மக்கள் தங்கள் சுதந்திர வீதத்தையும் இந்த நம்பிக்கையை இழந்த தன்மையால் களவாடப் படும்படி ஆயிற்று. இன்றைய நாட்களிலும் திருச்சபையுங்கூட இந்த சாத்தானுடைய செயலூக்கமான ஆயுதத்தால் தன்னிடமுள்ளதை திருடும்படியாக விட்டு விடுகிறது. இதற்கு எதிராக வேதத்தில் உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்துவதற்கான புத்திமதிகளை ஏராளமாக தனக்குள் வைத்திருக்கிறது. அதாவது உற்சாகப்படுத்த, ஆறுதல்படுத்த, புத்தி சொல்ல, இந்தப் படிப்பில் நாம் தைரியத்தை இழந்து நம்பிக்கைக் குறைவதையும், உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்துவதாகிய இரண்டையும் நமது சிந்தனையில் கொண்டு எவ்வாறு இந்த புத்திமதிகள் ஸ்தலத் திருச்சபையில் நடைமுறைப்படுத்த முடியும் என்பதை நிதானிப்போம்.

1. நம்பிக்கை இழந்த ஊக்கம்

இதன் விளக்கம் தான் என்ன?

- மட்டுப்படுத்த. விளைவை உண்டாக்காது.
- அறுத்து கீழே போடப்பட்ட பயிரின் தண்டைப் போல
- சுக்கு நூறாக உடைந்து போகவும்
- அச்சத்தை உண்டாக்கவும்
- தாங்க முடியாத கொடுமையையும் சோர்வையும் உண்டாக்க
- கட்டுக் கடங்கா உணர்ச்சியை இழக்கவும்

சிறந்த தேவ மனுஷருங்கூட நம்பிக்கை இழந்த காலங்களுண்டு.

இந்த நம்பிக்கை இழக்கும் தன்மை உண்டாக்கும் 7 அடிப்படை காரணிகள்:

a. தனக்கு தானே அடையும் தனிப்பட்ட தோல்வி

யாரோ ஒருவரை நீங்கள் தேவை ஏற்படும்பொழுது பயனற்று போகச் செய்ததாக உணருகிறீர்களா? நீங்களே உங்களை தோற்றுப் போகச் செய்ததாக உணருகிறீர்களா? நாம் ஒரு கடமையை நேருக்கு நேர் சந்தித்து அதை குழப்பி விட்டு, அதை முடிக்கத் தவறினது அல்லது சோதனை எதிர்க்க தவறினது ஆகிய சந்தர்ப்பங்களில் நமது நம்பிக்கை ஊக்கத்தை இழந்து விடுகிறோம். மற்றொரு சாதாரணமான தவறி விடுவதற்குக்கான காரணமாவது 'நம்மால் ஒரு பிரயோஷனமுமில்லை' என்று யாரோ ஒருவர் சொல்லும் போது தான். இது நம்பிக்கையான ஊக்கத்தை இழக்கச் செய்கிறது. இந்த தன்மையானது தோல்வியைக் கொண்டு வருகிறது.

ஒரு பெற்றோரோ, ஆசிரியரோ, நண்பரோ ஒரு குழந்தையை பார்த்து அவனோ / அவளோ ஒன்றுக்குமே உதவாத அல்லது மூத்த சகோதரி போல அவ்வளவு சிறந்தவளல்ல என்று சொல்வதைக் கேட்க எனக்கு துக்கம் உண்டாகிறது. இதனால் குழந்தைக்கு இரண்டு முட்டுக் கட்டை ஏற்படுகிறது. அதனால் அக்குழந்தைக்கு சரியாக வழிகாட்டப்படுவதில்லை அக்குழந்தை நம்பிக்கை ஊக்கத்தையும் சுய கௌரவத்தையுங்கூட இழந்து விடுகிறது. நீங்கள் நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி இது தான். திருச்சபையில் வயது வந்த அநேகருக்கு உண்டாகும் பிரச்சனை ஆகும்.

b. நீண்டு கொண்டு போகும் போர்

கடினமான நேரங்கள் கூட நம்பிக்கை - ஊக்கத்தை இழக்கச் செய்யும் நாம் அனைவரும் சோதனைகளையும் துன்பங்களையும் சந்திக்கிறோம். சில சமயங்களில் இந்த சந்தர்ப்ப சூழ்நிலைகள் நீண்ட நாட்களாகத் தள்ளித் தள்ளி போவதால் நாம் நமது பலத்தை மெதுவாக நம்மை விட்டு நமது ஆவிக்குரிய கிரியா சக்திகளையும் வடிந்து போகச் செய்யும். போரானது

நீண்டு கொண்டே போகுமானால் நாம் ஜெயிப்போம் என்ற நம்பிக்கையும் நமக்குள் குறைந்து விடும். கிறிஸ்தவர்களுடைய இலட்சியவாக்காவது "ஒரு போதும் விட்டுவிடாதே". ஆனால் போரின் நடுவில் அது கடினமானால் நமது தீர்மானமும், விசுவாசமும் சவாலுக்கு இடமாகும்.

c. பதில் உத்தரவு தரப்படாமல் தொடரும் ஜெபம்

நாம் ஒரு வேண்டாத சூழ்நிலையையோ அல்லது பிரச்சனையோ சந்திக்க வேண்டிய காலங்கள் உண்டாகும் அதற்காக நாம் அதிகப் பிரயாசத்துடன் நீண்ட நாட்கள் ஜெபித்தும் ஒன்றும் நமக்கு நேரிடாது. தேவன் நாம் ஜெபிப்பதை உண்மையாகவே கேட்டாரா என்று ஐயுறுகிறோம். "அதனால் ஏதாவது பயன் உண்டா?" என்று நம்மை நாமே கேட்டுக் கொள்கிறோம். இது நம்பிக்கை - ஊக்கத்தை இழக்க ஏதுவாகும். தேவனுடைய நோக்கங்களைக் குறித்து புரிந்து கொள்ளக் கூடாத குறைவு இருக்குமானால் அல்லது நாம் நடைபெறும் காரியங்களை இந்த பிரபஞ்சத்தின் பார்வை நோக்கோடு காண்பவர்களாக இருப்போம்.

d. உணர்ச்சிகளின் தளர்ச்சி

உணர்ச்சிகளின் தளர்ச்சியையும் அழுத்தமான மனச்சோர்வையும் உண்டாக்கக் கூடிய பல காரணங்கள் உண்டு. குடும்பத்தில் ஓர் மரணம், குழந்தை பிறப்பு, சூழ்நிலை மாற்றம், உத்தியோக மாற்றம் போன்ற மேலும் பல உண்டு. நாம் அதிகமாக களைப்படைவதாலும் நமது சரீரத்தில் சந்தர்ப்பத்தை சமாளிக்கும் திறமை நமது சரீரத்தை விட்டு வற்றிபோவதாலும், அவ்வாறு உணர்ச்சி பூர்வமாக வற்றிப் போவதால் நமது விசுவாசத்தின் மேல் அழுத்தத்தை சுமத்துகிறது. மேலும் இந்த விதமான நிலைமையை நாமே கண்டறிந்து கொள்ளுவதற்கு அடிக்கடி சிரமமாக ஆகி விடுகிறது.

e. சரீரத்தில் வியாதி

சரீரத்தில் வியாதியானது நம்மை உடல் பிரகாரமாக வற்றிப் போகச் செய்து மேலும் உணர்ச்சி பூர்வமான அழுத்தத்தை உண்டாக்குகிறது. அது நமது பேரார்வத்தையும் நமது கிரியா ஊக்கத்தையும் உறிஞ்சி விடுகிறது. நம்மை தளர்ச்சி அடையச் செய்து நமக்கு விரோதமாக அச்சத்தைத் தலை தூக்கச் செய்கிறது. ஆகவே நாம் ஆவிக்குரிய கிரியைகளை மாம்சீகக் கிரியைகளிலிருந்து பிரித்தெடுத்து விடுகிறோம். ஆனாலும் அவற்றிற்கிடையே மெய்யானதும் முக்கியமானதுமானதோர் இணைப்பு உண்டு. (I தெச 5:23ல்) பவுல் அப்போஸ்தலன் மக்களை பூரணராக இருக்கும்படியாக ஜெபிக்கிறார். அவர் குறிப்பாகவும் தனித்தனியாக ஆவி, ஆத்மா, சரீரம் என்று குறிப்பிடுகிறார். பவுல் அதை முக்கியமானதாக உணர்ந்தார். நாமும் சரீர சுகத்திற்கும் நலமாக இருப்பதற்கும் கவனத்தைச் செலுத்த வேண்டும். மேலும் அது செய்யத் தவறினால் அதினால் ஏற்படக்கூடிய நம்பிக்கை - ஊக்க இழப்பைப் பற்றி விழிப்பாக இருத்தல் வேண்டும்.

f. சாத்தானுடைய தாக்குதல்

சாத்தான் ஆனவன் நம்மை நம்பிக்கை - ஊக்கத்தை இழந்து விடும்படி விரும்புகிறான். ஆதலால் அவன் நம்முடைய பலவீனமான பகுதிகளில் தன் தாக்குதலை நடத்துவான். இந்த கொடுமையும் தாக்குதலும் அடிக்கடி நம்பிக்கை ஊக்கத்தை இழக்கச் செய்யும். மேலும் நாமே அதைத் தனிமையாகக் கையாள முயலும் போது குறிப்பாக அவ்வாறு நேரிடக் கூடும்.

g. புரிந்து விளங்கிக் கொள்ளும் தன்மையில் குறைவு

நமது ஜீவியத்தில் என்ன நேரிடுகிறதென்பதைப் புரிந்து கொள்ளத் தவறாவது நமது நம்பிக்கை - ஊக்கம் உண்டாவதற்கு ஒரு காரணமாகலாம். இந்த பிரபஞ்சத்திற்காக உயிர் வாழ்ந்து அது கொண்டு வரும் பிரச்சனைகளோடு இடைபடுவதும் தேவனோடு ஐக்கியத்தில் பங்கெடுக்காத படிக்கும் உலகக் கவலைகளில் ஈடுபடுவது ஆகியவை நம்மை பிரபஞ்ச நோக்குள்ளவர்களாக ஆக்கி விடும். நாம் எல்லாவற்றையும் மனிதருடைய பார்வை நோக்கில் காணும்படியாக ஆரம்பிக்கிறோம். நமக்கு ஆவிக்குரிய ஞானமும் காரியங்களை நித்தியமான நோக்குடன் கருத்தறிந்து புரிந்து கொள்ள அவசியமாகிறபோது மேல் கூறிய நிலையில் நிற்கிறோம்.

2. **ஊக்கப்படுத்துதல் அல்லது தைரியமடையச் செய்தல்**

"இதோ உன் தேவனாகிய கர்த்தர் அந்த தேசத்தை உனக்கு முன்பாக வைத்திருக்கிறார். உன் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியே, நீ போய் அதைச் சுதந்தரித்துக் கொள். பயப்படாமலும் கலங்காமலும் இரு" என்றார். (உபா 1:21)

தைரியமானது தலைவர்களுக்கு தேசத்தைச் சுதந்தரித்து கொள்ளும்படியான பலத்தைத் தந்தது. தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அதன் வாசற்படியில் நின்றபோது கர்த்தருடைய வார்த்தை உண்டாகி "திடப்படுத்து" என்றார். (உபா 1:38) நாம்மெல்லோரும் ஏதாவது ஒரு வழியில் நம்பிக்கை - ஊக்கத்தை இழந்து விடுவோம். தேவன் இதை அறிந்திருக்கிறார். இது தான் ஜெயத்திற்கும் தோல்விக்கும் இடையில் உள்ள வித்தியாசத்திற்கான அர்த்தமாகக் கூடும்.

ஊக்கப்படுத்துதல் என்பதற்கான முதலாவதான கிரேக்க வார்த்தைகள் 'parakaleo' அதாவது அழைக்கப்பட்ட பக்கத்தில் 'paramutheomai' என்பது 'ஆலோசனையுடன்' என்பவைகளாகும். பரிசுத்த ஆவியானவர் கூட அழைக்கப்பட்டவராக பக்கத்தில் இருப்பவர் என்பதை கவனிக்கவும்.

சில வேதாகமப் பகுதிகளைக் கருத்தில் கொள்ளுவோம்:

"ஒருவரையொருவர் தேற்றி ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள;" (I தெச 5:11)

"சபை கூடிவருதலை விட்டு விடாமல் ... ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்" (எபி 10:25)

"சகோதரரே ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசம் உள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்கும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினபட்டு போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" (எபி 3:12-13)

"பிசாசானவன் யாரை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்" துர் அதிர்ஷ்ட வசமாக நாம் திருச்சபையில் சேர்ந்த நாள் முதற்கொண்டு மக்கள் விழுந்து போவதை நாம் பார்க்கிறோம். அவர் திருச்சபையை விட்டுப் போய் இராவிட்டால் திருச்சபை இன்று பெரிதாக இருந்திருக்கும். அவர்கள் ஏன் விட்டுச் சென்றார்கள்? பாவத்தால் நிறைந்த அல்லது அவ நம்பிக்கையுள்ள இருதயத்தை உடையவர்களான காரணத்தினால் ஜீவனுள்ள தேவனை விட்டு விலகி மனந்திரும்புவதற்கும் விருப்பம் அற்றவர்களாய் இருந்தனர். தேவன் தாமே இந்த வேதாகமப் பகுதிகளில் இதை புறக்கணித்துத் தவிர்த்து விடலாம் என்று காட்டுகிறார். நாடோறும் ஒருவரையொருவர் திடப்படுத்துங்கள்! நாம், சகோதர சகோதரிகளை கீழே விழுந்தவர்களாகவும் ஊக்க தைரியமில்லாதவர்களாகவும் நாம் பார்க்கும்பொழுது நாம் அவர்களிடம் சென்று சந்தித்து உற்சாகப்படுத்த வேண்டும். இன்றே அதற்கான அணுக்கிரக காலம். பாவம் ஆனது அவர்களுடைய இருதயத்தைக் கடினபடுத்தாதபடிக்கு அதற்கு இடங்கொடுக்காதபடி பார்க்கவும். அவர்களை சாத்தானுடைய இலக்காக ஆகும்படியாக அனுமதியாதிருங்கள். இந்த தைரிய-ஊக்கம் அளிக்கும் ஊழியத்தால் நாம் அநேகரை தேவனுக்குள் உறுதியாக நிலை நிற்கும்படி செய்வதற்குக் காரணமாக இருப்போம்.

இந்த தைரிய - ஊக்கத்தின் இரகசியமாவது தேவனுடைய வார்த்தையே. நாம் பொய்யிலும் உண்மையல்லாதவற்றிலும் தரித்திருக்கும்பொழுதும் நமக்கு தேவனை விட நன்றாகத் தெரியும் என்று நினைப்பதாலும் ஒரு பாவம் நிறைந்த அவ நம்பிக்கையுள்ள இருதயத்தைப் பெற்றிருப்போம். நாம் தேவனுடைய வார்த்தையை இவை எல்லாவற்றிற்கும் விசுவாசத்துடன் இந்த சிந்தனைகளுக்கு மேலாக உயர்த்தும் பொழுது நமக்கு ஜெயம் கிடைக்கிறது.

"தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் கீழ்படிய சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்". (II கொரி 10:5)

இந்த வசனமானது நமக்கு ஊக்கப்படுத்துதலுக்கானத் திறவுகோலைத் தருகிறது. முதலாவதாக நமக்கு உற்சாகத்தை இழக்கச் செய்யும் காரியங்களை அகற்றி விடுவோம்.

a. கற்பனையான மனோ பாவங்களைத் தூக்கி எறியுங்கள்

இங்கே உபயோகப்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை 'logismos' என்பது 'காரணாகாரிய சிந்தனை' என்று பொருள்படும். இந்த ஒரே ஒரு வார்த்தையானது வேதாகமத்தில் ஒரே இடத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. (ரோமர் 2:15) ஒரு சாதாரணமான மனிதனின் சிந்தனைகளை விவரிக்கும் படியாகத் தான். இந்த மாதிரி சிந்திப்பது தர்க்க ரீதியானது தான். நாம் அதைக் காரணா காரியமாகச் சிந்திக்கலாம். உதாரணமாக, "நான் மிகவும் புத்திசாலி அல்ல. என்னுடைய பரீட்சையில் நான் தவறி விட்டேன். நான் எதையுமே எப்பொழுதும் சரியாகச் செய்யக் கூடும் என்று எனக்குத் தோன்றவில்லை." இது தான் சாதாரணமான மனிதனின் விவாதம் ஆகும். பவுலுடைய புத்திமதியானது தெளிவாகவும் எளிதாகவும் இருக்கிறது. இந்த சிந்தனைகளை தூக்கி எறியுங்கள். அவைகளை எடுத்து எறிந்து விடுவதாவது நமது உள்ளத்தில் அவைகளை அனுமதிக்குமாறு இடம் அளிப்பதில்லை என்று சாதாரண அநுமானக் கருத்தில் அர்த்தமாகிறது.

b. எந்த மேட்டிமையான சிந்தனையையும் கீழே தூக்கி எறியுங்கள்

தேவனைப் பற்றும் அறிவுக்கு விரோதமான தன்னை உயர்த்தும் எந்த விதமான எண்ணத்தையும் தூக்கி எறிந்து விட வேண்டியவர்கள் ஆவோம். ஒரு மேட்டிமையான அபிப்பிராயம் உதாரணமாக நம்முடைய மனப்பான்மையானது "நான் தேவனை விட நன்றாக அறிந்திருக்கிறேன்" என்று இருக்கும்பொழுது.

தேவனுடைய வாக்குத்தத்தங்களை எவ்வாறு சுதந்தரித்துக் கொள்வது? நமது காரணாகாரிய விவாதங்களையும் அபிப்பிராயங்களையும் விட தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மிக மேலானவை உயர்ந்தவை என்று நாம் ஏற்றுக் கொள்கிறோம். நமது காரண காரிய விவாதத்தை நம்புவோமானால் நம்மை நாமே உயர்த்துகிறவர்களாய் பெருமை அடைவோம். அதாவது "தேவன் என்னுடைய நிலைமையை புரிந்து கொள்ள வில்லை. தேவன் எனக்கு உதவி செய்ய முடியாது" என்போம். நாம் இந்த விதமான சிந்தனைகளை விசேஷமாக அதைரியமடைதல் என்பதைப் பற்றிய போதனையில் குறிப்பிடப்படும் நேரங்களில் அதைக் கொண்டிருக்கிறோம் என்பதை தெரிந்து வைத்திருக்கிறோம். இந்த விதமான சிந்தனைகளை நமது உள்ளத்தில் இடம் பெற்றுக் கொள்ளும்படியாக அனுமதிக்கக் கூடாது.

c. நமது உணர்ச்சிகளுக்கு இயேசுவே ஆண்டவராக இருக்கட்டும்

நமது உணர்ச்சிகளாலும் இருதயத்தின் உணர்வுகளாலும் நம்மை ஆளுகை செய்யக் கூடாது. நாம் கர்த்தருடைய வார்த்தையின்படியே ஆளுகை செய்யப்பட வேண்டும். இதற்கான விவாதமாவது "நான் என்ன உணருகிறேன்" என்பதல்ல. தேவன் என்ன சொல்லுகிறார் என்பதாகும்! ஆண்டவர் சொன்னார், "அவர் என்னுடைய ஆண்டவர் என்னிடமிருந்து எனக்காக சிறந்ததையே விரும்புகிறார். மேலும் எனக்கு நல்லது என்னதென்பதை அவர் அறிவார். ஆகையால் அவருடைய வார்த்தையை நான் விசுவாசிப்பேன்."

நாம் பழைய மனிதனுடைய விவாதங்களை தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கொண்டு மனதில் இடமாற்றம் செய்து கொள்ளும்படி மக்களை உற்சாகப்படுத்த வேண்டும். மேலும் அச்சமூட்டும் உணர்ச்சிகளுக்கு பதிலாக விசுவாசக் காரியங்களைக் கொண்டு உற்சாகப்படுத்த வேண்டும். (கொலோ 3:16a)

3. ஊக்கப்படுத்துதல்

ரோமர் 12ல் ஊழியங்கள் குறித்து ஒரு அட்டவணை கொடுக்கிறது. நமக்கு ஒரு ஊழியம் கொடுக்கப்பட்டுள்ளது. அதைச் செய்யும் படியான கிருபையுங்கூட அருளப்பட்டிருக்கிறது. நம் ஒவ்வொருவருக்கும் சபையில் ஓர் ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும். இங்கே நாம் எந்த ஊழியத்தை ஏற்றுக் கொள்ளக் கூடும் என்பதில் தீர்க்கதரிசனம், வேலையாள் ஊக்கப்படுதல்,

கொடுத்தல் ஆளுகை இரக்கங்காட்டுதல் ஆகியவை சிலருக்கு ஊக்கப்படுத்தும் ஊழியம் தரப்படுகிறது. நாம் அனைவரும் ஊக்கப்படுத்த வேண்டும். சிலர் மட்டுமே இந்த ஊழியத்திற்காக விசேஷமாக அபிஷேகம் பெற்றிருக்கின்றனர்.

வேதாகமத்தில் உதாரணங்கள்

a. பர்னபா (அப் 4:36)
பர்னபா என்பதற்கு எழுத்தளவில் 'ஆறுதலின் மகன்' என்று அர்த்தம் தரும். அவன் தன் பெயருக்கு ஏற்றபடியே ஜீவித்தான். அவனுடைய தேவை எங்கெல்லாம் அவசியப்பட்டதோ அப்பொழுது அங்கே அவன் இருந்தான். அவனுக்கு அது விலைமதிப்புள்ளதாக இருந்தாலும் அவன் அதை நிறைவேற்றினான்.

b. எப்பா பிராதீத்து (பிலிப் 2:25)
இவனுடைய பெயர் பிரித்துக் கொடுப்பவன் என்று அர்த்தம் பெறும். அவன் பவுலுக்கு உதவி செய்வதை எந்த விலையைக் கொடுத்தாகிலும் செய்வதற்கு தயாராக இருந்தான். அவனுடைய பிராணனை விலையாகக் கொடுத்துக் கூட நிறைவேற்றினான். அவன் ஒரு அப்போஸ்தலனுமல்ல மற்றும் ஒரு மூப்பனும் அல்ல. அவன் சாதாரணமான உற்சாகப்படுத்துபவனாக இருந்தான்.

c. ஒநேசிப்போர் (II தீமோத் 1:16)
அவனுடைய பெயருக்கு அர்த்தமாவது "இலாபம்-சுமப்பவன்" என்பதாகும். பவுல் காவலில் வைக்கப்பட்டிருந்த பொழுது அவன் சந்தேகத்துக்கு இடமின்றி சற்று கைவிடப்பட்டவனாக உணர்ந்திருந்தான். ஒநேசிப்போர் அவனைக் கண்டு பிடித்தான். பவுல் சிறைக் கைதியாகக் காவலில் இருந்ததைப் பற்றி அவன் வெட்கப்படவில்லை. அவன் தீர்க்கதரிசியுமல்ல, மூப்பனுமல்ல. ஆனாலும் பவுலுக்கு அவன் ஆற்றிய ஊழியம் குறிப்பிடத்தக்கதாகும்.

4. நாம் எப்படி ஊக்கப்படுத்தலாம்?

a. கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளுதல்

இன்று கர்த்தரிடமிருந்து நீ பெற்றுக் கொண்டதை பகிர்ந்து கொள். கடந்த காலத்தில் தேவன் உனக்கு வெளிப்படுத்தியவற்றையும் உன்னுடன் பேசினதையும் பகிர்ந்து கொள். இது தேவனுடைய வார்த்தையை நாடோறும் பழக்க வேண்டும் என்ற பொறுப்பை ஞாபகப்படுத்துகிறது. நாம் தேவனிடம் இருந்து பெற்றுக் கொள்ளாவிட்டால் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாது.

b. சாட்சியை பகிர்ந்து கொள்

சமீப காலத்தில் தேவன் உன்னுடைய ஜீவியத்தில் என்ன செய்தார் என்பதைப் பகிர்ந்து கொள். கடந்த காலத்தில் தேவன் உன்னை எப்படி ஆசீர்வதித்தார் என்பதைப் பகிர்ந்து கொள். தேவன் நமது சந்தர்ப்ப சூழ்நிலைமையில் கிரியை செய்த வல்லமையைப் பற்றி சாட்சி பகருவதாகும். அது நம்மை உயர்த்துமானால் அது முக்கியமானதாகும்.

c. தேவன் உனக்கு எப்படி உதவி செய்தார் என்பதைப் பகிர்ந்து கொள்.

நமது தனிப்பட்ட முறையில் நாம் எதிர்முனையில் சந்தித்து வெற்றி பெற்றது போன்ற அந்த மாதிரியான சூழ்நிலைகளை சகோதர சகோதரிகள் அடிக்கடி சந்திப்பதை நாம் பார்க்கிறோம். நமது ஜெயத்தை அச்சமயம் பகிர்ந்து கொள்ளலாம். அந்த பிரச்சனையைக் குறைக்காதபடி எச்சரிக்கையாயிரு. ஏனென்றால் அவர்கள் அந்த நிலையிலே இன்னும் போய் கொண்டிருப்பார்கள்.

d. மற்றவர்களுடைய சாட்சியை பகிர்ந்து கொள்

இதற்கு அதிகமாக நம்முடைய தனிப்பட்ட சாட்சிகளுடன் மற்றவர்களுடைய ஜீவியத்திலும் தேவன் என்ன செய்தார் என்பதையும் நாம் பகிர்ந்து கொள்ளக் கூடும். உதாரணமாக நீ கேள்விப்பட்டதும் படித்தறிந்துமான தேவனுடைய வல்லமையைக் காட்டும் விஷயங்களையும் அவருடைய அன்பையும் கரிசனையையுங்கூட பகிர்ந்து கொள்ளலாம்.

e. மற்றவர்களுடைய தேவைகளைக் குறித்து உணர்ச்சி பூர்வமாக இரு.

நாம் மற்றவர்களுடன் கூடவே பக்கத்தில் சென்று அவர்களை உயர்த்திக் காட்ட வேண்டிய பொழுது அவர்களைப் பார்த்து அடிக்கடி நகைக்கிறோம். மற்ற ஜனங்களுடைய கண்ணோட்டத்தில் அந்தக் காரியங்களைப் பார்ப்பதற்கு முயற்சி செய். அவர்கள் எப்படி கட்டாயமாக உணருகிறார்கள் என்பதைக் கற்பனை செய்து பார்க்க முயற்சி செய்.

f. மக்களுக்காக ஆர்வத்தைக் காட்டு

உரையாடல் உன்னைக் கேந்திரமாகக் கொண்டல்ல. மற்றவர்களைச் சுற்றியே வரட்டும் நீ பகிர்ந்து கொள்ளும் உன்னுடைய வார்த்தைகளும் சாட்சிகளும் அவர்களையும் அவர்கள் சூழ்நிலைமைகளையும் சம்பந்தப்பட்டது என்பதை நிச்சயப்படுத்திக் கொள். கவனித்துக் கேட்பதில் வற்புறுத்துதலை வைத்துக் கொள்.

5. நாம் எப்பொழுது உற்சாகப்படுத்த வேண்டும்?

a. கூட்டங்களின் மத்தியில்

ஆராதனைக்கு முன்னாகவோ அல்லது பின்போ உனக்கு முன் வைக்கப்படுகிற சமய சந்தர்ப்பங்களை உனக்கு அனுகூலமாக ஆக்கிக் கொள். உன்னுடைய நண்பர்களோடு எப்பொழுதும் பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல. தங்களுக்கு அறிமுகமான யாருமில்லாததால் ஒரு வேளை தங்களை விடுபட்டு போனவர்களாக உணரும் புதிய மக்களைக் குறித்து கரிசனையுடன் இரு. சபையில் தேவையுள்ள மற்றவர்களுக்காக அவர்களுக்கு விசேஷமான தேவைகள் இருக்குமானால் அதைப் பற்றி வினாவாக இரு.

b. மற்ற நேரங்களில்

நமது அனுதின நடைமுறை வேலைகளுக்காக அல்லது பணியிடத்துக்கோ அல்லது பள்ளிக் கூடங்களுக்கோ போகும்பொழுது நாம் பலவேறுபட்ட சமயங்களில் பலரை வாரத்தின் போக்கில் சந்திக்க நேரிடலாம் அல்லவா? அதிகம் அதிகமான மக்களிடம் தொலைபேசி கூட இருக்கிறது. நாம் பின்னால் செய்ய வேண்டிய தொடர்புகளுக்காக அவர்களை தொலைபேசியில் அழைத்து தொடர்பு கொள்ளலாம். ஒரு வேளை நாம் ஊரில் அவர்களை ஏதேச்சையாகப் பார்க்கலாம். நாம் கூட்டங்களில் உரையாடிய மக்களுடன் கூட நாம் உற்சாகப்படுத்தி தைரியப்படுத்தலாம். அவசியமானால் அவர்களுடன் சேர்ந்து ஜெபிக்கவும்.

c. சமூக நல்லுறவுடன் மக்களைச் சந்தித்தல்

ஒரு ஆராதனையில் நாம் செயல்படுவதைவிட, ஒரு சாப்பாட்டு வேளையிலோ அல்லது குளிர்பானம் சேர்ந்து அருந்தும் பொழுது அதிக காரியங்களைச் சாதிக்கலாம். அந்த மாதிரி சமயங்கள் மக்களை அறிமுகமாகி அறிந்து கொள்வதற்கு நல்லதோர் வழியாகும். சௌகரியமானதும், ஓய்வானதும் வீட்டு சூழ்நிலையானது ஐக்கியத்தை முன்னேறச் செய்யும். இது பரஸ்பரமாக திருப்தி அளிப்பதுடன் நன்மை பயப்பதாகவும் இருக்கும். நாம் இந்த விதமாக ஐக்கியப்படுகையில் நாம் கரிசனையுடன் இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறோம்.

குறிப்பு: இது சந்திக்கிறவரின் ஒரே பாலின மக்களுடன் செயல்படுவதால் தப்பிதமான எண்ணங்களைத் தவிர்ப்பதாகும் அல்லது குடும்பத்தினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்புக் கொடுக்கலாம்.

d. கஷ்டமான நேரங்களில்

மக்கள் கஷ்டமான நேரங்களின் வழியாகக் கடந்து போகும் பொழுது நாம் அவர்களை உற்சாகப்படுத்துவதற்காகத் தொடர்பு கொள்ள வேண்டும் அல்லது அவர்களுக்காக நாம் ஜெபிப்பதை உறுதி செய்ய வேண்டும். மக்கள் நமது அன்பைக் குறித்தும் கரிசனையைக் குறித்தும் பெருமிதம் அடைய வேண்டும்.

முடிவுரை

"சகோதரரே, எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதல் அடைந்தோம்." (I தெச 3:7)

'உபத்திரவம்' இங்கே 'ஆழ்த்தி மூழ்கடிக்கும்' 'அழுத்தமான (பாரமான) கவலைகள்' என்று பொருள்படும். 'இக்கட்டு' என்பது 'நொறுக்கும் துன்பம்' என்பதாகும். இந்த உற்சாபப்படுத்தும் ஊழியம் அவர்களைப் போய் சேரும் பொழுது அவர்களுடைய நிலைமை இது தான். பவுல் சொன்னபடி அவர்கள் 'மெய்யாகவே பிழைத்திருப்பார்கள்.'

- அதைரியப்படுதல் என்பது நொறுக்கி உடைத்தும், ஆழ்த்தி மூழ்கடிக்கவும் செய்யும்.
- ஊக்கப்படுத்துதல் மக்களுடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு தேவனுடைய ஜீவனையும் பலத்தையுங்கூடக் கொண்டு வருகிறது.

சில நேரங்களில் பரிசுத்த ஆவியானவரே ஆறுதல் அளிப்பவராக இருக்கிறார். சில சமயங்களில் சகோதரர்கள் ஆறுதல் கூறுவார்கள். இன்றையு திருச்சபையில் இந்த ஊழியம் இன்றியமையாததாக இருக்கிறது. ஒரு சில மக்களே விழுந்து போகக் கூடும். மேலும் கர்த்தருடைய ஜனங்களே பலம் பெற்றவர்களாக இருப்பார்கள் என்றாகும். நாம் நாளை வரும் வரைக் காத்திருக்கக் கூடாது. நாம் இன்றே ஊக்கப்படுத்த வேண்டும்.

- பிசாசானவன் எதிர்மறையான காரியங்களைப் பெரிதுபடுத்தும்படி நம்மை ஏவுகிறான். குற்றங் குறைகளைக் காணவும் செய்கிறான். நம்மை தோற்றுப் போகும்படியே விரும்புகிறான்.
- நாம் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவி கொடுப்பது அவசியம். நாம் உற்சாகப்படுத்துகிறவர்கள் மீது தேவன் நம்மை ஜெயங்கொள்ளுமாறு வாஞ்சிக்கிறார்.

உற்சாகம் தந்து ஊக்கப்படுத்துதல்

எபி 10:24-25 சொல்லுகிறதாவது, "மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து சபை கூடி வருதலை சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும்."

நாம் உண்மையாகவே நம்முடைய ஜீவியத்தில் மற்றவர்களை ஊக்கப்படுத்துகிறவர்களாக இருக்கிறோமா என்று நம்மை நாமே சோதித்தறிவதற்கான கேள்விகள்:

1. நீ உன்னைக் குறித்து மற்றவர்கள் பேரில் கரிசனையாக இருக்கக் கூடிய ஒருவனாக உணருகிறாயா? எது? அல்லது யார்? உன்னுடைய இரக்க குணத்தை வெளியில் கொண்டு வருகிறது?

2. மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதற்கு அப்பால் வார்த்தைகளால் சொல்லப்படாததை நீ எப்படி நன்றாகக் கேட்க முடியும்?

3. உன்னுடைய பிரசன்னத்தால் வித்தியாசம் உண்டாக்கப்பட்ட ஒருவர் உன்னுடைய ஜீவியத்தில் யாராவது இருக்கிறார்களா மற்றவர்களுக்காகவும் அங்கே எவ்வாறு இருக்கிறாய்?

4. நீதி 3:27 "நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே."
உன்னுடைய பலத்தால் செயல்பட முடியும்பொழுது நீ எப்பொழுதாவது செய்யத்தக்கவர்கள் இருக்கும்பொழுது அந்த நன்மையை அவர்களுக்குச் செய்யாமல் எப்பொழுதாவது நிறுத்தி வைத்துக் கொண்டது உண்டா? ஏன்? மற்றவர்களுக்குத் தேவை என்று நீ அறிந்திருக்கிற மக்களை ஊக்கப்படுத்துவதிலிருந்து அதை நிறுத்திக் கொள்ளக் காரணமாயிருக்கிற எதிர் மறையான உணர்வுகளை நீ எவ்வாறு சந்திக்கக் கூடும்?

5. ஊக்கப்படுத்துதலுக்காக உன்னை பிறர் சார்ந்திருக்கக் கூடுமா? ஏன்? அல்லது ஏன் கூடாது? மற்றவர்களை ஊக்கப்படுத்துவதில் நீ எவ்வாறு இயல்பாக இருக்க முடியும்?

6. மற்றவர்கள் உங்களை தங்களுக்கு சாதகமாக்கி உங்களையோ அல்லது உங்களது ஊக்குவித்தலை சார்ந்திருப்பதை எவ்வாறு தவிர்ப்பீர்கள்?

7. நீங்கள் மற்றவர்களை ஊக்குவிக்கும்பொழுது நீங்களும் ஊக்குவிக்கப்படுவீர்கள். (நீதி 11:25) உங்களது ஊக்குவித்தலே காலா காலங்களில் உங்களிடமே திரும்பி வந்ததை நீங்கள் கண்டுபிடித்தது உண்டா?

8. ஊக்குவிப்பவராக நீங்கள் எச்சமயத்திலும் எழுந்து போக அழுத்தத்தையோ அல்லது பொறுப்பையோ உணர்ந்தது உண்டா? நீங்கள் எப்படி உங்களை இளைப்பாற்றிக் கொண்டு இயேசு உங்கள் மூலமாகப் பிரகாசிக்குமாறு எப்படி அனுமதிக்க முடியும்?

9. மற்றொருவரை ஊக்குவிக்குமாறு உங்களது சொந்தமான தனிப்பட்ட வேதனைகளை அப்பால் வைத்து விட்டதினால் வளர்ச்சி அடைந்தீர்களா எப்படி?

10. தேவனுடைய "அதிகாரம் அருளுதல்" என்பதை அனுபவத்தில் அனுபவித்திருக்கிறீர்களா? நீங்கள் உங்களுக்குச் சொந்தமான தனிப்பட்ட முறையில் நீங்கள் கொடுப்பதற்கு அதிகமாக அதற்கு அப்பால் மற்றவர்களுக்குத் தருவதற்காக தேவன் உங்களுக்கு வரங்களையோ அல்லது ஊக்கமான ஆறுதல் தரும் வார்த்தைகளையோ எப்பொழுதாவது அருளிச் செய்திருக்கிறாரா?

11. இப்பொழுது சரியாக உம்முடைய ஜீவியத்தில் யார் அல்லது என்ன உமக்கு ஊக்கத்தை குறைக்கம் மிகப் பெரிய மூலகாரணமாகிறது? இதை மாற்றிக் கொள்ள முடியுமா? அப்படி முடியாவிட்டால் "அந்த பிரச்சனைக்கு மத்தியில்" உங்களை எவ்வாறு உங்களால் உங்களையே ஊக்கப்படுத்திக் கொள்ள முடியும்?

12. "தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்" (I சாமு 30:6).
சங் 103, 104ல் தாவீது தன் ஆத்துமாவைப் பார்த்து தேவனைத் துதிக்கும்படிக்கு கட்டளையிட்டான். அவன் "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி" என்று ஐந்து தடவை திரும்பத் திரும்பவும் சொன்னான்.
திடன் கொள்வதில் ஒரு வழியாவது நம்முடைய வேதனையில் ஒரு நோக்கத்தை நாமே கண்டறிந்து கொள்வதாகும். ஆண்டவருடைய கண்ணோட்டத்தில் உன்னுடைய ஜீவியத்தில் என்ன நேரிடுகிறது. அவர் தம்முடைய மேன்மையான ஒழுக்கத் தன்மையை உன்னுடைய வேதனையின் மூலமாக உன்னிலே எப்படி கட்டி எழுப்புகிறார்?

13. உன்னுடைய புண்படுத்தும் தீங்கான சூழ்நிலைமையை நீ சுமக்கிறாயா? அல்லது தேவன் தாமே தாங்குகிறாரா?

14. நாம் எல்லோரும் ஒரு சமயத்தில் ஒரு அடிதான் எடுத்து வைக்கிறோம்? ஒரு நாளில் ஒரு தடவையாவது "கர்த்தருக்குள் உன்னைத் திடப்படுத்திக் கொள்வதற்காக" உன்னை ஒப்படைப்புச் செய்வாயா? அதை எப்படி நீ ஆரம்பிப்பாய்?

மற்றவர்களைத் திடன் கொள்ளச் செய்தல்

இன்று "நீ யாரையாவது திடன் கொள்ளுங்கள்" என்று ஊக்கப்படுத்தினாயா? இல்லையென்றால் இன்றே அதைப் பழக்கப்படுத்த ஆரம்பித்து விடு. மேலும் தினந்தோறும் யாரையாவது ஒருவரை திட்டவட்டமாகவும் குறிப்பாகவும் ஒருவரை ஊக்குவித்து, நோக்கங் கொள்ளுமாறு செய்து, போஷித்து வளர்க்கும் படியாகச் செய்வதற்கு குறிப்பாக வைத்துக் கொள்ளவும். அவர் சோர்வுற்றவராக மனநிலை குறைந்தவராக அதிருப்தியானவரா அதுவும் சரீரத்திலும் ஆவியிலும் அவ்வாறு இருந்தால், அந்த நபரை, தேவனுடைய அன்புக்கும் இரட்சிப்புக்கும் உன்னுடைய வார்த்தை, செயல், நடவடிக்கைகளால் வழி நடத்திச் செல்ல வேண்டும்.

ஊக்குவிப்பது என்பது எப்பொழுதுமே சுலபமாகக் கொடுக்கப்படும் காரியம் அல்ல. ஊக்குவிப்பது என்பது அந்த நபருடைய முதுகில் தட்டிக் கொடுப்பதோ அல்லது முகஸ்துதியான வார்த்தைகளைச் சொல்ல வேண்டுமென்ற அவசியமுமில்லை. சில சமயங்களில் நீங்கள் ஒன்றும் சொல்லாவிட்டாலும் நாம் நேர்மையாக இருக்க வேண்டும் என்ற விளக்கத்தைக் கொடுக்கும். உண்மையான காரியமாக 'ஊக்குவித்தல்' என்பது பலவிதமான வடிவங்களை எடுக்கலாம். அவ்வாறு 'ஊக்குவித்தல்' என்பது 'சாய்ந்து கொள்ள ஒரு தோளாகும்'. ஒரு சிநேகிதமான தழுவுதலோ, கரம் பிடித்துக் கொள்ள ஒரு கரம், புரிந்து கொள்ளும் ஒரு புன்சிரிப்பு, சரியான திசையில் ஒரு சிறிய தள்ளுதல் ஆகிய ஏதாவது ஒன்றாக இருக்கலாம். இந்த 'ஊக்குவித்தல்' எந்த வடிவத்தை எடுத்தாலும் அது ஒரே செய்தியைத் தான் கொடுக்கும். "நீ எனக்கு முக்கியமானவன் நான் உனக்குப் போதுமானவற்றை அவ்வாறு சொல்லக் கரிசனையுடன் இருக்கிறேன் என்பதாகும்."

ஒவ்வொருவரும் ஆறுதலான ஊக்குவிக்கும் ஒரு வார்த்தையைப் பெற்றுக் கொள்வதையே ஆசைப்படுவார்கள். ஆனால் ஒவ்வொருவருக்கும் எப்படி ஊக்குவிக்குப்பதைக் கொடுப்பது எப்படி என்று தெரிந்திருக்க மாட்டார்கள். ஆனால் நாம் இதை இப்பொழுது கற்றுக் கொள்ளவும் கூடும். பின்வரும் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டுபவை "ஆரம்பித்தலுக்கு" மிகச் சிறந்ததோர் இடமாகும்.

நீ சொல்வதை குறிப்பாக சுட்டிக் காட்டிப் பேசு:-

ஊக்குவித்தலுக்கென்று வரும்பொழுது பொதுப்படையாக ஒன்றும் சொல்லாதே. பின்வருமாறு சொல்வது ஒரு வேளை உதவியாக இருக்கலாம்: "நீ இந்த சந்தர்ப்ப சூழ்நிலையைப் பற்றி நேர்முகமான பக்கத்தை எப்பொழுதும் பார்க்கிறாய் என்பதை நான் விரும்புகிறேன்" இந்த மாதிரியான உரையாடல் கூற்றுகள் நீ என்ன நினைக்கிறாய் என்பதை மிகவும் சரியாகத் தெரிந்து கொள்ள உதவும்.

நீ நேர்மையாக இரு ஆனால் அன்பாகவும் இரு.

கட்டி எழுப்பும் விமரிசனம் நல்லது தான். ஆனால் அது சரியான இடத்தில் சரியான நேரத்தில் கொடுக்கப்பட வேண்டும். ஒரு தோழியைப் பார்த்து அவளுடைய பாடலானது பாடும் விதம் பயங்கரமாக இருந்தது என்று அந்த முழு நேரத்தில் கூறப்படுவதல்ல. ஆனால் இரக்கமற்றதாகும். அன்புடன், உண்மையைப் பேசுதல் என்பது நாம் அந்தக் காரியத்தைக் குறித்து உணர்ச்சி பூர்வமாக இருப்பதோடு பரிசுத்த ஆவியால் நடத்தப்பட வேண்டும் என்ற பாடத்தை நாம் எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியமான பாடமாகும்.

நீ இயல்பாக (தருணத்துடன்) இரு

உன்னை யாராவது கடந்து போவதற்கு ஓர் சந்தர்ப்பம் ஒருமித்து உடன்பாடாவதற்கு அனுமதிக்காதே. ஒவ்வொருவரும் பாராட்டப்படும் பொழுது மகிழ்ச்சி அடைகின்றனர். ஆனால் எதிர்பாராமல் பாராட்டப்படுதல் எல்லாவற்றையும் விட இனிமையானது.

அங்கே தாமதித்து இரு

நீ அங்கே வருகை தந்து ஆஜராகி இருப்பது பிறருக்கு ஊக்கமான தைரியமாக இருக்கக் கூடும். ஒரு நண்பன் நெருக்கமான நேரங்களின் வழியாகக் கடந்து போகும் பொழுது அங்கே நாம் சந்தித்துப் பேசிக் கொள்வதற்கு யாரோ ஒருவர் இருக்கிறார் என்பதை அறிந்திருப்பது ஜீவியத்தைச் சற்று அதிகமாக சகித்துக் கொள்ளும்படி செய்யக் கூடும். (நீதி 17:17; 18:24)

நீதிமொழிகள் 25:11

ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை, வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம் என்று கூறுகிறது.

கிறிஸ்தவர்கள் பாடுகளைச் சந்திப்பதற்கான காரணங்கள்

“நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே, தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்குள் உடன் சுதந்தரருமாமே. கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும் படிக்கு அவருடனே கூட பாடுபட்டால் அப்படியாகும்.” (ரோமர் 8:17)

கிறிஸ்தவர்களாக நாம் கிறிஸ்துவின் மகிமையில் பகிர்ந்து கொள்ளும் எண்ணத்தை விரும்புகிறோம். ஆனால் அவருடைய கஷ்டங்களில் பகிர்ந்து கொள்ளுதலைப் பற்றி என்ன? ஒரே ஒரு தரம் எல்லாவற்றிற்குமாக மரிப்பதையே இயேசு எச்சரிக்கையுடன் ஏற்றுக் கொண்டார். நாம் அதைப் பற்றி மறுபடியும் கவலைப்பட வேண்டும் என்ற அவசியமே இல்லை. ஆனால் நாம் மகிமையில் பங்கு கொள்ள வேண்டுமானால் நாமும் கஷ்டப்பட வேண்டிய காலங்களில் கட்டாயம் கஷ்டப்பட வேண்டும் என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. இது அதற்காகப் பாத்திரமானது தானா? ரோமர் 8:18ல் பவுலுடைய வார்த்தைகளைக் கவனித்துக் கேளுங்கள். “ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்” அடிக்கடி நமது சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணத்தால் கஷ்டப்படுகிறோம் என்று எண்ணுகிறோம். மேலும் நமது சந்தர்ப்பங்கள் மாறுமானால் நாம் சரியாகச் செயல்பட முடியும் என்றும் நம்புகிறோம். ஆனால் நமது சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஒன்றுமே நன்மையாக இல்லாத போதுங்கூட தேவன் நம்மை முதிர்ச்சி பெற்றவர்களாகவும், ஸ்திரமாகவும் நாம் சரியாக செயல்பட வேண்டும் என்று வாஞ்சிக்கிறார்.

அங்கு வெவ்வேறு நிலைகளில் விசுவாசம் உண்டு. ஆனால் அதிகமான சமயங்களில் நமது விசுவாசத்தைப் பயன்படுத்தி பிரச்சனையை தவிர்த்துக் கொள்ள நினைக்கிறோம். ஆனால் சில சமயங்களில் நமக்கான தேவனுடைய திட்டமானது ஓர் உயர்ந்த தரமானதும் ஜீவியத்தின் சவால்களுக்கு ஊடே நம்மை நடத்திச் செல்லக் கூடிய விசுவாசத்தை செயல்படுத்தி கிரியை செய்ய வேண்டும் என்பதாகும். ஒரு சந்தர்ப்பத்தில் இருந்து விடுதலை பெறுவதை விட இதற்கு மகத்தானதோர் விசுவாசம் தேவை என்று நான் நம்புகிறேன். நாமும் அடிக்கடி தேவனுடைய விடுதலையாக்கும் வல்லமையை வியப்புடன் பார்த்து அவர் நம்மைக் காப்பதையும் பலப்படுத்துவதையும் ஆக்கபூர்வமான திறமையையும் கூடப் பார்க்காமல் விட்டு விடுகிறோம்.

1. வசனத்தைப் பற்றிய அறிவு குறைவினால்

அநேகக் கிறிஸ்தவர்கள் தேவனுடைய வசனமாகிய சத்தியத்தைப் பற்றிய அறிவை விட பிரபஞ்சத்தின் அறிவைத் தேடுவதில் சுறுசுறுப்பாக முனைப்புடன் இருக்கின்றனர். கர்த்தர் தாமே சொல்கிறார், “என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்.” (ஓசியா 4:6)

பவுல் நன்கு கற்று அறிந்த மனிதன். அவனுக்கு திரண்ட ஐசுவரியமான பிரபஞ்சத்தின் அறிவு உண்டு. ஆனால் ஆவிக்குரிய ஞானத்தைப் பற்றிய முக்கியத்துவத்தை அவன் தெளிந்துணர்ந்த பொழுது அவன் கூறியதாவது, “இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரேயன்றி வேறொன்றையும் (ஒன்றோடும் அறிமுகம் இல்லாமலும், ஒன்றையும் அறியாத அறிவைப் பற்றிய வெளிக்காட்டுதல் இல்லாமலும், ஒன்றையும் பற்றி விழிப்புணர்வு இல்லாமலும்) உங்களுக்குள்ளே அறியாதிருக்க (மேசியாவைப் பற்றி) தீர்மானித்திருந்தேன்” (I கொரி 2:2)

பவுலைப் போலவே நாமும் ஆவிக்குரிய காரியங்களைக் கற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகும். கலா 6:8ல் சொல்கிறதாவது, “தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் (இழிவான தன்மை இச்சைகள்) மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினால் நித்திய ஜீவனை அறுப்பான்.”

2. கீழ்படியாமை

ஒரு தரம் நாம் தேவனுடைய வார்த்தையை அறிந்திருப்போமானால் அதற்கு கீழ்படிய வேண்டுமென்ற பொறுப்பு நமக்கு இருக்கிறது. நம்மில் அநேகர் கீழ்படிவதில் நோக்கமாய் இருப்பார்கள். ஆனால் சில சமயங்களில் அதைத் தள்ளிப் போடுகிறோம். மேலும் (காலந் தாழ்த்திய) தாமதித்த

கீழ்படிதலுங்கூட கீழ்படியாமையாகும். அது நம்மைக் கஷ்டத்திற்குள்ளாக்கும். யாக்கோபு 4:7ல் நல்ல புத்திமதி தரப்படுகிறது. "ஆகையால் தேவனுக்குக் கீழ்படிந்திருங்கள்" என்று சொல்கிறது. தேவன் என்னைப் பார்த்து ஏதோ ஒன்றைச் செய்யுமாறு சொல்லும் பொழுது நான் அதை எழுதி வைத்துக் கொள்வதை உதவியாகப் பார்க்கிறேன். இது என்னை நோக்கி நான் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படி விரும்பினால் நான் கீழ்படிய வேண்டும் என்று நினைப்பூட்டுதலாக இருக்கிறது. நீங்கள் மனம் பொருந்திச் செவி கொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள். (ஏசாயா 1:19)

3. உன்னுடைய விசுவாசத்தைச் சோதித்து தூய்மையாக்க

சில சமயங்களில் மக்கள் தங்களை ஒரு காலத்தில் சோதனை அல்லது கஷ்டமான பாதையில் கட்டாயமாக போக வேண்டிய திருப்பதாக தங்களைக் காணும்பொழுது ஆச்சரியமடைந்திருப்பதாகக் காணப்படுவார்கள். ஒரு வேளை அவர்கள் தேவனுடைய வார்த்தையை படிப்பதிலும் கீழ்படிதலிலும் உண்மையுள்ளவர்களாக இருந்திருப்பினும் சோதனைகள் வந்து கொண்டே இருக்கும். சில சமயங்களில் சோதனைகள் சாதாரணமாக நம்முடைய விசுவாசத்தைச் சோதித்து பரிசுத்தப் படுத்துவதற்காகவே வருவதாக இருக்கும். "இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள். என்றாலும், துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக் காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். (அதன் உண்மையானது) அழிந்து போகிற பொன் வெள்ளியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசுக் கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுண்டாகக் காணப்படும்." (I பேதுரு 1:6-7)

4. மனம் உடைந்து நொறுக்கப்படுவதுக்கான அவசியம்

"நொறுக்கப்படுதல்" என்ற வார்த்தையை மக்களிடம் அச்சத்தை வருவிக்கலாம். ஆனால் அது உண்மையாகவே ஒரு பொல்லாத வார்த்தை அல்ல. தேவன் நமது ஆவியை உடைக்கும் படி விரும்புவதில்லை. ஆனால் அவர் நம்முடைய புறக்கூடாகிய மாம்சத்தையே அது அவர் நமக்குள்ளும் நம் மூலமாகவும் பிரத்தியட்சமாக தாம் இருக்க விரும்புவதை தடை செய்ய விரும்புவதால் அதை உடைத்து நொறுக்க விரும்புகிறார். அதாவது நமக்குள் இருக்கும் பெருமை, கலகம், தன்னயம், சுயாதீனம் ஆகியவற்றையே நொறுக்க விரும்புகிறார். தேவன், நாம் அவரைச் சார்ந்திருப்பதையே விரும்புகிறார். ஆகவே நமது கஷ்டங்கள் அந்த எல்லைக் குறிக்குள் நம்மைக் கொண்டு வருவதைப் போல் தோன்றுகிறது. என்னவென்றாலும் தேவன் மீது நாம் சார்ந்திருப்பதால் அதற்காக நாம் நமக்காக வருத்தப்படக் காரணமாக இருக்கக் கூடாது. நான் ஒரு தடவை சொன்னதாவது, "ஆ, கர்த்தாவே நான் தனியனாக இருக்கிறேன். எனக்கு உம்மைத் தவிர வேறு யாருமே இல்லை. நான் தேவனை மாத்திரம் பற்றிக் கொண்டிருப்பது நாம் உறைவிடமாக உள்ளிருப்பதற்கு நல்ல ஸ்தானமாகும்" என்பதைக் கண்டுபிடித்திருக்கிறேன்.

5. இரக்கத்தைக் கட்டி எழுப்ப

இரக்கம் என்பது ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும் பிரச்சனைகளை அனுபவிப்பதல் பிறப்பதாகும். வேதாகமம் சொல்வதாவது "நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியன் நமக்கிராமல் எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபி 4:15) இயேசு என்னைப் புரிந்து கொண்டிருக்கிறார். எனக்காக இரக்கம் வைத்திருக்கிறார் என்பது எனக்கு ஆறுதல் அளிக்கிறது. சோதனைகளின் வழியாகக் கடந்து செல்லுதலும் தேவனுடைய மீட்பை அனுபவிப்பதும் நம்மை ஊழியத்திற்காக நன்றாகக் கட்டி எழுப்புகிறது. நமது வேதனை ஒருக்காலும் வீண் போகாது. அது இரக்கத்தைக் கொண்டு வந்து புண்பட்ட மக்களை சென்றடைந்து, "நான் இங்கே இருந்தேன். ஆனால் தேவன் தாமே அதிலிருந்து வெளியில் கொண்டு வந்தார். அதையே அவர் உனக்கும் செய்வார்" என்று சொல்லும்படியாகச் செய்கிறது.

6. பிறரை ஊக்குவிக்க

பவுல் அப்போஸ்தலன் கூறுகிறதாவது, தேவன் அவரை கடந்து செல்லும்படியாக அனுமதித்த அநேகக் காரியங்கள் இருக்கின்றன. அவைகளைச் சாதாரணமான பொருள்பாடத் தலைப்புகளாகவே இருக்கும்படியாக அவ்வாறு செய்தார். "சகோதரரே, எனக்கு சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன். சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன் கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்." (பிலிப் 1:12,14) பவுலுடைய சிறைக் காவல் பொழுதிலுங்கூட, அவருடைய ஸ்திரமான தன்மையும், தேவனுக்காக அவருடைய திறமையும் பயன்பட்டது என்பது பிரத்தியட்சமாயிற்று.

நாம் பிறருக்காக ஊழியப் பணி செய்ய வேண்டுமென்றால் நாமுங்கூட சில எதிர்மறையான தீங்கான சந்தர்ப்பங்களை நேருக்கு நேர் சந்திக்க வேண்டும். நாம் விசுவாசத்தில் உறுதியாக நின்றாலும் நம்பிக்கையில் நிலைத்திருந்தாலும் தேவன் நம்மை ஜெயத்திற்கு நேராக வழி நடத்துவார். இந்த நடைமுறையான வழியில் நாம் அநேகரை திடன் கொள்ளச் செய்கிறவர்களாக இருப்போம்.

7. வசனத்தின் காரணமாக

சில சமயங்களில் நாம் சாதாரணமாக வசனத்தில் ஈடுபாடு கொண்டிருப்பதால் சத்துருவின் தாக்குதல்களால் இன்னல்களுக்குள்ளாவோம். மாற்கு 4:17ல் வசனத்தைக் கேட்டுக் கொண்டவர்கள் கொஞ்ச காலம் மாத்திரம் நிலைத்திருந்து வசனத்தினிமித்தம் உபத்திரமும் துன்பமும் உண்டானவுடன் இடறலடைகிறார்கள். (அவர்கள் வசனத்தின் பேரில் அதிருப்தி அடைந்து சினமுற்று அதற்காக விசனமடைகிறார்கள்) அவர்கள் இடறி விழுந்து விடுகிறார்கள். ஒருவர் தேவனுடைய வசனத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் பொழுது சாத்தான் உடனே வருவதில் மகிழ்ந்து இருதயத்தில் விதைக்கப்பட்ட வசனத்தைத் திருடிக் கொண்டு போக முயற்சிக்கிறான். வசனமானது நம்மை பலப்படுத்தி நாம் ஒரு ஜெயங்கொண்ட கிறிஸ்தவ ஜீவியம் செய்யும்படி உதவி செய்கிறது. அவன் அதைத் தடுத்து நிறுத்தும்படி தன்னால் இயன்ற வரை முயற்சிக்கிறான். ஆகவே உன்னுடைய இருதயத்தில் தேவனுடைய வசனத்தைப் பாதுகாத்து பிசாசானவன் அதை உன்னை விட்டுத் திருடிச் செல்லாதபடிக்குப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

8. வசனத்தில் ஜீவிக்கும் காரணமாக

அநேக சமயங்களில் கிறிஸ்தவர்கள் சோதனைகளைச் சந்தித்து, அவர்கள் வசனத்தின்படி ஜீவிக்கும். காரணத்தினாலே கஷ்டப்படுகிறார்கள. (II தீமோத் 3:12) "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன். (தைரியங்கொண்டு, நம்பிக்கையுடன் உறுதியாய்) நான் உலகத்தை ஜெயித்தேன்." (நான் உன்னை தீங்கு செய்யும் அதிகாரத்தினின்று விலக்கி நீக்கி விட்டேன். உனக்காக அதை ஜெயித்து விட்டேன்) (யோவான் 16:33)

என்ன அருமையான வாக்குத்தத்தம். நமது கஷ்டங்களைப் புரிந்து கொண்டு, மகிமையைப் பெற்றுக் கொள்வதைப் பற்றியும் அதில் பங்கு பெறுவதைப் பற்றி அறிந்து கொள்வதால் நமது ஜீவியத்தை துன்பம் அடையும் நேரத்தில் கூட பங்கெடுத்துக் கொள்வதென்பது ஜீவியத்தை மகிழ்ச்சியுடன் அனுபவிக்குமாறு சுலபமாகச் செய்யும்.

நாம் விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் உறுதியாக நின்றால் தேவன் நம்மை ஜெயத்தின் பாதையில் கொண்டு வந்து இந்த விதமான நடைமுறையில் நாம் பிறருக்கும் திடன் கொண்டு சிறப்பாக ஊக்கம் கொடுப்பவர்களாக இருப்போம்.

கிறிஸ்தவ வாழ்க்கை முறையை விருத்திச் செய்தல்

வாழ்க்கை முறை என்பது சமீப காலத்தில் பிரபலமாக வழங்கப்படும் வார்த்தையாய் இருக்கிறது. ஒரு புத்தகக் கடையில் ஒரு மனிதனைச் சந்தித்துப் பேசினேன். நம்முடைய விசேஷித்த கூட்டத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்தேன். "ஓ, அது என் வாழ்க்கை முறை அல்ல" என்று பதில் சொன்னான். அது அவனை முற்றிலுமாக மேற்கொண்டு தேவனைப் பற்றி சிந்திப்பதிலிருந்து அவனை மன்னித்து விட்டதாகக் கருதினான். கிறிஸ்தவர்களுங்கூட தங்களுக்கென்று பிரத்தியேகமான சிறிய புழுக்கூடான வாழ்க்கை நெறி என்பதில் தங்களை அடைத்து வைத்துக் கொள்ளும் போதும் "ஒவ்வொருவருக்கும் தனக்கென்று சொந்தமான" தென்று கூறிக் கொள்வது "நான் என்னுடைய சொந்தமான காரியங்களையே செய்து கொண்டிருக்கிறேன்" என்று மற்றொரு விதமாகக் கூறிக் கொள்வதாகும்.

ரோமர் 12ம் அதிகாரத்தைப் படிப்போம். ஒரு உண்மையான கிறிஸ்தவ ஜீவியத்து பாணியை உண்டாக்கி மேன்மைபடுத்திக் கொள்வது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

ஒப்புக் கொடுக்கும் முறை

ரோமர் 12:1ம் வசனத்தில் "நமது சரீரங்களை கிறிஸ்துவுக்கு ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்" என்று வாசிக்கிறோம். என்னவென்றால் அவைகளை மீட்கும் பொருளாகப் பெறும்படிக்கு தன்னைத் தானே கல்வாரி சிலுவையில் ஒப்புக் கொடுத்து விலையாக வாங்கிக் கொண்டார். மேலும் அந்த ரோமர் 12ம் அதிகாரம் "அப்படியிருக்க" என்ற வார்த்தையுடன் ஆரம்பிப்பதைக் கவனியுங்கள். அது 11ம் அதிகாரத்தை முடிக்கும் வார்த்தைகளான சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக ஆமென் என்பதைக் குறித்து மறுபடியும் சுட்டிக் காட்டுகிறது. அதுவே அதை முடிவாக்குகிறது. நாம் வைத்திருக்கிறதெல்லாம் இயேசுவுக்குள் இருக்கிறது. அவர் இல்லாவிட்டால் நாம் என்னவாக இருப்போம்? ஆகையால் பவுல் அப்போஸ்தலன் நம்மை கிறிஸ்தவ ஜீவிய பாணியில் பிரவேசித்து நமது சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக் கொடுப்பதே "புத்தியுள்ள ஆராதனை" என்கிறார். நமது ஜீவியங்களுக்காக தேவனுடைய சித்தத்தைப் புரிந்து கொள்வதற்கு திறவு கோல் ஆகும். பழைய ஏற்பாட்டு பலி பீடங்களில் இரத்தம் சிந்திக் கொண்டு இடப்படும் இரத்த பலிகளை தேவன் எக்காலத்திலும் கேட்டுக் கொண்டிருப்பதில்லை. கிறிஸ்துவே தேவனுடைய ஆட்டுக் குட்டியானவர். எல்லாவற்றிற்காகவும் ஒரே தரம் அவரால் செலுத்தப்பட்ட பலியானது (எபி 7:27; 9:28) நமக்கு ஒரு புதிய ஜீவிய பாணியை உண்டாக்கி நமது சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கும்படி வசதியாகச் செய்து கொடுக்கிறது. வசனம் 1ல் வெளிப்படுத்துவது போல இந்த 'ஒப்புக் கொடுத்தலானது' பரிசுத்தமும் புத்தியுள்ள ஆராதனையாகும். நாம் எப்பொழுதாவது நமது சரீரங்களை அவருக்காகவும் அவருடைய ஊழியத்திற்காகவும் ஒப்புக் கொடுத்ததுண்டா?

மறுரூபமாகுதல்

ரோமர் 12:2 ஒரு புரட்சிகரமான மாறுதலைப் பற்றிக் கூறுகிறது. அதாவது ஒரு மாறுதலான மறுரூபமாகுதல் நமது சரீரங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுப்பதனால் பெறக்கூடியதொன்றாகும். நாம் இந்த பிரபஞ்சத்துக்குரிய வேஷந்தரியாமல்... இந்த ஒப்புக் கொடுத்தலானது - இந்த வேஷத்தை நீக்கி விட்ட பிறகுதான் "மறுரூபமாகுதலை" ஆரம்பிக்கும்.

நம்மில் அநேகர் இன்னும் பிரபஞ்சத்துக்குரிய வேஷத்தைத் தரித்திருக்கிறோம். அந்த வடிவத்தில் நாம் அழுத்தப்பட்டிருக்கிறோம். நாம் யோவான் 1ம், 2ம் அதிகாரங்களில் நமக்கு சொல்லப் பட்டிருக்கிறதான "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறக் கூடாது" என்பவைகளை மேலோட்டமாகப் பார்த்து துரிதமாக விரைந்து செல்லுகிறோம். I யோவான் 2:15ல் கூறப்பட்ட "பணம் போன்றவற்றை" இந்த உலகத்திலுள்ள சில பொருட்கள் நமக்கு அவசியமானவைகளே, முக்கியமானவைகளுங்கூட. ஆனால் அவற்றை நாம் நேசிக்கக் கூடாது. இதற்கு பதிலாக நாம் 'மேலானதும் பரிசுத்தமும்' ஆகிய ஒன்றை மகிழ்ந்து அனுபவிக்கிறோம். அதிலும் அவருடைய சாயலில் 'மகிமையான மறுரூபமாகுதலைப்' பெற்று அடைகிறோம். இவ்வாறு மறுரூபமாகுதலே நமது ஜீவியத்திற்கான தேவனுடைய சித்தத்திற்கு நடத்திச் செல்கிறது. (ரோமர் 8:29-30) இங்கே தான் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்பது பூரணமாக என்று பிரகடனப் படுத்தப்படுகிறது.

பூரணமாகுதலை யாரும் மிஞ்ச முடியாது. தேவனுடைய சித்தத்திற்கு குறைவு பட்டதெதுவும் பூரணமானதாகாது.

தாழ்த்தப்படுதல்

அடுத்தபடியாக தேவன் தாழ்த்துவதைப் பற்றி பேசுகிறார். அதாவது தேவனுக்கும் மனுஷனுக்கும் முன்பாக ஒருவர் தன்னைத் தாழ்த்துதலாகும். ரோமர் 12:3ல் "எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்" தன்னைக் குறித்து நாம் எண்ணுவதற்கு அதிகமாக உயர்வாகத் தன்னைப் பற்றி எண்ணக்கூடாது என்று வற்புறுத்தி வேண்டுகோள் விடுக்கிறது. மார்க்க சம்பந்தமான சில கண்காட்சிகள் ஆக நாம் இன்று காண்பவை நித்திய காலமான மாம்சீக அணி வகுப்புகளாகத் தோன்றும். மேலும் தேவனுக்காக என்று தங்கள் ஜீவியத்தை ஆரம்பித்தவர்கள் தற்காலத்தில் தங்களைப் பற்றியே (பெருமையாகப்) பேசுகிறவர்களாக தங்களுடைய சாதனைகள், புத்தகங்கள், பாட்டுகள், அனுபவங்கள் ஆகியவற்றைப் பற்றியே பேசுவார்கள். இவைகள் எல்லாவற்றையும் பற்றி தேவன் என்ன நினைக்கிறார் என்பதைப் பற்றி ஒருவருக்கு வியப்பையே அளிக்கும்.

தாழ்மை என்பது இழந்து காணாமற் போய் விட்ட கலையாகத் தோன்றுகிறது. ஆனாலும் தேவன் நமக்கு போதனைகள் தருகிறார். ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். (I பேதுரு 5:6) இந்த தாழ்த்துதல் ஆனது அவருக்கு நாம் ஒப்படைப்பு செய்வதிலிருந்து மட்டுமல்ல நம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கும் விரிந்து செல்கிறது. ஆகவே நாம் வாசித்து அறிவது "கனம் பண்ணுகிறதிலே ஒருவரை ஒருவர் முந்திக் கொள்ளுங்கள்" (ரோமர் 12:10) என்பதாகும். (நம்மில் அநேகர் தங்களைத் தாங்களே விரும்பித் தெரிந்து கொள்கிறோம்) மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதை விட, "ஒருவரோடொருவர் ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள். மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல் தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்". "உங்களையே புத்திமான்கள் என்று எண்ணாதிருங்கள்" ரோமர் 12:16 என்று உட்கருத்தாக கட்டளையிடுகிறார்.

பதவி நியமனம்

இப்பொழுது பதவி நியமனம் வருகிறது. நமது ஊழியப் பணிக்காக அவருடைய திட்டத்தைத் தேடுகிறோம். "நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறு வரங்களுள்ளவர்களான படியினாலே" (ரோமர் 12:6) ஆகவே தேவன் எந்த ஊழியம் செய்யும்படி விரும்புகிறாரோ - போதிக்க, பகிர்ந்து கொடுக்க, ஆளுகை செய்ய - எதுவென்றாலும் நாம் நமக்குக் கொடுக்கப்பட்ட ஊழியப் பணியைத் தளரா உழைப்புடன் எளிதாக விசுவாசத்துடன், மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவோமாக. கிறிஸ்து சொன்னதாவது, "நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்" (யோவான் 9:4) அவர் நம்மை என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை அறியு மட்டும் நாம் ஓய்வுறாது கண்டறிந்த பின்னர் அந்த பணி நியமனத்திற்குக் கீழ்படிய வேண்டும்.

பிரிந்திருத்தல்

இன்று அநேகர் பிரிந்திருத்தல் என்பதை புறக்கணித்து விட விரும்புகிறார்கள். ஆனால் இங்கே நமக்குச் சொல்லப்படுகிறதாவது, "உங்கள் அன்பு மாயமற்றதிருப்பதாக. மேலும் நாம் தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள் என்றும் (ரோமர் 12:9) கூறுகிறது." இன்றைய மதசம்பந்தமான வாழ்க்கை முறையானது கிறிஸ்தவன் என்ற முறையில் தீமையை வெறுத்து விட வேண்டும். ஆம் மாம்சத்தால் கறைபட்டிருக்கிற வஸ்திரத்தை வெறுத்துத் தள்ள வேண்டும். (யூதா 1:23) நமது ஜீவியத்தில் குப்பையையும் தூசியையும் நுழைந்து விடாதபடி பார்த்துக் கொள்வதில் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். ஒரு சிறுவன் ஒரு சமயம் சொன்னதாவது, "பூக்கள் ஏன் மலருகின்றன என்பது எனக்குத் தெரியும். அவைகள் துரிதமாக விரைந்து வந்து குப்பையை விட்டு வெளியில் வர விரும்புகின்றன" என்றான். பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? (ரோமர் 6:2) என்று பவுல் ஐயமுற்றான். நாம் உலகத்தில் இருந்து வெளியில் வந்து ஒரு தனிப்பட்ட ஜனமாய் இருக்க வேண்டும். (II கொரி 6:17) ஐப் பார்க்கவும். நாம் எல்லோரும் புது சிருஷ்டியாய் இருக்கிறோம் அல்லவா?

பிரதிஷ்டை செய்தல் (அ) அர்ப்பணித்தல்

நமது வணிகம் எதுவாக இருந்தாலும் அதற்கு நம்மை அர்ப்பணித்துக் கொண்டாக வேண்டும். "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள். ஆவியிலே அனலாயிருங்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்" (ரோமர் 12:11) பணியிடத்தில் சோம்பலாய் இருப்பதாலும், தன்னால் சிறப்பாகச் செய்யக் கூடியதைச் செய்யாமல் இருப்பதாலும் அநேகக் கிறிஸ்தவர்கள் கர்த்தருக்காக அவர்களுடைய சாட்சியைப் பங்கப்படுத்தி விடுகிறார்கள். நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்களாய் இருக்கிறோம். ஆதலால் நம்முடைய வேலையைச் சரியாகச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். (கொலோ 3:23)ஐப் பார்க்கவும். "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை சேவிக்கிறதினாலே, சுதந்திரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்கள்" (வ. 24)

ரோமர் 12:12ல் பவுல் அப்போஸ்தலன் தொடர்ந்து கூறுவதாவது "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள். ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்" ஒரு ஊக்கமுள்ள மகிழ்ச்சியுள்ள பொறுமையான கிறிஸ்தவர் என்பவர் ஏதோ ஒரு வகையில் அரிதானவர். அல்லவா? ஆனாலும் நாம் எல்லோரும் இருக்கக் கூடும் என்று நான் நம்புகிறேன். தேவன் ஒரு போதும் செய்யக் கூடாத ஒரு கட்டளையைக் கொடுப்பதில்லை.

அந்நியோந்நியம்

பவுல் அப்போஸ்தலன் மற்ற பரிசுத்தவான்களுக்கும் அவர்களுடைய தேவைகளுக்கும் உதாரத்துவமாக நாம் கொடுத்து உதவும் படிக்கு நமக்கு சவால் விடுகிறார். (ரோமர் 12:13ஐப் பார்க்கவும்) நாம் உதாரத்துவமும், விருந்தோம்பல் என்ற உபசரிப்பும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். சுய நலமும், கஞ்சத்தனமும், ஈயாத் தன்மையுள்ள மக்கள் எப்பொழுதும் சஞ்சலம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். மேலும் ஒரு சுளித்த முகமானது அந்த மாதிரியான விசுவாசிகளின் சுய நலம் படைத்த வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கிறது.

நாம் தேவனுக்கு அர்ப்பணித்துக் கொண்ட விசுவாசிகளாக ஊழியம் செய்யப் போகிறோம். சிலர் நம்மை சித்ரவதை செய்து குற்றம் சுமத்துவார்கள். ஆனால் நாம் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும். சாபமிடுவதற்கல்ல. (வசனம் 14 பார்க்க) அவ்வாறு சில சமயங்களில் செய்யும் படி உணர்ந்தாலும்! "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (வ. 18) தேவன் அதை அவ்விடத்தில் வைத்ததற்காக மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நாம் ஒன்றையும் பொருட்படுத்தாது. எவ்வளவு கடினமாக நம்மை விரும்பாதவர்களுடன் ஒத்துப் போகும்படி மற்றவர்களை விட தளர்ச்சி அடையும் வரைக்கும் பிரயாசப் படுகிறோம்! கிறிஸ்தவர்களாகிய நாம் பொதுவாக மற்றவர்கள் செய்வதைப் பார்க்கிலும் ஒருமித்துப் போகக் கூடும். அது நமது பொது நுண்ணறிவை உபயோகிக்க உதவுகிறது. "சாதாரணமாக இயல்புடன் இரு. நீ நியாகவே இரு. மகிழ்ச்சி செய்து விட்டோமானால் அவர்களை ஜெபத்தில் மூழ்கி திக்கு முக்காடச் செய்து நம்மால் செய்யக் கூடிய எல்லாவற்றையும் செய்து விடுகிறோம். தேவன் அதை தம்பால் ஏற்றுக் கொண்டு தமது (சொந்தமான) வழியில் நம்முடைய முயற்சிகளை ஆசீர்வதிப்பார்."

"பழி வாங்குதல் எனக்குரியது, நானே பதில் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (வ.17) இதைத் தெரிந்து கொள்வது ஆச்சரியமல்லவா? இடைப்பட்ட காலத்தில், நாம் செய்ய வேண்டியதாவது, "சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள். அழுகிறவர்களுடனே அழுங்கள்" (வ.15) ஐக் கடைபிடிக்க வேண்டும். நாம் மற்றவர்களுடன் மெய்யான ஈடுபாடு கொண்டு ஒருவரோடொருவர் ஏக சிந்தையுடையவர்களாய் இருங்கள் என்று இருக்க வேண்டும். (வ.16) அதிலும் மிகவும் முக்கியமானதோர் ஜீவிய நடைமுறையின் ஒரு பகுதியாக மற்றவர்களோடு அந்நியோந்நியமாக இணைபடுதலாவது "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானதைச் செய்ய நாடுங்கள்" (வ.17) என்று கூறுகிறது. நாம் முற்றிலுமாக உண்மையுள்ளவர்களாக இராவிட்டால் நாம் நேசிக்கிறோம் என்று சொல்லுகிறவர்களையே கர்த்தரிடமிருந்து அவர்களை விலகி ஓடும்படி செய்யக் கூடிய பயங்கரமானதொரு குறைபாடு நமது நன்னடத்தையில் எங்கோ மறைந்து இருக்கிறதென்றாகும். ஒருவர் சொன்ன பிரகாரம் "அநேகரான ஜனங்களைத் திருச்சபையை விட்டு வெளியில் இருக்கச் செய்வது அங்கு ஏற்கனவே கூடியிருக்கும் மக்கள் கூட்டமேயாகும்."

மனமகிழ்ச்சி

மனமகிழ்ச்சி என்பதற்கு நடத்திச் செல்லும் போதனை சுருக்கமாவது கிறிஸ்தவ ஜீவிய நடைமுறை பாணி பற்றிக் கூறும் அதிகாரத்தின் கடைசி வசனத்தில் காணப்படுகிறது. "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" (வ.21) சிறந்த பாதுகாப்பானது பலம் வாய்ந்த (தீங்கிழைத்தலாகும்) குற்றமாகும் என்று கால்பந்து பயிற்சியாளர் உறுதியாகச் சொல்வது போலாகும். நாம் புழுதியில் கிடக்கும் பிசாசானவனைப் பற்றிய பார்வையை விட்டு விட்டு கர்த்தருக்காக பணி செய்வதற்கு வீறு கொண்டு எழ வேண்டும். இதுவே நமது ஜீவியத்தின் நடைமுறை பாணியாக நமது ஜீவனுள்ள கர்த்தர் மறுபடி வரும் வரைக்கும் இருப்பதாக.

பரிசுத்தம் - இதன் திறவுகோல்: சரணாகதி (அ) பணிந்து கீழ்படிதல்

பரிசுத்தத்தைப் பற்றி பேசும்பொழுது அதன் திறவுகோல் சரணாகதி அல்லது பணிந்து கீழ்படிதலாகும்! ஒருவருடைய இருதயம், சிந்தனை, ஆத்துமா, பலம் ஆகியவை மேற்கொள்ளும் ஓர் (வெற்றியான) வாழும் ஓர் ஜீவியத்திற்கு மேற்கூறியவற்றை சரணடையச் செய்வது இன்றியமையாத பூரணமான திறவுகோல் ஆகும். பவுல் அப்போஸ்தலன் ஜீவித்த ஒரு எடுத்துக்காட்டான ஜீவியத்தை வாழுமாறு, "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்." (கலா 2:20) என்ற ஜீவியத்தை அனுபவிக்க வேண்டுமானால் தன் சுயத்தையே எந்த விதமான நிபந்தனையுமில்லாமல் சரணாகதி அடையச் செய்தால் அன்றி கூடாத காரியமாகும். கல்வாரி சிலுவையில் அறையப்பட்ட ஆதாமுடைய சுயத்தைப் பற்றி நாம் பேச வில்லை. (ரோமர் 6:6) ஆனால் ஈசாக்குடைய சுயத்தைப் பற்றிப் பேசுகிறோம். அது பாவத்தில் பிறக்கவில்லை என்றாலும் ஈசாக்கைப் போல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதல்ல. ஆனாலும் அதை சரணடையச் செய்வதுதான் அவசியமாகும். இதை வாசிக்கும் சிலர் ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையின் காணாமல் போன இணைப்பை கண்டுபிடித்துக் கொள்வார்கள். இதற்காக அடிக்கடி கேட்கப்படும் கேள்வியாவது "இந்த சரணாகதியை நான் எப்படி செய்வது?" என்பதே. என்னைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் இந்த கேள்வியைப் புதிராகக் கண்டுபிடிக்கிறேன். இதை "எப்படி?" என்று அறிந்து கொள்வது கடினமென்பது எனக்கு ஒருபோதும் தெரிந்திருக்கவில்லை.

என்னுடைய சகோதரனோ அல்லது நண்பனோ என்னுடைய சைக்கிள் வாகனத்தை ஒரு நாளைக்கு அல்லது வாரத்துக்கு ஒப்படைத்து விடச் சொன்னால் அது என்னவென்று எனக்குத் தெரியும். அந்த நேரத்தில் சும்மா நான் அதை ஓட்டிக் கொண்டு போக முடியாது என்பதை அறிவேன். கர்த்தர் என்னைப் பார்த்து என்னுடைய புதிய காரை எனக்கு வியாக்கியானம் செய்பவருக்கு பணித் தளத்தில் இருக்கும்பொழுது ஒப்படைக்கச் சொல்லுவாரானால் அது முழுவதுமாக அவருடையதாகும் என்றும் நான் அதைத் திரும்ப ஓட்டிச் செல்ல முடியாது என்பதையும் அறிவேன். ஆகையால் "நான் அதை கடனாக உமக்குத் தருகிறேன். நான் பார்த்து விட்டுப் போகும்படி திரும்பி வரும்பொழுது அதை மறுபடியும் உபயோகிக்க விரும்புகிறேன்" என்று நான் சொல்லவில்லை. என்னுடைய புரிந்து கொள்ளும் முறையில் சரணாகதி என்பது எந்த விதமான கயிறு இணைப்புகளுமின்றி கொடுத்து விடுவது தான். என்னைப் பொறுத்தமட்டில், "அதைக் கொடுத்து விடு, உன் கைகளை அதை விட்டு எடுத்து விடு. ஏனென்றால் அது இனிமேல் உன்னுடையதல்ல" என்பதாகும். இந்த வழியில் தான் என்னுடைய ஜீவியத்தை, சுயத்தை, சித்தத்தை, தேவனுக்கு சரணடைந்து விட்டேன். நீ இதைச் செய்யும்பொழுது, உன்னுடைய ஜீவியம், காலம், தாலந்துகள் உனக்கு சொந்தமல்ல. அவைகள் தேவைப்பட்ட எந்த நேரத்திலும், இடத்திலும், அந்த பரம எஜமானர் தெரிந்து கொள்ளுகிறபடி உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

தேவன் இவ்வாறு சரணாகதி அடையுமாறு செய்வதில் நியாயமற்றவர் என்று யாரோ ஒருவர் உணரலாம். நாம் சொந்த உரிமையை உடையதாய் இருத்தல் ஜீவியம் என்பவை பற்றிய தேவனுடைய பிரமாணங்களைப் புரிந்து கொள்ளாவிட்டால் அந்த வழியில் அதே மாதிரியாகவே நாமும் உணரக்கூடும். நாம் நமக்கே சொந்தமானவர்கள் அல்ல. நாம் விலைக்கு வாங்கப்பட்டவர்கள். அதற்கான விலையானது வெள்ளி பொன் போன்ற சாதாரணமான உலோகமல்ல. ஆனால் அவருடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தமாகும். உங்களது முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று, அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. (I பேதுரு 1:18-19) அவர் நம்மை மரணத்திலிருந்து மீட்டுக் கொண்டதால், தேவனிடமிருந்து நித்திய நித்திய காலமாய் பிரிக்கப்படுவதிலிருந்து, நித்தியமான நரக பாதாளத்திலிருந்தும் மீட்டுக் கொண்டு விட்டதால் அவருக்கு நம்மிடமிருந்து முழுவதுமான பூரணமான கீழ்படிதலைக் கோரும் உரிமை உண்டு.

ஆனால் இது அதற்கு அப்பாலும் செல்கிறது. இங்கே ஒரு அன்பின் கோட்பாடு உள்ளடங்கியுள்ளது. இந்த விதமான சரணாகதி என்னுடைய நன்மைக்காகவே என்று அறிவேன். அவர் தமது மரணத்தினால் தம்முடைய அன்பை எனக்குக் காட்டினதுமல்லாமல் அவர் எனக்கு ஜீவனைப் பெற்றுக்

கொள்ளும்படியும் மேலும் அதை அபரிமிதமாகப் பெற்றுக் கொள்ளும்படியாகவும் விரும்புகிறார். (யோவான் 10:10) தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான். (லூக்கா 17:33) நான் என்னுடைய சுயத்திற்காக உயிர் வாழ விரும்பாமல் எனக்குள்ளதெல்லாவற்றையும் அவருக்கு சரணடைந்து விட்டால் அதை அவர் உபயோகப்படுத்தி, தனது முழுமையான சாத்தியமாகும் வரைக்கும் அவ்வாறு செய்வார். தேவனால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கது மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பது. சுய மெய்ம்மையின் விளைவாகிறது. பாவத்திற்கு ஊழியம் செய்வதால் சுய மெய்ம்மையை பெற்றுக் கொள்ள முடியாது. பாவமே மெய்யாக்கப்படும் மனிதன் ஆனவன் சாத்தானுடைய ரூபத்திலோ அவனுடைய சாயலிலோ அவனைப் போலவோ சிருஷ்டிக்கப்படவில்லை. மறுபடியும் பிறந்த மனிதன் மறுரூபமாக்கப்பட்டு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக அவரைப் போலவே ஆக்கப்படுகிறான். பிறகு அந்த புதிய மனிதன் பூரணமான வளர்ச்சி அடைந்து கிறிஸ்துவின் தரத்திற்கு முதிர்ச்சி அடைகிறான். அதுவானது சுய மெய்ம்மை பெறுகிறான். அப்படி இருந்தாலுங்கூட தனக்காக எந்த விதமான கனத்தையும் எடுத்துக் கொள்ள முடியாது எனென்றால் கிறிஸ்து தாமே அவனுக்குள் ஜீவிப்பவராய் இருக்கிறார்.

புதிதாகப் பிறந்த மனிதனின் சித்தமானது தனது சுயத்தை தியாக பலியாக செலுத்த முன் வர வேண்டும். "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும் செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்." (யோவான் 12:24) அவன் தனக்காக மாத்திரம் ஜீவிக்கக்கூடாது. அவன் தனது சகாக்களை அநீதிக்கு ஒப்புக்கொடாமல் நீதிக்கும் நித்திய ஜீவனுக்கும் ஆக ஒப்புக் கொடுக்க வேண்டும். தேவன் இவ்வளவாய் உலகத்தின் மீது அன்பு கூர்ந்ததால் தம்முடைய ஒரே பேரான பரிசுத்தமான குமாரனைத் தந்தருளினார். ஆபிரகாம் தேவனிடம் மிகுந்த அன்புகூர்ந்த படியால் உடன்படிக்கையை பெரிதாக மதித்து அந்த உறவுத் தொடர்பில் தனது வாக்குத்தத்தின் ஒரே குமாரனை ஒப்புக் கொடுத்தான். நாம் தேவனிடத்தில் அன்பு கூறுவோமாகில் நமது சுயத்தை பலிபீடத்தில் சமர்ப்பிப்பதில் இருந்து நிறுத்திக் கொள்ள மாட்டோம். நாம் ஆசீர்வதிக்கப்படாவிட்டால் நாம் ஆசீர்வாதமாக இருக்க முடியாது. அவன் தன்னிடம் அர்ப்பணித்து சரணடையச் செய்ததை மட்டுமே ஆசீர்வதிக்க முடியும் அப்போஸ்தலனாகிய பவுல் அவ்விதமான சரணாகதியை அனுபவித்தான். உண்மையாகவே அவன் தன் ஜீவியத்திற்கான நோக்கத்தை கண்டறிந்து கொண்டான். அதை அவன் திருச்சபைக்கு சொல்வதில் கொஞ்சமேனும் ஆச்சரியபடுவதற்கில்லை!

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12:1) ஒரு சமயம் அவர் (பவுல்) கலாத்தியர்கள் மறுபடி பிறக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

இப்பொழுது அவர் சொல்லுகிறதாவது, "என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்." (கலாத்தியர் 4:19)

நாம் நம்மை அவரிடம் ஒப்புக் கொடுக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவர் நம்மை கிறிஸ்துவுக்குள் மாத்திரம் உருவாக்க முடியும். நாம் அவருடைய 'poima' ஆக (கிரேக்க பதம்) தேவனுடைய செய்கையாக உழைப்பால் பெறப்பட்ட பொருளாக இருக்கிறோம். ஒரு சிற்பாசாரி நல்லதொரு மரத்துண்டு அல்லது கல்லில் செதுக்கி வேலை செய்வது போல பரிசுத்த ஆவியானவரும் புதிய மனிதனை தம்முடைய சாயலாகவும் தமக்கு ஒப்பாகவும் உருவாக்குகிறார். தேவன் தாமே தமது குமாரனில் பிரியமாயிருக்கிறார். தேவனுடைய குணநலன்களும் தராதரமும் கிறிஸ்துக்கு ஒப்பான சாயலைவிடக் குறைந்ததொன்றிற்கும் அழைக்கவில்லை. நாம் சந்தோஷமாக ஒருக்காலும் இருக்க முடியாது. நித்தியத்தின் உள்ளே எக்காலத்திலும் நாம் ஆவிக்குரிய பிரகாரமாக குறைந்த வளர்ச்சியுள்ள 'பிக்மிகர்' (வளர்ச்சி மிகக் குறைந்த ஜாதியார்) போன்று இருப்போம். நமக்குள்ள எல்லாவற்றையும் முற்றிலுமாக அவருக்கு ஒப்புக் கொடுத்தால் மட்டுமே பரிசுத்த ஆவியானவர் நம்மில் கிரியை செய்து நம்மை முதிர்ச்சியான பரிபூரணத்திற்குள் நடத்துவார்.

அவரிடம் ஒப்புக் கொடுத்து சரணடைந்தால் அன்றி சிந்தனையையும் சித்தத்தையும் திரும்பவும் செய்து மறுருபமடையச் செய்ய முடியாது. இது தான் கிறிஸ்துவுக்கு ஒப்பாக இருப்பதற்கும் பாவத்திற்கு மேல் அப்பாற்பட்ட ஜீவியத்தை வாழ்வதற்கும் திறவுகோல் ஆகும். இதற்கு மாறுத்தரமாக ஒரு

முழுமையான ஒப்புக் கொடுத்த குறைபாடுள்ள சரணாகதி தான் தொடர்ந்துவரும் தோல்விக்கும் பாவத்திற்குமான திறவுகோல் ஆகும். ஒப்புக் கொடுத்து சரணடைந்ததோர் உள்ளமானது அவருடைய சிந்தனையைக் கொண்டிருக்கும். அது சுயத்தைப் பற்றிய சிந்தனையில் மூழ்கி இருக்காது. ஆனால் மேலான காரியங்களையும் மற்றவைகளையும் சிந்தனையில் வைத்திருக்கும். நான் "மற்றவர்கள்" என்று சொல்கிறேன். எனென்றால் மறுபடி பிறந்த மக்கள் கூட சுயத்தின் மேல் சிந்தனையில் மூழ்கி இருப்பார்கள். ஆம் அவர்கள் மறுபடி பிறந்தவர்கள் தான். அவர்களுக்கும் ஒரு புதிய சுயத்தைப் பெற்று அதுவும் சுயத்திற்கு மேலாக உயர்ந்து கிறிஸ்துவின் அந்தஸ்துக்கு முதிர்ச்சியடையும்படி விருப்பம் உள்ளவர்கள் ஆவர். ஆனால் அந்த சித்தமானது எவ்விதத் தடங்கலுமின்றி சரணடையாவிட்டாலும் மேலும் சாத்தானுடைய தீய சக்திகள் புதிய சுயத்தைக் கூட ஒரு தேவதையாகச் செய்வதற்கு எப்பொழுதும் முனைப்பாக இருப்பதாலும் இந்த புதிய சுயமானது அந்த மாதிரியான தீய சக்திகளோடு அடிக்கடி ஒத்துழைப்புத் தருகிறது.

மறுபடியும் அந்த தீய சக்திகள் ஏவாளோடு கிரியை செய்தன. அவளுக்கென்று ஒரு சுயமும் சுதந்திரமான சித்தமும் இருந்தது. சாத்தான் ஆனவன் அவளுடைய சித்தத்தைக் கொண்டு சுயத்தை ஒரு தெய்வமாக ஆக்குமாறு வேண்டுகோள் விடுத்தான். அவளுக்கு மாம்சீகமானதொரு சுயம் இல்லாதிருந்த போதிலும் அவள் சுயத்தை மாம்சீகமாகும்படிக்கு அனுமதித்தாள். அவன் தனது சிந்தனையிலுள்ள ஆவியை தீய பக்திக்கு இணங்கச் செய்து தனது சித்தத்தை மாம்சீகமாகும்படியான சிந்தனைக்குள்ளாக்கி அதை மாம்சீகமாகும்படி செய்தாள். இதற்கு முரண்பாடாக இயேசுவாகிய இரண்டாம் ஆதாம், ஆதாமின் ஸ்தானத்தை எடுத்துக் கொண்டு (எபி 2:7,9) சுய சித்தமுள்ள மனிதனாக அந்த சித்தத்தை உடனடியாக பிதாவாகிய தேவனிடம் திருப்பிவிட்டு, பிதாவின் சித்தத்தின்படி மாத்திரமே செயல்பட்டார். சாத்தான் தன்னுடைய சித்தத்தின்படியே செய்யுமாறு அவரை கடினமாக ஏவிய பொழுது அவர் உடனடியாக அவர் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசினார். அப்பொழுது இயேசு, "அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்றார். (மத் 4:10)

ஆகவே தேவனுடைய வார்த்தையாகிய சத்திய வேதத்தை அறிந்து இருப்பது மிகவும் முக்கியமாகும். பாவியான ஒருவனுக்கு அவனது ஆவியில் மறுபடியும் ஜெநிப்பித்தல் உண்டாகும்பொழுது கிறிஸ்துவானவர் ஆவிக்குள் பிரவேசிப்பதால் எல்லாக் காரியங்களும் புதிதாக்கப்படுகின்றன. (II கொரி 5:17) இந்த மாதிரியான மறுபடியும் பிறந்த ஆவியில் மாம்சீக தன்மையொன்றும் இல்லாமல் புதிய இயல்பு பிறக்கின்றது. "பழைய மனிதனை" அல்ல (ரோமர் 6:6) பழைய சித்தமல்ல, புதியதோர் சுயமும் ஒரு சித்தமும் உண்டாகிறது. இந்த புதிய சித்தத்தை கிறிஸ்துவுக்கென்று முழுவதுமாக சரணடையாவிட்டால் இந்த புதிய சித்தத்தைத் தன்னை ஒரு தெய்வமாக உண்டாகும்படி வாஞ்சிக்கும். இது நேரிடும்பொழுது அந்த மனிதன் தேவனை விட்டு இழந்து போய் விட்டதாகவோ அல்லது அந்த நபர் பிசாசு பிடித்தவன் என்பதாகவே அர்த்தமாகாது. இந்த புதிய விசுவாசிக்குள் இருக்கும் தேவனுடைய ஆவியானது சித்தத்துடன் சேர்ந்து "சிந்தனையில் உள்ள ஆவியின்" வழியாக தேவனுடைய ஆவிக்கு தன்னை முற்றிலுமாக ஒப்படைப்புச் செய்து ஆவியில் வழி நடக்கும்படியாகச் செய்யுமாறு முயற்சிக்கிறது. சத்துருவானவன், அந்த இடத்திலிருந்து வெளியில் துரத்தப்பட்டவன். அவனுங்கூட அந்த சித்தத்துடன் சிந்தனையிலுள்ள ஆவியின் வழியாக மாம்சீகத்தின் கிரியைகளுக்கு உணவளிக்க முயற்சிக்கின்றது. (சத்துரு) அவனுக்கு இந்த சராசரி விசுவாசியானவன் வேசித்தனமோ, கொலையோ, மதுவருந்துதலோ மற்றும் இந்தவிதமான கிரியைகளில் ஈடுபட மாட்டான் என்று நன்கு அறிவான். ஆனால் அவர்கள் மேல் கெர்ச்சிக்கும் சிங்கம் போல் சீறிப் பாய்ந்து வந்து மேலும் அதுவும் எளிதாக "ஒளியின் தூதன்" என்று அடையாளங் கண்டு கொள்ள முடியும். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக் காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும். (II கொரி 11:14-15)

அவன் ஒளியின் தூதனாக வரும்பொழுது அவன் ஏவாளை வஞ்சித்தது போல அதே மாதிரி வருவான். "நீ நிச்சயமாகவே சாக மாட்டாய். நீ தேவர்களைப் போல் ஆவாய்" ஆம் நீ யாரோ ஒருவராக இருப்பாய். தேவன் உன்னைப் போகவிடமாட்டார். தேவனை வணங்குவதற்குப் பதிலாக

உன்னையே வணங்குவதற்கான தகுதிகள் உனக்கு இருக்கிறது. நீ தேவனையே மையமாகக் கொள்ளாதே. நீ உன் சுயமாக மாறிவிடு. என்னைப் பின்பற்றி வா. நான் உனக்கு லௌகிக இன்பத்தையும், மன நிறைவு, அதிரடி மகிழ்ச்சி, நீ நீயே தான் என்ற அறிமுகத்தையம் உனக்குத் தருவேன். நீ யாரோ ஒரு அதிதேவதையாக இருப்பாய். உன் பாதபடியில் வீழ்ந்து மக்கள் உன்னை தொழுது கொள்ளுவார்கள். உன்னுடைய திருநாமமும் முகதரிசனமும், உலகப் பிரசித்த பெற்ற வணிக ஸ்தலங்களிலும் அவை கொட்டை எழுத்துக்களில் பிரபலமாக்கப்படும். பார்! உனக்கு இயேசு எதை அருளிச் செய்வார் - ஒரு சிலுவையை மாத்திரமே. அவன் உன்னை பலிபீடத்தில் தியாக பலியாகச் செலுத்த வேண்டும் என்று விரும்புகிறார். அவர் உன்னைக் கொத்தடிமையாக விரும்புகிறார். ஆனால் நானோ உனக்குப் பெயர் பிரஸ்தாபத்தையும் ஜீவியத்தையும் அளிக்கிறேன் என்கிறான். மனதின் ஆவியானது இந்த விதமான பிரச்சாரத்தை ஆகர்ஷித்துக் கொண்டு அந்த பிரதான வஞ்சிப்பவனிடமிருந்து அதை பெற்றுக் கொண்டு அந்த சித்தத்திற்கு இரண்டில் ஒன்றானது ஒரு தெளிவைத் தருகிறது. சாத்தான் சிந்தனையில் அந்த ஜீவன் மரணத்தின் மூலமாக வருகிறதென்பதைச் சொல்லுவதில்லை. அந்த மாதிரியான விவாதம் அவனுக்கு அந்நியமானது ஏனென்றால் அவனுக்கு சுயத்துக்கு வரும் மரணத்தைப் பற்றி அவன் ஒன்றும் அறிய மாட்டான். ஏனென்றால் தன் ஜீவனை இரட்சிக்க வகை தேடுகிறவன் அதை இழந்து போவான். இழந்து போகிறவன் அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான் (லூக்கா 17:33) என்ற உண்மையை அவன் அறிந்திருக்க முடியாது.

ஆகவே சாத்தான் ஒளியின் தூதனாக சொல்லுகிறதாவது "உன்னைப் பற்றி நீயே யோசித்துக் கொள். தேவனைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் மறந்து விடு. உன் சுயத்தை மையமாகக் கொள். உன்னைப் பற்றிய சிந்தனையில் உன்னையே மறந்து விடு. உன் சுய ஈடுபாடு என்ற பானகத்தில் உன்னை ஊறுகாயாக ஆக்கிக் கொள். இல்லை நீ இயேசுக் கிறிஸ்துவை மறுதலிக்க வேண்டியதில்லை. ஆனால் சற்று கிறிஸ்துவை மையமாகவோ, மற்றவர்களையோ மையமாக ஆக்கிக் கொள்ளாதே". இந்த விதமான இக்கட்டான சோதனைகளில் அவன் ஒரு போதும் விட்டு விடுவதில்லை. முதிர்ச்சி பெற்ற போதகரைப் பார்த்து, "நீங்கள் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்தீர்கள். உங்கள் குடும்பத்தையோ புறக்கணித்தீர்கள், உங்களுக்காக ஒரு ஓய்வு காலத் திட்டத்தை வகுத்துக் கொள்ளவில்லை. ஆம் வாருங்கள் உங்கள் தோள்களின் மேலுள்ள அந்த சிலுவையை எடுத்துப் போடுங்கள். ஆகவே ஒரு மாறுதலுக்காக சற்று உங்களையே கவனித்துக் கொள்ளுங்கள்" என்பான்.

அந்த போதகருடைய மனைவியின் காதில் அவன் இரகசியமாக ஓதுகிறதாவது, உன்னுடைய திருமணமான ஜீவியம் முழுவதுமே, நீ உன்னுடைய கணவனுக்கும் தேவனுக்கும் கூட அடிமையாகவே இருந்திருக்கிறாய். நீ உன் கணவனுடைய ஜீவியத்தில் இரண்டாவதாகத் தான் வருகிறாய். மேலும் ஒப்படைப்பு, கால நேரத்திலுங்கூட அவ்வாறு இருக்கிறாய். பிறர் விடுமுறை நாட்களைக் கழிக்கப் பிரயாணமாகச் சென்ற போதுங்கூட நீ இந்தக் காரியங்களோடு மென்க்கெட்டுத் தங்கிப் போனாய். நீ மக்களுக்காக சுவிசேஷகர்களுக்காக, பிரசங்கிமார்களுக்காக, விருந்தோம்பல் செய்தாய். உன்னுடைய வீடானது ஒரு அரை வழிப் பாதையாக ஒவ்வொருவருக்கும் இருந்தது. ஆனால் உனக்கென்று தனிப்பட்ட கூடாரமாக (சரணாலயமாக அல்ல) இருந்தது அல்ல. உன்னுடைய விருப்பம் போல ஆடை அணிய முடியவில்லை. ஆபரணங்களோ அல்லது அழகு சாதனங்களையோ மற்றவர்கள் செய்வது போல செய்ய முடியவில்லை. ஏனென்றால் நீ ஒரு முன் மாதிரியாக எப்பொழுதுமே இருக்க வேண்டியிருந்தது. சா! இப்பொழுது முன்னுக்கு வா. நீ இழந்து போனது என்ன என்பதை நீ அறிய மாட்டாய். உன்னுடைய கணவன் நகரத்தை விட்டு வெளியில் சென்று விட்டான். இப்பொழுது நகரத்தில் நன்றாகப் பொழுதைப் போக்கு. ஏன் மற்றவர்களுங்கூட அதையே செய்கிறார்கள். ஒரு மாறுதலுக்காக சற்று உன்னையே நினைத்துப் பார் என்று சொல்லுவான். சில சமயங்கள் தற்காலிகமாக வெற்றியையும் பெறுவான்.

உண்மையாகவே அந்த பழைய பிசாசானவன் அந்த தந்திரமுள்ள சர்ப்பமானது, அந்த ஒளியின் தூதன் அதாவது இருளானவன் அந்த போதகரையோ அல்லது அவருடைய மனைவியையோ மேற்கொள்ள முடிவதில்லை. ஆகவே அவருடைய மக்கள் மீது குறி வைக்கிறான். அவர் முன் மாதிரியாக இருக்க வேண்டிய அந்த ஸ்தானத்தைப் பற்றி சலிப்படையச் செய்கிறான். "நீங்கள் ஏன் மற்ற குழந்தைகளை விட வித்தியாசமாக இருக்க வேண்டும்." உங்களுடைய பெற்றோர் இவ்விதமானதோர் ஒடுக்கமான இயற்கைக்கு மாறான ஜீவியத்தை தெரிந்தெடுத்திருப்பது உங்களது

தவறு அல்ல. உங்களுக்கு ஜீவியத்தின் (வேடிக்கைகள்) சாகசமான ஜீவியம் மறுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் வைராக்கியமாகவும், அளவிடப்பட்டும், கட்டுப்பாட்டுக்குட்பட்டதுமாயிருக்கிறது. அங்கே "செய்" என்பதை விட "செய்யாதே" என்பது அவர்கள் வாய்மொழியாக இருக்கிறது. மற்ற குழந்தைகள் கண்ணாடித் தொட்டிக்குள் விடப்பட்ட தங்க மீனைப் போல ஒவ்வொருவரும் (வேடிக்கையாகப்) பார்ப்பதற்கல்ல. மற்ற குழந்தைகளுக்கு அவர்கள் ஓர் முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லப்படுவதில்லை. அவர்கள் எப்பொழுதும் கவனத்திற்குள்ளும் இருப்பதில்லை. உங்கள் பெற்றோருக்கு இரவின் எல்லா நேரங்களிலும் அழைப்புவிடப் படுவதைச் சற்று நினைத்துப் பாருங்கள். அவர்களுக்கென்று தனிப்பட்ட ஜீவியம் ஒன்றுமில்லை. உன்னுடைய தந்தைக்கு ஜனங்களிடமிருந்தும் மற்றும் பிற தலைவர்களிடமிருந்து வரும் வசைச் சொற்களை சற்று ஞாபகப் படுத்துங்கள். உங்களுடைய ஜீவியத்தையும் இப்படி மனமிரக்க மற்ற ஜனங்களுக்காகத் தியாகம் செய்ய விரும்புகிறீர்களா? அதை விட்டு விடுங்கள். இந்த வேதபாட வகுப்புகளையும் வெளியில் சென்று சுவிசேஷம் அறிவிப்பதையுமே விட்டு விட வேண்டும். உங்களது அடக்குமுறைக்குட்பட்ட பெற்றோருடைய வழிகாட்டு முறைகளை விட்டு வெளியே வாருங்கள். அவர்களுடைய தராதரமும் ஆணைகளுமே முற்றிலுமாக காலங்கடந்து போனவை. அவர்களைப் போல் அவற்றை இழந்து விடாதீர்கள். உங்களை நினைத்து வாலிப காலத்தில் மனமகிழ்ச்சியாய் அனுபவியுங்கள்.

சத்துருவானவனால் நெருக்கப்பட்டு எழுதப்பட்ட கர்த்தருடைய வார்த்தையை சார்ந்திருக்காமல் இருப்பதால் அவனால் அவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். "அவர்கள் காற்றை விதைத்து சூறைக்காற்றை அறுப்பார்கள்" (ஓசியா 8:7) அந்த நொறுங்கிப் போன துண்டுகளைச் சேர்த்து எடுக்கும் காலத்தில் அன்புள்ள பெற்றோர்கள் இன்னும் அங்கு தான் இருக்கிறார்கள். ஆனால் சாத்தான் இந்த நன்றாகப் பிரபலமாக்கப்பட்ட காட்சியைப் பார்த்துச் சிரிக்கிறான். சிம்சோன் எந்திரக் கல்லைச் சுற்றி அரைத்துக் கொண்டிருப்பதைப் பாருங்கள் (நியாயாதிபதிகள் 16:21) குருடாக்கப்பட்டு, கட்டப்பட்டவனாய் பாரத்தோடு மனம் சலித்தவனாய் எந்திரக் கல்லைச் சுற்றி அரைத்துக் கொண்டு ஒரு பகிரங்கமான கேலிக் கூத்தாக ஆக்கப்படுகிறான். இல்லை! சாத்தான் ஆனவன் (ஒப்படைக்கபடாத) சரணடையாத சித்தத்துக்குரிய முடிவான விளைவை அவர்கள் பார்ப்பதை ஒருகாலும் அவர்களுக்கு அனுமதிப்பதில்லை. அந்த உதாரி மகன் கெட்டழிந்து போனான். ஆனால் அவனுக்குள் ஜீவன் இருக்கும் வரைக்கும் புத்திர ஸ்தானத்தை திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை அவனுக்குண்டு. ஒரு மகன், ஒரு சுதந்திர வீதம், ஒரு சுயம், ஒரு சித்தம் இவை இருக்கும் வரைக்கும் வருங்காலம் என்பது சித்தத்திற்குள் அடங்கியிருக்கும் அவன் தன்னுடைய சுதந்திர விகிதத்தை பொக்கிஷமாகக் கருத வேண்டும் என்பதையோ தகப்பனுக்கு விசுவாசமுள்ளவனாக இருக்க வேண்டும் என்றோ அதன் வாழ்க்கையை தன்னால் இயன்றவரை வாழ வேண்டும் என்றோ அல்லது சுதந்திர பாகத்தை, உதாரித்தனமாக விரயம் செய்ய வேண்டும் என்றோ ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும். அவன் பின்னதையே தெரிந்து கொண்டான். அவனுடைய பாவமான களியாட்டங்கள் ஒரு பருவகாலம் மட்டுமே நீடித்தது. விரைவில் அவனுடைய உலகமே அவன்மேல் இடிந்து விழுந்தது. அவனுடைய உலகப் பிரகாரமான தகப்பனோ அல்லது பரம பிதாவோ அவன் தன்னுடைய சித்தத்தை சரணடையச் செய்யும் வரைக்கும் அவனுக்கு உதவி புரிய கூடவில்லை.

ஆகையால் அவன் சொன்னதாவது, "அவனுக்குப் புத்தி தெளிந்த போது அவன் என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியால் சாகிறேன். நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய், தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனி மேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல. உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன் என்று சொல்லி எழுந்து புறப்பட்டு தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு மனதுருகி ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனை முத்தஞ் செய்தான்." குமாரன் தகப்பனை நோக்கி, "தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் நான் பாவஞ் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல" என்று சொன்னான். அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி, "நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து இவனுக்கு உடுத்தி இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். நாம் புசித்து சந்தோஷமாயிருப்போம்." "என் குமாரனாகிய இவன்

மரித்தான். திரும்பவும் உயிர்த்தான். காணாமற்போனான் திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்." (லூக்கா 15:17-24)

உதாரிமகன் செய்தது போல தன் சுயத்தின் இச்சைகளை பூர்த்தி செய்து தன் பயணத்தை (கப்பல் நேரத்தை) தவறவிட்டால் இப்படிப் பட்டவர்களுக்கு என்னவிதமான செய்தி அறிக்கை பிரசுரிக்கப்படும்? அதாகப்பட்டது என்னவென்றால் பிதாவானவர் பொறுமையாகக் காத்திருந்து இந்த விதமான சித்தத்தை சீர் செய்யும்படியாக திரும்பவும் சீர்படுத்த ஆயத்தமாக இருக்கிறார். சரணடையச் செய்யாத சித்தம் ஒரு மகனை பன்றியின் தொழுவுக்கு நடத்திச் செல்ல முடியும். முற்றிலுமாகச் சரணடைந்த சித்தமானது உன்னதமான ஸ்தலங்களிலுள்ள சிம்மாசனத்திறகு இட்டுச் செல்லும். ஆம் அந்த சிம்மாசனத்திற்கு வழியானது உன்னுடைய சிலுவையைச் சுமந்து செல்வது தான், உன் ஜீவிய பாதையின் வழியாக, கெத்சமனேயின் வழியாக சிலுவையண்டைக்கு, மரணத்தின் வழியாக மகிமையான உயிர்தெழுதலுக்குள்ளும், சிம்மாசனத்தின் உரிமைக்கும் அதற்கான வல்லமைக்குமாகும்.

<u>கிறிஸ்தவனுடைய நடையின் வெற்றியானது ஒருவருடைய சித்தத்தை பரம எஜமானுடைய சித்தத்திற்கு முற்றிலுமாக சரணடைவதைவிட மற்றும் ஏதோன்றையும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ கேட்பதில்லை.</u> அந்த நடையின் வெற்றியோ (அ) தோல்வியோ இயேசு செய்தது போல (I யோவான் 2:6) இந்த விதமான திருப்புமுனையில்தான் இருக்கிறது. இந்த திடப்படுத்தும் வல்லமையும், இந்த விதமான நடையின் வெற்றியும் இங்குதான் ஆரம்பமாகிறது. முழுமையான உயர்நிலை மெய்யாக்குதலை அடைவதற்கான மூலக் கருவாகும். இதுதான் முழுமையானதும் சுயமானதுமான கிறிஸ்தவ ஜீவியத்தை எய்துவதற்கான திறவுகோல் ஆகும். சுய ஸ்தானத்தையும் சுயத்தை மெய்யாக்கும் வழிபாட்டு முறைகள் 'self' என்ற ஆங்கில பதத்தை பெரிய முதலெழுத்துக்களால் SELF என்று எழுதுகின்றன. சுயத்தை மெய்யான நடைமுறைப் படுத்திய கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகள் என்பதை பெரிய C என்ற முதலெழுத்தால் குறிப்பார்கள். "கிறிஸ்து எனக்கு ஜீவன். சாவு எனக்கு ஆதாயம்" ஒரு நபருடைய சுயமானது கிறிஸ்துவுடன் மறைந்து தேவனுக்குள் இருந்தாலன்றி சுயமானது தேவனால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாயிருக்கும்.

கிறிஸ்தவன் சொல்கிறான், "உன்னையே நேசித்துக் கொள்" ஏனென்றால் உன்னுடைய சிருஷ்டிகருடைய முழுவதுமான பெலத்தில் நீ ஜீவிக்கிறாய். உன்னையே நேசித்துக் கொள். ஏனென்றால் உன்னுடைய சுதந்திர வீதத்தை சாத்தான் திருடிக் கொள்ளும்படியாக நீ அனுமதிப்பதில்லை. நீ இடுக்கமான நேரான வழியை நீ நடக்குமாறு தெரிந்து கொண்டாய். உன்னுடைய சிந்தனையில் தீய கற்பனைகளை நாட்டுமாறு நீ அனுமதிக்கவில்லை. நீ உன்னுடைய சிந்தனையை பரிசுத்த ஆவியை நோக்கியும் நிறுத்திக் கொண்டு மாம்சத்தின் பிறகால் போகாமல் பரிசுத்த ஆவியின் வழியில் நடந்து சென்றாய். (கலா 5:16-18) உன்னுடைய விவாக மஞ்சத்தை அசுசிபடுத்தாமல் பார்த்துக் கொண்டாய் உன்னுடைய சித்தத்தையும் உணர்ச்சிகளையும் சினம், குழப்பமான போராட்டங்கள், விரோதங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்கிக் காத்துக் கொண்டாய். பொய், விக்ரகம், மதுவருந்துதல், கொலை ஆகியவற்றைச் செய்யாது விலகி நின்றாய். உன்னுடைய சபையினரை நீதிக்கு நேராய் வழி நடத்தி, பரிசுத்த ஆவியானவரை உனது எஜமானராக ஏற்றுக் கொண்டாய். நீ உன் ஜீவியத்தைத் திரும்பிப் பார்த்து உன் ஆவியை இயேசுவே ஆளுகை செய்யும்படி அனுமதித்தாய். உன்னில் அவர் தம் ஜீவனுடன் வசிக்குமாறு நீ வைத்துக் கொண்டதால் உன்னையே அவர் நேசிக்கக்கூடும்."

நாம் நமது முழுமையான எல்லாவற்றையும் அவருக்கு சரணடையா விட்டாலும், பிரத்தியட்சமாக அவரது கற்பனைகளுக்குக் கீழ்படியாவிட்டாலும் நாம் பாகுபடுத்தப்பட்ட விசுவாச பக்தியை அடிக்கடி சந்திக்க வேண்டியவர்களாவோம். சந்தோஷம், சமாதானம், அமைதி, சாதனைகள் ஆகியவற்றை பாகுபாடு கொண்ட விசுவாசப் பக்தியுள்ளவர்களிடம் காண முடியாது. கிறிஸ்துவுக்கு இந்த பாகுபாடுள்ள விசுவாசம் கிடையாது. அவர் தமது மரணபரியந்தம் பிதாவுக்கு தன்னை ஒப்படைப்புச் செய்து கொண்டார். "நான் உம்முடைய சித்தத்தைச் செய்யவே வந்தேன்" மரணத்தின் முகத்தைச் சந்தித்த பொழுதுங்கூட அவரிடம் தடுமாற்றம் இல்லை. யோவான் ஸ்நானகனுங்கூட மரணத்தைச் சந்தித்தபொழுது தடுமாற்றம் அடையவில்லை.

‘சரணாகதியடைதல்’ என்பது சரணாகதி என்று எதைச் சொல்கிறதுமோ அதுவே தான் ‘சரணாகதி’! ‘சரணாகதி’ என்பது போராட்டமோ, அடக்குமுறையோ, அழுத்தமோ, விட்டுவிடுவதற்கு எடுக்கக்கூடிய அளவு மட்டும் முயற்சிகளோ அல்லது ஏதோ ஒன்றை மரணத்திற்கு ஒப்புக் கொடுப்பதோ அல்ல. இது ஒரு நிபந்தனையற்ற ‘ஒப்புக் கொடுத்தல்’ ஆகும். நாம் ஒரு அன்பான தேவனுக்கு ‘ஒப்படைப்பு’ செய்கிறோம். அவருக்கு நம்மைப் பற்றிய சிறந்த யோசனைகளே அவருடைய இருதயத்தில் உண்டு. ஆகவே இவ்விதமான ஒரு சரணாகதியை நம்முடைய ஜீவியத்தின் மூலமான ஊற்றுக்குச் செய்வது கடினமானதல்ல.

இயேசு எருசலேமைப் பார்த்து தன் முகத்தைத் திருப்பிய போது, அங்கே குருசை சந்திக்கும்படியாக இருந்தபொழுதும் அவர் தம்முடைய பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து மரணமடையப் போவதாக அறிந்திருந்தார். ஆனாலும் இங்கே தான் பேதுரு மிகுந்த பலத்தோடு தேவனுடைய சித்தமானது அவருடைய ஜீவியத்தில் சாதிக்க போவதற்கான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தான். அவன் இயேசுவை அப்பால் தனியே அழைத்துப் போய், “ஆண்டவரே இது உமக்கு நேரிடக்கூடாதே. இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினான்.” (மத் 16:22) பேதுரு அதை நல்லதென்றுக் கருதியிருப்பான். ஆனால் அது பேதுருவால் சொல்லப்பட்டது என்றாகாது ஆனால் அந்த அளவுக்கு சத்துரு ஆனவனால் சொல்லப்பட்டதாகும். ஆனால் அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து, “எனக்கு பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய். தேவனுக்கேற்றவகளைச் சிந்திக்காமல் மனுஷருக்கேற்றவைகளைச் சிந்திக்கிறாய்” என்று சொன்னார். (மத் 16:23) இந்த மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தில் தான் இயேசு உண்மையான அர்த்தமுள்ள ஜீவியத்திற்கான நடைமுறையைத் தந்தார். “ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்.” ஒன்று உனக்காக ஜீவித்துப் பார் அல்லது உன் ஜீவியத்தின் மெய்யான நோக்கத்தை இழந்து விடு. உன் ஜீவியத்தை முற்றிலும் இழந்து விட்டு என்னை நோக்கி முழுவதுமாக திரும்பி விடு. நான் உனக்குள் ஜீவிப்பேன். நீ ஜீவியத்தின் உண்மையான நோக்கத்தை அறிந்து கொள்வாய் என்றார். மேலும் இயேசு தமது சீஷர்களுக்குக் கூறியதாவது “என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்குப் பதிலாக என்னத்தைக் கொடுப்பான்? மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய் தம்முடைய தூதரோடுங்கூட வருவார். அப்பொழுது அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்கு பதில் அளிப்பார்.” (மத் 16:24-27) நாம் அடிக்கடி இந்த வசனங்களைப் பாவிகளுக்கு எடுத்துச் சொல்லுகிறோம். அதன் உண்மை அவர்களுக்குப் பொருந்தும். ஆனால் இந்த வார்த்தைகள் அவருடைய சீஷர்களுக்கு தனிமையில் அந்தரங்கமாக கூறப்பட்டதென்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

இந்த மாதிரியான போதனை உலகத்திற்கு எவ்வளவு முரண்பாடு உடையது. உலகம் கூறுகிறது,”உன் ஜீவியத்தை இழந்து விடாதே. ஜீவியம் என்பது நீ அதை உன்னை உணர்ந்து செயல்படுகையில் உனக்கு வரும். நீ உன்னுடைய சுயமான துணிச்சலான செயல்பாட்டினால் சுயமான உள் உணர்வை அடைவாய். நீ ஒரு சுயமான துணிச்சல் உள்ளவனாக இரு. நீ உன்னுடைய வழியை முன்னணிக்கு முன்னுக்குத் தள்ளி செல்லாவிட்டால் நீ ஒருவராலும் அடையாளங் காணமாட்டாய், உன்னால் தலைமைத்துவ ஸ்தானத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது. வாழ்க்கைப் போராட்டத்தில் எஞ்சியிருப்பார்கள்” என்று உனக்குச் சொல்லும் உலகத்தில் நீ வெளியில் வந்து, வாழ்க்கையின் உச்ச நிலைக்கு வரும் வழியில் நீ போராட வேண்டும். அவ்விதம் செயல்படும் பொழுது அவர்கள் உன்னை முன் தள்ளிவிட்டு சத்துருக்கள் ஆவார்கள். அவர்கள் மக்களுக்கு தீங்கு விளைவிப்பார்கள். ஈவிரக்கமற்று மற்றவர்களுக்கு மரியாதையையும் இழந்து அவ்வாறு செய்ததற்காக சுய மரியாதை அடைவார்கள். அவர்கள் வேறு எங்காவது சென்று தாங்கள் இன்னார் என்று அறியப்பட வேண்டும். ஏனென்றால் அவர்கள் உச்ச நிலைக்கு ஏறினபொழுது அநேக மக்கள் அந்த உச்ச நிலையை அடையாதபடி தீங்கு செய்வார்கள். இந்த உலகத்தின் மாதிரியிலிருந்து நமது கர்த்தரின் உதாரணமானது எவ்வளவு வித்தியாசமானது. “உன் கன்னத்தைத் திருப்பிக் கொடு, இரண்டு மைல் கூடப் போ, உன் அங்கியையும் வஸ்திரத்தையும் கொடுத்து விடு. விருந்தில் தாழ்ந்த ஆசனத்தில் அமர்ந்து கொள், சீஷர்களின் கால்களைக் கழுவு, உனக்கு முன்னால் தேவனையும்

மற்றவர்களையும் வைத்துக் கொள். உயரத்திற்குச் செல்லும் மார்க்கமாவது சாலையின் தாழ்வான பகுதியின் வழியாக அமைந்துள்ளது."

இந்த விதமான கொள்கை சமானியமான மனிதனுக்கு கவர்ச்சியாக இருக்காது. "நான் ஒருவருக்கும் மிதிக்கும் பாயாக இருக்க மாட்டேன். என் கணவனுக்கு நான் பணிய மாட்டேன். என் பெற்றோருக்கும் எனக்கு மேலே அதிகாரமுள்ளவர்களுக்கூட" என்பது தான். இதுவே சாதாரண மனிதன் பேசுவது போலவே ஆகும். ஏனெனில் ஆவிக்குரிய சுயமானது தேவனுடைய வார்த்தையை அறிந்திருப்பதாலும் அது மேலும் சொல்லுகிறதாவது, "தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்படிந்திருங்கள்." (எபேசி 5:21) சரணாகதி என்பது கடினமானதோ அல்லது பாரச் சுமையானதல்ல. மற்றவர்களுக்கு பணிந்து கீழ்படிந்திருக்கும் நடைமுறையான சமயத்தில் தாங்களும் கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறோம் என்பதை கண்டு அறிந்து கொள்ளும்பொழுது பாரமாகத் தோன்றாது. கர்த்தரால் திட்டமிட்டு அமைக்கப்பட்ட அதிகாரத்துக்கு நான் பணிந்து கீழ்படியும் பொழுது நான் தேவனுக்கு என்னை சரணடையச் செய்கிறேன். தேவன் தாமே, ஆளுகை செய்பவர்களையும் அதிகாரத்துவத்தை உடையவர்களையும் தினசரி வாழ்க்கையிலும், திருச்சபையிலும் வீட்டிலும் மேலாக வைக்கிறார். இல்லத்தில் காணப்படும் சந்தோஷத்தின் விரிவாக்கமும் மேலும் அதன் அளவானது அந்த வீட்டில் கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோர் தங்கள் சுயத்தை ஒருவருக்கொருவர் ஒப்படைப்பு செய்யும் அளவுக்கும் விரிவாக்கத்திற்கு ஏற்ப அமையும். ஆகவே கிறிஸ்துவினுடைய கர்த்தத்துவத்திற்குச் சுயத்தை சரணடையச் செய்யும்பொழுது தான் இது செயல்படக் கூடுமாகும். நாம் ஏன் சுயத்தைச் சரணடையச் செய்வதில் கடினமாகக் காண்கிறோம்? இதை இயற்கையான சாதாரணமான ஜீவியத்தின் இராஜாங்கத்தில் விளங்கிக் கொள்ளக் கூடும். தன்னுடைய சொந்த பிரச்சனைக்காக ஒரு மனைவியானவர் தன்னுடைய சார்பாகத் தன் கணவன் தன்னுடைய நல்ல நோக்கமான முயற்சிகளைக் கொண்டு செயல்பட வில்லை என்பதையும் ஏன் அதை விசாரித்தறிய வில்லை என்பதைப் பற்றிக் கேள்வி கேட்கும் சமயத்தைப் பற்றி நான் புரிந்து கொள்ள முடியும். அவன் அவளுக்கு மரியாதைக் குறைவைக் காட்டினாலும், அவளைத் தூஷித்தாலும், அவள் அப்படிப்பட்டவள் தான் என்று எடுத்துக் கொண்டாலும் அல்லது அவன் விசுவாசமற்று இருந்த போதிலுங்கூட ஆனால் நாம் ஏன் நமது சுயத்தையும், சித்தத்தையும், நம்மை நேசித்து நமக்காக தம் உயிரைத் தத்தம் செய்த அவரான ஒருவருக்கே நமக்குள்ள எல்லாவற்றையுங்கூட சரணடைவதில் தயக்கம் காட்டுவதேன்? அந்த ஒருவர் தம்முடைய மகத்தானதோர் உன்னதமான மாதிரியால் பிதாவாகிய தேவனுக்கே தம்மை முழுவதுமாக ஒப்படைப்புச் செய்தாரே அல்லவா?

நாம் மற்றொருவருக்கு ஏன் சரணடைய வேண்டும்? மேலும் நான் சரணடைவது என்பது மிகவும் மென்மையான காரியம் என்பதை சொல்லியாக வேண்டும். ஒரு பொதுக் கொள்கையாக தேவன் நம்மைச் சரணடையுமாறு கேட்பதில்லை. ஆனால் தேவனுக்கு சுயத்தை சரணடைவதில், பயனுள்ள வகைக்காக, சந்தோஷத்திற்காக, மன நிறைவுக்காக எதிர்பார்க்கப்படுவதும் மேலும் அவசியமானதுமாகும். இதற்கு அப்பாற்பட்டு சரணாகதி பற்றி வேறு யாருக்குமே எந்த விதமான போதனையும் கிடையாது. பணிந்து கீழ்படிதல் என்ற திட்ட அமைப்பில், ஆம், நமது முழுமையான சுயத்தின் சித்தத்தை ஒப்படைப்புச் செய்வது தான்.

தேவன் நம்மை அவருக்காகவே சிருஷ்டித்தார். நாம் புதிதாக மறுபடியும் பிறந்தபொழுது நமக்கு அருளிய சுயமானது அவருடைய சாயலுக்கொப்பாக வேண்டும் என்று முன் குறிக்கப்பட்டுள்ளது. (ரோமர் 8:29-30) அதை வேறு ஒருவருக்கு ஒப்படைப்புச் செய்தால் பரிசுத்த ஆவியானவரால் அது எவ்வாறு நமது விருப்ப சித்தத்தின் மூலமாக அவருக்கு ஒப்பாக ஆக்கப்படும்? நமது சுயமும், சித்த விருப்பமும் சேர்ந்து ஒரு சக கூட்டாளித்துவமாக பரிசுத்த ஆவியானவருக்கு எதிர் கிரியையாகப் பதிலிறுத்து மேற்கொள்பவர்களாகவும் முதிர்ச்சியில் (பூரணத்துவத்தில்) அவருடைய ரூபத்தில் அவருக்கொப்பாக ஆக்கப்படுவோம். ஆகையினால் சுயம் என்பது அவருக்கு மாத்திரம் ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும். அது சத்துருவானவனுக்கு ஒப்புக் கொடுப்பதற்கோ மற்றும் வேறொருவருக்கோ ஒப்புக் கொடுக்கப்படுவதற்கென்று இல்லையாகும்.

இளைஞர்கள் கனவுலகத்திற்கு இழுத்துச் செல்லப்படுகிறார்கள். அவர்கள் சரணாகதியின் முடிவில் சந்தோஷத்தைத் தங்கள் மனக் கண்களுக்கு முன்பாகக் கற்பனையில் பார்த்து அர்த்தமற்ற சொற்களான, "என்னுடைய இதயத்தை உனக்கு தந்து விடுகிறேன்." என்னுடைய முழுமையான

சுயத்தையும் அன்பே உனக்கு ஒப்படைத்து விடுகிறேன் என்று சொல்லுவார்கள். ஆனால் வெகு விரைவில் அப்படிப்பட்ட தொன்றும் இல்லை என்று கண்டு கொள்ளுவார்கள். முதல் மனக்குறை அல்லது விவாதமானது அவர்களது சுயமும், சித்த விருப்பமும் தங்களிடமே உடமையாக இருப்பதாக வெளிப்படுகிறது. மேலும் பணிந்து கீழ்படிதல் என்பதுவும் மிகவும் மென்மையான நடைமுறை ஆகும். அவர்கள் இன்னும் தங்களது சுயத்தையும் சித்த விருப்பத்தையும் தங்களிடமே இருப்பில் வைத்துக் கொண்டு மற்றொருவருக்குப் பணிந்து கீழ்படிய விரும்புகிறார்கள். ஆகவே இங்கே அந்த நடைமுறை ஆரம்பமாகிறது.

பணிந்து கீழ்படிதலை நடைமுறைப்படுத்த எடுக்கப்படும் அடிகளைக் கவனிக்கவும்:

(1) இங்கே உறவு முறைகளை விருத்தி செய்யும் நடைமுறை இருக்கிறது.
ஒரு வாலிபன் ஒரு வாலிபப் பெண்ணை சந்திக்கிறான். அவர்களுடைய பார்வை கேட்கும் உணர்வுகள் அங்கே சம்பந்தப்படுகின்றன. அவர்களுடைய கண்கள் "கூடாது" என்று சொல்லுமானால் அதற்கு முடிவு அங்கே தான் இருக்கிறது. அவர்களுடைய கண்கள் அவர்கள் பார்ப்பதை விரும்புமானால், அவர்களது செவிகளும் ஆமோத்தித்து பின் அவர்கள் தொட்டும் கைக் குலுக்கியும் உறவுத் தொடர்பு அதில் ஆரம்பமாகக் கூடும்.

(2) காத்திருக்கும் நடைமுறை.
அந்த வாலிபனுக்கும் பெண்ணுக்கும் தங்களுடைய வாழ்க்கையில் யாரோ ஒருவர் விசேஷமாக இருக்க வேண்டும் என்று உணருவார்கள். அவர்கள் அதன் விளைவுகளை நிறுத்து ஆராய்வார்கள். "ஆம்" - "இல்லை" நான் இதை அதை அனுமதிக்க வேண்டுமா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அது ஒரு வேளை ஏதோ ஒன்று விபரீதத்திற்கு நடத்தலாம். நான் அவனுடைய / அவளுடைய ஜீவியத்தில் விசேஷித்தவனாக / விசேஷித்தவளாக இருக்க விரும்புகிறேன். எனக்கு இந்த நபர்தானா என்று உறுதியாக அறிய முடியவில்லை. அங்கே இந்த விதமான மனோ ரீதியான நடைமுறையான தொடர்ந்து போய்க் கொண்டிருந்து அவர்கள் மற்றவருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்தில் முதிர்ச்சி பெற்று, தங்களது ஜீவியத்தை மற்றொருவருடன் ஜீவிய கால முழுவதும் பகிர்ந்து கொள்ளவும், அந்த நபரை மாத்திரமே ஒரு தனிப்பட்ட விசேஷமான வழியில் அன்பு காட்டவும் அதாவது அவர்களது ஆடைகளைத் துவைத்து உணவை சமைத்து அவருக்கு குழந்தை பெற்று தருவது என்பது ஒரு பெரிய முடிவான தீர்மானம் ஆகும். அவருக்காக கவலைப்படவும், தனிப்பட்ட முறையில் அவளுக்காகவே தன்னைப் பிரித்து வைத்துக் கொள்ளவும், அவளுக்கு ஒத்துழைப்பு தந்து மேலும் ஜீவிய காலம் முழுவதற்கும் என்று ஒப்படைப்புச் செய்வது பெரிய தீர்மானம் ஆகும். இந்த உறவுத் தொடர்பை வளர்த்துக் கொண்டு இந்த விதமான ஒப்படைப்புச் செய்து கொள்வதானது அதற்கென முதலீடாக செய்யப்பட்ட அதற்கான காலமாகும்.

(3) நீ அந்தத் தீர்மானத்தைச் செய்கிறாய் - உன்னுடைய ஆயத்தமான விருப்ப சித்ததுடன் நீ அந்த குறியை எடுக்கிறாய். நல்லதற்கோ அல்லது கெட்டதற்கோ. நீயே அதைச் செய்கிறாய். உன்னுடைய சுயத்தை முழுவதுமாக அந்த நபருக்குக் கொடுத்து விட்டதாக உணருகிறாய். ஆனால் அது ஒரு தவறான வழியில் செல்லும் பாங்காகும். அந்த விதமான எதுவும் சம்பவிப்பதில்லை. நீ உன்னையும் ∴ அவளையும், இன்னும் தங்களுக்குள்ளே தனித்தனியே சொந்தமாகக் காண்கிறாய். சில சமயங்களில் அந்த நபர் எவ்வளவு சுய சித்தமுள்ளவராக இருக்கிறான் / இருக்கிறாள் என்பதை அறிய உண்மையாகவே அதிர்ச்சி அடைகிறாய். அவர்கள் புண்பட்டவர்களாக தங்களை உணரும்பொழுது மற்றொரு அறையில் அமர்ந்து கொண்டு புகார் செய்து கொண்டிருப்பதாகக் காட்டுகிறது.

அவர்கள் தங்களது சுயத்தை சரணடையச் செய்ய வேண்டுமென்று ஏன் நாம் எதிர்பார்க்க வேண்டும்? நாம் காதலில் விழுந்து அவர்களிடம் அன்பு செலுத்தும்படியாகத் தீர்மானித்தோம். அவர்கள் தங்களுக்குள் தாமாகவே இருந்ததால் திருமணம் செய்து வைத்தோம். நாம் ஏன் அவர்களை மாற்ற வேண்டும். மேலும் நம்மை போல் இருக்க ஏன் அப்படி செய்ய வேண்டும்? நாம் எதிர்பார்ப்பது என்னவென்றால் அவர்களுடைய சந்தோஷத்திற்கும் மன நிறைவுக்கும் ஆதாரமாக நம்முடைய சித்த விருப்பத்தை மற்றவருக்கு ஒப்புக் கொடுப்பதாகும். இந்த விதமான ஒப்புக் கொடுத்தலின் அளவானது அதன் ஆழத்தையும் அந்த சந்தோஷத்தின் விரிவாக்கத்தையுமே நிர்ணயிக்கும்.

ஆனால் ஒருவருடைய விருப்பத்தை மற்றவருக்கு ஒப்படைத்தல் என்பது இல்லவே இல்லை! அது தேவனுக்குரியது அதைத் தந்தது அவரே. நாம் நமது சுயத்தை அவருக்கு ஒப்புக் கொடுத்து சரணடையும்பொழுது அவரே அதைத் திரும்பவும் புதிதாக்கி, பரிசுத்தப்படுத்தி, நம்மை அவருடைய மகிமைக்காக அதை உபயோகிக்குமாறு அனுமதிக்கிறார். அப்பொழுது மாத்திரமே "சுய கௌரவம்" என்று ஒன்று இருக்கும். அப்பொழுது மாத்திரமே ஒரு நபர் தங்களில் தானே சந்தோஷமாக இருக்க முடியும். கிறிஸ்து நமது மூலமாக அவருடைய ஜீவனில் வாழ்கிறார். நம்மை ஒரு வெற்றியாகவும் செய்து வருகிறார். அதனால் நம்மில் நாமே மகிழ்ச்சியாக இருக்கிறோம். நாம் அவருடைய உள்ளத்தை, அவருடைய அன்பை, அவருடைய பாதுகாப்பை, கரிசனையை, மனதுருக்கத்தை, நம் மூலமாக வெளிப்படுத்தச் செய்யலாம். அவர் நம்மை முரடாராகவோ ஈவிரக்கமில்லாதவர்களாகவோ ஆக்குவதில்லை. கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி இருக்கிறோமோ அதற்காக சந்தோஷமாயிருக்கிறோம். அது என்னை ஒரு சிறந்த கணவனாக, மனைவியாக, தொழிலதிபராக அல்லது தொழிலாளியாக ஆக்குகிறது. கிறிஸ்துவில் மாத்திரமே நம்முடைய சுயமானது மெய்ம்மையாக ஆக்கப்படும். நன்மையானது எனக்கு நேரிடுவதை நான் காண்பதால் என்னுடைய சுயத்தை, விருப்பத்தை அவர் காட்டும் வழிக்கு நான் ஒப்புக் கொடுக்கிறேன்.

(4) என்னுடைய சுயத்தை தேவனுடனும் மற்றவர்களுடனும் பகிர்ந்து கொள்ளும் முழுமையான ஊடுருவலைக் கண்டு கொள்கிறேன்.

என்னுடைய சுய சித்தமானது தேவனுடைய சித்தமாகிறது. ஏனென்றால் தேவனுடைய சித்தமானது என்னுடைய சித்தமாகும். என்னுடைய துணையின் சித்தமுங்கூட தேவனுடைய சித்தமாகிறது. தேவனுடைய சித்தமானது முழுமையாக நமக்குள் ஊடுருவிச் செல்வதால் அதன் பயனாக அழகியதோர் கிரியை விளைகிறது. நமக்குள் ஒரு சுயம் இருக்கும். அது தனக்காகவே கிரியை செய்யாமல் மற்றவருக்காகக் கிரியை செய்கிறது. அது மற்றொன்றிற்காகச் செய்யும் சுயத்தின் ஒப்படைப்பல்ல. ஆனால் தேவனிடம் சுயத்தை சரணடையச் செய்து அந்த ஒப்படைப்பானது (மற்றவர்கள்) பிறர் சார்பில் கிரியை செய்வதற்காக தன்னையே மாற்றி அமைத்துக் கொள்ளுகிறது. இது கர்த்தத்துவத்தின் கோட்பாடுகளுடன் ஒருமைப்பாடு கொண்டது. அதன் காரணத்தினாலே இயேசுவும் தன்னுடைய சித்தத்தின்படி செய்யாமல் பிதாவினுடைய சித்தத்திற்கே முற்றிலுமாக ஒப்படைப்புச் செய்தார். அவருடைய சுயமானது இன்னும் கட்டுக்குள்ளே இருந்தது. அதை அடையும்படி சாத்தானானவன் கெத்சமனேயின் பாடுகளின் வழியாகவும், சிலுவையிலடைந்த அவமானத்திலும் ஏன் மரணபரியந்தமும் முயற்சித்தான். அது பாவம் நிறைந்த சுயம் அல்ல. அது ஒரு மனுஷீக பாத்திரத்தில் சித்தமுடைய பரிசுத்தமானதோர் சுயமாகும்.

சுயத்தை ஒப்படைப்புச் செய்வதென்றால் ஒரே ஒரு அதிகாரியிடம்தான் செய்ய முடியும். அதைப் படைத்தவர் தம்முடைய மகிமைக்காகவும், நமது நலனுக்காகவும் உபயோகப்படுத்தும் படியாக வாஞ்சிக்கிறார். ஒருவருக்கொருவர் அன்புடன் கீழ்படிந்திருங்கள். கர்த்தரிடத்தில் உங்களை ஒப்படைப்புச் செய்யுங்கள். கர்த்தருக்கென்று சுயத்தை பலியாகத் தத்தஞ் செய்வதற்கு அஞ்சாதிருங்கள். அவர் நம்மை நேசிக்கிறார். சந்தோஷமும் மன நிறைவும் இதை ஒப்படைப்புச் செய்யாதிருக்கும் வரை நம்மிடம் வராது. ஈசாக்கு பலிபீடத்தின் மேல் கிடத்தப்படும் வரைக்கும் கனி கொடுப்பவனாக இருக்க முடியாது. அவர் தமக்காக தனது சொந்த மன நிறைவுக்காகவும் சந்தோஷத்திற்காகவும் அதை நோக்கிச் சென்றார். "தேவனுடைய உன்னதமான நோக்கங்களானது பலிபீடத்தின் மேல் தங்கள் ஜீவியத்தைத் தத்தம் செய்தவர்களின் மூலமாகவே நிறைவேற்றப்படும். இது தான் மனிதனுடைய பலனான பிரபஞ்சத்தின் முடிவாகவும் பரிசுத்தமானது கண்டு உணரப் படுவதாகவும் இருக்கும். இந்த விதமான பரிசுத்தமான ஜீவியங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தமான ஆலயமாக எழும்புகிறது." (எபேசி 2:21) அது அவர்களுடைய கூட்டமான அமைப்பிலே வெளியரங்கமான மெய்யாக வேண்டுமானால் அது அவர்களது தனிப்பட்ட முறையிலும் உண்மையாக்கப்பட வேண்டும். (வெளி 21:3)

முடிவாக "நீ பரிசுத்தமாகும்படி நேரத்தைப் பயன்படுத்து" தேவனுக்காக காத்திருந்து அவர் அருகில் கிட்டிச் சேர்வது என்பது பரிசுத்தத்திற்கு இன்றியமையாததோர் கருப்பொருளாகும். உறவுத் தொடர்புகளில் செயல்படுவது போலவே ஒரு நபர் அதை அபிவிருத்தி செய்து கொள்ளும்படியாக காலத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் ஒன்று கூடி கூட்டமாக கொஞ்சமோ அல்லது ஒரு சிறிது நேரத்தையோ செலவிடாதவர்கள் உண்மையாகவே உறவை உண்டாக்கிக் கொள்ள

முடியாது. அதைப் போலத் தான் பரிசுத்தத்திலுங்கூட. ஜெபம், தேவனோடு ஒன்றுபடுதல், ஐக்கியம் ஆகியவையே மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஆம் வேதாகமம் சொல்லுகிறது, "தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது." (II நாளா 16:9)

தேவன் தாம் பார்த்து தேடிக் கொண்டிருப்பவன் ஒரு பரிசுத்தவான் ஆவான். அதாவது தனது சுயத்தையும் விருப்ப சித்தத்தையும் ஒரு நிபந்தனையுமின்றி ஒப்படைப்புச் செய்தவன். தேவனுக்கு ஊழியம் செய்யும்படியாக தகுதி பெற்றவன். சாக்குப் போக்கு சொல்லி மன்னிக்கும் பேர் பெற்ற பாவங்களாலும் தோல்விகளாலும் நெருக்கப்படாத ஒருவன் ஆனால் தேவனுக்காகக் காத்திருந்து, "கர்த்தாவே அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும்" என்று சொல்லுகிற பரிசுத்தவானையே தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார். தம்முடைய வல்லமையையும் மகிமையையும் யார் மூலமாக வெளியில் பகிரங்கப் படுத்த முடியுமோ அவ்வகையான மனிதர்களுக்காக தேவன் காலங்காலமாக வாஞ்சிக்க வேண்டும். அபிவிருத்தி செய்யப்பட்ட நடைமுறைகளுக்கா பிரசங்க மேடை பயிற்சி பெற்ற மன தத்துவ வல்லநர்களையோ அல்லது உயர்ந்த தொழில் நுட்ப அலுவலர்களையோ அழைக்கவில்லை. ஆனால் பரிசுத்தமான ஜீவியம் செய்யும், ஜெப வாஞ்சை நிறைந்த எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கும். மனிதர்களை அதாவது தேவனுடைய மகிமையானது பூமியிலே வெளிப்படும் வரை மகிமையை யார் பெற்றுக் கொள்ளுகிறார்களோ என்று விசாரப்படாத மக்களையே தேவன் அழைக்கிறார். நாம் ஜனங்களை மறுரூபப்படுத்தும் முன்னர் நமக்குள் மறுரூபம் பெற்ற மனிதர்கள் / ஸ்தீரிகள் - மோசேயைப் போன்று தேவனுடைய மகிமையானது முகத்தில் பிரகாசிக்கப் பெற்றவர்களையே பெற்றாக வேண்டும். மோசே மலையில் தேவனுடன் தனித்திருந்து நேரத்தை செலவழித்தான். இன்றைய நாட்களில் எப்படி அந்த மாதிரியான மக்களுக்காக ஏங்கி காத்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களைக் கொண்டு தான் நவீனமான பார்வோன்களுடன் தேவன் இடைபடக்கூடும். இந்த மாதிரியான மனுஷர்கள் அப்படி இப்படி என்று நேரிடுவதில்லை. தேவனே இத்தகைய மனுஷரை உருவாக்குகிறார். பாலைவனத்தில் ஆண்டாண்டுகளாக ஆடுகளையன்றி அவனுடைய கவனத்தைக் கலைப்பதற்கு வேறொன்றும் இல்லாமல், மலைகளில் கழித்த நாட்களில் தேவனை அல்லாமல் பேசுவதற்கு ஒருவருமின்றி ஒரு பரிசுத்தமான தேவனுக்கு தன் மூலமாக அவரை வெளிப்படுத்தும்படியாக பரிசுத்தமடைவதற்காக காலத்தை எடுத்துக் கொண்டான்.

அன்புள்ள பிரசங்கியாரே நல்ல இசையினாலும் நல்ல வசதிகளாலும், சுறுசுறுப்பான நிகழ்ச்சி நிரலாலும் சுருக்கமான நல்லதொரு கூறாக்கப்பட்ட செய்தியாலும் நீங்கள் வெற்றிகரமாகக் காட்சி அளிக்கலாம். ஆனால் ஜெயமானது ஜீவியங்களை கிறிஸ்துவின் சாயலிலும் அவருக்கு ஒப்பாகவும் மறுரூபப் படுத்துவதில் தான் இருக்கிறது. உன்னுடைய வெற்றியின் விரிவின் அளவானது இந்த விதமான உயர்ந்ததோர் மேன்மையுள்ள முயற்சியில் மூலமாக இந்த விதமான மறுரூபமாகுதல் உன்னுடைய ஜீவியத்தில் உண்டாக்கும் அளவைப் பொறுத்தது. நீ வெற்றிகரமாக கிரியை செய்ய வேண்டுமென்றால் நீ அனுபவத்தில் பார்த்ததையே ஊழியத்தில் பயன்படுத்த வேண்டும். பிரசங்கம் செய்தல் என்பது ஏதோ அரை மணி நேரத்தின் செயல்பாடு என்பதல்ல. அவருடைய ஜீவனால் இரண்டற ஒன்றாகப்பட்டு கலந்ததோர் ஜீவனின் வெள்ளப் பிரவாகம் ஆகும். பரிசுத்தமான தூதுகள் பரிசுத்தமான ஜீவியத்தில் பிறந்து வர வேண்டும்.

பிரதான ஆசாரியன் தெளிவாகவும், பிரத்தியட்சமாகவும் அனுபவத்துடனும் "தேவனுக்கு பரிசுத்தம்" என்று கம்பீரமாக அறைகூவி நடந்து வந்தார். பலியால் பரிசுத்தமாக்கப்பட்டும், அபிஷேகம் செய்யப்பட்டும், தனியாக பிரித்தெடுக்கப்பட்டும் அவர் தேவனுடைய பிரத்தியேகமான பிரசன்னத்தில் பிரவேசித்து ஏழு நாட்கள் காத்திருந்தார். பிரதான ஆசாரியர் மக்களுக்குள் தனித்துவம் உடையவராய் இருந்தது போல் பிரசங்கியாரும் மக்களுக்குள் பரிசுத்தத்தில் தனிச் சிறப்புடையவராக இருக்க வேண்டும்.

இப்படி மறுரூபமாக்கப்பட்ட மனுஷர்களும் / ஸ்தீரிகளால் ஆகிய ஒரு சேனையை தேவன் கண்டு பிடிக்கக் கூடுமானால் இந்த உலகமானது மறுரூபமாக்கப்படும் என்பதை நான் தெள்ளத் தெளிவாக அறிந்திருக்கிறேன். அப்படிப்பட்ட சேனையானது தங்களது சுயத்தையும் விருப்பத்தையும் கர்த்தரிடம் ஒப்படைப்புச் செய்தவர்களாக மனிதர்களை திருப்தி படுத்துகிறவர்களாகவோ மேலும் மனிதர்களுக்கு அஞ்சுகிறவர்களாகவோ இருப்பதற்கு மறுக்கிறவர்களாகவும் ஆனால் தேவனுக்குப் பயந்து இந்த

உலகில் அவர் சித்தம் நிறைவேற்றத் தேடுகிறவர்களாயும் இரக்கமுள்ள, அன்பான சேனையாக இரத்த சாட்சியாகும்படி ஒப்படைப்புச் செய்தவர்களாக ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சையை வைத்துக் கொண்டும் ஆனால் அவைகளுக்காக (ஆத்மா) ஒரு பரிசுத்தமான வெறுப்பைக் கொண்டவர்களாக அநீதிக்கும் பிசாசுக்கும் அவனுடைய கிரியைகளை வெறுக்கிறவர்களாகவும் இருக்கிற அந்த தகுதிகளையுடைய ஒரு சேனை எழும்பக் கூடுமானால் அந்த பூமியை நீதியாகிய வெள்ளத்தால் நிரப்பி தேவனுடைய இராஜ்ஜியத்தை இந்த உலகத்தில் ஸ்தாபிக்க முடியும். "உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறது போல பூமியிலும் செய்யப்படுவதாக." (மத் 6:10) அத்தகையதோர் சேனை பாலைவனங்களின் வறட்சியில் பயிற்சி பெற்று, அந்தரங்கத்தில் ஜெபத்தை ஏறெடுத்து சித்திரவதையின் பாதையிலும், நாட்டின் காவல் சிறைகளிலும் கெத்சமனேயிலும் பயிற்சி பெற்றிருப்பார்கள். அது தன் சிலுவையை மரணபரியந்தம் சுமந்து சென்று அது அதிகாரத்துவம் வல்லமை ஆகியவற்றால் ஆன சிம்மாசனத்துக்கு, பரமேறிச் செல்வதற்கு முன்பாக எடுத்து செல்கிறது. அது பெந்தெகொஸ்தே நாளுக்கு என்று காத்திருந்து அந்த ஸ்தலமானது அசைக்கப்படும் வரை ஜெபத்தில் நிலைத்து நிற்கிறது. அதற்காக சிறைச்சாலை கதவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்டவைகளுக்கு முன்னால் சாம் ராஜ்ஜியங்கள் வீழ்ச்சி அடையும் நீதி அவர்களுடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகின்றது. ஏனென்றால் பரிசுத்தம் என்பது அவனுடைய வெற்றிக் கொடியாகும். "நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி." (நீதி 14:34) இத்தகையதோர் இராணுவம் ஒரு பரிசுத்தவானான சேனைத் தலைமை தளபதிக்குள் இருக்கிறது. அவர் சேனைத் திரள்களின் பரிசுத்த தளபதிகளுக்கு அழைப்புக் கொடுக்கிறார். பவுல் சொல்லுவதாவது. "நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களாய் இருங்கள்" (I கொரி 11:1) என்று அறைகூவல் விடுகிறார். அவர் அதனுடைய வேர்கள் பரிசுத்தமானவை என்பதை அறிந்திருந்தார். எனவே கிளைகளும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். (ரோமர் 11:6) உலகத் தோற்றத்திற்கு முன்பே திருச்சபையானது பரிசுத்தமானதென்று முன் குறிக்கப்பட்டது. (எபேசி 1:4) அதை பரிசுத்தமுள்ளதாகவும் குற்றமில்லாததுமாய் முன் வைக்க வேண்டும் என்று விரும்பினார். "கறை திறை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்." (எபேசி 5:27) "உங்களையும் பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும் படியாக" (கொலோ 1:21b)

விசுவாசிகளானவர்கள் ஜீவியத்தில் பரிசுத்தமாய் இருப்பார்கள் என்று அவர் நம்பினபடியால், "பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம்" என்று புத்திமதியாகக் கூறினார். (2கொரி 7:1). "இவரோ தம்முடைய பரிசுத்தத்திற்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்திற்காகவே நம்மை இரட்சிக்கிறார்." (எபி 12:10) மேலும் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (வ 14) என்றும் அறிந்திருந்தார். பரிசுத்தமும், ஜெபமும் சமமாக அந்த அப்போஸ்தலனுடைய ஜீவியத்தில் மிகுந்த வலிமை பெற்று பரிணாமித்திருந்தது. "அன்றியும் புருஷர்கள் பரிசுத்தமான கைகளை உயர்த்தி எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டும் என்று விரும்புகிறேன்" (I தீமோத் 2:8) என்று சொல்லுகிறார். யாக்கோபு என்ற அப்போஸ்தலனும் இந்தக் கருத்தான யோசனையையே தனது நிருபமாகிய யாக்கோபு 5:16லும் வெளிப்படுத்துகிறார். "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக் 5:16)

நாம் தேவனுக்காக மாத்திரம் மனுஷரிடம் பேசாமல் தேவனிடமும் மனிதர்களுக்காகவும் வேண்டிக் கொள்ள வேண்டும். தேவனிடம் நமக்காக பேசுதல் என்பது நம்மை தேவனுக்காக மனிதரிடம் பேசும் பொழுதும், மனிதரிடம் தேவனுக்காக பேசும்பொழுதும் மிகுந்த பெலன் செய்வதாயிருக்கும். அதுதான் "தேவனிடத்தில் சேருங்கள். அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்." (யாக் 4:8) சங்கீதக்காரனும் எனக்கோ தேவனை அண்டிக் கொண்டிருப்பதே நலம் என்று ஒருமித்துக் கூறுகிறார். (சங் 73:28) பரிசுத்தமாகும்படி காலத்தை ஆதாயப்படுத்திக் கொள்ளவும். கர்த்தருடைய மகா சிறந்த பரிசுத்தவான்கள் அனைவரும் ஜெப வீரர்களாக விளங்கினார்கள். இராபர்ட் முர்ரே மெக்ஷீனி என்பவர் காலை 4 முதல் 5 மணி வரையிலும் மாலையில் 5 முதல் 6 மணி வரையிலும் தனி ஜெபத்தில் தரித்திருப்பதற்காக ஒதுக்கி வைத்துக் கொண்டார். வில்லியம் பிராம்வெல் என்பவரும் தனிப்பட்ட பரிசுத்தத்திற்காகவும், பிரசங்கிப்பதில் வெற்றிக்காகவும் அனுதினமும் நான்கு மணி நேரத்தில் தேவனோடு தனிப்பட்ட ஐக்கியத்திற்காக செலவழிப்பார். ஜாண் வெல்ச் என்ற ஸ்காட்லாந்து பிரசங்கியார் அடிக்கடி எட்டு

முதல் பத்து மணி நேரம் தினமும் ஜெபத்தில் செலவழிப்பார். பிரெய்ன்னார்டு தமது குடிலில் நாட்கணக்காக ஜெபத்தில் செலவழிப்பார். ஆனாலும் நடந்து சென்றும் பயணம் செய்தும் ஜெப உரையாடலைக் கடைபிடிப்பார். இவர்கள் யாவரும் அதிகாலையில் நேரத்தோடு எழுந்து தேவனோடு தனித்துக் காத்திருந்து மக்களோடு உறவாடுவதற்கு முன்னதாக ஜெபத்தில் தரித்திருப்பார்கள். ஜெபமே பரிசுத்தம் பூரணம் ஆகுதலுக்கு போஷாக்கான உணவாகும். ஜெபக் குறைவுள்ள மனிதனுக்கு பரிசுத்தத்தைப் பாராட்டத் தெரியாது. பரிசுத்தவானுடைய நுரையீரல் சுத்தமான காற்றைச் சார்ந்திருப்பதைப் போல ஜெபத்திற்காகக் காத்தருப்பான்.

ஆம் கர்த்தரின் கண்கள் பூமியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது, ஆபிரகாம், மோசே, தாவீது, ஏசாயா, ஏரேமியா, யோவான் ஸ்நானகன், பவுல், லூதர், வெஸ்லி, க்நாக்ஸ், ∴பின்னி, பிரெணன்னார்டு மற்றும் திரளானவர்களைக் கண்டுபிடித்தன. நாமும் தனிப்பட்ட விதமாக அவருக்கு அருகில் சார்ந்திருப்பதால் அவருடைய கண்களில் அகப்பட்டோமா? இந்த பூலோகத்தில் கர்த்தருடைய இராஜ்ஜியத்தின் வருங்காலமானது ஆம்! அது தேவனுடைய கரங்களில் இருந்தாலுங்கூட தேவனுடைய பரிசுத்தவான்களின் பரிசுத்தமான கரங்களிலும் வைக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்தமான முடிங்கால்கள், பரிசுத்தமான கால்களுக்கு ஓர் பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக ஒரு பரிசுத்தமான வழியில் நடக்கும்படியாக பலத்தைத் தருகிறது. தேவன் தாமே ஒரு பரிசுத்த ஜனம், பரிசுத்தம் என்ற பெருவழியாக, பரிசுத்த நகரை நோக்கி அங்கே வாசம் பண்ணும் திரித்துவ தேவனை - பரிசுத்தமான கர்த்தரைத் தரிசிக்கும்படி நோக்கிச் செல்லத் திருவருள் புரிவாராக. ஆமென்.

புறங்கூறுதல் - அதனால் விளையும் அழிவும், அதை எவ்வாறு மேற்கொள்வது

புரளி கிளப்பும் வீண் பேச்சைக் கேட்டும் அதைப் பரப்பியும் நம்மைக் கறைபடுத்திக் கொள்வதில் இருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி என்பதும் பற்றியதோர் படிப்பு:

1. ஒரு தீய அறிக்கை என்பது என்ன?

பொய்யான விஷயங்களையும், உண்மையானவற்றையும் மேலும் மெய்யான-விஷயங்களையும் உண்மைகளையும் மற்றவர்களைப் புண்படுத்தி ஒருவருடைய பொது நலத் தோற்றத்தை மாசுபடுத்தும் எண்ணத்தோடு பரப்புவது வீண் புரளியாகும். இதை சாதாரண மனிதனின் வாய்ச்சொல் நடைமுறையில் 'வீண் பேச்சு' எனப்படும்.

"பேலியாளின் மனுஷனாகிய ஒரு துன்மார்க்கன் ஆகடியம் பேசித் திரிகிறான். அவன் தன் கண்களால் சைகை காட்டி, தன் கால்களால் பேசி, தன் விரல்களால் போதனை செய்கிறான். அவன் இருதயத்தில் திரியாவரம் உண்டு. இடைவிடாமல் பொல்லாப்பைப் பிணைத்து வழக்குகளை உண்டுபண்ணுகிறான். ஆகையால் சடுதியில் அவனுக்கு ஆபத்து வரும். சகாயமின்றி சடுதியில் நாசமடைவான்." (நீதி 6:12-15; 16-17)

2. ஒரு பொய்யான வதந்தியை ஊக்குவிப்பது என்ன?

அப்சலோம் என்பவன் தன் தந்தையாகிய தாவீது இராஜாவுக்கு விரோதமாக சிம்மாசனத்தைக் கைப்பற்றுமாறு நடத்திய தீடீர் தாக்குதலானது வரலாற்றுக் கதையாகும். (II சாமு 15:1-6,11)

a) கசப்பு
இது ஒரு கபடான ஆவியாகும். தங்கள் வழியில் குறுக்கே நிற்கும் ஒவ்வொருவரையும் பழி வாங்குதல் செய்யும் பேராசை, செயல்பாடுகளைப் பற்றிய தத்துவமும் அதை செய்யும் நடைமுறை போக்கும். பல ஆண்டுகளாக அப்சலோம் தன் தகப்பனாகிய தாவீது இராஜாவுக்கு விரோதமாக கசப்பான காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தான். (எபி 12:15)

b) கலகம் செய்யும் ஆவி
இதுவும் ஒரு தனிப்பட்ட சுயேச்சையான ஆவியாகும். இது மிகவும் மோசமான பாவமாகும். (குறி சொல்வதற்கு) மாந்தீரகத்துக்கு சமமானது. (II சாமு 15:23)

c) வஞ்சனை
இங்கே ஜனங்கள் தாவீதுடைய குமாரன் அப்சலோமினால் வஞ்சிக்கப்பட்டு, இராஜாவுக்கு விரோதமாக தீடீர் தாக்குதலை நடத்தினார்கள். அப்சலோம் ஜனங்களை ஒரு தீய அறிக்கையை அல்லது அரைகுறையான உண்மையுள்ள செய்திகளைப் பரப்பி அதிகாரத்திற்கு விரோதமாக எழும்பும் படியாகச் செய்ய முடிந்தது. அப்சலோம் ஒரு திருடன் மக்கள் இராஜாவுக்கு விசுவாச பக்தியுடன் இருந்த இருதயங்களைத் திருடிச் சென்றான். அதிகாரத்துவத்தோடு மனக்குறை அல்லது மனத்தாங்கல் உள்ளவர்களை எப்படி சமாளிப்பதென்று கசப்புணர்ச்சி உடையவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள்.

d) பெருமை
அப்சலோமுடைய அழைப்பானது அவன் ஒரு இராஜாவாக இருக்க வேண்டும் என்பதற்கல்ல. ஆனாலும் அவன் அந்தப் பதவிக்காக ஏங்கிக் கொண்டிருந்தான். (அப் 20:29-30 ஒப்பிடுக)

e) ஏக்கமான பொறாமை
மற்றவர்கள் குறிப்பிடக்கூடிய ஒன்றை பெற்றிருப்பதைப் பார்த்து அதை பெறும்படி வாஞ்சிப்பது தாங்கள் அதைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் கசப்புணர்ச்சி கொள்ளுதல் ஆகும்.

3. **தீமையான வதந்திகளைப் பரப்புவதற்கான சாத்தானுடைய நோக்கம்**

இந்த விதமான கிசுகிசுப்பவர் தன்னையும் அறியாமல் விழிப்புணர்வின்றி சாத்தானுடைய (கிரியைகளைச்) வேலையைச் செய்கிறார்கள். கிரேக்க மொழியில் இந்த பிசாசு என்ற வார்த்தைக்கு "மோசம் போக்குகிறவன்" என்று அர்த்தமாகும். நீ புறங்கூறினாலும் அல்லது வதந்திகளைப் பரப்பினாலும் நீ மெய்யாகவே பிசாசுடைய வேலையைச் செய்கிறாய். (வெளி 12:10b)

a) தலைவர்களுடைய நல்ல பெயரைக் கெடுப்பதற்காக
மோசே அடிக்கடி தனக்கு விரோதமாக கலகம் செய்கிற மக்களையும் மேலும் சாத்தானால் ஒன்று தாங்கள் அறிந்தும், அறியாமலும் தீமையான வதந்திகளைப் பரப்புவதற்கென்று உபயோகப்படுத்தப்பட்டதோர் தனி நபர்களையும் நேருக்கு நேர் சந்திக்க வேண்டியதிருந்தது. சில சூதுவாதற்ற எளிமையான சில நபர்கள் தாங்கள் பல திறப்பட்ட ஊழியங்களிலுள்ள பலவீனங்களை வெளி உலகத்துக்கு கொண்டு வரும்படியாக தேவனால் அழைக்கப்பட்டவர்கள் என்று தங்களைப் பற்றி எண்ணிக் கொள்கிறார்கள். என்னவென்றாலும் தேவன் நம்மை ஒரு போதும் காட்டிக் கொடுப்பதில்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நமது பாவத்தை உணர்த்துகிறார். அதுவும் நாம் மனந்திரும்ப வேண்டும் என்ற காரணத்தினால் தான். (யோவான் 16:8-9) எதிரான தீர்ப்பு வழங்குவதற்கும், குற்றவாளி எனத் தீர்க்கப்படுவதற்கும் இடையே பெரிய வேறுபாடு உண்டு. ஆம், குறைகூறும் ஆவி, கட்டி எழுப்பும் ஆவி, கேவலப்படுத்த ஒரு ஆவி, சீர் பொருந்த ஒரு ஆவி என்ற வேறுபாடுகள் உள்ளன. (கலா 6:1)

b) கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவியை ஒருவருக்கொருவர் அடைத்து மூடி வைத்துக் கொள்ளும்படியாக
விளைவுகள்: சண்டைகள் (மோதல்கள்) சச்சரவுகள், தேவ பக்தி இன்மை, கோள் சொல்லுகிறவனில்லாமல் சண்டை அடங்கும். (நீதி 26:20-22)

c) எஞ்சியிருந்தவர்களின் மனத்தை (துர்ச் செய்தியால்) விஷத்தால் தீண்டப்படும் படியாக
எண் 14:1-4 துர் செய்திகள் மரணத்துக்கேதுவான புற்றுநோயைப் போல் இருக்கும். அவர்கள் மற்றவர்களுடைய மனத்தை துர் செய்திகளால் கெடுத்துப் போட்டு, தேவனுடைய வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக் கொள்வதிலிருந்து தடை செய்வார்கள். இதற்காக எதிர்மறையான ஆவியை உடைய ஒன்று அல்லது இரண்டு துர்ச் செய்தி பரப்புகிறவர்களால் ஒரு கூட்டத்தினருடைய மனதையே கெடுத்துவிட முடியும். ஒருவர் அவர்கள் சொல்வதைத் தொடர்ந்து செவி கொடுத்துக் கேட்டுக் கொண்டிருப்பாரானால் அவரும் அவர்கள் செய்வது போலவே துர்ச் செய்திகளைப் பரப்புவார்.

d) உலகத்தார் கிறிஸ்தவர்களைப் பரியாசம்பண்ணி நகையாடி கிறிஸ்துவை புறக்கணிக்கும்படி செய்ய

e) தேவனுடைய அபிஷேகத்தின் பிரவாகத்தைத் தடுத்து நிறுத்தும்படியாக (சங் 133:1-2)

4. **யாரோ ஒருவர் உனக்கு துர்ச் செய்தியை பரப்பும்படி முயற்சிக்கிறார் என்பதைக் கண்டுபிடிப்பது எப்படி?**

இந்த துர்ச் செய்தியைப் பரப்புகிறவர் செய்யக்கூடியது:

a) உமக்கு ஒரு துர்ச்செய்தி அவன் தருவதற்கு முன்னர் உமது ஆவியைச் சோதித்தறிவான்
நீவிர் பொதுவாக ஒரு எதிர்மறையான நபராக இருந்தால் எதிர்மறையான மனிதர்களையே உம்மண்டை ஈர்த்துக் கொள்வீர். கசப்புணர்வுள்ள மனிதர்கள் கசப்புள்ள மக்களையே தம்மண்டைச் சேர்த்துக் கொள்ளும் போக்குள்ளவர்களாய் இருப்பார்கள்.

b) உமக்கு அந்த துர்ச் செய்தியைக் கொடுப்பதற்கு முன்னால் நீர் அதை ஏற்றுக் கொள்வதைச் சரிபார்ப்பார்.
அவன் உங்களிடம் ஒரு குறிப்பிட்ட மனிதரைப் பற்றி உமது அபிப்பிராயத்தைக் கேட்பான். உம்முடைய பதிலை அவன் கவனிப்பான்.

c) உம்முடைய அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டி விடும்படியாக முயற்சிப்பான் காலப்போக்கில் அந்த செய்தியைப் பற்றி விசாரிக்கும் நபர் நீர் ஒருவராக இருக்கலாம். (நீதி 17:4; 18:8)

d) சிலர் இந்த வீண் பேச்சை ஆலோசனை ஜெபத்திற்காக கேட்பது போல் தோற்றத்தை உண்டாக்கி மாறுவேஷத்தில் கொண்டு வருவார்கள்.
ஒரு முன்னாள் ஆலோசகரைப் பற்றி துர்ச் செய்தி ஒன்றை உங்களிடம் கொண்டு வருகிற ஏதோ ஒருவரைப் பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். பின்னொரு காலத்தில் உங்களைப் பற்றியும் விரோதமாகத் துர்ச் செய்தியை அவன் பரப்பலாம்.

5. இந்த துர்ச் செய்தி பரப்புபவரை எப்படி கையாளுவது?

அவரிடம் அன்பாக ஏழு வினாக்களைக் கேளுங்கள்:

a) என்னிடம் நீ இதைச் சொல்லுவதற்குக் காரணம் என்ன?
வீண் பேச்சு பரப்பும் வட்டம் பெரிதாக்கப்பட்டால் அது பிரச்சனையை இரட்டிப்பாக்கும்.

b) இந்த விஷயத்தைப் பற்றி எப்படி பெற்றுக் கொண்டாய்?
இந்த துர்ச் செய்தியின் பிறப்பிடத்தை அடையாளங் காட்ட மறுப்பது இது ஒரு துர்ச்செய்தி தான் என்பதற் குறிப்பிடும் அடையாளமாகும்.

c) நீ அந்த நேரடியாக சம்பந்தப்பட்டவர்களிடம் போய் இருந்தாயா?

d) நீ உன்னுடைய தனிப்பட்ட முறையில் அந்த செய்தியின் விஷயங்களைச் சரிபார்த்தாயா?

e) அதை நான் கேட்டு அறிவது அவசியமா?
அதைப் பற்றி பேசுவதால் பிரச்சனைக்கு தீர்வு உண்டா?

f) ஆவிக்குரிய பிரகாரமாக அந்த சந்தர்ப்பத்திற்கு பொறுப்பான நபரை நான் சந்திக்கக் கூடுமா?

g) நீ சொன்னதை நான், நீ கூறியதாகச் சொல்லலாமா?

6. நான் ஒரு துர்ச் செய்தியைப் பெற்றுக் கொள்ளும் பொழுது என்ன நேரிடுகிறது?

"பேலியாளின் மகன் கிண்டி விடுகிறான். எரிகிற அக்கினி போன்றது அவன் உதடுகளில் இருக்கிறது." (நீதி 16:27)
"மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பி விடுகிறான். கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்து விடுகிறான்." (நீதி 16:28)
"பேலியாளின் மகனாகிய ஒரு துன்மார்க்கன் ஆகடியம் பேசித் திரிகிறான். அவன் தன் கண்களால் சைகை காட்டி, தன் கால்களால் பேசி, தன் விரல்களால் போதனை செய்கிறான். அவன் இருதயத்திலே திரியா வரம் உண்டு. இடைவிடாமல் பொல்லாப்பைப் பிணைத்து வழக்குகளை உண்டுபண்ணுகிறான். ஆகையால் சடுதியில் அவனுக்கு ஆபத்து வரும். சகாயமின்றி சடுதியில் நாசமடைவான்." (நீதி 6:12-15)

வீண் பேச்சு ஒன்றை ஆரம்பிப்பது பாவம். அந்த வீண் பேச்சைத் தொடர்ந்து கேட்பது அதற்கு முற்றுப் புள்ளி வைக்காமல் கேட்பதுவும் பாவ மாகும்!

அதைக் கேட்பவர் செய்யக்கூடியது

a) தனது ஆத்துமாவை கறைபடுத்துவார்
கலகம் செய்த செயல்பாடும், துர்ச் செய்தியை பரப்பியதும் அப்சலோமுக்கு அவனுடைய ஜீவனையே விலையாக்கியது. துர்ச் செய்தியைப் பரப்புவதற்கான நிர்பந்தமான அவசியமானது தன்னையே அதிகமாக அழித்துக் கொள்ளும் நோயாகும்.

"துஷ்டன் அக்கிரம உதடுகள் சொல்வதை உற்றுக் கேட்கிறான். பொய்யான கேடுள்ள நாவுக்கு செவி கொடுக்கிறான்." (நீதி 17:4)
அக்கிரமமான உதடுகளால் பேசுவதைக் கேட்கிறவனையும், கேடுள்ள நாவுக்கு செவிகொடுக்கிறவனையும் வேதாகமம் எவ்வாறு வருணிக்கிறது?

b) கசப்பான உணர்ச்சியை ஆவியால் கட்டுப்படுத்திக் கொள்.
செவி கொடுக்கிறவன் மற்றொருவனுக்கு விரோதமாக கசப்பை விருத்தி செய்து கொள்ளக் கூடும். ஒரு வேளை நேரடியாக பாதிக்கப்படாமல் இருந்தாலுங்கூட அவ்வாறாக முடியும்.

c) தேவனுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டு அவனையே நீதிபதியாக்கிக் கொள்.
"ஆகையால் மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச் சொல்ல உனக்கு இடமில்லை. நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத் தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்." (ரோமர் 2:1)

ன) தேவனுடைய வெறுப்புக்கு உன் ஆளாக்கிக் கொள்.
"ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார். அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய் நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்ய விரைந்தோடும் கால், அபத்தம் பேசும் பொய் சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே" (நீதி 6:16-19)

7. ஒரு துர்செய்தியை உருவாக்குவதிலிருந்து நமது உள்ளத்தை எவ்வாறு சுத்திகரித்துக் கொள்வது?

a) அந்த மாசுக் கறையிலிருந்து சுத்திகரிக்கும் படியாக தேவனையே கேட்டுக் கொள்.

b) காரியங்களை பற்றி ஊகங்கொள்வதோ அவ்வாறு மெய்யென்று எடுத்துக் கொள்வதோ கூடாது.
கோட்பாடு: ஒரு நபர் நீருபிக்கப்படும் வரைக்கும் குற்றவாளியாக மாட்டார். "பேதையானவன் எந்த வார்த்தையும் நம்புவான் விவேகியோ தன் நடையின் மேல் கவனமாய் இருக்கிறான்." (நீதி 14:15)

c) சரிபார்க்கவும்: மோசம் போக்குகிறவனால் ஏமாற்றப்பட்டவரை பார்க்கிற உம்முடைய கண்ணோட்டமான பாதையில் நோக்குவதை இந்த துர்செய்தியானது பாதித்ததுண்டா? அந்த விதமான தப்பெண்ணத்தை நீக்கி விடுமாறு தேவனைக் கேட்டுக் கொள். (சங் 19:13)

d) அன்பைத் தரித்துக் கொள்.
"எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிடத்திலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும்." (I பேதுரு 4:8)

e) இந்த துர்செய்தியை மற்றவர்களுக்கு பரப்பும் ஏவுதலை நிறுத்திக் கொள் முற்றுப் புள்ளியுடன்.
நீ ஒரு துர்செய்தியைக் கேட்கும்பொழுது அதற்காக பரிசுத்தமானதொரு துக்கத்தை உன் இருதயத்தில் உணர வேண்டும். துர்செய்திகள் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறது. (எபேசியர் 4:29) எபேசியர் 4:29ஐ நினைவு கூறுங்கள். "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்."

f) எதிர்மறையான சுபாவமுள்ள மனிதரின் கூட்டத்திலிருந்து விலகியிருங்கள்.
அவர்களுடைய எதிர்மறையான ஆவி உங்களுக்குள்ளும் சுலபமாக மாற்றி வரக்கூடும். (சங் 1:1-3)
தூற்றிக் கொண்டு திரிகிறவன் இரகசியங்களை வெளிப்படுத்துவான். ஆதலால் தன் உதடுகளினால் அலப்புகிறவனோடே கலவாதே. (நீதி 20:19)

"எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்த சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டும். அவனை சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி அவனுக்குப் புத்தி சொல்லுங்கள்." (II தெச 3:6,15)

g) பிரிவு 5ல் அட்டவணைப்படுத்தப்பட்ட 7 கேள்விகளைக் கேட்டு துர்செய்தி பரப்புவதை நீங்கள் நிறுத்தி வைத்துக் கொள்ளக்கூடும். (சங் 19:14)

இந்த ஜெபத்தை அடிக்கடி ஜெபியுங்கள். சங் 141:3
ஜீவியத்திற்கான இலட்சியக் கோட்பாடு. யாக் 1:19
ஞாபகத்தில் வைத்திருங்கள். யாக் 1:26
பழக்கப்படுத்திக் கொள்க. பிலிப் 4:8

கிசுகிசுக்கும் நாவுகள்

சுவாரஸ்யமான வதந்தியை சமீபத்தில் கேட்டதுண்டா? எந்த விதமான கவர்ச்சியான வதந்திகளையும் "உங்களுடைய காதுகளுக்கு மட்டும்" என்று பரப்பினதுண்டா? ஆகவே துர்செய்திகளுக்கும் வீண் பேச்சுக்குமான நச்சு முறிவுக்கான ஒளஷதத்தைப் படியுங்கள்.

திருச்சபையில் ஏதோ ஒன்றைப் பற்றி யாரோ ஒருவருக்கு மற்ற யாரோ ஒருவரைப் பற்றி சொல்லப்பட்ட புரளியால் மிகுதியான பிரச்சனைகள் எழும்புகின்றன. நமது வாய்களிலிருந்து வெளியில் புறப்பட்டு வரும் தவறுகளால் பெருநாசம் உண்டாக்கப்படக்கூடும். அவர்கள் திருச்சபையில் மக்களை ஒருவரிலிருந்து ஒருவரைப் பிரிக்கிறார்கள். அவர்கள் மக்களை தேவனுக்காகவும் திருச்சபையின் தரிசனத்திற்காகவும் வைராக்கியத்தை இழந்து விடக் காரணமாகிறார்கள். இதற்கான நிவாரணத்தை பிரயோகிக்காமல் அதை விட அதை தடுப்பதற்கான வேலையைச் செய்வது தேவையாகும்.

> "நல்லது, பிறகு அவன் சொன்னதாவது, போதகரைப் பார்த்தான். இதை உங்கள் ஜெபங்களில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

நாக்கு என்பது கட்டுப்பாட்டுக்கு அடங்காத ஒரு நபர். மேலும் அது திருச்சபைகளையும் குடும்பங்களையுமே அழித்து நாசமாக்குகிறது. அதை நாம் ஒருவருக்கொருவர் விரோதமாக பயன்படுத்துகிறோம். முதலாவதாக நாம் நம்ப முடியாத அளவுக்கு பாதுகாப்பற்று இருக்கிறோம். நாம் யாராவது ஒருவரை கெட்டவர்கள் என்று எண்ண வைக்க முடியுமானால் நம்மை நல்லவர்களாக மற்றவர்கள் பார்க்கும் படியாகச் செய்யலாம் என்று நினைக்கிறோம். ஆனால் இயேசு உரைக்கிறதாவது, "பரலோக ராஜ்ஜியத்தில் ஒருவன் பெரியவனாக விரும்பினால் (இவ்வுலகில்) இங்கு ஒரு வேலைக்காரனாக இருக்க வேண்டும்"

இதற்கான இரண்டாவது காரணம் என்னவென்றால் மற்றவர்களிடத்தில் நாம் பார்க்கிற அதே மாதிரியான குற்றங்களையும் லஞ்சத்திலும் ஈடுபடுகிற குற்றங்களைச் செய்கிற குற்றவாளிகளாக இருப்போம். தங்கள் நாவுகளை துர்பிரயோகம் செய்கிற நான்கு விதமான மக்களை வேதாகமம் அடையாளங் காட்டுகிறது.

கிசுகிசுப்பவர்:

இந்த மாதிரியான போக்குள்ள நபர் இரகசியமாக ஒருவரைப் பற்றிய தகவல்களையும், அந்த நபருக்கும் (நுண்ணறிவுக்கும்) தெரியாமலே பரப்பப்படுகிறது. மக்களுக்குள் தங்கள் வழிகளை நடத்திக் கொள்ளும் நோக்கத்துடனும், விரும்பியும் யாரோ ஒருவரைப் பற்றி ஏதோ ஒரு செய்தியைப் பகிர்ந்து கொள்ளுகின்றனர்.

வீண் பேச்சு:

இந்த வீண் பேச்சானது வதந்திகளையும் யோசனைகளையும் பெரிதுபடுத்தி நாடகமாடுகிறார்கள். ஒரு வேளை நீங்கள் அவனோ அல்லது அவளோ திருச்சபையில் தங்களது போக்காகத் தகவல்களை திருச்சபையின் வழியாகப் போய் தங்கள் வேலையைச் செய்ய விரும்புவது போல் உணருகிறார்கள் என்று நீங்களும் சொல்லலாம்.

மோசம் போக்குகிறவன்:

மோசம் போக்குகிறவன் மற்றொரு நபருடைய நம்பக் கூடியதன்மையை அல்லது நல்ல பெயரான கீர்த்தியை கெடுத்து நாசம் செய்யும் தகவல்களைப் பரப்பி கெடுத்துவிட முயற்சிக்கிறான். சில தகவல்கள் உண்மையாக இருந்தாலும், அவைகள் புறட்டப்பட்டவைகளாக அல்லது சமானியமான யூகங்களாகவே புண்படுத்தக் கூடியதாக குணமாக்கக் கூடியதாக அல்லாத நோக்கங்களாக இருக்கலாம்.

இந்த வீண் பேச்சு வட்டம் பெரிதாக விரிவடைந்தால் அது திருச்சபைக்கு கொடுக்கக் கூடிய இன்னல்களை கணக்கிட்டுக் கொள்ளக் கூடும். இந்த தகவல்கள் சுற்றி வரும் பொழுது அங்கே

கூட்டவோ அல்லது குறைக்கவோ நடைமுறைப்படுத்தப்பட்டு வழக்கமாக பேசப்படுகின்ற நபரின் கெடுதலுக்காகவே இருக்கும்.

நாவுகளைத் தவறாக உபயோகிப்பதால் ஆண்டாண்டு காலமாக நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்களையுங்கூட பாதித்து அவர்கள் மீது நாசத்தை உண்டாக்கக் கூடிய விளைவுகளைக் கொண்டு வரும். நீதி 16:28ல் சொல்லப்படுகிறது என்னவென்றால்: 'மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பி விடுகிறான். கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்து விடுகிறான்.'

பிறர் விவகாரங்களில் தலையிடுகிறவர்கள்:
இந்த வகையானவர்கள் தான் வேதாகமத்தில் கடைசியான மோசமான பாகுபாடு செய்யப்பட்ட வகையினர் ஆவர். பிறர் காரியங்களில் தலையிடுகிறவர்கள் ஒரு விதத்தில் மற்றவர்களைப் பற்றிய எதிர்மறையான தகவல்களை தோண்டி எடுப்பது தான். அவர்களுக்கான அழைப்பாக உணருகிறார்கள். I பேதுரு 4:45ல் கொலைபாதகர்களோடும் திருடரோடும் சேர்த்து வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

பிரச்சனை என்னவென்றால் நாம் ஒரு தடவை அவர்களோடு பேச்சுக் கொடுத்துவிட்டால் அவர்கள் தங்களது சமீப காலத்து கிருமிகளால் வெளியில் பாதிக்கப்பட்டு தங்களைச் சுற்றிலும் வதந்தியைப் பரப்புவதால் நாம் மாசுபடுத்தப்படுகிறோம். அவர்கள் தங்களைப் பற்றி தேவனுடைய பிரத்தியேகமான துப்பறிபவர்கள் என்று எண்ணிக் கொள்கிறார்கள்.

இங்கே கொள்ளை நோயான, கிசுகிசு, வீண்பேச்சு, மோசம் போக்குகிறவன், அடுத்தவர் காரியத்தில் தலையிடுதல் ஆகியவற்றை முற்றுப் புள்ளி வைத்து நிறுத்துவதற்கான ஐந்து திறவுகோல் கேள்விகள்!

திறவுகோல் 1 - நீ ஏன் இதை என்னிடம் சொல்லுகிறாய்?

போதகராக நான் ஒரு பெரிய தவறு செய்திருக்கிறேன். அதாவது, ஒரு ஆலோசனை கூறும் சந்தர்ப்பத்தில் யாரோ ஒருவர் சொல்வதைக் கவனித்துக் கேட்கும் சமயத்தில் அந்த மனுஷன் விரும்பியதெல்லாம் எதிர்மறையான ஏதோ ஒரு காரியத்தை அதிகாரத்துவத்தின் பதவியிலுள்ள ஒருவரிடம் பகிர்ந்து கொள்ளும்படி விரும்பிய சமயத்தில் தான் என்று நான் நினைக்கிறேன். நான் கேட்டிருக்க வேண்டியதெல்லாம், "நீ ஏன் இதை என்னிடம் சொல்கிறாய்?" என்று தான். கேட்டிருக்க வேண்டும் இதற்கு உண்மையான பிரதியுத்தரமாவது, "அந்த நபருக்கு விரோதமாக ஏதோ ஒன்றை சொல்ல விரும்புகிறேன்" என்பதாக இருக்க வேண்டும். உனக்கு யாராவது ஒருவருக்கு விரோதமாக ஏதோ விஷயம் கொஞ்சம் இருக்குமானால் வேதாகமம் உன்னைப் பார்த்து "நீ போய் உன் போதகரிடம் சொல்" என்று (ஆலோசனை) கூறுவதில்லை. அது சொல்லுகிறதாவது "நீயே போய் அந்த நபரிடம் சொல்" என்று கூறுகிறது. (மத் 18:15-17) அதற்கு மாறாக நேரிடுவதெல்லாம் என்னவெனில் அந்த புரளியின் வட்டமானது விரிந்து விரிந்து கொண்டே போய், மேலும் மேலும் தூரமாக விரிந்து அந்த விஷயத்தோடு இடைபட வேண்டிய மனிதரிடமிருந்தே அவ்வாறு போகிறது.

திறவுகோல் 2 - இந்த தகவல் உனக்கு எங்கிருந்து கிடைத்தது?

சில மனிதர்கள் இவ்வாறாக பதிலளிப்பர். "நான் வருத்தப்படுகிறேன். நான் உங்களிடம் அதைச் சொல்லக்கூடாது" என்பார்கள். நான் ஏதோ பின்வருவதைப் போல ஒன்று சொல்லுவேன். என்னிடம் சொல்லக்கூடாது என்பதற்காக என்னவென்று நினைத்து இருக்கிறாய்! நீ யார் என்ன என்று இருக்கிறாய்? ஆம், நீ ஒரு அரசாங்க அலுவலரா அல்லது யாராவது ஒருவரா என்ன? என்று கேட்பேன். ஒருவர் வேண்டுமென்றே அந்த காரியத்தின் ஆரம்பமான மூல ஸ்தானத்தை வெளியிட விரும்பவில்லையானால் அது வீண் பேச்சான புரளியாகும்.

திறவுகோல் 3 - அந்த தகவல்களைப் பற்றி நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களை விசாரித்தாயா?

மற்றவர்களிடம் வேறு யாரோ ஒருவரைப் பற்றிய தகவல்களைக் குறித்து பேசும்படியாக ஆரம்பிக்கும் பொழுது ஒரு கால் அது உண்மை அல்லாமலும் கூட இருக்கலாம். ஆகவே பிறகு அது அந்த குறிப்பிட்ட நபருக்கு தீங்கு விளைவிப்பதாய் அவருடைய அல்லது அவளுடைய புகழுக்கு அபகீர்த்தியை உண்டாக்கலாம். நீ ஒருவரைப் பற்றி எதிர்மறையான தகவல்களைக் கூறினால், அதைக் கவனித்துக்

கேட்பவர் அந்தக் குறிப்பிட்ட நபரைப் பார்க்கும்பொழுது நீ கொடுத்த துற்செய்தியையே முதல் காரியமாக நினைத்துப் பார்ப்பார்.

திறவுகோல் 4 - அந்த தகவல்களை (மெய்தானா) என்று சரி பார்த்தாயா?
நாம் எனிதாகச் செய்யக்கூடிய ஒரு தவறாவது நாம் விஷயத்தின் ஒரு பக்கத்தை மட்டும் கவனித்துக் கேட்பது தான். நாம் ஒரு கணவனையோ, மனைவியையோ அல்லது குடும்பத்தில் ஒருவரையோ நாம் செவிகொடுத்து கவனிக்கும் பொழுது, அந்த குறிப்பிட்ட நபர்கள் இந்த மனுஷன் பயங்கரமானவர், நாங்கள் அந்த மனிதரிடம் எப்பொழுதுமே பேசுவது கிடையாது என்று சொல்லக் கூடியவர்கள் தான். கண்டுணரக்கூடிய காரியங்களும் திரித்துச் சொல்லப்படக்கூடும். அதனால் நாம் எளிதில் இரண்டாம் தரத் தகவல்களின் அடிப்படையில் தவறான தீர்ப்புச் செய்யலாம். ஆதலால் தகவல்களை சரியா என்று பார்க்கவும்.

திறவுகோல் 5 - நீ சொன்னதாக இதன் மேல் நான் சொல்லக் கூடுமா?
“ஓ! இல்லை, நான் இதைப் பற்றி சும்மா சொல்வதெல்லாம் நீங்கள் அதைப் பற்றி கூடுமானால் ஜெபிப்பதற்காகத் தான்” என்பார்கள். இந்தக் கேள்விக்கு விடை கொடுப்பவர்கள் இந்த மாதிரியாகச் சொல்வார்களானால் நீங்களும் அவர்களுடன் பரவக் கூடும். இந்த கிருமிகள் உங்களுக்கும் பரவக்கூடும்.

ஆகவே இந்த கொள்ளை நோயை எப்படி ஒழித்துக் கட்டுவது? இதற்காக நமக்கு தெய்வீக குணமாகுதல் தேவையாகும். நாம் தேவனை நோக்கிப் பார்த்து நமது நோய்வாய் பட்ட வாய்களையும் சிந்தனைகளையும் கழுவிச் சுத்திகரிக்கும்படி வேண்டிக் கொள்ள வேண்டும். (ஏசாயா 6:5-7) நாமும் நம்மை கணக்கொப்புவிக்கும்படி ஆயத்தமாயிருக்க வேண்டும். ஒரு வேளை திருச்சபையில் இரண்டு அல்லது மூன்று பேர்கள், நீங்கள் பார்த்துச் சொல்லக் கூடியவர்கள் இருந்தால் அவர்களிடம் “எனக்கு என் வாயோடு ஒரு பிரச்சனை உள்ளது ஆகையால் தயை கூர்ந்து எனக்கு அவசியம் என்று இருந்தால் என்னைக் கண்டிக்கவோ திருத்தவோ தயாராக இருங்கள்” என்று அவர்களிடம் சொல்லலாம். ஆகையால் நீங்கள் இந்த நோயிலிருந்து விடுதலை பெற்றீர்கள் என்று நீங்கள் எதிர்மறையான தகவல்களைக் கேள்விப்பட்டால் அவர்கள் உங்களை தூண்டி ஊக்குவிப்பதற்கு பதிலாக உங்களை மனக்குறைக்குள் ஆளாக்குவார்கள்.

உங்களுக்கு மற்றவர்களைப் பற்றி பேசுவது பிரச்சனை என்றால் அந்த விஷயத்தை நேருக்கு நேர் சந்திப்பதென்றால் உம்முடைய பழக்க வழக்கமானது மரணத்துக்கேதுவான தொற்று நோயை திருச்சபையில் உண்டாக்கி பரவச் செய்கிறது. அவர்களுடன் இருக்கும் தவறு என்ன என்பதைக் காட்டும் படியாக தேவனை நோக்கி ஜெபியுங்கள். உங்களுக்கும் புறம் பேசும்படியாக சோதனை இருக்குமானால் உங்களை பாவத்திற்குள் அதாவது மற்ற கிசுகிசுத்தல் என்பதற்குள் இழுத்துச் செல்லும் மனிதர்களிடமிருந்து விலகி இருங்கள்.

நாவுக்கான பத்துக் கட்டளைகள்

1. **நீ கிசுகிசு பேசாதிருப்பாயாக.** (நீதி 18:8) காதில் கிசுகிசுக்கப்பட்ட எந்த விதமான புரளி கதைகளும் அவைகள் பரப்பப்படுவதற்கு முன்னர் ஒரு குடும்பத் தலைவி ஆப்பிள் பழங்களை பயன்படுத்துவது போல முதலாவதாக தோலுரிக்கப்பட்டு, கீற்று கீற்றாக அறுக்கப்பட்டு மத்திய கொட்டை பகுதி நீக்கப்பட்டு, பிறகு மிஞ்சியிருக்கிறவற்றைத் தாராளமாக சர்க்கரையைத் தூவி பயன்படுத்துவது போல கையாளப்பட வேண்டும்.

2. **திரளான ஓசையில்லாத வெறுமையான வார்த்தைகளை உபயோகிக்காதிருப்பாயாக.** (நீதி 10:19) உன்னுடைய நாவானது உன்னுடைய எண்ணத்தின் போக்கையும் உன் நல்லொழுக்கத்தைப் பற்றியும் தெரியப்படுத்தும் என்று யாரோ ஒருவர் சொல்கிறார். "ஒரு நோயாளியினுடைய நாக்கை சோதித்துப் பார்க்கும் பொழுது ஒரு மருத்துவர் சரீரத்திலுள்ள நோயைக் கண்டு பிடிக்கிறார். தத்துவ ஞானிகள் மனதிலுள்ள நோயைக் கண்டுபிடிக்கிறார்" என்கிறார். நமது பரம எஜமானன் ஆனவர் தாமே மனித குலத்து பிள்ளைகளைக் கண்டித்துக் கூறுவதாவது, "உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும்" சொல்லுங்கள். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் என்கிறார். (மத் 5:37)

3. **தற்பெருமையாக பேசி தம்பட்டம் அடித்துக் கொள்ளாயாக.** (நீதி 27:2) மிகவும் அற்பமான மனிதன் நீண்ட வாசகங்களைப் பேசி தற்பெருமை அடித்துக் கொள்கிறான். அவன் எல்லாருடைய கவனத்தையும் கேந்திரமாக்கி தன் மீது உண்டாக்கிக் கொள்ள விரும்புகிறான். பெருந்தன்மையுள்ள மனிதன் அமைதியாகவும் நிசப்தமாகவும் கலங்கரை விளக்கைத் துலக்கி வைத்துக் கொள்கிறான். அது கப்பல்களை தாங்கள் விரும்பும் துறைமுகத்துக்கு வழிகாட்டி செல்வதற்காக உதவும்.

4. **இச்சகம் பேசாயாக** (நீதி 26:28) யாரோ ஒருவன் சொன்னதாக "இச்சகம் என்பது மிருதுவான சவர்க்காரம் போன்றது. 90% விகிதம் பொய்யாகும். ஆகவே இதை நீங்கள் இந்த விகிதத்தை 100% சதவிகிதம் சரியானதாக கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். உங்களிடம் இச்சகமாகப் பேசும் ஒரு மனிதனோ / ஸ்தீரியோ குறித்து சங்கீதக்காரன் சொல்லுகிறபடி எனென்றால் இந்த மாதிரியான காரியங்களைக் குறித்து அவனுக்கு நிரம்பவும் அனுபவமிருந்தது." அதாவது "அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிருதுவானவைகள். ஆனாலும் அவைகள் உருவின பட்டயங்களைப் போன்றவைகள்" (சங் 55:21) என்கிறான்.

5. **முறுமுறுப்பில்லாமல் இருப்பாயாக** (பிலிப் 2:16) இந்த விதமான நோய்க்கு நிவாரணமாவது உன் ஜீவனை அன்புள்ள நேசத்தோடு இரண்டறக் கலந்து விடுவதுதான. இது உன் மயிர்க்கால்களை ஊடுருவிச் சென்று அதன் நடைமுறையானது உன்னைப் பலப்படுத்தும் அதிகமாக பரிவுள்ளவனாகவும், அதிகமான நேர்த்தியாகவும், மிகவும் ஸ்திரமாகவும், உதவிக்கரம் கொடுப்பவனாகவும் கரையான்களை விட மோசமான 'அரிஅரி' என்று அரிக்கும் முறுமுறுப்புகளுக்கும் கவலைகளுக்கும் உன்னை முற்றிலுமான தோல்வியுறாத சான்றாக உன்னை உருவாக்கி உன்னுடைய ஆத்துமாவை அரித்து விடாதபடி உன்னைப் பாதுகாக்கும்.

6. **புறம்பேசுதல் அல்லது அவதூறு செய்யாயாக** (சங் 64:3) புறங்கூறும் அல்லது அவதூறு சொல்லும் நாவானது திருச்சபைகளை வெறுமையாக்கி, சண்டையிட்டுக் கொள்ளும் மனுஷர்களான விவாகரத்து மன்றங்களால் பிரிக்கப்பட்டவர்களை இழிவானவர்களால் நமது சிறைச் சாலைகளை நிரப்பியும் மனிதர்களையும் ஸ்தீரிகளையும் சாத்தானுடைய இராஜ்ஜியத்திற்குள் விரட்டி அடிக்கிறது.

7. **பரியாசம் அல்லது கிண்டல் கேலி செய்யாதிருப்பாயாக.** (யோபு 11:3) நாம் இரக்கப்பரிவைக் கற்றுக் கொள்வோம். நமது உடன் சகோதரருக்கு அவர்கள் எப்படி வினோதமாகவும் மாறுபட்ட தோற்றமுள்ளவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு பரியாசத்திற்கு பதிலாக உதவிக்கரம் நீட்டுவோம். ஏனென்றால் எல்லாவிதமான மாறுவேடங்களிலும் தூதர்கள் உலகத்தில் உலா வருகின்றார்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

8. **பொய் சொல்லாதிருப்பாயாக** (யாத் 20:16) வஞ்சிக்கிறவன் (சாத்தான்) ஏதேன் தோட்டத்தில் முதலாவது பொய்யைச் சொன்னான். அதன் பிறகு இந்த பழக்கமானது உலகம் எங்கிலும் கொள்ளை நோயாகப் பரவி இருக்கிறது. ஒவ்வொருவரும் பொய் நாவை வெறுக்கிறோம். நீயுங்கூடத்தான். விஞ்ஞானிகள் இதை கண்டுபிடிப்பதற்கு ஒரு இயந்திரத்தை கண்டுபிடித்து உண்டுபண்ணியிருக்கிறார்கள். ஆனால் அது கர்த்தருடைய பயங்கரமான நாள் வரைக்கும் எல்லா பொய் நாவுகளும் நிரந்தரமாக மௌனமாக்கப்படும்வரை தொடர்ந்து வியாபித்து ஓங்கும். (வெளி 21:27)

9. **கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.** (யாத் 20:7). தேவ தூஷணம் என்பது சாத்தானுடைய இராஜ்ஜியத்தின் அரசாங்க (அலுவலக) மொழியாகும். அதில் பங்கு கொள்ளாதே எனென்றால் அது உன்னை பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதற்குத் தகுதியற்றவனாக ஆக்கும்.

10. கோபத்துடன் தர்க்கம் (விவாதம்) செய்யாதிருப்பாயாக. (ஓசியா 7:16) எந்த விதமாக கோபம் எழுப்பப்பட்டாலும் "மௌனம் பொன்னானது" என்பதை நினைவு கூறு. "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும். கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்." (நீதி 15:1)

கர்த்தருடைய வார்த்தை(வேதாகமம்)யிலிருந்து ஜெபத்திற்கான ஆலோசனையான கட்டளைகள்

அறுப்பு. மத் 9:38; லூக்கா 10:2
“அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக் கொள்ளுங்கள்.” (லூக்கா 10:2)

தேசத்து, ஸ்தல சம்பந்தமான அரசாங்கத் தலைவர்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். (I தீமோத் 2:2)
நாம் எல்லா பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு இராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே (வேண்டுதல்) செய்ய வேண்டும். (I தீமோத் 2:2)

திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி (கொலோ 4:3)
“கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேச வேண்டிய பிரகாரமாய் பேசி அதை வெளிப்படுத்துவதற்கு, திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்.” (கொலோ 4:3,4)

உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள். லூக்கா 6:28
நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள். லூக்கா 22:40
லூக்கா 6:28, “எனக்கு செவி கொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன். உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்.”

ஒரு பொல்லாங்கும் செய்யாதிருக்கும்படியாக விண்ணப்பம் பண்ணுகிறேன். II கொரி 13:7
“நீங்கள் ஒரு பொல்லாங்கும் செய்யாதிருக்கும்படியாக நாங்கள் பரீட்சைக்கு நின்றிவர்களென்று காணப்படும் பொருட்டல்ல, நாங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்கள் போலிருந்தாலும் நீங்கள் நலமானதைச் செய்யும் பொருட்டே விண்ணப்பம் பண்ணுகிறேன். சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றுஞ் செய்யக் கூடாமல் சத்தியத்திற்கு அனுகூலமாகவே செய்யக் கூடும்.”

உங்கள் அன்பானது இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும் (மற்றவர்களுக்காக) வேண்டுதல் செய்கிறேன். பிலிப் 1:9
“மேலும் உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும் வேண்டுகிறேன்.” பிலிப் 1:9
சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்மா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்பொழுது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. I தெச 5:23

பரிசுத்த ஆவியின் நிறைவுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். லூக்கா 11:13
“பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” லூக்கா 11:13

அந்நிய பாஷையில் பேசுகிறவன் அர்த்தத்தைச் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணுங்கள். (வியாக்கியானம்)
“அந்தப்படியே அந்நிய பாஷையில் பேசுகிறவன் அதன் அர்த்தத்தையும் சொல்லத் தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன்” (I கொரி 14:13)
“எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக் கொள்ளுங்கள். உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்து இருப்பார்களாக.” (சங் 122:6)

ஜெபத்திற்கு வழிகாட்டி

1. **பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக**
   A. கல்வாரியின் படத்தைப் பார். இயேசுவின் இரத்தத்தினாலே நீ "பிதா" என்று அழைக்கத் தகுதி பெற்றதினாலே அவருக்கு நன்றி செலுத்து.
   B. புதிய உடன்படிக்கையின் ஐந்து நன்மைகளான ஈவுகளுக்குப் பொருத்தமாக உள்ள நாமங்களைச் சொல்லித் துதித்து பரிசுத்தப்படுவதாக. அத்துடன் உனது விசுவாச அறிக்கையையும் பிரகடனஞ் செய்க.

நன்மைகள்	நாமம்	அர்த்தம்
இரட்சிப்பு	யேகோவா சிட்கேனு	யேகோவா நீதிபரர்
	யேகோவா மெக்காதீஸ்	யேகோவா பரிசுத்தம் ஆக்குபவர்
ஆவி	யேகோவா ஷாலோம்	யேகோவா சமாதான காரணர்
	யேகோவா சம்மா	யேகோவா இருக்கிறார் (நம்முடன்)
பரிகாரி (சுகம்)	யேகோவா ரூபா	யேகோவா சுகம் (பரிகாரி) தருபவர்
ஜெயம்	யேகோவா யீரே	கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக் கொள்பவர்.
பாதுகாப்பு	யேகோவா நிசி	யேகோவா என் கொடி
	யேகோவா ருகி	யேகோவா என் மேய்ப்பர்

II. உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக உமது சித்தம் செய்யப்படுவதாக.
   A. உனக்காக
   B. உனது குடும்பத்திற்காக (துணைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்)
   C. உனது திருச்சபைக்காக (போதகர், தலைமைத்துவம், மக்களுடைய விசுவாசம்)
   D. தேசத்திற்காக (மாநகரம், தேசம், தேசீய அரசியல், ஆவிக்குரிய தலைவர்கள், அறுவடை)

III. அன்றன்றுள்ள அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும்.
   A. கர்த்தருடைய சித்தத்திற்குள் அமர்ந்திரு. (ஜெப ஜீவியம், திருச்சபை ஊழிய பழக்கங்கள், கொடுத்தலில் கீழ்படிதல்)
   B. உன்னை ஆசீர்வதிப்பது தேவனுடைய சித்தம் என்பதை நம்புவாயாக.
   C. நீ குறிப்பாக குறிப்பிட்டும் உறுதியாகவும் இரு.

IV. எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை மன்னியும்.
   A. தேவன் உன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்.
   B. மன்னித்து மற்றவர்களை விடுதலையாக்குக.
   C. உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தவர்களுக்கு மன்னிக்கும்படியாக உன் சித்தத்தை வைத்துக் கொள்.

V. எங்களை சோதனைக்குட்படுத்தாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்.
   A. தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள். (இயேசுக் கிறிஸ்துவையே ஆயுதமாகத் தரித்துக் கொள்)
   - **சத்தியம்** என்னும் கச்சையை அரையில் தரித்தவர்களாக
   - **நீதி** என்னும் மார்க்கவசத்தை அணிந்தவர்களாக
   - பாதங்களில் சுவிசேஷத்தின் **ஆயத்தம்** என்னும் பாதரட்சையைத் தொடுத்தவர்களாக
   - **விசுவாசம்** என்னும் கேடகத்தை அணிந்தவர்களாக
   - **இரட்சண்யம்** என்னும் தலைச் சீராவை அணிந்தவர்களாக
   - **தேவ வசனம்** என்னும் ஆவியின் பட்டயத்தைக் கையில் எடுத்தவர்களாக.

B. பாதுகாப்பானதோர் வேலியாக இருக்கும்படி வேண்டிக் கொள்ளுங்கள். (என் அடைக்கலம், என் கோட்டை, (நான் நம்பியிருக்கிறவர்) என் தேவன் என்று சொல்லுங்கள்.) (சங் 91:9,14)

VI. இராஜ்ஜியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. உங்கள் விசுவாச அறிக்கையை பிரகடனப்படுத்தித் துதிப்பதற்குத் திரும்பி வாருங்கள்.

செல்வாக்குள்ள பிரமுகர்களுக்காக ஜெபிப்பதற்கான வழிகள்

ஒவ்வொரு பிரஜையின் ஜீவியத்திலும் மிகுந்த திரளான தனி நபர்கள் குறிப்பிடத்தக்கதோர் தாக்கத்தை உண்டாக்குவதால் நாடோறும் பாதிக்கப்படுகிறார்கள். சற்று யோசித்துப் பாருங்கள். பத்தாயிரக் கணக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள், நியமனம் செய்யப்பட்ட நீதிபதிகள், வழக்கறிஞர்கள், காவல் துறை அதிகாரிகள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள், இராணுவ அதிகாரிகள், பத்திரிக்கை பிரமுகர்கள், பத்திரிகை நங்கூரங்கள், பிரசுர கர்த்தர்கள், (பத்திரிகை ஆசிரியர்கள்) பத்திராதிபர்கள், திரைப்படக் காட்சி திரள் கூட்டத்தார், வணிக நிர்வாகஸ்தலர்கள், மேலாளர்கள், தத்துவ பேராசிரியர்கள், அமைச்சர்கள், அர்ச்சகர்கள், மேற்பார்வையாளர்கள், மூப்பர்கள், போதகர்கள், கண்காணிகள், சாதா ஊழியர்கள், (திருச்சபை சாரா) திருச்சபை சாரா ஊழியத் தலைவர்கள், கற்பிப்போர், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மருத்துவ வல்லுநர்கள், மருத்துவமனை நிர்வாகிகள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், நூதனக் கண்டுபிடிப்போர், பொறியாளர்கள், கலைஞர்கள், வடிவமைப்பவர்கள், விளையாட்டு வீரர்கள், இசை கலைஞர்கள், நடிகர்கள், இன்புறுக் காட்சி நிகழ்த்துபவர்கள் ஆகியோர் ஆவார்கள். இந்த மாதிரியான தனிப்பட்ட வகையினருக்காக ஜெபிப்பது எப்படி?

1. அவர்கள் தேவனுக்குப் பயந்தவர்களாக இருக்கவும் அவர்கள் எடுக்கிற ஒவ்வொரு தீர்மானத்துக்கும், செயல்பாட்டிற்கும் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்கிறவர்களாக இருக்கிறோம் என்பது கண்டு அறிந்து கொள்ளும்படியாக ஜெபிக்கவும். (நீதி 9:10)
2. அவர்களுக்கு ஞானம், அறிவு புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும்படியாக. (யாக்கோபு 1:5)
3. அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படும் படியாகவும் அன்பான கிறிஸ்தவ சாட்சியைப் பெற்றுக் கொள்ளும்படியாக (ரோமர் 10:14)
4. அவர்கள் இரட்சிக்கப்படாமல் இருப்பார்களானால் கிறிஸ்துவண்டை அவர்கள் இழுக்கப்படவும் அதாவது இரட்சிப்படையும் படியாக இடைபடவும், மறுபடி பிறந்தவர்களானால் விசுவாசத்தில் பலப்படவும் ஊக்கப்படுத்தப்படவும். (I தீமோத் 2:4; எபேசி 1:17-23)
5. அவர்கள் தங்களுடைய போதாத தன்மையைக் குறித்து அறிந்து கொள்ளவும் மேலும் ஜெபித்து தேவனுடைய சித்தத்தை தெரிந்து கொள்ளும்படியாக (நீதி 3:5-8; லூக்கா 11:9-13)
6. தங்களுடைய பாவங்களுக்காகவும் மீறுதல்களுக்காகவும் பொல்லாங்குகளுக்காகவும் உணர்த்தப்படவும். (சங் 51:7; யோவான் 8:9)
7. தங்களுடைய மனச்சாட்சிக்கு செவி கொடுத்து பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பும்படியாக. (நீதி 28:13; யாக்கோபு 4:8)
8. அவர்கள் வேதாகமத்தை ஒழுங்காகப் படிக்கவும், ஜெபக்கூட்டங்களுக்கும் வேதாகமப் பாட வகுப்புகளுக்கும் தவறாமல் போகவும். (சங் 119:11; கொலோ 3:2)
9. அவர்கள் பத்துக் கட்டளையையும் கிறிஸ்துவின் போதனைகளையும் மதித்து அவற்றைக் கனப்படுத்தவும். (யோவான் 8:31-32; சங் 19:7-11)
10. தங்கள் பெற்றோர்கள் உயிரோடு இருப்பார்களானால் அவர்களை மதித்து கனப்படுத்தவும். (எபேசி 6:2-3)
11. அவர்கள் அதிகாரத்துவத்திற்கு மரியாதை கொடுத்த கணக்கொப்புவித்தலை பழக்கப்படுத்திக் கொள்ளவும். (ரோமர் 13:1-7)
12. அவர்களுக்கு தேவ பக்திக்கான ஆலோசனைகளும் தேவனுக்கு பயந்த ஆலோசகர்கள் கொடுக்கப்படவும். (நீதி 24:6)
13. அவர்கள் நேர்மையுள்ளவர்களாகவும் தங்களது துணைவிக்கும் பிள்ளைகளுக்கும் உண்மையும் விசுவாசம் உள்ளவர்களாக இருக்கவும். (மல்கியா 2:15-16)
14. ஸ்தல கூடிவரும் சபையில் ஊழியம் செய்யும் அங்கத்தினர்களாக இருக்கும்படியாக வேண்டுகிறேன். (எபி 10:25)

15. தங்களைப் பரிசுத்தமாக காத்துக் கொள்ள வாஞ்சிக்கிறவர்கள் சிற்றின்பம், வேசித்தனம், முறைகேடு, மதுவருந்துதல் போன்றவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்று ஜெபிக்கும்படியாக ஜெபிக்கிறேன். (I கொரி 6:9-20; தீத்து 2:12)
16. அவர்கள் காலந் தவறாதவர்களாகவும், நம்பத் தகுந்தவர்களாகவும் சார்ந்திருக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக. (மத் 21:28-31)
17. பண விஷயங்களில், வரி செலுத்துவதில், நல்லொழுக்கம் சம்பந்தப்பட்ட காரியங்களில் நேர்மையை கடைபிடிக்கிறவர்களாக இருக்கும்படியாக அருள்புரியும் (I கொரி 6:10; I தீமோத் 6:6-10)
18. அவர்கள் தங்களுக்குத் தேவை ஏற்படும்பொழுது மேய்ப்பருடைய கவனத்தையும் ஆலோசனையைத் தேடிப் பெற்றுக் கொள்ளும்படியாக ஜெபிக்கிறேன். (எபி 13:7)
19. அவர்கள் தெய்வீக நட்புறவையும் தேடிப் பெற்று போஷிக்கப்படவும் வேண்டுகிறேன் (சங் 1:1-3)
20. அவர்களுக்கு நன்றியுள்ளதும் கற்பிக்கப்படக் கூடியதுமான ஆவியைப் பெறும்படியாக (ரோமர் 1:21)
21. அவர்களுக்கு உதாரத்துவமும் பரிவுமான உள்ளத்தை ஏழைகளுக்காகவும் தேவையுள்ளவர்களுக்காகவும் பெற்றிருக்கும்படியாக. (சங் 112:9; லூக்கா 10:33-37)
22. அவர்கள் தங்களது கால நேரத்தை மீட்டுக் கொள்ளவும் தங்கள் முன்னுரிமைகளை அறிந்திருக்கும்படியாக (எபேசி 5:15-17)
23. அவர்கள் நேர்மையையும், உத்தமத்தையும், விசுவாச பக்தியை வாஞ்சிக்கும்படியாக (சங் 26; நீதி 11:3)
24. மனிதர்களுடைய யுக்தி தந்திரங்களையும், மனச் சோர்வு (அழுத்தம்) மனிதர் பற்றிய அச்சம் ஆகியவைகளை எதிர்க்கும் தைரியம் பெற்றவர்களாக இருக்கவும். (நீதி 29:25; II தீமோத் 1:7)
25. மாந்திரீகம், புது சகாப்த வழிபாடுகள், பொய்யானதும் இரகசியமான மதக் குழுக்களினின்று அவர்கள் விசுவாச கேடக கவசத்தால் பாதுகாக்கப்படவும். (ஏசாயா 1:29; 2:6)
26. வேதாகம சம்பந்தமான கண்ணோட்டத்தையும் கோட்பாடுகளையும் பெற்றுக் கொள்ளும்படியாக (எபேசி 3:10)
27. நமது தேசத்தில் அவர்கள் ஜீவியத்தில், குடும்பத்தில், தெய்வீக ஒழுங்கில், நல்லொழுக்கத்தில் தூய்மையைத் திரும்ப கொண்டு வரும்படியாக முயற்சி செய்ய. (எபேசி 5:22-6:1)
28. மனித நலக் கோட்பாடு, சமூக சமதர்மம், பொது உடைமை, பிரதேசவாரி பற்று ஆகியவற்றின் போக்கை மாற்றித் திருப்பி வேலை செய்யும்படியாக (I நாளா 12:32; ஏசாயா 59:19)
29. தாழ்மை, பணிவு, ஊழியஞ் செய்ய ஆயத்தம், கூட்டுறவில் ஒத்துழைப்பு ஆகியவற்றை வாஞ்சிக்கவும் (யோவான் 13:14; தீத்து 3:1-2)
30. எல்லாவற்றிற்கும் மேலாக சர்வ வல்லமையுள்ள தேவனுக்குக் கணக்கொப்புவிக்க ஆயத்தமாயிருக்கும் படியாக. (எபி 9:27)

உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்க வேண்டிய வேதாகமத்து குணநலன்கள்

1. **இரட்சிப்பு.** "கர்த்தாவே என் பிள்ளைகளிடையே உமது இரட்சிப்பு ஊற்றாகத் தோன்றி ஓடட்டும். என் பிள்ளைகளாகிய அவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் இரட்சிப்பையே பெற்று நித்திய மகிமையோடு பெற திருவருள்புரியும்." (ஏசாயா 45:8; II தீமோத் 2:10)

2. **கிருபையில் வளரும்படியாக.** "என் பிள்ளைகள் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபையிலும் அவரைப் பற்றி அறிகிற அறிவிலும் வளரும்படியாக ஜெபிக்கிறேன்." (II பேதுரு 3:18)

3. **அன்பில் நிலைக்கும்படியாக.** "கர்த்தாவே என் பிள்ளைகள் அன்புள்ள ஓர் ஜீவியத்தை ஜீவிக்கவும் அவர்களுக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியின் மூலமாக அருளிச் செய்யுமாறு வேண்டுகிறேன்." (கலா 5:25; எபேசி 5:2)

4. **நேர்மையாகவும் உத்தமமான ஜீவியம் செய்ய.** "நேர்மையும் உத்தமமும் அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கட்டும்." (சங் 25:21)

5. **தன்னடக்கம்.** "பிதாவே என்னுடைய பிள்ளைகள் தங்களைச் சுற்றி அயலகத்திலுள்ள மற்றவர்களைப் போல் இருக்காமல் அவர்கள் தாங்கள் செய்கிற எல்லாவற்றிலும் விழிப்புணர்வும் தன்னடக்கமும் உள்ளவர்களாக இருக்கும்படி உதவி செய்யும்." (I தெச 5:6)

6. **தேவனுடைய வார்த்தையின் பேரில் பிரியமுள்ளவர்களாக இருக்கும்படியாக.** "உம்முடைய வார்த்தையாகிய சத்திய வேதத்தை பொன்னிலும் மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும் தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் விலையேறப் பெற்றதாகக் கண்டு கொண்டு அதை அறியும்படியாக வளர கிருபை செய்யும்." (சங் 19:10)

7. **நீதியுள்ளவர்களாக.** "தேவனே, என் பிள்ளைகள் நீர் செய்தது போலவே, உம்மைப் போல், நீதியை நேசிக்கவும் அவர் செய்கிற எல்லா செயல்பாடுகளிலும் நியாயமாக அதாவது நீதியாக செயல்படவும் உதவி செய்வீராக." (சங் 19:10)

8. **கருணையும் பரிவும் உள்ளவர்களாக.** "அவர்களுடைய பரம பிதா இரக்கமுள்ளவர்களாக இருப்பது போலவே என் பிள்ளைகளும் இரக்கமுள்ளவர்களாக இருக்கும் படியாக வேண்டிக் கொள்கிறேன்." (லூக்கா 6:36)

9. **மரியாதை கொடுத்து கனப்படுத்துகிறவர்களாக.** (தங்களுக்கும், மற்றவர்களுக்கும், அதிகாரத்திலுள்ளவர்களுக்கும்) "பிதாவே, என் பிள்ளைகள் உமது வார்த்தையின் கட்டளைப்படியே ஒவ்வொருவரையும் சரியான முறையில் மரியாதை காட்டும்படி அருள் புரியும்." (I பேதுரு 2:17)

10. **சத்திய வேதத்தின்படி சுய மரியாதையுடன்.** "பிதாவே நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு அவருடைய செய்கையாய் இருக்கிறோம் என்பதை உணர்வதன் மூலமாக ஆழமாக வேரூன்றப்பட்ட மரியாதையான சுய கௌரவத்தை விருத்தி செய்து கொள்ளும்படியாக உதவி புரிவீராக." (எபேசி 2:10)

11. **விசுவாசம் (சத்தியம்) உள்ளவர்களாக.** "கிருபையும் சத்தியமும் என் பிள்ளைகளை விட்டு நீங்காதிருப்பதாக. இந்த இரண்டு நற்குணங்களையும் அவர்கள் கழுத்திலே பூண்டு அவைகளைத் தங்கள் இருதயமாகிய பலகையில் எழுதிக் கொள்வார்களாக." (நீதி 3:3)

12. **தைரியம்.** "என்னுடைய பிள்ளைகள் தங்கள் நல்லொழுக்கத்திலும் செயல்பாட்டுக் கிரியைகளிலும் எப்பொழுதும் பலமிக்கவர்களாகவும் கலங்காமலும் இருப்பார்களாக." (உபா 1:6)

13. **தூய்மை (அ) பரிசுத்தம்.** "தேவனே சுத்த இருதயத்தை அவர்களிலே சிருஷ்டியும் அவர்களுடைய இருதயத்தின் பரிசுத்தம் அவர்களுடைய செயல்களான கிரியைகளில் காணப்படுவதாக." (சங் 51:10a; உபா 1:6)

14. **அன்பாய் எண்ணிக் கொள்ள.** "என் பிள்ளைகள், எப்பொழுதும் ஒருவருக்கொருவரும் மற்றும் ஒவ்வொருவருக்கும் அன்புள்ளவர்களாக இருக்கும்படியாக முயற்சியுள்ளவர்களாக இருக்கும்படியாக." (I தெச 5:15)

15. **உதாரகுணமுள்ளவர்களாயிருக்க.** "கர்த்தாவே, என் பிள்ளைகள் உதார குணமுள்ளவர்களாயிருக்கவும், தங்களுக்குள்ளதை பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மையும், நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காக தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாகப் பெற்றுக் கொள்ளுமாறு கட்டளையிடுவீராக." (I தீமோத் 6:18-19)

16. **சமாதானத்துக்கடுத்தவைகளை நாடும்படியாக.** "பிதாவே, என் பிள்ளைகள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் சமாதானத்துக்கடுத்தவைகளை நாடும் படியாக இருக்க வேண்டும் என்று ஜெபிக்கிறேன்." (ரோமர் 14:19)

17. **சந்தோஷத்தோடே.** "என் பிள்ளைகள் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படும் சந்தோஷத்தினாலே நிரப்பப்பட்டவர்களாயிருக்கும் படியாக வேண்டிக் கொள்கிறேன்." (I தெச 1:6)

18. **நீடிய பொறுமையுடையவர்களாயிருக்கும் படியாக.** "கர்த்தாவே, என் பிள்ளைகள் தாங்கள் செய்கிற எல்லாக் காரியங்களிலும் நீடிய பொறுமையுடையவர்களாயிருக்கவும் விசேஷமாக அவர்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடவும் அருள் பாலிப்பீராக." (எபி 12:1)

19. **சாந்தகுணமுள்ளவர்களாயிருக்க.** (தாழ்மையைத் தரித்துக் கொள்ள) "தேவனே என்னுடைய பிள்ளைகளின் இடத்திலே எல்லா மனுஷருக்கும் உண்மையான சாந்த குணத்தைக் காட்டும்படியாக பழக்குவிப்பீராக." (தீத்து 3:2)

20. **உருக்கமான இரக்கத்தால் ஆடையாகத் தரித்திருக்கும்படியாக.** "கர்த்தாவே என் பிள்ளைகள் உருக்கமான இரக்கம் என்னும் ஆடையாகிய நற்குணத்தால் உடுத்தப்படும்படியாக ஜெபிக்கிறேன்." (கொலோ 3:12)

21. **பொறுப்புள்ளவர்களாயிருக்கும்படியாக.** "கர்த்தாவே என் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தன் தன் பாரத்தை சுமக்கும் பொறுப்பைக் கற்றுக் கொள்ளச் செய்வீராக." (கலா 6:5)

22. **மன ரம்மியத்துடன் திருப்தியாயிருக்க.** "பிதாவே என் மக்களுக்குக்கான எந்த ஒரு அல்லது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நம்மை பலப்படுத்துகிறவராலே மனரம்மியத்துடன் திருப்தியாய் இருக்கும் இரகசியத்தை கற்றுக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்." (பிலிப் 4:12-13)

23. **மனப்பூர்வமான நம்பிக்கையுடன் செயல்படும்படியாக.** "கர்த்தாவே நம்பிக்கையானது என் பிள்ளைகளின் இருதயங்களிலே வேரூன்றி முளைத்து வளர்ந்து வரும்படியாகவும் அதனால் அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தருக்காக ஊழியம் செய்வது போல மனிதருக்காக அல்லாமல் ஊழியம் செய்யும்படியாக உதவும்படியாக ஜெபிக்கிறேன்." (எபேசி 6:7)

24. **கபடற்ற ஊழியக்காரனுடைய இருதயத்தை பெற்றிருக்கும்படியாக.** "தேவனே நீர் மிகவும் தயை கூர்ந்து என் பிள்ளைகள் ஒரு கபடற்ற ஊழியக்காரனுடைய இருதயத்தை விருத்தி செய்து கொண்டு மனிதர்களுக்காக அல்லாமல் தேவனுக்கு ஊழியம் செய்வது போல முழு இருதயத்தோடும் வேலை செய்யும் படியாக அருள் புரிய வேண்டுகிறேன்." (எபேசி 6:7)

25. **நம்பிக்கை பெருகும்படியாக.** "நம்பிக்கையின் தேவன் தாமே பரிசுத்த ஆவியின் பலத்தினாலே நம்பிக்கையினாலும் நம்பிக்கையின் நிறைவினாலும் என் பிள்ளைகள் நிரப்பப்பட்டு அவர்களிடமிருந்து அது பிரவாகமாக பொங்கி வழிந்து ஓடும்படியாக அனுக்கிரகம் செய்வாராக." (ரோமர் 15:13)

26. **விருப்ப ஆயத்தத்துடன் வேலை செய்யும்படி திறமை உடையவர்களாய் இருக்கவும்.** "கர்த்தாவே, என் பிள்ளைகளுக்கு வேலையை (ஊழியத்தை) மதிக்கவும், அதைத் தங்கள் முழு மனதோடும் வேலை செய்து நிறைவேற்றி மனிதர்களுக்காக அல்ல தேவனுக்காக ஊழியம் செய்யும் படி போதித்தருளும்." (கொலோ 3:23)

27. **தேவனுக்காக வைராக்கியமாக இருக்கும்படியாக.** "கர்த்தாவே, என்னுடைய பிள்ளைகளின் ஆத்துமாவிலே உம்மைத் தொடர்ந்து முழுவதுமாகப் பற்றிக் கொண்டிருக்கும்படியும் உம்மை தொடர்ந்து பின்பற்றிக் கொண்டிருக்கும் இருதயத்தை உள்ளம் உருக வாஞ்சிக்கும்படி அருளிச் செய்யும்." (சங் 63:8)

28. **சுய ஒழுங்குடன் இருக்கும்படியாக.** "பிதாவே என் பிள்ளைகள் எது சரியானதோ நீதி நியாயம் நிதானமானதோ என்று அறிந்து செயல்படும் ஒரு ஒழுங்கு முறைக்கு பயிற்றுவிக்கப்பட்ட விவேகமான ஜீவியத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாக ஜெபிக்கிறேன்." (நீதி 1:3)

29. **ஜெப சிந்தை நிறைந்திருக்குமாறு.** "கர்த்தாவே என்னுடைய பிள்ளைகளின் ஜீவியமானது ஜெப சிந்தையால் நிறைக்கப்பட்டு குறிக்கப்படுவதாகி சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணும்படியாக கற்றுக் கொள்ள அருள் புரியும்." (எபேசி 6:18)

30. **நன்றியறிதலோடு.** "ஆண்டவரே என் பிள்ளைகள் நன்றியறிதலானது எப்பொழுதும் பொங்கி வழிந்து ஓடும் ஓர் ஜீவியத்தை ஜீவிக்கவும் நமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே பிதாவாகிய தேவனுக்கு ஒவ்வொரு காரியத்திற்காகவும் எப்பொழுதும் நன்றி கூறி ஸ்தோத்திரம் செய்யும்படியாக உதவி செய்ய வேண்டுமென்று ஜெபிக்கிறேன்." (எபேசி 5:20; கொலோ 2:7)

31. **ஊழியங்களுக்காக ஓர் வாஞ்சையுள்ள இருதயம் பெற்றிருக்கும்படியாக.** "கர்த்தாவே என் பிள்ளைகள் தங்களுக்குள் உமது மகிமையானது தேசங்களுக்கிடையே பிரபலமாகும்படியும் உமது அற்புதமான செயல்கள் ஜனங்களிடையே பிரஸ்தாபிக்கும்படியாக வாஞ்சையை விருத்தி செய்து கொள்ளும்படி தயவாக அருள் புரிவீராக." (சங் 96:3)

10-40 பலகணிகள் என்று அவ்வாறு அழைக்கப்படும் பலகணிகளின் வழியாக ஜெபிப்பதற்கென்று ஆனவைகளாய் ஜெபத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய இன்றைய 100 நுழைவாயில் நகரங்கள்

மாதத்தின் ஒவ்வொரு நாளுக்கென்றும் ஆனவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள படியாக.

நாள் 1 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	காஸா பிளாங்கா	ஏல் ஆயூன்	நவ காயிட்	தாகர்
தேசம்	மொரோக்கோ	மேற்கு சஹாரா	மொரி டானியா	செனிகல்
ஜனத்தொகை	3,858,000	186,000	650,000	1,847,000
இருப்பிடம்	வடக்கு ஆப்ரிக்கா	வடமேற்கு ஆப்ரிக்கா	வடமேற்கு ஆப்ரிக்கா	வடமேற்கு ஆப்ரிக்கா
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 2 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	பான்ஜீல்	பிஸ்ஸாவ்	கோனாக்ரி	பாமாகோ
தேசம்	காம்பியா	கினியா பிஸ்ஸாவ்	கினியா	மாலி
ஜனத்தொகை	560,000	130,000	1,734,000	680,000
இருப்பிடம்	வடமேற்கு ஆப்ரிக்கா	வடமேற்கு ஆப்ரிக்கா	வடமேற்கு ஆப்ரிக்கா	வடமேற்கு ஆப்ரிக்கா
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 3 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	ஒகாடோகோ	அல்ஜியர்ஸ்	ட்யூனிஸ்	டிரிபோலி
தேசம்	பர்கினா பாஸோ	அல்ஜிரியா	டியூனிஷியா	லிபியா
ஜனத்தொகை	437,000	3,722,000	1,935,000	1,828,000
இருப்பிடம்	வடமேற்கு ஆப்ரிக்கா	வடக்கு ஆப்ரிக்கா	வடக்கு ஆப்ரிக்கா	வடக்கு ஆப்ரிக்கா
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 4 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	கோடோநவ்	நியாமே	கானோ	என், டி, ஜாமினா
தேசம்	பெனின்	நைஜர்	நைஜீரியா	சாட்
ஜனத்தொகை	501,000	430,000	660,000	729,000
இருப்பிடம்	வடக்கு கடற்கரை மத்ய ஆப்ரிக்கா	வடக்கு மேற்கு ஆப்ரிக்கா	மேற்கு கடற்கரை மத்ய ஆப்ரிக்கா	வடக்கு கடற்கரை மத்ய ஆப்ரிக்கா

நாள் 5 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	கார்ட்டூம்	டிஜ்போடி	அடிஸ்அபாபா	அஸ்மாரா
தேசம்	சூடான்	புஜ்ஜிபோடி	எத்தியோப்பியா	எரிட்டிரியா
ஜனத்தொகை	2,477,000	137,000	2,419,000	1,069,000
இருப்பிடம்	ஆப்ரிக்கா	ஆப்ரிக்கா	ஆப்ரிக்கா	ஆப்ரிக்கா
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 6 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	மொகடிஷீ	மெக்கா	ரியாத்	சானா-அ
தேசம்	சோமாலியா	சவுதி அரேபியா	சவுதி அரேபியா	ஏமன்
ஜனத்தொகை	849,000	884,000	2,664,000	503,000

இருப்பிடம்	கிழக்கு ஆப்ரிக்கா	மத்ய கிழக்கு	மத்ய கிழக்கு	மத்ய கிழக்கு
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 7 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	மஸ்கட்	அபுதாபி	தோகா	மனாமா
தேசம்	ஓமன்	ஐக்கிய அரபு எமிரேட்	க்வட்டார்	பஹ்ரெய்ன்
ஜனத்தொகை	177,000	730,000	340,000	270,000
இருப்பிடம்	மத்ய கிழக்கு	மத்ய கிழக்கு	மத்ய கிழக்கு	மத்ய கிழக்கு
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 8 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	குவாய் நகரம்	பெய்ரட்	திரானா
தேசம்	குவய்த்	லீபனோன்	அல்பேனியா
ஜனத்தொகை	231,000	1,543,000	427,000
இருப்பிடம்	மத்ய கிழக்கு	மத்ய கிழக்கு	தென் கிழக்கு ஐரோப்பா
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 9 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	கெய்ரோ	அம்மான்	தமஸ்கு
தேசம்	எகிப்து	ஜார்டன்	சீரியா
ஜனத்தொகை	10,361,000	1,273,000	2,511,000
இருப்பிடம்	வட கிழக்கு ஆப்ரிக்கா	மத்ய கிழக்கு	மத்ய கிழக்கு
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 10 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	காஸா	எருசலேம்	தெலாவில்
தேசம்	காஸா ஸ்டிரிப்	இஸ்ரவேல்	இஸ்ரவேல்
ஜனத்தொகை	1,073,000	518,000	2,092,000
இருப்பிடம்	மத்ய கிழக்கு	மத்ய கிழக்கு	மத்ய கிழக்கு
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 11 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	இஸ்தான்புல்	அங்காரா	இஸ்மிர்
தேசம்	துருக்கி	துருக்கி	துருக்கி
ஜனத்தொகை	8,143,000	3,071,000	2,169,000
இருப்பிடம்	மத்திய கிழக்கு	மத்திய கிழக்கு	மத்திய கிழக்கு
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 12 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	பாக்தாத்	டெஹரான்	மஷ்ஹாத்
தேசம்	ஈராக்	ஈரான்	ஈரான்
ஜனத்தொகை	4,511,000	7,509,000	2,450,000
இருப்பிடம்	மத்திய கிழக்கு	மத்திய கிழக்கு	மத்திய கிழக்கு
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 13 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	பாக்கு	ஷாக்காபாத்	ஆஷ்கென்ட்
தேசம்	ஆஜர் பைஜான்	துர்க்மெனிஸ்தான்	யூஸ்பெகிஸ்தான்
ஜனத்தொகை	1,808,000	407,000	2,037,000
இருப்பிடம்	மத்திய ஆசியா	மத்திய ஆசியா	மத்திய ஆசியா
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 14 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	துஷான்பி	பிஷ்கெக்	ஆல்மாதி
தேசம்	தாஜிக்ஸ்தான்	கிரிஜிஸ்தான்	காளகஸ்தான்
ஜனத்தொகை	620,000	710,000	197,000
இருப்பிடம்	மத்திய ஆசியா	மத்திய ஆசியா	மத்திய ஆசியா
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 15 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	காபூல்	கராச்சி	லாஹீர்
தேசம்	ஆப்கானிஸ்தான்	பாகிஸ்தான்	பாகிஸ்தான்
ஜனத்தொகை	2,051,000	9,056,000	4,926,000
இருப்பிடம்	மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 16 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	மாலே	அஹமதாபாத்	ஜெய்ப்பூர்
தேசம்	மாலத் தீவுகள்	இந்தியா	இந்தியா
ஜனத்தொகை	50,000	4,396,000	1,969,000
இருப்பிடம்	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா
மதம்	இஸ்லாம்	இந்து மதம்	இந்து மதம்

நாள் 17 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	அமிர்தசரஸ்	டெல்லி	புனே
தேசம்	இந்தியா	இந்தியா	இந்தியா
ஜனத்தொகை	837,000	13,604,000	2,971,000
இருப்பிடம்	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா
மதம்	சீக்கிய மதம்	இந்து மதம்	இந்து மதம்

நாள் 18 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	ஹைதராபாத்	கல்கத்தா	கான்பூர்
தேசம்	இந்தியா	இந்தியா	இந்தியா
ஜனத்தொகை	4,208,000	13,604,000	2,378,000
இருப்பிடம்	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா
மதம்	இந்து மதம்	இந்து மதம்	இந்து மதம்

நாள் 19 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	வாரனாசி	லக்னொ	பாட்னா
தேசம்	இந்தியா	இந்தியா	இந்தியா
ஜனத்தொகை	1,193,000	1,391,000	2,209,000
இருப்பிடம்	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா
மதம்	இந்து மதம்	இந்து.்.இஸ்லாம் மதம்	இந்து மதம்

நாள் 20 **இன்றைய நுழைவாயில் நகரங்கள்:**

	காத்மாண்டு	திம்பூ	கொழும்பு
தேசம்	நேபாளம்	பூடான்	ஸ்ரீலங்கா
ஜனத்தொகை	372,000	121,400	2,345,000
இருப்பிடம்	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா
மதம்	இந்து மதம்	பௌத்த மதம்	பௌத்த மதம்

நாள் 21 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	டெய்பெய்	ஷென்யாங்	ஷாங்ஷீன்
தேசம்	தைவான்	சீனா	சீனா
ஜனத்தொகை	3,561,000	5,493,000	2,620,000
இருப்பிடம்	கிழக்கு ஆசியா	கிழக்கு மத்திய ஆசியா	கிழக்கு மத்திய ஆசியா
மதம்	பௌத்த மதம்	நாத்திகம்	நாத்திகம்

நாள் 22 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	உருமாகி	லாஸா	லான்செள
தேசம்	சீனா	சீனா	சீனா
ஜனத்தொகை	1,724,000	120,000	1,803,000
இருப்பிடம்	மத்திய ஆசியா	தெற்கு மத்திய ஆசியா	கிழக்கு மத்திய ஆசியா
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 23 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	பெய்ஜிங்	ஹோஹாட்	டியான்ஜின்
தேசம்	சீனா	சீனா	சீனா
ஜனத்தொகை	12,232,000	3,208,000	10,995,000
இருப்பிடம்	கிழக்கு மத்திய ஆசியா	கிழக்கு மத்திய ஆசியா	கிழக்கு மத்திய ஆசியா
மதம்	நாத்திகம்	பௌத்தம்.்.இஸ்லாம்	நாத்திகம்

நாள் 24 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	டாய்யூஆன்	ஜினான்	நான்ஜிங்
தேசம்	சீனா	சீனா	சீனா
ஜனத்தொகை	2,596,000	3,208,000	3,073,000
இருப்பிடம்	கிழக்கு மத்திய ஆசியா	கிழக்கு மத்திய ஆசியா	கிழக்கு மத்திய ஆசியா
மதம்	நாத்திகம்	நாத்திகம்	நாத்திகம்

நாள் 25 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	ஸியான்	எஷங்கு-டு	ஷாங்கிங்
தேசம்	சீனா	சீனா	சீனா
ஜனத்தொகை	3,417,000	3,528,000	3,646,000
இருப்பிடம்	கிழக்கு மத்திய ஆசியா	மத்திய கிழக்கு ஆசியா	கிழக்கு மத்திய ஆசியா
மதம்	நாத்திகம்	நாத்திகம்	நாத்திகம்

நாள் 26 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	ஷாங்காய்	உஹான்	குவாங் செள
தேசம்	சீனா	சீனா	சீனா
ஜனத்தொகை	15,112,000	4,556,000	4,184,000
இருப்பிடம்	கிழக்கு மத்திய ஆசியா	கிழக்கு மத்திய ஆசியா	கிழக்கு மத்திய ஆசியா
மதம்	நாத்திகம்	நாத்திகம்	நாத்திகம்

நாள் 27 இன்றைய நுழைவாயில் நகரங்கள்:

	ஹனாய்	வியன்டெய்ன்	பினோம்பென்
தேசம்	வியட்நாம்	லா ஆவேர்ஸ்	கம்போடியா
ஜனத்தொகை	1,260,000	4,91,000	2,827,000
இருப்பிடம்	தென் கிழக்கு ஆசியா	தென் கிழக்கு ஆசியா	தென் கிழக்கு ஆசியா
மதம்	பௌத்தம்	பௌத்தம்	பௌத்தம்

நாள் 28	இன்றைய நுழைவாயில் நகரங்கள்:		
	பாங்காக்	யாங்கூன்	டாக்கா
தேசம்	தைலாந்து	மியன்மார்	பங்களாதேஷ்
ஜனத்தொகை	8,627,000	3,905,000	110,000
இருப்பிடம்	தென் கிழக்கு ஆசியா	தென் கிழக்கு ஆசியா	தென் கிழக்கு ஆசியா
மதம்	பௌத்தம்	பௌத்தம்	இஸ்லாம்

நாள் 29	இன்றைய நுழைவாயில் நகரங்கள்:		
	குலாம்பூர்	ஜகார்த்தா	பந்தர்சேரிபேக்வான்
தேசம்	மலேசியா	இந்தோனேஷியா	புருனேய்
ஜனத்தொகை	2,183,000	11,401,000	1,10,000
இருப்பிடம்	தென் கிழக்கு ஆசியா	தென் கிழக்கு ஆசியா	தென் கிழக்கு ஆசியா
மதம்	இஸ்லாம்	இஸ்லாம்	இஸ்லாம்

நாள் 30	இன்றைய நுழைவாயில் நகரங்கள்:		
	உலான்பாட்டார்	பியான்யாங்	ஸாப்போரா
தேசம்	மங்கோலியா	வடக்கு கொரியா	ஜப்பான்
ஜனத்தொகை	600,000	2,471,000	2,300,000
இருப்பிடம்	மத்திய ஆசியா	கிழக்கு ஆசியா	கிழக்கு ஆசியா
மதம்	ஆவி வணக்கம் / பௌத்தம்	ஆவி வணக்கம்	ஷின்டோ மதம்

நாள் 31	இன்றைய நுழைவாயில் நகரங்கள்:		
	யோஹ ஹாமா	ஒஸாகா / கோபி / கியாட்டோ	புகுஒகொ / கிட்டா / கியூஷி
தேசம்	ஜப்பான்	ஜப்பான்	ஜப்பான்
ஜனத்தொகை	18,527,000	8,563,000	4,164,000
இருப்பிடம்	கிழக்கு ஆசியா	கிழக்கு ஆசியா	கிழக்கு ஆசியா
மதம்	ஷின்டோ மதம்	ஷின்டோ மதம்	ஷின்டோ மதம்

கர்த்தருடைய வார்த்தையிலிருந்து தனிப்பட்ட ஜெபங்கள்

(1) ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் தியானத்திற்கும் உரிய ஜெபங்கள்

நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டும் மென்றும் வேண்டிக் கொள்கிறேன். எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரம் அல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் உயர்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் ஆமென். (எபேசி 1:17-21)

பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாம காரணராகிய கர்த்தராயிருக்கிற இயேசுக் கிறிஸ்துவின் பிதாவே (நோக்கி முழங்கால் படியிட்டு) நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவும் விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்களாகி சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்றுணர்ந்து, அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். (எபேசி 3:16-21)

பிதாவே, உத்தமமானவைகளை நான் ஒப்புக்கொள்ளத் தக்கதாக என்னுடைய அன்பானது அறிவிலும், எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகாய் பெறுகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுக் கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவனாகி நான் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவனும் இடறலற்றவனுமாயிருக்கும்படி வேண்டுதல் செய்கிறேன். ஆமென். (பிலிப் 1:9-11)

பிதாவே, நான் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும், அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்படவும் சகல வித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும் மகிமையான அவருடைய வல்லமையின்படி எல்லா வல்லமையாலும் பலப்படவும் எல்லா பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கும் பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்கினதற்காக பிதாவாகிய அவரைத் ஸ்தோத்திரிக்கிறேன். ஆமென். (கொலோ 1:9-12).

பிதாவே நாங்கள் ஒருவருக்கொருவர் வைத்திருக்கும் அன்புக்கு ஒப்பாய் நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் நம்மை பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்பொழுது, பிதாவாகிய தேவனுக்கு முன்பாக பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கும்படி நம்முடைய இருதயத்தை ஸ்திரப்படுத்துவாராக. ஆமென். (I தெச 3:12,13).

பிதாவே எங்களை உமது அழைப்புக்குப் பாத்திரர் ஆக ஆக்கவும், தமது தயவுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் நம்மிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்றும், நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின் படியே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும் நீங்கள் அவரிடத்திலும் மகிமைப்படுவதாக என்று வேண்டிக் கொள்ளுகிறோம். (II தெச 1:11-12)

பிதாவே, கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி என்னிடத்தில் ஸ்திரப்படுத்தப்பட்டபடியே நான் இயேசுக் கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும் மற்றெல்லாவற்றிலும் சம்பூர்ணமுள்ளவனாக ஆக்கப்பட்டபடியினால், அவர் மூலமாய் எங்களுக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபைக்காகவும் அப்படியே நான் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவனாய் வெளிப்படுவதற்குக் காத்திருக்கவும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாளிலே குற்றஞ் சாட்டப்படாதனாயிருக்கும்படி முடிவு பரியந்தம் என்னை ஸ்திரப்படுத்துவாராக! அவ்வாறு வேண்டிக் கொள்கிறேன். ஆமென். (I கொரி 1:4-8)

பிதாவே நீர் எனக்கு தொடர்ந்து அருளிச் செய்ய வேண்டுமென்று உமது வேலைக்காரனாகிய நான் கர்த்தாவே அவர்களுடைய பயமுறுத்துதல்களை தேவரீர் கவனித்து உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி அனுக்கிரகஞ் செய்தருளும். ஆமென். (அப் 4:29-30)

(2) அன்பைப் பற்றிய தியானங்கள்

1. கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுகிறவர்களிடத்தில் இரக்கஞ் செய்கிறவராய் இருக்கிறார். கர்த்தர் எனக்கு இரக்கம் காட்டுகிறார். ஏனென்றால் நான் அவரிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறேன். (யாத் 20:6)
2. தேவன் என்னிடத்தில் அன்புகூர்ந்து என்னைத் தெரிந்து கொண்டார் (பின் சந்ததியைத் தெரிந்து கொண்டார்) என்னை தமது முகத்துக்கு முன் தமது மிகுந்த வல்லமையினால் என்னை உலகத்திலிருந்து புறப்படப் பண்ணி வெளியே கொண்டு வந்தார். (உபா 4:37)
3. நான் என் கர்த்தராகிய ஆண்டவரிடத்தில் முழு இருதயத்தோடும், என் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூறுகிறேன். அவர் எனக்குக் கட்டளையிடுகிற வார்த்தைகளையும் அவருடைய கற்பனைகளையும் என் இருதயத்தில் வைத்திருக்கிறேன். (உபா 6:5-6)
4. என் தேவனாகிய கர்த்தர் என் இருதயத்தை விருத்தசேதனம் பண்ணி, என் பிள்ளைகளின் இருதயத்தையும் விருத்தசேதனம் பண்ணி நான் என் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் நாம் பிழைத்திருக்கும்படி அன்பு கூறுகிறேன். (உபா 30:6)
5. என் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து அவர் வழிகளில் நடக்கவும், அவர் கற்பனைகளையும் கட்டளைகளையும், நியாயங்களைக் கைக் கொள்ளவும் செய்கிறேன். நான் பிழைத்துப் பெருகும் படியாகவும் நீ சுதந்தரிக்கிற தேசத்தில் என்னை ஆசீர்வதிப்பாராக. (உபா 30:16)
6. என் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூறுகிறேன். நான் அவர் சத்தத்திற்கு செவிகொடுத்து அவரைப் பற்றிக் கொள்கிறேன். அவரே என் ஜீவனும் என் தீர்க்காயுசுமானவர். (உபா 30:20)
7. நான் கர்த்தரில் அன்பு கூறுகிறேன். நான் அவர் கையில் இருக்கிறேன். அவருடைய பாதத்தில் விழுந்து அமர்ந்து அவருடைய வார்த்தைகளால் போதனை அடைகிறேன். (உபா 33:3)
8. நான் என்னைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து என் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூறுகிறேன். (யோசுவா 23:11)
9. நான் கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து வல்லமையோடே உதிக்கிற சூரியனைப் போல இருக்கிறேன். (நியா 5:31)
10. நான் கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளையும் உடன்படிக்கையையும் இரக்கத்தையும் என்னுடன் பெற்றுக் கொள்ளுகிறேன். (நெகேமியா 1:5)

11. நான் தேவனுடைய நாமத்தில் அன்புகூர்ந்து அவரில் களி கூறுகிறேன். (சங் 5:11)

12. கர்த்தர் நீதியுள்ளவர். நீதியின் மேல் பிரியப்படுவார். நான் அவருக்குள் தேவனுடைய நீதியாயிருக்கிறேன். கர்த்தர் என்னை நேசிக்கிறார். (சங் 11:7; 2 கொரி 5:21)

13. கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும் அவர் மகிமை தங்கிய ஸ்தானத்தையும் வாஞ்சிக்கிறேன். (சங் 26:8)

14. என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்பு கூறுவேன். (சங் 18:1)

15. நான் கர்த்தரில் அன்பு கூறுகிறேன். உண்மையானவனை கர்த்தர் தற்காக்கிறார். (சங் 31:23)

16. கர்த்தர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார். பூமி கர்த்தருடைய காருணியத்தால் நிறைந்திருக்கிறது. நான் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறேன். (சங் 33:5)

17. நான் கர்த்தருடைய இரட்சிப்பை விரும்புகிறேன். ஆகையால் கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்லுவேன். (சங் 40:16; 70:4)

18. நான் கர்த்தரில் அன்பு கூறுகிறேன். மேலும் தீமையை வெறுத்து விடுகிறேன். (சங் 97:10)

19. நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளின் பேரில் மன மகிழ்ச்சியாயிருப்பேன். நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளுக்குக் கையெடுப்பேன். உமது பிரமாணங்களைத் தியானிப்பேன். (சங் 119:47-48)

20. உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன். நாள் முழுவதும் அது என் தியானம். (சங் 119:97)

21. வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியமாயிருக்கிறேன். (சங் 119:113)

22. நான் பொன்னிலும் பசும் பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன். (சங் 119:127)

23. நான் தேவனுடைய நாமத்தை நேசிக்கிறேன். தேவன் என்னை நோக்கிப் பார்த்து எனக்கு இரங்குகிறார். (சங் 119:132)

24. உமது வார்த்தைப் புடமிடப்பட்டது. உமது அடியேன் அதில் பிரியப்படுகிறேன். (சங் 119:140)

25. இதோ உம்முடைய கட்டளைகளை நேசிக்கிறேன். கர்த்தாவே உமது கிருபையின்படி என்னை உயிர்ப்பியும். (சங் 119:159)

26. பொய்யைப் பகைத்து அருவருக்கிறேன். உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன். (சங் 119:163)

27. நான் கர்த்தருடைய பிரமாணங்களை நேசிக்கிறேன். எனக்கு மிகுந்த சமாதானம் உண்டு. எனக்கு இடறல் இல்லை. (சங் 119:165)

28. என் ஆத்துமா உமது சாட்சிகளைக் காக்கும். அவைகளை நான் மிகவும் நேசிக்கிறேன். (சங் 119:167)

29. நான் என் தேவனுடைய பார்வையில் அருமையானவன் அவர் என்னை நேசித்துக் கனப்படுத்துகிறார். (ஏசாயா 43:4)

30. என் சத்துருக்களை நான் சிநேசிக்கிறேன். என்னைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கிறேன். என்னைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்கிறேன். என்னை நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுகிறேன். (மத் 5:44)

31. நான் தேவனாகிய கர்த்தரிடத்தில் என் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் அன்பு கூறுகிறேன். என்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுகிறேன். (மத் 22:37-39)

32. தேவன் எனக்குப் பிதாவாக இருக்கிறார். நான் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவில் அன்பு கூறுகிறேன். (யோவான் 8:42)

33. இயேசு என்னில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்ற புதிய கட்டளையைக் கொடுத்திருக்கிறார். (யோவான் 13:34)

34. நான் இயேசுவில் அன்பு கூறுகிறேன். அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறேன். (யோவான் 14:15)

35. நான் இயேசுவிடமிருந்து கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அதைக் கைக்கொண்டு அவரில் அன்பு கூறுகிறேன். நான் இயேசுவை நேசிக்கிறேன். அதனால் பிதாவால் நேசிக்கப்படுகிறேன். அவரிடத்தில் அன்பாயிருப்பவன் அவருடைய பிதாவுக்கும் அன்பாயிருப்பான். அவர் என்னிடம் அன்பாயிருந்து தம்மை எனக்கு வெளிப்படுத்துவார். (யோவான் 14:21)

36. நான் இயேசுவிடம் அன்பு கூர்ந்து அவருடைய வசனத்தைக் கைக் கொள்ளுவேன். பிதா என்னிடத்தில் அன்பாயிருப்பார். இயேசுவும் என்னுடைய பிதாவும் என்னிடத்தில் வந்து என்னோடே வாசம் பண்ணுவார்கள். (யோவான் 14:23)

37. பிதாவானவர் இயேசுவிடம் அன்பு கூறுவது போல இயேசுவும் என்னில் அன்பாயிருக்கிறார். அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறேன். இது இயேசுவின் கற்பனையாயிருக்கிறது. அவர் என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும். (யோவான் 15:9,12)

38. தேவன் இயேசுவில் அன்பு கூர்ந்தது போல என்னிலும் அன்பு கூறுகிறார். உலகத் தோற்றத்திற்கு முன் பிதா இயேசுவிடம் அன்பு கூர்ந்தார். தேவனும் உலகத் தோற்றத்திற்கு முன் என்னிடத்திலும் அன்பு கூர்ந்தார். பிதா இயேசுவிடத்தில் வைத்த அன்பு என்னிடத்தில் இருக்கும்படிக்கும் நானும் அவரிடத்தில் அன்பு கூறும்படிக்கும் இதை வெளிப்படுத்தியிருக்கிறார். (யோவான் 17:23,26)

39. நான் தேவனிடத்தில் அன்பு கூறுகிறபடியால் அவருடைய தீர்மானித்தின்படி அழைக்கப்பட்டவனாக இருக்கிறபடியாலும் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறேன். (ரோமர் 8:28)

40. கிறிஸ்துவினுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வெறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் அன்பை விட்டு என்னை பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர் 8:35; 38-39)

41. என்னில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவனாக இருக்கிறேன். (ரோமர் 8:37)

42. ஒருவரிடத்திலொருவர் அன்பு கூறுகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவருக்கும் கடன்படாதிருங்கள். பிறனிடத்தில் அன்பு கூறுகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். (ரோமர் 13:8)

43. தேவன் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை. காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்திலே தோன்றவுமில்லை என்று அறிந்திருக்கிறேன். (I கொரி 2:9)

44. நான் தேவனிடத்தில் அன்பு வைத்திருக்கிறபடியால் நான் நீடிய சாந்தமும் அன்புமுள்ளவனாயிருக்கிறேன். நான் தேவனுடைய அன்பைப் பெற்றிருக்கிறபடியால் எனக்குப் பொறாமை இல்லை. தேவனுடைய அன்பு என்னிடம் இருக்கிறதினால் என்னைப் புகழுவதில்லை. இறுமாப்பாய் இருப்பதில்லை. அன்பு என்னிடம் இருப்பதால் நான் அயோக்கியமானதைச் செய்வதில்லை. தற்பொழிவை நாடுவதுமில்லை. நான் சினமடையாமல் தீங்கை நினைப்பதில்லை. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படுகிறேன். நான் சகலத்தையும் தாங்குகிறேன். சகலத்தையும் விசுவாசிக்கிறேன். சகலத்தையும் நம்புகிறேன். சகலத்தையும் சகிக்கிறேன். நான் தேவனுடைய அன்பைப் பெற்றிருக்கிறபடியால் நான் தோல்வி அடைவதில்லை. நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்து போம். (I கொரி 13:4-8)

45. மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காக செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன். ஏனென்றால் இயேசுக் கிறிஸ்துவிலுள்ள அன்பினால் அபரிமிதமாக அன்பு கூறுகிறேன். (II கொரி 12:15)

46. நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ; என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். (கலா 2:20)

47. தமக்கு முன்பாக நான் அன்பில் பரிசுத்தமும் குற்றமில்லாதவனாயும் இருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் என்னைத் தெரிந்து கொண்டார். (எபேசி 1:4)

48. அவர் தம்முடைய மகா மேன்மையான அன்பினால் என்னை நேசித்த படியால் தேவன் தாமே தமது கிருபையின் ஐசுவரியத்தின்படியே என்னைத் தம்முடன் உயிரோடு எழுப்பி உன்னதங்களில் தம்முடன் உட்காரும்படி செய்து கிறிஸ்து இயேசுவுக்குள் வருங்காலங்களில் அவருடைய அளவுக் கடங்காத கிருபையின் ஐசுவரியத்தை கிறிஸ்துவுக்குள் எனக்குக் காட்டிய அன்பின் படியே காட்டுவதற்கு சித்தம் கொண்டார். (எபேசி 2:4-7)

49. கிறிஸ்து தேவனுக்குத் தம்மை வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து என்னில் அன்புகூர்ந்தது போல நானும் அன்பிலே கிறிஸ்துவைப் போல நடந்து கொள்ளுவேன். (எபேசி 5:7)

50. நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூறுகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. (எபேசி 6:24)

51. ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கு தேவனால் நான் போதிக்கப்பட்டிருக்கிறேன். (I தெச 4:9)

52. என்னுடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் பிதாவாகிய என் தேவனும் என்னில் அன்பு கூர்ந்து நித்திய ஆறுதலையும் நல் நம்பிக்கையையும் கிருபையாய் எனக்குக் கொடுத்து என் இருதயத்தைத் தேற்றி எல்லா நல் வசனத்திலும் நற்கிரியையிலும் என்னை ஸ்திரப்படுத்துகிறார். (II தெச 2:16-17)

53. நான் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து பிரசன்னமாகுதலை நேசிக்கிறேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. (II தீமோத் 4:8)

54. நான் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்திருக்கிறேன். ஆகையால் தேவன், என் தேவனானவர் என்னை ஆனந்தத் தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார். (எபி 1:9)

55. நான் கர்த்தரில் அன்பு கூர்ந்து சோதனைகளைச் சகித்து அவற்றை மேற் கொள்ளுகிறேன். நான் உத்தமன் என்று விளங்கின பின்பு ஜீவ கிரீடத்தைப் பெறுவேன். (யாக் 1:12)

56. நான் தேவனில் அன்பு கூறுகிறேன். என்னை அவர் விசுவாசத்தில் ஐசுவரியவானாகவும், வாக்குத்தத்தம் பண்ணின இராஜ்ஜியத்தை சுதந்தரிக்கும் சுதந்திரவாளியாகவும் தெரிந்து கொண்டார். (யாக் 2:5)

57. நான் வேத வாக்கியம் சொல்லுகிற இராஜரிகப் பிரமாணத்தை நிறைவேற்றுகிறேன். என்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுகிறேன். (யாக் 2:8)

58. நான் இயேசுவில் அன்பு கூர்ந்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தால் களி கூறுகிறேன். (I பேதுரு 1:8)

59. நான் ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்படிந்து என் ஆத்துமாவை சுத்தமாக்கிக் கொண்டிருக்கிற படியால் சகோதர சிநேகமுள்ளவனாக ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுகிறேன். (I பேதுரு 1:22)

60. நான் எனது கிறிஸ்தவ சகோதரரை நேசிக்கிறேன். நான் சகோதரனிடத்தில் அன்பு கூறுகிறபடியினால் ஒளியிலே நிலை கொண்டிருக்கிறேன். என்னிடத்தில் இடறல் ஒன்றும் இல்லை. (I யோவான் 2:10)

61. நான் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறுவதில்லை. ஏனென்றால் பிதாவின் அன்பு என்னில் இருக்கிறது. (I யோவான் 2:15)
62. நான் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறேன் என்று அறிந்திருக்கிறேன். ஏனென்றால் நான் சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறேன். (I யோவான் 3:14)
63. வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியைகளினாலும், உண்மையினாலும் அன்பு கூறுகிறேன். (I யோவான் 3:18)
64. அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கும்படி எனக்குக் கட்டளையிட்டபடி நான் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்கிறேன். (I யோவான் 3:23)
65. நான் ஒருவரிலொருவருக்கு அன்பு கூறுகிறேன். ஏனென்றால் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. நான் அன்புள்ள தேவனால் பிறந்து அவரை அறிந்திருந்த படியால் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று அறிந்திருக்கிறேன். (I யோவான் 4:7-8)
66. ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூறுகிறபடியால் தேவன் எனக்குள் நிலைத்திருக்கிறார். அவருடைய அன்பும் எனக்குள் பூரணப்படும். தேவன் என்மேல் வைத்திருக்கிற அன்பை நான் அறிந்து விசுவாசிக்கிறேன். தேவன் அன்பாகவே இருக்கிறார். நான் அன்பில் நிலைத்திருக்கிறேன். ஏனென்றால் தேவனும் என்னில் நிலைத்திருக்கிறார். (I யோவான் 4:12,16)
67. நியாயந்தீர்ப்பு நாளிலே எனக்குத் தைரியமுண்டாயிருக்குத்தக்கதாக அன்பு என்னிடத்தில் பூரணப்படுகிறது. ஏனென்றால் அவர் இருக்கிற பிரகாரமாக நானும் இவ்வுலகத்தில் இருக்கிறேன். (I யோவான் 4:17)
68. எனக்கு அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும். ஏனென்றால் அவர் முந்தி என்னிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நானும் அவரில் அன்பு கூறுகிறேன். (I யோவான் 4:18-19)
69. நான் இயேசுவில் அன்பு கூறுகிறேன். மேலும் அவரால் பிறப்பிக்கப்பட்டவர்களிடத்திலும் அன்பு கூறுகிறேன். நான் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும் பொழுது தேவனுடைய பிள்ளைகளிடத்திலும் அன்பு கூறுகிறேனென்று அறிந்து கொள்ளுகிறேன். (I யோவான் 5:1-2)
70. தேவன் சாத்தானையும் அவனுடைய கூட்டத்தாரையும் என்னுடைய பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து கொள்ளும்படி செய்து அவர் என் மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வார். (வெளி 3:9)

(3) சிந்தனையான ஜீவியத்திற்கான தியானங்கள்

1. கர்த்தாவே, என் உட்காருதலையும், என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர். என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள். (சங் 139:2,17)
2. நீதிமான்களுடைய நினைவுகள் நியாயமானவைகள். நான் கிறிஸ்துவில் நீதியாய் இருக்கிறேன். என்னுடைய நினைவுகள் நியாயமானவைகள். (நீதி 12:5; II கொரி 5:21)
3. என்னுடைய செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்கிறேன். என் யோசனைகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. (நீதி 16:3)
4. என் பேரிலுள்ள தேவனுடைய நினைவுகள் சமாதானத்துக் கேதுவானவைகள். அவைகள் எனக்கென்று ஒரு எதிர்காலத்தையும், நம்பிக்கையையும் கொடுக்கிறது. (ஏரேமியா 29:11)
5. நான் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும், நிர் மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்படியச் செய்து சிறைப்படுத்துகிறவனாயிருக்கிறேன். (II கொரி 10:5)
6. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும்,

ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபி 4:12)

7. கடைசியாக நான் உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்பு உள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். (பிலிப் 4:8)

8. நான் தேவனை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதையுடையவன். அவரையே நம்பியிருக்கிற படியால் என்னை பூரண சமாதானத்துடனே காத்துக் கொள்கிறார். (ஏசாயா 26:3)

9. தேவன் தம்முடைய பிரமாணங்களை என்னுடைய மனதிலே வைத்து என்னுடைய இருதயத்தில் அவைகளை எழுதுகிறார். அவர் என்னுடைய தேவனாய் இருக்கிறார். நான் அவருடைய பிள்ளையாய் இருக்கிறேன். (எபி 8:10)

10. தேவன் தம்முடைய பிரமாணங்களை என்னுடைய இருதயத்தில் வைத்து, அவைகளை என்னுடைய மனதில் எழுதுகிறார். (எபி 10:16)

11. நான் என் மனதின் அரையைக் கட்டிக் கொண்டிருக்கிறேன். (I பேதுரு 1:13)

12. நான் கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொண்டிருக்கிறேன். (I பேதுரு 4:1)

13. எல்லாப் புத்திக்கும் மேலான் தேவ சமாதானம் என் இருதயத்தையும் என் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்கிறது. (பிலிப் 4:7)

14. நானே, என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு ஊழியஞ் செய்கிறேன். (ரோமர் 7:25)

15. நான் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுள்ள சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக என் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகிறேன். (ரோமர் 12:2)

16. நான் ஆவியின்படி நடந்து ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறேன். நான் ஆவிக்குரியவைகளைச் சிந்தித்து ஜீவனும் சமாதானமும் பெறுகிறேன். (ரோமர் 8:5-6)

17. நான் கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன். அதனால் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றிருக்கிறேன். ரோமர் 11:34; I கொரி 2:16)

18. என் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவனாய் இருக்கிறேன். (எபேசி 4:23)

19. கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையே என்னிலும் இருக்கக் கடவது. (பிலிப் 2:5)

20. கர்த்தருடைய ஊழியக்காரர்களால் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூறும்படி என் மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன். (II பேதுரு 3:2)

21. தேவன், எனக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (II தீமோத் 1:7)

22. என்னுடைய மனதை மேலானவைகளையே நாடும்படி நோக்கியிருக்கிறேன். பூமியிலுள்ளவை-களையல்ல கிறிஸ்து வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளையே நாடுகிறேன். (கொலோ 3:2)

(4)ஆரோக்கியத்திற்கும் சொஸ்தமாகுதலுக்கும் உரிய தியானங்கள்

1. நான் என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாகக் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து அவருடைய நியமங்கள் யாவையும் கைக் கொண்டிருக்கிறபடியால் உலகத்திலுள்ள வியாதிகளில் ஒன்றையும் என் மேல் வரப்பண்ண மாட்டார். என்னவென்றால் அவர் என் பரிகாரியாகிய கர்த்தர். (யாத் 15:26)

2. நான் என் தேவனாகியக் கர்த்தரைச் சேவிக்கிறேன். அவர் என் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிக்கிறார். வியாதியை என்னிலிருந்து விலக்குகிறார். (யாத் 23:25)

3. என் தேவனாகிய கர்த்தர் எனக்கு விதித்த வழிகள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் நடக்கிறேன். அதனால் கிறிஸ்துவுக்குள் எனக்கு சொந்தமாக நான் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்து சுகித்து என் வாழ்நாட்கள் நீடித்திருக்கிறது. (உபாகமம் 5:33)

4. கர்த்தர் என் மேல் அன்பு வைத்து, என்னை ஆசீர்வதித்து என்னைப் பெறுகப் பண்ணுகிறார். என் பிள்ளைகளையும் எனக்குள்ள எல்லா உடைமைகளையும் ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் சகல நோய்களையும் என்னை விட்டு விலக்குகிறார். உலகத்திலுள்ள எந்த விதமான வியாதியும் என்னை அணுக விடமாட்டார். (யாத் 7:13-15)

5. எனக்கு விதிக்கிற என் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படி யெல்லாம் செய்ய நான் கவனமாய் இருக்கிறேன். அவருடைய சத்தத்திற்கு உண்மையாய் செவி கொடுக்கிறேன். ஆகையால் என் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் என்னை மேன்மையாக வைக்கிறார். நான் கர்த்தரின் சத்தத்திற்கு செவி கொடுக்கிறபடியால் இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் என் மேல் வந்து எனக்குப் பலிக்கும். நான் பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறேன். வெளியிலும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறேன். என் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. என் நிலத்தின் கனியும், என் மாடுகளின் பெருக்கமும் என் ஆடுகளின் மந்தைகளுமாகிய என் மிருக ஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. என் கூடையும் மாப்பிசைகிற என் தொட்டியும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறது. நான் வருகையிலும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறேன். போகையிலும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறேன். எனக்கு விரோதமாய் எழும்பும் என் சத்துருக்களைக் கர்த்தர் எனக்கு முன்பாக முறிய அடிக்கும்படி ஒப்புக் கொடுக்கிறார். ஒரு வழியாய் எனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள். ஏழு வழியாய் எனக்கு முன்பாக ஓடிப் போவார்கள். கர்த்தர் என் களஞ்சியங்களிலும், நான் கையிடும் எல்லா வேலையிலும் எனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுகிறார். என் தேவனாகிய கர்த்தர் கிறிஸ்துவுக்குள் எனக்குக் கொடுக்கும் சுதந்தரமாகிய தேசத்திலே என்னை ஆசீர்வதிக்கிறார். என் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக் கொண்டு அவர் வழிகளில் நான் நடக்கிறேன். கர்த்தர் எனக்கு ஆணையிட்டபடியே என்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார். அப்பொழுது கர்த்தருடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டதென்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு எனக்குப் பயப்படுவார்கள். உனக்குக் கொடுப்பேன் என்று கிறிஸ்துவுக்குள் எனக்கு ஆணையிட்ட தேசத்தில் கர்த்தர் என் கர்ப்பத்தின் கனியிலும் என் மிருக ஜீவன்களின் பலனிலும் என் நிலத்தின் கனியிலும் எனக்குப் பரிபூரணமான நன்மை உண்டாகக் கட்டளையிடுகிறார். ஏற்ற காலத்திலே என் தேசத்தில் மழை பெய்யவும், நான் கையிட்டுச் செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும் கர்த்தர் எனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார். நான் அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பேன். நானோ கடன் வாங்காதிருப்பேன். கர்த்தர் என்னை வாலாக்காமல் தலையாக்குகிறார். நான் கீழாகமல் மேலாகுகிறேன். ஏனென்றால் நான் எனக்கு விதிக்கிற என் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக் கொள்ளவும், அவைகளின் படி நடக்கவும் அவைகளுக்கு செவி கொடுத்தும் வருகிறேன். இன்று கர்த்தர் எனக்கு விதிக்கிற வார்த்தைகள் யாவையும் விட்டு விலகி, வேறே தேவர்களைச் சேவிக்கும்படி வலதுபுறம் இடது புறம் சாயமாட்டேன். நான் கர்த்தருடைய கட்டளைகளுக்கு மாத்திரம் கீழ்படிகிறேன். கர்த்தர் வியாதி, வறுமை, மரணம் ஆகியவற்றால் வரும் சாபத்தை என்னை நீங்கலாக்கி விட்டு அகற்றிப் போடுவார். நான் கிறிஸ்துவுக்காக பூரண ஆரோக்கியமுள்ளவனாக இருப்பேன். ஏனென்றால் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு என்னை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். (உபா 28:1-14; கலா 3:13)

6. தேவன் என் எலும்புகளை யெல்லாம் காப்பாற்றுகிறார். அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை. (சங் 34:20)

7. என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன். (சங் 42:11)

8. தேவன் என் ஆத்துமாவை சாவின் வல்லமையிலிருந்து இரட்சிக்கிறார். நான் கிறிஸ்துவுக்குள் நித்திய ஜீவனைப் பெற்றிருப்பதால் நித்திய காலமாக அவரில் அன்பு கூறுவேன். (சங் 42:11)

9. ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது. நிணத்தையும் கொழுப்பையும் உண்டது போல என் ஆத்துமா திருப்தியாகும். என் வாய் ஆனந்த களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும். (சங் 63:35)

10. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார். நம் மேல் பாரஞ் சுமத்தினாலும் இரட்சிக்கும் தேவன் அவரே. (சங் 103:2-3; 68:19)

11. என் கோத்திரங்களில் பலவீனப் பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை. (சங் 105:37)

12. இனிய சொற்கள் தேன் கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும். (நீதி 16:24)

13. உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். அவர் என்னை வேடனுடைய கண்ணிக்கும் பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார். அவர் தமது சிறகுகளாலே என்னை மூடுவார். அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவேன். அவருடைய சத்தியம் எனக்குப் பரிசையும் கேடகமும் ஆகும். இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும் பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பேன். என் பக்கத்தில் ஆயிரம் பேரும் என் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது என்னை அணுகாது. என் கண்களால் மாத்திரம் நான் அதைப் பார்த்துத் துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பேன். எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை எனக்குத் தாபரமாகக் கொண்டேன். ஆகையால் பொல்லாப்பு எனக்கு நேரிடாது. வாதை என் கூடாரத்தை அணுகாது. என் வழிகளிலெல்லாம் என்னைக் காக்கும்படி, எனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். என் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் என்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள். சிங்கத்தின் மேலும், விரியன் பாம்பின் மேலும் நான் நடந்து பால சிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவேன். நான் அவரிடத்தில் வாஞ்சையாயிருக்கிற படியால் என்னை விடுவிக்கிறார். அவருடைய நாமத்தை நான் அறிந்திருக்கிற படியால் என்னை உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கிறார். நான் அவரை நோக்கிக் கூப்பிடுவேன். அவர் எனக்கு மறு உத்தரவு அருளிச் செய்வார். ஆபத்திலே அவர் என்னோடிருந்து, என்னைத் தப்புவித்து என்னைக் கனப்படுத்துகிறார். நீடித்த நாட்களால் என்னைத் திருப்தியாக்கி அவருடைய இரட்சிப்பை எனக்கு காண்பிக்கிறார். (சங் 91ம் அதிகாரம்)

14. அவர் தமது வசனத்தை அனுப்பி, என்னைக் குணமாக்கி, என்னை அழிவுக்குத் தப்புவிக்கிறார். (சங் 107:20)

15. தேவன் என்னைப் பாதுகாத்து (என் நோய்களைக்) குணமாக்கி எனக்கு செல்வத்தை அளிக்கிறார். (சங் 118:25)

16. தேவன் தமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பிக்கிறார். தமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்துகிறார். (சங் 119:25,28)

17. தேவன் தமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பிக்கிறார். நான் அவர் வாக்கின் சாட்சியைக் காத்து நடக்கிறேன். (சங் 119:88)

18. நான் பிழைத்திருப்பதற்கு உமது வார்த்தையின்படி என்னை ஆதரித்தருளும். (சங் 119:11b)

19. என் இருதயம் தேவனுடைய கட்டளைகளை (கடைபிடிக்கிறது) காக்கிறது. எனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும் சமாதானத்தையும் பெறுகப் பண்ணுகிறது. கர்த்தருக்குப் பயந்து தீமையை விட்டு விலகுகிறேன். அவருடைய வார்த்தைகள் என் நாபிக்கு ஆரோக்கியமும் என் எலும்புகளுக்கு ஊனுமாய் இருக்கிறது. நான் படுக்கும் பொழுது பயப்படாதிருப்பேன். நான் கர்த்தருடைய வார்த்தைகளைக் காத்து நடக்கிறேன். நான் படுத்துக் கொள்ளும்போது என் நித்திரை இன்பமாயிருக்கும். (நீதி 3:1-2; 7-8, 24)

20. நான் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, அவைகளை ஏற்றுக் கொள்கிறேன் என்னுடைய ஆயுசின் வருடங்கள் அதிகமாகிறது. கர்த்தருடைய வார்த்தையாகிய புத்திமதியை உறுதியாய் பற்றிக் கொள்கிறேன். நான் அதை விட்டு விடுவதில்லை. அதைக் காத்துக் கொள்கிறேன். அதுவே எனக்கு ஜீவன். (நீதி 4:10,13)

21. நான் தேவனுடைய வார்த்தைகளைக் கவனிக்கிறேன். அவருடைய வசனங்களுக்கு செவி சாய்க்கிறேன். அவைகளை என் கண்களை விட்டு பிரியாதிருக்கச் செய்கிறேன். அவைகளை என் இருதயத்துக்குள்ளே காத்துக் கொள்கிறேன். ஏனென்றால் அவைகள் எனக்கு ஜீவனும் உடலுக்கு ஆரோக்கியமும் ஆகும். (நீதி 4:20-22)

22. நான் கர்த்தருக்குப் பயப்படுகிறேன். அது என் ஆயுசு நாட்களைப் பெருகப்பண்ணும். எல்லக் காவலோடும் என் இருதயத்தைக் காத்துக் கொள்கிறேன். அதனிடத்தினின்று ஜீவ ஊற்றுப் புறப்படும். (நீதி 10:27; 4:23)

23. என்னுடைய பலன் ஜீவ விருட்சம். என்னுடைய நாவு (ஞானம் உள்ளவர்கள்) ஒளஷதம். என்னுடைய நீதியின் பாதையில் ஜீவன் உண்டு. அந்தப் பாதையில் மரணம் இல்லை. (நீதி 11:30; 12:18,28)

24. என்னுடைய வாஞ்சை யெல்லாம் கர்த்தருக்காகவே, அது எனக்கு ஒரு ஜீவ விருட்சம். நான் கர்த்தருக்குப் பயப்படுகிறேன். அது எனக்கு ஜீவ ஊற்று. என்னுடைய சொஸ்தமனம் என் உடலுக்கு ஜீவனாயிருக்கிறது. (நீதி 13:12 14:27,30)

25. என்னுடைய மன மகிழ்ச்சி அது ஒரு நல்ல ஒளஷதம். என் வாயின் பலனால் நான் திருப்தி அடைகிறேன். என் உதடுகளின் விளைவினால் நிரப்பப் படுகிறேன். (நீதி 17:22; 18:20-21)

26. நான் நீதியையும் தயையையும் பின்பற்றுகிறேன். அதனால் ஜீவனையும் நீதியையும் மகிமையையும் கண்டடைகிறேன். (நீதி 21:21)

27. இயேசுக் கிறிஸ்து நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு துக்கங்களைச் சுமந்தார். எனக்காக அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு சிறுமைப்பட்டவர் என்று எண்ணினேன். என்னுடைய மீறுதல்கள் நிமித்தம் அவர் காயப்பட்டார். என்னுடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். எனக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறேன். (ஏசாயா 53:4-5)

28. இயேசு தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக் கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார். அதனால் நான் இப்பொழுது ஆரோக்கியத்துடன் வியாதி இல்லாமலும் சரீர பலவீனமும் இல்லாமல் இருக்கிறேன். பிசாசினுடைய கிரியைகளான வியாதிகளை, நோய்களை சரீர பலவீனங்களை இயேசு அழித்து விட்டார். ஆகையால் பிசாசின் கிரியைகளாக என் சரீரத்தில் உண்டானவை அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன. ஆகையால் நான் இயேசுக் கிறிஸ்துவின் வல்லமையால் பூரணமான சுகமானேன். (மத் 8:17; I யோவான் 3:8; அப் 10:38)

29. தேவனாகிய பிதாவின் சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுகிறது. பரலோகத்தில் வியாதி என்பது இல்லை. ஆகையால் நான் இந்த பூலோகத்திலும் ஒருபோதும் வியாதிப்படுவதில்லை. இயேசு இந்த உலகத்தில் இருக்கும்பொழுது வியாதிப்பட்டதே இல்லை. இயேசு எனக்குள் இருக்கிறார். அவருடைய ஜீவன் எனக்குள் பிரவாகித்து ஓடுகிறது. அவர் இந்த உலகத்தில் இருந்தது போலவே நானும் இவ்வுலகத்தில் இருக்கிறேன். நான் இயேசுவைப் போலவே ஆரோக்கியமாக இருக்கிறேன் இந்த உலகத்தில். (மத் 6:10; கலா 2:20; I யோவான் 4:17)

30. நான் என் வார்த்தைகளினாலே நியாயந் தீர்க்கப்படுகிறேன். நான் எனக்குள் இயேசுக் கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் கிறிஸ்து இயேசு எனக்குள் இருக்கிறார். அவர் தான் என்னுடைய விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார். நான் வியாதியின் நோய்கள் என்ற மலைகளைப் பார்த்து பேசுகிறேன். அவைகள் என் வார்த்தைகளுக்குக் கீழ்படிந்து அகன்று போகின்றன. எல்லா நோய்கள் வியாதிகள் மேலும் எனக்கு அதிகாரமும் வல்லமையும் உண்டு. அவைகளை விட்டு விட்டு அகன்று போகும்படி கட்டளையிடுகிறேன். அவைகள் என் வார்த்தைகளுக்குக் கீழ்படிகின்றன. நான் வியாதியஸ்தர் மேல் கைகளை

வைக்கிறேன். அவர்கள் சொஸ்தம் அடைகிறார்கள். (மத் 12:37; எபி 12:2; II பேதுரு 1:1,4; மத் 17:20; 10:1; மாற்கு 16:18)

31. நான் தேவனில் நம்பிக்கையாயிருக்கிறேன். அதனால் எல்லா காரியங்களை செய்ய என்னால் கூடும். தேவனுடைய வாக்குத் தத்தங்களெல்லாம் எனக்கு "ஆம்" என்றிருக்கிறது. ஏனென்றால் கிறிஸ்து அவை எல்லாவற்றிற்காகவும் கிரயம் செலுத்தியிருக்கிறாரே. (மத் 9:23; II கொரி 1:19-20)

32. நான் சொல்லுகிற எல்லாக் காரியங்களும் நிறைவேறுகின்றன என்ற நம்புகிறேன். நான் சொல்லுகிற ஒவ்வொரு காரியத்தையும் நான் வாஞ்சிக்கிற எல்லாவற்றையும், நான் ஜெபிக்கும் பொழுது நான் அவைகளைப் பெற்றுக் கொண்டதாக விசுவாசிக்கும் பொழுது அவற்றைப் பெற்றுக் கொள்கிறேன். (மாற்கு 11:23-24)

33. நான் இயேசுக் கிறிஸ்துவில் நம்பிக்கையாய் இருக்கிறேன். இயேசுக் கிறிஸ்து செய்த கிரியைகளை நானும் கூடச் செய்வேன். நான் அதைவிட பெரிய காரியங்களைச் செய்வேன். ஏனென்றால் இயேசுக் கிறிஸ்து பிதாவிடம் போயிருக்கிறார். அவர் தம்முடைய பரிசுத்த ஆவியானவரை அனுப்பி எனக்குள் வாசம் பண்ணுகிறார். இயேசுவின் நாமத்தினால் நான் கேட்டுக் கொள்ளுவது எதுவோ அதை இயேசு தாமே பிதா குமாரனில் மகிமைப்படும் படியாக அதை நிறைவேற்றுகிறார். நான் இயேசுவின் நாமத்தினால் எதைக் கேட்டாலும் நான் அதை உங்களுக்குச் செய்வேன் என்று இயேசு சொல்லுகிறார். (யோவான் 14:12-14)

34. நான் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறேன். நான் அவைகளை ஒவ்வொரு நாளும் தியானித்து அவருடைய வார்த்தைகளை என்னில் நிலைத்திருக்கும்படி அனுமதிக்கிறேன். நான் எதைக் கேட்டாலும் அது எனக்குத் தரப்படுகிறது என்று இயேசு கூறுகிறார். (யோவான் 15:7)

35. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நான் பிதாவினிடத்தில் கேட்பதையெல்லாம் அவர் அதை எனக்குத் தந்து அருளுகிறார். பிதா இயேசுக் கிறிஸ்துவை நேசித்து அவர் கேட்டுக் கொள்ளுவதை யெல்லாம் அவருக்குத் தருகிறார். பிதா இயேசுவை நேசிப்பது போல அந்த அளவுக்கு என்னிலும் அன்பாயிருக்கிறார். நான் கேட்டுக் கொள்வதை யெல்லாம் எனக்கும் கொடுக்கிறார். (யோவான் 16:23, 26-27; 17:23)

36. பரலோகத்திலும் பூலோகத்திலும் சகல அதிகாரமும் இயேசுக் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினால் அவருடைய வல்லமையையும் அதிகாரத்தையும் நான் விசுவாசிக்கிறேன். (மத் 28:18; அப் 3:16)

37. இயேசுக் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிய தேவனுடைய ஆவி என்னில் வாசமாயிருக்கிறது. இயேசுக் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியவர் என்னில் வாசம் பண்ணுகிற ஆவியினால் என் சரீரத்திற்கு ஜீவனைக் கொடுக்கிறார். (ரோமர் 8:11)

38. நான் கர்த்தராகிய இயேசுவை என் வாயினால் அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று என் இருதயத்தில் விசுவாசிக்கிறேன். அதனால் நான் சொஸ்தமடைகிறேன். ஆகையால் நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கிறேன். என் வாயினாலே நான் சொஸ்தமாவதற்கும் ஆரோக்கியத்திற்காகவும் அறிக்கை செய்கிறேன். (ரோமர் 10:9-10 - இரட்சிப்பு என்பது கிரேக்க வார்த்தையான SOZO என்பதிலிருந்து வருகிறது. அதற்கு அர்த்தமாவது சொஸ்தமாக்கப்பட இரட்சிக்கப்பட என்பதாகும். (மாற்கு 5:23; அப் 14:19)

39. அப்பொழுது விடியற்கால வெளுப்பை போல என் வெளிச்சம் எழும்பி என் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து என் நீதி எனக்கு முன்னாலே செல்லுகிறது. கர்த்தருடைய மகிமை என்னைப் பின்னாலே காக்கும். (ஏசாயா 58:8)

40. கர்த்தர் எனக்கு சௌக்கியமும் ஆரோக்கியத்தையும் வரப்பண்ணுகிறார். என்னைக் குணமாக்கி எனக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துகிறார். (ஏரேமியா 33:6)

41. நான் ஆவிக்கென்று விதைத்து ஆவியினாலே நித்திய ஜீவனை அறுக்கிறேன். நான் ஆரோக்கியத்திற்கும் குணமாக்கும் வார்த்தைகளை ஒவ்வொரு நாளும் விதைக்கிறேன். என்னுடைய மாம்ச சரீரத்தில் தினமும் ஆரோக்கியத்தை அறுக்கிறேன். (கலா 6:8-9)

42. மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழித்தார். மரண பயமாகிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டேன். இயேசு சாத்தானுடைய துரைத் தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எல்லா சாத்தானுடைய தீய சக்திகளின் மேலும் நோய்கள் மீதும் அதிகாரம் பெற்று அவைகளைத் துரத்தி விடுகிறேன். (எபி 2:14; கொலோ 2:14-15; மாற்கு 16:17-18)

43. என்னுடைய ஜெபமும் விசுவாச வார்த்தைகளும் பிணியாளியை சொஸ்தமாக்கும். பாவஞ் செய்திருப்பார்களானால் அவர்களுக்கு மன்னிக்கப்படும். இந்த வசனமாகிய வார்த்தை எனக்கு சமீபமாய் இருக்கிறது. உன் வாயிலும் என்னுடைய இருதயத்திலும் இருக்கிறது. இந்த வார்த்தை நான் பேசுகிற விசுவாசத்தின் வார்த்தையே. (யாக் 5:15; ரோமர் 10:8)

44. இயேசு என்னுடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானேன். (I பேதுரு 2:24)

45. என் ஆத்துமா வாழ்கிறது போல நான் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாக இருக்கும்படி தேவனுடைய சித்தமாயிருக்கிறது. (3 யோவான் 2)

46. என்னுடைய சரீரமானது பரிசுத்த ஆவியுனுடைய ஆலயமாயிருக்கிறது. தேவனுடைய பூரணமான நிறைவானது என்னில் வாசம் பண்ணுகிறது. என் சரீரத்திலும், என்னுடைய ஆவியிலும் தேவனை மகிமைப் படுத்துகிறேன். (I கொரி 6:19-20; எபேசி 1:23; 3:19)

47. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு. (பிலிப் 4:13)

48. பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். (கலா 2:20)

49. உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். (I யோவான் 4:4)

(5) வாலிபப் பருவத்திற்கான தியானங்கள்

1. மோசே மரிக்கிறபோது அவன் கண் இருளடையவுமில்லை. அவன் பெலன் குறையவுமில்லை. அது போலவே என் கண் இருளடையவுமில்லை. என்னுடைய இயற்கையான பலம் குறையவுமில்லை. (உபாகமம் 34:7)

2. தேவன் என்னை நீடித்த நாட்களால் திருப்தியாக்கி அவருடைய இரட்சிப்பை எனக்குக் காண்பிக்கிறார். (சங் 91:16)

3. அப்பொழுது காண்கிற என் கண்கள் மங்கலாயிராது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும் என் கண்களைத் தெரிவிக்கிறதுமாயிருக்கிறது. (ஏசாயா 32:3; சங் 19:8)

4. என் பற்கள் மயிர் கத்தரிக்கப்பட்டபின் குளிப்பாட்டப்பட்டு கரையேறுகிறவைகளும், ஒன்றாகிலும் மலடாயிராமல் எல்லாம் இரட்டை குட்டியீன்றவைகளுமான ஆட்டு மந்தையைப் போல் இருக்கிறது. (உன்னதப்பாட்டு 4:2)

5. தேவன் எனக்கு பெலன் கொடுத்து சத்துவமில்லாத எனக்கு சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள். வாலிபரும் இடறி விழுவார்கள். நானோ கர்த்தருக்குக் காத்திருந்து புது பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவேன். நான் ஓடினாலும் இளைப்படைய மாட்டேன். நடந்தாலும் சோர்ந்து போக மாட்டேன். (ஏசாயா 40:29-31)

6. கழுகுக்குச் சமானமாய் என் வயது திரும்ப வால வயது போலாகிறது. (சங் 103:5)

7. இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி என்னில் வாசமாயிருப்பதால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் என்னில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே என்னுடைய சரீரத்தையும் உயிர்பிப்பார். (ரோமர் 8:11)

8. என்னுடைய சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறது. தேவனுக்குடையவைகளாகிய என் சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துகிறேன். (I கொரி 6:19-20)
9. கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுகிறார். (பிலிப் 1:20)
10. நான் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமை அடைகிறேன். (II கொரி 3:18)
11. நான் கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் நான் பரிசுத்தமும் பிழையற்றவனுமாக தமக்கு முன் நிறுத்திக் கொண்டார். எனது சரீரம் கிறிஸ்துவின் சரீரத்தில் அவரது மாம்சத்தில் அவருடைய எலும்புகளிலும் ஓர் அவயமாக இசைந்திருக்கிறது. (எபேசி 5:27,30; I கொரி 6:15)
12. என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் எனது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து வரும் பொழுது குற்றமற்றதாய் காக்கப்படுவதாக. (I தெச 5:25)

(6) கிறிஸ்துவுக்குள் நமது ஸ்தானம்

1. கிறிஸ்துவுக்குள் அவருடைய கிருபையால் கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமானாக்கப் படுகிறேன். (ரோமர் 3:24)
2. கிறிஸ்து இயேசுவுக்குள் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படி நான் நடக்கிறபடியால் எனக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை. (ரோமர் 8:2)
3. கிறிஸ்துவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்குகிறது. (ரோமர் 8:2)
4. கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த விசுவாசிகள் சகலரோடும் ஒரே சரீரமாயிருக்க ஒருவருக்கொருவர் அவயவயங்களில் தனி நபராகவும் இருக்கிறேன். (ரோமர் 12:5)
5. கிறிஸ்துவுக்குள் நான் பரிசுத்தமாக்கப்பட்டு, என்னுடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைத்து பரிசுத்தவான்களோடு பரிசுத்தவானாக அழைக்கப்பட்டும் இருக்கிறேன். (I கொரி 1:2)
6. கிறிஸ்துவுக்குள் தேவனால் எனக்கு ஞானமும், நீதியும் பரிசுத்தமும், மீட்பும் உண்டாயிருக்கிறது. (I கொரி 1:30)
7. கிறிஸ்துவுக்குள் நான் உயிர்பிக்கப் படுவேன். (இங்கு உயிர்தெழுதல் எனப்படும்) (I கொரி 15:22)
8. கிறிஸ்துவுக்குள் நான் நிலை நிறுத்தப்பட்டு அபிஷேகம் பெற்றுக் கொண்டேன். (II கொரி 1:2)
9. கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் என்னை வெற்றி சிறக்கப்பண்ணி எல்லா இடங்களிலேயும் என்னைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை தேவன் வெளிப்படுத்துகிறார். (II கொரி 2:14)
10. தேவ வசனமாகிய வார்த்தையை நிதானிக்கக் கூடாதபடி என் இருதயத்திலும் சிந்தனையிலும் மூடப்பட்டிருந்த முக்காடானது இப்பொழுது கிறிஸ்துவுக்குள் எடுபட்டு விட்டது. (II கொரி 3:14-16)
11. கிறிஸ்துவுக்குள் நான் புது சிருஷ்டியாயிருக்கிறேன். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின. (II கொரி 5:17)
12. கிறிஸ்துவுக்குள் நான் பிதாவாகிய தேவனுடன் ஒப்புரவாகிறேன். ஏனென்றால் தேவன் என்னுடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் என்னை தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை என்னிடத்தில் ஒப்புவித்தார். (II கொரி 5:19)
13. கிறிஸ்துவுக்குள் எனக்கு சுயாதீனம் உண்டாயிற்று. (கலா 2:4)
14. கிறிஸ்துவுக்குள் எனக்கு ஜீவன், நீதி, விசுவாசம் ஆகியவைகளுக்கான வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. ஏனென்றால் அதை நான் அவ்வாறு நம்புகிறேன். (கலா 3:21-22)

15. கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தினாலே தேவனுக்குப் புத்திரன் ஆனேன். (கலா 3:28)

16. கிறிஸ்துவுக்குள் யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனன் என்றும் இல்லை. ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை. நான் சகல விசுவாசிகளுடன் ஒன்றாய் இருக்கிறேன். (கலா 3:28)

17. கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்த சேதனமும், விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும். (கலா 5:6)

18. கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை. விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை. புது சிருஷ்டியே காரியம். (கலா 6:15)

19. கிறிஸ்துவுக்குள்ளாக நான் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும், என்னுடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன். (எபேசி 1:3)

20. கிறிஸ்துவுக்குள் நற்கிரியைகளைச் செய்வதற்கு நான் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறேன். நான் அவைகளில் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். (எபேசி 2:10)

21. காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கட்டப்பட வேண்டுமென்று தீர்மானிததிருந்த தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தின்படி நானும் கட்டப்பட்டிருக்கிறேன். (எபேசி 1:10)

22. கிறிஸ்து இயேசுவுக்குள் என்னை அவரோடே கூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடே கூட என்னை உட்காரவும் செய்தார். (எபேசி 2:6)

23. முன்னே (ஒரு காலத்தில்) தூரமாயிருந்த என்னை கிறிஸ்துவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானேன். (எபேசி 2:12-13)

24. கிறிஸ்துவுக்குள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரனுமாய் அவர் பண்ணின வாக்குத்தத்தத்திற்கு உடன் பங்காளியுமாய் இருக்கிறேன். (எபேசி 3:3)

25. நான் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக நான் இலக்கை நோக்கித் தொடருகிறேன். (பிலிப் 3:14)

26. எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு அவரையே நான் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறேன். (கொலோ 1:28)

27. கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வரும் பொழுது நான் கிறிஸ்துவுக்குள் எழுந்திருப்பேன். (I தெச 4:16)

28. இயேசு கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்கிறேன். அப்படி செய்வதே என்னைக் குறித்துத் தேவனுடைய சித்தமாக இருக்கிறது. (I தெச 5:18)

29. கிறிஸ்துவுக்குள் என்னுடைய கர்த்தரின் கிருபை விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய் பெருகிற்று. (I தீமோத் 1:14)

30. கிறிஸ்துவுக்குள் நான் இரட்சிக்கப்பட்டு என்னை பரிசுத்த அழைப்பினாலே அழைத்து என்னுடைய கிரியைகளின் படி இரட்சிக்காமல் தம்முடைய தீர்மானத்தின்படி எனக்கு அருளப்பட்ட கிருபையின் படியே என்னை இரட்சித்தார். (II தீமோத் 1:9)

31. கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தோடும் அன்போடும் நான் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக் கொண்டிருக்கிறேன். (II தீமோத் 1:13)

32. நான் கிறிஸ்துவுக்குள் அவருடைய கிருபையில் பலப்படுகிறேன். (II தீமோத் 2:1)

33. கிறிஸ்துவுக்குள் நான் பரிசுத்த வேத எழுத்துக்களை அறிந்திருக்கபடியால் விசுவாசத்தினால் இரட்சிப்பு பெற்றுக் கொள்வதற்கு என்னை ஞானமுள்ள தகுதியுள்ளவனாக ஆக்குகிறது. (II தீமோத் 3:15)

34. கிறிஸ்துவுக்குள் என்னுடைய விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளும் அந்நியோந்நியமானது என்னிலுள்ள சகல நன்மையும் தெரியப்படுகிறதினாலே பயன்படுகிறதாகிறது. (பிலமோன் 6)
35. நான் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும் இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும் தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும் நான் கூட்டி வழங்குவதால் நான் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணனும் கனியற்றவனாயும் இருப்பதில்லை. (II பேதுரு 1:5-8)
36. கிறிஸ்துவுக்குள் நான் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்து இருக்கிறேன். அதனால் பிதாவையும் குமாரனையும் உடையவன். (II யோவான் 9)
37. கிறிஸ்துவுக்குள் நான் பிழைக்கிறேன், அசைகிறேன், இருக்கிறேன். (அப் 17:28)
38. கிறிஸ்துவுக்குள் நான் தேவனுடைய ஜீவனைப் பெற்றிருக்கிறேன். அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருக்கிறது. (யோவான் 1:4)
39. கிறிஸ்துவுக்குள் நான் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறேன். (யோவான் 3:15)
40. கிறிஸ்துவுக்குள் என்னால் மகிமையுண்டாகும்படி தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசுக் கிறிஸ்துவுக்குள் "ஆம்" என்றும் அவருக்குள் "ஆமென்" என்றும் இருக்கிறதே. (II கொரி 1:20)
41. கிறிஸ்துவுக்குள் நான் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத அவரை எனக்காகப் பாவமாக்கினார். (II கொரி 5:21)
42. கிறிஸ்துவுக்குள் அவருக்கு முன்பாக நான் அன்பில் பரிசுத்தமும் குற்றமில்லாதவனாகயிருப்பதற்கு அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் என்னைத் தெரிந்து கொண்டார். (எபேசி 1:4)
43. கிறிஸ்துவுக்குள் நான் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிற நீதியை உடையவனாயிருக்கிறேன். (பிலிப் 3:9)
44. கிறிஸ்துவுக்குள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே அவருக்குள் நடந்து கொள்கிறேன். (கொலோ 2:6)
45. கிறிஸ்துவுக்குள் நான் வேர் கொண்டுள்ளவனாய் அதில் கட்டப்பட்டு அவருக்குள் நடக்கிறேன். எனக்குப் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்துடனே அதில் பெருகுகிறேன். (கொலோ 2:6-7)
46. கிறிஸ்துவுக்குள் நான், சகல துரைத்தனங்களுக்கும், அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் பூரணமுள்ளவனாக இருக்கிறேன். (கொலோ 2:10)
47. கிறிஸ்துவுக்குள் அவருடைய வசனத்தைக் கைக் கொண்டு இருக்கிறேன். தேவ அன்பு என்னிடத்தில் மெய்யாகவே பூரணப்பட்டிருக்கிறது. (I யோவான் 2:5)
48. கிறிஸ்துவுக்குள் நான் நிலைத்திருக்கிறேன். அவர் நடந்த படியே நானும் நடக்கிறேன். (I யோவான் 2:6)
49. கிறிஸ்துவுக்குள் அன்பாகிய புதிய கற்பனை என்னிடத்தில் அவருக்குள் இருந்தது போல மெய்யாயிருக்கிறது. ஏனென்றால் இருள் நீங்கிப் போகிறது. மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது. (I யோவான் 2:8; யோவான் 13:34)
50. கிறிஸ்துவுக்குள் என்னுடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக இருக்கிறார். (I யோவான் 2:2)
51. கிறிஸ்துவுக்குள் அவர் வெளிப்படுவார் திரும்ப வருவார் என்ற நம்பிக்கை எனக்குள் இருக்கிறது. அவர் பரிசுத்த முள்ளவராயிருக்கிறது போல என்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறேன். (I யோவான் 3:2-3)

52. அவரிடத்தில் பாவமில்லை. (I யோவான் 3:5)

53. கிறிஸ்துவுக்குள் நான் அவரில் நிலைத்திருக்கிறேன். அவரில் நிலைத்திருக்கிறபடியால் நான் பாவஞ் செய்வதில்லை. ஆகையால் அவரைக் காண்கிறேன். அவரை அறிந்தும் இருக்கிறேன். (I யோவான் 3:6; II கொரி 3:18)

54. கிறிஸ்துவுக்குள் நான் நிலைத்திருக்கிறேன். அவரும் என்னில் நிலைத்திருக்கிறார். ஏனென்றால் அவரது கட்டளைகளைக் கைக் கொள்ளுகிறேன். (I யோவான் 3:24)

55. கிறிஸ்துவுக்குள் நான் நிலைத்திருக்கிறேன். அவர் தம்முடைய ஆவியை எனக்குத் தந்தருளினதினாலே என்னில் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறேன். (I யோவான் 4:13)

56. கிறிஸ்துவுக்குள் நான் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் எனக்கு செவி கொடுக்கிறார் என்பதை நான் விசுவாசிக்கிறேன். (I யோவான் 5:14)

57. கிறிஸ்துவுக்குள் நான் சத்தியமுள்ளவரை அறிந்து கொள்வதற்கு தேவ குமாரன் வந்து எனக்குப் புத்தியைத் தந்திருக்கிறார் என்று அறிந்திருக்கிறேன். (I யோவான் 5:20)

58. எனக்குப் பிரியமானவராகிய கிறிஸ்து மூலமாய் பிதாவாகிய தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவனாக இருக்கிறேன். (எபேசி 1:6)

59. கிறிஸ்துவுக்குள் நான் முற்காலத்தில் அந்தகாரத்தில் இருந்தேன். நான் கர்த்தருக்குள் வெளிச்சமாய் இருக்கிறபடியால், வெளிச்சத்தின் பிள்ளையாய் நடந்து கொள்ளுகிறேன். (எபேசி 5:8)

60. கிறிஸ்துவுக்குள் நான் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட்டிருக்கிறேன். (எபேசி 6:10)

61. கிறிஸ்துவுக்குள் அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு அவருக்குள் எனக்கு உண்டாயிருக்கிறது. (எபேசி 1:7)

62. தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே நான் முன் குறிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டேன். (எபேசி 1:12)

63. நான் கிறிஸ்துவுக்குள் விசுவாசியான போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் முத்திரை போடப்பட்டேன். (எபேசி 1:13)

64. கிறிஸ்துவுக்குள் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. (எபேசி 2:21)

65. கிறிஸ்துவுக்குள் நான் அவர் மேல் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டி கட்டப்பட்டு வருகிறேன். (எபேசி 2:22)

66. கிறிஸ்துவுக்குள் எனக்கு அவரைப் பற்றும் விசுவாசத்தில் அவருக்குள் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் எனக்கு உண்டாயிருக்கிறது. (எபேசி 3:12)

67. கிறிஸ்துவுக்குள் எனக்கு அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு எனக்கு உண்டாயிருக்கிறது. (கொலோ 1:13)

68. கிறிஸ்துவுக்குள் அறிவு ஞானம் என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் பெற்றிருக்கிறேன். (கொலோ 2:3)

69. கிறிஸ்துவுக்குள் நான் அவரைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்து விட்டதினால் கையால் செய்யப்படாத விருத்த சேதனத்தைப் பெற்றிருக்கிறேன். (கொலோ 2:11)

70. கிறிஸ்துவுக்குள் நான் அன்புகூர்ந்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவனாய் களி கூறுகிறேன். (I பேதுரு 1:8)

71. கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியானது எனக்குள் வெளிப்படுத்தப்படுகிறது. (ரோமர் 3:21-22)

72. கிறிஸ்துவுக்குள் தேவனுடைய கிருபையும் நீதியாகிய ஈவும் இயேசுக் கிறிஸ்துவின் கிருபையினாலே எனக்குள் அதிகமாய் பெருகியிருக்கிறது. (ரோமர் 5:15,17)

73. கிறிஸ்துவுக்குள் ஜீவனை அடைந்து நான் ஆளுகை செய்வேன். (ரோமர் 5:17b)

74. கிறிஸ்துவுக்குள் நான் நியாயப் பிரமாணத்திற்கு மரித்து கிறிஸ்துவின் சரீரத்தினாலே மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்துவின் மூலமாய் நான் அவரில் ஐக்கியப்பட்டு தேவனுக்குக் கனி கொடுப்பவன் ஆகிறேன். (ரோமர் 7:4)

75. கிறிஸ்துவுக்குள் அவர் மூலமாய் எனக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபைக்காக என்னைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். (I கொரி 1:6)

76. கிறிஸ்துவுக்குள் தேவன் தாமே என்னைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எனக்குத் தந்தார். (II கொரி 5:18)

77. கிறிஸ்துவுக்குள் நான் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளின் படி நீதிமானாக்கப்படாமல் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டேன். (கலா 2:16)

78. கிறிஸ்துவுக்குள் நான் அவருடைய தயவுள்ள சித்தத்தின் படியே என்னை இயேசுக் கிறிஸ்துவின் மூலமாய் தமக்கு சுவிகாரப் புத்திரனாகும்படி முன் குறித்திருக்கிறார். (எபேசி 1:6)

79. கிறிஸ்துவுக்குள் தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி நான் நீதியின் கனிகளால் நிறைந்திருக்கிறேன். (பிலிப் 1:10)

80. கிறிஸ்துவுக்குள் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி என்னுடைய குறைவையெல்லாம் மகிமையிலே நிறைவாக்குவார். (பிலிப் 4:19)

81. கிறிஸ்துவுக்குள் இயேசுக் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே தமது மிகுந்த இரக்கத்தின்படியே என்னை மறுபடியும் ஜெநிப்பித்தார். (I பேதுரு 1:4)

82. கிறிஸ்துவுக்குள் ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் தேவனுக்கேற்ற பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகக் கட்டப்பட்டு வருகிறேன். (I பேதுரு 2:5)

83. கிறிஸ்துவுக்குள் நித்திய மகிமைக்கு அழைக்கப்பட்டு என்னைச் சீர்படுத்தி ஸ்திரப்படுத்தி பலப்படுத்தி நிலை நிறுத்துகிறார். (I பேதுரு 5:10)

84. கிறிஸ்துவுக்குள் நான் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும் சம்பூரணமாக்கப்பட்டிருக்கிறேன். (I கொரி 1:5)

85. கிறிஸ்துவுக்குள் நான் உண்டாயிருக்கிறேன். அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது. (I கொரி 8:6)

86. கிறிஸ்துவுக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும் அவருக்கென்று அவராலே சிருஷ்டிக்கப்பட்டது. நானும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டு இருக்கிறேன். (கொலோ 1:16)

87. கிறிஸ்துவுக்குள் எல்லாம் அவருக்குள் நிலைத்திருக்கிறது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். கிறிஸ்துவே எனக்குத் தலையாயிருக்கிறார். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கிறார். (I கொரி 1:17-18)

88. கிறிஸ்துவுக்குள் நான் அவருடன் ஒப்புரவாகி இருக்கிறேன். அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார். (கொலோ 1:20)

89. கிறிஸ்துவுக்குள் நான் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். (கொலோ 3:17)

90. கிறிஸ்துவுக்குள் தேவன் என்னை முற்று முடிய இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார். ஏனென்றால் நான் அவர் மூலமாய் தேவனிடத்தில் சேர்ந்து இருக்கிறபடியால் அவர் எனக்கா வேண்டுதல் செய்யும்படிக்கு உயிரோடிருக்கிறார். (எபி 7:25)

91. கிறிஸ்துவுக்குள் நான் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை எப்பொழுதும் தேவனுக்குச் செலுத்துகிறேன். (எபி 13:15)

92. கிறிஸ்துவுக்குள் நான் தேவனை விசுவாசிக்கிறேன். அவர் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி அவருக்கு மகிமையைக் கொடுத்து என்னுடைய விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி செய்தார். (I பேதுரு 1:21)

93. கிறிஸ்துவுக்குள் என் பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி அதை தம்மாலே தாம் எனக்காக உண்டுபண்ணினார். (எபி 1:3)

94. கிறிஸ்துவுக்குள் என் பாவங்கள் நீக்கப்பட்டன. ஏனென்றால் தம்மைத் தாமே அதற்காகப் பலியாக்கினார். (எபி 9:26)

95. கிறிஸ்துவுக்குள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் நித்திய மீட்பை அடைந்துவிட்டேன். (எபி. 9:12)

96. கிறிஸ்துவுக்குள் எனது மனச்சாட்சி செத்த கிரியைகளற இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் சுத்திகரிக்கப்பட்டது. எனவே நான் இப்போது ஜீவனுள்ள தேவனுக்காக சேவை செய்வேன். (எபி. 9:14)

97. கிறிஸ்துவுக்குள் நான் அழைக்கப்பட்டு, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவின் மூலம் நித்திய சுதந்திரத்திற்கான வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொண்டேன். (எபி. 9:15)

98. கிறிஸ்துவுக்குள் நான் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணின படியால் அவருடைய இரத்தத்தினாலே எனக்கு தைரியம் உண்டாயிருக்கிறது. (எபி 10:19-20)

99. கிறிஸ்துவுக்குள் அவர் ஒளியில் இருக்கிறது போல நானும் ஒளியிலே நடக்கிறேன். நானும் ஒருவரோடு ஒருவருடன் ஐக்கியப்பட்டிருக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி என்னை சுத்திகரிக்கிறது. (I யோவான் 1:7)

100. கிறிஸ்துவுக்குள் எனக்கு இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்றிருக்கிறேன். அதில் நிலை கொண்டிருந்து தேவ மகிமையை அடைவேன் என்ற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறேன். (ரோமர் 5:2)

101. கிறிஸ்துவுக்குள் அவருடைய மரணத்தினாலே ஒப்புரவாக்கப்பட்டேன். இயேசுக் கிறிஸ்துவுடைய உயிர்த் தெழுதலினாலே இரட்சிக்கப்பட்டும் இருக்கிறேன். (ரோமர் 5:10-11)

102. கிறிஸ்துவுக்குள் உலகம் அவரால் எனக்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறது. நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன். (கலா 6:14)

103. கிறிஸ்துவுக்குள் அவராலே சரீரம் (கிறிஸ்துவின் திருச்சபை) முழுவதும் அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய் கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குக் கிரியை செய்கிறபடியே அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாக்குவதற்கு ஏதுவாக சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. (எபேசி 4:16)

104. கிறிஸ்துவுக்குள் நான் கிறிஸ்துவாகிய தலையை எனக்குத் தலையானவரைப் பற்றிக் கொண்டிருக்கிறேன். அதனால் கணுக்களாலும் கட்டுகளாலும் உதவி பெற்று இணைக்கப்பட்டு தேவனிடமிருந்து வரும் தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரத்தோடு பெருகி வளர்கிறேன். (கொலோ 2:19)

105. கிறிஸ்துவுக்குள் நான் இயேசுக் கிறிஸ்துவின் நற்கந்தமாய் இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும் நான் அவ்வாறு நற்கந்தமாய் இருக்கிறேன். (II கொரி 2:15)

106. கிறிஸ்துவுக்குள் கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய் பின் தொடருகிறேன். (பிலிப் 3:12)

107. கிறிஸ்துவுக்குள் என் சரீரம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானது. என் சரீரத்தின் முழு ஆதாரமும் கிறிஸ்துவிடம் இருக்கிறது. (கலா 2:17)

108. கிறிஸ்துவுக்குள் நான் சுதந்திரமாகிய பலனைப் பெற்றுக் கொள்ளுவேன். ஏனென்றால் நான் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்கிறேன். (கொலோ 3:23)

109. கிறிஸ்துவுக்குள் எவ்வளவேனும் இருளில்லை. ஏனென்றால் தேவன் ஒளியாக இருக்கிறார். (I யோவான் 1:5)

110. கிறிஸ்துவுக்குள் நான் அவரிடமிருந்து அபிஷேகம் பெற்றிருக்கிறேன். அது என்னில் நிலைத்திருக்கிறது. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து எனக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது பொய்யல்ல. அது எனக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருக்கிறேன். (I யோவான் 2:27)

111. கிறிஸ்துவுக்குள் நான் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறேன். (ரோமர் 5:1)

112. கிறிஸ்துவுக்குள் என்னுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நான் தேவனைப் பற்றி மேன்மை பாராட்டுகிறேன். (ரோமர் 5:11)

113. கிறிஸ்துவுக்குள் நான் பாவத்திற்கு மரித்தவனாகவும் இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவனாகவும் எண்ணிக் கொள்கிறேன். (ரோமர் 6:11)

114. கிறிஸ்துவுக்குள் தேவனுடைய கிருபை வரமாகிய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறேன். (ரோமர் 6:23)

115. கிறிஸ்துவுக்குள் என்னுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே எனக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (I கொரி 15:57)

116. கிறிஸ்துவுக்குள் என்னை நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். ஆபிரகாமினால் உண்டான ஆசீர்வாதத்தை கிறிஸ்து இயேசுவினால் நான் ஆவியைக் குறித்து சொல்லப்பட்ட விசுவாசத்தினால் நான் பெற்றுக் கொண்டேன். (கலா 3:13-14)

117. கிறிஸ்துவுக்குள் நான் அடிமையாக இனி மேல் இருக்க மாட்டேன். நான் தேவனுக்கு புத்திரனாக இருக்கிறபடியால் நான் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனுமாயிருக்கிறேன். (கலா 4:7)

118. கிறிஸ்துவுக்குள் தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் என்னிடத்தில் வைத்த தயவினாலே என்னில் விளங்கச் செய்தார். (எபேசி 2:7)

119. கிறிஸ்துவுக்குள் நான் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து என் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துகிறேன். எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் என் இருதயத்தையும் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். (பிலிப் 4:6-7)

120. கிறிஸ்துவுக்குள் என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு. (பிலிப் 4:13)

121. கிறிஸ்துவுக்குள் இயேசுக் கிறிஸ்துவின் சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி நான் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறேன். (எபி 10:10)

122. நித்திய உடன்படிக்கையின் இரத்தினாலே கிறிஸ்துவுக்குள் அவரைக் கொண்டு தமக்கு முன்பாக பிரியமானதை என்னிலே நடப்பித்து தமது சித்தத்தின்படி செய்ய சகலவித நற்கிரியையிலும் என்னை சீர் பொருந்தினவனாக ஆக்குவாராக. (எபி 13:20-21)

123. கிறிஸ்துவுக்குள் உலகம் இரட்சிக்கப்படுகிறது. (யோவான் 3:17)

124. கிறிஸ்துவுக்குள் அவருடைய இரத்தத்தினாலே நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிற படியால் கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். (ரோமர் 5:9)

125. கிறிஸ்துவுக்குள் நான் என் மேல் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவனாக இருக்கிறேன். (ரோமர் 8:37)

126. கிறிஸ்துவுக்குள் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பி நான் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு இவ்வளவாய் என் மீது அன்பு கூர்ந்தார். (I யோவான் 4:9)

127.கிறிஸ்துவுக்குள் நான் அவருடனே கூட மரித்தும் இப்பொழுது அவருடன் பிழைத்தும் இருக்கிறேன். (ரோமர் 6:8)

128.கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். (கலா 2:20)

129.கிறிஸ்துவுக்குள், அக்கிரமங்களில் மரித்தவனாக இருந்த என்னை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். (எபேசி 2:5)

130.கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவுடனே உலக வழிபாடுகளுக்கு மரித்திருக்கிறேன். இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைத்தும் இருக்கிறேன். (கொலோ 2:20)

131.நான் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளையே தேடுகிறேன். (கொலோ 3:1; எபேசி 2:6)

132.கிறிஸ்துவுக்குள் - நான் இந்த உலகத்திற்காக மரித்தேன். என் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. (கொலோ 3:3; கலா 6:16)

133.கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நான் சிலுவையில் அவருடன் அறையப்பட்டு அவருடைய பிதாவின் மகிமையிலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நானும் புதிதான ஜீவனுள்ளவனாய் நடந்து கொள்கிறேன். (ரோமர் 6:4)

134.கிறிஸ்துவுக்குள் இனி நான் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக பழைய மனுஷன் அவரோடேகூட சிலுவையில் அறையப் பட்டது. (ரோமர் 6:6)

135.கிறிஸ்துவுக்குள் தம்முடைய சொந்தக் குமாரன் என்றும் பாராமல் எனக்காக அவரை ஒப்புக் கொடுத்தவர். அவரோடே கூட மற்றெல்லாவற்றையும் எனக்கு அருளிச் செய்கிறார். (ரோமர் 8:32)

136.கிறிஸ்துவுக்குள் தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறேன். (II கொரி 13:4)

137.கிறிஸ்துவுக்குள் நான் ஞானஸ்நானத்தில் அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவனாகவும், அதிலே அவர் மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவனாகவும் இருக்கிறேன். (கொலோ 2:12)

138.கிறிஸ்துவுக்குள் என்னை எல்லா பாவங்களிலிருந்தும் மன்னித்து அவரோடே கூட என்னை உயிர்ப்பித்திருக்கிறார். (கொலோ 2:13)

139.கிறிஸ்துவுக்குள் என்னுடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் பொழுது நானும் அவரோடேகூட மகிமையில் வெளிப்படுவேன். (கொலோ 3:4)

140.கிறிஸ்துவுக்குள் அவரோடே கூட பிழைத்தும் அவரோடே கூட ஆளுகையும் செய்வேன். (II தீமோத் 2:11-12)

141.கிறிஸ்துவுக்குள் நான் ஜீவித்து அவரால் போஷித்தும் இருக்கிறேன். இயேசு பிதாவினால் அனுப்பப்பட்டும் அவரால் நேசிக்கப்பட்டும் இருப்பது போல் இருக்கிறேன். (யோவான் 6:37)

142.கிறிஸ்துவுக்குள் நான் பிதாவிடம் வந்தடைகிறேன். ஏனென்றால் அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். (யோவான் 14:6)

143.கிறிஸ்துவுக்குள் அவருடைய வசனங்களால் போஷிக்கப்படுகிறேன். அவருடைய வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. அவர் என்னில் நிலைத்திருக்கிறார். நானும் அவரில் நிலைத்திருக்கிறேன். (யோவான் 6:56, 63)

144.கிறிஸ்துவுக்குள் அவர் பிதாவிலும் இருக்கிறார் என்று அறிகிறேன். நான் அவரிலும் அவர் என்னிலும் இருக்கிறார். (யோவான் 14:20)

145.கிறிஸ்துவுக்குள் நான் மிகுந்த கனிகளைக் கொடுக்கிறேன். அவரே திராட்சைச் செடி நான் அவரில் இருக்கும் ஒரு கொடி. நான் அவரிலும் நிலைத்திருக்கிறேன். அவர் என்னிலும் நிலத்திருக்கிறார். அவரையல்லாமல் என்னால் ஒன்றுஞ் செய்யக்கூடாது. (யோவான் 15:4-5)

146.நான் கிறிஸ்துவுக்குள் கேட்டுக் கொள்வதெதுவோ அது எனக்குச் செய்யப்படுகிறது. ஏனென்றால் நான் அவரிலும் அவர் என்னிலும் நிலைத்திருக்கிறோம். அவருடைய வார்த்தைகளும் என்னில் நிலைத்திருக்கிறது. (யோவான் 15:7)

147.கிறிஸ்துவுக்குள் எனக்கு சமாதானம் உண்டாயிருக்கிறது. உபத்திரவத்தில் நான் திடன் கொள்ளுகிறேன். ஏனென்றால் கிறிஸ்து உலகத்தை ஜெயித்தார். (யோவான் 16:33)

148.கிறிஸ்துவுக்குள் பிதா இயேசுவில் அன்பாயிருப்பது போல நானும் அவ்வாறு நேசிக்கப்படுகிறேன். அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறேன். (யோவான் 15:9)

149.கிறிஸ்துவுக்குள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பரிசுத்த ஆவியானவரால் கழுவப்பட்டேன். பரிசுத்தமாக்கப் பட்டேன். நீதிமானாக்கப்பட்டேன். (I கொரி 6:11)

150.கிறிஸ்துவுக்குள் இயேசு செய்கிற கிரியைகளை செய்கிறேன். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வேன். ஏனென்றால் இயேசு பிதாவினிடத்தில் போயிருக்கிறார். எனக்கு சத்திய ஆவியானவராகிய பரிசுத்த ஆவியை அருளிச் செய்திருக்கிறார். அவர் என்னில் நித்திய காலமாக நிலைத்திருக்கிறார். (யோவான் 14:12, 16-17)

(7) வாழ்க்கை வளத்துக்கான தியானங்கள்

1. தேவன் என்னை ஆசீர்வதித்து என் மூலமாக அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். நான் பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்கிறேன். நான் ஆபிரகாமுக்கு புத்திரனாகிய ஆபிரகாமுக்குள்ள ஆசீர்வாதங்கள் என் மேல் வருகிறது. (ஆதி 12:2-3; கலா 3:7,14)

2. வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனால் எனக்கு ஆசீர்வாதம் உண்டாயிருக்கிறது. (ஆதி 14:19)

3. தேவன் எனக்குக் கேடகமும் மகா பெரிய பலனுமாய் இருக்கிறார். (ஆதி 15:1)

4. கர்த்தர் என்னோடிருக்கிறார். என்னைக் காரிய சித்தியுள்ளவனாய் ஆக்குகிறார். நான் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணுகிறார். (ஆதி 39:2-3)

5. தேவனுடைய வார்த்தை என் வாயை விட்டுப் பிரியாதிருக்கிறது. அதில் எழுதியிருக்கிற படியெல்லாம் நான் செய்யக் கவனமாயிருக்கிறேன். இரவும் பகலும் அதைத் தியானித்து கொண்டிருக்கிறேன். அப்பொழுது நான் என்னுடைய வழியை வாய்க்கப் பண்ணுகிறேன். நான் நல்ல ஜெயமும் பெறுவேன். (யோசுவா 1:8)

6. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருக்கிறேன். அதில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அதில் தியானமாய் இருக்கிறேன். நான் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராத மரத்தைப் போல் இருக்கிறேன். நான் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங் 1:2-3)

7. கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார். நான் தாழ்ச்சி அடையேன். (சங் 23:1)

8. நான் கர்த்தருக்குப் பயந்திருக்கிறேன். எனக்கு ஒரு நன்மையும் குறைவு படுவதில்லை. சிங்கக் குட்டிகள் தாழ்ச்சி அடைந்து பட்டினியாய் இருக்கும். நான் கர்த்தரைத் தேடுகிறேன். எனக்கு ஒரு நன்மையும் குறைவுபடுவதில்லை. (சங் 34:9-10)

9. நான் கர்த்தருடைய ஊழியக்காரன். அவர் என்னுடைய சுகத்தில் மகிழ்ச்சி அடைகிறார். (சங் 35:27)

10. நான் கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாய் இருக்கிறேன். அவர் என் இருதயத்தின் வேண்டுதல்களை எனக்கு அருளிச் செய்வார். (சங் 37:4)

11. இது கர்த்தர் உண்டு பண்ணின நாள். இதிலே களிகூர்ந்து மகிழ்கிறேன். கர்த்தர் என்னை இரட்சித்து அதில் களிகூர்ந்து மகிழ்கிறார். காத்தர் என்னை இரட்சித்து காரியத்தை வாய்க்கப் பண்ணுகிறார். (சங் 118:24-25)

12. நான் கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளில் பிரியமாயிருக்கிறேன். ஆஸ்தியும் ஐசுவரியமும் என் வீட்டில் இருக்கிறது. (சங் 112:1,3)

13. நான், என்னுடைய பொருளாலும், எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணுகிறேன். என் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பி இருக்கிறது. (நீதி 3:9-10)

14. நான் கர்த்தருடைய ஞானத்தை நேசிக்கிறேன். ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும் நீதியும் என்னிடத்தில் இருக்கிறது. நான் ஐசுவரியத்தை சுதந்தரிக்கிறேன். என் பொக்கிஷங்கள் எல்லாம் நிரம்பி இருக்கிறது. (நீதி 8:12,18,21)

15. கர்த்தர் என்னை பசியினால் வருந்த விடார். நான் சுறுசுறுப்புள்ளவன். அவர் எனக்கு செல்வத்தை உண்டாக்குகிறார். (நீதி 10:3-4)

16. என்னுடைய சகல பிரயாசத்திலும் பிரயோஜனமுண்டு. நான் கர்த்தருக்குள் ஞானவானாய் இருக்கிறேன். அவர் என்னை ஐசுவரியத்தால் முடி சூட்டிகிறார். (நீதி 14:23-24)

17. தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம். (நீதி 22:4)

18. நான் மனம் பொருந்தி கீழ்படிகிறேன். நான் தேசத்தின் நன்மையைப் புசிக்கிறேன். (ஏசாயா 1:19)

19. நான் தேவனுடைய ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களையெல்லாம் தேவனுடைய பண்டக சாலையில் கொண்டு வருகிறேன். அவர் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் என் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப் பண்ணுகிறார். அது என்னிலிருந்து பொங்கி பெருகி மற்றவர்களிடம் ஓடுகிறது. என்னிமித்தம் பட்சிக்கிறவனை தேவன் கண்டிக்கிறார். (மல்கியா 3:10-11)

20. நான் முதலாவதாக தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறேன். இவைகள் எல்லாம் எனக்குக் கூட கொடுக்கப்படுகிறது. (மத் 6:33)

21. நான் கொடுக்கிறேன். அது எனக்குத் திரும்பக் கொடுக்கப்படும். அமுக்கிக், குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து என் மடியிலே போடப்படும். நான் எந்த அளவினால் அளக்கிறேனோ அந்த அளவினால் எனக்கும் அளக்கப்படும். (லூக்கா 6:38)

22. நான் (கிறிஸ்துவுக்கா) இயேசுவுக்காகவும், சுவிசேஷத்திற்காகவும் யாவற்றையும் விட்டிருக்கிறேன். இம்மையிலே துன்பங்களோடே கூட நூறத்தனையாக யாவற்றையம் மறுமையிலே நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்வேன். (மாற்கு 10:30)

23. நான் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவானாகும்படிக்கு என்னிமித்தம் அவர் தரித்திரர் ஆனார். (II கொரி 8:9)

24. நான் பெருக விதைத்து பெருக அறுவடை செய்கிறேன். நான் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல. மனதில் நியமித்தபடி உற்சாகமாய் கொடுக்கிறேன். தேவன் என்னிடத்தில் பிரியமாயிருந்து சகல வித கிருபையையும் என்னில் பெருகச் செய்து, நான் எல்லாவற்றிலும் சம்பூர்ணமாயிருக்கும்படியாக சகல வித கிருபையையும் என்னில் பெருகச் செய்கிறார். (II கொரி 9:6-8)

25. கிறிஸ்து தரித்திரத்தின் சாபத்திலிருந்து என்னை இரட்சித்திருக்கிறார். (கலா 3:13; உபாகமம் 28 அதி)

26. நான் கொடுக்கல் வாங்கல் ஊழியத்தில் பங்கெடுத்துக் கொள்கிறேன். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படியே என் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். (பிலிப் 4:15-16, 18-19)

27. என் ஆத்துமா வாழ்கிறது போல நான் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாக இருப்பது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. (3 யோவான் 2)

(8)பிள்ளைகளுக்காக தியானங்கள்

1. என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டபடியே என் தகப்பனையும் என் தாயையும் கனம் பண்ணுகிறேன். அதனால் என் நாட்கள் நீடித்திருக்கிறது. நான் நன்றாயும் இருக்கிறேன். (உபாகமம் 5:16)
2. நான் வளருகிறேன்; கர்த்தர் என்னை ஆசீர்வதிக்கிறார். கர்த்தருடைய ஆவி என் ஜீவனில் ஏவத் துவங்குகிறது. (நியா 13:24-25)
3. நான் கர்த்தருக்குப் பணிவிடை செய்து கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக வளருகிறேன். (I சாமு 2:11)
4. நான் பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும், மனுஷருக்கும் பிரியமாக நடந்து கொள்கிறேன். (I சாமு 2:26)
5. நான் என் தகப்பன் புத்தியைக் கேட்டும், என் தாயின் போதகத்தைத் தள்ளாமலும் இருக்கிறேன். ஏனென்றால் அவைகள் என் சிரசுக்கு அலங்காரமான முடியும் என் கழுத்துக்குச் சரப்பணியுமாயும் இருக்கிறது. (நீதி 1:8-9)
6. நான் என் தகப்பனுடைய போதகத்தைக் கேட்டு புத்தியை அடையும்படி கவனிக்கிறேன். ஆவிக்குரிய காரியங்களை உணர்த்துவிக்கவும் வியாக்கியானம் பண்ணவும் புத்தியான அறிவை பெறுகிறேன். (நீதி 4:1)
7. நான் ஞானமுள்ள மகனாயிருக்கிறேன். என் பெற்றோரைச் சந்தோஷப்படுத்துகிறேன். நான் ஞானத்தில் பிரியப்படுகிறேன். என் பெற்றோரை மகிழப் பண்ணுகிறேன். (நீதி 15:20; 29:3)
8. நான் என் நடக்கையினால் என் செய்கை சுத்தமோ அல்லது செம்மையோ என்பது விளங்கும். (நீதி 20:11)
9. நான் கர்த்தருக்குள் நடக்கும் வழியில் நடத்தி பயிற்றுவிக்கப்படுகிறேன். என்னுடைய முதிர் வயதிலும் அதை விட்டு விலகாதிருப்பேன். (நீதி 22:6)
10. என்னைப் பெற்ற தகப்பனுக்கு செவி கொடுக்கிறேன். என் தாய் வயது சென்றவளாகும் போது அவளை அசட்டை பண்ணமாட்டேன். (நீதி 23:22)
11. நான் வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்தும் இருக்கிறேன். தேவனுடைய கிருபை என் மேல் இருக்கிறது. (லூக்கா 2:40)
12. நான் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தி அடைகிறேன். (லூக்கா 2:52)
13. நான் கர்த்தருக்குள் என் பெற்றோருக்குக் கீழ்படிகிறேன். இது நியாயம். எனக்கு நன்மை உண்டாயிருக்கிறது. பூமியில் என் வாழ்நாள் நீடித்திருக்கிறது. (எபேசி 6:1-3)
14. நான் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கப்பட்டிருக்கிறேன். (எபேசி 6:4)
15. நான் கர்த்தருக்குள் எல்லாக் காரியத்திலேயும் என் பெற்றோருக்குக் கீழ்படிகிறேன். இது கர்த்தருக்குப் பிரியமானது. (கொலோ 3:20)
16. என் இளமையைக் குறித்து ஒருவரும் என்னை அசட்டை பண்ணாதபடிக்கு என் வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்கிறேன். (I தீமோத் 4:12)
17. என் சிறு வயது முதல் வேத எழுத்துக்களை அறிந்திருக்கிறேன். அதனால் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே நான் இரட்சிப்புக் கேற்ற ஞானமுள்ளவனாக ஆகிறேன். (II தீமோத் 3:15)

ஜெப நிலையில் ஓர் தீர்க்கதரிசி

இந்த ஜெபமானது இன்றைய நாளிலும் நமக்கு ஓர் சவாலாக இருப்பதாக!!!!

இது எ.டயிள்யூ. டோஸர் என்று ஒரு தேசத்திற்காக அழைக்கப்பட்ட மனிதனுடைய ஜெபமாகும். அவர் பிரதிஷ்டை பண்ணப்பட்ட நாளில் இந்த ஜெபம் கர்த்தருக்கு அவரால் ஏறெடுத்து சொல்லப்பட்டதாகும். மூப்பர்களும் ஊழியர்களும் ஜெபித்து அவர் தலையின் மேல் கை வைத்து பிரதிஷ்டை செய்த பின்னர் ஓர் அந்தரங்கமான இடத்தில் ஏகாந்தமான அமைதியில் தனது மீட்பரை சந்திப்பதற்காக அவருடைய நன்மையை விரும்பும் சகோதரர்களுங்கூட கூட்டிச் செல்லாக்கூடாத தூரமான ஓர் இடத்தில் அவர் அமர்ந்து ஜெபித்தாவது:

“ஓ! கர்த்தாவே நான் உமது சத்தத்தைக் கேட்டு அச்சம் அடைந்தேன். என்னை பாதிக்கும் அபாயகரமானதோர் நேரத்தில் இந்த பயபக்திக்குரிய கடமைக்கு என்னை அழைத்திருக்கிறீர். எல்லா தேசங்களையும் பூலோகத்தையும், பரலோகத்தையம் அசைக்கப் போகிறீர். உம்மால் அசைக்கப் படாதவைகள் மாத்திரம் நிலைத்திருக்கும்.

ஆ கர்த்தாவே என்னுடைய ஆண்டவரே, உம்முடைய வேலைக்காரனாகிய என்னைக் கனப்படுத்துவதற்காக இறங்கியிருக்கிறீர். ஆரோனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட அழைப்பைப் போல அவனைத் தவிர வேறெந்த மனுஷனாவது இந்த கனத்தைப் பெற மாட்டான். இருதயக் கடினமுடையவர்களுக்கும் செவி கொடாத மற்றுமுள்ளவர்களுக்கும் என்னை ஒரு தூதுவனாக அர்ப்பணித்திருக்கிறீர். அவர்கள் பெரிய எஜமானராகிய உம்மை புறக்கணித்து விட்டார்கள். ஆகிலும் ஊழியக்காரனாகிய என்னையும் வரவேற்பார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது.

என் தேவனே, என்னுடைய பலவீனத்தைக் குறித்தோ அல்லது அந்த வேலைக்கு என்னுடைய தகுதியின்மையை குறித்தோ நான் துக்கித்துப் புலம்பி என் நேரத்தை வீணாக்க மாட்டேன். இந்தப் பொறுப்பு என்னுடையதல்ல. உம்முடையதே. உன்னை அறிந்திருக்கிறேன். உன்னை பிரதிஷ்டை செய்திருக்கிறேன். உன்னைப் பரிசுத்தமாக்கினேன் என்று சொல்லியிருக்கிறீர். மேலும் நான் அனுப்புகிற இடமெங்கும் நீ போக வேண்டும். நான் உனக்கு கட்டளையிடுவதையெல்லாம் நீ பேச வேண்டும் என்றும் கூறியிருக்கிறீர். உம்மோடு விவாதம் செய்ய நான் யார்? உம்முடைய மகத்தான அழைப்பை கேள்வி கேட்க அற்ப மனுஷனாகிய நான் யார்? இந்தத் தீர்மானம் என்னுடையதல்ல, உம்முடையதே யாகும். அப்படியே ஆகட்டும், கர்த்தாவே உம்முடைய சித்தமேயன்றி, என் சித்தமல்ல, நிறைவேற்றப்படுவதாக.

தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் ஆனவர்களின் தேவனே, நான் உம்மைக் கனப்படுத்தும் காலம் வரைக்கும் என்னை நீர் கனப்படுத்துவீர் என்பதை நன்றாக அறிந்திருக்கிறேன். ஆகவே இந்த பயபக்திக்குரிய பிரதிக்னையை என்னுடைய வருங்காலத்திலும் உழைப்பிலும் அது லாபமோ நஷ்டமோ, ஜீவனோ மரணமோ எதுவாக இருந்தாலும் அதைக் கனப்படுத்தவும் என் ஜீவிய காலம் முழுவதும் அந்த பிரதிக்னையை கைவிடாது கடைபிடித்துக் கொள்ளும்படியாக உதவி செய்து அருள் புரிவீராக.

ஆ கர்த்தாவே, தேவனே, நீர் கிரியை செய்ய வேண்டிய காலம் வந்தது. சத்துருவானவன் உமது மேய்ச்சல் நிலங்களில் பிரவேசித்திருக்கிறான். ஆடுகள் எல்லாம் பீறுண்டு சிதறடிக்கப்பட்டிருக்கின்றன. பொய்யான மேய்ப்பர்கள் அதிகமாக பெறுகி ஆபத்தைக் கண்டு மறுதலித்தும் உமது மந்தையைச் சூழ்ந்திருக்கிற ஆபத்தைக் குறித்து எள்ளி நகைக்கிறார்கள். இந்தக் கூலியாட்களால் ஆடுகள் வஞ்சிக்கப்பட்டு இரக்கமுள்ள விசுவாச பக்தியுடன் பின் செல்லும் பொழுது ஓநாய்கள் அவற்றைக் கொன்று நாசமாக்க நெருங்கி வருகின்றன. எனக்கு இந்த சத்துரு ஊடுருவியிருப்பதைக் கண்டு பிடித்துக் கொள்ளும் கூர்மையான கண்களையம் உண்மையான சிநேகிதனிலிருந்து பொய்யான நண்பனை வேறுபடுத்திப் புரிந்து கொள்ளும் ஞானத்தையும் எனக்குத் தர வேண்டுமாய் உம்மை கெஞ்சிக் கேட்கிறேன். நான் பார்த்து அறிவது என்னவென்பதை உண்மையாய் அறிக்கை செய்யும் தைரியத்தையும் தரிசனத்தையும் தந்தருளும். உம்முடைய சொந்த சத்தத்தைப் போல என்னுடைய சத்தமும் ஒலிக்கவும் அதனால் நோய் வாய்ப்பட்ட ஆடுகளும் அந்த சத்தத்தை அறிந்து கொண்டு உம்மைப் பின்பற்றி வர கிருபை புரியும்.

கர்த்தராகிய இயேசுவே, ஆவிக்குரிய ஆயத்தத்திற்காக உம்மிடம் நான் வருகிறேன். என் மேல் உமது கரத்தை வையும். புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் ஆவியினால் என்னை அபிஷேகம் பண்ணும். நான் ஒரு மத வேதபாரகன் ஆகி அதனால் என் தீர்க்கதரிசன அழைப்பை இழந்து விடாதபடி தடுத்தாட்கொள்ளும். நவீன காலத்து மத போதகர்களின் முகத்திற்கெதிரே குறுக்காக நிற்கும் சாபமாகிய விட்டுக் கொடுக்கும் தன்மை, பிறரைப் போல் நாமும் செய்தல், கொள்கை பிடிப்பு ஆகியவற்றிலிருந்து என்னைக் காப்பாற்றும். ஒரு திருச்சபையை அதன் பரிமாணம், செல்வாக்கு வருடாந்திரக் காணிக்கைத் தொகை ஆகியவற்றைக் கொண்டு இடை போடும் தவறிலிருந்தும் என்னை இரட்சியும்.

நான் ஒரு அபிவிருத்தி செய்பவன் அல்ல, ஒரு தீர்க்கதரிசி என்றும், ஒரு மதத்தின் மேற்பார்வையாளர் அல்ல, ஒரு தீர்க்கதரிசி என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும்படி உதவி செய்வீராக. மாம்சத்தின் இச்சையான பேராசையிலிருந்து என் ஆத்துமாவை சொஸ்தமாக்கும் புகழும் பெயரும் அடையும்படி உண்டாகிற அரிப்பிலிருந்து இரட்சியும். பொருளுடமைகளுக்கான அடிமைத்தனத்திலிருந்து காப்பாற்றும். வீட்டில் அடைந்து கொண்டு வீணான அலுவல்களில் ஈடுபட்டு கால விரயம் செய்யாதபடி தடுத்துக் கொள்ளும். உம்முடைய பயங்கரத்தை என் மேல் வையும். ஓ தேவனே என்னை ஜெப வீட்டிற்கு விரட்டி இட்டுச் சென்று அங்கே துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இந்த பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் போராடி வெற்றி பெறக் கிருபை செய்யும். பெருந் தீனியிலிருந்தும் ஆகாத தூக்கத்திலிருந்தும் காத்துக் கொள்ளும். சுய கட்டுப்பாட்டை எனக்குப் போதித்து இயேசுக் கிறிஸ்துவின் நல்லதோர் போர் சேவகனாக இருக்கும்படி அருள் பாலிப்பீராக.

இந்த ஜீவியத்தில் கடின உழைப்பையும் சிறு வெகுமதியும் ஏற்றுக் கொள்கிறேன். நான் எப்படிப்பட்ட இலகுவான இடத்தையும் கேட்கவில்லை. ஜீவியத்தை எளிதாக்கும் எந்த விதமான சிறிய வழிகளுக்கும் கண் கொண்டு பாராதவனாக இருப்பேனாக. மற்றவர்கள் எளிதான வாதைகளைத் தெரிந்து கொள்வார்களானால் அவர்களைக் கடினமாகத தீர்ப்புச் செய்யாமல் கடினமான வழியைத் தெரிந்து கொள்ள முயற்சிப்பேனாக. நான் எதிர்ப்பை எதிர் நோக்கியும் அது வரும் பொழுது அதை அமைதியாக எதிர் கொள்வேனாக. சில சமயங்களில் உமது ஊழியக்காரருக்கு நேரிடுவது போல உமது அன்புள்ள ஜனங்களால் நன்றி கலந்த வெகுமானங்கள் என் மீது சுமத்தப்படுமானால் எனக்குத் துணை நின்று அதற்கு பின்வரும் நாசத்திலிருந்து என்னைக் காப்பாற்றும். இந்த மாதிரி நான் பெற்றுக் கொள்வது எதுவோ அது என் ஆத்துமாவுக்கு தீங்கு விளைவிக்காமலும் என் ஆவிக்குரிய வல்லமையை குறைத்து கொள்ளாமலும் இருக்க எனக்கு போதியும்.

உம்முடைய அநுகூலமான தெய்வச் செயலால் உம்முடைய திருச்சபையிலிருந்து நான் கனத்தை பெற்றுக் கொள்வேனாகில் அந்த மணி நேரத்தில் தானே உமது இரக்கங்களில் சிறிதேனும் பெற்றுக் கொள்ள பாத்திரனல்ல என்பதை நான் மறந்து விடக் கூடாது. நான் என்னை அறிந்திருப்பது போல பிறரும் என்னைப் பற்றி அந்நியோந்நியமாகத் தெரிந்திருப்பார்களேயானால் அந்த கனமான மரியாதையை நிறுத்தி வைத்து அதைப் பெற்றுக் கொள்ள அதிகமான தகுதியுள்ளவர்களுக்கு அதைக் கொடுப்பார்களாக.

இப்பொழுது பரலோகத்திற்கும் பூலோகத்துக்கும் கர்த்தாவே என்னுடைய மீதியான நாட்களை உமக்கு அர்ப்பணிக்கிறேன். அது உமது சித்தத்தின்படி அநேக நாட்களோ அல்லது சில நாட்களாகவோ இருப்பதாக. நான் மகா பெயர் பெற்றவர்களுடனோ அல்லது வறுமையும் தாழ்ந்தவர்களுக்கு ஊழியம் செய்வதோ அதற்கான தெரிந்தெடுத்தல் எனக்கு உரியதல்ல. என்னால் முடிந்தாலும் அதைத் தாக்கம் செய்யும்படி ஆக்க மாட்டேன். நான் உமது ஊழியக்காரன் உமது சித்தம், நான் செய்வேனாக. உம்முடைய சித்தம் எனக்கு பதவி, செல்வம், புகழ் ஆகியவற்றை விட இனிமையானது. நான் பூமியிலும் பரலோகத்திலும் இருக்கும் எல்லாவற்றையும் விட மேலாகத் தெரிந்து கொள்ளுவேன்.

நான் உம்மால் தெரிந்து கொள்ளப்பட்டு உன்னதமானதோர் பரிசுத்த அழைப்பால் கௌரவிக்கப்பட்டாலும் நான் ஒரு தூசியும் சாம்பலுமான மனிதன் என்பதை நான் மறக்கும்படி அனுமதியாதிரும். சாதாரணமான தவறுகளையுடைய சமானியன் என்னும் மனித இனத்தை கொள்ளை கொள்ளும் ஆசா பாசங்கள் நிறைந்த மனிதன் என்பதை நான் மறப்பதில்லை. ஆகவே என் கர்த்தரும் மீட்பருமானவரே நான் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் முயற்சியில் இழைக்கக் கூடிய தவறுகளிலிருந்தும் என்னிலிருந்தும் என்னை இரட்சிப்பீராக.

ஆகவே தேவனே பரிசுத்த ஆவியின் உமது வல்லமையால் என்னை நிரப்பும். உம்முடைய வல்லமையில் நான் சென்று உமது நீதியைக் குறித்து உமக்கு மட்டுமே உரித்தான அதைப் பற்றி பிரகடனஞ் செய்ய உதவுவீராக. நான் அந்நிய காட்டில் உமது இரட்சிப்பின் அன்பைப் பற்றிய என் சாதாரண பலம் தாங்கும் வரைக்கும் அந்த செய்தியை பரப்பவும்படி உதவி செய்யும்.

பிறகு, பிரியமான கர்த்தாவே, நான் வயது சென்று, தளர்ந்து மேற்கொண்டு செல்ல சோர்வுற்றிருக்கும் பொழுதும் எனக்காக ஓர் இடத்தை மேலுலகில் ஆயத்தமாக வைத்து, நித்திய மகிமையிலே உமது பரிசுத்தவான்களில் எண்ணிக்கையில் என்னையும் சேர்த்துக் கொள்ளும். ஆமென்.

உபவாசம் - ஒரு வேதாகமத்து வாழ்க்கை முறை

உபவாசம் என்பது நாம் வேண்டும் என்றே உணவை துறந்து கர்த்தருடன் ஆழமான ஐக்கியத்தில் ஒன்று படவும் ஆவிக்குரிய பெலன் புதுபிக்கப்படவும் கைக் கொள்ளப் படுவதாகும். தேவனுடைய இரயில் எஞ்ஜின் ஜெபம் என்ற தண்டவாளத்தின் மேல் ஓடுமானால் உபவாசம் என்பது அதை எளிதாக இயங்குமாறு பயன்படுத்தப் படும். எண்ணெயாக தண்டவாளத்தின் மேல் அதிக வேகத்துடன் அந்த புகை வண்டியை ஓடச் செய்கிறது. உபவாசித்தல் தேவனுடைய இரயில் எஞ்ஜினை, வேகத்தை அதிகரித்து ஓடச் செய்கிறது.

தேவனுடைய பிள்ளைகளின் ஜெபமானது உபவாசத்துடன் தொடர்ந்து வராவிட்டால் தேவன் சில காரியங்களை நமக்குச் செய்ய மாட்டார். உபவாசத்தில் அந்த தனி நபர் தன்னால் முடிந்து செய்யக் கூடிய தெல்லாவற்றையும் செய்து விட்டதாக உணர்ந்து கொள்வான். ஆகையால் தேவன் தாமே ஒரு அமானுஷ்யமான வழியில் இடைபட வேண்டும். தேவனுடைய வார்த்தையில் உபவாசிக்கும் மனிதர்களைப் பற்றிய உதாரணங்கள் மிகுதியாக இருக்கின்றன. நாம் அவற்றில் சிலவற்றைக் கவனிப்போம்.

உபவாசம் மனந்திரும்புதலுக்கான ஒரு கிரியையாக

அந்த மாதம் இருபத்து நாலாம் தேதியிலே இஸ்ரவேல் புத்திரர் உபவாசம் பண்ணி, இரட்டுடுத்தி, தங்கள் மேல் புழுதியைப் போட்டவர்களாய்க் கூடி வந்தார்கள். இஸ்ரவேல் சந்ததியார் மறு ஜாதியார் எல்லாரையும் விட்டுப் பிரிந்து வந்து நின்று, தங்கள் பாவங்களையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டார்கள். அவர்கள் எழுந்திருந்து தங்கள் நிலையில் நின்றார்கள். அப்பொழுது ஒரு ஜாமம் மட்டும் அவர்களுடைய தேவனாகிய கர்த்தரின் நியாயப் பிரமாணப் புஸ்தகம் வாசிக்கப்பட்டது. பின்பு ஒரு ஜாமம் மட்டும் அவர்கள் பாவ அறிக்கை பண்ணி தங்கள் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டார்கள். (நெகேமியா 9:1-3)

“ஆசாரியர்களே, இரட்டுடுத்திப் புலம்புங்கள். பலிபீடத்தின் பணிவிடைக்காரரே அலறுங்கள். என் தேவனுடைய தொண்டரே, நீங்கள் உள்ளே பிரவேசித்து இரட்டுடுத்தியவர்களாய் இராத் தங்குங்கள். உங்கள் தேவனுடைய ஆலயத்தில் போஜனபலியும் பானபலியும் செலுத்தப் படாமல் நிறுத்தப்பட்டது. பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள். விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். மூப்பரையும் தேசத்தின் எல்லா குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச் செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்”. (யோவேல் 1:13-14)

“ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும், புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களை அல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள். அவர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர். அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாய் இருக்கிறார். ஒரு வேளை அவர் திரும்பி மனஸ்தாபப்பட்டு உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு போஜன பலிகளையும், பான பலிகளையும் செலுத்துகிறதற்கான ஆசீர்வாதத்தைத் தந்தருளுவார். சீயோனிலே எக்காளம் ஊதுங்கள். பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள். விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். ஜனத்தைக் கூட்டுங்கள். சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள். முதியோரைச் சேருங்கள். பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள். மணவாளன் தன் அறையையும் மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக. கர்த்தரின் பணிவிடைக்கரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது, கர்த்தாவே, நீர் உமது ஜனத்தைத் தப்பவிட்டு புற ஜாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கும் உமது சுதந்தரத்தை ஒப்புக் கொடாதிரும். உங்கள் தேவன் என்று புற ஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக.” (யோவேல் 2:12-17)

ஆகையால் நாம் இங்கே உபவாசத்தை துக்கம் அனுசரிக்கும் கிரியையாகப் பார்க்கிறோம். இரட்டுடுப்பு இருதயம் பிளக்கத்தக்க புலம்பல், அழுகை யாவையும் கர்த்தருக்காக. அது கர்த்தரிடம் கூறுவது போன்றது. “தேவனே என்னுடைய தனிப்பட்ட பாவத்திற்கும் மீறுதல்களுக்காகவும்

மனஸ்தாபப்படுகிறேன்." அல்லது "என்னுடைய ஜனத்தின் பாவங்களுக்காகவும் மீறுதல்களுக்காகவும் மனஸ்தாப்படுகிறேன்" என்று கூறுவதாகும். உபவாசித்தல் என்பது தேவனிடம், "கர்த்தாவே என் மனந்திரும்புதலை நோக்கிப் பாரும். நான் செய்த பாவத்தை வெறுக்கிறேன் என்னை மன்னியும்." என்று சொல்வது போலாகும். இஸ்ரவேலர் பென்யமீனியருடன் யுத்தம் செய்தபொழுது ஒரு நாள் இஸ்ரவேலர் தங்களில் இருபத்து இரண்டாயிரம் மனிதர்களை இழந்தனர். ஆனால் வேதாகமம் கூறுவதாவது, "அப்பொழுது இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனங்களும் புறப்பட்டு, தேவனுடைய வீட்டிற்குப் போய் அங்கே கர்த்தருடைய சந்நிதியில் அழுது, தரித்திருந்து சாயங் காலம் மட்டும் உபவாசித்து கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகன பலிகளையும் சமாதான பலிகளையும் இட்டனர்." (நியா 20:26) இந்த செயல் பென்யமீனியருக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரரை மகத்தான வெற்றிக்கு வழி நடத்துகிறது.

சுயத்துக்காக உபவாசித்தல் - தாழ்த்தப்படுதல்

எஸ்றா பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதரில் ஒருவன் ஆவான். இராஜா அவனை கர்த்தருடைய வீட்டை எடுப்பித்துக் கட்டுவதற்காக மிகுதியான செல்வத்தை எடுத்துச் செல்ல அனுமதித்தான். அவன் இராஜாவுடன் இடைபட்டபொழுது அவன் இராஜாவுக்கு தன்னுடைய தேவன் எல்லா உலகத்திற்கும் தேவன் என்பதை விளங்கிக் கொள்ளும்படியாகச் செய்தான். ஆனால் இப்பொழுது திரளான ஐசுவரியத்தைக் கொண்டு போகும் பணியை அவன் சந்திக்க வேண்டியிருந்தது. அவன் திரும்பவும் திரும்பிப் போய் தனக்கு பாதுகாப்பு அளிக்கும்படி கேட்க வேண்டுமா? இல்லை. இது அவனுடைய சாட்சியை பலவீனம் ஆக்கும் என்று அவன் அப்படியாக நினைத்தான். ஆகவே "தனக்குப் பாதுகாப்பு" அவசியம் என்று தீர்மானித்தான். ஆனால் அது தேவன் வல்லவர் என்பதைக் காட்டும் ஒரு சாதகமாக இருக்க வேண்டும். அவன் பிறகு செய்ததென்ன? அவனே அதைத் தெளிவாகக் கூறுகிறான். அப்பொழுது நாங்கள் எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களைத் தாழ்த்துகிறதற்கும் எங்களுக்காகவும், எங்கள் பிள்ளைகளுக்காகவும், எங்கள் சகல பொருள்களுக்காகவும், செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும், நான் அங்கே, அந்த அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறினேன். வழியிலே சத்துருவை விலக்கி, எங்களுக்குத் துணை செய்யும் படிக்கு நான் இராஜாவினிடத்தில் சேவகரையும், குதிரை வீரரையும் கேட்க வெட்கப்பட்டிருந்தேன். எங்கள் தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார் மேலும், அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்றும், அவருடைய வல்லமையும் அவருடைய கோபமும் அவரை விட்டு விலகுகிறவர்கள் எல்லார் மேலும் இருக்கிறதென்றும் நாங்கள் இராஜாவுக்குச் சொல்லியிருந்தோம். அப்படியே நாங்கள் உபவாசம் பண்ணி, எங்கள் தேவனிடத்தில் அதைத் தேடினோம். எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார். (எஸ்றா 8:21-23)

எஸ்றா அந்த சுலபமான வழியைத் தெரிந்து கொள்ளவில்லை. அவன் மனிதன் பேரில் சார்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ள வில்லை. அவன் கர்த்தர் பேரில் சார்ந்திருக்கும் அந்தத் தனிமையான வழியைத் தான் தெரிந்து கொண்டான். முடிவாக அந்த வழியானது தனிமையான வழியாக கர்த்தர் பேரில் முற்றிலும் சார்ந்திருப்பதே அதற்குரிய விலை மதிப்போடு செலுத்தக் கூடியது என்று அவன் அறிந்திருந்தான். அது தான் உபவாசத்துடன் தேவனைத் தேடுவதாகும். ஆனால் எஸ்றா அந்த வழிதான் முடிவானதும் பாதுகாப்பானதுமான வழி என்று அறிந்திருந்தான். தேவனுடன் நிலைத்திருப்பவன் ஒருவன் பெரும்பான்மையுடையவன். ஒரு மனிதன் தவறி விடுவான். ஆனால் தேவன் ஒருக்காலும் தவற மாட்டார். தேவன் அவனிடம் ஒரு நாளும் தவறினதே இல்லை. ஏனென்றால் அவனுடைய மன்றாட்டுக்கு செவி கொடுத்தார். ஆம்! தேவன் தமது பிள்ளைகளின் ஜெபத்திற்கு ஒரு நாளும் செவி கொடாமல் இரார். அதிலும் விசேஷமாக தாழ்மையான உபவாசத்துடன் முழுவதுமாக நனைந்துள்ள ஜெபத்திற்கு கர்த்தராகிய தேவன் தாமே நமக்கு உபவாசித்து ஜெபிக்க உதவி செய்வாராக.

யுத்தத்திற்காக ஓர் உபவாசம் (II நாளா 20:1-30)

மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே கூட அம்மோனியரும் யோசபாத்திற்கு விரோதமாக யுத்தம் பண்ண வந்தார்கள். ஏராளமான ஜனங்கள் அவனுக்கு விரோதமாய் வந்தபடியால் யோசபாத் மிகவம் பயந்தான். அவனுடைய பயத்தில் அவன் மற்ற இராஜாக்களிடம் உதவிக்காக கேட்டிருக்கலாம். ஆனால் வேதாகமம் சொல்லுகிறது "யோசபாத் பயந்து கர்த்தரைத் தேடுகிறதற்கு

ஒருமுகப்பட்டு யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான். அப்படியே யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந்தேட கூடினார்கள். யூதாவிலுள்ள எல்லா பட்டணங்களிலிருந்தும் அவர்கள் கர்த்தரைத் தேட வந்தார்கள்." (II நாளா 20:3-4) தனக்கு மாத்திரம் அல்லாமல் யூதா முழுவதற்கும் உபவாசத்தைப் பிரகடனம் செய்தான். அப்படியே எல்லா யூதா ஜனங்களும் யூதாவிலுள்ள எல்லாப் பட்டணங்களிலிலும் இருந்து அவர்கள் கர்த்தரைத் தேட வந்தார்கள். அவர்கள் உபவாசம் இருந்து கர்த்தரைத் தேடிய பொழுது யோசபாத் கூடின சபையிலே நின்று பகிரங்கமான பிரஸ்தாபித்ததாவது, எங்கள் பிதாக்களின் தேவனாகியக் கர்த்தாவே, பரலோகத்தில் இருக்கிற நீரல்லவோ தேவன்; தேவரீர் ஜாதிகளுடைய இராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர். உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமும் இருக்கிறது. ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக் கூடாது. எங்கள் தேவனாகிய நீர் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாக இந்த தேசத்து குடிகளைத் துரத்தி விட்டு இதை உம்முடைய சிநேகிதனாகிய ஆபிரகாமுடைய சந்ததிக்கு என்றைக்குமென்று கொடுக்கவில்லையா? ஆதலால் அவர்கள் இங்கே குடியிருந்து இதிலே உம்முடைய நாமத்திற்கென்று ஒரு பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டினார்கள். எங்கள் மேல் பட்டயம், நியாய தண்டனை, கொள்ளை நோய், பஞ்சம் முதலான தீமைகள் வந்தால், அப்பொழுது உமது நாமம் இந்த ஆலயத்தில் விளங்குகிறபடியால் நாங்கள் இந்த ஆலயத்திலும் உமது சந்நிதியிலும் வந்து நின்று எங்கள் இடுக்கண்ணில் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில் தேவன் கேட்டு இரட்சிப்பீர் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போதும், இதோ, இஸ்ரவேல் எகிப்து தேசத்திலிருந்து வருகிறபோது, அம்மோன் புத்திரர், மோவாபியர். சேயீர் மலைத் தேசத்தாருடைய சீமைகள் வழியாய் போக நீர் உத்தரவு கொடுக்கவில்லை. ஆகையால் அவர்களை விட்டு விலகி அவர்களை நாசப்படுத்தாதிருந்தார்கள். இப்போதும் இதோ அவர்கள் எங்களுக்கு நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டி தேவரீர் எங்களை சுதந்தரிக்கப் பண்ணின உம்முடைய சுதந்தரத்திலிருந்து எங்களைத் துரத்தி விட வருகிறார்கள். இப்பொழுதும் கர்த்தராகிய எங்கள் தேவனே, அவர்களை நியாயந்தீர்க்க மாட்டீரோ? இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்கு பெலனில்லை. நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்றான். (II நாளா 20:6-12) மெய்யாகவே இது ஒரு ஆழமான ஜெபம். ஆம் இந்த மாதிரியான ஜெபம் சாதாரணமாக ஒரு உபவாசிக்கும் உள்ளத்திலிருந்து வெளிப்படுகிறது.

மெய்யாகவே உபவாசிக்கும், தேடும், ஜெபம் ஏறெடுக்கிற சீஷன் மனிதனுடைய கூடாததையும் தேவனால் கூடும் திறமையையும் அறிக்கை செய்கிறான்.

இது உண்மையாகவே மிகவும் பெரிதான கஷ்டத்திற்குள் இருக்கும். ஒரு உபவாசம் செய்யும் மனிதன் ஏறெடுக்கிற ஜெபமாகும். அவர்கள் பலவீனமானவர்கள் ஆக இருக்கிறோம் என்று சொன்னான். தங்களது சுய சித்தத்தின் மேல் வல்லமையில்லாத மனிதர்கள் மட்டுமே உபவாசித்து தேவனைத் தேடுவார்கள். அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை என்று புலம்பினான். அவன் தனக்கென்று ஒரு முடிவுக்கு வந்தான். தங்களுக்கென்று ஒரு முடிவுக்கு வந்த மனிதர்கள் மட்டுமே உபவாசித்து ஜெபிக்க முடியும். சரீரப் பிரகாரமாக பலமுள்ளவர்களுக்கு உபவாசிக்கவோ, தேவனைத் தேடவோ, ஜெபிக்கவோ அவர்களுக்கு இடமில்லை. அவர்கள் பலமற்று குழப்பமடைந்தவர்களாயிருந்தாலும் அவர்களுடைய கண்கள் கர்த்தரையே நோக்கி இருக்கிறதென்று குரல் கொடுத்தான். அதுவே, தான் விசுவாசமாகும். உபவாசித்து ஜெபிக்கும் ஒரு மனிதன் அந்த மோசமான சந்தர்ப்ப நிலையை உணர்ந்தவனாய் தனது பலமற்ற இயலாத நிலைமையையும் கண்டுணர்ந்து கொண்டு மேலும் தேவன் செயலாற்றல் உடையவர் என்பதை அறிந்து கர்த்தர் பேரில் தன் கண்களை நோக்கி வைத்து பார்க்கிறான். மெய்யாகவே உபவாசிக்கும், தேடும், ஜெபிக்கும் ஓர் சிஷ்யன் மனிதனுடைய இயலாமையையும் தேவனுடைய சர்வ வல்லமையுடைய கூடும் திறனையும் அறிக்கை செய்கிறான். நாளானாது சமீபவித்து வருகின்றபடியினால், தேவன் இப்படிப்பட்ட நபர்களை சபையிலே எழுப்புவராக.

ஜனங்கள் தேவனை நோக்கி முறையிடும்போது, அவர்கள் முழு விருப்பத்துடன் ஈடுபடுகின்றார்கள். யாவரும் அதிலே ஈடுபாடுகின்றார்கள். அவர்களுடைய மனைவிகள், பிள்ளைகள், அவர்களுடைய சிறியவர்கள் தேவனுக்கு முன்பாக நிற்கின்றார்கள். இது ஒரு முழு கூட்டு ஜெபம். கிரியைக்காக உபவாச தேடுதலாகும். ஒரு மனிதன் உபவாசித்து, ஜெபிக்கும் பொழுது பிசாசானவன் சலனமடைகிறான். ஒரு சில பரிசுத்தவான்கள் உபவாசித்து ஜெபிக்கும்பொழுது நரகம் அசைக்கப்

படுகிறது. ஆனால் தேவன் அந்த சபை முழுவதுமே உபவாசித்து தேடி ஜெபிக்கும் நாளுக்காக காத்திருக்கிறார். அப்பொழுது தான் நரகமே ஒன்றுமில்லாமல் ஒழிந்து போகும். தேவனுடைய சரீரமாகிய திருச்சபையில் பலவேறு அங்கங்களை நடத்திச் சென்று உழைத்து கிரியை செய்பவர் அனைவரும் அந்த நாளின் விடிவுவிற்காக கிரியை செய்வார்களாக.

திரளான மக்களால் எடுத்துக் கொள்ளப்படும் உபவாசம், தேடுதல் ஆகியவை கர்த்தருடைய ஆவியானது யகாசியேல் மீது இறங்கி தீர்க்கதரிசனம் உரைத்தாவது, "இந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார். இந்த யுத்தம் உங்களுடையதல்ல. தேவனுடையது" என்றான். (II நாளா 20:15) இப்பொழுது யுத்தம் கை மாறியது. முன்னர் அது யோசாபாத்துக்கும் ஜனங்களுக்கும் உரிய யுத்தமாயிருந்தது. இப்பொழுதோ அது தேவனுடைய யுத்தம். இந்த மாற்றத்துக்கு காரணமானது என்ன? உபவாசம்!!! தேடுதல்!!! ஜெபித்தல்!!! நானோ அது உபவாசம் தேடுதல், ஜெபித்தல் ஆகியவை எந்த ஒரு தனி நபரையும் அல்லது ஒரு மக்கள் கூட்டத்தையும் எதிர் நோக்கி இருக்கும் யுத்தத்தை மாற்றி கர்த்தருடைய யுத்தமாக மாறும். யுத்தமானது கரமாற்றம் அடையும் பொழுது நாம் இளைப்பாறலாம். ஏன் என்றால் தேவன் தான் எல்லாம் செய்ய வல்லவர். இந்த யுத்தத்தை பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல. நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். (II நாளா 20:17) மேலும் மெய்யாகவே அவர்கள் யுத்தம் பண்ண அவசியமே இல்லை. தேவனே யுத்தம் பண்ணி ஜெயம் பெற்றார். வேதாகமம் சொல்கிறதாவது, அவர்கள் பாடி துதி செய்யத் தொடங்கின போது யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத் தேசத்தாரையம் ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப் பண்ணினதால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள். யூதா மனுஷர் வனாந்தரத்திலுள்ள சாமக் கூட்டண்டையில் வந்து, அந்த ஏராளமான கூட்டமிருக்கும் திக்கை நோக்குகிற போது, இதோ, அவர்கள் தரையிலே விழுந்து கிடக்கிற பிரேதங்களாகக் கண்டார்கள். ஒருவரும் தப்பவில்லை. (II நாளா 20:22-24) தேவனே யுத்தத்தில் ஜெயித்தார். நாம் அதற்கான விலைக் கிரயத்தைச் செலுத்துவோமானால் அவர் இன்னும் இன்றும் யுத்தத்தில் ஜெயிக்க வல்லவராயிருக்கிறார்.

உபவாசித்தல் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படுதல் (I இராஜா 19)

எலியா என்பவன், யேசபேல், ஆகாப், பாகாலின் தீர்க்கதரிசிகள் அனைவரையும் எதிர்த்து நின்று ஜெயித்தான். மேலும் அவன் ஏமாற்றமும் அதைரியமும் அடைந்து தான் சாக வேண்டும் என்று விரும்பிய ஒரு கால கட்டம் அந்த வெற்றியைத் தொடர்ந்தது. தேவன் அவனை அற்புதமாகப் போஷித்து வழி நடத்தினார். அவன் நாற்பது நாள் உபவாசித்து ஓரேப் மட்டும் தொடர்ந்து பயணம் செய்தான். அவனுடைய விசுவாசம் அவனை தேவனுடன் அவன் ஒரு புதிய இடைபடுதலுக்கு ஆயத்தம் செய்தது. ஒரேபிலே அவன் தேவனை மறுபடியும் புதிதாக சந்தித்தான். கர்த்தரால் ஊக்குவிக்கப்பட்டு புதிய ஊழியத்திற்கான ஆலோசனைகள் அவனுக்கு வழங்கப்பட்டன. அவ்வாறு அந்த எதிர் முனைச் சந்திப்பினால் பெற்றுக் கொண்ட பலத்தினால் தெய்வமில்லாமையாகிய போருக்கு விரோதமாக ஆயத்தமானான். நாம் நமது சொந்த அனுபவத்திலிருந்து ஆலோசனையாகக் கூறுவதாவது. உபவாசமும் ஜெபமும் தேவ மனுஷனை தேவனுடன் ஓர் புதிய எதிர்முனைச் சந்திப்புக்குத் தயாராக்கவோ அல்லது தேவனுடைய ஆவியினால் புதிதாக நிரப்பப் படுவதற்கோ ஆயத்தம் செய்கிறது. நாம் உபவாசிக்கும் பொழுது, "நான் உம்மைப் புதிதாகச் சந்திக்க வேண்டும். உம்மைப் பற்றிய பசி எனக்கு அதீதமாக இருப்பதால் என்னுடைய சரீரத்தின் சாதாரணத் தேவைகளை நான் புறக்கணிக்கிறேன்" என்று தேவனிடம் சொல்வது போலத் தோன்றுகிறது. தேவன் அப்படிப்பட்ட ஜெபங்களுக்கு எப்பொழுதுமே பதிலளிக்கிறார். அப்படி உபவாசம் இருக்கும் ஓர் ஆத்துமாவை அவரால் ஆசீர்வதிக்கப்படாமல் எப்படி விட்டுப் போக முடியும்?

தேவனுடைய சிந்தனையை மாற்றவதற்கான உபவாசம் (யோனா 3 மற்றும் 4ம் அதிகாரங்கள்)

நினிவே ஒரு பொல்லாத மகா நகரம். அந்த நகரத்து அக்கிரமம் தேவனுடைய சமூகத்தில் வந்து எட்டினது. (யோனா 1:2) தேவன் நினிவே நகரத்தை நியாயந்தீர்க்க வேண்டுமென்று தீர்மானித்தார். உண்மையாகவே நினிவே நகரத்துக்கு நியாயத்தீர்ப்புச் செய்ய நாற்பது நாட்களே இருந்தன. (யோனா 3:4) அவர்களுக்கு நேரிடும்படி வரப்போகும் தீர்ப்பைப் பற்றிய செய்தி அந்நகரத்து மக்களுக்கு எட்டியபொழுது என்ன செய்தார்கள்? முதன் முதலாக ஜனங்கள் தாங்களாகவே தங்கள் மீது

உபவாசத்தை பிரகடனஞ்செய்து அறிவித்துக் கொண்டார்கள். வேதாகமம் கூறுவதாவது, "அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ் செய்யும்படி கூறினார்கள். பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டுத்திக் கொண்டார்கள்." (யோனா 3:5) இரண்டாவதாக இந்த துர்செய்தி இராஜாவுக்கு எட்டியது. அவன் செயல்பட்டான். "அவன் சிங்காசனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு இரட்டை உடுத்திக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான்." (யோனா 3:6) இது இராஜாவுக்கு தன்னைப் பொறுத்தமட்டில் தன் சொந்தமான தாழ்த்தப்படுதலாகும். ஆனாலும் அவன் அதை அத்தோடு விட்டுவிட வில்லை. வேதாகமம் கூறுகிறது, தானும் பிரபுக்களும் நிர்ணயம் பண்ணின கட்டளையாக, நினிவேயிலெங்கும் மனுஷரும், மிருகங்களும், மாடுகளும், ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும், தண்ணீர் குடியாமல் இருக்கவும். மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக் கொண்டு, தேவனை நோக்கி, உரத்த சத்தமாய் கூப்பிடவும் கட்டளை பிறப்பித்தான். (யோனா 3:7-8)

இராஜா பிறகு இராஜ கட்டளையைப் பிறப்பித்தான். அது ஒரு அரசாங்க கட்டளை. பல மதத் தலைவர்கள் தங்களுக்கு சொந்தமான கட்டளைகளைப் பிறப்பிப்பதை அறிவோம். இதில் அடங்கிய கட்டளைகள் விரும்பத்தக்கவை அல்ல. ஆனாலும் அது நினிவேயின் இராஜாவினுடையது. அவனுடைய கட்டளையானது, தாழ்த்தப்படுதல், துக்கித்தல், உபவாசித்தல் ஆகியவை அவனுடைய இராஜ்ஜியத்திலுள்ள எல்லா மனுஷராலும் மிருக ஜீவன்களாலும் கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதே கட்டளையாக வற்புறுத்தியது. இது ஒரு மகா விளைவுகளை ஏற்படத்தக்கூடிய மசோதாவாகும். குழந்தைகள், பாலுண்ணும் சிசுக்கள், நோயாளிகள் முதலானோடும், எல்லா மிருக ஜீவன்களும் அதில் உள்ளடங்கியது. தாங்கள் நோய்வாய் பட்டிருக்கிறோம் என்று சாக்குப் போக்குக் கூறி அந்த கட்டளையை ஒருவரும் தட்டிக் கழிக்க அனுமதிக்கப்படவில்லை. எந்த ஒரு குழந்தையும் சிறிய பாலகன் என்று சட்டத்திற்கு விதி விலக்காக எண்ணப்படவில்லை. மிருக ஜீவன்கள் கூட உபவாசித்தன. அவைகள் தீவனம் தின்னாமலும் தண்ணீரும் குடிக்காமலும் இருந்தன. கர்ப்ப ஸ்தீரிகள் கூட அதற்கு உட்படுத்தப்பட்டனர். இது ஒரு வேளை சரித்திரத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற உபவாச ஆசரிப்பாக இருக்கலாம்.

அவர்கள் உபவாசம் மட்டும் கைக் கொள்ளவில்லை. அவர்கள் தேவனை நோக்கி அழ வேண்டும். அவர்கள் எல்லாரும் உண்மையாகவே அழுதனர். அது ஒரு உரத்த சத்தமாக இருக்கலாம். ஆம் அவைகள் நமது காலத்து மதச் சடங்களுக்குக் கூட அதிக உரத்த கூக்குரலாக இருக்கலாம். அவர்கள் அழ மட்டும் செய்யவில்லை. மேலும் செய்யுமாறு கூறப்பட்டதாவது. "அவரவர் தம் தம் பொல்லாத வழியையும் தம்தம் கையிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பக் கடவர்கள்" என்பதாகும். (யோனா 3:8) அவர்கள் மனந்திரும்பினார்கள். ஒருவனும் தப்பி விடும்படி அனுமதிக்கப்படவில்லை.

அவர்களுடைய தாழ்த்தப்படுதல், உபவாசித்தல், மனந்திரும்புதல் ஆகியவை வீணாகப் போகவில்லை. அவர்களுக்கு தங்கள் சிந்தனையில் ஒரு இலக்கு இருந்தது. இரக்கத்திற்காக கெஞ்சுவது என்றாகும். அவர்கள் தேவனை தமது பயங்கரமான சினத்திலிருந்து திரும்பி மனந்திரும்ப வாஞ்சித்தார்கள். எல்லா தாழ்த்தப்படுதலுமே. உபவாசித்தல், மனந்திரும்புதல் ஆகியவற்றை இலக்காக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். எந்த ஒரு விசுவாசியும் ஸ்தல சபைகளும் இந்தக் குறிப்பிட்ட இலக்குகள் இல்லாமல் தைரியமாக முன் செல்ல முடியாது. ஆகவே அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் "நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். (I கொரி 9:26) தேவன் இந்த விதமான உபவாசத்துக்கு எவ்வாறு எதிர் கிரியை செய்தார். வேதாகமம் சொல்லுகிறதாவது. "அவர்கள் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார்." (யோனா 3:10)

சாதாரணமாக தேவன் மனஸ்தாபப்பட மாட்டார் என்பதை நாம் அறிவோம். வேதாகமம் சொல்லுகிறது, "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனுமல்ல. அவர் சொல்லியும் செய்யாது இருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண் 23:19) என்னவென்றாலும் சில குறிப்பிடத்தக்க சந்தர்ப்பங்களில் அதாவது அவர் நினிவே நகரத்து மக்களைச் சந்தித்தது போல, ஒரே மாதிரியான ஏக காலத்தில் தேசம் முழுவதும், மனிதன் மிருக ஜீவன்கள்

ஆக சகலமும் இரட்டிலும் உபவாசத்தினாலும் மனந்திரும்புவது போன்ற சம்பவங்களை எதிர் கொண்டிருக்கிறார். இந்த மாதிரியான சந்தர்ப்ப சூழ்நிலைமைகளில் தேவன் தமது அளவில்லா இரக்கத்தினால் அவர்களுடைய இரட்டு உடுப்பு, உபவாசம், கண்ணீர் மனந்திரும்புதல் ஆகிய காரணங்களால் அவரும் மனந்திரும்புகிறார். இவ்வாறு மனந்திரும்புவதால் தேவன் பலவீனத்தைக் காண்பிப்பவர் அல்ல. ஆனால் அவர் மகா பலத்தையே காட்டுவார். அதாவது அளவற்ற அன்பு இரக்கம் ஆகிய பலத்தைக் காட்டுவார். "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்." (II பேதுரு 3:9)

இன்று இந்த உலகத்தில் இருக்கிற நிலைமையானது நினிவே பட்டணத்தில் இருந்ததை விட வித்தியாசமாக இருக்கவில்லை. ஒவ்வொரு மனிதனிலும் பாவம் இருக்கிறது. மக்கள் பாவஞ் செய்வதற்கு நூதனமான வழிகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சந்ததியார் சோதோம் கொமரா பட்டணத்தினரை விட மிஞ்சினவர்களாய் இருக்கிறார்கள். அதுவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நாம் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் விளிம்பில் நிற்கிறோம். நியாயத்தீர்ப்பு இந்த உலகம் மாத்திரம் முதிர்ந்த நிலையில் இருக்கவில்லை. கர்த்தருடைய திருச்சபை கூட ஆரோக்கிய மில்லாததாக இருக்கிறது. இங்கே தான் பாவம் மலிந்து கிடக்கிறது. எல்லாவற்றைச் சுற்றியும் அனலுமில்லை குளிருமில்லை. உலக ஆடம்பரமே அனுதின வாழ்க்கை நடைமுறையாக இருக்கிறது. தத்துவக் கோட்பாடுகளில் குழப்பம், விட்டுக் கொடுத்தல், பாரா முகம் ஆகியவை நாடோறும் ஜெயித்துக் கொண்டு இருக்கிறது. தேவன் நியாயந்தீர்ப்பதாக வாக்களித்திருக்கிறார். அவர்தம் வாக்கை நிறைவேற்றுவாரா? அவர் மனந்திரும்பும்படி அவரை கட்டாயப்படுத்த முடியுமா?

நினிவே பட்டணத்து இராஜாவைப் போல இரட்டுடுத்தி உபவாசத்தைக் கண்ணீர் மனந்திரும்புதலோடு அனுசரிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கும் திருச்சபை தலைவர்கள் எங்கே இருக்கிறார்கள்? தேவனுடைய ஆலோசனையை முழுவதுமாக எதிர் நோக்கி இருப்பதாக உரிமை கொண்டாடும் இந்த திட்ட அமைப்புகளில்கூட சாதாரணமான நடைமுறை இல்லாதிருப்பதேன்? ஒருவேளை உபவாசத்தைக் கண்ணீரோடு அனுசரிக்கும்படி அறைகூவும் மக்கள் தாங்களாகவே 'சாப்பாட்டு தேவனின்" ஆலயத்தில் தொழுகையாளர்களாக பிடித்து வைக்கப்பட்டிருக்கலாமோ? யாராவது ஒருவர் எழும்பி இந்த சவாலை ஏற்று அந்த அலையின் போக்கைத் திருப்பும்படியாக உதவி செய்யலாமா? நினிவே இரட்சிக்கப்பட்டது. நாம் இந்த உலகை அழிவை நோக்கி போக விடலாமா? அல்லது இதற்காக நம்மால் முடிந்த ஒன்றை செய்ய இயலுமா?

ஆவிக்குரிய தலையிடுதல்களை முறியடிக்கும்படியாக உபவாசம் (தானியேல் 10:2-15)

தானியேல் ஏரேமியா தீர்க்கதரிசியின் வார்த்தைகளைப் படித்துக் கொண்டிருக்கும்பொழுது அவன் பின்வருமாறு கூறும் பகுதிக்கு வந்தான். "பாபிலோனிலே எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, நான் உன்னைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பி வரப்பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப்பண்ணுவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏரேமியா 29:10) கர்த்தர் ஏரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்து கொண்டேன். நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நோக்கினேன். (தானியேல் 9:3) எங்கள் பாவங்களினாலும் எங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினாலும் யாவருக்கும் நிந்தையானோம் என்று ஜெபம் பண்ணி மன்றாடி அறிக்கை செய்தான். "இப்பொழுதும் எங்கள் கர்த்தராகிய தேவனே, உமது அடியானுடைய விண்ணப்பத்தையும் அவனுடைய பரிசுத்த ஸ்தலத்தின் மேல் ஆண்டவர் நிமித்தம் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்." (தானியேல் 9:17)

அவனுடைய உபவாசத்துக்கும் மன்றாட்டுக்கும் பிரதியுத்தரமாக காபிரியேல் என்னும் தூதன் தேவன் அவருடைய வாக்குறுதியை உண்மையாகவே நிறைவேற்றுவார் என்பதை உறுதியாய் சொல்லும்படியாக அனுப்பப்பட்டான். காபிரியேல் சொன்னதாவது, "ஓ தானியேலே உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டு வந்தேன். நீ மிகவும் பிரியமானவன் நீ வேண்டிக் கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டது. நான் அதை அறிவிக்க வந்தேன். மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும் அக்கிரமங்களை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும்

நித்திய நீதியை வருவிக்கிறதற்கும் உன் ஜனத்தின் மேலும் உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினான். (தானியேல் 9:22-24)

என்னவென்றாலும் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படும் என்ற உறுதியான நிச்சயத்தோடு காபிரியேலுடைய தீர்க்கதரிசனமும் வந்தது. அதாவது நகரமும் அதிலுள்ள ஆலயமும் பாழ்கடித்து அழிக்கப்படும். அதன் ஜனங்கள் துரத்துண்டு போவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. இது தானியேலுக்கு உண்டான துர்செய்தியாகும். அவன் அதை இலகுவானதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவன் மூன்று வாரங்கள் பகுதி நேர உபவாசம் மேற்கொண்டான். வேதாகமம் கூறுவதாவது, "அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வாரம் முழுவதும் துக்கித்துக் கொண்டிருந்தேன். அந்த மூன்று வாரங்களாகிய நாட்களில் நிறைவேறுமளவும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை. இறைச்சியும் திராட்ச ரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை. நான் பரிமள தைலம் பூசிக் கொள்ளவும் இல்லை." (தானியேல் 10:2-3) அவன் தன் ஜனங்களுடைய வருங்காலத்தைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள விரும்பினான். ஆனால் அதற்கு உத்தரவு உடனே வரவில்லை. அதற்காக மூன்று வார உபவாசம் அவனுடைய ஜனங்களுடைய வருங்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக மேற்கொள்ள அவசியமாயிருந்தது. ஏன்? அதுதான் ஆவிக்குரிய தலையிடுதலான காரணமாகும். ஆகவே வேதாகமம் சொல்லுகிறது, "ஒருவன் கை என்னைத் தொட்டு என் முழங்கால்களும் என் உள்ளங்கைகளும் தரையை ஊன்றியிருக்க என்னைத் தூக்கி வைத்தது. அவன் என்னை நோக்கி, பிரியமான புருஷனாகிய தானியேலே, நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன். ஆதலால் நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளின் பேரில் நீ கவனமாயிருந்து, கால் ஊன்றி நில்" என்றான். இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில் சொல்லுகையில் நடுக்கத்தோடே எழுந்து நின்றேன். அப்பொழுது அவன் என்னை நோக்கி, தானியேலே பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாக சிறுமை படுத்துகிறதற்கும் உன் மனதைச் செலுத்தின முதல் நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது. உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன். பெர்சியா இராஜ்ஜியத்தின் அதிபதி இருபத்தொரு நாள் மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான். ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான். ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் இராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன். இப்போதும் கடைசி நாட்களில் உன் ஜனங்களுக்குச் சம்பவிப்பதை உனக்குத் தெரியப் பண்ணும்படிக்கு வந்தேன். இந்த தரிசனம் நிறைவேற இன்னும் நாள் செல்லும் என்றான். (தானியேல் 10:11-14)

ஆகவே நாம் இங்கே விவாத அடிப்படைக்கான வினாக்களைப் பார்க்கிறோம்:

1. ஒரு மனிதன் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டும் என்பதை கண்டு பிடிக்கிறான்.
2. அவன் உபவாசித்து ஜெபிக்கிறான்.
3. தேவன் பதிலை அனுப்புகிறார். ஆனால் அதில் ஒரு பகுதி அவர்களுக்கு வரும் ஆக்கினையை முன்னறிவிக்கிறது.
4. அவன் ஒரு பகுதியான உபவாசம் செய்தும் ஜெபித்துக் கொண்டும் மூன்று வாரங்கள் ஆக அதைக் கைக் கொள்ளுகிறான்.
5. அவன் உபவாசிக்கத் தொடங்கிய முதலாம் நாளிலே தானே தேவன் ஒரு தூதனை அனுப்பி பதிலைக் கொண்டு வருகிறார்.
6. சாத்தானாகிய தூதன் (பெர்சியா நாட்டு அதிபதி) தலையிடுகிறான். அந்த தூதன் தானியேலிடம் வருவதற்குத் தடை செய்கிறான்.
7. அந்த உபவாசமும் ஜெபமும் தேவனை அசைத்து அவரை மிகாவேல் என்ற தூதனை உதவிக்கு அனுப்பச் செய்தது.
8. மிகாவேல் போரை மேற்கொண்டு பெர்சியாவின் அதிபதியோடு போரிட்டு அந்த செய்தி கொண்டு வந்த தூதனை அந்த பதிலை தானியேலுக்குக் கொண்டு வரும்படி அவனை விடுதலை செய்து அனுப்பியது.

தானியேல் உபவாசித்து ஜெபிக்காவிட்டால்?

ஆம்! மிகவும் நல்லதுதான். தானியேல் ஜெபிக்கத் தொடங்கிய முதலாம் நாளில் தேவனால் அவனுக்கு அனுப்பப்பட்ட பதில் அவனைப் போய் சேர்ந்திருக்காமலே போயிருக்கலாம். தேவனை

அதைக் கொடுத்திருந்தாலுங்கூட அது மிகவும் தாமதமாகக் கூட வந்திருக்கலாம். நாம் பார்க்கிறபடி பெர்சியாவின் அதிபதி என்று அழைக்கப்படுகிற தீய ஆவி மிகவும் பலம் வாய்ந்த ஆவியாகும். அவன் தேவனுடைய தூதனை இருபத்தோரு நாட்கள் தாமதப்படுத்தியிருந்தான். ஆனாலும் மிகாவேல் வல்லமையுள்ளதோர் தூதன் வந்த பிறகுங்கூட அவனோடு உடனே இடைபட முடியவில்லை. மிகாவேல் அந்தப் போரை மேற்கொண்ட பொழுது தான் அந்த தூதன் அந்த பதிலான செய்தியை தானியேலுக்கு எடுத்துச் செல்ல தடையின்றி சுதந்திரமாக இருந்தது. இதிலிருந்து நாம் முடிவாக அறிந்து கொள்வது என்னவென்றால் போருக்கு ஆதரவான யுத்தத் தளவாடங்கள் தானியேலுடைய உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் பதிலாக சமயத்தில் அனுப்பியிருக்கப்படாவிட்டால் எந்த விதமான பதிலும் தானியேலை அடைந்திருக்க முடியாது.

தேவனுடைய சித்தத்தின்படி ஏறெடுக்கப்படும் அநேக ஜெபங்கள் ஒரு சாதாரண தோற்றத்தின்படி பதில் கொடுக்கக் கூடாத நிலைமையை விளக்கிக் காட்டுகின்றனவா? தேவன் பதில் கொடுத்து விட்டார். ஆனால் அதற்கான பதில்கள் சரியான குறிப்பிட்ட நபர்களைப் போய்ச் சேர்வதில்லை; ஏனென்றால் அங்கு சாத்தானுடைய தலையீடு இருக்கிறது. மேலும் உபவாசிப்போர் மிகச் சிலரேயாதலால் ஆதரவான தளவாடங்கள், முடிவான பதில் வெளியிடப்படுவதற்கு இல்லாமல் போவதன் காரணத்தினால்தான்!

தேவன் தாமே காணப்படாத உலகத்தைப் பார்ப்பதற்கு நமது கண்களைத் திறப்பாராக. மேலும் காணக்கூடாத அதிகாரங்களின் கிரியைகளைப் பற்றிய வெளிப்பாடு நமக்குத் தரப்படுவதாக! ஒரு சில மக்கள் கர்த்தருடைய வசனத்தின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும் ஏன் அவர்கள் அறைகுறையாகக் கீழ்படிகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள தேவன் நமது கண்களைத் திறப்பாராக. நமது கண்களால் கண்கூடாகப் பார்க்கக் கூடாத அதிகாரங்கள் கிரியை செய்கின்றன. பிசாசானவன் எல்லாவற்றையும் தடை செய்ய எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறான். அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறதாவது, "நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொரு தரம் மனதாயிருந்தோம். பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன். சாத்தானோ எங்களைத் தடை பண்ணினான்." (I தெச 2:18) அவர் திரும்பவும் கூறுகிறதாவது, "ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. விரோதம் செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்." (I கொரி 16:9)

என்னுடைய ஜெபமாவது இந்த சத்தியங்கள் தேவனுடைய பிள்ளைகள் எல்லாருடைய இருதயத்திலும் பற்றி எரிந்து அவர்களை உபவாசித்து ஜெபிக்கும் மக்களாக மாற்ற வேண்டும் என்பதாகும். கர்த்தர் தாமே என்னில் இந்த வேலையை புதிதும் மகத்தானதுமான அளவில் தொடங்குவாராக.

ஆவிக்குரியதான மூல சக்திகளை கட்டி எழுப்பும் வழியாக உபவாசம் (லூக்கா 4:1-14)

கர்த்தராகிய இயேசு ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்று கரையேறின உடனே பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்றார். அவர் பரிசுத்த ஆவியினால் உபவாசிக்கும்படி முதலாவதாக வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார். இரண்டாவதாக சோதனையை சந்தித்து மேற்கொள்வதற்காக, மூன்றாவதாக பலத்தோடு கலிலேயாவுக்குத் திரும்பிப் போய் தமது ஜீவிய ஊழியம் செய்வதற்காக.

பரிசுத்த ஆவியானவர் இயேசுவை முதலாவதாக நாற்பது நாள் உபவாசத்துக்குள்ளாக நடத்திச் சென்றார். பரிசுத்த ஆவியானவர் நமது ஆண்டவரின் ஊழியப் பாதையில் நேரிடும் சோதனைகளை மேற்கொள்ள வேண்டுமானால் இந்த உபவாசம் அவசியம் என்று அறிந்திருந்தார். ஆகவே ஆண்டவர் தம்மை நாற்பது நாள் உபவாசத்திற்கு உட்படுத்தினார். அவர் அந்த நாற்பது நாட்கள் உபவாசிக்கும்பொழுது "அந்த நாட்கள் முடிந்த பின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று" (லூக்கா 4:2) அவர் பசியாயிருந்தார். அந்த சத்துருவானவன் இப்பொழுது அவரைத் தாக்கி தோற்கடிக்கலாம் என்று நினைத்தான். சாத்தான் அறிந்திருக்கக் கூடாத ஒரு காரியம் என்னவென்றால் உபவாசித்தலானது அவனை மேற்கொள்ளுவதற்காக அவரை ஆவிக்குரிய பிரகாரமாக பலப்படச் செய்தது. அவரது சரீரம் உபவாசத்திற்கு முன் இருந்ததைவிட பலவீனப்பட்டிருந்தது. ஆனால் அவருடைய ஆவி பலம் பெற்றதாகி அந்தச் சத்துருவானவனை மூன்று வல்லமையான சண்டைகளிலே தோற்கடித்தார். அதனால் பாதாளத்தில் பயங்கரமான தோல்வியை அடைந்தது. இயேசு உபவாசித்திருக்காவிட்டால் அந்த பிசாசானவன் முற்றிலுமாகவும் விரைவாகவும் தோற்கடிக்கப்பட்டிருப்பானா என்று வியப்புறலாம்.

இந்த உபவாசித்தலானது காலா காலமாக ஏற்படும் போராட்டத்தில் சத்துருவை ஜெயிப்பதற்கு அவருக்கு பலம் தந்து திறம்படச் செய்ததுமன்றி, இயேசுவை ஆவிக்குரிய வல்லமையில் புதியதோர் இடத்திற்கு கொண்டு வந்தது. ஆகையால் வேதாகமம் கூறுகிறதாவது, "பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்." (லூக்கா 4:14) உபவாசமானது, அதுவாகவே பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அவரை புதிதான அனுபவத்திற்குள் கொண்டு வந்து விட்டபடியினால் அவர் ஆவியின் பூரணமான வல்லமையினால் எஞ்சியிருந்த அவருடைய ஊழியத்தில் முன்னோக்கிப் போக முடிந்தது. சில விசுவாசிகள் பிசாசானவன் இரண்டொரு சோதனையான வார்த்தைகளைப் பேசுவதற்கு முன்னதாகக் கூட பலவீனமாகி அவர்கள் ஏற்கனவே அவனுடைய பாதங்களின் கீழ் பணிந்து கிடக்கிறார்கள். இதற்கான ஒரு காரணமாவது இந்த மாதிரியான மக்கள் சோதனையை மேற்கொள்வதற்காக அவசியமான ஆவிக்குரிய இந்த வகையான வல்லமையை சுதந்தரித்துக் கொள்ள மறுத்து விடுகிறார்கள். இந்த வகையான வல்லமையானது உபவாசத்தின் மூலமாக ஒரு பகுதியாகக் கிடைக்கப் பெறுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய ஆவிக்குரிய பிரயாணத்தின் ஆரம்பத்தில் முதலாவதான நாட்களை உபவாசத்தில் செலவழித்தான். (அப் 9:9) ஆதலால் நாம் இதை அறிந்து கொண்டு அநேக மக்களை விட கர்த்தருக்கான தன் ஊழியத்தில் ஏன் அவன் தேவனுடன் நெருங்கிப் போய் கொண்டிருந்தான் என்பதைப் பற்றி வியப்புறுகிறோம்.

உபவாசம் என்பது கர்த்தருக்கு ஒரு ஊழியமாக (லூக்கா 2:36-40) (அப் 13:1-3)

வேதாகமம் அன்னாள் என்ற தீர்க்கதரிசியானவளைப் பற்றி பேசும்பொழுது சொல்லுகிறதாவது, "அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணி ஆராதனை செய்து கொண்டிருந்தாள்." (லூக்கா 2:37) அவள் சுமார் ஐம்பது ஆண்டுகளாக தேவாலயத்தில் இரவும் பகலும் கர்த்தரை ஆராதித்துக் கொண்டிருந்தாள். அவள் எப்படி ஆராதித்தாள். அவள் உபவாசித்தும் ஜெபித்தும் ஆராதித்து வந்தாள். அவள் தேவனிடமிருந்து ஏதோ ஒன்றையோ அல்லது மற்றொன்றையோ பெற்றுக் கொள்ளுவதற்காக ஆராதிக்கவில்லை. அவள் கர்த்தரை உபவாசித்து ஆராதித்துக் கொண்டிருந்தாள். அவள் அதை உடனே நிறைவேற்றவில்லை. அவள் எப்பொழுதும் அவ்வாறே செய்தாள்.

இரவும் பகலும் அந்த ஆதித் திருச்சபையில் அந்தியோகியாவில் திருச்சபையில் தலைவர்கள் கர்த்தருக்கென்று ஊழியம் செய்து உபவாசித்தார்கள். (அப் 13:2) அவர்கள் உபவாசித்து ஆராதனை செய்யும்பொழுது பரிசுத்த ஆவியானவர் சொன்னதாவது, "பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள;" என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். தேவன் ஆராதித்து உபவாசிக்கும் மக்களுடன் அதிகமாகப் பேசுகிறார். இதனால் தான் அவர் உன்னுடன் பேசவில்லையா? மேலும் நீ ஒரு ஆகாரப் பிரியனாக இருக்கும் காரணத்திற்காகவா?

கர்த்தர் அவர்களுடன் பேசி சவுலையும் பர்னபாவையும் பிரித்து விடும்படியாகக் கேட்டுக் கொண்டாலும் அவர்களை அனுப்பி விடும்படி அவர்கள் அவசரப்படவில்லை. மேலும் அவர்கள் தொடர்ந்து உபவாசித்து ஜெபம் பண்ணி பிறகு அவர்களை அனுப்பி விட்டார்கள். இது ஆவிக்குரிய ஒரு காரியமாகும். வேதாகமம் அந்த இருவரையும் பரிசுத்த ஆவியால் பிரித்தெடுத்து அனுப்பும்படியாகச் சொல்லக் கூடுமானதைப் பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. (தற்கால) நவீன காலத்து சுவிசேஷ பிரசாரகர்கள் அவ்வாறு அனுப்பப்படுகிறார்களா? அல்லது பெருந் தீனியான பிரிவு உபச்சாரத்துடன் அனுப்பப்படுகிறார்களா? நவீன காலத்து மிஷனரி வைராக்கியத்தைக் குறித்து அதன் வைராக்கியம், ஆழம், ஆவிக்குரிய தன்மை, அர்ப்பணிப்பு, ஆவிக்குரிய அதிகாரம், பேரார்வம், கனி தருதல் ஆகியவற்றைக் கவனத்துடன் பார்த்தால் அவர்களில் அநேகரைப் பற்றி உபவாசமும் ஜெபமும் அவர்களுடைய ஆயத்தம் வழி அனுப்பி விடுதல் ஆகியவற்றில் பங்கு பெறவில்லை என்பதை ஒருவர் கருத்தில் கொள்ள அனுமதிக்கும். இந்த சராசரி கிறிஸ்தவன் சராசரி உபவாசம் இருப்பதைப் பற்றிய எந்த விதமான திட சித்தமில்லாதவனாக, "தகப்பனைப் போல மகனும்" என்ற பழமொழியால் முத்திரையிடப் படக்கூடியவனாக இருக்கிறான். தேவன் தாமே திருச்சபையை இந்த குறைவிலிருந்து இரட்சிப்பாராக. இந்த மிஷினரிகள் கிழக்கிலிருந்தோ மேற்கிலிருந்தோ வருகிறார்கள் என்பதைப் பற்றி ஒரு பொருட்டல்ல. ஒரு காரியம் மட்டும் நிச்சயம் என்று தாழ்மையுடன் நான் சொல்லுகிறேன், மிகவும் ஒரு சிலரே உபவாசித்து ஜெபம் என்னும் கல்வி நிலையத்தில் மாணவர்களாக இருக்கின்றனர்.

உபவாசம் என்பது மகிழ்ச்சி, சந்தோஷம், ஆனந்த களிப்பு என்பவற்றின் விருந்தாக (சகரியா 8:18-19)

வேதாகமம் கூறுகிறதாவது, "சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தை எனக்கு உண்டாகி, அவர், நாலாம் மாதத்தின் உபவாசமும் ஐந்தாம் மாதத்தின் உபவாசமும் ஏழாம் மாதத்தின் உபவாசமும் பத்தாம் மாதத்தின் உபவாசமும், யூதா வம்சத்தாருக்கு மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும், நல்ல பண்டிகைகளாகவும் மாறிப் போகும். ஆகையால் சத்தியத்தையம், சமாதானத்தையும் சிநேகியுங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (சகரியா 8:18-19) உபவாசம் என்பது மகிழ்ச்சியாயிருக்கும் காலமாகும். நாம் உபவாசித்து கர்த்தருக்கு ஊழியம் செய்வதாயிருந்தால் நாம் அவருக்கு ஊழியம் செய்யும் அந்த சலுகைக்காக மகிழ்ச்சியாயிருக்க வேண்டாமா? நாம் உபவாசித்து அதை அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவதற்கு ஒரு சாதகமாக்கிக் கொள்வதற்காக அவருடன் புதுப்பிக்கப்படும் ஆழமானதோர் ஐக்கியத்திற்கான உரிமைக்காக நாம் களிகூறாமலிறுக்க வேண்டாமா?

ஆகையால் உபவாசித்தல் என்பது மகிழ்ச்சியின், சந்தோஷத்தின் ஆனந்த களிப்பின் விருந்தாக அமைவது சாதாரணமானதாகக் கருதப்பட வேண்டும். ஏனென்றால் தேவனுடன் இருக்கும் உண்மையான ஐக்கியமே ஒரு விருந்தாகும். தேவனிடமிருந்து வரும் மகிழ்ச்சி சந்தோஷம் ஆனந்த களிப்பு ஆகியவைகளால் பிடிக்கப்படாமல் தேவனுடைய சமூகத்தில் யாரால் நீண்ட நேரம் தரித்திருக்க முடியும்?

உபவாசித்தல் பற்றிய கர்த்தருடைய போதனை

உபவாசித்தல் என்ற தலைப்பைப் பற்றி கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் பெரிய பாடமாவது அவருடைய முன் மாதிரியே யாகும். அவர் நாற்பது நாட்களாக உபவாசமிருந்தார். அந்தக் கிரியையால் உபவாசத்தைப் பரிசுத்தப்படுத்தினார். அதை தம்முடைய பரிசுத்தமான நாமத்திற்கு மகிமையான ஊழியமாக அதை உண்டுபண்ணினார். அதற்காக அவர் மாதிரியை முன் வைக்க வில்லை. உபவாசத்தைப் பற்றி உபதேசித்தார். தாம் போன பிறகு தமது சீஷர்கள் உபவாசிப்பார்கள் என்று சொன்னார். ஆனால் அவர் இன்னும் திரும்ப வரவில்லை. ஆகையால் இதுவே உபவாசிக்கத் தகுந்த காலமாகும். அவர் சொன்னதாவது "நீங்கள் உபவாசிக்கும் பொழுது" என்று சொன்னாரேயன்றி "நீங்கள் உபவாசித்தால்" என்று சொல்லவில்லை. (மத் 6:16) கர்த்தர் தம்மைப் பின்பற்றி வருபவர்களை அவருடன் சாதாரணமாக நடந்து வரும் நடையில் ஒரு பகுதியாக உபவாசிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

தவறான உபவாசங்கள் (ஏசாயா 58)

கர்த்தரால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு வகையான உபவாசமும் இருக்கிறது. அதைத் தான் கர்த்தர் பின்வரும் வார்த்தைகளைச் சொல்லும் போது கண்டித்தார். இதோ நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின் படி நடந்து உங்களை வேலைகளையெல்லாம் கட்டாயமாய் செய்கிறீர்கள். இதோ வழக்குக்கும், வாதுக்கும், துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறீர்கள். நீங்கள் உங்கள் குரலை உயரத்தில் கேட்கப்பண்ணும் படியாய் இந்நாளில் உபவாசிக்கிறது போல் உபவாசியாதிருங்கள். அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத் தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும் நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும் சகல நுகத் தடிகளையும் உடைத்துப் போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரம் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமல் இருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். (ஏசாயா 58:3-7)

உபவாசம் என்பது நீதியாகுதலின் இடத்தை ஒருக்காலும் எடுத்துக் கொள்ள முடியாது. உபவாசித்தல் உபவாசிக்கும் நபர் தான் கர்த்தருடன் பலமானதோர் ஐக்கியத்தில் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அறிக்கை செய்யப்படாத பாவத்தை மறைத்து வைத்துக் கொண்டு பிறகு உபவாசிப்பது கால விரயம் ஆகும். ஏனென்றால் அந்த விதமான உபவாசத்தால் கர்த்தருடைய இருதயத்தைத் திருப்தி செய்ய முடியாது. ஜீவியத்தின் சாதாரணமானதும் அடிப்படையானதுமான பிரச்சனைகளை விட்டு ஓடிப் போகும்படியாக உபவாசத்தைப் பயன்படுத்தக் கூடாது. ஏதாவது

வேலை செய்ய வேண்டியதிருக்குமானால், நான் உபவாசிக்கிறேன் என்ற போர்வையில் அதை விட்டு ஓடிப் போகக் கூடாது! நான் தேவனுடைய இருதயத்தை அசைக்க வேண்டுமானால் என்னுடைய உபவாசத்தை மனிதர்களுடன் சரியான உறவுத் தொடர்பில் வைத்திருக்க வேண்டும்.

உபவாசித்தல் என்பது வீண் காட்சியாகக் காட்டுவதற்காகவோ அல்லது மாம்சீகத்தை ஏதோ ஒரு வழியிலோ அல்லது மற்றொரு வழியிலோ மகிமைப்படுத்துவதற்காகக் கைக் கொள்ளக் கூடாது. உபவாசித்தல் என்பது தேவனுடைய மகிமைக்காக அவருடைய மகிமைக்காக மட்டுமே கைக் கொள்ளப்பட வேண்டும். தேவன் தாமே நம்மை சரியானதுமான உபவாசங்களுக்குள் வழி நடத்துவாராக. நம்மை தவறானவற்றிலிருந்து இரட்சிப்பாராக.

உபவாசித்தலின் வகைகள்

கர்த்தருடைய வசனத்தின்படி மூன்று வகையான உபவாசங்கள் அதில் காணக் கிடக்கின்றது. முதலாவதாக **முற்றிலும் பூரணமான உபவாசமாகும்**. இந்த முற்றிலும் பூரணமான உபவாசத்தில் உணவையோ அல்லது ஜலத்தையோ எடுத்துக் கொள்வதில்லை. நினிவே நகரத்தார் அத்தகைய உபவாசத்தை மேற்கொண்டார்கள். மோசேயும் அவ்வாறே செய்தான். இந்த உபவாசமானது (தண்ணீர் குடிக்காமல்) சாதாரணமாக எழுபத்திரண்டு மணி நேரத்திற்கு மேல் போகக் கூடாது. (மூன்று நாட்கள் மட்டுமே)

இரண்டாவதாக **முழுமையான உபவாசம்.** ஒரு முழுமையான உபவாசம் எடுத்துக் கொள்ளும் பொழுது ஒருவர் தண்ணீர் மட்டுமே அருந்தலாம். மற்றொன்றையும் பாலோ, தேநீரோ, பழங்களோ, தண்ணீரைத் தவிர மற்றும் ஏதோன்றையும் எடுத்துக் கொள்ளக் கூடாது. இது தான் அநேக விசுவாசிகளுக்கேற்ற சாதாரணமான உபவாசமாகும். இது நாற்பது நாட்களாக மேற்கொள்ளப்படலாம்.

மூன்றாவதாக **பகுதி சார்ந்த உபவாசமாகும்.** இந்த விதமான பகுதி சார்ந்த உபவாசத்தை மூன்று வாரங்களாக தானியேல் மேற்கொண்டான். அவன் கூறுகிறதாவது, "அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வார முழுவதும் துக்கித்துக் கொண்டிருந்தேன். அந்த நாட்கள் நிறைவேறும் மட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை. இறைச்சியும் திராட்ச ரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை." (தானியேல் 10:2,3) ஒரு பகுதி நேர உபவாசத்தில் ஒரு நபர் நாள் ஒன்றுக்கு ஒரு எளிமையான உணவை, சாதாரணமான மூன்று வேளை உணவுக்கு பதிலாக புசிப்பதாகும். பகுதி நேர உபவாசம் தொடங்கி வரக்கணக்காக தொடர்ந்து கடைபிடித்து வருவதால் உபவாசிக்கும் அந்த நபர் சாதாரணமான செயல்பாடுகளைக் கவனிக்கப் போதுமான பலத்தைப் பெற்றிருப்பார். மேலும் முழுமையான உபவாசத்துடன் கூடியதாக சொல்லப்படும் ஜெபத்துக்கு தடையான பலவீனம் இத்துடன் இல்லாது இருக்கும். இதற்குரிய பெரிய பிரச்சனையாவது ஒரு எளிமையான உணவை உண்ணும் ஒழுங்கு முறையானது தவிர்க்கப்பட்ட இரண்டு நேர உணவை போல் அடங்கும். கனத்த உணவானதை உண்பது அல்ல என்பதைக் கடைபிடிப்பதாகும். என்னுடைய தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவுக்கு பிரியமான அனைவரையும் இந்த மூன்று வகையான உபவாசங்களை ஒழுங்காக அனுசரிக்க வேண்டும் என்று உற்சாகப்படுத்துகிறேன். அப்படி செய்வதால் அவசியத்திற்கேற்ப அவர்கள் மூன்றில் ஏதாவது ஒன்றைத் தங்கள் சௌகரியத்திற்காக மேற்கொள்ளலாம்.

உபவாசத்தை ஆரம்பித்தல்

ஒவ்வொரு விசுவாசியும் ஒரு ஒழுங்கான அடிப்படையில் உபவாசத்தை அனுசரிக்க வேண்டும். நமது கூடிவரும் சபையில் அநேக விசுவாசிகள் வாரம் இரு முறை உபவாசிக்கிறார்கள். ஒரு நாள் என்பது ஸ்தாபனத்துக்குரிய ஜனத்துக்கான உபவாசமாகும். இரண்டாவது தனிப்பட்ட அந்தந்த நபருக்குரிய உபவாசமாக சுய பக்தி விருத்திக்காகவோ, கர்த்தருடைய ஊழியத்திற்காகவோ அல்லது ஒரு போரிலோ அல்லது மற்றொன்றிலோ பெறும் ஜெயத்திற்காக மேற்கொள்ளப்படுவதாகும்.

ஒரு உபவாசத்தை எவ்வாறு ஆரம்பிப்பது என்பதே பிரச்சனையாகும். அதை மிகச் சிறிய அளவில் அனுசரிக்குமாறு சிபாரிசு செய்கிறோம். ஆரம்பத்தில் 12 மணி நேரமாகத் தொடங்கி, உங்கள் ஜீவியத்தில் இந்த ஒழுங்கு முறையைப் பெற்றுக் கொண்ட பிறகு பின்னர் வாரக் கணக்காக அல்லது ஒரு வேளை மாதங்களாகக் கூட அனுசரிக்கலாம். ஆரம்ப காலத்தில் இந்த திட்டமானது

கலகம் செய்வது போல் தோன்றலாம். மேலும் இந்த உபவாசத்தை நிறுத்தாவிட்டால் உங்களது முழு ஆள் தன்மையும் நொறுங்கிப் போவது போல் தோன்றும். அதற்காக அதை விட்டுக் கொடுக்காதிருங்கள். பசியின் கொடுமைகூட உண்மையான பசியாக இருக்க முடியாது. ஆனால் மனோ தத்துவ ரீதியான உங்களது சரீரத்தினுள்ளே அமைந்த உணவுக்காக ஆசைப்படும் அமைப்புத் திட்டமாகும். இதைத் தடுத்து விடுக. இதை எவ்வளவுக்கு அதிகமாக தடுத்து விடுகிறோமோ நீங்கள் உபவாசிப்பதால் செத்துப் போக மாட்டீர்கள் என்பதை நான் உறுதி அளிக்கிறேன். இதை உணவை புசியாமல் நிருபியுங்கள். இந்த அனுபவத்திற்காக சந்தோஷப்படுவீர்கள்.

உபவாசத்திற்கு ஆயத்தம் செய்தல்

ஒரு உபவாசத்திற்கான மூல காரணமான ஆயத்தமாவது ஆவிக்குரிய ஜெபமாகும். உபவாசத்திற்கு சம்பந்தமாக கருத்தில் கொண்டு ஜெபிக்க வேண்டிய குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. உபவாசத்தின் நோக்கம். உபவாசத்திற்கான நோக்கம் என்பதை கர்த்தருடன் ஜெபத்தோடு கூடி அதைப் பகுத்தறியவும். அவரிடமிருந்து தெளிவான இலக்குகளைப் பெற்றுக் கொண்டு உபவாச காலத்தில் ஜெபத்துடன் அதைத் தொடர்ந்து போக வேண்டும்.

2. உபவாச காலத்தின் நீளம்: கர்த்தருடன் ஜெபத்தில் தரித்து இருந்து எப்பொழுது உபவாசத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் எப்பொழுது முடிக்க வேண்டும் என்பதைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும். அவர் உன்னை வழி நடத்துவதாக வாக்களித்திருக்கிறார். அவரை வேண்டிக் கொண்டால் நிச்சயமாகவே அதை உனக்குச் செய்வார்.

3. உபவாச காலத்தின் போது ஜெபம்:
   a. கர்த்தரிடமிருந்து ஒரு ஆழான ஜெபத்தால் செயல்பட வேண்டிய ஆழமான பாரத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
   b. உன்னுடைய சரீரமானது தன் ஆவியுடன் ஒத்துழைக்க விரும்பாத பொழுதுங்கூட ஜெபத்தில் விடா முயற்சியுடன் கூடிய ஆவியைத் தருமாறு கர்த்தரிடம் கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. ஜெபத்தில் ஜெய கம்பீரமாக நிற்பாயாக
   a. உன்னிலே தானே உனக்காக ஆவிக்குரிய பலத்தை கட்டி எடுப்பிக் கொள்க.
   b. கர்த்தருக்கு ஊழியம் செய்க.
   c. கர்த்தராகிய கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு ஊழியத்தை நிறைவேற்றுவாயாக.
   d. கர்த்தராகிய கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தை காணாமல் போனவைகளுக்காக உரிமை கொண்டாடுக.

5. தேவனுக்காக நீ காத்திருக்கும்போது அவரிடமிருந்து விசேஷமாக ஏதோ குறிப்பிட்ட ஒன்றைப் பெற்றுக் கொள்க.

6. உபவாச காலம் முழுவதும் சந்தோஷமான ஆவியை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்க.

7. கர்த்தரிடம் வேண்டிக் கொள்க:
   a. உபவாச கால முழுவதும் உனக்கு சரீர பலத்தைக் கொடுக்கும்படியாக
   b. உபவாச காலத்தின்பொழுது உணவுக்கான எல்லா விதமான வாஞ்சையையும் புறக்கணித்து விடுக.
   c. உணவு இல்லாது வெறும் வயிறோடு தூங்கும் திறமையை உண்டாக்கிக் கொள்ள உனக்கு ஞானம் தரும்படியாக.
   d. உபவாச முடிவில் உன் சரீரத்திற்கு கெடுதி விளைவிக்காத ஒரு வழியில் உபவாசத்தை முடித்துக் கொள்வதற்கான ஞானத்தைத் தரும்படி.
   e. உபவாசத்தால் பெறக் கூடிய இலாபகரமானவைகளை பாதுகாத்துக் கொள்ள உனக்குச் சாத்தியமாகும்படியாக.

உபவாசத்தை முடித்தல்

ஒரு நீண்ட உபவாசம், உண்மையிலே எந்த விதமான உபவாசமும் ஜெபத்துடன் கவனமாக முடிக்கப்பட வேண்டும். அதற்காக பின்வரும் ஆலோசனைகளைத் தருகிறேன்:

1. உபவாசத்திற்காக கர்த்தருக்கு நன்றி கூறி துதிக்கும் விசேஷமான நிகழ்ச்சி நேரத்தை உண்டாக்கிக் கொள். அந்த விசேஷித்த ஜெப நேரமில்லாமல் உணவை புசிக்க அவசரப் படாதே. உணவைத் தீவிரமாக ஓடிச் சென்று புசிக்க வேண்டும் என்ற சோதனை இருக்கலாம். ஆனால் தயவு செய்து அதை மேற்கொள்க.

2. நீ புசிக்கும் உணவைப் பற்றி எச்சரிக்கையாயிரு. உபவாசத்தை முடித்துக் கொள்ள ஒரு டம்ளர் பழரச பானம் அருந்துவது நல்ல வழியாகும். அதைத் தொடர்ந்து கடினமான உணவை உடனடியாக புசிக்காதே. மூன்று முதல் நான்கு மணி நேரம் காத்திருந்து பிறகு திரவ உணவை அதாவது கஞ்சி போல (குவாக்கர் ஓட்ஸ், ஆவி பால் அப்பம் போன்றவற்றை) உணவை எடுத்துக் கொள்வது நல்லதாகும். நீ அடுத்த நாள் வரை காத்திருந்து திட உணவை உட்கொண்டால் நல்லதாக உணருவாய். வேக வைத்த கறிகாய்களுடன் சிறு அளவுகளாக உட்கொண்டு ஆரம்பிப்பது நலம்.

3. ஒரு உபவாசத்திற்கு பிறகு அளவுக்கு மீறி சாப்பிடாதே. பெருந்திண்டி ஆயாயகரமான பாவமாகும். அது நீண்டகால உபவாசத்திற்குப் பின்னர் ஆபத்தை விளைவித்து சரீர நஷ்டத்தை உண்டு பண்ணக் காரணமாகும். உபவாசத்திற்கு உள்ள காலத்தில் புதிய உணவு சாப்பிடும் முறைகளைக் கையாளுக. அவை தேவனை மகிமைப்படுத்துவதுடன் உனக்கும் ஆரோக்கியமான சரீரத்தைக் கொடுக்கும்.

4. உபவாச காலத்தில் நீ விருத்தி செய்து கொண்ட ஜெபிக்கும் ஆவியை உனது எஞ்சிய காலத்து தேவனுடன் நடக்கும் வழிக்காக நிலை நிறுத்திக் கொள்க.

ஒரு தேச மக்கள் உபவாசித்து மன்றாடுபவர்களாக இருப்பதற்கான வேதாகமத்தின் அடிப்படை

நமது தேசத்தில் விசுவாசிகள் ஒவ்வொரு புதன் கிழமையம் உபவாசித்து ஜெபிக்கின்றனர். தேசத்தின் எல்லா அம்சங்களுக்காகவும், அதன் தலைவருக்காக அதன் வளத்திற்காக, அபிவிருத்திக்காக ஆவிக்குரிய ஜீவியம் முன்னேற்றம் முதலாக கர்த்தராகிய இயேசுவைப் பொருத்த மட்டில் எல்லா தேவைகளுக்காக வேண்டிக் கொள்ளப்படும். இந்த ஊழியமானது கர்த்தரிடமிருந்து நேரடியாகப் பெற்ற வெளிப்பாடானாலும் அது தெளிவாக வேதாகமத்தில் ஆழமாக வேர் கொண்டதாகும். கர்த்தர் சொன்னதாவது, "நான் மழையில்லாத படிக்கு வானத்தை அடைத்து அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக் கிளிகளுக்கு கட்டளையிட்டு அல்லது என் ஜனத்துக்குள் கொள்ளை நோயை அனுப்பும்போது என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்." (II நாளா 7:13-14)

என் ஜனங்கள் பாவம் செய்தார்கள். நம் ஜனம் நியாயம் தீர்க்கப்பட்டது. இந்த தற்காலத்தில் தேசத்திலுள்ள ஒவ்வொருவரும் கர்த்தராகிய இயேசுவுக்குள் விசுவாசிகளாக இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதில்லை. என்னவென்றாலும் விசுவாசிகள் எல்லாரும் தங்களைத் தாழ்த்தி தேவனுடைய நாமத்தை கூப்பிட்டு தங்களைத் தாழ்த்தி (உபவாசத்துடன்) தேவனுடைய முகத்தைத் தேடி மனந்திரும்ப வேண்டும் என்று அழைக்கப்படுகிறார்கள். நாம் இதைச் செய்திருக்கிறோம். அதைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம். நாம் நமது தேசத்தில் எல்லா பாவிகளுக்கும் பாவ மன்னிப்புக் கிடைக்கும் வரைக்கும் நமது தேசமானது ஆவிக்குரியதுமான, சரீரப் பிரகாரதுமான, சமூக, பொருளாதார, நிதி சம்பந்தமானதுமான, கல்வி சம்பந்தமானதுமான எல்லா நோய்களும் ஆகியவற்றிலிருந்து குணமாக்கப்படும் வரைக்கும் தொடர்ந்து நிறைவேற்றுவோம். விசுவாசிகள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ, எங்கெல்லாம் இன்னும் பாவத்தால் நிறைந்தும், அந்தகார சக்திகள் கிரியை செய்கின்றனவோ, அந்த தேசங்களில் எல்லாம் உபவாச மன்றாட்டுகள் ஓர் ஊழியமாக இயக்கப்பட வேண்டும் என்று நாம் நம்புகிறோம்.

ஒரு உபவாசத்தை பிரகடனஞ் செய்ய

நாம் இருண்ட நாட்களில் வசிக்கிறோம். நாம் கால கட்டத்தின் இறுதியில் வாழ்கிறோம். நாம் தேவனுடைய வருகையை அன்பிலும் ஆசீர்வாதத்திலும் பெற வேண்டும் அல்லது நியாயந்தீர்ப்பில் காண வேண்டும். ஒரு நபர் உபவாசித்து தேவனைத் தேடுவது ஆச்சரியமாகும். என்னவென்றாலும் தனிப்பட்ட நபர் உபவாசங்கள் போதாது. இதற்கு மேலாக வேறொன்றைக் கூடுதலாக வைத்திருக்க வேண்டும். நாம் ஒரு உபவாசத்தை பிரகடனஞ் செய்ய வேண்டும். நான் திருச்சபை முழுவதையுமே உபவாசித்து ஜெபிக்க அழைக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் நெருக்கமான நாட்களில் தலைவர்கள் உபவாசத்தை பிரகடனஞ் செய்தார்கள். மெய்யாகவே உபவாசத்தை பிரபலமாக அறிவிக்கக் கட்டளைகள் இருக்கின்றன. வேதாகமம் சொல்லுகிறது, "ஆசாரியர்களே இரட்டுடுத்திப் புலம்புங்கள். பலி பீடத்தின் பணிவிடைக்காரரே அலறுங்கள். என் தேவனுடைய தொண்டரே, நீங்கள் உள்ளே பிரவேசித்து, இரட்டுடுத்தவர்களாய் இராத்தங்குங்கள். உங்கள் தேவனுடைய ஆலயத்தின் போஜன பலியும் பான பலியும் செலுத்தப் படாமல் நிறுத்தப்பட்டது." பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள். விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். மூப்பரையும், தேசத்தின் எல்லாக் குடிகளையும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தில் கூடி வரச் செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். (யோவேல் 1:13-14) கர்த்தராகிய இயேசுவின் திருச்சபைத் தலைவர்களாகிய நாமும் கூட இதைப் போல் இவ்வாறு செய்வதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

உபவாசம் என்பது ஸ்தல ஸ்தாபன சபை மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். மேலும் நகரங்கள், மாநகரங்கள், மாவட்டங்கள், மாநிலங்கள், மாகாணங்கள், தேசங்கள் ஆகியவற்றிலும் தேவனுடைய கிருபையால் உலகமெங்கும் அறிவிக்கப் பட வேண்டும். இதன் பொறுப்பு ஆவிக்குரிய தலைவர்களின் தோளில் சுமத்தப்பட்டுள்ளது. தேவன் தாமே அதைச் செய்து முடிக்க திருவருள் புரிந்து கிருபை செய்வாராக.

அறியாமையின் நாட்கள் சென்று போயின

கடந்த காலத்தில் உபவாசத்தைப் பற்றி ஒரு சிறிதே அறியப்பட்டிருந்தது. ஆகவே நாம் புசித்துக் கொண்டும் இருந்து, நாம் சத்துருவின் நாட்டில் வசிக்கிறோம் என்பதை மறந்திருக்கிறோம். என்னவென்றாலும் அப்படிப்பட்ட நாட்கள் சென்று போயின. நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும், நாம் என்ன கட்டாயம் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்து இருக்கிறோம். அறியாமையின் காலம் சென்று போயிற்று. ஆகவே தேவன் எல்லா உணவுப் பிரியர்களையும், பெருந் தீனிக்காரரையும் மனந்திரும்பி, சாப்பாடு உண்ணும் ஆசையை விட்டு விட்டு தங்களை உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் அழைப்பு விடுத்து தங்களை ஒப்படைப்புச் செய்து கொள்ள அழைக்கிறார். நீ மனந்திரும்புவாயா? இப்பொழுதே நீ மனந்திரும்புவாயா?

கடைசி வார்த்தை

நீ உபவாசிக்கும்பொழுது நீ செய்யக் கூடிய இறுதியான காரியத்தைச் செய்திருக்கிறாய் என்று உணருகிறாய். மேலும் நீ செய்து முடிக்காது நீ மேற்கொண்டு செய்யக் கூடியது எதுவுமில்லை. ஆழமான மட்டத்தில் உபவாசிக்கும் பொழுது அமானுஷ்யமானது நேரிடும் என்பதற்காகத் தேவன் பேரில் உனக்கு உரிமையைத் தருகிறது. அது நேரிடவே செய்கிறது!

வேத பகுதிகளை மனப்பாடஞ் செய்வதேன்?

சில வருடங்களுக்கு முன்னர், மருத்துவமனையில் ஒரு உறவினரைச் சந்திக்கச் சென்ற பொழுது, புது வருடத்துக்கான இலக்காக, வேதாகமத்திலிருந்து மாதம் ஒரு அதிகாரத்தை மனப்பாடம் செய்ய வேண்டும் என்று கூறினேன்.

"நீங்கள் ஏன் அதைச் செய்ய விரும்புகிறீர்கள்" என்று சொன்னார். "அது என்ன நன்மையைச் செய்யக் கூடும்?"

நான் அதைப் பற்றி விளக்கஞ் சொல்லத் தொடங்கிய பொழுது ஒரு மருத்துவ நல பணியாளர் வந்து ஆராய்ச்சி கூடத்தில் சில சோதனைகள் செய்வதற்காக சக்கர நாற்காலியில் வைத்து அவரை அழைத்துச் சென்றார்.

பின்னொரு நாள் அவருக்கு எழுதி என்னுடைய காரணங்களை விளக்கினேன்.

முக்கியமான உள் நோக்கமாக கீழ்படிதல் என்பதை அவருக்கு சுட்டிக் காட்டினேன். தேவன் அவருடைய வார்த்தையை நம்முடைய இருதயங்களில் மறைத்து வைத்தும், நமது இருதயமாகிய பலகைகளில் அவற்றை எழுதி வைத்தும் பொக்கிஷமாக பாதுகாக்கவும் கட்டளையிட்டிருக்கிறார். "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக என்கிறார்." (கொலோ 3:16)

தேவன் நாம் இதனால் தலையில் அறிவு நிறைவு பெற்று பெருமை அடையாதபடி கட்டளை கொடுக்கவில்லை. "இதில் எழுதியிருக்கிறவைகளின்படி யெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் இதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ வழியை வாய்க்கப்பண்ணுவாய். அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்." (யோசுவா 1:8)

நாம் எதை உண்கிறோமோ அதைப் போலவே நாம் இருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இதற்கு அதி முக்கியமாக நாம் எதை நினைக்கிறோமோ அதாகவே நாம் இருக்கிறோம். (நீதி 23:7a K.J.V.) நாம் கர்த்தருடைய வார்த்தையை நமது சிந்தனையில் வைத்திருப்போமானால் அது நம்முடைய உள்ளான தன்மைக்குள்ளாக செல்லுகின்றது. "அது நமது கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது." (சங் 119:105).

மேலும் அந்த உறவினருடைய இரண்டாவது வினாவான "அது என்ன நன்மையைச் செய்யும்?" என்பதற்கு நான் தேவனுடைய வார்த்தையை நம்முடைய இருதயத்தில் மறைத்து வைத்தல் என்பதற்கான சில நன்மைகளை வரிசையாக எழுதினேன். ஏனென்றால் அவருடைய வார்த்தையான வல்லமையானது நமது அனுதின ஜீவியத்திலே ஒரு இயல்பான வழியில் கிரியை செய்கிறது.

- **அது பாவத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது.**

"நான் உமக்கு விரோதமாய் பாவஞ் செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்." (சங் 119:11)

ஒரு வாலிபப் பெண் தான் குழந்தையாக பத்துக் கற்பனைகளை மனப்பாடம் செய்ததால் தன்னுடைய திருமணத்தை கலைத்து விடக் கூடிய ஒரு நாசகரமான பாவத்திலிருந்து அவளைப் பாதுகாத்து என்பது பற்றி கூறினாள். ஒரு பெரிய நகரத்தின் விமான தளத்தில் விமானங்களுக்கு இடைப்பட்ட நேரத்தில் காத்துக் கொண்டிருந்த பொழுது ஒரு கவர்ச்சிகரமான வாலிபன் தனக்கு அடுத்த ஆசனத்தில் அமர்ந்திருந்தவனிடம் சம்பாஷணையில் ஆழ்ந்திருந்தாள். இரண்டு மணி நேரமாக காபி அருந்திக் கொண்ட மகிழ்ச்சியான பேச்சை ரசித்துக் கொண்டனர். அவளுடைய விமானம் போகும் நேர அழைப்பு வந்தவுடன் அவள் போவதற்கு எழுந்திருந்தாள். அவன் அப்பொழுது அவளுடைய கரத்தை எடுத்துக் கொண்டு அவளுடைய கண்களுக்குள் அவளை ஆழமாகப் பார்த்து "நீ போகாதே என்னுடன் இங்கே தங்கி இரு" என்று சொன்னான். ஒரு மறைந்து போகும் நொடியில் சோதனை அவளை அழைத்தது. ஆனால் உடனடியாக நான் ஒரு குழந்தையாகக் கற்றுக் கொண்ட கற்பனை என் மனதில் பளிச்சிட்டது. "நீ விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்பதாகும். ஒரு புன்னகையோடும் சாந்தமான கைக் குலுக்குதலோடும் அவனிடம் விடை பெற்றாள்.

- **அது மனதிற்கு மகத்தான சமாதானம் தருகிறது**

"உம்மை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதையுடையவன், உம்மையே நம்பி இருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்" (ஏசாயா 26:3)

இந்த உலகமானது சமாதானத்தைத் தேடிக் கொள்வதிலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டது போலத் தோன்றுகிறது. அது தனிப்பட்ட சமாதானமும் சர்வ தேசத்து சமாதானத்தையுங்கூடத் தேடுகிறது. தேவன் தாமே தங்களுடைய மனதை அவர் மேல் நோக்கமாக்கிக் கொண்டவர்களுக்கு மிகுந்த சமாதானத்தைக் கொடுக்கிறார்.

- **நம்முடைய பயங்களை சங்கிலிகளால் கட்டிவைத்து நம்மை பலப்படுத்துகிறது.**

"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்." (ஏசாயா 41:10)

- **நமது கவலைகளிலிருந்து நமக்கு விடுதலை தருகிறது.**

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொள்ளும்." (பிலிப் 4:6,7)

- **நமது உள்ளத்தை சுத்திகரிக்கிறது**

"நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்." (யோவான் 15:3)

கிறிஸ்தவன் ஆன ஒரு கப்பல் தள தொழிலாளியைப் பற்றி ஒரு தடவைப் படித்தேன். கப்பல் தளத்தில் வேலை பார்த்த அவன் நாள் முழுவதும் ஆணையிடுதலும் தூஷணமான வார்த்தைகளையுமே கேட்டிருந்தான். அவன் வேலையிலிருந்து வீடு வந்து சேர்ந்த பிறகு அவன் தன்னைச் சுத்தம் செய்து கொண்ட பிறகு அவன் முதல் முதலாகச் செய்யும் காரியங்களில் ஒன்று அமர்ந்திருந்து வேதாகமத்தைப் படிப்பதாகும். தேவனுடைய வார்த்தையை அவனுடைய இருதயத்தின் வழியாக வைத்திருப்பது அவனுக்கு சுத்திகரிக்கப்பட்ட பலனைக் கொடுக்கிறது என்று சொன்னான்.

- **மிகவும் அவசியமான நேரங்களில் அது ஆயத்தமாக இருக்கிறது.**

நான் உன்னை விட்டு விலகுவதில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு, கர்த்தர் எனக்குச் சகாயர். நான் பயப்படடேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே? (எபி 13:5-6)

- **அது வழி காட்டுவதற்கு தயாராய் இருக்கிறது. (சங் 32:8)**
- **அது சோதனை காலத்தில் உதவி புரிய ஆயத்தமாய் இருக்கிறது. (I கொரி 10:13)**
- **"நாம் அறியாததும் எட்டாததுமான பெரிய காரியங்களைச் செய்ய" தைரியம் கொடுக்கிறது. (ஏரேமியா 33:3)**
- **நமது துக்கத்தில் ஆறுதல் தருகிறது. (சங் 23)**
- **நாம் தளர்ந்து போகையில் நம்மை உற்சாகப்படுத்துகிறது. (கலா 6:9)**
- **நம்முடைய ஆத்துமாவின் வெறுமையை நிரப்புகிறார். (சங் 107:8-9)**

"ஆனால்" "நான் இப்போ மனப்பாடம் பண்ண முடியாது" அல்லது "எனக்கு வயதாகி விட்டது" என்று சொல்லலாம்.

அது மிகவும் சுலபம் என்று சொல்லமாட்டேன். அது நேரம், முயற்சி, ஒப்புடைப்பு போன்றவற்றை மற்ற எந்த விதமான பயனுள்ளதொன்றைப் போல காலத்தை எடுத்துக் கொள்கிறது. ஆனால் அதற்கு உதவுவதற்காக சில நுட்பங்கள் இருக்கின்றன.

நீ திரும்பத் திரும்ப பழக்கப்படுத்திக் கொண்ட குரலிலும் அலைவரிசையிலும் அந்த வசனத்தை உரக்கச் சொல்லிப் பார்க்கவும். வசனத்தை மனப்பாடம் செய்தல் என்ற திட்டத்தை அபிவிருத்தி செய்து கொண்டவர்கள் மூன்று விதிகளை கடைபிடிப்பர். திரும்பச் சொல், திரும்பச் சொல், திரும்பச் சொல் நாம் அமைதியாகப் படிக்கும்பொழுது நமது கண்களையும் சிந்தையையும் பயன்படுத்துகிறோம். நமது உதடுகள், நமது நாக்கு, நமது குரல் வளை, நமது காதுகள் முதலியன செயல்படுகிறது. ஒரு அதிகாரத்தின் பகுதியை மனனஞ் செய்யும்பொழுது எப்பொழுதுமே ஒரே மொழிப் பெயர்ப்பையும் அதே பதிப்பையும் பயன்படுத்துக. நாம் படங்களாக மனதில் பார்க்கிறோம். அந்தப் பக்கத்தில் அது தோன்றி வரும்பொழுது உன் மனதில் அதைப் படமாக பார்க்கவும்.

நமக்கு கர்த்தருடைய வசனமானது தாராளமாகக் கிடைக்கும்படி ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதால் நாம் யோபுடனே சேர்ந்து, "அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய் காத்துக் கொண்டேன்." (யோபு 23:12) என்றும் சொல்லலாமே. மேலும் ஏரேமியாவின் அறைகூவுதலை மகிழ்ச்சியுடன் எதிரொலியாக "உம்முடைய வார்த்தைகளைக் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியுமாயிருக்கிறது. சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது." என்று எதிரொலிக்கலாமே. ஆமென். (ஏரேமியா 15:16)

வேதாகமமும் குடும்பமும்

1. <u>குடும்பம் எப்படி ஆரம்பமானது?</u>

ஆதி 1:27-30 ஒரு எளிமையான செவ்வாக்கியமாக தேவன் தமது சாயலாக மனுஷனை சிருஷ்டித்து படைப்பு வரிசையில் உலகத்தில் தலைமையாக வைத்தார். இந்த விவர அறிக்கையில் ஆணும் பெண்ணும் என்று வகுப்பு வாரியாக சிருஷ்டிக்கப்பட்டதென்பதை ஆதி 2:18-20ல் அதற்கான காரணம் விரிவாக்கம் செய்யப்படுகிறது. இந்த இரண்டு வசனப் பகுதிகளைக் குறித்து பின்வரும் பார்வைக் குறிப்புகளைத் தரலாம். அவை இந்த குடும்பம் எப்படி ஆரம்பித்ததென்பதைப் புரிந்து கொள்ள பெரிதும் உதவும்.

a) தேவன் ஆதாமுடன் செய்த ஏதேன் தோட்டத்து உடன்படிக்கையின்படி சிருஷ்டிப்பின் தலையாக ஆதாம் பேரில் நிபந்தனைகளும் பொறுப்புகளும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பின்வருமாறு சராம்சமாகக் கூறலாம்.

i) பலுகிப் பெருகி பூமியை மக்களால் நிரப்பும் படியாக ஆணையிட்டார். (ஆதி 1:28)
ii) பூமியைக் கீழ்படுத்தி ஜீவ ஜந்துக்களை ஆண்டு கொள்ளும் உரிமையைத் தந்தார். (ஆதி 1:28)
iii) ஏதேன் தோட்டத்தைக் குறிப்பாக பாதுகாக்கவும் அதன் கனிகளை அனுபவித்து மகிழவும் உத்தரவிட்டார். (ஆதி 1:29; 2:15)
iv) தோட்டத்தின் நடுவில் இருக்கும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்காதிருக்கவும் அப்படி புசிக்கும் நாளில் சாகவே சாக வேண்டும் என்ற தண்டனை விதியாகும் என்று கூறினார். (ஆதி 2:16-17)

ஆதாமோடு செய்த இந்த ஏதோன் தோட்டத்து உடன்படிக்கையானது ஆதாமும் அவனுடைய மனைவியான ஏவாளும் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்த பொழுதில் அது ரத்து செய்யப்பட்டு அவர்களது ஆவிக்குரிய (ஆதி 3:23-24) மாம்சத்துக்குரிய மரணம் (ஆதி 5:5) ஆகியவற்றிற்கு வழி வகுத்தது. பின்னர் ஆதாமுடன் உடன்படிக்கை என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டது. (ஆதி 3:14-21)

b) ஸ்தீரியுடைய தேவை (ஆதி 2:18-20)

ஸ்தீரிகள் ஆனவர்கள் தேவனுடைய திட்டத்தில் முற்றிலுமாக அவசியமானவர்கள். மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல (வ 18) என்று குறிப்பிட்டது தேவன்தான் என்பதை குறித்துக் கொள்க. ஆகவே அவர் ஒரு உதவியாளரை உண்டாக்குவதற்குத் தீர்மானித்தார் அந்த உதவியாளர் பொறுத்தமானவராக, ஆதரவான பதில் கூடுதல் உதவி செய்பவராக மனோ ரீதியான, உணர்ச்சிகரமான சமூக சரீரத் தேவைகளான ஒவ்வொன்றிற்கும் அவசியமானவராக இருக்க வேண்டும். அந்த ஒழுங்குபடுத்தும் நிரலானது தேவனால் ஒழுங்கு செய்யப்பட்டு ஆதாமுக்கு அவனுடைய தேவையாகிய ஒரு உதவியாளரை எடுத்துக்காட்டுவதாகும். ஏனென்றால் அவர் சகல பறப்பனவற்றையும், மிருக ஜீவன்களையும் ஆதாமிடம் கொண்டு வந்து அவற்றை கண்டறிந்து பெயரிடுமாறு கூறினார். ஆனால் தனக்குச் சரியாக ஒப்பிடக்கூடிய ஒரு உதவியாளர் ஒருவரும் அச்சமயம் அங்கு இல்லை. (வ 19-20)

c) மனிதனுடைய வாழ்க்கை வசதிக்காக ஸ்தீரி

தேவன் ஆதாமை நித்திரைபோகும்படி செய்தார். பின்னர் அவனிடமிருந்து ஒரு விலா எலும்பை நீக்கி எடுத்தார். ஆதாமிடம் இருந்து தமது நோக்கத் திட்டத்திற்காக போதுமானதை மட்டும் எடுத்துக் கொண்டார். ஆதாம் தனக்குக் கொடுக்கப்பட்ட உதவியாளரை தனக்குச் சமமாக கண்டு அறிந்து கொண்டான். "எலும்புகளில் எலும்பும் மாம்சத்தில் மாம்சமுமாக" (வ. 22-23) இதன் பலா பலனாக உலகத்திற்கே பொதுவான திருமணம் என்ற பிரமாணமே, ஆக ஆனது.

..... திருமணத்திற்கான பொறுப்பு மனிதனின் தோள் மேல்
..... அவன் தன் பெற்றோரை விட்டு விட வேண்டும். (வ. 24)

..... இந்த ஐக்கியத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்பு மனிதனைச் சார்ந்தது. (வ. 24); அவன் தன் மனைவியோடு இசைந்திருப்பான். (எபேசியர் 5:31)

..... இந்த ஐக்கியம் பிரிக்கப்படக் கூடாததாக ஒரே மாம்சமாய் மனைவியுடன் இசைந்து இருப்பான். (வ. 24)

பின்குறிப்பு: ஆதாமும் அவனுடைய மனைவியும் தங்களுடைய சுய சித்தத்தை இன்னும் பெற்றிருந்தனர். ஆகவே தேவனுக்குக் கீழ்படியாமையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு.

தேவனுடைய வார்த்தையானது ஜீவியத்திற்கான ஓர் நன்னடத்தைப் பிரமாணமாக நாம் பின்பற்றும் படியாக முன் வைக்கப்பட்டுள்ளது. கட்டாயமாக ஏற்றுக் கொள்வதென்றல்ல. ஆனால் தேவன் தாமே கீழ்படிதலை கடைபிடித்து வந்தால் ஆசீர்வாதம் தருவேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (யாத் 19:5-6)

d) முதல் மனிதன் முதல் ஸ்தீரியின் (ஸ்தான) நிலை (வ.25)

இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படவில்லை. நிர்வாணத்தில் வெட்கம் என்று ஒன்றும் இல்லை. அதாவது கணவன் மனைவி என்ற நிலைக்குள்ளாக அவர்களது உறவு தொடர்பில் நிர்வாணம் நேரிடும் போது வெட்கப்படுவதில்லை. ஆகவே இது போதிப்பதாவது:

..... பாலுறவு என்பது தெய்வீகத் திட்டம் ஆகையால் பாவமாகாது.

..... பாலுறவு மனிதனுடைய வீழ்ச்சிக்கு முன்னதாகவே இருந்தது. வீழ்ச்சி என்று ஒன்று நேர்ந்திருக்காவிட்டாலும் பாலுறவு நீடித்திருக்கும்.

..... பலுகி பெருகி (ஜாதி ஜாதியாக) பெருகுதலானது திட்டமிடப்பட்டது. ஆனால் இது மட்டும் பாலுறவு என்பதற்கான ஒரே காரணமல்ல. வேதாகமம் வேறு இரண்டு வகையை அதிகமாகச் சொல்லுகிறது. கணவன் மனைவி இடையில் அன்பை விருத்தி செய்து (எபி 13:4) விபசாரத்தை தடுத்து நிறுத்த வேண்டும். (I கொரி 7:2) என்பதே.

2. <u>ஒரு கிறிஸ்தவ இல்லத்துக்கு இன்றியமையாதவை</u>

இஸ்ரவேல் புத்திரரின் புதிய சந்ததியார் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் பிரவேசித்த போது நியாயப்பிரமாணத்தின் ஒரு மறுபார்வையை சொல்லக் கேட்டு அறிந்தனர். (உபா 6:1-3) இந்த புத்திமதிகள் நேரடியாக அவர்களது வீட்டை தாக்கம் செய்து ஜனத்தின் மத்தியில் சொற்பொருளாக அமைந்தது.

a) தேவனைப் பற்றிய ஒரு வெளிப்படுத்தல் இருக்க வேண்டும். (உபா 6:4) அவருடைய நித்தியம், கர்த்தத்துவத்தில் திரித்துவம், அந்தக் கர்த்தத்துவத்துக்குள்ளானதோர் ஐக்கியம்.

b) தேவனுடைய வெளிப்படுத்துதலுக்கு ஒரு பிரதியுத்தரம் இருக்க வேண்டும். (உபா 6:5) ஆள் தன்மை, இருதயம், ஆத்துமா, சித்தம் சிந்தனை இவற்றில் முற்றிலுமானதோர் ஒப்படைப்பு. தன்னைத் தான் வெளிப்படுத்திய நித்தியமான தேவனுக்கு இந்த ஒரே ஒரு பொருத்தமான பிரதியுத்தரமாகும்.

c) அங்கு பொறுப்பு இருக்க வேண்டும். (வ. 6-9) .....

..... தேவனுடைய சத்தியம் அவன் இருதயத்தை ஆளுகை செய்ய (வ. 6) அதாவது இருதயத்தின் மெய்ம்மை, ஒப்பாகப் போவதல்ல அல்லது சடங்காச்சாரமோ அல்ல.

..... அவனுடைய வீட்டை தேவனுடைய அன்பு ஆளுகை செய்ய (வ. 7) சாதாரணமாக போதனையால் கற்பிக்கவும், அல்லாமல் விவாதத்தாலும், முன் மாதிரியாலும் (நீதி 22:6)

..... தேவனுடைய சத்தியம் அவனுடைய தனிப்பட்ட நடத்தை பழக்க வழக்கங்கள் இவற்றை ஆளுகை செய்ய தனிப்பட்ட முறையிலும் பகிரங்கமாகவும். (வ. 8-9)

"இல்லம்" என்பது "தெய்வீகப் பாட சாலையாகக்" கருதப்பட வேண்டும். இதில் கிறிஸ்துவுக்கு கீழாக தகப்பன் ஆசிரியர் - தலைமை ஆசிரியராக இருப்பார்.

3. <u>இல்லத்தில் மனையாளின் பங்கு</u>

குடும்பத்தில் மனைவியுடைய ஒரே ஒரு பொறுப்பானது புருஷனுக்குக் கீழ்படிந்து இருப்பதாகும். பொதுவாக மனித குலம் முழுவதற்கும் அல்ல. இது எந்த விதமான இயற்கையான தாழ்வு மனப்பான்மையை உணர்த்துவதாக இல்லை. ஏனென்றால் திருமணத்தின் மூலமாகக் கணவனும் மனைவியும் ஒன்றாகிறார்கள். அதன் விளக்கமாவது இரண்டு ஞான சித்திகள், உணர்ச்சிகள், சித்தங்கள் ஒரே அங்கமாக ஐக்கியமாக ஆகின்றன. இந்த விதமான ஒன்றுபட்டு இருப்பதை சிதைந்து போவதிலிருந்தோ அல்லது தன்னை அழித்துக் கொள்வதிலிருந்தோ ஒரு நபருக்கு தலைமைத்துவமும் மற்றவருக்கு பணிந்து கீழ்படிதலும் பொறுப்பாக கொடுக்கப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவுக்கும் இதே பணிந்து கீழ்படிதலும் பொறுப்பாக கொடுக்கப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவும் இதே பணிந்து கீழ்படிதலை தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு இருவரும் வல்லமையில் இணை சமமானவர்களாக இருந்தாலும் முன்னதையே செய்து காட்டினார். (I கொரி 11:3; யோவான் 14:10-11)

தன் கணவனுக்கும் மனைவியின் பணிந்து கீழ்படிதலானது அது அவளை அலங்கரிப்பதாக மெய்யாகவே அவளை அழகாக அலங்கரிக்கிறது. உள்ளான அழகே தேவனுக்கு விலையேறப் பெற்றது. (I பேதுரு 3:3-4) பழைய ஏற்பாட்டு ஸ்தீரிகள் மேசியாவுக்கு வாய்க்காலாக இருக்கும்படியாக நம்பிக்கை வைத்தவர்களாக தங்களுடைய புருஷருக்குப் பணிந்து கீழ்படிந்ததினாலே தங்களை அழகாக அலங்கரித்துக் கொண்டார்கள். (வ. 5) - சாராள் உதாரணமாகத் தரப்பட்டிருக்கிறாள். (வ. 6) இதைப் போலவே மனைவிகளும் இயேசுவினுடைய அலங்காரமாகிய அழகை அவரது சரீரமாகிய திருச்சபையின் அங்கத்தினர்களாக தங்களுடைய கணவர்களுக்குப் பணிந்து கீழ்படிந்து வெளிப்படுத்தினார்கள். (வ. 1-2) மேலும் I பேதுரு 2:23-25 ஐயும் I பேதுரு 3:1ஐயும் கவனித்துப் பார்க்கவும்.

இந்த விதமான பணிந்து கீழ்படிதலை ஒரு சாதகமான வாய்க்காலாகப் பயன்படுத்தி கணவனை அவன் இரட்சிக்கப்பட்டாலும், இரட்சிக்கப்படாவிட்டாலும் தம்முடன் ஒரு முறையான உறவுத் தொடர்புக்குள் வருவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (I கொரி 7:10-16; I பேதுரு 3:1-2)

4. <u>கணவனுடைய பங்கு</u> **(இல்லத்தில்)** (கொலோ 3:19)

> ..... கணவன்மார்கள் தங்களுடைய மனைவிகளில், கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்தது போலவே அன்பு கூற வேண்டும். (எபேசி 5:25)
> ..... கணவனும் விவேகத்துடன் மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்து அவர்களுக்கு கொடுக்க வேண்டிய கனத்தையும் (மரியாதையையும்) கவனத்தையும் தர வேண்டும். (I பேதுரு 3:7)

இந்த விதமான அன்பு முக்கியமாக பாலுறவிலோ அல்லது உணர்ச்சி வசத்திலோ சம்பந்தப்பட்டதல்ல. (ஆனாலும் இரண்டு விதமான கருத்துக்களும் சேர்ந்திருந்தாலுங்கூட) ஆனால் தன்னுடைய சதியிலிருந்து எந்த விதமான பதில் கிரியை இருந்தாலும் அல்லது அதில் குறைபாடு இருந்தாலும் அது ஸ்திரமாக நிலை நிற்கும் அன்பாகும். இது வாய் திறந்த அன்பு (வியப்பினால்) என்று சொல்லப்படும். நிபந்தனையற்ற, தியாகமுள்ள ஆனாலும் முன்னேற்றுவிக்கும் அன்பாகும். இந்த விதமான அன்பையே தேவன் இந்த பூவுலகிற்காகக் கொண்டிருந்தார். (யோவான் 3:16ஐப் பார்க்கவும்) மேலும் அது ஆவியின் கனியாகும். (ஆவியினால் பெறப்படும் கனி) (கலா 5:22; I கொரி 13:4-8ய)

<u>ஒரு கணவன் பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கிறிஸ்தவனாக இருந்தால்தான் தன் மனைவியில் சரியாக அன்பு கூற முடியும்.</u>

ஒரு கணவனுக்கு குடும்பத்தில் இருக்கும் இரண்டு பொறுப்புகளாவது ஒன்று தனது அறிவுப்படி தன் மனைவியுடன் சேர்ந்து வசிக்க வேண்டும், மேலும் மற்றொன்று தன் மனைவிக்கு அவள் மனைவியாக இருப்பதற்குரிய மரியாதையைத் தர வேண்டும். "சேர்ந்து வசித்தல்" என்பது கணவன் தான் சம்பந்தப்பட்ட எல்லா விதமான குடும்ப வாழ்க்கையின் அம்சங்களிலும் (பங்கெடுத்துக் கொள்ளுமாறு) வைக்க வேண்டும். மேலும் அங்கு "தனிப்பட்ட மூலைகளோ அல்லது அறைகளோ" இருக்க முடியாது. இந்த இரண்டு விதமான தேவைகளுக்கு ஓர் ஆவிக்குரிய நோக்கம் உண்டு. "உங்கள் ஜெபங்கள் தடைபண்ணப்படாதபடிக்கு" (I பேதுரு 3:7) தன் குடும்ப வாழ்க்கையில் எல்லா அம்சமான

பகுதிகளுக்கும் தன் மனைவியை எடுத்து செல்லத் தவறுகிற மனிதன் தேவனுடைய நோக்கத்தின்படி அவளுடன் தொடர்பு கொள்ள முடியாது. ஆகையால் அநேக சமயங்களிலுங்கூட தேவனுடனும் அவனால் தொடர்பு கொள்ள முடியாது. தேவனுடன் செய்தித் தொடர்பு கொள்ளும் வாய்க்கால் முற்றிலும் திறந்ததாக வைத்திருப்பதை உறுதிப்படுத்துவதானால், தன் மனைவியுடன் வைத்திருக்கும் செய்தித் தொடர்பும் திறந்திருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இந்த நடைமுறையால் மட்டுமே. ஒரு மனிதன் தன் மனைவியை தேவன் எப்படி நேசிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறாரோ அவ்வண்ணமே உண்மையாக நேசிக்க முடியும். மேலும் தேவனால் அளிக்கப்பட்ட தலைமைத்துவத்துவமும் முறையாகக் கிரியை செய்ய முடியாது.

5. <u>குடும்பத்தின் பிள்ளைகளின் பங்கு</u> (நீதி 1:8)

பழைய, புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் குடும்பத்தில் பிள்ளைகளுக்குள்ள ஒரே பொறுப்பு - அவர்கள் பெற்றோருக்கு கீழ்படிய வேண்டும் என்ற கருத்தில் ஒத்துப் போகின்றன.
தேவன் இரண்டு முறை குடும்ப விவகாரங்களில் தலையிட்டு பிள்ளைகள் சம்பந்தமாக குறிப்பிடக்கூடிய போதனைகளையும் கொடுத்தார்.

> ..... மோசேக்கு ..... உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக. (யாத் 20:12)
> ..... பவுலுக்கு ..... பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்படியுங்கள். (எபேசி 6:1-3)

பிள்ளைகளுக்காக தேவனுடைய சித்தமானது அவர்களுடைய பெற்றோருக்கு கீழ்படிந்து அவர்களைக் கனப்படுத்த வேண்டும் என்பதாகும். "கர்த்தருக்குள்" என்ற சொற்றொடர் கிறிஸ்தவ பெற்றோருக்கு அவர்களுடைய பொறுப்பை வரையறுப்பதில்லை. (கொலோ 3:20) தெளிவாக குறிப்பிடுவதாவது பிள்ளைகள் எல்லாக் காரியங்களிலும் தங்கள் பெற்றோருக்குக் கீழ்படிய வேண்டும் என்பதே. "கர்த்தருக்குள்" என்ற வார்த்தை அது "கர்த்தருடைய கட்டளை" என்று பொருள்படும். "இது நியாயமானதும்" என்பது அது "நீதியானது அல்லது தெய்வீகமானது" என்று குறிப்பிடப்படும். கிறிஸ்துவே பெற்றோருக்கு கீழ்படிதல் என்பதற்கு உன்னதமானதோர் மகத்தான எடுத்துக்காட்டு ஆவார். (பிலிப் 2:6-8)

இந்த பிரமாணங்களை கைக்கொள்ளும் பிள்ளைகளுக்கு சந்தோஷமான தீர்க்காயுசு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. அது அவர்களுக்க நன்மையாக இருக்கும். இவை இரண்டுமே உண்மையாக விரும்பப்படும் இரண்டு காரியங்களாகும். வழக்கமாக இவை மற்ற கோணங்களிலிருந்து தொடர்ந்து போகும் அதாவது புகழ், செல்வம் ஆகியவை ஆனால் தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது என்னவென்றால் இந்த இரண்டுமே பெற்றோருக்குக் கீழ்படிதலினால் மாத்திரமே அடைய முடியும் என்று உரைக்கிறது. தங்களுடைய பெற்றோருக்கு கீழ்படிதலைக் கற்றுக் கொள்ளாத பிள்ளைகள் தேவனுடைய பிரதிநிதிகளான பெற்றோருக்கு கீழ்படியாதவர்கள் தேவனுக்கும் கீழ்படிதலையும் கற்றுக் கொள்ளமாட்டார்கள். வாழ்க்கையின் பிற்பட்ட காலத்தில் இதை உண்மை என்று கண்டு கொள்ளுகிறவர்கள் அந்த கால கட்டத்திலும் அந்த தெய்வீக ஒழுங்கை திரும்பப் பெற்றுக் கொள்ள விரும்பும் பொழுது மிகுந்த போராட்டத்திற்கு உள்ளே கடந்து போவார்கள்.

6. <u>பெற்றோரின் பங்கு</u> (குடும்பத்தில்) (எபேசி 6:4)

குடும்ப வாழ்க்கையை நிறைவேற்றுவதற்கு ஒழுங்கு முறையானது மத்திய கருத்துக் கொள்கையாகும். அநேக காரியங்கள் சந்தோஷத்தைக் கொண்டு வருவதற்கு உதவி செய்தாலும் தேவனுடைய வார்த்தையானது எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுங்கு முறையை மாத்திரமே வற்புறுத்துகிறது. பெற்றோராகிய தகப்பன் தான் குடும்பத்தில் பிள்ளையானவன் கீழ்படிதலுக்குரிய மாதிரியான திட்டத்தை அமைத்துக் கொடுப்பதற்கு பொறுப்பானவன். தாயாரால் கொடுக்கப்படும் எந்த விதமான ஒழுங்குமுறையும் குடும்பத்தில் தகப்பனுடைய அதிகாரத்தின் விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக வெற்றியுடன் செலுத்த முடியும். கணவனாகிய தனப்பனார் குடும்பத்தின் இந்தப் பகுதியில் மனைவியும் தாயுமானவளின் பணிந்து கீழ்படிதலுடன் தலைமைத்துவத்தை எடுத்து ஏற்றுக் கொள்ள வேண்டும். தகப்பனுடைய தலைமைத்துவத்திற்குள் இரண்டு குறிப்புகள் உள்ளடங்கும்.....

> ..... அவன் தன் பிள்ளைகளை கோபத்தை உண்டாக்கும்படி தூண்டி விடப்படக்கூடாது. அதாவது வரம்புக்கு மிஞ்சிய ஒழுங்கினாலும் அல்லது பயமுறுத்தும் ஆளுகையினாலும்

கீழ்படுத்த நினைப்பதாலும் அதன் விளைவாக பிள்ளைகள் குருட்டுத்தனமான சினத்துடன் எதிர் கிரியைகளைச் செய்யக் கூடும்.

..... அவன் பிள்ளைகளை தேவனுக்கேற்ற பயிற்சியிலும் கண்டிப்பிலும் வளர்த்து வர வேண்டும்.

இது நடைமுறையில் மூன்று காரியங்களை உள்ளடக்கும்:

a) குழந்தைகள் பெற்றோரைச் சார்ந்திருக்கும் காலம் வரை அது தொடர்ந்து நீடிக்கும். தேவன் குழந்தையை எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அவ்வாறே ஆகும்படி தகப்பன் ஆனவன் பிள்ளைக்குத் தேவையானவற்றை தந்து விட வேண்டும்.

b) இது கடின உழைப்பின் அன்பாகும். "வளர்த்து வர" என்பது எழுத்துப் பிரகாரம் "மிகுந்த சாந்தத்துடன் போஷிக்க" என்று அர்த்தப்படும். பிள்ளைகள் சாந்தமான அன்பின் கவனத்துக்குரிய ஆட்களாக ஆக வேண்டும்.

c) இது இரண்டு வகையான கடமையாகும். அத்துடன் போஷாக்கையும் சேர்ந்து, (அதாவது) பயிற்றுவித்தல் - குழந்தை தன் அபிவிருத்தி வளர்ச்சிக்கு அவன்/அவள் விருத்திக்கு ..... சரீரப் பிரகாரமாக, மனோ ரீதியாக, ஆவிக்குரிய பிரகாரமாக மேலும் கர்த்தருக்கேற்ற கண்டிப்புடன் விருத்தியடைவதற்காக.

தகப்பனானவன் தேவனால் ஸ்தாபனம் பெற்ற இல்லத்து அதிகாரத்துவத்தை உடையவன் தேவன் விரும்புகிறபடி பிள்ளையானது / அவனோ / அவளோ கீழ்படியாதபொழுது பிள்ளையை கண்டித்து ஒழுங்கு பெற நடத்த வேண்டும். மேலும் சற்று அதிகமாக குழந்தைகளுக்குள் ஒழுங்குக் குறைவானது இதைப் போன்ற ஒழுங்குக் குறைவானது இதைப் போன்ற ஒழுக்க நெறிக் குறைவை தகப்பனிடத்திலும் பிரதிபலிக்கிறது. ஒரு குழந்தையின் கீழ்படியாமையை சாதாரணமானதாகக் கருதப்படக் கூடாது.

குறிப்பு: யாத் 21:15 ..... தன் தகப்பனையோ தாயையோ அடிக்கிறவன் சாக வேண்டும். உபா 21:18-21 ஒரு மனிதனுக்கு பிடிவாதமுள்ள கலகம் செய்யும் மகன் இருந்தால் ..... எல்லா இஸ்ரவேலரும் கேட்கவும் வேண்டும். பயப்படவும் வேண்டும்.
மேலும் நீதி 13:24; 19:18; 22:15; 23:13-14; 29:15-17 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்.

7. குழந்தைகளை வளர்ப்பதற்கான நிவாரணச் சீட்டு

இந்த வசனம் இரண்டு தேவையான கருத்துக்களை உடையது - கட்டளை ஒன்றும், வாக்குத்தத்தம் ஒன்றும் .

கட்டளை மூன்று பகுதிகளை தன்னுள் கொண்டது.

a) பயிற்சி கோட்பாடு ..... பயிற்றுவிக்க. இது கடுரமான தண்டனையைக் குறிப்பதாக இல்லை. ஆனால் சற்று குறைவாக.....
..... அந்தக் குழந்தை தேவனுக்கு சொந்தமானது என்று பெற்றோர் உணர்ந்து அர்ப்பணிக்கும் பொழுது அவர்கள் தேவனுடைய ஈவுக்கான உக்கிராணக்காரர் ஆகிறார்கள். (சங் 127:3-5)
.....போதனை - பெற்றோரால் கொடுக்கப்படும் விஷய ஞானம் பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து தேவனைப் பற்றி போதிக்கப்பட்டிருக்க வேண்டும். (உபா 6:7)

b) பயிற்சியைப் பெற்றுக் கொள்வது குழந்தை அல்லது சார்ந்திருப்பவன் பெற்றோர் மீது குழந்தைகள் சார்ந்திருக்கும் காலம் வரைக்கும் வயதுவரம்பின்றி பயிற்சியைப் பெற்றுக் கொள்பவன் ஆகிறான்.

c) பயிற்சியின் பொருள் அளவு - "அவன் போக வேண்டிய வழியில் போகும்படியாக" இது ஒவ்வொரு வளர்ச்சி மட்டத்திலும் பெற்றோர் அல்லது போஷகர் குழந்தையை அர்ப்பணித்தும், போதித்தும், ஊக்குவித்தும் தேவனால் எதற்கென்று குழந்தை அவருக்காக சிறப்பாகச் செய்யும்படி தகுதி பெற்றிருக்கிறதோ அதைச் செய்யும்படியாக ஊக்குவிக்க வேண்டும்.

யோசுவா சொன்னதாவது, "நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரைச் சேவிப்போம்" (யோசுவா 24:15).

இந்தக் கட்டளையைக் கைக் கொண்டால் இந்த வாக்குத்தத்ததைச் சுதந்தரித்துக் கொள்ளலாம்.

இந்த வாக்குத்தத்தத்தில் அதை நிறைவேற்றும் காலமும் உள்படுத்தப்படுகிறது. அவனுக்கு (பிள்ளைக்கு) வயது வந்த பிறகு அதாவது 'பெற்றோரைச் சார்ந்திராமல்' 'சுதந்திரமாக இருந்தால்' என்பதாகும். இந்த வாக்குத்தத்தம் அதைப் பெற்றுக் கொள்ளும் காலத்தை பற்றிய நிச்சயத்தையும் உட்படுத்தும். "அவன் அதை விட்டு பிரியாதிருப்பானாக" இந்தக் கட்டளையானது கைக்கொள்ளப்பட்டால் இந்த வாக்குத்தத்தம் உறுதி பத்திரமாகும். குழந்தைகள் வளர்ப்பதென்பது ஒரு இராக்காலப் போக்கில் நேரிடும் நிகழ்ச்சி அல்ல. அது ஜாக்கிரதையான முன் யோசனையுடன், விழிப்புணர்வுள்ள கீழ்படிதலும் பெற்றோர்களின் பங்குக்கு தேவைப்படுகிறதாகிறது.

அடிக்குறிப்பு: தேவனுடைய தயவுள்ள தெய்வீக சித்தத்திற்கு புறம்பே வாழும் குடும்பங்கள், தங்கள் பிள்ளைகள் தேவனுடைய சித்தத்திற்குள் அடி அடியாக நடத்தப்படும்படியாக ஜெபித்து வர வேண்டும். தேவன் கீழ்படியாமையையும் நீதியற்ற தன்மையையும் ஆசீர்வதிக்க முடியாது. கிருபையின் காலமானது தெய்வீக ஆசீர்வாதமாக குடும்பங்களுக்கு நேர அவகாசத்தைத் தந்து நீதியைக் கண்டுபிடித்து அதை நிறைவேற்றி பாவத்தில் தொடர்ந்து நிற்காதிருக்கும் படியாக எனென்றால் பழைய ஏற்பாட்டின் காலத்தைப் போல தேவனிடமிருந்து உடனடியான நியாயந்தீர்ப்பு வருவதில்லை. (ரோமர் 6:1)

பாலியல் பாவங்களால் ஏற்படும் படுகுழி வீழ்ச்சிகளைத் தவிர்த்தல்

ஒவ்வொரு ஆலோசகரும் பாலியல் பாவங்களால் வரும் தீய விளைவுகளை நன்றாகப் பார்த்திருக்கிறார்கள். எல்லாவற்றிலும் அடிக்கடியும் பாலியல் பாவங்கள் உணர்ச்சி பூர்வமான பிரச்சனைகளான சுய கண்டனம் சுய மரியாதை இழப்பு, குற்ற மனப்பான்மை, அதீதமான கவலையான எதிர்பார்ப்பு, தாழ்வுணர்ச்சி, குழப்பம், பயம் முதலியவற்றிற்கு வழி நடத்துகிறது. பாலியல் பாவங்கள் ஆழமான உணர்ச்சி பூர்வமான காயங்களை ஏற்படுத்தி அதனால் ஒரு மனிதனை அவன் ஆயுட்காலம் முழுவதும் காயப்படுத்தி புண்படுத்துகிறது. பாலியல் குற்றங்களைப் பற்றிய குற்றவுணர்வு ஒரு ஆயுள் காலம் முழுவதுமே தொடர்ந்து பயமுறுத்தும். தற்காலத்திய பாலியர் சுதந்திரம் என்று அழைக்கப்படுவது சுதந்திரம் என்பதை உண்டாக்குவதில்லை. ஆனால் தேவனுடைய அழகிய திட்டமான உண்மையான பாலியல் நிறைவையும் இன்பத்தையும் தவறாகப் புரட்டி புரளச் செய்து அநேகரான அந்த மக்களை உணர்ச்சி பூர்வமாகவும் மனோ ரீதியாகவும் அந்த ஆசாபாசங்களால் அடிமையாக்கி விடுகிறது. இந்த பாவமானது அநேக மகா பெரிய மக்களான சாலமோன் இராஜாவைப் போன்றவர்களை அழித்து நாசமாக்கி இருக்கிறது.

I கொரிந்தியர் 6:18, "வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்த பாவங்களும் சரீரத்திற்குப் புறம்பாய் இருக்கும். வேசித்தனம் செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாய் பாவஞ் செய்கிறான்."

நீதி 6:32-33 "ஸ்தீரியுடன் விபசாரம் பண்ணுகிறவன் மதி கெட்டவன். அப்படி செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுகிறான். வாதையையும் இலச்சையையும் அடைவான். அவன் நிந்தை ஒழியாது."

தேவனே தாமே மனிதன் அல்ல பாலியலைப் படைத்தார்

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக விவாகத்தை உண்டாக்கினார். அதாவது விவாகத்தின் வழியாக பாலியல் உறவு ஆகையால் அதை நன்றி செலுத்துதலோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். (I தீமோத் 4:3-5) கிறிஸ்தவ தம்பதிகள் பாலியல் உறவு தொடர்புகளினால் தங்களது உறவை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கும் சாத்தியக் கூறு விசுவாசிகள் அல்லாதவர்களைவிட அதிகம் இருக்கிறது. ஏனென்றால் இந்த விஷயத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய அன்பை அனுபவித்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையாகவே அன்பாக இருக்கலாம். மேலும் அவர்களுக்கென்று உன்னதமானதோர் எடுத்துக்காட்டு உள்ளது. அதன் பிரகாரம் அவர்கள் தங்கள் விவாக உறவுத் தொடர்பை அந்த மாதிரியான கோல வடிவமைப்பில் உருவாக்கிக் கொள்ளலாம். அதாவது கிறிஸ்துவும் அவரது திருச்சபையும் (I யோவான் 4:10-12; எபேசியர் 5:22-23; ரோமர் 5:5 முதலியன) ஆலோசகர்களும் விரிவான புள்ளி விவரங்கள் ஆக இரண்டும் உண்மையிலே நிரூபிப்பதாவது கிறிஸ்தவ தம்பதிகள் பொதுவாக தங்கள் பாலியல் உறவுத் தொடர்புகளை விசுவாசிகள் அல்லாதவர்களை விட அதிகமாக அனுபவித்து இன்புறுகிறார்கள் என்பது தான். தேவன் தாமே இந்த பாலியல் விவாக உறவுத் தொடர்புகளின் உள்ளே வாழ்க்கையின் அதீதமான எழுச்சியூட்டும் அனுபவத்தை திரும்பத் திரும்ப நடத்தும் ஓர் அடிப்படையான முறையில் வசதியாகத் தந்திருக்கிறார் என்றும் மேலும் இந்த அனுபவம் விவாகம் செய்து கொண்ட ஆண்டுகள் செல்லச் செல்ல அதனுடன் மாத்திரமே அதீதமாக வளர்ந்து வருவதாகும். ஆனால் தேவன் தாமே, மனுஷன் தனது பாலியல் உறவுத் தொடர்புகளை தேவனால் நியமிக்கப்பட்ட விவாக உடன்படிக்கையின் எல்லைகளில் வெளிப்படுத்த வேண்டும் என்று உறுதி நியமனம் செய்திருக்கிறார். இதற்கு மற்றொரு மார்க்கம் தான் சுயக்கட்டுப்பாடாகும். இந்த சுய கட்டுப்பாடுதான் அதிகமான சுய மரியாதையையும் பலமுள்ள ஒழக்கத்தையும் கட்டி எழுப்புகிறது. இதனால் உண்டாகும் குறைவானது தாழ்வான சுய கௌவரத்துக்கும் தாழ்வு மனப்பான்மைக்கும் இட்டுச் சென்று அது தன்னுடைய முறையில் விவாக உறவுத் தொடர்பில் பிரச்சனையை உண்டாக்குகிறது. (I கொரி 7:9)

பல திறப்பட்ட பாலியல் பாவங்கள்

a. **விபசாரம்** - "இது விவாகமான ஒரு மனிதனுக்கும் தனது துணை அல்லாத அவனுடனோ அல்லது அவளுடனோ அவர்களுக்கு இடையே நடைபெறும் பாலியல் உடல் உறவு" என்று பொருள் விளக்கம் செய்யப்படும். வேதாகமம் இந்த பாவத்தை வன்மையாகக் கண்டிக்கிறது. ஏனென்றால் இது விவாக வாக்குறுதி உடன்படிக்கையின் புனிதத்தை மீறுகிறதாகிறது. வேதாகமம் முழுவதிலும் தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும், விவாகத்திற்கும் கொடுக்கப்படும் படி அவசியமான விசுவாச பக்தியை உறுதியாக அழுத்திக் கூறப்படுகிறது. தெளிந்த புத்தி அல்லது விவேகம் நல்லொழுக்கம், உணர்ச்சி பூர்வமான ஸ்திரத் தன்மை ஆகியவை. விசுவாச பக்தியைச் சார்ந்தே இருக்கிறது. தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறபடியால் மனிதனும் உண்மையுள்ளவனாக இருக்க விரும்புகிறார். விசுவாச பக்தி அல்லது உண்மை பலத்திற்கும் ஒரு மனிதனுக்குள்ள நல்லொழுக்கத்திற்கும் குறிப்பான அடையாளமாக இருக்கிறது. இதற்கு மாறாக விசுவாச பக்தி இல்லாத எந்த பகுதியிலும் அது பலவீனத்திற்கும், பாவத்திற்கும் ஒரு குறிப்பான அடையாளமாகும். மல்கியா 2:13-16ல் முக்கியமாக விவாகரத்து என்பதைப் பற்றி பெரிதும் குறிப்பிட்டு பேசுகிறது. மேலும் விவாக வாக்கு உடன்படிக்கையை மீறுதலைப் பற்றியும் மிகவும் கடுமையாகப் பேசி விமரிசித்து எடுத்துக்காட்டுகிறது. வேசித்தனம் என்பது பாலியல் பாவமாகும் என்று பத்துக் கட்டளைகளில் தெளிவாக அறிவுறுத்தப்படுகிறது. (யாத் 20:14; லேவி 18:20; உபாகமம் 22:22; நீதி 6:29; ரோமர் 13:9; I கொரி 6:9; எபி 13:4)

b. **வேசித்தனம்** - திருமணம் ஆகாத தனி நபர்களான இருபாலாரிடையே உள்ள உடலுறவு எனப்படும். இது புதிய ஏற்பாட்டில் 47 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அது தேவனால் அர்ப்பணிக்கப்பட்ட பாலுறவு நிறைவு அமைப்பு திட்டத்திலிருந்து விலகியோடி செய்யப்பாவம் என்று இழித்துக் கூறப்படுகிறது. மிகவும் அகன்றதோர் கருத்தில் வேசித்தனம் என்பது நெருங்கிய இனத்து உடலுறவு, கற்பழித்தல், பாலியல் தொழில், ஓரினச் சேர்க்கை, விலங்குப் புணர்ச்சி ஆகிய பாவங்களையும் சேர்த்து மூடிக் கவர்ந்து கொள்ளும். (I கொரி 6:9,13,18; கலா 5:19; எபேசி 5:3; I தெச 4:3)

c. **ஓரினச் சேர்க்கை** - ஓரே இனத்தைச் சேர்ந்த மக்களிடையே உள்ள பாலியல் செயல்பாடு. தற்காலத்தில் ஓரினச் சேர்க்கையை சட்ட ரீதியாக ஆக்குவதற்காக மேற்கொள்ளப்படும். கடுமையான தாக்க முயற்சிகள் அது இயல்பான பாலுறவுக்கு மாற்றம் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட வாழ்க்கை முறை என்று சொல்லப்பட்டாலும் வேதாகமம் ஆனது தனது அசையாத திடமான நிலையில் அதை இழித்துக் கூறுகிறது. ஆனாலும் ஓரினச் சேர்க்கையானது பாலியல் மாறாட்டம் என்றும் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட பாலியல் நிறைவான திட்டத்தை வன்மையாக மீறுதல் ஆகும். (லேவி 18:22; ரோமர் 1:26-27; I கொரி 6:9; I தீமோத் 1:10-11)

d. **பாலியல் இயற்பொருள் இலக்கியங்கள்** - இதை பொருட்கள் உதாரணமாக புத்தகங்கள், புகைப்படங்கள், திரைச் சுருள்கள், வீடியோ காட்சிகள், வெப் சைட் எனப்படும் தனக்கே ஒரு வகை இன்ப உணர்ச்சியான நடத்தையைக் காண்பிப்பதாக பாலுணர்ச்சியை தூண்டி விடும் நோக்கத்தை உடையன என்று செய் பொருள் விளக்கம் செய்கிறது. (I பேதுரு 2:11) பாலியல் இலக்கிய ஈடுபாடு என்பது பாலியல் பாவமாகும். ஏனென்றால் இது சிந்தனையை மாசுபடுத்தி பாலியல் மனக்காட்சிகளால் தெய்வீகமான பாலியல் திருப்தியின் நிறைவைத் தர இது அடிக்கடி அந்த நபரைத் சோதனையால் திக்கு முக்காடச் செய்து ஏன் அடிக்கடி பிற பாலியல் பாவங்களான சுய புணர்ச்சி, விபசாரத் தொழில், கற்பழிப்பு, சிறுவர் பலாத்காரம் ஆகியவற்றில் ஈடுபடும் படி வழி நடத்துகிறது. வேதாகமம் கண்களால் செய்யும் பாலியல் இச்சைகளை விபசாரம் என்ற பாவத்தின் சமநிலையில் வைத்திருக்கிறது. (மத் 5:28)

e. **சுய புணர்ச்சி ஈடுபாடு** - இந்தத் தலைப்பைப் பற்றி முரண்படும் அபிப்பிரயாங்கள் கிறிஸ்தவ ஆலோசர்கள் மத்தியில் நிலவுகிறது. ஒரு சிலர் அதை ஒப்புக் கொள்ளக் கூடிய பாலியல் அழுத்தங்களை விடுபடச் செய்யும் வழியாக இருப்பதாகவும் அதனால் பாலியல் பங்கப்படுத்தப்படுவதை தடுப்பதாகவும் ஒரு சிலரால் அதை பாலியல் பாவமாகவும் பார்க்கின்றனர். இந்த விஷயத்தில் வேதாகமம் மௌனமாக இருப்பதால் நாம் விசாலமான வேதாகமத்து கோட்பாடுகளுக்கு திரும்பிப் பார்த்து அதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

1. கொரிந்தியர் 6:12b எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்பட மாட்டேன்.

   குறிப்பு: சரியென்று கருதப்படுகிற காரியங்கள் கூட கிறிஸ்தவன் மேல் பிடிப்பை வைத்துக் கொள்ள அனுமதிப்பதால் அவனோ அவளோ அதற்கு அடிமையாகி விடக் கூடாது. இளம் வாலிப வயதினருக்கும், வயது வந்தவர்களுக்கும் தினசரி சுயபுணர்ச்சியை ஒழங்காக அதை பழக்கமாக பழக்கப்படுத்திக் கொள்பவருக்கு ஆலோசனை கொடுப்பவர்கள். அது ஒரு நபர் மீது பலமான பிடிப்பைக் கொண்டிருப்பதில்லை என்பதை அறிந்திருக்கிறார்கள்.

2. மத்தேயு 5:27-28. "ஒரு ஸ்தீரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்திலே அவளோடே விபசாரம் செய்தாயிற்று."

   குறிப்பு: உள்ளத்தின் உள்ளான சிந்தனையும் இருதயத்தின் அனுமதி உத்தரவும் விபசாரம் என்று கருதப்படுகிறது. இந்த சுயபுணர்ச்சியில் ஈடுபாடு உடையவர்களுக்கு மேலும் பாலின கற்பனை காட்சிகள் என்ற பாவத்திற்குள்ளாவதை தடுத்து விட முடியாது.

3. I கொரி 7:9, ".... அவர்கள் விரக்தராயிருக்கக் கூடாதிருந்தால் விவாகம் பண்ணக் கடவர்கள். வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நல்லது."

   குறிப்பு: தேவன் மாற்று நிலைமைகளைக் கொடுக்கிறார் ஒன்று சுயக்கட்டுப்பாடு மற்றொன்று விவாகம். இதற்கு அடுத்தபடியாக மூன்றாவது மாற்று நிலைமை என்று ஒன்று இல்லை. பவுல் சுயபுணர்ச்சி ஈடுபாடானது பாலியர் இச்சை உணர்ச்சிகளுக்கு வேகிறவர்களுக்கு சரியான விடுபாடு என்று சொல்லவில்லை. ஏனென்றால் சுய புணர்ச்சி ஈடுபாடு விரத தாபத்தை நிறுத்த முடியாது என்பதை அறிந்திருந்தார். ஆனால் அதற்கு கூடுதலாக எரிபொருளை எரியூட்டுகிறார். மேலும் அதை வேகிறது என்ற விரத தாபத்திற்கு மாற்றாக அதற்கு எதிராக ஒருக்காலும் வைக்க முடியாது.

4. I கொரி 7:3-4, "புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக் கடவன். அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக் கடவள். மனைவியானவள் தன் சுய சரீரத்திற்கு அதிகாரி அல்ல. அப்படியே புருஷனும் தன் சுய சரீரத்திற்கு அதிகாரி அல்ல. மனைவியே அதற்கு அதிகாரி."

   குறிப்பு: ஒரு காரியம் மிகத் தெளிவாக இருக்கிறது. தேவன் பாலியல் திறமையை அந்த நபருக்காக அல்லாமல் அவனுடைய நியாயமான பங்காளிக்கு நன்மையாகக் கொடுத்திருக்கிறார். பாலியல் செயலிலும் மற்றெங்குமுள்ளது போலவே பெற்றுக் கொள்ளுதலைப் பார்க்கிலும் கொடுத்தலே பாக்கியமாகும். (லூக்கா 6:38; அப் 20:35) சுயமாக கட்டளையிடப்படுகிற பாலியல் இச்சையானது ஒருவருடைய பாலியல் இச்சையை நியாயமற்ற வழியில் பயன்படுத்துவதாகும். தேவன் தாமே பாலியலை அன்பின் பரிசாக தனது விவாகமான தம்பதிக்கு கொடுக்க வேண்டும் என்று நியமித்திருக்கிறார்.

   மேலே சொல்லப்பட்ட வேதாகமத்தின் கோட்பாடுகளின்படி சுயபுணர்ச்சி ஈடுபாடு பாவம் என்று தெளிவு படுத்தப்படுகிறது. ஆகவே அதைப் போலவே அதைக் கையாள வேண்டும்.

f. **மற்ற பாலியல் பாவங்கள்** - அதாவது பிற பால் பாலினத்து சார்ந்த நபர்களைப் போல செய்தல் ஆன ஆடை அணிந்து அவர்களைப் போல் நடித்தல் ஆகியவை. பிறரையும் தன்னையும் துன்புறுத்தி இன்பம் காணுதல், பிறருடைய பாலின இச்சைகளைத் தூண்ட ஆடைகளைக் களைந்து இன்பம் காணுதல், பிறர் ஆடைகளைக் களைதல் அல்லது பாலுறவு நிகழ்ச்சிகளை உற்று நோக்கி இன்பம் காணுதல் ஆகியவை பிற பாலியல் பாவங்கள் எனக் கூறலாம். இங்கே மேலே கூறப்பட்ட பாலியல் பாவங்கள் அனைத்தும் பொதுவானவைகள் ஆனதால் தற்சமயம் இந்தக் காரியங்களோடு நிறுத்திக் கொள்வோம்.

விவாகத்தில் ஏற்படும் பிரச்சனைகள்

ஒரு சில தம்பதிகள் தங்களுக்குள் பாலியல் சம்பந்தமான பிரச்சனைகள் ஏற்படுவதால் ஆலோசனைக்காக வருகிறார்கள். அவர்களுக்கு இந்த சிக்கல்கள் இயந்திர ரீதியாகவோ அல்லது மாம்சீகமான காரணங்களால் உண்டாகும் பிரச்சனைகளாக இருக்கலாம். பாலியல் சம்பந்தமான பிரச்சனைகள் உள்ளவர்களில் பெரும்பாலோர் அவ்வாறு பயம், கோபம், சீற்றம், கவலை, குற்ற மனப்பான்மை, பொறாமை, சந்தேகம், சாதாரணமான சோர்வு ஆகிய காரணங்களால் பாதிக்கப்படுகின்றனர். அநேக ஆலோசகர்களின் அனுபவத்தில் இந்த பிரச்சனைகள் கோபம், சீற்றம் ஆகியவை அட்டவணை வரிசையில் உயர்ந்த இடத்தைப் பெறுகிறது. (ஆதலால் இதற்கான உள் நோக்கி முதலாவதாக ஆராய்வது இந்த பகுதியில் தான் இருக்க வேண்டும்.)

மேலும் இந்த பாலியல் உறவுத் தொடர்பு ஒன்று ஒரு போதும் முன்னேற்றம் அடைவதில்லை அல்லது விவாகத்துக்கு முன்னரோ அல்லது விவாக காலத்திலோ செய்யப்பட்ட பாவங்களைப் பற்றிய குற்றவுணர்வுகளாலும் பின்னடைவு அடைவது என்பது நடக்கக் கூடியதே. இது இப்படி இருக்குமானால் இதை தேவனுக்கு முன் வைத்து தீர்வு காண வேண்டும். மேலும் அதை ஒருவருக்கொருவர் அறிக்கை செய்யப்படவும் வேண்டும். ஒருவருக்கொருவர் தெளிந்த நல்மனச் சாட்சியை பெற்றிருக்க வேண்டுமானால் ஒருவருக்கொருவர் மன்னித்தும் மன்னித்து விடவும் வேண்டும். சில சமயங்கள் ஆரம்பத்தில் உண்மை என்பது மனதிற்கு காயப்படுத்துவதாக இருக்கலாம். ஆனால் தொடர்ந்து மூடி மறைப்பதும் பொய் சொல்லுவதும் அதிகமாகக் காயப்படுத்தக் கூடும். சிலர் விவாகத்துக்கு முன்னர் பாலியல் உடல் உறவு கொண்டிருக்கலாம். அதாவது தாங்கள் என்ன விருந்தாலும் விவாகம் செய்து கொள்வது நிச்சயம். அதனால் சரிதான் என்று நினைத்துக் கொண்டு உறவுத் தொடர்பு கொண்டிருக்கலாம். ஆயினும் விவாகத்துக்கு பின்னரே சிக்கல்கள் கிளம்ப ஆரம்பிக்கும். விவாகத்துக்கு முன்னர் அவர்களது ஒன்றுபட்ட பாலியல் ஈடுபாடு காரணமாக ஏற்பட்ட அசுசியும் அடிமைத்தனமும் அவர்கள் மற்றவர்களுடன் பாலியல் அனுபவங்களைக் கொண்டது போலவே இதிலும் கொண்டு வரும். இந்த விதமான பாலியல் உறவுத் தொடர்பு வேசித்தனமான விவாகம் ஆகாதவர்கள் உடல் உறவு கொள்வதாகும். இதற்கான கோட்பாடு மாற்றம் அடையாது எப்பொழுதும் போலவே இருக்கும். ஆனால் தேவனுடைய கட்டளையை விட்டு விலகும் எந்த மீறுதலும் குற்றவுணர்வைக் கொண்டு வரும். ஆகவே இதை தேவனிடம் உண்மையான மனஸ்தாபத்துடன் அறிக்கை செய்யப்பட வேண்டும். இது மாத்திரமே தேவனிடமும் (தம்பதியர்) ஒருவருக்கொருவர் திரும்பவும் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு ஒரே வழியாகும்.

பாலியல் பாவங்களுக்குள் மறக்கப்பட்ட விஷயங்கள்

பாலியல் அனுபவங்களுக்கும், அதற்காகவே தேவன் விரோதமாய் இருக்கிறார் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் அது சாதாரணமாக அப்படி அல்ல. தேவன் மனிதனை அந்த அனுபவத்தின் பரவச நிலையைப் பெற்றிருக்கும் திறன்பாட்டுடனே தான் சிருஷ்டித்தார். தேவன் விவாக வாக்கு உடன்படிக்கைக்கு புறம்பான பாலியல் உறவுக்கு விரோதமாய் இருந்தாலும் ஆனால் பாலியல் உறவுச் செயலை மட்டுமே அவர் அடைய விருப்பம் அல்ல. ஆனால் குறிப்பிட்ட விசேஷமாக பாலியல் பாவங்களோடு அடிக்கடி சேர்த்து சொல்லப்படும் பெரிதான குற்றங்களையே அடைந்து கண்டிக்கிறார். பாலியல் பாவங்கள் இழைத்த அநேக மக்கள் தங்களுடைய துர் இச்சையையும், இந்த பாவங்களைப் பற்றிய அசுசியையும் அறிக்கை செய்வதற்கு மேல் அப்பால் கடந்து போவதே இல்லை. ஆனால் தேவன் அதை விட சற்று ஆழமான ஏதோ ஒன்றை அடையும்படியாக வாஞ்சிக்கிறார். மற்றவர்கள் மேல் பாலியல் பாவங்களால் இழைக்கப்பட்ட தவறுகள் அதாவது பொய்கள், வஞ்சித்தல், மாய்மாலம், இரட்டை வேடம், வஞ்சனை ஆகியவை இவை இந்த மாதிரியான தீயச் செயல்களின் ஈடுபாட்டால் உண்டாக்கப்பட்டு ஒருவருடைய சரீரத்திற்கு விளைவிக்கப்படும் தீங்குக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு அன்பின் தேவனுக்கு விரோதமான செய்யப்படும் தீய செயல்களாகும். எப்பொழுதாவது ஒருவர் பாலியல் பாவங்களைச் செய்யும்பொழுது இந்த விஷயங்களைக் கருத்தில் கொண்டு அடிக்கடி தொடப்படாமல் விட்டுவிடப் படுகிற விஷயங்களாகும். இது தவறு இழைப்பவனை முற்று பெறாத மனந்திரும்புதலும் நீண்டு நிலைக்கிற குற்றவுணர்வுடன் விட்டு விடுகிறது. அநேகர் தேவன் விரும்புகிற அளவுக்கு மனந்திரும்புதலை ஒரு போதும் அனுபவித்ததில்லை! இதுவே தவறு இழைப்பவரை இந்த விதமான மனந்திரும்புதலுக்கு நடத்திச் செல்ல வேண்டியது. ஆலோசகருடைய மகா பெரிய பொறுப்பாகும்!

விபசாரத்தில் மறக்கப்பட்ட ஏதுக்களானவை

"விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்ற வேதாகமத்தின் பிரமாணம் முக்கியமாக குடும்பத்தை பாதுகாப்பதற்காக ஏற்பட்டது. மேலும் குடும்பமே தேவனுடைய அடிப்படையான சமூகத்தின் அலகு (பிரிவு) ஆகும். விபசாரம் குடும்ப வாழ்க்கையை அழித்து நாசம் செய்கிறது. மேலும் கணவனுடைய பங்கிற்கு அது உண்மையில்லாமை யாகும். அது அவனுடைய நல்லொழுக்கமான அதிகாரத்தையே துவம்சம் செய்கிறது. நல்லொழுக்கமுள்ள சுத்தமான புருஷன் தனக்கு தேவனால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தில் நம்பிக்கையாய் அதை பயன்படுத்துகிறார். மேலும் மனைவியின் பங்குக்கு அதுவும் ஓர் அன்னிய விசுவாச பக்தியை வீட்டுக்குள் புதிதாகக் கொண்டு வருவதால் அதுவும் உண்மையில்லாமை ஆகிறது. விபச்சாரம் என்பது குடும்பத்துக்கு விரோதமான பாவம் மட்டும் அல்லாது ஒரு அயலகத்தாருக்காக அன்பின் பிரமாணத்தை மீறுவதாகும். ஒரு அயலானுடைய திருமணம் ஒருவர் தன்னுடைய நெருக்கமான அந்நியோந்நியமான சந்தோஷத்தை ஒருவர் திருடி விட்ட பிறகு அந்த விவாகம் முன்னர் நாட்களில் இருந்தது போல் ஒருக்காலும் இருக்க முடியாது. ஆனாலும் துக்ககரமாக, விபசாரம் தன்னுடன் மேலும் பல தீங்கிழைப்புகளைக் கொண்டு வருகிறது. II சாமுவேல் 11 & 12ம் அதிகாரங்கள் பத்சேபாளுடன் தாவீது இராஜா செய்த பாவத்தை பற்றிய சோகமான கதையை விவரிக்கிறது. அதன் விளைவாக அவளுடைய கணவனாகிய உரியாவின் கொலைக்கு வழி செய்யப்பட்டது. அநேக மக்கள் இந்த சம்பவத்தைப் பற்றி பேசும் பொழுது தாவீது பத்சேபாளுடன் செய்த பாவத்தை மட்டும் கூறும்படியான போக்கைக் காட்டுகின்றனர். ஆனால் தேவன் தீர்க்கதரிசியைக் கொண்டு தாவீதை எதிர்த்து கண்டித்தபொழுது அவர் முதன் முதலாக இது சம்பந்தப்பட்ட மற்ற பிரச்சனைகளைப் பற்றி தொட்டு விட்டு பிறகே அந்த பாவமான விபச்சாரத்தைப் பற்றி பேச வந்தார். தாவீது பொய் சொன்னான், மூடி மறைத்தான், வஞ்சித்தான் முடிவாக ஒரு குற்றமற்ற மனிதனைக் கொலை செய்யும்படி சதி செய்தான். இவை தான் தேவன் முதன் முதலாக அவன் அடைய விரும்பிய குற்றணர்வாகும்.

தாவீது இராஜா தன்னுடைய போர் வீரர்களில் ஒருவனுடைய நெருக்கமான சந்தோஷத்தை அழித்து நாசம் செய்த குற்றவாளி ஆனான். ஒருகால் அந்த பாவமானது திரும்பவும் செய்யப்படாமல் போனாலும் தாவீது அந்த ஸ்தீரியின் கணவனைக் கொலை செய்யும்படியாக சதி செய்திருக்க மாட்டான். மேலும் அது முற்றிலும் நிச்சயமாக பத்சேபாளும் தன் கணவனுடன் முன்னால் இருந்த மாதிரி அதே போல உணர்ந்திருக்கவும் மாட்டார். அவளுடைய பாவம் மற்ற பாவங்களையும் செய்யும்படியாக கிரியை செய்திருக்கும். ஆனால் தேவன் தாவீதைக் குற்றவாளியாக ஆக்கி தன்னுடைய பாலியல் இச்சைக்காக மாத்திரம் அல்ல. மற்றொரு மனிதன் மேல் அவன் விளைத்த தீங்கான அவனுடைய மிகவும் நெருக்கமான சந்தோஷத்தைத் திருடிய பாவத்துக்கும் சேர்த்து தீர்ப்புச் செய்தார். திருடப்பட்ட பொருள்கள் திரும்பக் கொடுக்கப்படலாம். ஆனால் விபச்சாரம் என்பது தீர்க்கப்படக்கூடாத பாவமாகும்.

விபச்சாரம் விவாகரத்தில் முடியுமானால், பிறகு அதனால் பிள்ளைகளுக்கு மகா பெரிய தீங்கு செய்யப்படுகிறது. மறக்கப்படக்கூடாதது அந்த முதியோரான தாத்தா பாட்டிக்கு அவர்களுடைய பிள்ளைகளின் மகிழ்ச்சியான இல்லத்தை இழந்து விடும்படி செய்கிறது. குற்றம் செய்பவனுக்கு மற்ற நபர் சகிக்கும் பயங்கரமான தீமைகளைச் சுலபமாக மறந்து விடலாம். ஏனென்றால் அவன் அல்லது அவளுடைய புதிய காதல் அவர்களை சந்தோஷிப்பிக்கிறது. மற்ற நபர்களுடைய உணர்ச்சிகளை பற்றி யோசித்துப் பார்க்கும்பொழுது அது அன்பு என்று அழைக்கப்படலாகாது. தேவன் தாமே மற்றவர்களுக்கு இழைக்கப்பட்ட தவறுகளை மறப்பதில்லை. அவர் அந்த தவறுகளுக்கு பிரதிபலன் செய்ய விரைகிறார்.

இந்த ஏதுக்களான காரணங்கள் அடிக்கடி மறக்கப்பட்டும், மேலோட்டமாக புறக்கணிக்கப்பட்டும் தேவனுக்கு முன்பாக அறிக்கை செய்து மனந்திரும்பாமல் போயும் தவறு இழைக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பைப் பெறாமல் போகிறது. இந்த மாதிரியான நிலைமை குற்றம் செய்தவனை அறைகுறையாக மன்னித்தும் (அப்படிப்பட்ட காரியம் கூடுமானால் யாக் 2:10) பகுதியாக திரும்பப் பெறப்பட்டும் ஆனாலும் குற்றம் செய்தவனுடைய கிறிஸ்தவ ஜீவியமானது கேள்விக் குறியாகிறது.

பிற பாலியல் பாவங்களை மறக்கப்பட்ட காரணங்கள்

வேசித்தனம் விவாக வாக்குறுதி உடன்படிக்கையை மீறுதல் செய்யாதபடியால், பலர் அதை எளிதான குற்றமாகக் கருதுகிறார்கள். இந்த வகையான காரணத்தினால் அது அடிக்கடி உண்மையாகவே மனந்திரும்பாமல் போகிறதாகிறது. பாவமானது அசுசிப்படுத்துதலை நடைமுறையாக இயக்குகிறது. முதலாவது ஆக ஒருவருக்கே சொந்தமானவருக்கு தீங்கு விளைக்கப்படுகிறது. மற்றும் மற்றொரு நபரின் மனச்சாட்சியையும் காயப்படுத்துகிறது. வேசித்தனம் மேலும் பல சமயங்களில் மேலும் மேலும் வேசித்தனத்திற்கு வழி செய்கிறது. அதுவும் அல்லது மற்ற பாலியல் பாவங்களையும் செய்ய வழி நடத்திச் செல்கிறது. பாலியல் ஓட்ட வேகமானது ஒரு நபருக்குள் நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது. அதைத் தூண்டுவதென்றால் அந்த நெருப்பில் கெரஸின் ஊற்றுவது போலாகும். வேசித்தனமானது திருமணமாகாத ஒரு பெண்ணுக்கு விளைக்கும் கொடுமையான தீங்காவது திருமண உறவுக்கு புறம்பே குழந்தை பெற்றுக் கொள்வதாகும். அந்த குழந்தை சகிக்க விருக்கும் வெட்கத்தையும் வேதனையையும் அந்த பெண்ணின் பெற்றோர் படும் கஷ்டத்தையும் யார் நினைத்து பார்க்கிறார்கள். வேசித்தனமானது கருச் சிதைவு என்ற பாவத்திற்கு இழுத்துச் செல்லும். இந்த பாவம் கொலைக்கு சமமானது. இந்த விதமான காரணா காரியங்களே அடிக்கடி மனஸ்தாபப்பட்டு மன்னிப்படையாமல் போக விடப்படுகிறது. ஓரினச் சேர்க்கை என்ற பாவத்தின் சம்பந்தமாக அது மிகப் பெரிய கடினமான பாவமாக ஒருவரின் மன சாட்சிக்கும் சரீரத்திற்கும் செய்யப்படுகிறது. இந்த சரீரமானது தேவனால் அவரது ஆலயமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஆனால் மற்றவர்களுக்கு விளைவிக்கப்படும் தீங்கான பொய் சொல்லுதல், மூடி மறைத்தல், வஞ்சித்தல் முதலானவைகளாகும். இந்த பெரு வழியின் மார்க்கமாக ஒருவரை நடத்திச் செல்லக் கூடுமானால் அந்த நபர் வருங்காலத்தில் ஒரு மகிழ்ச்சியான இல்லம் கிடைக்கப் பெறாதவர் ஆகக் கூடும்.

இன்னும் அநேக விஷயங்கள் சொல்லலாம். ஆனால் கொள்கை தெளிவாகவே இருக்கிறது. பாலியல் குற்றம் செய்பவர்களை தேவன் அவர்களுடைய பாவத்தின் பாலியல் இச்சைகளையும், அத்துடன் இழைக்கப்படுவதாக சொல்லப்படும் மகா பெரிய தீங்குகளையும் பற்றி கண்டிக்க விரும்புகிறார். உண்மையான அன்பானது தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டு அந்த பாலியல் இச்சை உண்டாக்கும் சந்தோஷமில்லாமையை உண்டாக்குவதே இல்லை!

தேவனை நோக்கி திரும்பி வரும் வழியும் மற்றும் பிற

புதிய ஏற்பாட்டில் அநேக விசுவாசிகள் அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆவதற்கு முன்னே பாலியல் பாவத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் தேவன் அவர்களை மன்னித்து அவர்களுக்கு புத்தம் புதிய ஜீவியத்தை அருளிச் செய்திருக்கிறார். (I கொரி 6:9-11; II கொரி 5:17) தேவனிடம் இருந்து மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த அடிகளைக் கட்டாயமாக எடுத்துப் பின் செல்ல வேண்டும்.

1. **தெய்வீகமான துக்கத்தோடு பாவத்திலிருந்து மனந்திரும்புதல்**

   மனந்திரும்புதலானது தேவனை நோக்கி இருக்க வேண்டும். பாலியல் பாவங்களை அறிக்கை செய்யும்பொழுது தனக்குத் தானே விரோதமாக தேவனுடன் பக்கம் சார்ந்து நிற்கிறது. பாவம் செய்தவன் அந்த பாவத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளாமல் அது சார்ந்த பிற பாவங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். பாவம் செய்தவர்களின் ஜீவியம் முழுவதுமாக இயேசுவின் கர்த்தத்துவத்திற்குள் வரவேண்டும். இல்லாவிட்டால் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் இப்பிரபஞ்சத்துக் குரியதாயிருக்கும். மன்னிக்கப்படாத பாவங்களின் வழியாக சாத்தான் வந்து தாக்குவதற்காக கதவு திறந்து வைக்கப்பட்டதாக இருக்கும். மனங்கசந்து என்பது இந்த பாவம் முழுவதும் உடைக்கப்பட்டதாகவும் துறந்து விடப்பட்டதாகவும் தொடரப்பட்டிருக்க வேண்டும். (சங் 51:4; யோவான் 8:11; II கொரி 7:10-11; எபேசி 4:27; யாக் 2:10 முதலியன)

2. **எங்கு அவசியமோ அங்கு மற்றவர்களிடமிருந்து மன்னிப்புப் பெற வேண்டும்**

   மற்றவர்களுக்குத் தீங்கு விளைக்கப்பட்டால், அவர்களிடம் மன்னிப்பு கோரி பெறக் கூடுமானால் அது பெறப்பட வேண்டும். இதைச் செய்ய தவறும் பொழுது மென்மேலும் பாவத்தில் நீடிக்க ஏதுவாகும். (லூக்கா 17:4; யாக் 4:17 முதலியன)

3. தேவனுக்கென்று ஒருவருடைய சரீரமானது பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும்

விசுவாசியுடைய சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாய் இருக்கிறது. மறுபடியும் பாலியல் பாவ சோதனைகளிலும் பாவத்திலும் விழுந்து விடாதபடி ஒருவருடைய சரீரமானது தேவனுக்கென்று ஒப்படைப்புச் செய்யப்பட வேண்டும். (ரோமர் 6:19; 12:1-2; I கொரி 6:13)

4. பாலியல் சோதனையிலிருந்து விலகியோடு

விலகி ஓடுவது பலவீனத்தின் அடையாளமாக சிலரால் பார்க்கப்படுகிறது. தேவனுடைய கருத்துப்படி அது ஞானமாகும். அது அவருடைய சொந்த புத்திமதியும் ஆகும். கஷ்டத்திற்கு நடத்தக் கூடிய இடங்களையும் சந்தர்ப்பங்களையும் விட்டு விலகி இரு. யோசேப்பு ஓடிப் போனான். அதன் காரணமாக பல ஆண்டுகள் சிறைச் சாலையில் அவன் கழிக்க வேண்டி இருந்தது. அதுதான் நல்லதொரு சிறந்த தீர்வாக தேவனால் கனப்படுத்தப்பட்டதொன்றாகும். (ஆதி 39:7-12; I கொரி 6:18; II தீமோத் 2:22)

5. பிழை செய்தவன் கிறிஸ்தவனாக இருப்பானானால் அவன் திரும்ப புதிப்பிக்கப்பட ஒரு கால அவகாசம் தேவை

பழைய ஏற்பாட்டில் பல பாலியல் பாவங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதாவது தேவனுக்கு முன்பாக அவை எவ்வளவு பயங்கரமானது என்று காட்டுவதற்காக. சமூக தீர்ப்பு திருச்சபைக்குக் கொடுக்கப்படுவதில்லை. பாலியல் பாவங்களை திருச்சபை இலகுவாக எடுத்துக் கொள்ளுமானால் அது தேவனுக்கு முன்பாக குற்றமுள்ளதாகும். ஏனென்றால் தேவன் இந்தப் பாவங்களைக் கடினமானவைகளாக எடுத்துக் கொள்வார். (I கொரி 2:1-11; I தீமோத் 5:22)

6. நாம் விதைப்பதையே அறுப்போம்

தேவனுக்கு முன்பாக மனஸ்தாபப்பட்டும் பாவ மன்னிப்பானது பெறப்பட்டு இருந்தாலும் ஒருவருடைய பாவங்களுக்கான பின் விளைவுகள் அதைத் தொடர்ந்தே வரும். உதாரணமாக வேசித்தனத்தால் கர்ப்பந்தரித்த ஒரு பெண் அவள் மனங்கசந்து மனந்திரும்பினால் முழுவதுமாக மன்னிக்கப்படலாம். ஆனால் குழந்தை இனி மேல் தான் பிறக்க வேண்டும். தேவன் அதனால் வரும் பின் விளைவுகளை எடுத்துப்போடுவதில்லை. இந்த விதமான பின் விளைவுகளை தாவீது இராஜா செய்தது போல தைரியமாகக் கையாள வேண்டும். மாம்சீகத்தில் விதைக்கப்பட்ட ஒன்றையே ஒரு நபர் அறுக்கிறார். ஆனால் அந்த அறுப்புக்கும் ஒரு முடிவு வருகிறது. அந்த மனங்கசந்து மனந்திரும்பும் சமயத்தில் தொடங்கி ஒருவர் வேண்டுமென்றே ஆவியில் விதைக்க வேண்டும். ஆகவே சரியான நேரம் வரும்பொழுது ஒருவர் ஆவியினால் அறுவடை செய்வார். இதுவே திரும்பப் புதுப்பித்தல் பெறுவது முழுமை அடைவதற்கான காலமாகவும் இருக்கலாம். (கலா 6:7-8)

முடிவுரை

பாலியல் என்பது தேவன் மனிதனுக்கு வழங்கியிருக்கும் மிக அழகிய ஈவுகளில் ஒன்றாகும். அதைச் சரியாகப் பயன்படுத்தினால் அது மகா பெரிய சந்தோஷத்தின் ஊற்றுகளில் ஒன்றாக மனிதனுக்கு பாவங்களோடு போர் புரியும் மகாப் பெரிய போர்க் களமாகி விடுகிறது. மேலும் இயேசுக் கிறிஸ்துவில் மாத்திரமே, பழைய பாலியல் பாவங்களுக்கான குற்றவுணர்வுகளிலிருந்து முழுவதுமான மன்னிப்பையும் விடுதலையையும் பெற்றுக் கொள்ளலாம். பாலியல் பாவங்களில் விழுந்து விட்ட மனிதர்களோடு இடைபடும் பொழுது ஆலோசகர் அவர்களிடம் சாந்தமாகவும் அன்பாகவும், பாலியல் பாவங்களைக் கடிந்து கொள்ளாமலும் மேலும் அவர்களை கடினமாகத் தீர்ப்புச் செய்யாமலும் இருக்க வேண்டும். இயேசுவானவர் விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்தீரியுடன் இடைப்பட்ட முறையானது ஆலோசகருக்கு சிறந்த முன் உதாரணமாக இருக்கலாம். (யோவான் 8:1-12; கலா 6:1)

ஒற்றுமை : அன்பின் செயல்பாடு

ஒரு திருச்சபை பிரிவினை அடைவதைப் போல வேதனை தருவது வேறொன்றுமில்லை. ஒரு கூடிவரும் சபையானது தப்பெண்ணம், புறங்கூறுதல், பாகுபாடு போன்றவைகளால் கிழித்துப் போடப்படுவதால் வரும் அதிகமான மோசத்தைப் போல் வேறொன்றும் இருப்பதில்லை. அநேக கிறிஸ்தவர்கள் குறைந்தது அப்படிப்பட்ட ஒரு பிரிவினை பற்றிய நினைவுகளை ஞாபகத்தில் சுமந்து கொண்டு போகிறார்கள். இந்த ஞாபகம் நிலைத்து பல ஆண்டுகளுக்கு பிறகும் நீடித்து நிற்கிறது. பல மூப்பர்களுடைய மனைவிகளோடு போதகருக்கு இருந்த விபச்சாரமான ஈடுபாட்டால் ஒரு திருச்சபை பிரிந்ததை நான் நன்றாக ஞாபகத்தில் கொண்டிருக்கிறேன். மூப்பர்களில் இரண்டு பேர் தற்கொலை செய்து கொண்டனர். திருச்சபை முழுவதுமே குழப்பமான போராட்டம் திருச்சபையை ஆளுகை செய்தது. செய்தித் தாள்கள் இந்த வரலாற்றை எடுத்துக் கொண்டு மாதங்கள் பலவாக கிறிஸ்துவின் நாமம் சகதியில் இழுத்து புரட்டப்பட்டது. கிறிஸ்தவர் அல்லாதவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி ஆலயத்திற்கு எங்கும் என்றும் மறுபடியும் ஆராதனைக்கு வருவதில்லை என்று சபதம் செய்தனர். மற்றொரு சபையில் நான் சந்தித்த சந்தர்ப்பத்தில் தத்துவ போதனை பிளவுக்கு முக்கிய காரணமாக இருந்தது. அந்த சிக்கலானது மிகச் சிறிதானபடியால் நான் அது எதுவென்று நினைவுபடுத்தக் கூட முடியவில்லை. என்னவென்றாலும் அதனால் பிறப்பிக்கப்பட்ட கசப்புணர்ச்சி பற்றிய விரிவான திரும்பவும் நினைவு கூறுதல் உடையவனாய் இருக்கிறேன். ஒரு வேளை நீங்கள் "உன்னிடம் ஒரு விசுவாசி இருந்தால் ஒரு கிறிஸ்தவனை உடையவன், நீ இரண்டு விசுவாசிகளைப் பெற்றிருந்தால் உனக்கு ஒரு திருச்சபை இருக்கும். உனக்கென்று மூன்று விசுவாசிகள் இருந்தால் நீ இரண்டு திருச்சபைகளை உடையவன்" என்று சொல் வழக்கைக் கேட்டிருக்கலாம். ஆனால் அது உண்மைக்கு மிக அருகாமையால் இருக்குமானால் அது நகைப்புக்குரியதாகும்.

நமது உறவுத் தொடர்புகள் சகலத்திலும் ஒருமைப்பாடு

நீங்கள் இந்த மாதிரியான பிரிவினையில் ஈடுபடாதிருந்தால் நீங்கள் உங்களுக்குள்ளாகவே இந்த ஒற்றுமையால் உங்களுக்கு என்ன ஆகப் போகிறது என்று ஒரு வேளை நினைக்கலாம். தேவன் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு சொந்தங் கொண்டாடுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் அன்பும் ஒற்றுமையே அடிப்படையாய் அமைந்து அதன் மேல் கட்டப்படுகிறது. திருச்சபையில் பிரிவினை இருக்கும்பொழுதெல்லாம் அவருடைய நாமம் விபத்துக்குள்ளாகிறது. நீங்களும் நானுமே அவருடைய ஆலயமாயிருக்கிறோம். இயேசு நமக்குச் சொல்கிறதாவது "இரண்டு பேராவது அல்லது மூன்று பேராவது என்னுடைய நாமத்தினாலே கூடிவரும் பொழுது அவர்கள் மத்தியில் நான் இருப்பேன்" என்கிறார். (மத் 18:20) நாம் திருச்சபை அமைப்புக்கு வெளியே இருக்கும்பொழுதும் கூட நமது வீட்டிலோ, நமது குடும்பத்துடனோ அல்லது கிறிஸ்தவ நண்பர்களுடனோ அல்லது அறிமுகமானவர்களோடு இருந்தாலும் நாம் அவருடைய சபையாகவே இருக்கிறோம். நம்முடைய சகல வேறுபட்டதான உறவுத் தொடர்புகள் அன்பினாலும் ஒற்றுமையினாலும் அடையாள மிடப்படுகிறதா? அல்லது போராட்டமும் பிரிவினை பாகுபாடும் உள்ளே புகுந்து விடுகிறதா? நாம் நமது பிள்ளைகளிடம் அன்புகூர்ந்து அவர்களை உற்சாகப்படுத்துகிறோமா? அல்லது நாம் அவர்களோடு முரண்பாடு கொண்டிருக்கிறோமா? நாம் மெய்யாகவே பிற கிரியை செய்கிற கிறிஸ்தவர்களின் நலனில் அக்கரை கொண்டிருக்கிறோமா? அல்லது நம்மைப் பற்றி மட்டும் கரிசனை கொண்டு காரியங்களில் நம்மை தெளிவு படுத்திக் கொண்டும், நமது சந்தோஷத்தையும் நிறைவுறுதலை மட்டும் கருத்தில் கொண்டுள்ளோமா?

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை உட்படுத்திக் கொள்கிற எல்ல உறவுத் தொடர்புகளின் மத்தியமான இருதயத்திலும் அன்பும் ஒருமைப்பாடும் ஒன்றித்திருக்கிறதா? வேதாகமம் நமக்குச் சொல்வதாவது எல்லா மனிதரிடமும் அன்புகூர்ந்து நமது சக விசுவாசிகளுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று வற்புறத்துகிறது. ஒரு கணவனாக என் மனைவியை நான் நேசிக்க வேண்டும். மேலும் எப்பொழுதும் சுறுசுறுப்புடன் இயங்கி அவளுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும். நமது இல்லங்களில் நாமே திருச்சபையாக இருக்கிறோம். ஆகவே கிறிஸ்து நமது நடுவில் வசிப்பதாக வாக்குத் தந்திருக்கிறார். ஒற்றுமை என்பது இயந்திரமயமாக வருகிற ஏதோ ஒன்றல்ல. இரண்டு மக்கள் விவாகத்தில் இணைக்கப்படும்பொழுது அது கிரியை செய்து விருத்தி செய்யப்படவேண்டும். எனது மனைவியும் நானும் எங்கள் விவாகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒற்றுமையைத் தேடிக் கொள்ளும்

பொறுப்பை இருவருமே பகிர்ந்து கொள்ளுகிறோம். நான் திருமணமான ஆரம்பத்தில் அது எளிது என்று நினைத்திருந்தேன். என்னவென்றாலும் எல்லாம் சரி நாங்கள் ஒருவரையொருவர் நன்றாகவே அறிந்திருந்தோம். நான் எப்படி தவறாக இருந்து விட்டேன். நான் வெகு சீக்கிரத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் எங்களைப் பற்றிய ஒரு இலட்சிய வாசகமான மற்ற அந்த அவர் உண்மையாகவே யாராக இருக்கிறார் என்று கண்டுபிடித்தேன். ஆனால் ஆச்சரியப்படுவதற்கில்லாமல் எங்களது திருமணத்தின் ஆரம்ப காலத்து இரண்டு ஆண்டுகளில் சில சமயம் புயல் வீசியதென்றாலும் நாங்கள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒருவர் மற்றவருக்கு ஏற்றவாறு எங்களை சரிபடுத்திக் கொண்டு நாம் உண்மையிலே யாராக இருக்கிறோம் என்ற அடிப்படையில் மாத்திரமே ஏதோ ஒரு இலட்சியமான பார்வையில் அல்லாமல் அவ்வாறு இருக்க கற்றுக் கொண்டோம். இந்த பிரச்சனையின் ஒரு பகுதி எங்களுக்குள் இருந்த தற்பெருமையே. மேலும் நாங்கள் முழுவதுமாக பூரணமானவர்களல்ல என்பதை ஒப்புக் கொள்ள விரும்பவில்லை. (ஒரு கால் இது மற்றவர்களுக்கு தெரிந்ததாக இருக்கலாம்)

கிறிஸ்தவர்களாகிய நாம் சக விசுவாசிகளையும் இந்த விதமான இலட்சிய பார்வையில் பார்க்கிறோம். அவர்களை உயர்ந்த பீடத்தில் ஏற்றி வைத்து பின்னர் அவர்களால் காயப்படுத்தப்பட்டு அவர்கள் நம்முடைய எதிர்பார்ப்புகளின் அளவுக்கு ஜீவிக்காதபொழுது கசப்புடையவர்கள் ஆகிறோம். நாம் ஓரிடத்திற்கு வந்து அன்புள்ள ஒரு நோக்கத்துடன் ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளும்போதுகூட ஒருவர் மற்றவருடைய பிழைகளை இன்னும் ஒப்புக்கொள்கிறவர்களாகவே இருப்போம். இவ்வாறு ஒருவரை ஒருவர் ஒப்புக் கொள்ள மறுப்பதால் நம்மை அது திருச்சபையின் காவல்துறையினராக ஆக்கி விடுவதால் நாம் தீர்ப்புச் சொல்லுகிறவர்களாகவும் விமரிசனம் பண்ணுகிறவர்களாகவும் இருப்போம். என்னுடைய திருமணத்தில் நான் பரிசுத்த ஆவியானவர் போல கிரியை செய்து நான் எங்கு அவசியம் என்று நினைக்கிறேனோ அந்த பகுதியில் என் மனைவிக்கு திட்டமான கருத்தைப் புரிந்து கொள்ளும்படி வைக்க முடியாது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டியதிருந்தது. அது தேவனுடைய கடமையாகும். தேவன் என்னிடம் மனைவியை நேசித்தும் அவளை பாராட்டியும் இருக்கும்படியாக பொறுப்புக் கொடுத்திருக்கிறார். மேலும் நான் அவரைப் போல அவரின் நன்னெறிக்கு ஏற்றபடி ஜீவிக்கும் முன் உதாரணமாக இருக்க அவளுக்காக ஏற்படுத்தியும் இருக்கிறார். (எபேசி 5:25) நான் அவளுக்கு ஓர் நிதிபதியாக இருப்பதற்காக அழைக்கப்படவில்லை. அவளுடைய ஜீவியத்தின் பல பகுதிகளில் பலவீனம் இருக்குமானால் நான் அவளுக்காக ஜெபித்து அவளுடைய இருதயத்தில் குற்றவுணர்வை கொண்டு வரும்படி தேவனை அனுமதிக்க வேண்டும். அவளும் இதே போல் எனக்கும் செய்ய வேண்டும். மற்ற கிறிஸ்தவர்களுடன் நமக்கிருக்கும் உறவுத் தொடர்புகளில் இந்தக் கோட்பாட்டை கண்பார்வையில் படாதபடி இருக்கிறோம். நம்முடன் ஒத்துப் போகாதவர்களுக்கு இந்த குற்றமுள்ள உணர்வை கொண்டுவர முயற்சியில் சுறுசுறுப்பாய் இருக்கிறோம் அல்லது வெளிப்படையான குற்றமுடையவர்களுக்கு நாம் அவர்களுக்கு திருத்தம் அவசியம் என்று நினைப்பவர்களிடமும் கூட இதையே செய்ய நினைக்கிறோம். ஆனால் இதற்கு உதவி செய்யாமல் ஒற்றுமையின்மையைக் கொண்டு வருகிறோம்.

நாம் உறவுத் தொடர்புகளில் அன்பு முக்கியமான இடத்தை பெற வேண்டுமென்பது மிகவும் இன்றியமையாதது. வேறுபாடுகள் எங்கெல்லாம் இருக்குமோ நமது சகோதரர்களிடத்தில் நாம் அன்புடன் கிட்டி சேர்ந்து, பரிசுத்த ஆவியானவரை அவருடைய அந்த குற்றவுணர்வை உண்டாக்கும் கடமையை நமது இருவருடைய ஜீவியத்திலும் கிரியை செய்யுமாறு அனுமதிக்க வேண்டும். அவரே அவர் மாத்திரம் தான் அதை நியாயமாகச் செய்யக் கூடியவர் ஏனென்றால் நம்முடைய மனதின் யோசனைகளையும் நினைவுகளையும் அறிந்தவராயிருக்கிறார்.

தந்தையாக நான் என்னுடைய இரண்டு பிள்ளைகளிடமும் ஒற்றுமையைத் தேடிக் கொள்ள வேண்டும். அவர்கள் என்னுடைய பிள்ளைகளாக இருக்கும் காரணத்தினாலும் என் வீட்டிலே வசிப்பதாலும் அதற்காக கோட்பாடுகளான அன்பு, ஒற்றுமை என்பவற்றை நீக்கிவிட வேண்டும் என்பதை என்னிடம் அனுமதிப்பதில்லை. அவர்களை நோக்கி கோபத்தில் வெடிக்க முடியாது. அவர்களுடைய உணர்வுகளையும் கருத்துக்களையும் தாழ்த்திப் பேசக் கூடாது. என்னைவிட அவர்கள் பயனுள்ளவர்கள் என்றோ குறிப்பிடத்தக்கவர்கள் என்றோ அவர்கள் உணரும்படி செய்கிற எந்த காரியத்தையுமே நான் செய்யக் கூடாது. அவர்கள் என்னைவிட வேறுபட்ட தலைமுறையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் கிறிஸ்துவுக்குள் எனக்கு சகோதரனும், சகோதரியும் ஆவார்கள். ஒரு நாள் கிறிஸ்துவுடைய சந்நிதானத்தில் நாம் சமமாக நிற்போம். அவர்களுடன் ஒற்றுமையாக வாழவேண்டும்

என்று நான் எதிர்பார்க்கப்படுகிறேன். இது எப்பொழுதும் சுலபமாக நடக்கக்கூடியதல்ல. ஆனாலும் என்னுடைய எதிர்பார்ப்புகளிலிருந்து அவர்களை விடுவித்து அவர்களை அவர்களாகவே இருக்கும்படியாக அனுமதிக்க வேண்டும் என்ற ஒரு கோட்பாடு என்பது எல்லா உறவுத் தொடர்புகளுக்குமே உண்மையாக பொருந்தக் கூடியதாகும்.

இந்த அன்பு என்ற கோட்பாடு அதன் ஒற்றுமை என்ற உறவு தொடர்பில் கிறிஸ்தவனுடைய ஜீவியத்தில் ஒவ்வொரு பகுதியையும் தாக்கம் செய்கிறது. நாம் வேதாகமத்திலிருந்து இயேசு நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்று அறிகிறோம். (எபி 7:25) ஆனால் அவர் எதற்காக வேண்டுதல் செய்கிறார் என்பதைப் பற்றி ஒரே ஒரு குறிப்பு இருக்கிறது. அவருடைய திருச்சபைக்காக; நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். "அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்." (யோவான் 17:20-21; 23) ஒற்றுமையின்மையும் பிரிவினையும் இயேசுவின் சரீரமாகிய திருச்சபையில் எந்த பகுதியிலும் இருக்குமானால் அது அவதூறாக கிறிஸ்தவர் அல்லாதவர்கள் அதை ஆர்வத்துடன் எடுத்துக் கொண்டு சுவிசேஷத்தை மிகவும் கவனத்துடன் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்குக் காரணமாக ஆக்குகிறார்கள். திருச்சபை சச்சரவுகளில் ஒவ்வொரு சமயமும் பங்கெடுத்துக் கொள்ளும்பொழுது நாம் ஒற்றுமையின்மையை பழக்கப்படுத்திக் கொண்டு ஒருவருக்கொருவர் அன்பில்லாதவர்களாக இருக்கிறோம் அல்லது பாகுபாட்டுக்கும் தப்பெண்ணத்திற்கும் வழி நடத்தும் நடவடிக்கைகள், மனப்பான்மை ஆகியவற்றில் பங்கெடுக்கும் ஒவ்வொரு சமயத்திலும் உறவினர் நண்பர்கள், வியாபார பாகஸ்தர்கள் ஆகியவர்களை கிறிஸ்துவின் விசுவாசத்திலிருந்து பிரித்து விடக்கூடிய ஒரு தடுப்புச் சுவரை எழுப்பி விடுகிறோம். இந்த வழியில் ஈடுபடுவது அவர்களுக்கு ஏற்கனவே உள்ள சந்தேகத்தை "கிறிஸ்தவம் என்பது மாய்மாலக்காரரின் மார்க்கம்" என்று கூறப்படுவதை உறுதிப்படுத்துகிறது.

விவாகரத்து - ஒற்றுமைக் குறைவுக்கு இறுதியான வடிவம்

மேற்கத்திய நாடுகளில் திருமணம் செய்து கொள்ளுகிற தம்பதிகளில் மூன்றில் ஒருவர் விவாகரத்தை நோக்கிப் போய் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மற்றவர்களில் மிகவும் மோசமாக இருவரில் ஒருவர் போகிறார்கள். என்ன சோகமான புள்ளி விவரங்கள். மல்கியா 2:16ல் தேவன் விவாக ரத்துக்காக தமது வெறுப்பை காட்டுகிறார். இரண்டு மக்கள் தங்களுக்குள் கட்டுப்படுத்தும் ஒப்படைப்பை ஒருவருக்கொருவர் செய்து கொண்டவர்கள் தங்கள் ஒற்றுமையை சீர் குலைத்துக் கொள்வது தான். இந்த ஒற்றுமை சீர்குலைவின் விளைவுகளான பலா பலனைக் குறித்து எவ்வளவாக அவர் துக்கப்பட வேண்டும். விவாகரத்து என்பது ஒரு குளம் குட்டையில் கல்லை எறிவது போலாகும் - அதன் அலைகள் அகன்று அகன்று விரிந்து கொண்டே போகும். அதில் கணவன் மனைவி ஆகிய இருவர் மட்டும் பாதிக்கப்படுகிறவர்கள் அல்ல. பிள்ளைகளுங்கூட பாதிக்கப்படுகிறார்கள். மனோ தத்துவ நிபுணர்கள் நமக்குச் சொல்லுகிறதாவது அதிகமான நிச்சயம் மறுநிச்சயம் பெற்ற பிறகும் அதற்கு மாறாக அநேகம் பிள்ளைகள் தாங்கள் ஏதோ ஒரு வழியில் தங்கள் பெற்றோரின் திருமண உறவு முறிவதற்கு பொறுப்பானவர்கள் என்ற குற்ற உணர்வை சுமந்து கொண்டு செல்கிறார்கள். சமூகமும் பெரிய அளவில் பாதிக்கப்படுகிறது. மற்ற புள்ளி விவரங்கள் தன்னிச்சையின் இயல்பான கடுமையான குற்றங்கள் - கற்பழித்தல், கொலை, தாக்குதல் முதலியன. ஒரு பெற்றோரால் அமைந்த இல்லங்களில் வளர்க்கப்பட்ட பிள்ளைகளால் நிகழ்த்தப்படுகிறதென்பதைக் காட்டுகிறது. ஆகையால் தேவன் விவாகரத்தை வெறுப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. விவாகரத்தின் அலைகள் சமூகம் முழுவதிலும் உணரப்பட்டாலும் அதன் எதிர்மறையே உண்மை என்று நான் நம்புகிறேன். கிறிஸ்தவ குடும்பங்கள், திருச்சபைகள், ஸ்தாபனங்கள் ஆகியவை ஒருமைப்பாட்டில் இருக்குமானால் சமூகத்தில் ஓர் நேரிடையான ஸ்திரப்படுத்தும் விளைவைக் கொண்டிருக்கும். இது நம் ஒவ்வொருவரையும் ஒருவருக்கு ஒருவர் ஆழமாக அன்பு கூறவும், ஒருமைப்பாடு (அ) ஒற்றுமையைத் சுறுசுறுப்பாக தேடவேண்டுமென்பதே சவாலாக இருக்க வேண்டும்.

கிறிஸ்துவுடைய சரீரமாகிய சபையில் ஏற்படும் ஒற்றுமையின்மை நமது சகோதரனிடமிருந்து பெறும் விவாகரத்தைப் போன்றதாகவே இருக்கும் என்று நான் நம்புகிறேன். நாம் ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்தும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒப்படைப்புச் செய்வதை

நாம் உடைத்து எறிந்து விட்டோம். அந்த ஒப்படைப்பில் தான் தேவன் நம்மை ஜீவிக்கும்படியாக எதிர்பார்க்கிறார். இந்த ஒப்படைப்பை தகர்த்தெறிவதால் நாம் தீமை விளைவிப்பதற்கும் கசப்பு தப்பெண்ணம், அந்நியமாகுதல் ஆகிய பல விஷயங்களால் நமது ஆவிக்குரிய ஜீவியமானது உறிஞ்சி விடப்பட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் மோசே நாசத்தை உண்டாக்கிறது. நம்மில் அநேகர் நமது தனிப்பட்ட ஏமாற்றத்தின் காரணமாக வேதாகமத்துப்படியான ஒற்றுமையான ஐக்கியம் என்பது கூடுமானதல்ல என்று இந்தக் காலங்களில் நம்புவதற்கில்லை. இதன் விளைவாக தேவனுடைய வார்த்தையில் பற்றிய நமது கோட்பாடுகள் கண்களால் அறைகுறையாய் பார்க்கப்படுவதால் நமது கவனத்தை நமக்கு விளைவிக்கப்பட்ட தீங்குகள் மீதும் ஏமாற்றங்களின் மீதுமே நோக்கிச் செல்கிறது. ஆனால் நமக்குத் தீங்கினால் விளைக்கப்பட்ட அனுபவங்களைவிட தேவன் மகா பெரியவர். நாம் இந்த அவ நம்பிக்கையை நமது இருதயங்களை ஆளுகை செய்யும்படியாக அனுமதிக்கக் கூடாது. அவநம்பிக்கை என்பது நமது ஜீவியத்தின் இருட்டறையாகும். அங்கே சந்தேகங்களும்,அச்சங்களும் எதிர்மறையாக விருத்தியாகக் கூடும். இந்த வார்த்தைகளைப் படிக்கும்பொழுது ஒரு வேளை சில வேதனையான நினைவுகள் தூண்டப்படுகின்றன. அப்படியானால் அந்த காயங்களை தேவனுடன் பேசுவதற்கு நேரம் எடுத்துக் கொள்ளாமல் தொடர்ந்து அதை அப்படியே (சும்மா) வாசித்துக் கொண்டு போக வேண்டாம். அவற்றைக் கர்த்தரிடம் அறிக்கை செய்து அதை குணமாக்கும்படி வேண்டிக்கொள். அதன் பிறகு உனக்குத் தீங்கு விளைவித்தவர்களை மன்னித்து விடு. இப்படித் தொடர்ந்து ஒரு கால கட்டம் வரை நீ செய்வாயானால் தேவன் உனது இருதயத்திலே நம்பிக்கையையும் அன்பையும் பெருகச் செய்வார்.

இயேசு தம்மால் கூடுமானதற்காகவே ஜெபித்தார்

வேதாகமத்தின் ஒற்றுமையை எளிதில் செலுத்தி விட முடியாது. பிறரை நேசித்து ஒற்றுமையைக் கட்டி எழுப்புவது எளிதான காரியமல்ல என்பதை ஒப்புக் கொள்ளுவதில் முதல் ஆள் நான்தான். ஒற்றுமை என்பது செய்யக் கூடியது ஒன்று. இயேசு தம்மால் கூடாத ஒள்றிற்காக ஜெபிக்கும்படியாக கவலைப்பட்டிருப்பாரா? நமது நம்பிக்கையைத் தூண்டிவிட்டு நமக்கு எதிர்பார்ப்புகளைத் தந்தும் நாம் அவருடைய திருச்சபையாக ஆழமான அன்பு, ஐக்கியம் நம்பிக்கை இவற்றுடன் வாழ்ந்து ஏமாற்றத்தையும் மதி மயக்கத்தையும் அடையும்படி மாத்திரம் நம்மை விட்டுவிட அவர் அவ்வளவு கொடுமை உள்ளவரா? இயேசு அரசியல், சமூக, வயது வித்தியாசங்கள் இருந்த போதிலும் மேலும் கலாச்சார இனவெறியான தடங்கல்கள் ஆகியவற்றிற்குப் பின்னே நாம் ஒளிந்து கொள்வதாய் இருந்தாலும் இயேசு ஒற்றுமைக்காகவே ஜெபிக்கிறார். இயேசு ஸ்தாபன வகுப்பு பாகுபாடுகளையும் கடந்து நிற்கும், ஆம் சில விஷயங்களில் தடிப்புச் சுவர்களையுடைய ஸ்தாபன வகுப்பு பாகுபாடுகளை சாராவைகளின் ஒற்றுமைக்காகவே ஜெபித்தார். உறவு தொடர்பு சச்சரவுகள், சுயாதீனம், நமது உரிமைகளைக் கோருதல், திருச்சபை விவாதங்களை நடத்தி செல்வது அல்லது பங்கெடுத்துக் கொள்வது திருச்சபை பிரிவினைகளில் பங்கெடுத்துக் கொள்வதெல்லாம் யோவான் 17ம் அதிகாரத்தில் இயேசு ஏறெடுத்த ஜெபத்திற்கும் முற்றிலும் நேரான எதிரிடையான பாவங்களாகும்.

அநேக மக்கள் திருச்சபையில் ஒரு பாகுபாடு ஏற்பட்டால் அதில் யார் சரியானவர்கள் என்பதில் கரிசனையுடையவர்களாக இருக்கிறார்கள். அதில் யார் சரியானவர்கள் என்பது பொருட்டல்ல. ஆனால் யார் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிகிறார்கள் என்பதே முக்கியமான காரியமாகும். திருச்சபையில் ஏற்பட்ட பிரிவினையால் உங்கள் கட்டுப்பாட்டுக்கு மீறிப் போனதோர் நிலைமையில் அதை விட்டு விட்டு போக வேண்டியதிருக்கலாம். பாகுபாடு என்பது சில சமயங்களில் தீங்கிழைக்கிற மக்களின் முரட்டுப் பிடிவாதத்தால் ஏற்படலாம். அதற்காக உண்மையான இருதயத்தில் உணர்வான மனந்திரும்புதல் இல்லாவிட்டால் உங்கள் கட்டுப்பாட்டு மீறிய ஒரு பிரிவினை உண்டாகலாம். ஒரு சூழ்நிலைமை அது மோசமாக இருக்கும். ஒரு சமானியமான காரணத்தால் நீங்கள் கட்டாயமாக உங்களை அதிலிருந்து தூரத்தில் வைத்துக் கொள்ளும்படி கட்டாயமாகலாம். இந்த மாதிரி சந்தர்ப்ப சூழ்நிலைமைகள் ஏற்படுமானால், நாம் நமது மனதின் உள் நோக்கங்கள் சுத்தமானவை என்றும் நாம் அவ்வாறு தீங்கிழைப்பவர்களின் தவறுகளைச் சாக்குப் போக்காகக் கொண்டு நமது சினத்தையும் இணக்கமின்மையையும் நீதியான சினம் என்ற பெயரில் நாம் பயன்படுத்தவில்லை என்பதில் நிச்சயமாய் இருக்க வேண்டும்.

ஒருவரில் ஒருவர் அன்பு கூறக் கடவோம்.

நாம் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்தால் மட்டுமே. ஒற்றுமை என்பது கைகூடும். இயேசுவுடைய ஜெபத்தில் ஒற்றுமைக்கான உட்கருத்தாவது அன்பு என்பது நாம் அவரைப் பிரியப்படுத்த வேண்டுமானால் அது முற்றிலும் பூரணமாக இன்றியமையாதது. யோவான் 17:23ல், இயேசு ஜெபிக்கிறதாவது, "நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதை உலகம் அறியும்படிக்கு நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்" என்று சொல்லுகிறார். பிதாவானவர் உன்னையும் என்னையும் தமது குமாரனில் எவ்வளவு அன்பு கூறுகிறாரோ அந்த அளவுக்கு உன்னையும் என்னையும் நேசிக்கிறார். என்ன ஆச்சரியமான அன்பு! நாம் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் அன்பானது பிதாவினுடைய அன்பை மக்கள் கண்டறிந்து கொள்ளவும் அதை அனுபவிக்கவும் உதவி செய்கிறது. சிலர் தனிமைப்படுத்தப்பட்ட காயம்பட்ட மக்கள் ஏன் கிறிஸ்தவர்கள் பால் ஈர்க்கப்படுகிறார்கள் என்று சிலர் வியப்படைகிறார்கள். தனிமையை உணருகிறவர்களும் அழகற்றவர்களும் நமது பக்கத்தில் சுற்றி இருக்க விரும்புகிறார்கள் என்பதைப் பற்றி வெட்கப்படக் கூடாது. நம்மில் வெளிப்படையாகக் காட்டப்படுகிற பிதாவினுடைய அன்பினால் அவர்கள் ஈர்க்கப்படுகிறார்கள்.

யோவான் 17ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டவையே யோவான் 15ம் அதிகாரத்திலும் தெளிவாகச் சொல்லப்படுகிறது. அங்கே இயேசு நாம் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார். யோவான் 17ம் அதிகாரத்தில் கோடிடப்படுகிற மற்றவர்களை நேசிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிற கடமையை சிலர் நிராகரித்து விடலாம் ஏனென்றால் அது ஒரு ஜெபத்தின் வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முன்னால் உள்ள இரண்டு அதிகாரங்களில் ஓர் கிறிஸ்தவனுக்கு இதைத் தவிர வேறு வழி ஒன்றும் இல்லை என்கிறார். அது ஒரு கட்டளை. நாம் ஒருவரிலொருவர் அன்பு கூற வேண்டும். நாம் இதற்கான சாக்குப் போக்குச் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் நாம் எப்படி ஒருவருக்கொருவர் உறவுத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று தெளிவாகக் கூறுகிறார்.

ஒற்றுமை என்பது நிறைவேற்றப்படக் கூடுமானது மட்டுமல்ல. அது முற்றிலும் பூரணமாக இன்றியமையாததாகும். இயேசு நமக்காக வேண்டிக் கொள்வது நமக்குக் கூடுமானால் மேலும் அவர் நமது முழு இருதயத்தோடும் கீழ்படிதல் என்ற முற்றிலும் பூரணமானதொன்றைத் தவிர அதற்கு குறைவான யாதொன்றையும் அவர் ஏற்றுக் கொள்வதில்லை. அதனால் நாம் கரிசனை பெற்றவர்கள் ஆகிறோம். இதற்கான சாக்குப் போக்குகளோ பகுத்தறிவு விளக்கங்களோ இதற்கு மேல் ஒன்றுமில்லை. நாம் இயேசுவைப் பின்பற்ற தெரிந்து கொள்கிறோம். அதை அவருடைய நிபந்தனையின்படி செய்ய வேண்டுமே தவிர நமது விருப்பத்தின்படி அல்ல.

அன்பின் இயல்பு

அன்பின் இயல்பைக் குறித்து அதிகமான குழப்பம் உண்டு. இது வேகம் குறைந்த உணர்ச்சிகள் நம்மீது பரவி, அநேகத் திரைப்படங்கள் காட்டுவது போல நட்சத்திரக் கண்களால் நோக்கும்படி செய்வதால் ஏற்படுகிறதா? யோவான் 15ம் அதிகாரத்தை கூர்மையாகப் படித்துப் பார்க்கும் பொழுது உலக நேசத்தைக் குறித்து அதிகமான விளங்கிக் கொள்வதைத் தருகிறது.

13 முதல் 17 வசனங்களில் இயேசு அன்பின் உண்மையான இயல்பை செய்பொருள் விளக்கமாகத் தருகிறார்.

- ❑ அது தியாகமான பண்புடையது
  நாம் பிறரது நன்மைக்காக நாம் விரும்பும் காரியங்களுக்காக நாம் சாக வேண்டும். சில சமயங்களில் யாரோ ஒருவருக்காக மெய்யாகவே மரணமடைவது அவர்களுக்காக ஜீவிப்பதைப் பார்க்கிலும் எளிதானது என்று சில சமயங்களில் நான் நம்புகிறேன். ஆனால் இயேசு நமது உரிமைகளுக்காக, முதல் முக்கியத்தைப் பெறுபவைகளுக்காக, வாஞ்சைகளுக்காக, பிறருக்காக ஜீவிப்பதற்காக நம்மை மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கும்படியாக விரும்புகிறார்.

- ❑ நாம் சரியென்று கருதுவதை தெரிந்து எடுத்து செயல்படுவதாகும்
  "எனக்குக் கீழ்படிந்தால் எனக்கு சிநேகிதராய் இருப்பீர்கள்" என்று இயேசு கூறுகிறார். அன்பு என்பது உணர்வுகளுக்கும் அப்பால் மேலானதாகும். நாம் விரும்பாத சமயத்திலுங்கூட நாம் சரியென்று செய்யும்படியாகத் தெரிந்து கொள்ளுவதாகும்.

- நமது யோசனைகளையும் உணர்வுகளையும் தாராளமாகப் பகிர்ந்து கொள்ளக்கூடிய திறந்த மனமாகும்.
  இயேசு தமது சீஷர்களைப் பார்த்து நீங்கள் எனக்கு ஊழியக்காரர் அல்ல சிநேகிதர் என்று சொன்னார். ஏனென்றால் எல்லாவற்றையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

- அது ஒப்படைப்பு செய்வதாகும்.
  இயேசு சீஷர்களைப் பார்த்து அவர்கள் தெரிந்து கொண்ட காரணத்தால் அல்ல. அவர் அவர்களைத் தெரிந்து கொண்டதாலும் அவர் அவர்களை தமக்கு சிநேகிதர்களாகவும் உடன் ஊழியர்களாகவும் இருக்கும்படி விரும்பியதால் அவர்களைத் தெரிந்து கொண்டதாகக் கூறினார்.

- அது நம்பிக்கை யாகும்.
  இயேசு தம் சீஷரில் நம்பிக்கை வைத்தபடியால் அவரையும் பிதாவையும், அவருடைய பிரதிநிதிகளாகத் தங்களைக் காட்டும்படிக்கு அவர்களை வெளி (உலகத்திற்குள்) அனுப்பினார்.

கர்த்தருக்காகவும் பிறருக்காகவும் ஜீவிப்பதானது வாழ்க்கையின் உயர்ந்ததோர் நோக்கத்திற்கும் கீழ்படிதலாகும்.

ஒருவரில் ஒருவர் அன்பு கூறும்படியாக நமக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன செய்ய வேண்டும் என்று நமக்குச் சொல்லப்படுகிற கருத்தானது நமது இயற்கையான தன்மைக்கு விரோதமாக ஓடுகிறது. மானுடனுடைய பாவமான அங்கப்பகுதியானது வேதாகமத்தால் "மாம்சம்" என்று அழைக்கப்படுவதான அந்தப் பகுதி மற்றவர்களுக்காக நாம் முதலாவதாக ஜீவிக்க வேண்டும் என்ற கருத்தை அனுசரிக்காதவாறு புறக்கணிக்கக் காரணமாகும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்காகவும் போராடுகிறது. நம்முடைய சிறிய பார்வையில் அழகற்றவர்களான மக்களைப் பார்க்கும் பொழுது அவர்களை நேசிப்பதைப் புறக்கணிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் எதிர் நோக்குகிறோம்.

கர்த்தராகிய இயேசு நிபந்தனையற்ற கீழ்படிதலையே கட்டாயமாக வேண்டி எதிர்பார்க்கிறார் என்ற விஷயத்தை நாம் ஏற்றுக் கொள்ளும் வரைக்கும் அவருக்கு கீழ்படிதலைத் தவிர்ப்பதற்காக எல்லாவிதமான பகுத்தறிவு கோட்பாடுகளையும் நாம் தொடர்ந்து கொண்டு வருவோம். நாம் அவருக்குக் கீழ்படிய வேண்டும் என்றும் நமது முழு இருதயத்தோடும் விசுவாசிக்கும் காலம் வராத வரைக்கும் நாம் அதைச் செய்ய மாட்டோம். அதுவும் பிறகு அவருடைய சகாயத்தினால் மட்டுமே முடியும்.

நமது இருதயங்களை அவருக்கு முன்பாகத் தாழ்த்தி நமது சுயமான ஆளுமைத் தன்மையின் நடுவில் நாம் எவ்வளவு சுய நலமாக இருந்தோம் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். யோவான் 17ல் இயேசு ஜெபித்த வழியின் முறையாகவும் அதைக் கடைபிடிக்கும் படியாக யோவான் 15ல் கட்டளையிடப்பட்டதையும் நாம் விநோதமாகப் பார்க்கும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய ஆரம்பித்து அதை நாம் செய்யும்படியாக உதவி செய்வார். இந்த வகையான தேவனுடன் கொண்டுள்ள வாய்மையானது பிறருக்காக நாம் காட்ட வேண்டும் என்று அவர் விரும்புகிற அன்பை நமது இருதயங்களில் பெற்றுக் கொள்ளும்படியாக அனுமதிக்கிறது.

அன்பின் உன்னதமானதோர் எடுத்துக்காட்டு

யோவான் 17ல் இயேசுவானவர் ஜெபித்துக் கொண்ட நாம் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பானது அவரும் பிதாவும் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அன்பைப் போல் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்பியதை நாம் எப்பொழுதாவது கவனித்துப் பார்த்ததுண்டா? பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையில் உள்ள அன்பைப் புரிந்து கொள்வது உண்மையான அன்பின் இயல்பை நாம் மேலும் புரிந்து கொள்ள உதவி செய்யும்.

இயேசு உலகத்தில் வந்த பொழுது தனது பரலோகத்து சலுகைகளையும் உரிமைகளையும் கொடுத்து விட்டார். (பிலிப் 2:6-8) அவர் பிதாவின் சித்ததிற்குக் கீழ்படிந்தார். (மத் 26: 36-46) பிதாவுடன் மனந்திறந்தவராக அவருடைய உணர்வுகளை உண்மையாகப் பகிர்ந்து கொண்டும் எந்த விதமான பிறர் கையாளுதலுமின்றி (மத் 26:39) அவர் செய்த எல்லாவற்றிலும் பிதாவைக் கனம் பண்ணினார். (யோவான் 8:28-29) பிதா தமது குமாரனை நேசித்து தனக்கு பிரியமான குமாரன் என்பதாக பகிரங்கமாக அறிவித்துக் கனப்படுத்தினார். (மாற்கு 1:11) பிதா தன்னுடைய குமாரனுக்கு எல்லாக்

காலத்துக்கும் உரிய பெரிய மகத்தான பொறுப்பைக் கொடுத்து அதாவது மனித குலத்து இரட்சிப்பை ஒப்புக் கொடுத்தார். (யோவான் 3:16) அவர் எல்லாவற்றையும் பிதாவுடன் பகிர்ந்து கொண்டார். (யோவான் 17:6-26)

இதே விதமான இதைப் போன்ற அன்பின் உறவு தொடர்பு நம்பிக்கை, கனம் யாவும் நமக்கும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இயேசு தாமும் பிதாவும் ஒருவரில் ஒருவர் அன்பு கூறுவது போல நாமும் ஒருவரில் ஒருவர் அன்பு கூற வேண்டும் என்று ஜெபிக்கிறார். ஆனால் இதற்கான வினா இன்னும் இருக்கிறது. இது மெய்யாகவே எவ்வாறு கிரியை செய்ய முடியும். இயேசு சொன்னதாவது இது எல்லாம் கூடுமானது ஆகும். ஆனால் நாம் அனுதின ஜீவியத்தில் ஒருவரில் ஒருவர் அன்பு கூறுவதற்காக நமக்கென்று பின்பற்றிச் செல்லும்படி படிகள் இருக்கின்றனவா?

உறவுத் தொடர்புகளுக்கான விதிகள் (பிரமாணங்கள்)

அநேக மக்கள் தங்களைச் சுற்றியுள்ளவர்கள் பூரணராகும்படியாகக் காத்திருக்கிறார்கள். சிலர் தங்களுக்கென்று ஒரு திருச்சபைக்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வீழ்ச்சி அடைந்த ஒரு உலகத்தில் பூரணமாகும்படியான எதிர்பார்ப்பானது நமக்கு ஏமாற்றத்தையும் இருதய வேதனையையுமே நமக்கு திட்டப்படுத்தியிருக்கும். விழுந்து போன ஒரு உலகத்தில் ஒற்றுமை என்பது தீமை, பாவம் முற்றிலுமாக இல்லாமல் இருக்கும் என்பதையோ அல்லது முற்றிலுமான தத்துவ போதனையின் பரிசுத்தம் என்பதை உட்கருத்தாகக் குறிக்காது. ஒருமைப்பாடு என்பதன் அர்த்தமாவது மற்றவர்களின் மேலாக நாம் அவர்கள் பாவஞ் செய்யும் பொழுதோ அவர்கள் தவறு இழைக்கும் பொழுது கிறிஸ்துவை போன்ற ஒரு மனோ பாவத்தை நாம் கிறிஸ்துவின் மேல் நமது விசுவாசத்தை நமது சொந்தமான பாவ மன்னிப்புக்கு ஆக வைத்திருக்கிறபடியால் அப்படிப்பட்ட மனோ பாவத்தை உடையவர்களாக இருக்கிறோம் என்பதாகும்.

எபேசியர் அதிகாரம் 4,5ல் இயேசுவின் சிலுவை மரணத்தின் வழியாக நமக்குக் கொடுக்கப்பட்ட பாதுகாக்கும் படியான கோட்பாடுகளையும் மனப்பான்மையும் பவுல் விவரிக்கிறார். 4ம் அதிகாரத்தில் "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருக்கவும், நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவின் வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும்" என்று நமக்கு சொல்லுகிறார். (எபேசியர் 4:3,11) பவுல் அப்போஸ்தலன் ஆவியின் ஒருமைப்பாட்டை (பலவீனமோ அல்லது பாவமோ இருந்தாலும் ஒருவருக்கொருவர் சரியான மனப்பான்மையை இருதயத்திலும் சிந்தனையிலும் கொண்டிருக்க வேண்டும்) என்பதை விசுவாசத்தின் ஒருமைப்பாட்டோடு (உபதேசத்தில் பூரணமும் முற்றிலுமான முதிர்ச்சியும்) ஒப்பிடுகிறார். அவர் திருச்சபையைப் பார்த்து அவர்கள் ஆவியின் ஒருமையை விசுவாசத்தில் ஒருமைப்பாட்டை அடையும் வரைக்கும் காத்துக் கொள்ளும்படி சவால் விடுகிறார்.

அது மூன்று காரியங்கள் உட்கொண்டதாகும். முதலாவதாக ஆவியின் ஒருமைப்பாடானது தேவன் திருச்சபையை விசுவாசத்தின் ஒருமைப்பாட்டில் கொண்டு வரும் வரைக்கும் நமக்கு முன்னுரிமையாக இருக்க வேண்டும். இரண்டாவதாக நாம் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ள ஆவலுள்ளவர்களாய் இருத்தல் அவசியம். மூன்றாவதாக நாம் விசுவாசத்தின் ஒருமைப்பாட்டை (ஆவியின் முதிர்ச்சி உபதேசத்தில் பரிசுத்தம்) மற்றவர்களிடம் அன்பு கூறுவதற்கு அடிப்படையாக வற்புறுத்தல் கூடாது. அதை அப்படி செய்வதானால் அது மாம்சத்தின் கிரியை ஆகும். அதன் பிரகாரம் பாவமும் ஆகும்.

ஆகவே, நமக்கு தீங்கு விளைப்பவர்களை மன்னிப்பதற்கும், நம்மை விட வித்தியாசமானவர்களை ஏற்றுக் கொள்ளவும், நம்மோடு உடன்படாதவர்களை மற்றவர்களை விட தெரிந்து கொள்ளவும், நம்மை தாக்குகிறவர்களை நேசிக்கவும், நமக்கு மேலானவர்களுக்கு கீழ்படியவும், நம்மை நடத்துகிறவர்களை நம்பவும், நமக்கு காயம்படுத்துகிறவர்களண்டைப் போகவும் நம்மோடு ஒத்துப் போகாதவர்களுடன் பொறுமையாகவும் இருக்கிறோமா? அப்படி அல்லவென்றால் நாம் மனங்கசந்து மனந்திரும்பி நமக்கு ஆழமானதோர் வெளிப்பாட்டை தரும்படியாக தேவனிடம் அன்பும் ஒருமைப்பாடும் அவசியமோ அதனால் நம்மை குறைவுள்ளவர்களாக விட்டுவிடும் பாவத்தை பற்றியும் வேண்டிக் கொள்ள வேண்டும். நாம் அப்படிப்பட்டதோர் உணர்வு நிலையைப் பற்றிச் சொல்லவில்லை.

ஒரு அடிப்படையான மனப்பான்மையைப் பற்றியே பேசுகிறோம். நமது ஜீவியத்தில் நேரிடும் நொறுங்கி போகுதலின் கனியான இருதயத்தின் மனப்பான்மையோடு ஒருமைப்பாடானது ஆரம்பிக்கிறது. மற்ற மக்களுடைய இருதயத்தையும் ஜீவியத்தையும் நியாயந்தீர்ப்பவர்களாக நம்மை தேவன் இருக்க விரும்புவதில்லை. அவர் நமக்கே நம்மை சொந்தமான நியாயந்தீர்க்கிறவர்களாக இருக்க விரும்புகிறார். ஆகவே நாம் நமது நொறுங்கிப் போகுதலை இழந்து, கடினமும், நியாயந்தீர்க்கிறவர்களாக ஆகும்பொழுது ஒருமைப்பாட்டிற்கான ஆர்வத்தை நாம் இழந்து விடுகிறோம்.

உறவுத் தொடர்புகளைக் கட்டி எழுப்புதற்கான நடைமுறைக்குரிய பிரமாணங்கள்

மற்றவர்கள் தவறு செய்கிறார்களோ அல்லது பாவஞ் செய்கிறார்களோ என்று நாம் வியப்புற வேண்டியதில்லை. நாம் அவர்களுக்கு பிரதிகிரியையாக எப்படி செய்யப் போகிறோம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் ஐக்கியத்திற்குள்ளாக சீர் பொருந்தும் முன்னரே நாம் அவர்களிடம் நியாயமற்ற நிபந்தனைகளை வேண்டும் என்று கேட்போமோ அல்லது நாம் விரைந்து மகிழ்ச்சியான மன்னித்தலோடு அவர்களுக்கு பதிலாகப் போவோமோ?

பின்வரும் பரிசிலனை அட்டவணை நமது மனப்பான்மையை இந்த பகுதியில் சோதித்தறிய உதவும். இந்த அட்டவணையை ஜெபத்துடன் படித்து அவ்வாறு செய்யும்பொழுது பரிசுத்த ஆவியானவரை உன்னுடன் பேசும்படியாக கேட்டுக் கொள்ளவும்.

(1) பவுல் எபேசியர் 4:2ல் மிகுந்த மனத் தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவராய் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார். நமது அனுதின ஜீவியத்தில் இப்படிப்பட்ட மனப்பான்மையை உடையவராய் இருந்தால் அது மகா உன்னதமான வல்லமையைக் கொடுக்கும்.

- ❑ மனத் தாழ்மையாவது, நாம் என்ன செய்தோம் என்பதற்காக நாம் யாரென்று அறியப்படத்தக்கதாக விருப்ப சித்தமுடையவர்களாய் இருப்பது நாம் ஒரு தேவைக்கு அதிகமான மட்டத்தில் உறவுத் தொடர்புகளைக் கட்டி எழுப்புவதை விட நல்லது என்று அர்த்தம் தரும். மற்றவர்களுடன், நாம் அவர்களுக்கு விரோதமாய் பாவஞ் செய்து காயப்படுத்திய சமயத்திலும் நாம் காரியங்களைச் சரி செய்வதற்காக அவசியமான எதையும் நிறைவேற்றத் தயாராக இருக்க வேண்டும்.

- ❑ மனத் தாழ்மையாவது நமது மனம் போன வழியில் காரியங்கள் செய்யப்படும் படியாகவோ அல்லது நம்மை முன்னிலைப்படுத்திக் கொள்ளுமாறு திரும்பத் திரும்ப சொல்லுவதல்ல என்று பொருள் தரும்.

- ❑ நாம் சாந்தமாக பொறுமையுடனும் அன்பாகவும் அவர்கள் நமக்கு தவறு இழைத்த போதும் காத்திருத்தல் என்று அர்த்தம் தரும்.

- ❑ நீடிய பொறுமை என்பது நாம் பிறருக்கு அவர்களுக்கு பலவீனப்பட்டு இருக்கும்பொழுதுங்கூட உதவி செய்ய வேண்டும் என்பதாகும்.

(2) நாம் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு பேச வேண்டும். (எபேசியர் 4:15,25,26,29-31) பவுல் நாவுக்கு அதிகமான கவனம் கொடுக்கிறார். நமது பேச்சைப் பற்றியும் சில காரியங்களைச் சொல்லுகிறார். நாம் அதை எச்சரிக்கையுடன் கவனித்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் உங்களுடைய நட்பை நிலைநிறுத்தும்படி விரும்புகிறீர்களா? நீங்கள் உங்களது உறவுத் தொடர்புகள் கிறிஸ்துவைக் கனம் பண்ண வேண்டும் என்று வாஞ்சிக்கிறீர்களா? அப்படியானால்:

- ❑ சத்தியத்தையே பேசுங்கள். நாம் நேரிடையாகவும் சரிசமமாகவும் உண்மையுடனும் பேச வேண்டும்.

- ❑ அன்புடன் சத்தியத்தைப் பேசுங்கள். நாம் கோபத்துடனும் கசப்புடனும் அன்பில்லாத முறையிலும் பேசக் கூடாது. ஆனால் தேவனுக்கென்று நேரத்தில் அவருக்காகக் காத்திருந்து நாம் யாரிடம் பேச வேண்டுமோ அவர்களுடன் பேச இருதயத்தை ஆயத்தப் படுத்திக்

கொள்ள வேண்டும். மேலும் நாம் பேசுவதைக் குறித்து குறிப்பிட்டு தெரிவு செய்து பேச வேண்டும். ஒரு ஞானமுள்ள மனிதன் தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் பற்றி அலப்புவதில்லை.

- பக்தி விருத்திக்கு ஏதுவானதையே பேசுக. மற்ற சொற்களில் கூறுவதென்றால் நேரிடையானவற்றையும் உதவி செய்கிறவைகளை மாத்திரம் சொல்ல வேண்டும். "நான் உண்மையாகவே மாத்திரம் இருந்தேன்" என்று சொல்லி சாக்குப் போக்கு ஆக நம்மை மன்னித்துக் கொள்வது போதாது. தவறான நேரத்தில் யாரோ ஒருவருடன் நாம் இரக்கமற்ற முறையில் உண்மையாக இருப்போமானால் அவர்களை முற்றிலுமாக அழிவுக்கு கொண்டு வந்து விடுவோம். இந்தப் பிரச்சனை உண்மையை விடப் பெரிதானது. வேதாகமத்தின் ஆசிரியர்கள் நாம் ஒருவருக்கு உதவியாக இருக்கக் கூடியதை மாத்திரமே பேச வேண்டும் என்று கூறுவார்கள். ஞானமில்லாத சத்தியமும் பாவமாகக் கூடும்.

- விமரிசனம் அல்லது குற்றம் கண்டுபிடிக்கும் ஆவியை உன்னிலிருந்து நீக்கிப் போடு. "சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது." (எபேசி 4:31) என்று பவுல் எபேசியருக்கு புத்திமதி கூறுகிறார். இந்த தன்மைகளுக்கெல்லாம் குற்றங் கண்டுபிடிக்கும் ஆவியே மூல வேராகும். இது தான் ஒருமைப்பாட்டின் பெரிய சத்துருக்களில் ஒன்றாகும். ஒருவரை உற்சாகப்படுத்துவதைவிட அவரிடம் குற்றங் கண்டுபிடிப்பது எளிது என்று காண்கிறீர்களா? ஜனங்களுடைய தவறுகளையும், பாவங்களையும் மற்றவர்களிடம் திரும்பத் திரும்பச் சொல்லுதல் வேதாகமத்தில் பாவம் என்று வகை பிரிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் அது அவ நம்பிக்கையைப் பரப்பி பிரிவினையையும் உற்சாகப்படுத்துகிறது. அது சரீரம் முழுவதையும் பரவி தொத்திக் கொள்ளும் விஷமாகும்.

  தூஷணம், அது தடையின்றி முன் போகுமானால் பிரிவினையை பிறப்பித்து வளர்க்கிறது. ஏதோ ஒன்று உண்மையாக இருந்தாலும் அதைப் பகிரங்கமாக சொல்ல வேண்டும் என்பது அவசியமல்ல. ஏனென்றால் நல்லொழுக்கமான பரஸ்பர விட்டுக் கொடுத்தலுக்கும் அதிகக் கடுமையான தவறான உபதேசங்களோடும் சம்பந்தப் பட்டாலன்றி பகிரங்கமாகக் கூறுவது தேவையற்றதாகும். நாம் என்ன பேசுகிறோம் என்பதை கணக்கொப்புவிக்க வேண்டும் என்று தேவன் நம்மை அழைக்கிறார். நாம் ஒருவருக்கொருவர் விசுவாச பக்தியுடன் இருக்கவும், பரஸ்பர சமரசத்தை முன்னேற்றுவிக்கவும், மன்னிப்பு தருதலையும் ஒருமைப்பாட்டையுங்கூட அவ்வாறு முன்னேற்றுவிக்க வேண்டும்.

(3) பவுல் விசுவாசிகளுக்குப் புத்திமதியாக போதிப்பதாவது பாவஞ் செய்பவர்களை மன்னித்தும் தங்கள் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பாதவர்களை எச்சரிக்கை செய்து ஒழுங்கில் பயிற்றுவிக்க வேண்டுமென்று சொல்லுகிறார். (எபேசி 4:32; 5:1, 5-7) பாவ மன்னிப்பும், திருச்சபை ஒழுங்கும் இல்லாமல் ஒருமைப்பாடு இருக்க முடியாது. மகா பெரிய மனத் தாழ்மையால் தீர்க்கக் கூடாத படிக்கு பிரச்சனையான ஒற்றுமையின்மையும் அல்லது மன்னிப்பும் கிடையாது. பாவஞ் செய்த ஒரு சகோதரனிடத்தில் மனத்தாழ்மை காணப்படாவிட்டால் அங்கு சாந்தமான ஆனால் உறுதியான எச்சரிக்கையும் கொடுக்கப்பட வேண்டும். மனிதர்கள் மனந்திரும்பினாலும் அல்லாவிட்டாலும், நாம் அவர்களை மன்னித்து விட வேண்டும். ஆனால் அவர்கள் மனந் திரும்பத் தவறினால், நாம் அவர்களை மன்னித்து விட்டாலுங்கூட திருச்சபைத் தலைவர்கள் அன்புடன் எச்சரிக்கையை அவர்கள் ஜீவியத்தில் கொண்டு வர வேண்டும்.

(4) நாம் ஒருவருக் கொருவர் சொந்தமானவர்கள் என்பதை அங்கீகரிக்க வேண்டும். ஒவ்வொருவரும் இயேசுவுக்கு சொந்தமானவர்களாக நமது குடும்பத்தின் அங்கத்தினராய் அவருடைய கிருபைக்கு உடன் சுதந்திரவாளியாகிறான். ஒரு சாதாரணமான குடும்பத்தில் இருப்பது போலவே அங்கு ஒருவருக்கொருவர் அன்புடன் பழகி தங்களுக்குள் ஒருவருக்கொருவர் அதிகமானவற்றை பொதுவாகப் பெற்றிருப்பார்கள். அப்படியே தேவனுடைய குடும்பத்திலும் இருக்கும் நமது உலகக் குடும்பங்களில் அவரோ அவளோ சற்று நம்மை விட வித்தியாசமாக இருப்பதால் அவரை சகோதரன் என்றோ சகோதரி என்றோ மறுப்பதில்லை. அதைப் போலவே நாமும்

திருச்சபையில் செய்யக் கூடாது ஏனென்றால் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் சக அங்கத்தினர்களாக இருக்கிறோம். (எபேசியர் 4:25)

ஒரே ஒரு திருச்சபை தான் உண்டு, என்னவென்றாலும் ஒருவர் நமது நடத்தையைக் கொண்டு நிதானித்துப் பார்ப்பதால் ஒருவர் நாம் பரலோகம் போய்ச் சேரும் பொழுது தேவன் நம்மை வெவ்வேறு வகுப்புகளாகப் பிரித்து வைப்பதால் நாம் ஒன்றாக கூட்டிச் சேர்ந்து நமது சின்ன வகுப்பில் அல்லது ஸ்தாபனப் பிரிவில் ஒன்று கூடி இருப்போம் என்று தீர்க்கமாக நம்பிக் கொள்ளலாம். அதற்கும் மோசமாக சிலர் தங்கள் வகுப்புக் கூட்டம் மட்டுமே அங்கு போய் சேரலாம் என்று நடப்பார்கள். ஆனால் நாம் பரலோகம் போய்ச் சேரும்பொழுது நாம் அனைவரும் ஒன்றாக இருப்போம். ஆகவே நாம் ஏன் ஒரேயடியாகத் தொடங்கி, மற்ற ஸ்தாபன சபைகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுடனும் பிரிவுகளுடனும் அறிமுகமாகிக் கொண்டு இப்பொழுதே பழகிக் கொள்ள ஏன் கூடாது? நமது வகுப்பு வாத அச்சத்தை விட்டுவிடவும். ஆக நாம் ஒருவருக் கொருவர் சொந்தமானவர்கள்.

தேவன் தமது எல்லா சத்தியங்களையும் ஒரு நபருக்கோ அல்லது கிறிஸ்தவக் குழுக்கோ வெளிப்படுத்துவதில்லை. தேவன் வேதாகமத்து சத்தியத்தைப் பற்றிய அறிவை எல்லாக் குழுக்களுக்கும் விநியோகித்திருக்கிறார். ஏனென்றால் நமது சமநிலைக்கும் பாதுகாப்புக்கும் நாம் ஒருவர் மேல் ஒருவர் சார்ந்திருக்க வேண்டும் என்பதற்காகவே அப்படி செய்திருக்கிறார். இந்த உள்நோக்கமான ஞானத்தை நாம் கிரகித்துக் கொண்டால் விசேஷமாக நம்மைச் சேர்ந்த தலைவர்களானவர்களுடைய நமது மனப்பான்மை ஒருவருக்கொருவர் வித்தியாசமாக இருந்திருக்க வேண்டும்.

(5) இறுதியாக பவுல் நமக்குப் புத்திமதியாக உபதேசிப்பதாவது நாம் ஆவியில் நிறைந்து கர்த்தரை துதித்துப் பாடி ஆராதனை செய்து ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிப்போம். (எபேசியர் 5:17-20)

நன்றி அறிதல், உற்சாகப்படுத்துதல், நன்றி கூறுதல் ஆகிய நற்பண்புகள் நமக்கு ஏதோ தீடீரென்று கிடைக்கப் பெறுவதில்லை. அவைகளை வேண்டுமென்று பழக்கப்படுத்தி நம்முடைய அனுதின சிந்தனை வடிவங்களும் செயல்பாடுகளுமான பங்காக ஆகும்படி அதுவரைக்கும் செய்து கொள்ள வேண்டும். நாம் தேவனுடைய சந்நிதியில் நேரத்தை செலவழித்து நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு எவ்வாறு உற்சாகப்படுத்த புத்தி சொல்ல வேண்டும் என்று கேட்க வேண்டும். மேலும் அவரை நோக்கிப் பார்த்து நமக்கென்று அவர் நமக்கு செய்த எல்லாவற்றைப் பற்றியும் நமக்கு உண்டாக்கி வைத்தது பற்றியும் ஒரு புதிய வெளிப்பாட்டைத் தரும்படியாகக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது நமது இருதயம் நன்றியால் நிறைந்து துதிபாடும்.

நாம் கடைசியாக ஒருமைப்பாடு வசிக்கும் இடத்திற்கு வருவோம். அது எப்படிப்பட்டதோர் ஆசீர்வாதம் அது யாவற்றையும் பயனுள்ளதாக ஆக்குகிறது.

“இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை
நன்மையும் எத்தனை இன்பமுமானது!
அது ஆரோனுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு
அவனுடைய தாடியின் மேல் வடிகிறதும்,
அவனுடைய அங்கிகளின் மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்
எர்மோன் மேலும் சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது.
அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும்
ஜீவனையும் கட்டளையிடுகிறார்.” (சங்கீதம் 133).